16-5-1985

3524) ஆ. 31/85

252

தமிழ்நாடு

சட்டமன்ற மேலவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE COUNCIL DEBATES

# அதிகாரபூர்வமான வெளியீடு
# OFFICIAL REPORT

திங்கட்கிழமை, ஏப்ரல் 8, 1985—தொகுதி 214 - எண் 1

Monday 8th April 1985—Volume 214 - No. 1

சட்டமன்ற மேலவைச் செயலகம்,
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை - 600 009.

LEGISLATIVE COUNCIL SECRETARIAT.
Fort St. George, Madras-600 009.

விலை ரூ 2.75]

11. THE HON. Dr. H. V. HANDE, Minister for Health, in-charge of Health and Environmental Pollution Control.

12. THE HON. THIRU S. MUTHUSWAMY, Minister for Transport, in charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Acts, Ports and Highways.

13. THE HON. THIRU S. THIRUNAVUKKARASU, Minister for Food, in charge of Food, Price Control and Census.

14 THE HON. THIRU V. V. SWAMINATHAN, Minister for Handlooms and Textiles, in charge of Handlooms and Textiles.

15. THE HON. THIRU R. SOUNDARARAJAN, Minister for Nutritious Meals, in charge of Nutritious Meals.

16. THE HON. THIRU T. VEERASAMY, Minister for Commercial Taxes, in charge of Commercial Taxes.

17. THE HON. THIRU N. NALLUSAMY, Minister for Housing, in charge of Housing and Slum Clearance Boards, Town Planning and Accommodation Control.

18. THE HON. THIRU ANOOR P. G. JAGADEESAN, Minister for Rural Industries, in charge of Rural Industries including Village, Cottage and Small Industries.

19. THE HON. THIRU T. RAMASAMY, Minister for Rehabilitation and Employment, in-charge of Rehabilitation, Employment and Training, Indians Overseas, Refugees and Evacuees.

20. THE HON. THIRU A. ARUNACHALAM, Minister for Adi Dravidar Welfare, in-charge of Adi Dravidar Welfare, Hill and Bonded Labour.

21. THE HON. THIRU M. R. GOVENDHAN, Minister for Backward Classes, in charge of Backward Classes and Fisheries.

22. THE HON. THIRUMATHI GOMATHI SRINIVASAN, Minister for Social Welfare in charge of Social Welfare including Women and Children and Children Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration.

23. THE HON. THIRUMATHI VIJAYALAKSHMI PALANISAMY. Minister for Khadi, in charge of Khadi, Bhoodan and Gramdhan.

24. THE HON. THIRU Y. S. M. YUSUF, Minister for Public Works, in charge of Public Works Department, Irrigation including Minor Irrigation and Wakf.

25. THE HON. THIRU K. K. S. S. R. RAMACHANDRAN, Minister for Co-operation, in charge of Co-operation.

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

### தமிழ்நாடு ஆளுநர்.

**திரு. சுந்தர் லால் குரானா.**

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

**1. மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்** (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர் மற்றும் இதர அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், மாவட்டத் துணை ஆட்சியாளர்கள், காவல், இலஞ்ச ஒழிப்பு, திட்டம, சர்க்கரைப்பாகு கழிவு, தொல்பொருள் இயல், ஆயத்துறை, மதுவிலக்கு, மது அருந்த அனுமதிச் சீட்டு வழங்கல் நீங்கலாக மற்றும் கடவுச்சீட்டு.

**2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** (நிதி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

நிதி, வருவாய், சட்ட மன்றம், தேர்தல்கள், புள்ளி விவரங்கள், இளைஞர் அணி மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

**3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்** (மின் துறை, அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மின்சாரம் மற்றும் இரும்பு, எஃகுக் கட்டுப்பாடு, செய்திக் காகிதக் கட்டுப்பாடு, எழுதுபொருள் அச்சுத்துறை மற்றும் அரசு அச்சகம்.

**4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி** (தொழிலாளர் நல அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

தொழிலாளர் நலம், கால்நடை பராமரிப்பு, பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிவுத்துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

**5. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்** (செய்தி-அறநிலைய அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், இந்து அறநிலையத் துறை, வனங்கள், சின்கோனா மற்றும் மது அருந்த அனுமதிச் சீட்டு வழங்கல்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும் | தொகுதி. |
| --- | --- |
| 1. அங்கமுத்து, திரு. பா. | நியமனம் |
| 2. அருணாசலம், திரு. க. | நியமனம் |
| 3. ஆனந்தம், திரு. வி. வி. வி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 4. இராகவானந்தம், திரு. எஸ். | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 5. இராதா, திரு. எஸ். ஆர். | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 6. இராமலிங்கம், திரு. சி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 7. இராஜேந்திரன், திரு. மானாமதுரை, ஆர். | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 8. கண்ணப்பன், திரு. காடுவெட்டி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 9. கணேசன், திரு. ஆர். என்கிற மிசா ஆர். கணேசன் | சென்னை மாவட்டப் பட்டதாரிகள் தொகுதி |
| 10. கருணாநிதி, டாக்டர் மு. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 11. கலைமணி, திரு. க. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 12. கோலப்பா, திரு. சி. ஆர். | நியமனம் |
| 13. சங்கரலிங்கம், திரு. மு. செ. | திருநெல்வேலி-கன்னியாகுமரி ஆசிரியர்கள் |
| 14. சனார்த்தனம், டாக்டர் இரா. | தமிழ்நாடு மேற்கு மத்திய பட்டதாரிகள் |
| 15. சாதிக் பாட்சா, திரு. எஸ். ஜே. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 16. சிவஞானம், டாக்டர் ம. பொ. (மாண்புமிகு மேலவைத் தலைவர்) | நியமனம் |
| 17. சிவராமன், திரு. அ. ப. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 18. சீத்தா[illegible] திரு. ஆர். டி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 19. சுப்பிர[illegible]ம், திரு. எம். பி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 20. [illegible]ரு. க. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 21. [illegible]நன், திரு. ஜி. ([illegible]கு மேலவைத் தலைவர்) | தமிழ்நாடு கிழக்கு மத்திய பட்டதாரிகள் |

22. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன (சமூக நல அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், இரவலர் இல்லம், அனாதை இல்லம் மற்றும் சீர்திருத்த நிர்வாகம்.

23. மாண்புமிகு திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி (கதர்த்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

கதர், பூமிதானம் மற்றும் கிராமதானம்.

24. மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் (பொதுப்பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

பொதுப்பணித் துறை, சிறுபாசனம் உள்ளிட்ட நீர்ப்பாசனம் மற்றும் வடிப்.

25. மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் (கூட்டுறவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் :—

கூட்டுறவு.

252

## தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்

**டாக்டர் ம. பொ. சிவஞானம்.**

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்

**திரு. ஜி. சுவாமிநாதன்.**

**மாற்றுத் தலைவர்கள் பட்டியல்**

1. திரு. சி. இராமலிங்கம்
2. திருமதி வி. ஜெயலட்சுமி
3. திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா
4. திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்

மேலவைச் செயலாளர்

**திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.**

துணைச் செயலாளர்

**திரு. த. ப. டில்லிதுரை, பி.எஸ்சி., பி.எல்.**

துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

**திரு. நா. கோதண்டராமன், பி.ஏ., பி.ஜி.எல்., பி.எல்**

சார்புச் செயலாளர்கள்

**திரு. ரெ. கு. இராமச்சந்திரன், பி.ஏ., பி.எல்.**

**திரு. இரா. சந்திரசேகரன், பி.ஏ.**

தலைமை நிருபர்

**திரு. ச. சுவாமிநாதன், எம்.ஏ.**

மேலவைத் தலைவரின் தனிச் செயலாளர்

**திரு. பி. கே. சந்திரசேகரன்.**

| | |
|---|---|
| 22. நாயகம், திரு. பா. ரா. | மதுரை-இராமநாதபுரம் ஆசிரியர்கள் |
| 23. தாரா சேரியன், திருமதி | நியமனம் |
| 24. தாஸ், திரு. வ. ஜெ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 25. பழனிவேல்ராஜன், திரு. பி. டி. ஆர். | தமிழ்நாடு தெற்கு பட்டதாரிகள் |
| 26. பாலாஜி, திரு. நெல்லை | நியமனம் |
| 27. மதுசூதனன், திரு. இ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 28. மாரிச்சாமி, திரு. அ. | சேலம்-தர்மபுரி-கோயம்புத்தூர்-நீலகிரி ஆசிரியர்கள் தொகுதி |
| 29. மாசிலாமணி, திரு. மு. | நியமனம் |
| 30. மாணிக்கம், திரு. ப. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 31. மீனாட்சிசுந்தரம், திரு. க. | தஞ்சாவூர்-திருச்சிராப்பள்ளி-புதுக் கோட்டை ஆசிரியர்கள் தொகுதி |
| 32. முத்துலிங்கம், கவிஞர் | நியமனம் |
| 33. முனுசாமி, திரு. பி. | நியமனம் |
| 34. யூசுப், திரு. யா. சை. மு. (பொதுப்பணித் துறை அமைச்சர்) | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 35. லெட்சுமிகாந்தன், திரு. சி. | வட ஆற்காடு-தென் ஆற்காடு ஆசிரியர்கள் தொகுதி |
| 36. லீலாவதி, செல்வி ஆ. | சென்னை-செங்கற்பட்டு ஆசிரியர்கள் |
| 37. வள்ளிமுத்து, திரு. ஈ. வெ. அ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 38. வீரப்பன், திரு. இராம. (செய்தி அறநிலையத் துறை அமைச்சர்) | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 39. ஜெயச்சந்திரன், திரு. எல். | தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள் |
| 40. ஜெயலட்சுமி, திருமதி வி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 41. ஜேப்பியார், திரு. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 42. ஹண்டே, டாக்டர் எச். வி. (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) | சென்னை மாவட்டப் பட்டதாரிகள் |



| | |
|---|---|
| 43. வெற்றிடம் | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 44. வெற்றிடம் | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 45. வெற்றிடம் | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 46. வெற்றிடம் | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 47. வெற்றிடம் | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 48. வெற்றிடம் | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 49. வெற்றிடம் | செங்கற்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 50. வெற்றிடம் | சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 51. வெற்றிடம் | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 52. வெற்றிடம் | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 53. வெற்றிடம் | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 54. வெற்றிடம் | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 55. வெற்றிடம் | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 56. வெற்றிடம் | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 57. வெற்றிடம் | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 58. வெற்றிடம் | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 59. வெற்றிடம் | தென்னாற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி |

| | |
|---|---|
| **60. வெற்றிடம்** | தென்னாற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| **61. வெற்றிடம்** | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| **62. வெற்றிடம்** | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| **63. வெற்றிடம்** | கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி |

# தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

**இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் அறுபத்தியேழாவது கூட்டத் தொடர்.**

திங்கட்கிழமை, 1985 ஏப்ரல் 8.

**(பங்குனி 26, ரக்தாக்ஷி, திருவள்ளுவராண்டு-2016.)**

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-00 மணியளவில், மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் **(டாக்டர் ம. பொ. சிவஞானம்)** அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### ரப்பர் பயிரிடுதல்.

***1 வினா.**—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழகத்தில் எங்கெங்கு ரப்பர் பயிரிடப்படுகிறது ?

(இ) அதனை மற்ற பகுதிகளிலும் பயிரிடும் செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(உ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** (அ) தமிழகத்தில் கீழ்க்கண்ட மாவட்டங்களில் ரப்பர் பயிரிடப்படுகிறது :—

| மாவட்டம். | பரப்பளவு (ஹெக்டேரில்) |
|---|---|
| 1. கன்னியாகுமரி | 11,006 |
| 2. மதுரை | 152 |
| 3. நீலகிரி | 253 |
| 4. கோவை | 221 |
| 5. சேலம் | 23 |
| 6. திருநெல்வேலி | 28 |
| மொத்தம் .. | 11,683 |

(இ) தமிழ்நாட்டில் மற்ற பகுதிகளிலும் ரப்பர் பயிரிடும் செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1985 ஏப்ரல் 8

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்ட மாவட்டங்களைத் தவிர, வேறு மாவட்டங்களிலே ரப்பர் பயிரிடுவதற்கு உரிய முன்முயற்சி மேற்கொள்ளப்பட்டதா ? அப்படி இல்லை என்றால், இனிமேலாவது அப்படிச் செய்வதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா ? நம் நாட்டு ரப்பரை மூலப் பொருளாகக் கொண்டு தயாரிக்கப்படுகின்ற பொருள்கள் யாவை, அதற்குரிய தொழிற்சாலைகள் எங்கெங்கே இருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** தலைவர் அவர்களே, தமிழகத்திலே எந்த எந்த மாவட்டங்களில் ரப்பர் பயிரிடப்படுகின்றது என்ற கேள்விக்கான விடைதான் என்னிடத்திலே இருக்கிறது. பொதுவாக மற்ற மாவட்டங்களில் பயிரிடுவது இல்லை என்றுதான் அறிகிறேன். காரணம் ஒரு குறிப்பிட்ட உயரத்திலே குறிப்பிட்ட சீதோஷ்ண நிலையிலே, குறிப்பிட்ட அமைப்பு மலைச்சரிவிலேதான் ரப்பர் பயிர் வரும். அப்படி அந்த வாய்ப்புகள், சூழ்நிலைகள் சரியாக உள்ள இடத்தில்தான் அதன் வளர்ச்சியும் சரியாக இருக்கிறது ; பயனும் முழுமையாகக் கிடைக்கிறது. ஆகவே அப்படிப்பட்ட இடங்களில்தான் ரப்பர் பயிரிடப்படுகிறது. தமிழகத்தில் கன்னியாகுமரி மாவட்டம்தான் அதற்கு ஏற்ற இடமாக இருக்கிறது. அங்கே மலையினுடைய சரிவும், மலையினுடைய உயரமும், சீதோஷ்ண நிலையும், ரப்பர் பயிர் வளர்ச்சிக்கு அடிப்படையாகவும் சிறப்பாகவும் அமைந்திருக்கிறது. மற்ற மாவட்டங்களிலே அவ்வளவு திருப்தியளிக்கின்ற வகையிலே இல்லை. மேலும் காடுகளை அழித்து ரப்பர் தோட்டங்களை உருவாக்குகின்ற கொள்கைக்கு அரசு இப்போது ஊக்கம் அளிப்பது இல்லை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, நம் நாட்டிலே உற்பத்தியாகும் ரப்பர் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறதா? அல்லது அதை மூலப்பொருளாகக் கொண்டு தொழிற்சாலைகள் மூலமாக இங்கேயே ஏதேனும் பொருள்கள் தயாரிக்கப்படுகின்றனவா ? வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது என்றால், அந்நியச் செலாவணி எவ்வளவு கிடைக்கிறது ? அல்லது இதுவரை ரப்பரை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்ய வில்லை என்றால், இனிமேலாவது அப்படி அனுப்ப அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** தலைவர் அவர்களே, இந்தக் கேள்விகளுக்கான விடைகள் முழுவதையும், மத்திய அரசினுடைய துறைகளிலே இருந்துதான் தயாரித்துக் கொடுக்க வேண்டும். தனியாகக் கேள்வி போட்டால், அதற்கான விரிவான பதில்களைத் தர இயலும்.



1985 ஏப்ரல் 8]

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** தலைவர் அவர்களே, ரப்பர் பயிரிடுவதிலே இப்போது மலேஷியா நாடு பல புதிய வழிமுறைகளைக் கையாண்டு வருகிறது. அதனை இந்த அரசு அறிந்து இங்கே ரப்பர் பயிர் வளர்ச்சிக்குச் செயல் படுத்திட முயற்சி மேற்கொள்ளுமா ? அங்கே இப்போது சிந்தெடிக் ரப்பர் தயாரிக்கப்பட்டு வருகிறது. அதைப்பற்றியும் அரசு ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** தலைவர் அவர்களே, தமிழக அரசின் சார்பிலே ரப்பர் தோட்டம் தொடங்கப்பட்டபோது, வனத் துறை அதிகாரிகள் மலேஷிய நாட்டுக்குச் சென்று விவரங்களை நன்கு தெரிந்து கொண்டு வந்ததற்குப் பிறகுதான் அந்தத் திட்டம் இங்கே உருவாக்கப்பட்டு செயல் படுத்தப்பட்டது. இப்போதும் மலேஷியா நாட்டிலே புதுமையான முயற்சிகள் அல்லது ஆய்வுகள் எப்படி மேற்கொள்ளப்படுகின்றன என்பதை அறிய, அவ்வப்போது நம்முடைய வனத் துறை அதிகாரிகள் மலேஷிய நாட்டுக்குச் சென்று தெரிந்துகொண்டு திரும்பி வந்து அந்த முறைகளின்படியும் திட்டங்களை நிறைவேற்ற ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். சிந்தெடிக் ரப்பர் என்பதைப் பொறுத்த அளவில், தமிழக அரசினிடம் விவரங்கள் இல்லை.

**திரு. க. அருணாசலம் :** தலைவர் அவர்களே, ரப்பர் தோட்டங்கள் அதிகமாக ஏற்படுவதினாலே, கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வேறு பல நன்மைகள் வந்திருக்கின்றன என்று கேள்விப்படுகிறோமே. அந்தமாதிரி நன்மைகளை மற்ற மாவட்டங்களும் பெற்றிட அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** தலைவர் அவர்களே, வேறு சில நன்மைகள் என்று பொதுவாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடு கிறார்கள். என்ன நன்மை என்று தெரியவில்லை. ரப்பர் தோட்டத்தைப்

(முற்பகல் 10.05)

பொறுத்தவரை அது வனத் துறையிலே பொருள் ஈட்டுகின்ற ஒரு வணிகப் பயிராக இருந்துவருகிறது. வேலை வாய்ப்பைத் தொழிலாளர்களுக்கு ஏற்படுத்தித் தருகிறது. அதை மற்ற தொழில்களின் மூலமாகவும் ஏற்படுத்தித் தருகிறது. ஆனால் இயற்கையாக நம்முடைய சூழ்நிலைக்கு, நம்முடைய வாழ்வுக்கு ஏற்றவகையில் அமையப்பெற்றிருக்கின்ற காடுகளை அழித்து விட்டுத்தான் ரப்பர் தோட்டங்கள் போடுகின்ற முயற்சிகளிலே நாம் ஈடுபட வேண்டியிருக்கிறது. ஆகவே இயற்கையான காடுகள் பாதுகாக்கப்பட வேண்டுமென்ற உணர்வு இன்றைக்கு அதிகமாக வளர்ந்து கொண்டிருக்கிற காலத்தில், காடுகளின் தேவையும் நமக்கு அத்தியாவசியமாக இருந்து

[1985 ஏப்ரல் 8

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்போது வனவிலங்கு சரணாலயம் என்று அழைக்கப்படுகிற, அரசாலே உருவாக்கப்பெற்றிருக்கின்ற அந்த ஆனைமலை வனவிலங்கு ஓய்விடம் 958 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் உள்ள ஒரு பகுதியாகும். அந்தப் பகுதியிலே மிகச் சிறந்த, அரிதான உயிரினங்களும், விலங்கினங்களும், பறவையினங்களும் இருப்பதாக ஆய்வாளர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

(முற்பகல் 10-10)

குறிப்பாக யானை, காட்டெருமை, புலி, சிறுத்தைப் புலி, கரடி, காட்டுப் பன்றி, காட்டு நாய், நீலகிரி குரங்கு, சிங்கவால் குரங்கு, கடமான் வகை, நான்கு கொம்புகளுடைய வரி மான், புள்ளி மான், இன்னும் பல வகையான பறவைகள் இருப்பதாக வனவிலங்கு ஆய்வாளர்கள் தெரிவித்து, அதைப் பாராட்டியிருக்கிறார்கள். ஆகவேதான் அவற்றை அப்படியே பாதுகாக்க வேண்டுமென்ற உணர்வில் தேசியப் பூங்காவாக ஆக்க வேண்டுமென்ற ஒரு திட்டம் அரசுக்கு அனுப்பப்பட்டது. தேசியப் பூங்கா என்பதற்கும் வனவிலங்கு சரணாலயம் என்பதற்கும் இடையிலே வேறுபாடு இருக்கிறது. வனவிலங்கு சரணாலயம் என்பது ஒரு குறிப்பிட்ட அளவுக்குக் கட்டுப்படுத்தி, பாதுகாக்கின்ற பகுதி. ஆனால் தேசியப் பூங்கா என்று மாற்றிவிட்டால், அதற்காக சட்ட மன்றங்களிலே சட்டம் நிறைவேற்றப்பட்டு, அந்தப் பகுதி தேசியப் பூங்கா என்று அறிவித்த பிறகு, அங்கே வேறு எந்தவிதமான நடவடிக்கைகளையும் நடத்த முடியாது. அது கட்டுப்படுத்தப்பட்டுவிடும். அந்தக் காடு எப்படித் தோன்றியதோ அப்படியே வைத்திருக்க வேண்டுமென்பது அந்தச் சட்டத்தின் நோக்கம். அந்த அளவுக்கு இன்றைக்கு நமமுடைய மாநிலத்தில் நம்முடைய சென்னை மாநகரத்திற்கு அருகில் அற்புதமாக நீண்ட காலமாக உள்ள கிண்டி பூங்காவை தேசியப் பூங்காவாக மாற்றியிருக்கிறோம். அது ஒரு காலத்திலே இந்தியாவிலேயே ஒரு பெரிய மாநகரத்தை ஒட்டி அமைந்த இயற்கைக் காடாக விளங்கியது. நாளடைவில் மனிதனுடைய தேவைகளுக்காகவும், மற்ற வளர்ச்சிப் பணிகளுக்காகவும் அந்தக் காடுகளை அழித்து, அங்கே கட்டிடங்களைக் கட்டத் தொடங்கிய பிறகு, மிச்சமுள்ள பகுதியையாவது காப்பாற்ற வேண்டுமென்று, இன்றைக்கு தேசியப் பூங்காவாக அமைக்க சட்டம் நிறைவேற்றி, காப்பாற்றியிருக்கிறோம். அதற்குப் பிறகு அந்தப் பகுதியிலே கட்டிடங்கள் கட்டுவதற்கு, வேறு ஆக்கிரமிப்புகள் செய்வதற்கு அல்லது வேறு காரியங்களுக்கு அந்தக் காட்டைப் பயன்படுத்தக்கூடாது என்று அளவில் லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்து தடுப்புச் சுவர்கள் எழுப்பி அங்கே வாழ்ந்துகொண்டிருக்கிற மான் கூட்டத்திற்குப் பாதுகாப்பு அளித்து காட்டையும் பாதுகாத்துக் கொண்டிருக்கிறோம். தமிழகத்தைப்



1985 ஏப்ரல் 8]

பொறுத்தவரையில், இதுவரை ஒரு தேசியப் பூங்காவும், ஏழு வனவிலங்கு புகலிடங்களும் இருக்கின்றன. அதற்கு அரசு ஆண்டுதோறும் 10 இலட்சம் ரூபாய் வரை செலவு செய்து கொண்டிருக்கிறது. மத்திய அரசிடத்திலும் நாம் இதற்காக உதவிகளைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். ஒரு குறிப்பிட்ட அளவுக்கு உதவி வந்துகொண்டிருக்கிறது. ஆனைமலைப் பகுதியை தேசியப் பூங்காவாக மாற்ற ஒரு நிர்வாகத் திட்டம் உருவாக்கப்படடிருக்கிறது. அதிலே பல சிக்கல்கள் இருக்கின்றன. அவைகளையெல்லாம் பரிசீலித்து, பிறகு அது மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்படும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவரவர்களே, ஆனைமலைப் பகுதியில் யானைகள் நிறைய இருக்கின்றன. மூன்று மாதங்களுக்கு முன்னதாக சத்தியமங்கலம் பகுதியில் தண்ணீர் இல்லாததால், மூன்று யானைகள் இறந்ததாகச் செய்தி வந்தது. இன்றைக்குக்கூட உடுமலைப்பேட்டை அருகில் அமராவதி ஆற்றிலே தண்ணீர் இல்லாமல், தண்ணீருக்காக யானைகள் அலைந்து, ஒரு யானை சேற்றிலே சிக்கி, குட்டி யானைகளும், மற்ற யானைகளும் இரவெல்லாம் கண்விழித்து, மக்களெல்லாம் அதைக் காப்பாற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டு கரை ஏற்ற வேண்டிய சூழ்நிலை இருந்ததாகவும், ஆனால் அந்த யானை செத்துவிட்டதாகவும் செய்தி வந்திருக்கிறது. வன விலங்குகளை அரசு பாதுகாக்க நடவடிக்கை எடுக்கும் நேரத்தில், நீரில்லாமல் யானைகள் இறந்து கொண்டிருக்கின்றனவே, அதற்கு என்ன நடவடிக்கை அரசு எடுத்திருக்கிறது? இனிமேலாவது அதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** இது விரிவாக விடை அளிக்கப்பட வேண்டிய கேள்வியாகும். தனியாகக் கேள்வி கேட்டால், விரிவாக பதில் அளிக்க முடியும். ஆனாலும் நான் அந்த வனத் துறைக்குப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிற காரணத்தால், ஒரு குறிப்பை மாத்திரம் இதன் தொடர்பாக இந்த அவைக்கு அளித்தால், அது பயனுள்ள வகையில் அமையுமென்று கருதி, சொல்ல விரும்புகிறேன். காடுகளிலே மழை குறைந்து, பொதுவாக மக்கள் மழையில்லாமல் கஷ்டப்படும் சூழ்நிலைபோல, வனவிலங்குகளும் கஷ்டப் படுகின்றன. அப்படிப்பட்ட காட்டுப் பகுதிகளிலே நீர் நிலைகள் வற்றிப் போய் தண்ணீர் இல்லாத சூழ்நிலை ஏற்படும்போது, இந்த யானைக் கூட்டம் தண்ணீர் எங்கே தென்படுகிறதோ அந்த இடங்களுக்குச் செல்லுகின்றது. அப்படி தண்ணீருக்காக அலைந்து, திரிந்து தண்ணீர் கிடைக்காமலும்

[1985 ஏப்ரல் 8

கொண்டிருக்கிற காலத்தில், காடுகளை அழிக்கின்ற எந்தத் திட்டத்திற்கும் இப்போது மத்திய அரசானாலும், மாநில அரசானாலும் முன்னுரிமை அளிக்கின்ற அந்தக் கொள்கையை இப்போது எடுக்கவில்லை; எடுப்பதாகவும் இல்லை. மேலும், நன்மைகள் என்று பொதுவாகத் தெரிவித்திருக்கிறார்கள். வேறு என்ன நன்மைகள் என்று தெரிந்தால், அதையொட்டிய கருத்தைத் தெரிவிக்க முடியும்.

*திரு. க. அருணாசலம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே ரப்பர் தோட்டங்கள் ஏற்படுத்தப்பட்ட பிறபாடு, ஏராளமாகத் தேன் உற்பத்தியாகி, பல மாநிலங்களுக்கு அந்தத் தேன் அனுப்பப்பட்டு அதிகமாகப் பாராட்டுப் பெற்றிருக்கிறது. அதன் மூலமாக வேறு பல நன்மைகளும் ஏற்பட்டிருக்கின்றன. அதாவது தேனீக்கள் அதிகமாக உண்டாவதினாலே வேறு பல மரங்களிலிருந்தும் தேன் அதிகமாக உற்பத்தியாகிறது என்று சொல்கிறார்கள். அதற்கு காடுகளை அழித்துச் செய்ய வேண்டியதில்லை. எத்தனையோ இடங்களிலே காடுகள் காடுகளாக இருக்கின்றன. அங்கெல்லாம் ரப்பர் மரங்களை உண்டுபண்ணினால், ஒருவேளை ரப்பர் மரத்திலேயிருந்து வருகிற பால் குறைவாக இருந்தாலும்கூட, இந்தத் தேனீக்களால் தேன் அதிகமாக உற்பத்தியாகிறது என்று சொல்கிறார்கள். இதனை ஆராய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, தேன் அதிகமாக உற்பத்தியாவதற்கு ரப்பர் மரங்கள் காரணமாக இருக்கின்றன என்கிற செய்தி புதிதாக இருக்கிறது. நான் துறையோடு அல்லது அதிகாரிகளோடு கலந்துபேசி அந்த விவரத்தைத் தெரிந்துகொள்ள முடியும். ஆனால் வனத் துறையைப் பொறுத்தவரை, தேனை காடுகளிலே இருந்து சேகரிக்கின்ற அந்த முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. அடர்ந்த காடுகளிலே, உயர்ந்த மரங்களிலேதான் தேன்கூடு வைக்கப்படுவதாகத் தெரிகிறதே தவிர, ரப்பர் மரங்களில் தேன்கூடு இருப்பதாகத் தகவல் இல்லை. ஆகவே, அப்படி இருக்குமானால், அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

**திரு. பா. ரா. தாமஸ் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இயற்கை ரப்பர் விலை அதிகமாகவும், செயற்கை ரப்பர் விலை குறைவாகவும் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதனால் நம்முடைய ரப்பர் வெளிமார்க்கெட்டுகளிலே போட்டியிட முடியாத நிலை இருப்பதாகக் கூறப்படுகிறது. அதுபற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன கூறுகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.



1985 ஏப்ரல் 8]

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, கொள்கை முடிவைப் பொறுத்துத்தான் இதுவும் மத்திய அரசினுடைய இறக்குமதி அமைந்திருக்கிறது. செயற்கை ரப்பரை வரவழைப்பது அல்லது எடுக்கின்ற கொள்கை செய்வது என்பது மத்திய அரசு அவ்வப்போது மரியாதையும் முடிவைப் பொறுத்தது. எப்போதுமே இயற்கைக்குத்தான் செயற்கை கண்ணைக் காட்டி, மிமிட்டிவிட்டு அதிகம், மதிப்பும் அதிகம். மறைந்துவிடுகின்ற, அழிந்துவிடுகின்ற ஒன்று. ஆகவே, அதற்கு விலை குறைவாகத்தான் இருக்கும். அதைப்போல வாழ்வும் குறைவாகத்தான் இருக்கும். ஆகவே இயற்கையை மதிக்கிறவர்கள் எப்போதுமே இயற்கையைத் தான் மதித்துக் கொண்டிருப்பார்கள்; போற்றிக் கொண்டிருப்பார்கள். செயற்கை ரப்பரை வாங்க வேண்டுமென்று எண்ணுகிறவர்கள்தான் எப்படியாவது இந்தப் பெயரிலே செயற்கைக்கு மதிப்பளித்து வாங்குகிறார்கள். ஆனாலும் என்றைக்கும் செயற்கையினுடைய போட்டி இயற்கையை வெல்ல முடியாது.

## ஆனைமலைப் பகுதியை தேசிய பூங்காவாக அறிவித்தல்

*** 2 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஆனைமலைப் பகுதியை, தேசியப் பூங்காவாக ஆக்க வேண்டும் என்ற செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** (அ) மற்றும் (இ) ஆனைமலை சரணாலயத்தில் உள்ள சில பகுதிகளைத் தேசியப் பூங்காவாக அறிவிக்கும் கருத்துரு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆனைமலையிலே யானையினுடைய சரணாலயம் இருக்கிறது. அதை தேசியப் பூங்காவாக மாற்றுகின்ற கருத்துரு அரசினிடத்திலே இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதை தேசியப் பூங்காவாக ஆக்குகின்ற போது அதை எந்தெந்த வகையிலே அபிவிருத்தி செய்யலாமென்ற திட்டம் அரசிடத்திலே இருக்கிறதா? வேறு எங்கெங்கே இப்படிப்பட்ட தேசியப் பூங்காக்கள் நம்முடைய நாட்டிலே இருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

[1985 ஏப்ரல் 8

சாகின்றன. அப்படி இரண்டு சம்பவங்கள். தர்மபுரியில் குடிதண்ணீர் குடிப்பதற்காக பெரிய ஏரிப் பகுதியிலே இறங்கி, சேற்றிலே மாட்டிக்கொண்டு, அதற்குப் பிறகு அந்தப் பகுதி மக்களெல்லாம்—500, 1,000 பேர் கூடி—யானையைக் கரை ஏற்றியிருக்கிறார்கள். அது பிழைத்துக்கொண்டது.

(முற்பகல் 10-15)

ஆனால் இன்றைக்குத்தான் பத்திரிகையில் அந்தச் செய்தியைப் படித்தேன் துறையினிடத்திலிருந்து தகவலை எதிர்பார்த்திருக்கிறேன். சேற்றில் இறங்கிய அந்த யானையைக் கஷ்டப்பட்டு சேற்றிலிருந்து வெளியே இழுத்துக் கொண்டு வந்து சேர்க்கிற முயற்சியில் யானை அந்த உபாதையைத் தாங்காமல் மரணம் அடைந்திருக்கிறது என்ற செய்தி பத்திரிகையில் வந்திருக்கிறது. அதிலே எந்த அளவிற்கு அடிப்படை இருக்கிறது, எந்த அளவிற்கு உண்மை இருக்கிறது அல்லது அதற்குப் பின்னணி என்ன என்பதைப்பற்றியெல்லாம் துறையிடத்திலே கேட்டிருக்கிறேன்.

புதிதாக காட்டுப் பகுதிகளில் ஆங்காங்கே செயற்கை நீர் நிலையங்களை உருவாக்கவும், ஏரி, குளங்கள் போன்றவற்றை வெட்டவும் வனவிலங்குகள் வறட்சிக் காலங்களில் பயன்படுத்தக்கூடிய அளவிற்கு நீர்நிலைகளை உருவாக்கவும் திட்டத்தை இப்போது வனத் துறை மேற்கொண்டிருக்கிறது.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மேற்குத் தொடர்ச்சி மலைக் காடுகள் பாதுகாப்பு மற்றும் சுற்றுலா வளர்ச்சி என்ற அடிப்படையில் மத்திய அரசு பெரும் நிதி ஒதுக்கியிருப்பதாகச் செய்தி வந்திருக்கிறது. அதிலே மாநில அரசினுடைய திட்டங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றனவா ? முதுமலை சரணாலயம் தற்போது மூடப்பட்டிருப்பதாகச் செய்தி வந்திருக்கிறது. நீலகிரிக்கு எல்லோரும் வருகிற இந்த நேரத்தில் மீண்டும் அந்த முதுமலை சரணாலயத்தைத் திறக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுப்பார்களா ? மாண்புமிகு அமைச்சர் அவர்களின் முயற்சியின் காரணமாக யானைகள் தண்ணீர் குடிக்க வசதி செய்து தந்திருக்கிறார்கள். அந்தத் தண்ணீர் உப்பு-சப்பு இல்லாமல் இருப்பதால், அதைக் குடிக்காமல் யானைகள் போய்விடுவதாகச் சொல்லுகிறார்கள். ஆகவே அதிலே உப்பு போட்டு சுவையான நீரை யானைகளுக்கு வழங்கி மீண்டும் தமிழகக் காடுகளுக்கு அவைகள் வர அன்பு அழைப்பை அமைச்சர் அவர்கள் விடுவார்களா ?



1985 ஏப்ரல் 8]

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** பல்வேறு திட்டங்களின் அடிப்படையில் மத்திய அரசு உதவிக்கொண்டு வருகிறது. அதிலே ஒரு திட்டம் தான் மேற்குமலைத் தொடர்ச்சி மேம்பாட்டுத் திட்டம் என்பது. மேற்கு மலைத் தொடர்ச்சிப் பகுதியில் வருகிற பல்வேறு திட்டங்களுக்கு நிதி வழங்கு கிறார்கள். அதிலே வனவிலங்கு பாதுகாப்புத் திட்டமும் வந்து சேருகிறது. எந்த அளவிற்கு பயனுள்ள வகையில் அந்த நிதி கிடைக்கிறது என்று பார்த்தால், மகிழ்ச்சி அளிக்கத்தக்க அளவிற்கு இல்லை. ஆனாலும் அவ்வப் போது நிதி கிடைத்துக் கொண்டிருக்கிறது. குறிப்பாக இதுபோன்ற வனவிலங்கு சரணாலயம் அமைப்பதை மத்திய அரசு ஊக்குவித்துக் கொண்டிருக்கிறது. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில், மிகச் சிறந்த, வெற்றிகரமான திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். நான் முன்பு குறிப்பிட்டதைப்போல, ஏழு வனவிலங்கு சரணாலயங்களையும் ஒரு தேசிய பூங்கா வைக்கும் திட்டத்தையும் வைத்திருக்கிறோம். கடந்த நான்கைந்து ஆண்டுக் காலத்திலே சுமார் ஆறு இலட்சம் ரூபாய் மத்திய அரசிடமிருந்து வந்திருக்கிறது. நாம் கேட்ட தொகை 40 இலட்சம் ரூபாய். நான்காண்டுக் காலத்திலே நாம் செலவழித்த தொகை 35 இலட்சம் ரூபாய். சென்னைக்கருகில் உள்ள வண்டலூரில் உயிரியல் பூங்கா அமைக்க ஐந்து கோடி ரூபாய் அளவில் உள்ள திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டு மூன்று கோடி ரூபாய்க்கு மேல் நாம் செலவழித்திருக்கிறோம். இதற்குக்கூட நிதியுதவி கேட்டுக் கொண்டிருக்கிறோம். வனவிலங்குகளையும், காடுகளையும் பாதுகாக்க பெரிய அளவில் நிதி உதவி செய்ய வேண்டும் என்று மத்திய அரசை மாநில அரசு கேட்டுக்கொண்டிருக்கிறது.

முதுமலை சரணாலயம் மூடப்பட்டிருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அந்தத் தகவல் என்னிடத்திலே இல்லை. யானைகளுக்கு நீர் வசதிகளைச் செய்வதற்கு ஏற்கெனவே திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு நடவடிக்கை எடுத்து வருகிறோம். யானைக்கு எது பிடிக்கும் என்பதை நம்மைவிட பணியாளர்கள் அதிகம் தெரிந்து வைத்திருக்கிறார்கள். உப்பு பிடிக்குமானால் உப்பையும் போட்டு அந்த நீரை வழங்குவார்கள்.

[1985 ஏப்ரல் 8

### பாலாறு அசுத்தமாவதைத் தடுத்தல்.

* 3 வினா.—திரு. எல். ஜெயச்சந்திரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

வட ஆற்காடு மாவட்டம், ஆம்பூர் மற்றும் வாணியம்பாடி பகுதிகளில் உள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியாகும் கழிவுநீர் பாலாற்றில் கலந்து தண்ணீர் அசுத்தமாவதைத் தவிர்க்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை யாது?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** 1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் 25 மற்றும் 26-வது பிரிவுகளின்படி கழிவுநீரை வெளியேற்ற தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் அனுமதி பெறவேண்டுமென வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகள் அறிவுறுத்தப்பட்டுள்ளன. வாரியத்தினால் குறிப்பிடப்பட்டுள்ள வரைமுறைகளுக்கேற்ப கழிவுநீரைச் சுத்திகரிக்க தேவையான சுத்திகரிப்பு சாதனங்கள 31-5-1985-க்குள் நிறுவ வேண்டும் என்று ஆணை வெளியிடப்பட்டுள்ளது. சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதன் முன்னேற்றம் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தினால் கண்காணிக்கப்படுகிறது.

**திரு. எல். ஜெயச்சந்திரன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம், ஆம்பூர், வாணியம்பாடி ஆகிய இடங்களில் உள்ள தொழிற்சாலைகளிலிருந்து வெளியாகும் கழிவுநீர் பாலாற்றில் கலப்பதால், அந்தக் குடிநீர் பொதுமக்களுக்கு ஏற்றதாக இல்லை என்று பல முறை இந்த மாமன்றத்திலே கூறியுள்ளோம். வட ஆற்காடு மாவட்டத்தில் மாவட்ட ஆட்சி மன்றக் கூட்டத்திலும் பேசியிருக்கிறோம். அங்குள்ள மருத்துவர்கள், அறிஞர்கள் கருத்துப்படி, இன்னும் பத்தாண்டுகளுக்கு அந்தத் தண்ணீரைக் குடித்தால், நிச்சயமாக அது அங்குள்ள மக்களுக்கு பெரும் வியாதி வர காரணமாக இருக்கும் என்று தெரிகிறது. இப்போது சொல் அளவில்தான் இருக்கிறோம். செயல் அளவில் தீவிரமாக அரசு என்ன நடவடிக்கையை எடுக்க இருக்கிறது என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன். மேற்கொண்டு ஏதாவது குடிநீர் திட்டம் இருக்கிறதா? அதாவது அந்தப் பாலாற்றில் அந்த கழிவுநீர் கலக்காமலிருக்க, அந்தக் கழிவுநீரை போக்க வேறு ஏதாவது திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.



1985 ஏப்ரல் 8]

(முற்பகல் 10-20)

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழ்நாடு போல்லூஷன் கன்ட்ரோல் போர்ட் என்று ஒரு அமைப்பு 27-2-1982-ல் அமைக்கப்பட்டது. மத்திய நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1974-ல் செக்ஷன்கள் 25, 26 இருக்கின்றன. அந்த செக்ஷன்கள்படி இப்போது உடனடியாக அவர்கள் தகவல் சொல்ல வேண்டும் என்று நாம் சொல்லியிருக்கிறோம். அதன்படி அவர்கள் உடனடியாக மாசு கட்டுப்பாடு சட்டத்தின்கீழ் தகுந்த ஏற்பாடுகள் செய்ய வேண்டும், தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் நாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். இதனுடைய வரலாறு என்னவென்றால், 1984 ஆம் ஆண்டிலிருந்தே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்களுக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

In G.O. No. 12, Environment Control Department, dated 12th March 1984, the date was notified as 31st May 1984. Earlier in G.O. No. 4, Environment Control Department, dated 28th September 1983, the Government daclared the entire State as Air Pollution Control area with eeffect from that date. Tamil Nadu Pollution Control Board was watching the progress. In North Arcot 211 tanneries have applied for consent of the Tamil Nadu Pollution Control Board

இது படிப்படியாக வந்துள்ளது. இந்தச் சட்டம் நம்முடைய மாநிலத்திலே இல்லாமல் இருந்தது. 1974 ஆம் ஆண்டு மத்திய அரசினுடைய சட்டத்தை 1982 ஆம் ஆண்டுதான் நாம் அமல்படுத்தினோம். நீண்ட காலம் அமல் படுத்தாமல் இருந்தோம். பின்னர் அந்தச் சட்டத்தை அமல்படுத்தவேண்டுமென்று அமல்படுத்தி வருகிறோம். அதற்குப் பிறகு போல்லூஷன் கன்ட்ரோல் போர்ட் என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்தியிருக்கிறோம். அதற்குப் பிறகு ஒரு உத்தரவு போட்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு விடை சொல்கிறேன்.

Tamil Nadu Pollution Control Board was watching the progress. In North Arcot, 211 tanneries have applied for consent of the Tamil Nadu Pollution Control Board.

[1985 ஏப்ரல் 8

அவர்கள் கன்செண்டுக்கு 'அப்ளை' பண்ண வேண்டும். அப்படி பண்ண வேண்டியது மிகவும் அவசியம். அதிலே 143 இண்டஸ்ட்ரீஸ் கேட்டன. அவர்களுக்கு கன்செண்ட் கொடுத்திருக்கிறோம். அடுத்து 26 இண்டஸ்ட்ரீஸ். 31-5-1984-க்குள் கன்செண்ட் அவர்கள் கேட்டிருக்கவேண்டியது. அவர்கள் கேட்கவில்லை. ஆகவே அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதற்கு உத்தரவு போடப்பட்டிருக்கின்றது. 'லீகல் ஆக்ஷன்' எடுக்கப்படுகிறது செக்ஷன் 44-ன் கீழ் அந்த லீகல் ஆக்ஷன் எடுக்கப்படுகிறது. இது ஒரு முக்கியமான பிரச்சினையாக இருப்பதால், அதைப்பற்றிச் சொல்லிவிடுகிறேன்.

Penalty for contravention of provisions of section 24. 43. Whoever contravenes the provisions of section 24 shall be punishable with imprisonment for a term which shall not be less than six months but which may extend to six years and with fine.

Penalty for contravention of section 25 or section 26. 44. Whoever contravenes the provisions of section 25 or section 26 shall be punishable with imprisonment for a term which shall not be less than six months but which may extend to six years and with fine.

ஆகவே இந்தச் சட்டத்தின்கீழ் நாம் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த உத்தரவைப் போட்டிருக்கிறோம். ஒரு இடத்திலே ஃபைன்கூட போடப்பட்டிருக்கின்றது. வழக்கில் மாஜிஸ்ட்ரேட் ஃபைன்கூட விதித்திருக்கின்றார்கள். அப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுத்துக்கொள்கிறோம்.

**திரு. எல். ஜெயச்சந்திரன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இதில் அரசு நடவடிக்கை எடுத்திருப்பதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நான் கேட்க விரும்புவது, பாலாற்றில் கழிவு நீர் கலக்காமலிருக்க, இதற்கென்று தனியாக ஒரு வாய்க்கால் ஏற்படுத்தும் எண்ணம் அரசுக்கு இருக்கிறதா? அதுபோன்று ஒரு திட்டம் ஏற்படுத்தி நிறைவேற்றினால், நிச்சயமாக கழிவுநீர் காரணமாக ஏற்படுகின்ற பல வியாதிகளைத் தடுக்க முடியும். ஆகவே பாலாற்றில் கழிவுநீர் கலக்காமல் இருப்பதற்காக, தனியாக வாய்க்கால் அமைக்கும் திட்டம் அரசிடம் இருக்கின்றதா என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.



1985 ஏப்ரல் 8]

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு தலைவர் அவர்களே, அந்தப் போலூஷனைத் தடுப்பதற்கு, அந்தக் கழிவு நீரை 'ட்ரீட்மெண்ட்' செய்யவேண்டும். 'பி.ஓ.டீ.' என்று சொல்வார்கள். முப்பதுக்கு மேல் இருக்கக் கூடாது என்று சொல்லியிருக்கின்றார்கள். அப்போது அந்தத் தண்ணீரினால் பிரச்சினை இல்லை. அதற்கு நாம் என்ன செய்திருக்கிறோம் என்று சொல்கின்றேன்.

One tannery in Ambur has completed the treatment plant In 12 others, the construction of treatment plant is in progress.

அது மட்டுமல்ல. அதற்கு என்று ஒரு சொஸைட்டியும் அங்கே ஏற்படுத்தியிருக்கின்றார்கள். அந்த சொஸைட்டியின் மூலமாக உடனடியாக அந்தக் கழிவு நீரைச் சுத்திகரிப்பதற்காக ஏற்பாடு செய்திருக்கின்றார்கள். அதுதான் 'தமிழ்நாடு லெதர் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன்' என்பது. அப்படி ஒரு நிறுவனம் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. அந்த நிறுவனம்கூட உதவி செய்கிறோம் என்று சொல்லியிருக்கின்றது. சிறு சிறு தொழிற்சாலைகளுக்கும் டிரீட்மென்ட் பிளான்ட் ஏற்படுத்த வேண்டுமென்றால், ஒட்டுமொத்தமாக ஒரு கோடி ரூபாய் தேவைப்படும். அதனைச் செய்ய சிறு தொழில் முன்னேற்றக் கழகம் முன்வந்திருக்கிறது. சிறு இன்டஸ்ட்ரீசுக்கு இந்தக் கழகத்தின் மூலமாக இயந்திரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

(முற்பகல் 10-25)

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தோலைப் பதனிட்டு வெளிநாடுகளுக்கு அனுப்புவதால், நமக்கு பல கோடி ரூபாய் அந்நியச் செலாவணி கிடைக்கிறது. இங்கே கழிவு நீரால் ஏற்படும் பாதிப்புபற்றிச் சொன்னார்கள். ஒவ்வொரு தொழிற்சாலையிலும் அவசியம் டிரீட்மென்ட் பிளான்ட் வைக்க வேண்டும். அப்படி வைத்தால்தான் பிரச்சினைகள் தீரும். அதற்கு ஏராளமாகப் பணம் தேவைப்படும். இதுவரை பாதிப்பு இல்லாத வகையில் நடவடிக்கை எடுக்காத தொழில் அதிபர்களையெல்லாம் அழைத்துப் பேசி, அவர்களுக்குத் தேவைப்படும் உதவிகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட கழகத்தின் மூலம் செய்து, அந்த வகையில் தொழிற்சாலைகள் முறையாக இயங்கி நமக்கு அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும் வகையில் நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா?

[1985 ஏப்ரல் 8

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில். இரண்டு விஷயங்கள் இருக்கின்றன. இதற்காக வேண்டி தொழிற்சாலைகளை மூடவும் முடியாது. உடனடியாக பொருள்களை, பாதிப்பு ஏற்படாதவாறு, வெளியே கொண்டு செல்லவும் முடியாது. கழிவுப் முடியாது. இந்த இரண்டு பிரச்சினைகளும் ஏற்படாமல் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது. உடனடியாக இதுகுறித்து நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று சொல்லியிருக்கிறோம். அதற்காக நாம் உதவியும் செய்துகொண்டு வருகிறோம். அந்த அடிப்படையில் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு மாண்புமிகு திரு. கிருஷ்ணசாமி அவர்கள் சம்பந்தப்பட்டவர்களை எல்லாம் அழைத்துப் பேசினார்கள். அவர்களுக்கு உதவி செய்வதாகக்கூட சொன்னோம். அவர்களும் ஆறு மாதம், ஒரு வருடம் என்று தவணை கேட்டார்கள். இப்படி இரண்டு மூன்று தடவை தவணை கேட்டார்கள். செய்வதாகவும் சொன்னார்கள். ஆனால் அதில் உள்ளபடியே பல பேர் அக்கறை எடுத்துக்கொள்ளவில்லை. மீண்டும் இதுபற்றி அவர்களை அழைத்துப் பேசியிருக்கிறோம். இதற்காக வேண்டி இன்றைக்கு தமிழ்நாடு தோல் அபிவிருத்திக் கழகம் ஒட்டுமொத்தமாக உதவி செய்கிறோம் என்று சொல்லி முன்வந்திருக்கிறார்கள். இதில் மகிழ்ச்சிகரமான செய்தி என்னவென்றால், பல தொழிற்சாலைகளில் கழிவு நீரை அகற்றி நல்ல வகையில் சுத்திகரிப்பு செய்திருக்கிறார்கள். அந்த வகையில் தற்போது முன்னேற்றம் அடைந்திருக்கிறோம். இதுகுறித்து இன்னும் தீவிரமாக நடவடிக்கை எடுக்கப்படும். சில பேர் நல்லமுறையில் செயல்படு கிறார்கள். சில தொழிற்சாலைகளை: பொறுத்தவரையில், என்ன வேண்டு மானாலும் செய்யட்டும் என்று இருக்கிறார்கள். இப்போது அவர்கள்மீது நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

**திரு. சி. இராமலிங்கம்:** அசுத்தத்தைப் போக்குகின்ற வாரியம் 1982-ல் அமைக்கப்பட்டது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த வாரியத்தின் அதிகாரிகள் இந்த வாரியம் அமைக்கப்பட்டதற்குப் பிறகு, எங்கெங்கு சென்று அசுத்தங்களைப் போக்க என்னென்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்? தோல் பொருள்களால் மட்டுமல்ல, இன்றைக்கு மெரினா அருகாமையில் உள்ள திருவான்மியூர் பகுதியில் இருக்கின்ற தொழிற்சாலை களிலிருந்துகூட கழிவு நீர் ஓடி அந்தப் பகுதியை அசுத்தப்படுத்துகிறது. இத் தொழிற்சாலைகளுக்கு லைசென்ஸ் வழங்கியது யார்? இந்தப் பகுதியிலுள்ள அசுத்தங்களைப் போக்க அரசு நடவடிக்கை எடுத்ததா? மேலும் கரும்பு, சிமெண்ட் ஆலைகளிலிருந்து வருகிற மாசுகளைப் போக்க இந்த வாரியம் இதுவரை என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? அசுத்தங்கள் போக்கப்பட வேண்டுமென்று பொதுமக்கள் விரும்புகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1985 ஏப்ரல் 8]

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** செக்ஷன் 25-ல் சொல்லியுள்ளதை பொதுமக்களுக்கு இந்த மன்றத்தின் மூலம் நான் சொல்லியாக வேண்டும். தொழிற்சாலைகளை அமைத்துள்ளவர்களுக்கும் இது தெரிய வேண்டும். அந்த வகையில் அதை நான் இங்கே விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

Restrictions on new outlets and new discharges. 25: (1) Subjeet to the provisions of this section no person shall. without the previous consent of the State Board, bring into use any new or altered outlet for the discharge of sewage or trade effluent into a stream or well or sewer or land or begin to make any new discharge of sewage or trade effluent into a stream or well or sewer or land.

(முற்பகல் 10-30)

என்று மிகத் தெளிவாக இருக்கிற காரணத்தால், இந்தச் சட்டத்தை நாம் கொண்டு வந்ததற்குப் பிறகு, எந்தத் தொழிற்சாலையாக இருந்தாலும், உடனடியாக 1984 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் இந்த வாரியத்திற்கு விண்ணப்பித்து, "அதற்கான அனுமதி தாருங்கள், நாங்கள் டிஸ்சார்ஜ் செய்து கொண்டிருக்கிறோம். ஆகவே, அதற்கான அனுமதி தரவேண்டும்" என்று தொழிற்சாலைகள் கேட்க வேண்டும். அப்படி கேட்கவில்லை யென்றால், சட்டப்படியான பீனல் ஆக்ஷன் எடுக்க இந்த அரசு தயாராக இருக்கிறது. இப்போது சட்டமன்றம் நடந்து கொண்டிருக்கிற காரணத் தால், இதுபற்றிய பிரஸ் ரிலீஸ் (செய்தி வெளியீடு) வெளியிடவில்லை. இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பாகக் கேள்வி கேட்டு விட்டதால், இதைச் சொன்னேன்.

However to create an impact on Industries, the Tamil Nadu Board has decided to launch prosecution against 249 industries under the Water (Prevention and Control of Pollution) Act, 1974 and 120 industries under the Air (Prevention and Control of Pollution) Act, 1981 for not applying to the Board for consent before the stipulated date. 52 industries under the Water Pollution and 42 industries under the

Air Pollution have already been fined. All industries must take immediate action to apply to the Board for consent without any further loss of time.

என்று அறிக்கை கொடுப்பதாக இருக்கிறோம். ஆகவே, இந்தத் தகவல் சட்டமன்றத்தில் வெளியிடப்பட்டாலும், சம்பந்தப்பட்டவர்களுக்குப் போய்ச் சேரும். இதற்கு உடனடியாக எல்லாத் தொழிற்சாலைகளும் ஆதரவு (கன்செண்ட்) கொடுக்கவில்லையென்றால், அவர்கள் பீனல் புரோவிஷனுக்கு உட்படுத்தப்படுவார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பா. ரா. தாமஸ்: தலைவர் அவர்களே, இந்த மாநிலத்திலே பல பகுதிகளில் இவ்வாறு அசுத்த நீர், குடி நீர் உள்ள பகுதிகளில் கலப்பதாகச் சொல்லப்படுகிறது. இந்தக் கேள்வியைக் கேட்ட உறுப்பினர் திரு. ஜெயச்சந்திரன் அவர்களே, பாலாற்றில் இவ்வாறு அசுத்த நீர் கலப்பதாக திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறார்கள். இவ்வாறு கலப்பதை உடனடியாக நிறுத்த இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? மக்களுடைய நலனைத் தாக்கக்கூடிய அசுத்த நீரைத் தடுக்க, மாநிலம் முழுவதும் இவ்வாறு நடைபெறாமல் தடுக்க, அதனால் மக்களுக்கு விளையும் ஆபத்தைத் தடுக்க, முறையான என்ன நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்திருக்கிறது? அத்தகைய தொழிற்சாலைகளுக்கு மாநில அரசே நிதி உதவி செய்து, இந்த உத்தரவை அவர்கள் திறம்பட நிறைவேற்ற அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு ஆதாரமாக இந்தக் கேள்வியைக் கேட்கிறார்கள். மீண்டும் சொல்கிறேன். இப்போது ஓரளவுக்கு முன்னேற்றம் இருக்கிற காரணத்தால், தற்போது வடார்க்காடு மாவட்டத்தில் அப்படிப்பட்ட 326 தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்குச் சொந்தக்காரர்கள் அப்படிப்பட்ட அனுமதியைக் கேட்டிருக்கிறார்கள்.

232 tanneries have been issued consent subject to the condition that effluent treatment system should achieve the quality prescribed namely, B.O.D.





அது நான் சொல்லியிருக்கக்கூடிய எல்லைக்குள் வந்தால் ஒத்துக்கொள்கிறோம்.

12 tanneries in Ambur and one each in Vellore and Ranipet have taken up the construction of effluent treatment system.

திராவிட முன்னேற்றக் கழகத் துணைத் தலைவர் கேட்டிருக்கக்கூடிய கேள்விக்கு இதுவே முழுமையான பதிலாக அமைந்திருக்கிறது. அவர்கள் 73 தொழிற்சாலைகளுக்குப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

The work is in various stages of progress. Ranipet Effluent Treatment Servicing Industrial Co-operative Society Limited—73 tanneries; Ambur Tannery Effluent Treatment Servicing Industrial Co-operative Society—58 tanneries; Vaniyambadi Co-operative Soceity—65 tanneries, Pernambut Effluent Service Industrial Co-operative Society-79 tanneries.

ஆகவே இந்தச் சட்டத்தை நாம் கொண்டு வந்து, பீனல் புரொவிஷனை எடுத்து விளக்கி, அப்படியே விட்டுவிடாமல், அவர்களையும் அழைத்துப் பேசி யாருக்கும் பாதிப்பு ஏற்படாமல் இருக்கும் பணியில் அவர்களை ஈடுபடுத்தி இருக்கிறோம்.

திரு. காடுவெட்டி கண்ணப்பன்: தலைவர் அவர்களே, சுற்றுப் புறச் சூழல் அசுத்தத் தடுப்புச் சட்டத்தை மீறிய குற்றத்திற்காக, நடவடிக்கை எடுக்கப்பட்ட தொழிற்சாலைகள் எத்தனை? நடவடிக்கை எடுத்ததற்குப் பின்பு, சுத்திகரிப்புப் பணியில் எத்தனை தொழிற்சாலைகள் ஈடுபடுத்தப்பட்டன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, இந்த விபரத்தை மூலக் கேள்விக்குப் பதில் அளிக்கும்போதே சொல்லியிருக்கிறேன். அப்படி மீறியவர்கள் மீது நடவடிக்கை எடுத்து, மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் ரூ. 500 அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதுவே நமக்கு வெற்றிதான்.

(முற்பகல் 10-35)

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, 250 தொழிற்சாலைகளில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அவ்வாறு

தொழிற்சாலைகளின்மீது நடவடிக்கை எடுக்கப்படும்போது, தொழிற்சாலைகள் மூடப்படுகின்ற நிலைமைகள் ஏற்படலாம். அத் தொழிற்சாலைகளிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாகவே இருக்கிறார்கள். எனவே 250 தொழிற்சாலைகளிலே நடவடிக்கை எடுப்பது என்பது மிகவும் சிக்கலான பிரச்சினை என்றே கருதுகிறேன். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி மேற்கொண்டு, அத் தொழிற்சாலைகளின் நிர்வாகிகளை அழைத்துப் பேசி அவ்வாறு நடந்திடாமல் தடுக்க முயற்சி மேற்கொள்வார்களா என்று கேட்க விரும்புகிறேன். ஏனெனில் தண்டனை மூலமாக தடுத்துவிட முடியும் என்று நான் கருதவில்லை.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே இரண்டு வகையான கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன. ஒன்று தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும், ஏன் தீவிர நடவடிக்கை எடுக்கவில்லை என்பதாகும். மற்றொன்று, மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழகத் துணைத் தலைவர் அவர்கள், கொஞ்சம் யோசித்து சிந்தித்து நடவடிக்கை எடுக்க வேண்டும், அந்தத் தொழிற்சாலைகள் நசிந்து விடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று சொன்னார்கள் ஆகவேதான் அரசாங்கம் இரண்டு கருத்துக்களையும் நன்கு உணர்ந்து வயா மீடியா ( via-media ).வாக அந்தந்த தொழிற்சாலை நிர்வாகிகளை அழைத்துச் சொல்லியிருக்கிறது. பலமுறை அவர்களுடன் இது குறித்துப் பேசியிருக்கிறோம். இதனால் நன்மையும் கிடைத்திருக்கிறது. இப்போது கொடுத்திருக்கக்கூடிய பட்டியலின் அடிப்படையில், சிலர் கழிவு நீரைச் சுத்தப்படுத்தும் முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறார்கள். ஆனாலும் சிலர் என்ன சொன்னாலும் கேட்க மாட்டோம் என்கிறார்கள். பலர் தொழிற்சாலைகளை அரசிடமிருந்து எந்தவித அனுமதியும் பெறாமல் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். எனவே, அவற்றை முறைப்படுத்தி, கட்டுப்படுத்திடக் கூடிய நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம். அதுமட்டுமல்ல, நீரைச் சுத்திகரிப்பு செய்து தொழிற்சாலைகளை நடத்த முடியும். அந்த உணர்வு தேவை. அந்த உணர்வை இப்பொது நாம் ஏற்படுத்தி இருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன மாதிரி, தொழிற்சாலைகளும் நசிந்துவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். ஏனவேதான் தொழிலாளிகள் பிரச்சினை, தொழிற்சாலை பிரச்சினை, உற்பத்திப் பிரச்சினை ஆகியவற்றைக் கணக்கில் எடுத்துக் கொண்டு, வயா மீடியாவாக நாம் அவர்களுடன் பேசிக்கொண்டிருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ரொம்ப நாழியாக அசுத்தத்திலேயே இருக்கிறோம். (சிரிப்பு), அடுத்து திரு. ஏ. ஜே. தாஸ்.

**திரு. ஏ. ஜே. தாஸ் :** தலைவர் அவர்களே, சென்னை நகரத்திலே பேசின் பிரிட்ஜ் பகுதியிலே இலட்சக்கணக்கான ஏழை மக்கள் வாழும் பகுதியிலே தினம் சுகாதாரம் கெட்டு, அந்த மக்கள் மிகவும் பாதிக்கப்படுகிற நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. மின்சார வாரியத்தினால் நடத்தப்படும் அனல் மின் நிலையத்தினாலேயே இந்த நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. மின்சார வாரியத்தின்மேல் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் ஏதேனும் நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா ? மின்சார வாரியத்தின்மீது ஏதேனும் வழக்கு தொடரப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவர் அவர்களே, பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலையத்தைப் பொறுத்தவரையில், மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் இதுகுறித்து சட்டமன்றப் பேரவையிலே பதில் அளித்திருக்கிறார்கள். பேசின் பிரிட்ஜ் மின் நிலையத்தை படிப்படியாக எந்த வகையிலே மாற்றியமைக்கலாம் என்று திட்டமிட்டு, அந்த முறையிலே மாற்றியமைத்திருக்கிறார்கள். அந்த மாற்றங்கள், பொல்யூஷன் கண்ட்ரோல் போர்ட் மின்சார வாரியத்திற்குத் தெரிவித்திருக்கக்கூடிய கருத்தின் அடிப்படையிலேதான், செய்யப்பட்டிருக்கின்றன. மின்சார உற்பத்தி குறையாமலும், அதேசமயத்தில் பொல்யூஷன் கண்ட்ரோலை ஏற்படுத்தக்கூடிய வகையிலும் திட்டங்கள் மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றன.

(முற்பகல் 10-40)

* **திருமதி வி. ஜெயலட்சுமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, தலைவர் அவர்கள், வெகுகாலம் அசுத்தத்திலே இருந்துவிட்டோம் என்று சொன்னார்கள். நாம் இதுவரையிலும் நீரிலுள்ள அசுத்தத்தைப் பற்றித்தான் கேள்விகள் கேட்டோம். ஆனால் இப்போது காற்றிலுள்ள, ஆகாயத்திலுள்ள அசுத்தத்தைத் தடுப்பது தமிழ்நாடு பொல்யூஷன் கண்ட்ரோல் என்ற அமைப்பின் பொறுப்பு என்று அமைச்சர் அவர்கள் சொல்லியதால், நான் அவர்களிடம் ஒரு கேள்வி கேட்கலாமென்று விரும்புகிறேன். மூலக் கேள்வி டானரீசைப் பற்றியதாக இருந்தாலும்கூட, சுற்றுப்புறச் சூழலைப் பாதிக்கிற, சிமெண்ட் ஆலையிலே இருந்து வருகிற தூசியைத் தடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுவரையில் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்

கிறார்களா? இதே மன்றத்திலே சென்ற தடவையும் நான் இந்த வினாவை எழுப்பியபோது, கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென்று அப்போதிருந்த அமைச்சர் அவர்கள் சொல்லியும்கூட, இன்னும் ஒருவிதமான நடவடிக்கையும் இதுவரையிலும் எடுக்கப்படவில்லை. காற்று சுவாசிப்பதற்கு அருகதையற்றதாகிவிடுகிறது என்பதோடு கூட, விவசாய நிலங்களும் பாழ்படுகின்றன என்கிற அடிப்படையில், அதைத் தடுப்பதற்கு ஏதாவது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா? அவ்வாறு எடுக்கப்படும்போது, அந்த அரசு உத்தரவு சிமெண்ட் ஆலைகளுக்கும் பொருந்துமா என்பதையும் எங்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னமாதிரியாக 249 இண்டஸ்ட்ரிஸ் இருக்கின்றன. அவைகளின் மீது (Pollution Control Act)-ன்படி சட்டரீதியாக நடவடிக்கை எடுத்திருக்கிறோம். அதே மாதிரியாக 42 cases have been filed under the Air Pollution Control Law என்ற தகவலை இங்கே கொடுத்திருக்கிறேன். பெரும்பாலான குற்றங்கள் சிமெண்டு ஆலைகள் மூலமாகத்தான் ஏற்படுகின்றன. Fallout, smoke வருகிற நேரத்திலே அதைத் தடுப்பதற்கு ஒரு பெரிய இயந்திரம் இருக்கிறது. அந்த இயந்திரம் ஸ்மோக் Air Pollution செய்யாமல் இருப்பதற்குச் சௌகரியமாக இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல், இராஜபாளையத்தில் ரூ. 1 கோடி செலவழித்து அந்த இயந்திரத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதுமாதிரி ஒரு ஆபத்து இருக்கிறது என்று சொன்ன பிறகு, உடனடியாக ஒரு கோடி ரூபாய்க்கு மேலே செலவழித்து, அங்கு எந்தவிதமான தொல்லையும் கொடுக்காமல், பிளான்டேஷனுக்கு பாதிப்பு ஏற்படாமல் அந்த இயந்திரத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இன்னும் தென்னாற்காடு மாவட்டத்திலே ஒரு இடம் இருக்கிறது. அங்கே இன்னும் செய்யவில்லை. இப்படிப்பட்ட சிமெண்ட் ஆலைகளுக்கும் சொல்லியிருக்கிறோம். அந்த சிமிண்டு ஆலைகளை வலியுறுத்துகிற நேரத்திலே சட்டரீதியாக நாம் நடவடிக்கை எடுக்கிறோம் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா அவர்கள் சொன்னமாதிரி, உடனடியாக நாம் மூடாமல், இரண்டு மூன்று தடவை வார்னிங் கொடுத்து, பிறகு நோட்டீஸ் கொடுத்து—இப்படியெல்லாம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.



**திரு. க. அருணாசலம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, தோல் பதனிடும் தொழிற்சாலையைப்பற்றி 1982 ஆம் ஆண்டு பேசுகிறபோது, திண்டுக்கல், திருச்சி பக்கத்திலே இருக்கும் தோல் பதனிடும் தொழிற்சாலைகளினால் பல கெடுதல்கள் ஏற்படுகின்றன என்று பேசப்பட்டது. அமைச்சர் அவர்கள் பேசும்போது திண்டுக்கல்லைப்பற்றி பேச்சே வரவில்லை. திண்டுக்கல்லும் இதில் சேருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இங்கே ஒட்டுமொத்தமாக 10, 12 தொழிற்சாலைகளைப்பற்றி இருக்கிறது. திண்டுக்கல்லும் அதிலே சேரும். ஆனால் நிறைய தொழிற்சாலைகள் ஆம்பூர் பகுதியிலே இருக்கக்கூடிய காரணத்தினாலே, அதைப் பற்றித்தான் பேசுகிறார்கள்.

In all the factories where leather work is going on, it should be implemented.

**திருமதி வி. ஜெயலட்சுமி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிமெண்ட் ஆலைகளைப் பொறுத்தமட்டில், இலட்சக்கணக்கான ரூபாய் பெறுமான இயந்திரத்தை நிறுவி, அங்கு தூசி தடுப்பான் என்ற கருவியை நிறுவி, சிமெண்ட் தூசி வெளியே போகாதபடிக்கு உத்தரவிட்டிருப்பதாகச் சொன்னார்கள். சமீபத்திலே நான் ஆலங்குளம் சிமெண்ட் ஆலைக்குச் சென்றபோது, அங்கே இந்தத் தூசி தடுப்பான் கருவி வேலை செய்யவில்லை. திரும்பவும் அதே விஷயத்தை அங்குள்ள மேனேஜிங் டைரக்டர் திருமதி யாஸ்மின் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்து கேட்டபோது, அந்தத் தூசி தடுப்பான் கருவியையும் இயக்க வேண்டுமென்றால், மின்வெட்டு காரணமாக மின் பற்றாக்குறை இருக்கிறது என்று அவர்கள் சொன்னார்கள். ஆகவே அதை இப்போது நிறுத்தி விட்டோம், அது முழுவதுமாக 'பங்ஷன்' செய்ய வேண்டுமென்று சொன்னால். அதற்கென்று தனியாக ஜெனரேட்டர் வைத்தால்தான், அது வேலை செய்யும் என்று சொன்னார்கள். "அது விஷயமாகத் தாங்கள் என்ன செய்தீர்கள்?" என்று கேட்டபோது, "மத்திய அரசுக்கு நாங்கள் எழுதி கேட்டிருக்கிறோம், 20 இலட்சம் ரூபாய் பெறுமான ஒரு ஜெனரேட்டரை 'இம்போர்ட்' செய்வதற்கு மத்திய அரசு அதிகாரம் கொடுத்தார்கள், அனுமதி அளித்துவிட்டார்கள்" என்று அவர்கள் சொன்னார்கள். அப்படியானால் அந்த 20 இலட்ச ரூபாய் பெறுமான ஜெனரேட்டர் உடனடியாக இறக்குமதி செய்யப்பட்டு அங்கே பொருத்தப்

[1985 ஏப்ரல் 8

பட்டு, விவசாயிகளுக்காகவும், சுற்றுப்புறத்தில் வசித்து வரும் மக்களி னுடைய நல்வாழ்வுக்காகவும் உடனடியாக ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கு பதிலை மிகத் தெளிவாகச் சொல்ல வேண்டியது அவசியம். எந்த ஒரு தொழிற்சாலைக்கு நோட்டீஸ் கொடுத் தாலும், அவர்கள் உடனடியாக அந்த சுத்திகரிப்பு இயந்திரத்தைப் பயன் படுத்த வேண்டுமென்றால், அவர்களுக்குக் கூடுதலாக மின்சப்ளை செய்ய வேண்டுமென்கிறார்கள். மின்வெட்டின் காரணமாகச் செய்ய முடிய வில்லை என்று ஒரு flat reply ஆக ஒன்றையே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நாம் என்ன சொன்னோம் என்றால், " நீங்கள் உற்பத்தி செய்கின்ற நேரத்தில் ஜெனரேட்டரைப் பயன்படுத்திக் கொள் கிறீர்கள். திடீரென்று மின்வெட்டு ஏற்பட்ட உடனே அந்த ஜெனரேட்டர் வேலை செய்கிறதா என்றால் இல்லை. ஆகவே வேலை செய்கிற நேரத்திலே நீங்கள் ஜெனரேட்டரைப் பொருத்தி எவ்வளவு அக்கறை எடுத்துக் கொள் கிறீர்களோ அவ்வளவு அக்கறை இந்த சுத்திகரிப்பு இயந்திரத்தை இயக்கு வதிலே கூட எடுத்துக்கொள்ள வேண்டும். "

(முற்பகல் 10-45)

மின் வெட்டு என்பதை ஒரு காரணமாகக் காட்டினால், இந்தச் சட்டத்தின்படி அது செல்லுபடியாகாது என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு ஒவ்வொரு தொழிற்சாலையிலும் ஜெனரேட்டர் கொண்டு வர ஏற்பாடு செய்திருப்பதாகச் சொன்னார்கள். எல்லாத் தொழிற்சாலை களுக்கும் உரிய ஜெனரேட்டர்களை 'பொல்லூஷன் போர்ட்' வழங்க முடியாது. இது தொழிற்சாலைகளுடைய பொறுப்பு. மற்ற விஷயங் களில் எல்லாம் அவர்கள் லைசென்ஸ் வாங்கிக் கொண்டு தொழிலை நடத்த ஆரம்பிக்கிறார்கள். 'பொல்லூஷன்' விஷயத்தில் மட்டும் 'நீங்கள் வாங்கிக் கொடுங்கள்' என்று சொல்லுவது அவ்வளவு சரியாக இருக்காது It is the responsibility of the Industry. The onus of implementing this and seeing that the plant works according to the norms fixed by the Pollution Control Board is on the industry. அது தொழிற்சாலைகளுடைய பொறுப்பகா இருக்கும். அந்தப் பொறுப்பை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. எந்த அரசாங்கமும் இதை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.



1985 ஏப்ரல் 8]

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** பிரபல டாக்டர் சஞ்சீவி ஒரு கருத்தைக் தெரிவித்திருக்கிறார். பொட்டாஷியம் சைனட் சாப்பிடுவது எவ்வளவு ஆபத்தோ அதே அளவு ஆபத்து அண்ணா சாலையில் சென்றால், அங்கேயுள்ள போக்குவரத்து வண்டிகளின் புகையால் ஏற்படுகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்கவிருக்கிறது என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** இந்த ஆபத்து உலகம் முழுவதும், குறிப்பாக டீசல் பயன்படுத்துவதன் மூலம், ஏற்படுகிறது. ஆகவே டப்ள்யூ.எச்.ஓ. இந்தப் பிரச்சினையை எடுத்துக்கொண்டு எல்லா நகரங்களிலும், லண்டன், டோக்கியோ போன்ற நகரங்களையும் எடுத்துக் கொண்டு எவ்வளவு பாய்சன் இருக்கிறது என்று பார்த்திருக்கிறார்கள். இந்தப் பிரச்சினை இன்னும் முப்பது ஆண்டுகளுக்குத்தான் இருக்கும். 'ஆல்டர்னேட்டிவ் சோர்ஸ் ஆஃப் எனர்ஜி எத்தனால் காஸ்' வந்த பிறகு இது போய்விடும் என்று சொல்லுகிறார்கள். இதற்காக எந்தவிதமான கட்டுப்பாடும் விதிக்க முடியவில்லை. வளர்ந்து வரும் நாடுகளிலேகூட இதற்குப் பரிகாரம் கண்டுபிடிக்க முடியவில்லை.

'துகில்.'

*4 வினா—**திரு. பா. ரா. தாமஸ்** (திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் சார்பில்) : மாண்புமிகு கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் நாட்டில் கைத்தறித் துணிகளை விற்பனை செய்ய, 'துகில்' என்ற புதிய அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், இதைப்பற்றிய விபரங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** (அ) தமிழ்நாட்டில் கைத்தறித் துணிகளை விற்பனை செய்ய 'துகில்' என்ற அமைப்பு ஏதுமில்லை.

(இ) கூட்டுறவு தீவிர வளர்ச்சி மற்றும் ஏற்றுமதி திட்டச் சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் துணிகள் 'துகில்' என்ற வணிகப் பெயரில் விற்கப் படுகிறது.

[1985 ஏப்ரல் 8

திரு. ஏ. ஜே. தாஸ் : கைத்தறித் துணி 100 கோடி ரூபாய் அளவிற்குத்
தேங்கி கிடக்கிறது என்று சொல்லப்படுகிறது. அதனால் ஏழை நெசவாளர்
களுடைய தொழில் பாதிக்கப்படும் நிலை இருக்கிறது. முன்பு இந்த
மாதிரியாக பாதிக்கப்பட்டபோது அண்ணா அவர்கள் அந்தத் துணிகளை
தோளில் தூக்கிச் சென்று விற்பனை செய்தார்கள். அந்த மாதிரி அமைச்சர்
அவர்கள் தோளில் சுமந்து சென்று துணி விற்பனை செய்து ஏழை நெச
வாளர்களின் பிரச்சினையைத் தீர்க்க முடியுமா என்று அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மூலக் கேள்விக்கும் இதற்கும்
சம்பந்தம் இல்லை என்றாலும், இப்போதுள்ள தமிழக முதல்வர் புரட்சித்
தலைவர் அவர்களும் ஒரு காலத்திலே கைத்தறித் துணியை தோளில் தூக்கி
விற்றவர்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவருடைய
முயற்சியால் கணிசமாக, பல கோடி ரூபாய் அளவிற்கு ' கோ-ஆப்டெக்ஸ்
நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டுவிட்டன என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பா. ரா. தாமஸ் : இவ்வாறு புதிய பெயரைக் கொடுத்ததால் கூட்டு
றவுத் துறையில் விற்பனை அதிகமாகியிருக்கிறதா ? அதிகமாகியிருக்கிறது
என்றால் எந்த அளவிற்கு ? பிற மாநிலங்களுக்கும் இந்தப் புதிய வகைத்
துணி விநியோகிக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தீவிர கைத்தறி வளர்ச்சித்
திட்டத்தின் கீழ் காஞ்சிபுரம், ஈரோடு, சேலம், மதுரை போன்ற நான்கு
நகரங்களில் கைத்தறித் துணி உற்பத்தி செய்யப்படுகிறது. கரூர், குமிஞ்சிப்
பாடி என்ற இரண்டு இடங்களில் ஏற்றுமதிக்கான துணி தயாரிக்கப்படுகிறது.
இந்த இரண்டு திட்டங்களின் மூலம் நிகழும் ஆண்டில் சுமார் 4 கோடியே 10
இலட்சம் ரூபாய் மதிப்புள்ள துணிகள் தயாரிக்கப்படுகின்றன. அவைகள்
விற்று முதல் ஆகின்றன.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : நம்முடைய நாட்டுக் கைத்தறித் துணிகள்
எந்தெந்த வெளி நாடுகளுக்கு அனுப்பப்படுகின்றனவா ? அதன் மூலம்
நமக்குக் கிடைக்கிற அந்நியச் செலாவணி எவ்வளவு ? ஏற்கெனவே நம்
முடைய கைத்தறித் துணிகளை வாங்கிக் கொண்டிருந்த சில நாடுகள் இப்
போது வாங்க மறுத்திருக்கின்றன என்ற செய்தி வந்து கொண்டிருக்கிறது.
என்னென்ன நாடுகள் அவை, அதற்குரிய காரணம் என்னவென்று அறிய
விரும்புகிறேன்.



1985 ஏப்ரல் 8]

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : இது பற்றி அடுத்த கேள்வி வரு
கிறது. அந்தக் கேள்விக்கு நான் பதில் சொல்லுகிறேன்.

(முற்பகல் 10-50)

திருமதி வி. ஜெயலட்சுமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் ' எக்ஸ்போர்ட் குவாலிட்டி ' என்று சொல்லக்கூடிய ரகங்களை
ஏற்றுமதி செய்வதாகச் சொன்னார்கள். நான் மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். இராஜபாளையம், சௌந்தர
பாண்டி கோவாப்பரேடிவ் சொசைட்டிகளில் முக்கியமாக எக்ஸ்போர்ட்
குவாலிட்டியாக, ' ஷர்டிங் கிளாத் ' என்ற வகையில் தயாரித்துக்கொண்டிருக்
கின்றார்கள். அந்தக் கோவாப்பரேடிவ் சொசைட்டிகளிலும் பல லட்சக்
கணக்கான பெறுமானமுள்ள துணி முடங்கிக் கிடப்பதாகச் சொல்கின்
றார்கள். அதற்காக அங்கிருந்து அரசுக்குத் தூதுக்குழு வந்ததாகவும்
கேள்விப்பட்டிருக்கிறேன். அதுவிஷயம் குறித்து மேற்கொண்டு அரசு ஏதாவது
செய்திருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, தேங்கிக்
கிடக்கின்ற துணியைக் கொள்முதல் செய்ய உத்தரவாகி கொள்முதல் செய்யப்
பட்டிருக்கின்றது.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் சொல்லும்போது தனியார் துணிகளை வரவேற்றிருப்ப
தாகச் சொல்லியிருக்கின்றார்கள். அந்தத் துணிகள் பெண்களைக் கவருகின்
றனவா அல்லது அதிகமாக ஆண்களைக் கவருகின்றனவா என்று கேட்டுக்
கொள்கிறேன். யாரை அதிகமாகக் கவருகின்றன ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, 60 லட்சம்
மீட்டர் துணி இந்த இரண்டு வகையிலே அளிக்கப்பட்டு, ஆண்கள் பெண்கள்
இருபாலரையும் அது கவர்ந்திருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்
கிறேன்.

திரு. ஆர். டி. சித்தாபதி : தலைவர் அவர்களே, கைத்தறித் துணி தேங்கிக்
கிடப்பதாக இங்கே கேள்விகள் கேட்கப்படுகின்றன. குறைந்தபட்சம் உறுப்
பினர்களாகிலும் கைத்தறி ஆடைகளை அணிவது என்ற முடிவைத் தெரி
விக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொள்ள முன்வர
வேண்டும். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவராக இருக்கின்ற

[1985 ஏப்ரல் 8

அண்ணன் திரு. சாதிக் பாட்சா அவர்கள்கூட டெர்ரி காட்டன் போடுகின்ற நிலை உருவாகியிருக்கிறது. அந்த நிலை மாற வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் கேள்வி எழுப்பு வது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கா அல்லது திரு. சாதிக் பாட்சா அவர் களுக்கா ?

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவர் அவர்களே, திரு. ஆர். டி. சீத்தாபதி அவர்கள் சில்க் சட்டை போடுவதை மாற்றி கைத்தறி ஆடை அணிய வேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அதைப்பற்றி விவாதம் வேண்டாம். அதை அனுமதிப்பதற்கில்லை. அத்துடன் விட்டுவிட வேண்டும். மேலும் இரண்டுபேரும் இப்படி பேசிக்கொண்டிருக்கின்றார்களே என்று வரும். உட் காருங்கள். பரவாயில்லை.

### கைத்தறித் துணிகள் ஏற்றுமதி.

* 5. வினா—**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதி லளிக்க வேண்டுகிறேன் :

(அ) வெளிநாடுகளுக்கு கைத்தறி ஆடைகள் ஏற்றுமதியைப் பெருக்க, குழு ஒன்று அமைத்திடும் செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** (அ) ஆம்.

(இ) அரசின் ஆய்வில் உள்ளது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, 5-வது கேள்விக்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கின்றார்கள்.

**திரு. ஆர். டி. சீத்தாபதி:** தலைவர் அவர்களே, நான் ஒரு கருத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நான் அணிந்திருப்பது சில்க் சட்டை யாக இருந்தாலும், அது கைத்தறியில் நெய்யப்பட்டது என்பதை நான் தங்கள் மூலம் அண்ணன் திரு. சாதிக் பாட்சா அவர்களுக்குத் தெரிவித்துக்கொள் கிறேன்.



1985 ஏப்ரல் 8]

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கைத்தறி ஆடைகளை ஏற்றுமதி செய்வதற்கு குழு ஒன்று அமைக்கப்பட்டிருப் பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். அந்தக் குழு எந்த அடிப்படையில் அமைக்கப்பட்டிருக்கிறது, குழு செய்யக்கூடிய அலுவல்கள் என்ன என்று அறிய விரும்புகிறேன். எந்தெந்த நாடுகளுக்கு அந்தக் கைத்தறித் துணிகள் அனுப்பப்படுகின்றன ? அதன் மூலமாக நமக்குக் கிடைக்கின்ற அந்நியச் செலாவணி என்ன என்பதைப்பற்றி அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, குழு நிய மிக்கப்படவில்லை. குழு ஒன்று நியமிக்கும் உத்தேசம் அரசின் ஆய்வில் இருக்கிறது என்றுதான் சொல்லியிருக்கின்றேன். மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் கைத்தறித் துணிகளை ஏற்றுமதி செய்வதற்கு தமிழ் நாட்டிலே இந்தத் துணியினுடைய தரத்தை ஆய்வு செய்வதற்கு விஞ் ஞான நிபுணர் குழு ஒன்று ஏற்படுத்தவேண்டும் என்று சொன்னார்கள். அந்த அடிப்படையிலேதான் இந்தக் குழு ஏற்படுத்தப்பட நம் அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், சுமார் 120 கோடி ரூபாய் பெறுமானமுள்ள துணி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய் யப்படுகிறது. கோஆப்டெக்ஸ் நிறுவனம் மூலமாக சுமார் ரூ. 1 கோடி மதிப் புள்ள துணி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, 5 வது கேள்விக்கு அமைச்சர் பதில் அளித்திருக்கின்றார். அது தொடர்கின்றது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர் திரு. ஆர். டி. சீத்தாபதி அவர்கள் இடையில் சற்று குழப்பிவிட்டார்கள்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, கைத்தறித் துணிகள் பல நாடுகளுக்கு அனுப்பப்பட்டதாகவும், அவைகளில் சில நாடுகள் அந்தக் கைத்தறித் துணிகளை ஏற்றுக்கொள்ள மறுத்திருப்பதாகவும் செய்தி வந்திருக் கின்றது. அப்படி மறுக்கப்படுவதற்குக் காரணம் நம் நாட்டிலிருந்து அனுப் பப்படுகின்ற துணி தரம் குறைந்து விட்டதும், வியாபார ரீதியிலே சிக்கல் இருப்பதும் என்று தெரிகிறது. அதைத் தவிர்க்க அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

[1985 ஏப்ரல் 8

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, அயல்நாடு களுக்கு ஏற்றுமதி செய்கின்றபோது, தனியார் துறையிலே அந்த வியாபாரிகள், வெளிநாட்டிற்கு அனுப்பும் துணிகளை சென்ன ரகத்தில் தயாரிக்காததாலும், அதிலே சாயம் கெட்டியாக இல்லாததாலும், அவர்கள் ஏற்கெனவே மறுத்து விட்டார்கள். அதற்காகத்தான் முதல்வரவர்கள் தமிழ் நாட்டிலிருந்து ஏற்று

(முற்பகல் 10-55)

மதி செய்யும்போது, தமிழ் நாட்டில் நிபுணர் குழு முதலிலே அதை சோதித்து, பின்னர் வெளி நாட்டுக்கு அனுப்ப வேண்டுமென்றும், அப்படிச் செய்தால் ஏற்றுமதி பெருகுமென்றும் சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசில் 'எக்ஸ் போர்ட் ப்ரமோஷன் கவுன்சில்' என்று ஒரு நிறுவனம் இருக்கிறது. 'ஹேண்ட்லூம்ஸ் ஹேண்டிகிராப்ட்ஸ் கார்ப்பரேஷன்' என்று ஒரு நிறுவனம் இருக்கிறது. 'ஆல் இந்தியா ஹேண்ட்லூம் ஹவுஸ்' என்று ஒரு நிறுவனம் இருக்கிறது. இந்த 3 நிறுவனங்களும் இந்தியாவிலிருந்து கைத்தறித் துணி களை ஏற்றுமதி செய்யும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கின்றன. அந்த 3 நிறுவனங்களும் தற்போது தனியார் துறையை ஊக்குவித்துக்கொண்டிருக் கின்றன. எனவே கைத்தறித் துறையில் நெய்த துணிகளை ஏற்றுமதி செய்து, கைத்தறித் துறையை ஊக்குவிக்க வேண்டுமென்று அந்த மூன்று நிறு வனங்களையும் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தலைவரவர்களே, கைத்தறித் துணிகள் ஏராளமாகத் தேக்கம் அடைந்திருப்பதால், நெசவாளர்கள் எல்லாம் வேலை யில்லாத் திண்டாட்டத்திற்கு ஆளாகி, ஆங்காங்கே போராட்டம் நடத்திக் கொண்டிருப்பது அரசின் கவனத்திற்கு வந்திருக்குமென்று கருதுகிறேன். அதற்காக சிறப்பு நடவடிக்கையாக அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். அரசு ஒரு குறிப்பிட்ட தொகையை மானியமாகத் தந்து, அதாவது கழிவு தந்து, கைத்தறித் துணிகளை விற்பனை செய்ய ஊக்குவிக்கிறது. அந்தக் கழிவுத் தொகையை இன்னும் அதிகமாகக் கொடுத்து, விற்பனையை ஊக்குவிக்குமா ?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்வதுபோல கைத்தறித் துணிகள், தற்போது அதிக மாகத் தேங்கிக் கிடக்கவில்லை. பல்வேறு இடங்களில், பல்வேறு மாநிலங் களில் 5 கோடி ரூபாய் அளவுக்குக் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. கடந்த வாரத்தில், இது குறித்து எந்த ஊரிலிருந்தும் புகார்களில்லை. அது பற்றி பிரச்சினையும் இல்லை.



1985 ஏப்ரல் 8]

**திரு. ஏ. ஜே. தாஸ்:** தலைவரவர்களே, கைத்தறித் துணி மீது போடும் முத்திரையை, பவர்லூம் மூலம் நெய்யும் துணிகள்மீது முத்திரையிட்டு அதிகாரிகள் கொடுப்பதால், கைத்தறித் துணியில் தேக்கம் ஏற்படுகிறது. அது பற்றி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ? தவிர இன்றைக்கு 30 சதவிகிதம் கழிவு என்று அறிவிக்கப்பட்டு, மக்கள் போய் வாங்கும்போது 20 சதவிகிதமே அளிக்கப்படுகிறது. இப்படிப்பட்ட கோளாறு இருப்பதால், துணி வாங்கு பவர்களுக்கு பாதிப்பு ஏற்படுகிறது. இது குறித்தும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, மத்திய அரசி லுள்ள டெக்ஸ்டைல் கமிட்டிதான் கைத்தறித் துணிகளை ஏற்றுமதி செய்யும் போது, இது கைத்தறியால் நெய்யப்பட்ட துணி, விசைத் தறியால் நெய்யப் பட்ட துணி என்று முத்திரையிடுகிறது. டெக்ஸ்டைல் கமிட்டி முத்திரை யிடும்போது, விசைத் தறியால் நெய்த துணிகளை கைத்தறியால் நெய்த துணி என்று ஏமாற்றும்போது, தகுந்த நடவடிக்கைகளை மத்திய அரசின் டெக்ஸ் டைல் கமிட்டி எடுக்க வேண்டும். மாநில அரசுக்கு எந்தவித உரிமையும் கொடுக்கவில்லை. 30 சதவிகிதம் என்று கோ-ஆப்டெக்ஸ் விழாவின் கடைசி 7 நாட்கள் கொடுக்கப்பட்டது. ஏற்கெனவே உள்ள 20 சதவிகிதத்தோடு, 30 சதவிகிதமும் சேர்த்து, 50 சதவிகிதம் துணி வாங்கியவர்களுக்குச் சலுகை அளிக்கப்பட்டு, துணிகள் விற்கப்பட்டிருக்கின்றன. அதனால் வரவேற்கத் தக்க அளவுக்கு வியாபாரம் நடந்திருக்கிறது. தமிழ் புத்தாண்டு தினத்தை ஒட்டி 15 நாட்கள் நடைபெற இருக்கும் கண்காட்சியில் 20 சதவிகிதம் கழிவு கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

**திருமதி வி. ஜெயலட்சுமி:** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பாராளுமன்றத்தில் இருந்துவிட்டுத்தான் சட்டமன்றத்திற்கு வந்திருக்கி றார்கள். அமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** உறுப்பினர் அவர்களும் அப்படித்தான் வந்திருக்கிறார்கள்.

**திருமதி வி. ஜெயலட்சுமி:** இதே பிரச்சினையை நான் பாராளுமன்றத்தில் கிளப்பினேன். அப்போது "சிவராமன் கமிட்டி நெசவாளர்களுடைய பிரச் சினையை ஆய்ந்து, கைத்தறி நெசவின் தரத்தைப் பரிசீலித்து, கொடுத்த ரிப் போர்ட்டின் அடிப்படையில் ஒருசில ரகங்கள் கைத்தறிக்கு ஒதுக்கப்பட்டிருக் கின்றன. அதை பலர் லூம்களிலும் உற்பத்தி செய்வதால்தான் இந்தச் சிக்கல்

வந்திருக்கிறது. முழுமையாக இதை 'இம்ப்ளிமென்ட்' செய்ய வேண்டுமென்றால், சம்பந்தப்பட்ட மாநிலங்கள்தான் முழுமையாகச் செய்ய முடியு"மென்று பதிலளித்தார்கள். ஆனால் இங்கே நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள், 'இல்லை, அதைச் செய்ய வேண்டியது மத்திய அரசுதான்' என்று சொல்லுகிறார்கள். கைத்தறி நெசவாளர்களுடைய பிரச்சினையை 'டில்லி டாலியிங்' செய்கிறார்கள். டெல்லியிலே கேட்டால் மாநில அரசுதான் பொறுப்பு என்று சொல்லுகிறார்கள். மாநில அரசைக் கேட்டால் மத்திய அரசு பொறுப்பு என்று சொல்லுகிறார்கள். இதிலே உண்மையாக யார்தான் பொறுப்பு ஏற்க முடியும் என்பதை எடுத்துச் சொல்லி, நல்லவிதமாக இதை 'இம்ப்ளிமெண்ட்' செய்ய முடியுமா என்று கேட்க விரும்புகிறேன்.

(முற்பகல் 11-00)

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற இரண்டும் தனித் தனியான பொருள்கள். டெக்ஸ்டைல் கமிட்டி மத்திய அரசைச் சார்ந்தது. கைத்தறித் துணிகளை ஏற்றுமதி செய்யும்போது, அது என்ன ரகம் என்று பரிசோதனை செய்கிற ஏகபோக உரிமை அவர்களுக்குத்தான் உண்டு. உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல், கைத்தறிக்கு என்று சில ரகங்களை ஒதுக்கி, அவற்றை விசைத் தறி ஆலைகள் உற்பத்தி செய்யக்கூடாது என்று ஒரு சட்டத்தை அண்மையில் பாராளுமன்றம் நிறைவேற்றியிருக்கிறது. அது குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்று என்றைக்கு வரும் என்று பார்த்துக்கொண்டிருக்கிறோம். அந்த நல்ல சட்டம் வந்த பிறகு, மாநில அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** வினாக்கள்— விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது. என்பதை குறிக்கும்.]



## 2. அரசின் தீர்மானங்கள்.

### (1) உரிமைக் குழுவிற்கு ஒன்பது உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** தலைவர் அவர்களே,

"'தமிழ்நாடு சட்டமன்ற மேலவை விதிகளைச் சேர்ந்த 156-வது விதியின்படி 1985-86 ஆம் நிதியாண்டிற்குரிய உரிமைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி ஒன்பது உறுப்பினர்களை மாண்புமிகு மேலவைத் தலைவர் நிச்சயிக்கக்கூடிய நாளன்று இந்த அவை தேர்ந்தெடுக்கும்"
என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அவைமுன் உள்ள பிரச்சினை—

"'தமிழ்நாடு சட்டமன்ற மேலவை விதிகளைச் சேர்ந்த 156-வது விதியின்படி 1985-86 ஆம் நிதியாண்டிற்குரிய உரிமைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி ஒன்பது உறுப்பினர்களை மாண்புமிகு மேலவைத் தலைவர் நிச்சயிக்கக்கூடிய நாளன்று இந்த அவை தேர்ந்தெடுக்கும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** ஒற்றை மாற்று வாக்குமூலம், விகிதாச்சார பிரதிநிதித்துவக் கொள்கைக்கிணங்க, தேர்தல்களை நடத்துவதற்காகச் செய்யப்பட்ட ஒழுங்குமுறை விதிகளின் 2 (1) ஒழுங்குமுறை விதிக்கிணங்க 1985-86 ஆம் நிதியாண்டிற்கான உரிமைக் குழுவிற்கு ஒன்பது உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலுக்கு, கீழ்க்காணும் நிகழ்ச்சி நிரலை வரையறுக்கிறேன் :

| | |
|---|---|
| வேட்பு மனுக்கள் வரப்பெறுவதற்கான நாளும் நேரமும். | 10—4—1985 நண்பகல் 12 மணி |
| வேட்பு மனுக்கள் சரிபார்ப்பதற்கான நாளும், நேரமும். | 10—4—1985 பிற்பகல் 1 மணி |
| வேட்பு மனுக்களைத் திரும்பப் பெறுவதற்கான நாளும், நேரமும். | 11—4—1985 நண்பகல் 12 மணி |

வேட்பு மனுக்களைச் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்கள் எண்ணிக்கை ஒன்பது பேருக்கு மேற்படின், தேர்தல் ஒன்று நடைபெறும். தேர்தல் ஏதுமிருப்பின், வாக்குப் பதிவு நடைபெறும் நாளும், நேரமும் பின்னர் அறிவிக்கப்படும்.

(2) அவைக் குழுவிற்கு ஆறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்ற மேலவை விதிகளைச் சேர்ந்த 173-வது விதியின்படி 1985-86 ஆம் நிதியாண்டிற்குரிய அவைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி ஆறு உறுப்பினர்களை மாண்புமிகு மேலவைத் தலைவர் நிச்சயிக்கும் நாளன்று இந்த அவை தேர்ந்தெடுக்கும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை—

"தமிழ்நாடு சட்டமன்ற மேலவை விதிகளைச் சேர்ந்த 173-வது விதியின்படி 1985-86 ஆம் நிதியாண்டிற்குரிய அவைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி ஆறு உறுப்பினர்களை மாண்புமிகு மேலவைத் தலைவர் நிச்சயிக்கும் நாளன்று இந்த அவை தேர்ந்தெடுக்கும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** ஒற்றை மாற்று வாக்கு மூலம், விகிதாச்சார பிரதிநிதித்துவக் கொள்கைக்கிணங்க, தேர்தல்களை நடத்துவதற்காகச் செய்யப்பட்ட ஒழுங்குமுறை விதிகளின் 2 (1) ஒழுங்குமுறை விதிக்கிணங்க, 1985-86 ஆம் நிதியாண்டிற்கான அவைக் குழுவிற்கு ஆறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலுக்கு, கீழ்க்காணும் நிகழ்ச்சிநிரலை வரையறுக்கிறேன்:

| | |
|---|---|
| வேட்பு மனுக்கள் வரப்பெறுவதற்கான நாளும், நேரமும். | 10—4—1985<br>நண்பகல் 12 மணி |
| வேட்பு மனுக்களை சரிபார்ப்பதற்கான நாளும், நேரமும். | 10—4—1985<br>பிற்பகல் 1 மணி |
| வேட்பு மனுக்களைத் திரும்பப் பெறுவதற்கான நாளும், நேரமும். | 11—4—1985<br>நண்பகல் 12 மணி |

வேட்பு மனுக்களைச் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்கள் எண்ணிக்கை ஆறு பேருக்கு மேற்படின், தேர்தல் ஒன்று நடைபெறும். தேர்தல் எதுபிருப்பின், வாக்குப்பதிவு நடைபெறும் நாளும், நேரமும் பின்னர் அறிவிக்கப்படும்.



3. 1985-86 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையின் மீது பொது விவாதம்.

(முற்பகல் 11-05)

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையின் மீது சில கருத்துக்களைச் சொல்ல விழைகின்றேன். இந்த நிதிநிலை அறிக்கையானது இந்த அரசினுடைய உள்ளக் கிடக்கையைத் தெளிவாகக் காட்டும் வகையில் அமைந்திருக்கிறது. தமிழ் மக்களுக்கு உழைக்க வேண்டும், தமிழ் சமுதாயத்திற்காக நல்ல பணிகளை ஆற்ற வேண்டுமென்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில் இந்த அறிக்கை அமைந்திருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உடல் நலம் குறித்து டாக்டர் பிரெட்மேன் ஒன்றைச் சொன்னார்கள்.

"…. his will to live which saw him through the most successful return of health I have ever seen"

என்று சொன்னதைப்போல, மாண்புமிகு முதல்வர் அவர்களின் மனநிலையைப் போல, அவர் தலைமையில் அமைந்திருக்கிற இந்த அரசு, மக்களுடைய நல்வாழ்வின் அடிப்படையில் தயாரித்திருக்கிற இந்த நிதிநிலை அறிக்கையை நான் வரவேற்கின்ற இந்த நேரத்தில், முதலில் 'பொருளில்லார்க்கு இந்த உலகம் இல்லை' என்பதை வள்ளுவரின் துணைகொண்டு, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்த அரசு பொருளைத் தேடிக்கொண்டிருக்கிறது என்பதையும், பொருளுக்கு இருக்கிற நிறைய பொருள் தேவைப்படுகிறது என்பதையும் அவர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியுடன் அவர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே தங்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

பொருள் ஈட்டுகிற முயற்சியில் இந்த அரசு ஈடுபட்டிருக்கிறது என்பதால், "செய்க பொருளை" என்று வேண்டுகோளையும் இந்தக் குறள் கொடுத்துச் செயல்படுத்திக் கொள்ளுங்கள் என்று காட்டுகிறது என்றும் நான் கருதுகிறேன்.

அடுத்து, மிகக் குறிப்பாகச் சொல்லப்படுகிற ஒரு பொருள், மத்திய அரசின் நடவடிக்கைகளும், மத்திய அரசால் ஏற்படுகிற விளைவுகளும் மாநில அரசை எந்த அளவுக்கு பாதிக்கின்றன என்பதையும், அதைப் பொறுத்துத்தான் மாநில அரசின் நிதி ஆதாரங்கள், மாநிலத்துடைய நடைமுறைகள் இருக்கும் என்பதையும் இந்த நிதிநிலை அறிக்கையில் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அந்த முறையில், மத்திய அரசுடைய நிதிநிலை அறிக்கையும், மாநில அரசின் நிதிநிலை அறிக்கையும் ஒன்றுக்கொன்று தொடர்பு கொண்டதாக இருக்க வேண்டுமென்றும் நாம் எண்ணிப் பார்க்கலாம்.

[டாக்டர் இரா. சனார்த்தனம்] [1985 ஏப்ரல் 8

மத்திய அரசின் நிதிநிலை அறிக்கை பெரிய தொழிற்சாலைகளுக்கு, பெருந் தொழில்களுக்குப் பாதுகாப்பு தருகிற முயற்சிகளையும், இதுவரை அவர்கள் காட்டிவந்த நெறிமுறைகளுக்கு சற்று மாறானதாக இருப்பதையும் காட்டுகிறது. மாநில அரசின் அறிக்கை, குறிப்பாக பின்தங்கிய, ஏழை எளிய மக்களுக்கு பொதுவாக வாய்ப்பற்றோர் நலம் பெறவேண்டுமென்ற நோக்குத் தொடர்புக்கு ஏழை மக்கள் நிரந்தரமான நல்வாழ்வு பெறவேண்டுமென்ற கருத்துக்கள் பலவற்றையும் காட்டுகிற ஒன்றாக அமைந்திருக்கிறது.

அப்படிப் பார்க்கிறபோது, துன்பப்படுவோர்க்கு நேரடியாக நாம் என்னென்ன செய்ய வேண்டுமென்ற அணுகுமுறையை நாம் கணக்கிட்டுப் பார்த்தால், ஸ்ரீலங்காவில் சிரிமாவோ பண்டாரநாயகாவின் அரசு மாறி, ஜெயவர்தன அரசு பொறுப்பேற்றபோது, சில வரி முறைகளைக் கையாண்டார்கள். உலக நோக்கர்கள் இப்போது இந்தியாவின் நிதிநிலை அறிக்கையையும் அத்துடன் இணைத்துப் பார்க்கிறபோது, ஜெயவர்த்தனவுடைய அரசின் போக்கில் இப்போது விளைந்திருக்கிற பொருளாதார நிலையை எண்ணி, ஒருவேளை சிந்தித்தால் வரி முறையில் மாற்றம் இருக்கலாம் என்று நான் எண்ணுகிறேன்.

அந்த வகையில், தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கையின் அடிப்படை நோக்கம் ஏழைகளுக்கு, துன்பப்படுபவர்களுக்கு, வாழ்வில் பின்தங்கியவர்களுக்கு, நேரடியாக உதவி புரிகிற பணப்போக்குக்கு இந்தியாவுடைய கொள்கைகளும் உடன் வரவேண்டும். அப்படி இல்லாவிட்டால், மாநில அரசினுடைய பல முயற்சிகள் தகர்க்கப்பட்டு விடும் என்று சொல்ல விரும்புகிறேன்.

அதே நேரத்தில், மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டுமென்பது நாம் வழக்கமாக விடுகிற முழக்கம். ஒவ்வொரு முறையும் கேட்கிற கேள்வியாகவும், நமது ஆவலாகவும் அது இருக்கிறது. இன்று அகில இந்திய அளவில் மாநிலத் தலைவர்கள் மக்கள் தலைவர்களாக விளங்கிக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக ஆளுங்கட்சியாகட்டும், ஆளுங்கட்சியுடன் துணையிருப்பவர்களாகட்டும், பல மாநிலங்களில் வலிமையான தலைவர்களாக இன்றையதினம் இந்தியாவில் உருவாகியிருக்கிற இந்த நேரத்தில், மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் தரவேண்டுமென்ற குரலை வலிமையாக ஒலிக்க வேண்டுமென்ற எண்ணம் அனைத்துக் கட்சிகளுக்கும் கொள்கையாக இருக்கிற காரணத்தால், இந்த நேரத்தில் மத்திய அரசை நாம் அணுகி மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்களைக் கேட்க வேண்டும். அதன் மூலமாக மாநிலங்கள் தங்களுக்கென்று நிதியாதாரங்களைத் தேடிக்கொள்வதற்கான வழிவகைகளைக் காண வேண்டுமென்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.



1985 ஏப்ரல் 8] [டாக்டர் இரா. சனார்த்தனம்]

அடுத்ததாக, பொதுப் பொறுப்பு என்று பார்க்கிறபோது, தமிழகத்திற்கும், அனைத்து இந்தியாவுக்கும் பொதுப் பொறுப்புகள் தேடித் தேடி வந்து கொண்டே தான் இருக்கின்றன. குறிப்பாக ஸ்ரீலங்கா தமிழர்கள் அகதிப் பிரச்சினையை எடுத்துக் கொண்டால், சிரிமாவோ—சாஸ்திரி ஒப்பந்தப்படி, நாம் ஏற்கெனவே ஏற்றுக்கொண்ட அகதிகள், பர்மாவிலிருந்து வந்தவர்கள் என்று இவர்களுடைய நிலைமையை நாம் எண்ணிப் பார்த்தால், உள்ளபடியே இந்திய அரசு அல்லது அனைத்து மாநிலங்களையும் சேர்ந்த அரசுகளைப் பற்றி நாம் புரிந்துகொள்ள முடியும். பாகிஸ்தானிலிருந்து அந்தக் காலத்தில் வந்த அகதிகளிடம் காட்டிய அக்கறையை ஸ்ரீலங்கா தமிழ் அகதிகளிடம் இந்த அரசுகள் காட்டியிருப்பார்களேயானால், நிச்சயம் இந்தப் பளுவை இப் போது தமிழ்நாடு சுமக்கிற நிலைமை உருவாகியிருக்காது என்று நான் கருது கிறேன்.

குறிப்பாக கணக்கிட்டுப் பார்த்தால், அந்த நேரத்தில் வந்த அகதிகள், சென்னை போன்ற இடங்களில் காசிச் செட்டித் தெருவிலும் மற்ற இடங்களி லும், தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும், தமிழ்நாட்டின் மொத்த வியாபாரக் தையே வைத்திருக்கிற நிலைமையில் அவர்களைக் காண முடியும். அப்போது வந்த அகதிகள் வாழ்வு பெறுகிற நிலையும், இப்போது வந்திருக்கிற பர்மா அகதிகள், பர்மா பஜாரிலே எந்த நேரத்தில் சுங்க அதிகாரி வருவான், கதவைச் சாத்தலாம் என்ற கஷ்டத்திலும் இருக்கிற நிலையையும், மாற்று வாழ்வு இல்லாத மனிதர்களாக நடைப்பிணங்களாக இருக்கிற நிலையையும் பார்க்கலாம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

(முற்பகல் 11-10)

ஆகவே அங்கேயிருந்து அகதிகள் வந்துகொண்டே இருக்கிறார்கள். அது மட்டுமல்ல, 90,000 அகதிகளை இதோ அனுப்பப் போகிறேன் என்று அங்கேயிருந்து சொல்லப்படும். ஏற்கெனவே சுமார் 2 லட்சம் பேர்கள் இலங்கை கலவரத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறவர்கள், இங்கே வந்திருக்கி றார்கள். இந்நிலையில் மேலும் 90,000 பேரை நாம் ஏற்றுக் கொள்ளப் போகிறோமா, அல்லது அந்த ஒப்பந்தம் காலாவதியாகிவிட்டதா, அல்லது வந்திருக்கிற 2 லட்சம் பேர்களைத் திருப்பி அனுப்புகிறவரை அந்த ஒப்பந் தத்தை நிறுத்தி வைக்கப்போகிறோமா என்பதையெல்லாம் இந்திய அரசு சிந்திக்க வேண்டும். காரணம் ஒட்டுமொத்தமாக, இந்தியா சுமக்க வேண்டிய சுமையை தமிழகம் மட்டும் தாங்கிக் கொண்டிருக்கிறது. அந்தச் சுமையைப்

பகிர்ந்துகொள்ள வேண்டுமென்று கேட்கிறோம். பகிர்ந்துகொள்ள வேண்டும் என்று கேட்கிறபோது, ஆட்களை பகிர்ந்துகொள்வதல்ல. பகிர்ந்து கொள்வது என்பது மனப்பூர்வமான உணர்விலே இருக்கிறது. குறிப்பாகச் சொல்வதானால் 90,000 அகதிகள் அங்கே இருக்கிறார்கள். அவர்களை நாம் ஏற்றுக்கொள்ளப் போவதாக வைத்துக்கொள்ளுவோம். அவர்களில் 10,000 பேரை அந்தமானில் குடியேற்றி, அவர்கள் புலங்களில் தோட்டத் தொழிலாளர் ஏற்றுக்கொண்ட அதே வாழ்வை பெற முடியும் என்ற நிலை இருக்கிறது. இருப்பினும் அந்தமான் நிர்வாகம் "அங்கே வங்காளிகள் அதிகமாக இருக்கிறார்கள், எனவே இவர்களை ஏற்றுக்கொள்ள முடியாது" என்று சொல்லி அகில இந்திய அடிப்படையிலே தமிழகமே அவர்களை முழுமையாக ஏற்றுக் கொள்ளுமானால், எவ்வளவு பெரிய பொருளாதார பாதிப்பை, எவ்வளவு பெரிய சுமையை ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இந்தச் சுமையையும் நாம் முழுமையாக ஏற்றுக்கொண்டால், பின் என்ன நிதிநிலை அறிக்கை தந்தாலும், மக்களுக்கு மனநிறைவைத் தரமாட்டோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மின் உற்பத்தியைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். தமிழகத்தில் தொழில்கள் பெருக வேண்டுமானால், மின்சார உற்பத்தி பெருக வேண்டும். மின்சார உற்பத்தியைப் பொறுத்தவரையில், நாம் ஒரு தொலைநோக்குக் கண்ணோட்டத்தோடு நோக்காத காரணத்தினாலேதான், மிகவும் பாதிக்கப் பட்டிருக்கிறோம். பைக்காரா மின் திட்டத்தைக் கொண்டுவந்த நேரத்தில் சர் சி. பி. போன்றவர்கள் நினைத்தார்கள். பைக்காரா மின் நிலையத்தில் தயாரிப்பு அதிகமாக இருக்குமே, அதைத் தமிழகத்தில் முழுமையாகப் பயன் படுத்த முடியுமா என்று நினைத்தார்கள். எனவே அந்த நாளில் கோவை யிலிருந்த தொழில் அதிபர்களை எல்லாம் அழைத்து, "நீங்கள் ஜெனரேட்டர் களை விட்டுவிட்டு, மின்சாரத்தைப் பயன்படுத்துங்கள்" என்று சொல்கின்ற அளவுக்கு நிலைமை இருந்தது. இவ்வாறு அன்று பைக்காராவிலே உற்பத்தி யாகும் மின்சாரம் அதிகமாக இருக்கும் என்று அச்சப்பட்ட நிலை இருந்தது. ஆனால் இன்றைய நிலை என்ன? பக்கத்து மாநிலங்களிலிருந்து மின்சாரத்தை வாங்கவேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம். நம்முடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலையில் இருக்கிறோம்.

எண்ணூர் மின்நிலையத்தில் முழு உற்பத்தி இருக்குமானால், ஓரளவுக்கு நம் தேவையைச் சரிக்கட்டலாம் என்றாலும், அங்கே இயந்திரக் கோளாறும், வேறு கோளாறுகளும் இருக்கிற காரணத்தால், அந்த நிலையம் முழு உற்பத்தியில் ஈடுபட முடியவில்லை.



இந்தச் சமயத்தில் நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். மின் உற்பத்திக்காக நாம் ஜப்பான் நாட்டு இயந்திரங்களை வாங்குகிறபோது, நம் பொறியாளர்களை ஜப்பான் நாட்டுக்கு அனுப்பி, அந்த இயந்திரங்களை இயக்குவதற்குப் பயிற்சி பெறவைத்து, அவர்கள் திரும்பிவந்து, அந்த இயந்திரங்களை இயக்குகிறார்கள். ஆனால், பி.எச்.ஈ.இல்.-லிருந்து இயந்திரங்களை வாங்குகிறபோது என்ன செய்யப்படுகிறது தெரியுமா? உள்ளூர் இயந்திரங்கள்தானே, இங்கே இருப்பவர்கள் பார்த்துக் கொள்வார்கள் என்று யாரையும் பயிற்சி பெற அனுப்புவதில்லை. இவ்வாறு சரியான பயிற்சி பெறாத பொறியாளர்கள் மேற்படி இயந்திரங்களைப் பயன்படுத்தும் காரணத்தால், அவை சரியான இயந்திரங்களாக இருந்தாலும், விரைவில் பழுது ஏற்படக் காரணமாகி விடுகின்றன. எண்ணூர் மின் நிலையத்திலே நாம் முழு உற்பத்தித் திறனையும் பயன்படுத்தி மின்உற்பத்தியில் ஈடுபட்டால், ஓரளவுக்கு மின்சாரத் துறையிலே இருக்கக்கூடிய இடையூறுகளைப் போக்க முடியும் என்று நான் நம்புகிறேன்.

மின்சாரத்தைப் பெருக்குவதுபற்றி ஒரு பக்கம் நாம் சிந்தித்தாலும், மின்சாரத்தை குறைந்த அளவிலே எப்படிப் பயன்படுத்துவது என்று மக்களுக்குப் பயிற்சி தருவது பற்றியும் நாம் சிந்திக்க வேண்டும். இதிலே மேலை நாடுகள் வெற்றி அடைந்திருக்கின்றன. மின்சாரத்தை எப்படி சேமிப்பது என்பதை சாதாரண மக்களும் புரிந்துகொள்கிற முறைகளை, வழி வகைகளை நாம் கண்டாக வேண்டும். உதாரணத்திற்குச் சொல்கிறேன், கிராமப்புறப் பகுதிகளில் மின் விளக்குகள் எரிந்துகொண்டிருக்கும். ஆனால் ஒரு மணி நேரத்திற்கொருமுறையோ அல்லது இரண்டு மணி நேரத்திற்கு ஒருமுறையோதான் யாராவது ஒருவர் அப்பக்கம் நடந்துபோவார். கிராமத்திற்கு மின் விளக்கு கொடுத்து விட்டோம் என்ற மகிழ்ச்சி நமக்கு இருந்தாலும், அப்பகுதிகளில் இரண்டு மணி நேரத்திற்கு ஒருவர்தான் நடந்து போவார். ஆனால் இரவு முழுவதும் அந்த மின் விளக்கு எரிந்துகொண்டிருக்கும். வெளிநாடுகளில் இம்மாதிரி பகுதிகளில் என்ன செய்கிறார்கள் என்றால், இப்பகுதிகளில் இரவு முழுவதும் விளக்கு எரியத் தேவையில்லை என்று கருதி, அப்பக்கம் செல்கிறவர் ஒரு பொத்தானை அழுத்தினால் விளக்கு எரியும்படியும், அவர் அடுத்த விளக்கு எரியும் இடத்திற்குப் போகிறவரை எரியும்படியும், அடுத்த விளக்கிற்குச் சென்றவுடன் இந்த விளக்கு அணைந்து விடும்படியும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அப்படி ஒரு முறையை அங்கே வைத்திருக்கிறார்கள். அதேபோல் இங்கேயும் செய்ய வேண்டும் என்று நான் சொன்னால், உடனே அதிகாரிகள் சொல்வார்கள். "அதுபோல் இங்கேயும்

[டாக்டர் இரா. சனார்த்தனம்] [1985 ஏப்ரல் 8

(முற்பகல் 11-15)

வைக்கலாம். ஆனால் அந்தப் பொத்தானையே எடுத்துக்கொண்டு போய் விடுவார்கள்" என்று சொல்வார்கள். எனவே இந்த யோசனை தேவை இல்லை என்று சொல்லி விடுவார்கள். ஆனால் நம் இரயில்வேயில் நம் மக்களுக்குத் தகுந்தபாதிரி செய்து வைத்திருக்கிறார்கள். அதனாலே மக்களுக்குத் தகுந்தபடியும் செய்ய வேண்டும். நம்முடைய தேவைகளையும், அளவையும் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமென்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

7-வது திட்டத்தைப் பொறுத்தமட்டில், குறிப்பாக தமிழ் நாட்டிலே தொழிற்சாலைகளிலே மத்திய அரசினுடைய மூலதனம் குறைவு என்றும், ஒவ்வொரு ஆண்டும் புதிய திட்டங்களுக்காக மேலும் மூலதனம் போடுவதிலே மத்திய அரசு அக்கறை காட்டவில்லை என்றும் கூறிவந்தோம். குறிப்பாக இந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலையினுடைய கலர் பிலிம் தொழிற்சாலைக்காக பல காலம் நாம் குரல் கொடுத்தோம். அது நயினிடாலுக்கு நகர்ந்து போனது. ஆனால் வெளிநாட்டு அறிஞர்கள் "நயினிடாலை ஏற்பதில்லை, மீண்டும் ஊட்டியையே தேர்ந்தெடுங்கள்" என்று சொல்லியிருக்கிறார்கள். கலர் பிலிம் தொழிற்சாலை வருகிறதோ, இல்லையோ, எச்.பி.எஃப் தொழிற்சாலை விஸ்தரிப்புத் திட்டத்தை தந்திருக்கிறது. அதில் 7-வது திட்டத்திலே சேர்த்திருக்கிறார்கள். இந்த முன்னேற்றமான தயாரிப்புக்கு அனுமதி அளிக்கவில்லை என்றால், நீலகிரியிலே அந்தத் தொழிற்சாலையிலே பணியாற்றுகின்ற மூவாயிரம் பேர்கள் வேலையிழப்பார்கள். தயாரிக்கிற பொருட்கள், புதிய, நவீன முறையிலே தயாரிக்கின்ற பொருட்களுடன் போட்டியிடாமல், பழைய தயாரிப்புகள் பரிதவிக்கும் என்ற காரணத்தைச் சொல்கிற நேரத்தில், தயவுசெய்து 7-வது திட்டத்திலே எச்.பி.எஃப். தொழிற்சாலையினுடைய அபிவிருத்தித் திட்டத்திற்கு அனுமதி வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதனை மத்திய அரசு பரிவோடு கவனிக்குமென்று நான் கருதுகிறேன்.

வேளாண்மையைப் பொறுத்தவரையில், நம் இந்திய நாட்டினுடைய பொருளாதார நிபுணர்கள் கூறுகிற கருத்து இதுதான். அதனுள் நீண்ட ஆராய்ச்சிக்கு நான் போக விரும்பவில்லை. இந்திய விடுதலைக்குப் பிறகு கனரகத் தொழிலிலே காட்டிய அக்கறையை, விவசாயத் துறையிலே காட்டியிருப்பார்களானால், இந்த நாடு உயர்ந்திருக்கும், வளர்ந்திருக்கும். அந்த ஆராய்ச்சி ஒருபுறம் இருக்கட்டும், இப்போது விவசாயத் துறையிலே நாம்.



1985 ஏப்ரல் 8] [டாக்டர் இரா. சனார்த்தனம்]

பல முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம். வெளிநாட்டினுடைய விஞ்ஞான அணுகுமுறையில் நாம் 10 ஆண்டுகள் பின்தங்கி இருக்கிறோம். இங்கே பயிர்களுக்கான நோய்களை நீக்குவதற்கான மருந்துகள் என்ற ஒரு வெளிநாட்டினுடைய கண்டுபிடிப்பை, இந்தியாவிலே இருக்கிற ஒரு பெரிய தொழிற்சாலை வாங்கிக்கொண்டு அதை வழங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால் இந்த அறிவுகள் ஒரு நாட்டிலே மட்டுமல்ல, ஜப்பான் நாட்டிலே இருக்கிறது. அப்படி வேறு வேறு மருந்துப் பொருட்களினுடைய உரிமையை, ஆராய்ச்சித் திறனை இங்கே தமிழக அரசு பெற்று பல சிறு தொழில் நிறுவனங்கள் மூலமாக வழங்கக் கூடிய வாய்ப்பை உருவாக்க முடியுமா என்பதை எண்ணிப்பார்க்கக் கேட்டுக் கொள்கிறேன். அப்படிப் பார்க்கிறபோது, போபாலிலே நடந்த விஷவாயு தொடர்பாக அங்கே தயாரிக்கின்ற இரசாயனம் கிடைக்காமல் போகுமானால் நீலகிரியிலே இனி உருளைக் கிழங்கு பயிரிட முடியாது என்ற ஒரு நிலை உருவாகும். நீலகிரியிலே உருளைக்கிழங்குதான் பயிரிட வேண்டுமென்று நான் சொல்ல மாட்டேன். அதற்கு மாற்றுப் பயிராக தேயிலை வருவதன் மூலம் அங்கு நிலச் சரிவைத் தடுக்கலாம் என்றால், அதற்கு அரசு அதிக ஊக்கம் தர வேண்டும். அதேநேரத்திலே மற்ற மருந்துகளுக்கும் வழிவகை காண வேண்டும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மேலவைக் கூட்டத் தொடர் இம்மாதம் 12 ஆம் தேதிவரை நடப்பதாக இருந்தது. தற்போது 11 ஆம் தேதியோடு முடிக்கலாம் என்ற எண்ணம் இருக்கிறது. இதுபற்றி நாளைய தினம் அலுவல் ஆய்வுக் குழு கூடி முடிவு செய்ய இருக்கிறது. எனவே ஒவ்வொரு உறுப்பினரும் 15 நிமிடங்களுக்குள்ளாக பேச்சை முடித்துக்கொண்டால், எல்லா உறுப்பினர்களும் பங்கு கொள்வதற்கு வாய்ப்பாக இருக்கும்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** தாங்கள் தெரிவித்தபடி இன்னும் 15 மணித்துளிகளில் முடித்துவிடுகிறேன். (மணி அடிக்கப்பட்டது). இந்த அறிவிப்பு தற்போது வந்தது. ஏற்கெனவே சொல்லியிருந்தால் எனது உரையைச் சுருக்கியிருப்பேன்.

அடுத்து, கல்வியைப் பொறுத்தமட்டில், தமிழக அரசு சிறந்த முயற்சி எடுத்து பல தொழிற் கல்லூரிகளை உருவாக்கியிருக்கிறது. அந்தத் தொழிற் கல்லூரிகளிலே எலக்ட்ரானிக் படிப்பை கட்டாயமாக்குவதன் மூலம் மதிப்பிற்குரிய புதிய பிரதமர் திரு. இராஜீவ் காந்தி அவர்கள் ஆயிரம் கோடி ரூபாயில் எலக்ட்ரானிக் திட்டங்களுக்காக வழி வகுக்கின்ற நேரத்திலே, தமிழ் நாட்டினுடைய பொறியாளர்கள் பயன்படுத்துவதற்கு அது வசதியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

ஆண்டாண்டுக் காலமாக இருந்துவந்த கப்பல் போக்குவரத்து தொடர்ந்து நடைபெற வேண்டும். அதை வற்புறுத்திப் பெற வேண்டும் என்று இந்திய அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதே போலவேதான் விமானப் போக்குவரத்தும். ஒரு நாட்டுக்கும் இன்னொரு நாட்டுக்கும் இடையே விமானப் போக்குவரத்து இருக்கும்போது, ஒரு நாட்டின் விமானம் எத்தனை இடங்களை மற்றொரு நாட்டில் தொடுகிறதோ அதே எண்ணிக்கையுள்ள இடங்களைத் தொட மற்றொரு நாட்டிற்கு உரிமையுண்டு. ஸ்ரீலங்காவிலிருந்து வரும் விமானங்கள் இந்தியாவில் நான்கு இடங்களில் தொடுகின்றன. ஆனால் நம்முடைய விமானம் கொழும்புவில் மட்டும் தொடுகிறது. ஆகவே முன்பிருந்த விமான சர்விசை மீண்டும் ஏன் துவக்கக்கூடாது என்று கேட்கிறேன்.

உள்ளபடியே திரு. பண்டாரி அவர்களும், திரு. சத்வால் அவர்களும், ஐந்தாயிரம் தமிழர்கள் இறந்த நிலையிலும், ஸ்ரீலங்கா நாட்டைப்பற்றி அன்புணர்வோடு சொல்லுகிறார்கள். 'இருநூறு ஆண்டுகள் நட்பு' என்று சொல்லுகிறார்கள். முதலிலே இதை நிறைவேற்றினால்தான் அடிப்படை இருக்கும் என்று கருதுகிறேன். ஸ்ரீலங்கா தமிழர்கள் பிரச்சினையைப் பொறுத்த வரையில், இந்த நிதிநிலை அறிக்கையில் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசிடம் வற்புறுத்தி அங்கே ஒரு நல்ல நிலையை உருவாக்க முயற்சிப்போம் என்று தெரிவித்திருக்கிறார்கள். அங்கே 1983 ஜூலை மாதம் கலவரம் நடந்தது. இரண்டாயிரம் பேர் இறந்தார்கள். திரு. நரசிம்மராவ் அவர்கள் ஜூலை 28 ஆம் தேதி அங்கே போனார்கள். அந்த நாட்டு ஜனாதிபதி தன்னுடைய தம்பி திரு. எச். டபிள்யூ. ஜெயவர்த்தனேயை இங்கே அனுப்பி வைத்தார்கள். "ஸ்ரீலங்காவிலே தமிழர்கள் பிரிவினையைத் தவிர வேறு எதைக் கேட்டாலும் தருகிறோம்" என்று அன்று திருமதி இந்திரா அம்மையார் அவர்களிடம் பேசினார் அவர். ஸ்ரீலங்கா தமிழர் பிரச்சினையைப் பொறுத்த வரையில், நமக்கு இந்தியத் தலைவர்கள் தந்த வாக்குறுதியைப் போலவே பண்டித நேரு அவர்களும் வாக்குறுதி தந்திருக்கிறார்கள். திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களும் வாக்குறுதி வழங்கியிருக்கிறார்கள். தேர்தல் நேரத்தில் திரு. இராஜீவ் காந்தி அவர்களும் கூறி வந்திருக்கிறார்கள். பண்டித நேரு அவர்கள் 1938 ஆம் ஆண்டு இந்திய காங்கிரசை தொண்டைமான் அவர்கள் துவக்கிய நேரத்தில் தன்னுடைய வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டதாவது :





(முற்பகல் 11-25)

"A day will come. We will help our brethren abroad, whatever the consequences".

இப்போது இந்த ஆபத்து வரும், அந்த ஆபத்து வரும் என்று சொல்லுகிறார்களே அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். 1938-ல் எந்த ஆபத்து வந்தாலும் அவர்களைக் காப்போம் என்று பண்டித நேரு அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

அதற்குப் பிறகு திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் நாடாளுமன்றத்தில்

"I personally, my Government and my Party are just as deeply distressed as any who have spoken here. We have condemned and we do condemn the genocide and the harassment and all injustices to the Tamils of Sri Lanka".

'இனப் படுகொலை' என்ற வார்த்தையை பிரதமர் அவர்கள் பயன்படுத்தினார்கள். நம்முடைய மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய பாரதப் பிரதமர் அவர்கள்கூட வலிமையாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

"We have to see that the atrocities which are being committed by the security forces in Sri Lanka, not totally under Government control must stop".

ஸ்ரீலங்கா இராணுவத்தினுடைய அட்டூழியம் தகுத்து நிறுத்தப்பட வேண்டுமென்று அவரே தெரிவித்திருக்கிறார்.

இப்படி நினைத்துப் பார்க்கிறபோது, பல நாடுகள் நமக்கு உதாரணமாக இருக்கின்றன. சைப்ரஸ் நாட்டில் துருக்கியர்கள் கிரேக்கர்களுக்குச் செய்த கொடுமைக்காக நீண்ட தூரம் பயணம் செய்து இருபது சதவீத மக்களுக்காக அந்த நாட்டிலே நாற்பது சதவீதம் இடங்களைத் தேடிப் பிடித்தது நியாயம் என்றால், 500 அமெரிக்க மாணவர்களுக்கு ஆபத்து வரும் என்று எண்ணிய காரணத்தால் அமெரிக்கா அங்கே நுழைவது நியாயம் என்றால்—தமிழர்களைக் காப்பாற்ற வேண்டும் என்பதைக் கூட விட்டுவிடுங்கள்—திரு. பண்டாரி அவர்கள் சொல்லுவதைப்போல் ஸ்ரீலங்காவோடு நமக்குள்ள 200 ஆண்டுகள் பாசம், நேசம் ஆகியவற்றை அடிப்படையாக வைத்து எண்ணிப்பார்க்கிற போது, ஸ்ரீலங்கா இராணுவத்தை தன்னாலும் கட்டுப்படுத்த முடியவில்லை என்று ஜே. ஆர். ஜெயவர்த்தனே

[டாக்டர் இரா. சனார்த்தனம்] [1985 ஏப்ரல் 8

சுற்றுலாவைப் பொறுத்தவரையில் தமிழக அரசு அரிய பணியை ஆற்றிக் கொண்டிருக்கிற நிலையில், நீலகிரி மாவட்டத்தில் இது குறித்து மேலும் கண்ணும் கருத்தும் செலுத்த வேண்டும். அங்கே சுற்றுலாத் துறையின் வளர்ச்சிக்கு மேலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விற்பனை வரியைபற்றிச் சொல்ல வேண்டும். இப்போது 'சேல்ஸ் டாக்ஸ் ஆன் வொர்க்ஸ் கான்ட்ராக்ட்' என்ற ஒன்றைப் புகுத்தியிருக்கிறார்கள். இது எங்கே போய் முடியுமென்றால், ஒரு துணியை தையற்காரனிடம் கொடுத்தால், அதிலே அவன் நூலையும், பொத்தானையும் பயன்படுத்துகிறான் என்ற காரணத்தினாலே அவனும் வரி செலுத்தவேண்டி வருகிறது. காகிதத்தை யாரிடமாவது கொடுத்து அதை பைண்டு செய்ய வேண்டுமென்றால், அவன் பசை செய்கிறான், அட்டை வைத்துத் தைக்கிறான், அதனாலே அவனும் வரி கட்ட வேண்டுமென்ற அளவுக்குப் போய்விடும். உள்ளபடியே ஏர் கண்டிஷன், ஜெனரேட்டர் போன்றவைகளைத் தயாரிப்பவர்கள் அதிலே தவறு செய்கிறார்கள், ஏமாற்றுகிறார்கள் என்பதற்காக எல்லோருக்கும் பாதிப்பைத் தந்து விடக்கூடாது என்பதைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-20)

வெளியே வேறு, உற்பத்தித் துறை வேறு. ஆகவே பெரிய கம்பெனிகளிலிருந்து மூலப்பொருள்களைப் பெற்று சிறிய பாகங்களை அவர்கள் தயாரித்துக் கொடுக்கிறபோது, அதிலே அரசு இடையூறு செய்தால், சிறு தொழில் வளராது என்பதைக் கருத்திலே கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நீலகிரியில் பார்சன் வேலி திட்டத்தை விரைவிலே நிறைவேற்ற வேண்டும். இதிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் மிக அக்கறை கொண்டிருக்கிறார்கள். தொழிலைத் தொடங்க வேண்டும், தொழிலைத் தொடங்க வேண்டும் என்று நாம் எல்லோரும் சொல்லுகிறோம். நம்முடைய நிதிநிலை அறிக்கையைப் பற்றி 'இந்து' பத்திரிகையில் கடைசியாக கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டிருக்கிறது.

"The State Government needs to pay greater attention to industrial development where the performance has been indifferent."

என்று சொல்லுகிறார்கள். ஒரு சிறு தொழிலைத் தொடங்க வேண்டும் என்றால், முதலிலே எஸ்.எஸ்.ஐ. சர்டிபிகேட் வாங்க வேண்டும். இந்த சர்டி



1985 ஏப்ரல் 8] [டாக்டர் இரா. சனார்த்தனம்]

பிகேட்டை வாங்குவதற்கே நான்கு மாதம் ஆகும். அதற்குள் இடம் வாங்க வேண்டும், கட்டிடம் கட்டியிருக்க வேண்டும், 'வையபிள் சர்டிபிகேட்' தர வேண்டும். கடைசியில் ஏதோ முயற்சி செய்து இயந்திரங்களை வாங்கி விட்டு ஒர்க்கிங் காப்பிட்டலுக்குப் போனால் அப்போது 'கொலேட்டரல் செக்யூரிட்டி' இருக்கிறதா என்று பார்க்கிறார்கள். யாரோ சிலர் ஏமாற்றுகிறார்கள் என்ற காரணத்தால், எல்லோருக்கும் இந்தக் கட்டுப்பாடு. கட்டிடமும் கட்டிவிட்டு மின்சாரத்திற்குப் போனால், இயந்திரத்தைக் கொண்டு வந்து வை, பிறகு தருகிறேன் என்கிறார்கள். இப்படி இரண்டாண்டுக் காலம் செலவழித்து ஒரு சிறு தொழிலை ஆரம்பித்து நடத்தினால், மார்க்கெட்டிங் என்று வருகிறபோது கூட்டுறவுத் துறைக்குத்தான் முக்கியத்துவம் என்று சொல்லி, இவர்கள் தயாரித்த பொருள்களை கூட்டுறவுத் துறையில் வாங்கி விற்பனை செய்யும் இரட்டை வியாபாரம் நடக்குமானால், எப்படி தொழில் பெருகும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஸ்ரீலங்கா அகதிகளைப் பொறுத்த வரையில், மண்டபம் முகாம் இருக்கிறது. இப்போது தூத்துக்குடியில் ஒரு முகாம் கட்ட மத்திய அரசு தீர்மானிக்கிறது என்று நான் கருதுகிறேன். ஸ்ரீலங்காவிலிருந்து வருகிற அகதிகள் ராமானுஜம் கப்பல் மூலமாக தலைமன்னாருக்கு வரவேண்டாம், கொழும்பிலிருந்து தூத்துக்குடிக்கு அனுப்பப்பட வேண்டும் என்று இலங்கை அரசாங்கம் விரும்புகிறது. நம்முடைய கப்பலுக்குப் பதிலாக அவர்களுடைய கப்பலில் அனுப்பப் போகிறார்கள். தூத்துக்குடிக்கு 90,000 அகதிகளை அனுப்பப் போகிறார்கள். ஸ்ரீலங்காவில் உள்ள நம்முடைய தூதர் திரு. சத்வால் அவர்களை நான் ஒரு நாள் விமானத்தில் சந்தித்தேன். ராமானுஜம் கப்பலை எப்போது விடப் போகிறீர்கள் என்று கேட்டபோது "Talaimannar is not a suitable place to operate", என்று சொன்னார்கள். காங்கேசன் துறையிலிருந்து நாகப்பட்டினத்திற்குக் கப்பல் விடுகிற திட்டம் இருக்கிறதா என்று கேட்டதற்கு காங்கேசன் துறையிலிருந்து எப்படி மக்களைக் கொண்டு செல்வது என்று யோசிக்கிறோம் என்றார். அப்போது நான் "You ore thinking of only repatriation. வடக்கு-கிழக்குப் பகுதியில் உள்ள பூர்வீகத் தமிழர்களைப் பற்றி உங்களுக்குக் கவலை இல்லை" என்றேன். அவர்கள் அகதிகளைப்பற்றி மட்டும்தான் நினைக்கிறார்கள் என்று நான் சொன்னபோது 'இல்லை' என்று அவர்கள் சொன்னார்கள். அங்கேயுள்ள 90,000 அகதிகளைப் பற்றித்தான் நம்முடைய இந்தியத் தூதுவரின் மனம் எண்ணிப்பார்க்கிறது. இந்த இரு நாடுகளுக்கும் இடையே

கடித்துக் குதறப்பட்டிருக்கின்ற கோரத்தை எண்ணிப் பார்க்கிறோம். இப்படி தமிழ் பெண்களுக்கு அநீதி நடக்கின்றபோது, நாம் தமிழர்கள், தமிழ் சமுதாயத்தினுடைய பிரதிநிதிகள் என்று சொல்லிக்கொள்வதற்கு என்ன மரியாதை, என்ன யோக்கியதை இருக்கின்றது என்பதைத்தான் நான் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அங்கே சிறைச்சாலையிலே அவர்கள் சித்ரவதை செய்யப்படுகின்றார்கள். இன்றைக்கு ஆயிரக்கணக்கான இளைஞர்கள் மருந்து தாட்பட்டு சாகடிக்கப்படுகின்றார்கள். இதையெல்லாம் கண்டிப்பதற்கு நமக்கு உரிமையில்லையா? கேட்பதில் நியாயமில்லையா? தென் ஆப்பிரிக்காவில் போராடியபோது, இரண்டு நாட்களுக்கு முன்பு 16 பேர்கள் மாண்டபோது, உலகமே கொதித்தது. அநீதி என்று எண்ணியது. ஆனால் 5,000 தமிழர்களை இழந்த தமிழ்த் தாய்க்கு அதைப் பற்றிப் பேச நாதியில்லையா? குரல் கொடுப்பதற்கு உரிமையில்லையா? எண்ணங்களைத் தெரிவிப்பதற்கு நமக்கு அனுமதியில்லையா? நாம் இந்தியாவைப் பார்த்து எண்ணுகிறோம். கடலிலே கண்ணீரை விடுகிறோம். நம் சகோதரர்களை நாம் இழந்ததாகக் கருதுகிறோம். அங்கே கற்பழிக்கப்பட்ட தமிழ்ப் பெண்களைப்பற்றி எண்ணுகின்றபோது, அது என் தாய், என் மனைவி, 10 வயது செல்வி இவர்களுக்கு ஏற்பட்ட கோரம் என்றுதான் நான் நினைக்கிறேன். இந்த பாதகத்தைப் பார்த்துக்கொண்டிருக்கின்றபோது, ஒரு மகத்தான கேள்வி நம் தமிழ் சமுதாயத்தின் முன்னால் நிற்கிறது. தமிழ் தலைவர்கள் தயவுகூர்ந்து அதைப்பற்றி எண்ணிப்பார்க்க வேண்டும். நம் முன்னால் இருக்கின்ற அந்தக் கேள்வியை நாம் பார்க்க வேண்டும். இந்தக் கால கட்டத்தில், நாம் ஒரு பணியை ஆற்றத் தவறுவோமானால், நாம் தமிழர்களைக் காப்பாற்றுவதற்குத் தவறுவோமானால், எதிர்கால சந்ததி நம்மைக் காறி உமிழும் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அந்த நிலையிலேதான் நமது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் சர்வ கட்சிக் கூட்டத்தை கூட்டியிருக்கின்றார்கள். தமிழ் நாட்டினுடைய எண்ணத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அந்த வகையிலே நாம், வலிவு சொல்ல வேண்டும் என்பதும், உறுதியோடு நிற்க வேண்டுமென்பதையும், தமிழ் மக்களை ஒன்று திரட்டுவதற்காக முயற்சி செய்ய வேண்டும் என்பதையும், தமிழ் நாட்டிலே எழுச்சி இல்லை என்றால், தமிழ் நாட்டிலே குரல் கொடுக்கவில்லை என்றால், தமிழ் நாட்டு மக்கள் கொந்தளிக்கவில்லை என்றால், நிச்சயம் இந்திய சர்க்கார் எப்படி தலையிட முடியும், மற்ற மாநிலங்கள் எப்படி ஏற்றுக்கொள்ளும் என்பதையும் கருத்திலே கொண்டு ஸ்ரீலங்கா வாழ் தமிழர்களுடைய பிரச்சினை தான், நம்முடைய பிரச்சினை,



அந்தப் பிரச்சினை தீரவில்லை என்றால் எத்தனை நிதிநிலை அறிக்கைகள் நம் மக்களுக்காக நாம் தயாரித்தாலும் அதிலே பயனில்லை. வந்துகொண்டிருக்கின்ற மக்களுக்கு அது என்ன வாழ்வு தர முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் அதை எதிர்பார்க்கவில்லை.

மாண்புமிகு பிரதமர் திரு. இராஜீவ் காந்தி அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். வந்திருக்கின்ற 90,000 பேர்கள் திரும்பி அந்த நாட்டிற்குச் செல்ல வேண்டும். அங்கே வாழக்கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்பதற்கு ஏற்ப, நாம் அனைவரும் தமிழ் இனம் ஒன்று என்ற நிலையிலே குரல் கொடுப்போம் என்று கூறி, அமைகிறேன். வணக்கம்.

**திரு. பா. ரா. தாமஸ்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையிலே பேசுவதற்கு முன்னதாக பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்ற முறையிலே இந்த மன்றத்தினுடைய உறுப்பினராகவும், தமிழ் நாடு பட்டதாரி மேல்நிலை ஆசிரியர்கள் கழகத்தினுடைய தலைவராகவும் இருக்கின்ற திரு. மயில்சாமி அவர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாக நாம் கேள்விப்படுகிறோமே, அது குறித்து மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் ஏதேனும் விவரம் கொடுக்க முடியுமா?

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** இதுவரை எந்தவிதமான தகவலும் இல்லை. தகவல் வந்ததும் தெரிவிக்கப்படும்.

(முற்பகல் 11-35)

**திரு. பா. ரா. தாமஸ்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, 1985-86 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்திலே கலந்துகொண்டு பேச வாய்ப்பு கொடுத்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆசிரியர்கள் பட்டதாரிகள் முற்போக்கு முன்னணியின் சார்பிலே இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று ஒரு சில கருத்துக்களைக் கூற முன் வருகிறேன். இந்த அறிக்கையின் மூலமாக மாநிடத்திலே உள்ள ஏழை, எளிய மக்களுக்கு பல நல்ல சமூகத் தொண்டாற்றும் வகையிலே திட்டங்கள் வகுக்கப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டுமென்பதற்கு எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு நான் என் ஆதரவைத் தெரிவித்துக்கொள்கிறேன். அரசுத் துறையிலே பணியாற்றும் அனைவருக்குமான புதிய நான்காம் ஊதியக் குழுவின் அறிக்கை 12-4-1985 அன்று அரசால் பெறப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது மகிழ்ச்சியான செய்தி. அதற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் ஊதியக் குழுவின் அறிக்கை குறித்த கருத்து,

[டாக்டர் இரா. சனார்த்தனம்] [1985 ஏப்ரல் 8

அவர்களே சொல்லிவிட்டபிறகு, பாசமுள்ள பக்கத்து நாட்டைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது. ஜெயவர்த்தனே அவர்களும் மற்றவர்களும் கட்டுப்பாடு இல்லாமல் உள்ள இராணுவத்தை, " இந்தியா இங்கே நுழைந்துவிடும். ஆகவே சிங்களவர்களாகிய நாம் எல்லோரும் ஒன்றாக இருக்க வேண்டும் " என்று சொல்லி கட்டுப்படுத்தியதால்தான், அந்த நாடு இவ்வளவு காலம் இருந்தது. ஆனால் தொடர்ந்து நாம் இராணுவத்தை அனுப்பமாட்டோம், தலையிடமாட்டோம் என்று சொல்லச் சொல்ல அங்கே இராணுவத்தினரை அரசியல்வாதிகள் முடுக்கிவிட்டு அங்கே ஏதாவது செய்யலாமா என்று நினைக்கிறபோது, இவ்வளவு நேசமும், நட்பும் உள்ள ஸ்ரீலங்கா அழிந்துவிடக்கூடாது என்பதற்காகவாவது இந்தியா ஏதாவது செய்ய வேண்டும் என்று நான் வற்புறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் அங்கே தமிழ் மக்களுடைய அழிவைப் பார்க்க வேண்டும். குறிப்பாக மீனவர்கள் மட்டும், எல்லையோரப் பகுதியில் உள்ள மீனவர்கள் மட்டும் ஆண்டு ஒன்றுக்கு முப்பதிலிருந்து 40 கோடி ரூபாய் வரையில் வந்த சம்பாதியத்தை இழந்திருக்கிறார்கள். ஐயாயிரம் பேர் உயிரிழந்திருக்கிறார்கள். பல பேர் இங்கே வந்திருக்கிறார்கள். பங்களா தேசத்திலிருந்து வந்தவர்களை விட இது குறைவு என்றால், அதற்குக் காரணம் இடையிலே கடல் இருப்பதுதான். அங்கே ஜனத்தொகை 8 கோடி. இங்கே 35 இலட்சம் பேரில் கிட்டத்தட்ட 2 இலட்சம் பேர் வந்து விட்டார்கள். இன்னும் பல பேர் வந்துவிடுவார்கள். ஆகவே இந்தியா எதைச் செய்தாலும், உலகம் ஏற்றுக்கொள்ளும். ஜெனிவா மனித உரிமைக் குழு கூட்டத்தில் ஒரு நாள் கூட ஸ்ரீலங்காவினுடைய தவறான போக்கை நியாயம் என்று ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகவே இந்தியா எதைச் செய்தாலும் உலகம் அதை ஏற்றுக்கொள்ளும். ஆனால் இந்தியா அபரிமிதமான அன்பைக் காட்டி, ஸ்ரீலங்காவின் பாசத்தைப் பெற எவ்வளவுதான் பெருந்தன்மையோடு நடந்து காட்டினாலும், இங்கே பிடித்த விமானத்தை மீண்டும் அனுப்பி வைத்தாலும், தமிழக மீனவர்களைச் சுட்ட கப்பல்களை அனுப்பி வைத்தாலும்—மறுநாளும் அவர்கள் சுடுகிறார்கள்—இங்கே வருகிற கப்பல்களைத் தடுத்து நிறுத்தினாலும் இந்தியாவினுடைய பெருந்தன்மையை அவர்களாலே புரிந்துகொள்ள முடியவில்லை. அண்மையிலே பாகிஸ்தானுக்குப் போன ஜெயவர்த்தனே, "காஷ்மீர் மக்களுடைய உரிமையை நாங்கள் மதிக்கிறோம்" என்று சொல்லியிருக்கிறார். காஷ்மீர் மக்கள் நம்மாலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். காஷ்மீர் இந்தியாவின் ஓர்



1985 ஏப்ரல் 8] [டாக்டர் இரா. சனார்த்தனம்]

அங்கம். ஸ்ரீலங்காவில் ஆண்டாண்டுக் காலமாக வாழ்ந்து கொண்டிருக்
கிற தமிழர்களுக்கு சுய உரிமை தராதபோது, இந்தியா எச்சரிக்கையாக
இருக்க வேண்டும். ஆப்கானிஸ்தானத்தில் ஓர் அரசு இருக்கிறது. அதற்கு
எதிராக பாகிஸ்தானிலிருந்து கொரில்லாக்கள் போகிறார்கள், தாக்கு
கிறார்கள். இந்திய அரசினுடைய வெளி விவகாரக் கொள்கைக்கு விரோத
மாக ஜெயவர்த்தனே அவர்கள் ஏற்றுக்கொண்டு பேசும்போது, நாம்
நட்பைப் பராமரிப்பதில் தவறு என்று சொல்லவில்லை, ஆனால் எச்சரிக்கை
யாக இருக்க வேண்டும் என்று சொல்கிறேன்.

(முற்பகல் 11-30)

ஸ்ரீலங்கா தமிழர்களைக் காப்பாற்றுவது மட்டுமல்ல, நம்முடைய மீனவர்களை
நாம் காப்பாற்ற வேண்டும். கச்சத் தீவு ஒப்பந்தத்தை ரத்து செய்ய
வேண்டும் என்று முழங்குவது ஒரு பக்கம் இருக்கட்டும். திரு. கல்யாண
சுந்தரம் அவர்கள் சொல்வதுபோல, அந்த ஒப்பந்தத்திலே இந்திய மீன
வனுக்கு இருக்கின்ற உரிமையைக் காப்பாற்றுவது இவ்வளவு பெரிய நாட்டி
னுடைய கடமையல்லவா என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.
அன்போடும், பரிவோடும், பாசத்தோடும் நாம் விடுகின்ற வாசகங்கள் 35
லட்சம் பரிதாபகரமான மக்களை எவ்வளவு பாதிக்கின்றன என்பதை
நினைக்கின்றபோது, கொஞ்சம் பேசாமலாவது இருங்கள் என்று பணிவோடு
நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அண்மையிலே நடந்த ஒரு சம்பவத்தைப்பற்றி நான் சொல்லிக்கொள்கி
றேன். ஒரு தந்தையும் மகனும் யாழ்ப்பாணம் கடைவீதியிலே போகின்றார்கள்.
அப்போது ராணுவம் வருகிறது. மக்கள் பயந்து ஒதுங்குகின்றார்கள்.
தந்தையும் மகனும் பக்கத்துக் கடையிலே பதுங்குகின்றார்கள். தந்தை
மகனிடம் எதிர்த்த கடையிலே போய் பத்திரிகை வாங்கிக்கொண்டு வருவ
தாகச் சொல்லிச் செல்கின்றார். அப்போது அவரை ராணுவம் சுடுகிறது.
அப்போது அந்த எட்டு வயது பையன் அவரிடம் போகின்றான். அவனையும்
சுட்டுவிடுகின்றார்கள். அவன் உடலை சாக்கடையிலே வீசி எறிந்துவிட்டுப்
போய்விடுகின்றார்கள். அந்தத் தமிழ் தந்தைக்கும். மகனுக்கும் அன்றைக்கே
பிண ஊர்வலம் நடக்கிறது. அதை எனக்கும் என் மகனுக்கும் நடக்கின்ற
ஊர்வலமாகத்தான் நினைக்கிறேன். அதை என்னாலே அப்படித்தான்
பார்க்க முடிகிறது. யாழ்ப்பாணம் மருத்துவ மனையிலே செவிலியர்களாகப்
பணியாற்றியவர்கள் இங்கே வந்து இருக்கிறார்கள். தமிழ்ப் பெண்கள்
கற்பழிக்கப்பட்டு வருகிறார்கள். அந்தப் பெண்களுடைய மார்பகங்கள்

தேர்தலுக்கு முன்னதாக அரசின் சார்பிலே அறிவிக்கப்பட்ட கருத்தாகும். இது 1—10—1984-லிருந்து அமுல் நடத்தப்படுமென்று தெரிவித்தார்கள். ஆனால் பொதுவாக அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் என்ன கேட்கிறார்கள் என்றால் 1-4-1984-லிருந்து அதை அமுல் நடத்த வேண்டும். முன் தேதியிட்டு அதை அமுல் நடத்த வேண்டும், நிலுவையும் அந்தத் தேதியிலிருந்து வழங்கப்பட வேண்டும் என்று கேட்கிறார்கள். அந்தக் கருத்தை எங்கள் இயக்கத்தின் சார்பிலே, எங்கள் அணியின் சார்பிலே அரசுக்கு வலியுறுத்தித் தெரிவித்துக்கொள்கிறேன்.

1985-86 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே, அரசு ஊழியர்கள் பணியில் இருக்கும்போது மரித்துப்போனால் 10,000 ரூபாய் என்று கொடுப்பதற்குப் பதிலாக 20,000 ரூபாய் கொடுக்கப்படுமென்று அறிவித்திருக்கிறார்கள். இதனை 1—4—1985-லிருந்து அமுல்படுத்தப் போவதாக செய்தியை பத்திரிகையில் பார்த்தோம். ஆனால் இதற்கான உறுதிமொழி அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில் வழங்கப்பட்டது. நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் 10,000 ரூபாய் என்று வழங்குவதை 20,000 ரூபாய் என்று ஆக்குவோமென்று உறுதி அளித்திருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வரவர்களையும், மாண்புமிகு நிதி அமைச்சரவர்களையும் ஒன்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு முதல்வரவர்கள் அமெரிக்காவிலிருந்து இந்தியா திரும்பி, சென்னை வந்து, ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட 10—2—1985-லிருந்து இந்தச் சலுகையைக் கொடுக்கும் முறையிலே அரசாணை வெளியிடப்பட வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஆண்டு மார்ச் 31-க்குப் பிறகு ஓய்வு பெறுபவர்கள் 1,500 ரூபாய் தான் அதிகபட்சமாக ஓய்வூதியம் பெறலாமென்று உச்சவரம்பை நீக்கியதற்காகவும், பணிக்கொடையை 36,000 ரூபாயிலிருந்து 50,000 ரூபாய் அளவுக்கு உயர்த்தி இருப்பதற்காகவும் நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். தொழிற் பிரிவு ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், பகுதி நேர ஆசிரியர்கள் 150 ரூபாய்க்கு பதிலாக 300 ரூபாய் வாங்கலாமென்றும். 2 பகுதி நேர ஆசிரியர்கள் ஊதியத்தை அவர்கள் பெற்றுக்கொள்ளலாமென்றும் ஆணையிட்டதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

வேளாண்மையைப் பொறுத்தவரையில், விவசாயிகள் செலுத்தும் மின் இணைப்புக் கட்டணத்தில் ஒரு மாற்றம் செய்திருக்கிறார்கள். விவசாயிகள் தங்களுடைய மின் ஏற்றத்திற்கு குதிரைத் திறன் ஒன்றுக்கு 75 ரூபாய் என்றும், 2½ ஏக்கருக்கு மேல் இருந்தால் கட்ட வேண்டுமென்றும் ஆணை





பிறப்பித்திருக்கிறார்கள். இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதைப்பற்றிக்கூட இந்த மன்றத்திலே பேசியிருக்கிறார்கள். சில பகுதிகளிலே தேவையான அளவுக்குத் தண்ணீர் இல்லை. மின் ஏற்றங்கள் இருக்கின்றன. ஆனால் ஒரு மணி நேரம்கூட அவை வேலை செய்யவில்லை. சில இடங்களில் குடும்பத்தில் உள்ளவர்களின் நிலங்களை மொத்தமாகச் சேர்த்து, கணக்கு எடுத்துக்கொள்கிறார்கள். ஒரு இடத்தில் கிணறு இருக்கிறது, பம்ப்செட் இருக்கிறது. 1½ ஏக்கர் நிலம் மனைவிக்குச் சொந்தமாக அங்கே இருக்கிறது. கணவனுக்குச் சொந்தமான நிலம் 1½ பர்லாங் தூரத்தில் இருக்கிறது. அங்கே அவருக்கு 3 ஏக்கர் நிலம் இருக்கலாம். இரண்டையும் கூட்டி, 2½ ஏக்கருக்கு மேல் இருக்கிறது, எனவே ஒரு குதிரைத் திறனுக்கு 75 ரூபாய் என்ற வீதத்தில் கட்ட வேண்டுமென்று சொல்லுகிறார்கள். எல்லா பம்ப் செட்டுகளின் மீட்டர்களையும் தேர்தலுக்கு முன்பாகவே கழட்டிவிட்டார்கள். இதிலே என்ன மாற்றம் செய்ய வேண்டுமென்று விரும்புகிறார்கள் என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன். 2½ ஏக்கருக்கு மேலாக நஞ்சை உள்ளவர்கள் ஒரு குதிரைத் திறனுக்கு 75 ரூபாய் என்ற வீதத்தில் வருடத்திற்கு மின் கட்டணம் கட்டலாம். சில விவசாயிகளுக்கு 2½ ஏக்கருக்கு மேலாக இருக்கலாம். ஆனால் அதை 1 மணி நேரத்திற்கு மேல் பயன்படுத்த முடியாது. ஒரு ஆண்டிலே 1 மாதம், 1½ மாதங்கள்தான் பயன்படுத்தும் நிலை இருக்கிறது. வருடம் முழுவதும் தேவையில்லாத நிலையில் பம்ப்-செட் இருக்கிறது. எனவே அவர்கள் விரும்பினால் மீட்டர் வழியாகப் பணம் கட்ட, மீட்டர்களைப் பொருத்தி, மின் இணைப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11.40)

அடுத்தபடியாக, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. சனார்த்தனம் ஸ்ரீலங்கா தமிழ் மக்கள் படுகின்ற அவதிகளை எடுத்துச் சொன்னார்கள். அப்போது அவர்களுடைய கண்களில் மட்டுமல்லாமல், மற்ற உறுப்பினர்களுடைய கண்களிலும் கண்ணீர் வடிக்கின்ற அளவுக்கு அதனைச் சித்தரித்துக் காட்டினார்கள். அதிலே எந்த ஓர் உறுப்பினருக்கும் கருத்து மாறுபாடு இருக்க முடியாது. 2 ஆண்டுகளுக்கு முன்பு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காலஞ்சென்ற பாரத பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களை டில்லியில் இதுகுறித்து சந்தித்துச் சொல்லச் சென்றிருந்த சமயத்தில், எங்கள் அமைப்பின் பிரதிநிதியாக மாண்புமிகு உறுப்பினர்

[திரு. பா. ரா. தாமஸ்] [1985 ஏப்ரல் 8

திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் சென்றிருந்தார்கள். அதற்குப் பிறகு இது சம்பந்தமாக நடைபெற்ற கருத்துப் பரிமாற்றங்களின்போது எங்கள் அமைப்புகளின் சார்பாக யாரையும் அழைக்கவில்லை. இனிமேல் இது சம்பந்தமாக நடைபெறும் கூட்டங்களின்போதும் விவாதங்களின்போதும் அவசியம் எங்கள் அமைப்பின் சார்பில் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் மூலமாக அரசுக்கு நான் வேண்டுகோள் விடுக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, இராமேஸ்வரம் பகுதியில் இருக்கிற ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் எல்லோரும் அதிக செலவினப்படி என்ற பெயரில் ஒரு குறிப்பிட்ட தொகையை வாங்கிக்கொண்டிருந்தார்கள். மூகவை, இராமேஸ்வரம், தனுஷ்கோடி போன்ற பகுதிகளிலே பணியாற்றும் அனைவரும் இந்தப் படியைப் பெற்றுக்கொண்டு வந்தார்கள். இரண்டாவது ஊதியக் குழு அந்தப் பகுதியிலே போக்குவரத்து வசதி வந்துவிட்டபடியால், இராமேஸ்வரம் தீவுக்குப் போக்குவரத்து வசதிகள் இருப்பதால், இந்தப் படி தேவையில்லையென்று சொன்னது.

திரு. எல். ஜெயச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் நிதிநிலை அறிக்கை பற்றி இங்கே பேசிக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அவையில் இல்லை. அதுபோல் அவை முன்னவர் அவர்களும் இல்லை. உறுப்பினர் அவர்கள் பேசுவது சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கு எப்படித் தெரியும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : சட்டமன்றப் பேரவையில் விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. நிதியமைச்சர் அங்கே இருக்கிறார்கள். அவை முன்னவர் அவையில் இருக்க வேண்டும். வேறு ஒரு முக்கியமான பணியின் காரணமாக என்னை இங்கே அமர்ந்திருக்கச் சொல்லியிருக்கிறார்கள். முக்கியமான கருத்துக்களைக் குறிப்பெடுத்து சம்பந்தப்பட்ட அமைச்சருக்குத் தெரிவிப்பதற்கான அனுபவமும் ஆற்றலும் எனக்கு இருக்கிறது என்று உறுப்பினர் நம்புவார் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அமைச்சர் குறிப்பெடுத்துக் கொண்டிருந்ததை நானே பார்த்தேன்.



1985 ஏப்ரல் 8]

திரு. க. மீனாட்சிசுந்தரம் : அமைச்சர் வேறு ஏதோ பைல் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : நான் பல ஆண்டுகளாக மருத்துவராக இருப்பதால், ஓரளவுக்கு அஷ்டாவதானம் எனக்குத் தெரியும் மாண்புமிகு உறுப்பினர் சொன்னவைகளை அப்படியே இப்பொழுது என்னால் மனப்பாடமாகக் கூட சொல்ல முடியும். (சிரிப்பு)

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அதற்குப் போதிய அவகாசம் தற்போது இல்லை. (சிரிப்பு)

திரு. பா. ரா. தாமஸ்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பெடுத்துக் கொண்டார்கள் என்பதை உணர்ந்துகொண்டேன். அதற்காக அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். 'ஐசோலேட்டட் லொக்காலிட்டி அலவன்ஸ்' என்ற அடிப்படையில் குறிப்பிட்ட தொகையை அங்கு பணியாற்றுபவர்களுக்கு வழங்க வேண்டும் என்று கடந்த 3, 4 ஆண்டுகளாக நாங்கள் குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இராமேஸ்வரம் தீவிலும், மண்டபம் பகுதியிலும் பணியாற்றுபவர்கள் பெரிதும் அவதிக்குஆளாகியிருக்கிறார்கள். 2,435 மீட்டர் பாலத்தை அவர்கள் கடந்து செல்ல வேண்டியிருக்கிறது. அங்கு செல்வதற்கு முறையான போக்குவரத்து வேண்டியிருக்கிறது. அங்கு செல்வதற்கு முறையான போக்குவரத்து வசதியோ புகைவண்டி வசதியோ இல்லை. படகுப் போக்குவரத்து வசதியோ புகைவண்டி வசதியோ இல்லை படகுப் போக்குவரத்து வசதியும் இல்லை. நானே ஒருமுறை ராமேஸ்வரம் தீவுக்குச் சென்றுவிட்டு, மழையில் தொல்லைப்பட்டு, அச்சத்தோடு, நடுக்கத்தோடு நடந்து வந்து சேர்ந்தேன். இரண்டாவது ஊதியக் குழு அறிக்கையில் போதுமான போக்குவரத்து வசதி உருவாக்கப்பட்டு விட்டது, சிறப்புப் படி எதுவும தேவையில்லை என்று குறிப்பு தந்திருக்கிறார்கள். அங்கு உள்ளபடியே நடந்து பார்த்து தொல்லைகளை அனுபவித்திருப்பார்களானால், அப்படி குறிப்பு தந்திருக்க மாட்டார்கள். அங்கு பணியாற்றுகிறவர்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். கூட்டுறவுப் பண்டகசாலை விலைப்பட்டியலை எடுத்துக்கொண்டால் கூட மெயின் லான்ட்க்கும் இங்கும் 5 விழுக்காடு வேறுபாடு இருக்கிறது. அதுபோல் பி.டபிள்யூ.டி. கட்டிட வேலையாக இருந்தாலும் சரி அல்லது மராமத்து வேலையாக இருந்தாலும், மெயின் லான்டைவிட இங்கு ஐந்து விழுக்காடு அதிகமாக ஊதியம் வழங்குகிறார்கள். இப்பொழுதும் வழங்கிக் கொண்டிருக்

[திரு. பா. ரா. தாமஸ்] [1985 ஏப்ரல் 8

கிறார்கள். ஊதியக் குழு சொல்லிவிட்ட காரணத்தால், 1981 ஆம் ஆண்டுவரை கொடுத்து வந்த சிறு தொகையை நிறுத்திவிட்டார்கள். அங்கு முழுமையான போக்குவரத்து வசதி மற்றும் சௌகரியங்கள் ஏற்பட்டு விட்டன. ஆகவே 'ஐசோலேட்டட் அலவன்ஸ்' தேவையில்லை என்று கருதி நிறுத்திவிட்டார்கள். இந்த நேரத்தில் நான் இதனை வலியுறுத்திச் சொல்ல என்ன காரணம் என்பதையும் சொல்கிறேன்.

(முற்பகல் 11-45)

இப்போது அங்கே ஸ்ரீலங்காவிலிருந்து தமிழ் அகதிகள் நிறைய பேர் வந்து குவிந்துகொண்டே இருக்கிறார்கள்.

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** தலைவர் அவர்களே, இங்கே பிரதான எதிர்க் கட்சியாக இருப்பது, காங்கிரஸ் இயக்கம். ஆனால் அந்தக் கட்சியைச் சார்ந்தவர் ஒருவர் கூட அவையில் இல்லை. அவர்கள் வெளி நடப்பு செய்துவிட்டார்களா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** யாரும் இல்லாததால் அதற்குப் பதில் சொல்லவும் ஒருவரும் இல்லை

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** எல்லா நேரமும் எல்லோரும் இருக்க முடியாது. உறுப்பினர், இந்தப் பிரச்சினையைக் கிளப்புவதன் மூலமாக ஏதோ ஒரு கட்சியினர் இங்கே வரவில்லையென்ற தவறான கருத்து வெளியிலே ஏற்பட்டுவிடும். ஆகவே திரு. ஆர். டி. சீத்தாபதி அவர்கள யாரையும் சங்கடத்தில் ஆழ்த்தவேண்டாம்.

**திரு. பா. ரா. தாமஸ் :** ஆகவே இந்த அதிகச் செலவினப் படி என்ற தொகையை, குறைந்தது 30 விழுக்காடு அளவை, அவர்களது அடிப்படை ஊதியத்தில் வழங்க வேண்டுமென்று நான் அரசை வலியுறுத்துகிறேன்.

பொதுவாக, மாநிலத்திலே திறமையான மாணவர்கள் (டாலன்டட் சில்ட்ரன்) கிராமப்புறங்களில் இருக்கிறார்கள். அப்படி கிராமங்களில் இருக்கக்கூடிய திறமையான மாணவர்களை தேர்வுகள் மூலம் தேர்ந்தெடுத்து, ஒரு பஞ்சாயத்து யூனியனுக்கு 4 மாணவர்கள் விதம் தேர்ந்தெடுத்து, அவா களுக்கு கல்விச் சலுகை உதவித் தொகை வழங்குவது போன்றவற்றை அரசு அளித்து வருகிறது. அதற்கு ரூ. 1,000 வரம்பும் வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அப்படி திறமையான மாணவர்கள் கிடைத்து அவர்களுக்கு இந்த உதவித் தொகை வழங்கப்பட்டுக் கொண்டிருக்கும்போது, அவர்களுடைய



1985 ஏப்ரல் 8] [திரு. பா. ரா. தாமஸ்]

பெற்றோர்களுக்கு ரூ. 6,000 ஆண்டு வருமானம் இருந்துவிட்டால், அவர் களுக்கு அளிக்கப்பட்டு வந்த உதவித் தொகை நிறுத்தப்படுகிறது. அவர்களை நாம் தேர்ந்தெடுப்பது அவர்களின் திறமைக்காக. ஆனால் இப்படி ஒரு நிபந்தனை வைப்பதன் மூலம் திறமையான மாணவர்களுக்கு நாம் உதவி செய்ய வேண்டுமென்ற எண்ணம் நிறைவேறாமல் போய்விடுகிறது.

அரசு ஊழியர்கள், ஆசிரியர்களின் பிள்ளைகள் இதுபோன்ற சலுகை களைப் பெற நேரும்போது, அவர்கள் தங்கள் பெற்றோர்களின் மாத வருமானச் சான்றிதழை இணைக்கிறார்கள். இதில் நாம் தவறான சான்றிதழைக் கொடுக்க முடியாது. வருமான வரி கட்டக்கூடிய நிலையில் இருப்பவர்கள் கூட இப்போது குறைந்த வருமானம்தான் தங்களுக்கு வருகிறது என்று தவறாகக் கூறி, தவறான சான்றிதழை வாங்கி, அச்சலுகை யைப் பெறறுக் கொள்கிறார்கள். ஆனால் நமது அரசு ஊழியர்கள், ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கு இந்தச் சலுகை மறுக்கப்படுகிறது. ஆகவே, வருமான வரம்பு என்பதை நீக்கி, திறமைக்கு நாம் முதலிடம் கொடுத்து அவர்களை ஊக்குவிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் அரசை வற்புறுத்த விரும்புகிறேன்.

அடுத்ததாக, ஆசிரியர்களின் வைப்பு நிதி, தனியார் பள்ளிகளில் பணி யாற்றும் ஆசிரியர்கள், இதர ஊழியர்களின் வைப்பு நிதியை தபால் துறையில் போட்டுவைக்கிறார்கள். இதில் எங்களுக்குக் கிடைக்கக்கூடிய வட்டி விதம் 5.5 விழுக்காடுதான். ஆனால் அரசுத் துறை அலுவலர்களுக்கும் அரசுத் துறை ஆசிரியர்களுக்கும் 9.5 விழுக்காடு வட்டி கிடைக்கிறது. இந்த அடிப்படையில் தனியார் துறை ஆசிரியர்கள் ரூ. 20 ஆயிரம் முதல் ரூ. 30 ஆயிரம் வரை வட்டி இழக்கிற நிலைமை நேரிடுகிறது. இதை பலமுறை இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். ஏனென்றால், இதற்கு ஒரு முடிவு கட்டவேண்டும். எங்களுக்கு நீதி வழங்க வேண்டும். எங்களுடைய பணத்தை, தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் முதலீடு செய்யலாம். அல்லது நமது மாநில இண்டஸ்டிரியல் டெவலப்மென்ட் கார்ப்பரேஷனில் முதலீடு செய்யலாம். இது தொழில் அபிவிருத்திக்காவது பயன்படும்.

அடுத்து, மத்திய அரசாங்கப் பள்ளிகளை ஏராளமாக இங்கே இந்த ஆண்டு ஆரம்பிக்க இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். இது எங்களுக்கு மிகுந்த வேதனை தருவதாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன். இதுகுறித்து சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். 1985-86 ஆம் ஆண்டு 750 பணியிடங்களை நாம் கொடுத்திருக்கிறோம்

ஆனால் இங்கே நாம் நாற்பதாயிரத்திற்கும் மேற்பட்ட பயிற்சி பெற்ற ஆசிரியர்களை வேலை கொடுக்காமல் வைத்துக் கொண்டிருக்கிறோம். ஒரு பக்கம், பள்ளிகளில் ஆசிரியர்-மாணவர் விகிதாச்சாரம் அளவுக்கு மீறி, ஒரு வகுப்புக்கு 90 மாணவர்களுக்கு 1 ஆசிரியர் விதம் என்றெல்லாம் பல பள்ளிகள் இயங்குகின்றன. இதன் காரணமாக, பெற்றோர்கள் நமது பள்ளிகளைப்பற்றி என்ன நினைக்கிறார்கள் என்றால், 90 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் விதம் இருப்பதால், பள்ளியின் தரம், அதன் காரணமாக கல்வியின் தரம் மிகவும் குறைந்துவிடுகிறது என்று கருதி, சென்ட்ரல் ஸ்கூலை நாடவேண்டிய நிலை ஏற்பட்டுவிடுகிறது.

ஆகவே நமது பள்ளிகளில் போதுமான பணியிடங்களை ஒதுக்கித் தரும்படி இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன். இப்போது சென்ட்ரல் ஸ்கூலை நோக்கி மாணவர்கள் செல்லும் அவல நிலை இதனால் தவிர்க்கப்படும். இதன்காரணமாக, மறைமுகமாக இந்தி நமது மாணவர்கள் மீது திணிக்கப்படுகின்ற நிலையும் மாறும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது, தமிழ் நாட்டில் இந்தி திணிக்கப்படுகிறது என்ற குற்றச்சாட்டும் இருக்கிறது.

(முற்பகல் 11-50)

அதையெல்லாம் தவிர்ப்பதற்கு நமது பள்ளிகளில் போதுமான பணியிடங்கள் வழங்க வேண்டும். அதுமட்டுமல்ல, கைத்தொழில் கல்விக்குப் போதுமான பணியிடங்கள் சென்ற ஆண்டுகளில் கொடுத்தது உண்டு.

Part-time craft teachers were upgraded as full-time craft teachers every year and Budget allotment was made for that.

ஆனால் இந்த ஆண்டு அவ்வாறு எதுவுமில்லை. ஒரு கைத்தொழில் ஆசிரியர் பதவிகூட கொடுக்கப்பட வில்லை. அதுமட்டுமல்ல, மேல்நிலைப் பள்ளிகளிலும் ஏராளமான முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் இல்லை. தற்போதைய நிதிநிலை அறிக்கையில் 75 பணியிடங்கள் மட்டும் ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது. அது போதுமானதல்ல. சென்ற ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பள்ளிகளுக்கே போதுமான ஆசிரியர்கள் இல்லாத நிலையில் இந்த 75 பட்ட மேற்படிப்பு ஆசிரியர்கள் பதவிகளை மட்டும் ஏற்படுத்தக் கருதியுள்ளது போதுமானதல்ல. இவர்களால் என்ன செய்ய முடியும் ? எனவே அதிகமான பணியிடங்களை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்தபடியாக, கைத்தொழில் ஆசிரியர்கள் பிரச்சினை, எட்டாவது வகுப்புவரை பாடம் சொல்லிக்கொடுக்கும் கைத்தொழில் ஆசிரியர்கள் ஹையர் கிரேடு ஸ்கேல் ஆஃப் பே பெறுகிறார்கள். உயர்நிலைப் பள்ளியில் பாடம் நடத்தும் ஆசிரியர்கள் செகண்டரி கிரேடு ஸ்கேல் ஆஃப் பே வாங்குகிறார்கள். இந்த முரண்பாட்டை நீக்க வேண்டுமென்று நான் இந்த மன்றத்திற்கு வந்த நாளிலிருந்து—1975 ஆம் ஆண்டிலிருந்து—சொல்லிக் கொண்டிருக்கிறேன். அரசின் தரப்பில் 'அது ஆய்வில் இருக்கிறது, ஆய்வில் இருக்கிறது' என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்த இரண்டு பேர்களின் ஒரே அளவான படிப்பு, தகுதி, வேலை ஆகியவற்றைக் கருத்திலேகொண்டு இருவருக்கும் ஒரே ஊதிய விகிதம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இறந்துபோனால் 20,000 ரூபாய் கொடுக்கும் திட்டத்தை அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் அறிக்கையிலே கூறியுள்ளதுபோல, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பதவியேற்ற நாளான 10—2—1985-லிருந்தே கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தால் இதைச் செய்வோம் என்று சொன்ன பிறகு . . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதை முன்னமேயே சொன்னார்கள். மறுபடியும் . . .

**திரு. பா. ரா. தாமஸ் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னவர் அவர்கள் இருப்பதால், அவர்களுக்கும் தெரிய வேண்டும் என்றுதான் மறுபடியும் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கெனவே சொன்னவைகளை மறுபடியும் சொல்ல வேண்டியவனாகிறேன்.

அடுத்து, போனஸ் கொடுப்போம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆசிரியர்களுக்கு ஹவுசிங் போர்டு வேண்டும் என்று கேட்டிருக்கிறோம். அதையும் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தற்சமயம் தனியார் பள்ளி ஆசிரியர்கள் பெருத்த தொல்லைகளுக்கு உள்ளாகிறார்கள். 15 விழுக்காடு, 16 விழுக்காடு வட்டி கொடுத்துத்தான் வாங்க வேண்டியிருக்கிறது. எனவே ஆசிரியர்களுக்கு ஹவுசிங் போர்டு அவசியம் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. பா. ரா. தாமஸ்] [1985 ஏப்ரல் 8

இதிலே இன்னொன்றையும் கூற விரும்புகிறேன். 1—7—1983-லிருந்து இதுநாள்வரை எந்த அரசு ஊழியரும், ஆசிரியரும் வீடு கட்ட கடன் கோரி தங்களுடைய விண்ணப்பத்தைக் கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். புதிய வீடு கட்ட விண்ணப்பம் வாங்க முடியாத நிலை இருக்கிறது. கடன் வாங்கியவர்களில் முதல் தவணை வாங்கியவர்களுக்கு பதினெட்டு மாதங்கள் கழித்துத்தான் அடுத்த தவணை கொடுக்கிறார்கள். அதிலும் பலர் முதல் தவணை வாங்கி வீடு கட்டியவர்கள் 18 மாதங்கள் கழித்து இரண்டாவது தவணை வாங்க முடியாத நிலை இருக்கிறது. ஆகவே இவர்கள் வீடுகள் எல்லாம் பாதி பாதியிலேயே நிற்கின்றன. எனவே இந்த முறைகளை மாற்றியமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசுகூட வீடு கட்டும் திட்டத்தில் பல புதிய எளிய முறைகளைக் கொண்டு வந்திருப்பதாக அறிகிறேன். அவைகளை நாமும் பின்பற்றலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 25 நிமிடங்களாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் பல உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது.

**திரு. பா. ரா. தாமஸ் :** துணைத் தலைவர் அவர்களே, பல உறுப்பினர்கள் குறுக்கிட்டதால் நேரமாகிவிட்டது. இன்னும் ஐந்து நிமிடங்களில் முடித்துக்கொள்கிறேன்.

தொழில் வரியை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இன்று எங்களுடைய இயக்கத்தினுடைய தலைவராக இருக்கிற மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. மயில்சாமி அவர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். நாங்கள் முன்வைத்துள்ள கோரிக்கைகளைப்பற்றி அவைக்குத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். பல கோரிக்கைகள் பல ஆண்டுகளாகத் தேக்கம் அடைந்திருப்பதால், வேறு வழியில்லை என்ற காரணத்தால், அரசினுடைய முழுமையான கவனத்தையும் அனுதாபத்தையும் பெற வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் இத்தகைய போராட்டத்தை எங்கள் இயக்கம் முடிவு செய்து நடத்திக்கொண்டு வருகிறது. தற்காலிக பட்டதாரி ஆசிரியர்கள், முதநிலைப் பட்டதாரி ஆசிரியர்கள், தமிழாசிரியர்கள் 8 ஆண்டு காலம், 9 ஆண்டு காலம் பணியாற்றியவர்கள் பணி இன்னும் வரன்முறைப்படுத்தப் படாமல் இருக்கிறார்கள். இதுகுறித்து அன்றைக்கு அவையில் கவன



1985 ஏப்ரல் 8] [திரு. பா. ரா. தாமஸ்]

ஈர்ப்புத் தீர்மானம் மூலம் கேட்டோம். தேர்வாணைக் குழு யாரை எடுப்பது, எப்படி எடுப்பது என்று திட்டவட்டமான முடிவு எடுக்காமல் பலரை வேண்டாம் என்று அனுப்பி விடுகிறது. எட்டு ஆண்டு காலம், 9 ஆண்டு காலம் ஊதிய உயர்வு பெற்றவர்கள், தாயாகி, தந்தையாகி, பேரப் பிள்ளைகூட பெற்றவர்களை, வயது முதிர்ந்தவர்களை வெளியேறச் சொல்கிறது. இவ்வாறு வெளியே அனுப்புவது சரியாக இருக்காது. அவர்களையெல்லாம் பணி வரன் முறை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

அடுத்து, தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு நேரடியாக ஊதியம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். அவர்களுக்கு வங்கிக் காசோலை மூலமாக ஊதியம் வழங்கப்பட வேண்டும். இடைத்தரகர்கள் வேண்டாம். இப்போது இருக்கும் முறையை நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, அவர்களுக்கும் ஒரு வழி விடுப்புப் பயணச் சலுகை வேண்டும். 1983 ஆம் ஆண்டிலிருந்து அரசு ஊழியர்களுக்குக் கிடைத்தது போல, தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் மாநகராட்சிப் பள்ளி ஆசிரியர்களுக்கும், நகராட்சிப் பள்ளி ஆசிரியர்களுக்கும், அங்கே பணியாற்றும் அலுவலர்களுக்கும் இது வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏன் இந்தப் பெருத்த முரண்பாடு ? இந்த முரண்பாட்டைக் களைய வேண்டும்.

(பிற்பகல் 11-55)

அதுபோல சென்ற ஆண்டு 1—4—1984-லிருந்து ஓய்வு பெறக்கூடிய ஆசிரியர்களுக்கு 5 ஆயிரம் ரூபாய். அவர்கள் போடவேண்டியது மாதம் 20 ரூபாய். அந்தத் தொகையோடு அரசாங்கம் 5 ஆயிரம் ரூபாய் கொடுத்து 10 ஆயிரம் வரை தரலாம் அல்லது ஆசிரியர்கள் போட்ட தொகை கூடுதலாக 40 ரூபாய், 60 ரூபாய் இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்குப் போட்டிருந்தால்—அரசாங்கம் 5 ஆயிரம் ரூபாய் கொடுத்து, 5,040 அல்லது 5,060 கொடுப்போம் என்று நாம் திட்டம் வகுத்துக் கொடுத்தோம். எல்லோரும் அது தங்களுக்கும் வருமென்று எதிர்பார்த்தார்கள். ஆனால் என்ன ஆகியிருக்கிறது ? சென்னை மாநகராட்சியிலே 1—8—1984-லிருந்து கொடுத்து விட்டார்கள். மாநிலம் முழுவதும் 1—4—1984-லிருந்து ஓய்வு பெற்றால் ரூ. 10 ஆயிரம் கொடுக்கும் திட்டம் அமல். சென்னை மாநகராட்சியிலே 1—8—1984-லிருந்து அமல். மதுரை மாநகராட்சியிலே அது இன்னும் கிடையாது. பல நகராட்சிகளிலே கிடையாது. தனியார்

பள்ளிகளுக்குக் கிடையாது. இது பெருத்த முரண்பாடு. இதனாலே சங்கங்களை உடைத்து சின்னாபின்னமாகக்கூடிய நிலைமை கூட இருக்கிறது. மாநகராட்சியிலே பெருத்த பிரச்சினை இருக்கிறது. அதை யெல்லாம் நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். டி.என்.பி.எஸ்.சி. தேர்வு முறையை மாற்றி கல்வித் துறைக்கென்று தேர்வு செய்யக்கூடிய உரிமையை வழங்க வேண்டும். உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளிலே வேலை நாட்களை 220 நாளாக உயர்த்தினார்கள். நாங்கள் கோரிக்கை வைத்தோம். அரசுக்கு நன்றி தெரிவிக்கிறோம். அரசினர் 220 நாட்களை 200 நாட்களாகக் குறைத்திருக்கிறார்கள். மிக்க நன்றி. ஆனால் இப்போது என்ன செய்திருக்கிறார்கள்? 200 நாட்களை 220 நாட்களாக —20 நாட்கள் அதிகமாக. அதாவது ஒரு நாளைக்கு 5 மணி நேரம் என்று கணக்கிட்டு, நாறு மணி நேரம், 200 நாட்களுக்கு ஒரு நாளுக்கு ½ மணி நேரம் கூட்டியிருக்கிறார்கள். பாட வேளை கையண்டிபிக்காக இல்லை. கல்விக் கூடங்களிலே பணியாற்றக் கூடிய ஆசிரியர்களை அழைத்து, தலைவர்களை அழைத்துக் கலந்துபேசி ஒரு முடிவு செய்தால், நன்றாக இருக்கும். 5 மணி நேரம் வேலை செய்யக்கூடிய பிள்ளை, 5½ மணி நேரம் வேலை செய்யும்படி மாற்றியிருக்கிறார்கள். காலையிலே 45 நிமிட வேலை, 4 பாடவேளை. பிற்பகலிலே 2 பாடவேளை, 40 நிமிடம். அடுத்து 2 பாடவேளை, 35 நிமிடம், எவ்வாறு 35 நிமிடத்திலே ஒரு பாட வேளையை முடிக்க முடியும்? கல்வித் துறையிலே மன நிலைக்கு ஏற்றபடி இது சற்றும் கூட மாணவர்களாலே ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை. இதை 5 மணி நேரமாக மாற்ற வேண்டும் என்ற கருத்தைக் கூறிக்கொள்கிறேன். அதோடு 11 வேலை நாட்களுக்கு 1 நாள் ஈட்டிய விடுப்பு என்ற சலுகையை வழங்க வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். 1–6–1981-லிருந்து ஆசிரியர் பயிற்சிக்கு ஒரு ஊதிய உயர்வு வழங்கியிருக்கிறோம். அதுபோல எல்லாப் பிரிவு ஆசிரியர் பயிற்சிக்கும் ஊதிய உயர்வு வழங்க வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன். 'ஏ', 'பி' இணைப்பை, 1–4–1970-ஐ அடிப்படையாகக் கொண்டு அமல்படுத்த வேண்டும். 1978ஐ அடிப்படையாகக் கொண்டு அமல்படுத்தக் கூடாது என்ற கருத்தைக் கூறிக்கொள்கிறேன்.

உட்படுத்தப்பட்ட—இன்டக்டெட்—டீச்சர்களுக்கு விட்டுப்போன பாடங்களாகிய பொருளாதாரம், மனையியல், நிலவியல் பாடங்களுக்கும் பயிற்சி கொடுக்கப்பட்டு அவர்களுக்கு முதுகலைப் பட்டதாரி உரிமை கொடுக்கப்பட வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்துகிறேன். தலைமை ஆசிரியர் பதவிக்கு, பி.டி. பட்டம் பெற்று 10 ஆண்டுகள் ஆனால்தான் மேல்நிலைப் பள்ளியிலே





தலைமை ஆசிரியராகலாம் என்ற கருத்தை அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான்காம் ஊதியக் குழுவின் பரிந்துரை 1–6–1984-லிருந்து அமல்படுத்தப்பட வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். மாதந்தோறும் 500 ரூபாய் தொடர்ந்து அது வரும் வரையிலும் இடைக்கால நிவாரணமாக வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பேச வாய்ப்பு கொடுத்ததற்கு நன்றி கூறி, முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: உறுப்பினர்களுக்கு 1 மணிக்குக் கூட்டம் முடிய வேண்டும். இன்னும் இரண்டு உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். எனவே உறுப்பினர் அவர்கள் விரைவாக முடிக்க வேண்டும். முன்னாடியே ஒன்று சொல்ல விரும்புகிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் மூலமாக அவை முன்னவர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள். இந்தக் கூட்டம், மேலவைக் கூட்டம் ரொம்பக் குறைந்த நாள் தான் நடக்கிறது. இருக்கிற உறுப்பினர்கள் ரொம்பக் குறைவு. அதனாலே இந்தக் கூட்டத்தை நடத்த அதிலேயும் ரொம்பக் கொஞ்ச நாள் தான் நடக்கிறது. முடியவில்லை என்றால், மத்தியானமாவது வைத்து அதிகப்படியான உறுப்பினர்கள் பேசுவதற்கு வாய்ப்புக்கள் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

துணைத் தலைவர் அவர்களே, 1985-86 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின் மீது சில கருத்துக்களை நான் சொல்வதற்கு விழைகிறேன். ஆசிரியர்கள் சார்பிலேயும், இந்தக் கருத்துக்களை அரசு வைமியர்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலேயும் நான் இங்கே எடுத்துக் கூறுவதற்கு வாய்ப்புக் கொடுத்ததற்காக உங்களுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாக நிதிநிலை அறிக்கை எல்லாத் தரப்பினராலும் பாராட்டப்படக் கூடியதாக அமைவது என்பது கடினம் தான். என்றாலும் பெரும்பாலான மக்களாலே பாராட்டப்படக் கூடிய அளவுக்கு அது அமைக்கப்பட வேண்டும். பொதுவாக ஒரு காலத்திலே நம்முடைய நாட்டினுடைய வருமானம்—நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் சென்ற கூட்டத்திலே பேசும்போது சொன்னார்கள்—10 கோடி ரூபாய்தான். அதிலே 5 கோடி ரூபாய் நில வருமானத்திலே இருந்து நில வரியாக வரும். அதை வைத்துக்கொண்டு அந்தக் காலத்திலே இந்த மாநில ஆட்சி நடை பெற்றது என்று கட்டிக் காட்டினார்கள். ரூ. 10 கோடியிலே தொடங்கிய

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1985 ஏப்ரல் 8

(நண்பகல் 12-00)

அந்த வருமானம், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே ரூ. 500 கோடியாக உயர்ந்திருக்கிறது. அந்த 500 கோடி ரூபாயிலே அந்த நேரத்திலே செய்யப்பட்ட நலப்பணிகள் ஏராளம், ஏராளம் என்று அனைவரும் பாராட்டத்தக்க அளவில் இருந்தது. இன்றையதினம் வருவாய் 2,368.46 கோடி. ஏறத்தாழ 5 மடங்குக்கு மேல், 6 மடங்கு அளவுக்கு வருவாய் பெருகியிருந்தாலும், இந்த நாட்டிலே அன்றைக்கு இருந்த அளவுக்கு வசதிகள் செய்யப்பட்டு இருக்கின்றனவா? போதிய சாலைகள் இருக்கின்றனவா? போதிய அளவுக்கு சாலைகள் பாராமரிக்கப்படுகின்றனவா என்று பார்த்தால், குறிப்பாக தஞ்சை மாவட்டத்திலே வந்து இங்கே இருக்கின்ற அமைச்சர்கள் எல்லாம் பயணம் செய்தால், அவர்கள் உடல் வலியில்லாமல் திரும்ப முடியாது. அந்த அளவுக்கு அங்கே இருக்கின்ற பாதைகள் மிக மிக மோசமாக இருக்கின்றன.

அதுபோல பாலங்கள் ஏதாவது உண்டா என்றால், என்னுடைய பேரூராட்சியிலே 26 மரப்பாலங்கள் கட்ட வேண்டும் என்று ஏற்கெனவே இருந்த வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடத்திலே நானே மனுஜர் கொடுத்து, அவர்கள் சிபாரிசு செய்து, அதற்கேகூட பணம் இல்லை என்று சொல்லி, அதைக் கட்டாமலேயே, மரப்பாலங்கள் கட்ட முடியாத அளவிலேதான் இருக்கின்றன. அந்த அளவுக்கு நலப் பணிகள் நடைபெறுவது இல்லை. மின் இணைப்பு அந்த அளவுக்கு உண்டா என்றால் இல்லை. வருவாய் வந்திருக்கின்ற அளவுக்குப் புதிய தொழிற்சாலைகள் அதிகரித்திருக்கின்றனவா என்றால் இல்லை. மூடிய தொழிற்சாலைகள் திறக்கப்பட்டிருக்கின்றனவா, முழுவதும் திறக்கப்பட்டிருக்கின்றனவா என்று சொன்னால் இல்லை. பள்ளிக்கூடங்கள் எந்த அளவுக்குக் கட்டியிருக்கின்றார்கள் என்று பார்த்தால், இல்லை இல்லை என்றுதான் சொல்லவேண்டியிருக்கின்றதே தவிர, குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அளவுக்கு எதுவும் இல்லை. ஆகவே ஆசிரியர்கள் தாப்பிலே நின்று போகின்றபோது, அதைப் பார்க்கின்றபோது மிகுந்த வருத்தத்தை தருகிறது. நாட்டினுடைய வருமானத்திலே 25 விழுக்காட்டிற்குக் குறையாமல் கல்விக்காக செலவழிக்கின்ற நிலை ஏற்பட்டால்தான், நாட்டிலே நல்ல ஆட்சி நிலையும், நல்ல மலர்ச்சி நிலையும் தொழிற்சாலைகள் பெருகும். அறிவு வளரும், அதற்குப் பின்னாலே ஆக்கபூர்வமான செயல்கள் நாட்டிலே நடைபெறும். பிற நாடுகள் நம்மை பார்த்து பாராட்டத்தக்க அளவுக்கு இந்த நாடும் முன்னேறும். ஆனா



1985 ஏப்ரல் 8] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

கல்வித் துறைக்கு ஒதுக்கியிருக்கின்ற தொகை நாளுக்கு நாள் குறைந்திருக்கிறது. அது மேலும் குறைந்துகொண்டே வருகிறது. இன்றைக்கு ஒதுக்கியிருக்கின்ற தொகை 20 சதவிகிதம் தான். இதிலேகூட, முன்னால் பேசிய உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டியது போல, ஆசிரியர்களுக்குப் பணியிடங்கள் ஒதுக்கப்பட்டிருப்பதை எடுத்துக்கொண்டால், திருப்திப் படத்தக்க அளவில் இல்லை. 1983-84-லே 7,750 ஆசிரியர்களின் புதிய இடங்கள் ஒதுக்கப்பட்டன. 1984-85-ல் 1,750 பேர்களுக்குத் தான் இடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டிருப்பதோ மிகச் சாதாரணமான அளவு. அதாவது 850 இடங்கள்தான். இதிலேயிருந்து கல்வியில் இந்த அரசு எந்த அளவுக்கு அலட்சியம் காட்டியிருக்கின்றது என்பது தெரிகிறது. கல்விக்கூடங்கள் நடத்துவதிலே அரசு விருப்பம் காட்டவில்லை. கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக இருக்கிறது. மூன்றாம் ஆண்டு 7,750 என்று இருந்தது. முந்தைய நிதி ஆண்டிலே 1,750 ஆகி இந்த ஆண்டு மட்டும் ஆயிரத்திற்கும் குறைவாக 850 பேர்கள்தான் என்றால், கழுதை தேய்ந்து கட்டெறும்பாகி அதுவும் சிற்றெறும்பாகிவிட்டது. அந்த அளவுக்குக் குறைக்கப்பட்டிருக்கிறது. இடை நிலை ஆசிரியர்கள் பணியிடங்கள் 15,000 காலியாக இருக்கின்றன, நாட்டிலே. ஆனால் இங்கே ஒதுக்கப்பட்டிருப்பது, 500 இடங்கள்தான். 52 கல்வி மாவட்டங்கள் இருக்கின்றன ஒதுக்கப்பட்டிருக்கின்ற உடல் கல்வி இயக்குநர்கள் 50 பேர்கள். ஒரு கல்வி மாவட்டத்திற்கு ஒருவர் என்று கூட இல்லை. அந்த அளவிற்கு மிகக் குறைவாக ஒதுக்கப்பட்டிருக்கின்றது. 150 பட்டதாரி ஆசிரியர்களை ஒதுக்கியிருக்கின்றார்கள். 75 முதுகலை பட்டதாரி ஆசிரியர்களை ஒதுக்கியிருக்கின்றார்கள். 75 தமிழாசிரியர்களை ஒதுக்கியிருக்கின்றார்கள். இந்த பட்ஜெட்டைப் பார்த்தால், இது தமிழகத்தினுடைய பட்ஜெட்டா? பாண்டிச்சேரி அல்லது கோவா போன்ற சிறிய மாநிலத்தின் பட்ஜெட்டா என்பதை என்னாலேயே புரிந்துகொள்ள முடியவில்லை. மிகப் பெரிய அளவுக்குப் பரந்து, விரிந்து இருக்கின்ற ஒரு மாநிலம். பெரிய ஜனத்தொகையைக் கொண்டிருக்கின்ற ஒரு மாநிலம், மிக அதிகமான அளவு கல்வி நிலையங்களை நாம் திறந்திருக்கிறோம் என்று பெருமை பேசிக் கொண்டிருக்கக்கூடிய ஒரு மாநிலத்தில், ஒதுக்கப்பட்டிருக்கின்ற ஆசிரியர்களுக்கான இடங்கள் 850 தான் என்றால் என்ன பொருள்? நாம் சத்திரம் நடத்தினால் போதுமா? கல்விச்சாலை நடத்த வேண்டாமா? இதைத்தான் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே கல்விச் சாலையிலே தரமான கல்வி வளர வேண்டும். மாணவர்கள் சேர்க்கை அதற்கேற்ப ஆசிரியர்களின் ஒதுக்கீடு இல்லை. அதே போலவே 6-வது திட்டக் காலத்திலே 13.67 இலட்சம். 1984-85-லே மட்டும் 2.98 இலட்சம். இத்தனை பேர்களுக்கும் சொல்லிக்கொடுக்கின்ற

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1985 ஏப்ரல் 8

ஆசிரியர்கள் எத்தனை பேர்கள்? அதைத்தான் நான் உங்களைக் கேட்கிறேன். ஆசிரியர்கள் மாடு மேய்க்க வேண்டுமா? பன்றியை சந்தையாக வைத்திருக்க வேண்டுமா? உண்மையிலேயே கல்வித் தரம் வளர வேண்டாமா? அதிலே அக்கறை இருக்கிறதா என்று நான் அறிய விரும்புகிறேன். ஆகவே ஆசிரியர்களின் ஒதுக்கீடு போதவே போதாது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதைப் போலவே மற்றொரு அவல நிலைமையைக் குறிப்பிட்டுக்காட்ட விரும்புகிறேன். கல்வி அமைச்சர் அவர்கள் இங்கே இல்லாவிட்டாலும், நம்முடைய மாண்புமிகு முன்னவர் அவர்கள் இருக்கின்றார்கள். கல்வித் துறை பற்றிப் பேசும்போது, அதைக் கல்வித் துறையினர் கவனித்துக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் பார்த்துக் கொள்வார்கள் என்று கூறிவிட்டு இங்கே அமைச்சர்கள் பதில் பேசும்போது அரசியல் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை மட்டும் வைத்து அதற்கு பதில் சொல்லிவிட்டுப் போய் விடுகின்றார்கள். அந்த வழக்கம்தான் இருக்கின்றது. நான் கேட்கின்றவைகளுக்கும் பதில் சொல்ல வேண்டும். நாங்கள் எல்லாம் ஒன்றைப் பற்றிப் பேசுகின்றோம் என்றால், எங்களுக்கு அது குறித்து ஒரு நல்ல பதில் கிடைக்க வேண்டும் என்ற

(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம்)

(பிற்பகல் 12-05)

எண்ணத்தில்தான் பேசுகிறேன். 'அவர்கள் பார்த்துக் கொள்வார்கள். இவர்கள் பார்த்துக்கொள்வார்கள்' என்று சொல்லிவிட்டால், பயனிராது. இங்கே ஒரு பெரிய தப்பு நடக்கிறது. இந்த ஆண்டு 64 பயிற்சிப் பள்ளிகள், அங்கீகாரம் பெறாத பயிற்சிப் பள்ளிகள், பெட்டிக் கடை வைப்பதுபோல, திறந்திருக்கிறார்கள். அவர்களுக்கு அங்கீகாரம் அளிக்கவில்லை. இருந்தாலும் 6 பள்ளிகளுக்கு அங்கீகாரம் அளித்துள்ளதாக அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. தேர்தல் காலத்திலே அந்த ஆணை வெளியிடப்பட்டுள்ளது. 6 பள்ளிகளுக்கு—அதாவது 3 பேர்கள் நடத்தும் 6 பள்ளிகளுக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. மற்ற பள்ளிகளுக்கு அங்கீகாரம் அளிக்கப்படவில்லை, அரசாணை வெளியிடப்படவில்லை. இந்தப் பள்ளிகளிலே 2,240 பேர்கள் படிக்கிறார்கள். இன்றைக்கு ஆசிரியர்கள் பற்றாக்குறை இருக்கிறது. மாணவர்கள் என்ன தவறு செய்தார்கள்? அவர்கள் தேர்வு எழுத வேண்டும். இந்தக் கல்விச் சாலைகள் முன்பே மூடப்பட்டிருந்தால், அவர்கள் அங்கே படித்திருக்க மாட்டார்கள். ஒருசில பள்ளிகளுக்குத் தேர்வு எழுத அனுமதி தருவதால், அப்படி மற்றவர்களும் அங்கீகாரம் வாங்க முடியுமென்று மாணவர்கள் நம்பி, அங்கே சேர்ந்தார்கள்



1985 ஏப்ரல் 8] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

அவர்கள் பெருந்தொகை லஞ்சம் கொடுத்து சேர்ந்திருக்கிறார்கள். ஆனால்
இன்றைக்கு 6 பள்ளிகளுக்கான அரசாணை வெளியிடப்பட்டிருக்கிறது. அந்த
6 பள்ளிகளிலே உள்ளவர்களுக்கு அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது. அவர்
களை பக்கத்திலுள்ள பள்ளியிலே தேர்வு எழுத அனுமதிக்கலாமென்று சொல்லி
யிருக்கிறார்கள். அந்த ஆணை எங்கும் கிடைக்கவில்லை. மிகுந்த
ஆராய்ச்சி செய்து, எடுத்து வரும் அளவுக்கு, இரகசியமான ஆணை அது.
அதிலே சில நிபந்தனைகள். "இந்த ஆண்டுக்கு அனுமதி தாருங்கள் ,பிறகு
நாங்கள் மூடிவிடுகிறோம்" என்று அவர்கள் கேட்டு, 6 பள்ளிகளுக்கு
அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த 6 பள்ளிகளின் நிர்வாகிகள் என்ன
செலவு செய்தார்களோ, யாருக்கு எவ்வளவு தந்தார்களோ தெரியவில்லை.
அவர்களோ அந்த அரசாணையில் இட்டுள்ள நிபந்தனையை நீக்கிவிட்டு, அதே
அழைத்து, எங்களுக்கு லஞ்சம் கொடுத்து எங்கள் மூலம் தேர்வு எழுதுங்கள்
என்று சொல்லுகிறார்கள். இந்த அளவுக்குக் கேவலமான நிலை இன்றைக்கு
இருக்கிறது. கல்வித் துறைக்கு இது அவக்கேடு என்று குறிப்பிட்டுக் காட்ட
விரும்புகிறேன். எனவே அந்த 64 பள்ளிகளிலே படிக்கும் அத்தனை பேர்
களும் தேர்வு எழுத அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளிக் கட்டிடங்களுக்கு ஒரு கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதாகச்
சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு கோடி—இதை நீட்டி, வேண்டுமானால்,
'ஒரு கோ . . டி' என்று சொல்லலாம். 1977-78-லிருந்து 1984-85
முடிய பள்ளிக் கட்டிடங்களுக்காக ஒதுக்கிய தொகை 22 கோடி ரூபாய்.
அதாவது ஓராண்டுக்கு 3.17 கோடி ரூபாய் ஏற்கெனவே ஒதுக்கப்பட்டது.
ஆனால் இந்த ஆண்டு மேல்நிலைப் பள்ளிகளைத் திறந்துவிட்டோம். உயர்
நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்திவிட்டோம், இலட்சக்
கணக்கான பிள்ளைகளைச் சேர்த்துவிட்டோம் என்று சொல்லுகின்ற நேரத்
தில், ஒரு கோடி ரூபாயை கட்டிடங்களுக்காக ஒதுக்கியிருக்கிறோம். அந்தப்
பணத்தைக் கொண்டு எத்தனை கட்டிடங்களைக் கட்ட முடியும்? 2, 2
வகுப்பறைகளாக 100 இடங்களில் கட்டலாம். எனவே பள்ளிக் கட்டிடங்
களுக்காக ஒதுக்கியுள்ள தொகை போதுமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க
வேண்டும். கல்வித் துறையிலே எந்த அளவுக்கு அரசுக்கு நாட்டம்
இல்லை என்பதற்கு இதுவும் ஒரு சான்று.

அடுத்து, முதியோர் கல்வி. இன்றைக்கு இரவுப் பள்ளிகள் இராப் பள்ளி
களாக இருக்கின்றன. மஸ்டர் ரோல் ஊழல் போல் மிகப் பெரிய ஊழல்
எல்லாம் அங்கே நடக்கிறது. அப்படி நடந்து கொண்டிருப்பதை அரசு

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1985 ஏப்ரல் 8

சரிவர கவனிக்கவில்லை. பெயரளவுக்கு அவற்றை நடத்துவதாகக் குறிப்பு தரப்படுகிறது. அதை செம்மைப்படுத்த வேண்டும். மேலும் அங்கே சூப்பர் வைசர்களாகப் பணியாற்ற பி.டி. ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு 600 ரூபாய் கன்சாலிடேட்டட் பே என்று கொடுத்தார்கள். இப்போது ஐந்தாண்டுத் திட்டம் முடிந்து விட்டதால், அவர்களையெல்லாம் வீட்டுக்கு அனுப்பும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அவர்களையெல்லாம் ரெகுலர் பள்ளிகளிலே 'அப்சார்ப்' செய்து, ஊதியத்தை ஏனையோர்க்கு வழங்குவதுபோல வழங்கி, அவர்களுக்கு நிரந்தர வாழ்வு அளிக்க அரசு முற்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, படித்தவர்களுக்கு வேலையில்லை, எனவே தொழில் நுணுக்கக் கல்வி அளிக்கப்பட வேண்டுமென்பதற்காக 53 பல் தொழில் நுட்பப் பயிலகங்களையும், 17 பொறியியல் கல்லூரிகளையும் திறந்துள்ளதாக நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இவையெல்லாம் சுய நிதித் திட்ட அடிப்படையிலே ஆரம்பிக்கப்பட்டவைகள். சூது, வாது, லஞ்சம், கொள்ளை அத்தனைக்கும் இன்று அவைகள்தான் இருப்பிடங்கள். இப்படி பாலிடெக்னிக்குகள், பொறியியல் கல்லூரிகளைத் திறந்திருக்கிறார்களே தவிர, அங்கே பயிலும் மாணவர்களுக்கு வேலை அளிக்க தொழிற் பேட்டைகள், தொழிற்சாலைகள் எங்கே திறந்திருக்கிறார்கள் என்பதை

(பிற்பகல் 12-10)

அறிய விரும்புகிறேன். வருங்காலத்தில் அவர்கள் எல்லாம் வேலையில்லாமல் தெருத் தெருவாக அலையக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. அப்பேர்ப்பட்ட நிலைமை ஏற்படாமலிருக்கும் வகையில் அரசு நடவடிக்கை இப்போதிருந்தே எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, செயற்கை மழை வரவழைப்பதற்காக வேண்டி 43 இலட்சம் ரூபாய் செலவில் ரேடார், விமானம் போன்றவற்றை வாங்கியிருப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். நான் கேட்கிறேன், இப்படி வாங்கியிருப்பதைக் கொண்டு உள்ளபடியே நன்றாகச் செயல்படுத்துகிறீர்களா? இது ஒருபுறம் இருக்க. மழை பெய்யவில்லையென்றால் பூஜையும் செய்கிறீர்கள். ஏதோ கூட குன்னக்குடி வைத்தியநாதனை மாண்புமிகு முன்னாள் அமைச்சர் திரு இராகவானந்தம் அழைத்து தண்ணீரில் நின்றபடி வயலின் வாசித்து இசைத் தவம் செய்ததாகச் செய்தி வந்தது. இப்படி ஒருபுறம் செய்துவிட்டு செயற்கை மழை பெய்விப்பதற்காக 43 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதாகவும் சொல்கிறீர்கள். அப்படி என்றால் இந்த அரசுக்கு எதில் நம்பிக்கை என்று அறிய



1985 ஏப்ரல் 8] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

விரும்புகிறேன். இவ்வளவு பெரிய அளவில் செலவிட்டு கருவிகள் வாங்கப்பட்டிருக்கின்றனவே, அந்த விஞ்ஞான சாதனைகள் உண்மையாகவே அதற்காக அவை வாங்கப்பட்டிருக்கின்றவா என்பதை திட்டவட்டமாகச் சொல்ல வேண்டும், அல்லது கோயிலில் மழைக்காக பூஜை செய்வதுதான் எங்கள் கொள்கை என்றாவது கூறி விடுங்கள். இதிலேயும் இரட்டை வேடம் போடாதீர்கள்.

அடுத்து, அரசு ஊழியர், ஆசிரியர் நலன் கருதி நான்காவது ஊதியக் குழுவின் அறிக்கையை அரசு 13-4-1985-ல் புத்தாண்டில் பெற இருக்கிறது என்பது மகிழ்ச்சியான செய்தி என்று நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. ஊதியக் குழுவின் அறிக்கையை நீங்கள் மகிழ்ச்சியா? அக்குழுவிடமிருந்து அதைப் பெறுவதே அரிய சாதனையா? ஊதியக் குழுவின் அறிக்கை அரசால் பெறப்பட்டிருக்கிறது, அதில் இன்னின்ன பரிந்துரைகளை அரசு ஏற்று அமுல்படுத்தும் என்று திட்டவட்டமாக புத்தாண்டு அன்று சொன்னால், அது மகிழ்ச்சியளிக்கும். ஆனால் இங்கே ஊதியக் குழுவின் அறிக்கையைப் பெறுவதையே மகிழ்ச்சியான செய்தி என்று சொல்லியிருப்பதை தாங்கள் எப்படி மகிழ்ச்சியான செய்தி என்று ஏற்றுக்கொள்ள முடியும்? அதை விரைவில் பெற்று இன்னின்ன பரிந்துரைகளை ஏற்றிருக்கிறோம், இன்ன தேதியிலிருந்து அமுலுக்கு வரும் என்று அறிவித்தால்தான் அது மகிழ்ச்சிக்குரியதாக இருக்கும். அப்படிப்பட்ட நிலைமை இல்லையாதலால், இதை எப்படி மகிழ்ச்சிக்குரியதாக தாங்கள் ஏற்றுக்கொள்ள முடியும்?

அதுபோல் குடும்ப நலத் திட்டத்தின்கீழ் ரூ. 10 ஆயிரம் என்று இருந்ததை ரூ. 20 ஆயிரம் என்று உயர்த்தியிருப்பதாக அறிவித்திருக்கிறீர்கள். இது ஏற்கெனவே தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்டதுதான். தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்ட ஒன்றைத்தான் இப்போதும் அறிவித்திருக்கிறீர்கள். உரிய திட்டம் எங்கே உரிய ஆணை எங்கே? "ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு 1,500 ரூபாய் என்று இருந்த உச்சவரம்பை எடுத்து விட்டோம்" என்று இதையும் ஒரு சாதனையாகச் சொல்லியிருக்கிறீர்கள். கெசட்டட் பதவியில் இருப்பவர்களுக்கு, டைரக்டர்களைப் போல் இருப்பவர்களுக்கு மட்டும் தான் இதனால் பலன் ஏற்படும். அடிமட்டத்தில் இருப்பவர்களுக்கு இதனால் என்ன பலன் ஏற்படப் போகிறது? அடிமட்டத்தில் இருக்கிற தொடக்கப் பள்ளி ஆசிரியர்களும், எழுத்தர்களும், கடைநிலை ஊழியர்களும் இன்றைக்கு 1,500 ரூபாய் ஓய்வூதியம் வாங்குகிறார்களா- மேல் மட்டத்தில் இருக்கிற அதிகாரிகளுக்கு நன்மை செய்கின்ற அரசாக இவ்வரசு இருக்கிறது



NSC.214.1-3'1

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1985 ஏப்ரல் 8

என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு குறைந்தபட்ச ஓய்வூதியம் 125 ரூபாய் என்று இருப்பதை 300 ரூபாயாக ஆக்க வேண்டு மென்று கேட்கிறோம் அதைச் செய்யவில்லை. ஆனால் மேல்மட்டத்துல் இருப்பவர்களுக்காக ஓய்வூதிய உச்சவரம்பு நீக்கப்பட்டிருக்கிறது. அதை அடுத்து குறைந்தபட்ச ஓய்வூதியம் 300 ரூபாய் என்று அறிவித்தால், உள்ள படியே மகிழ்ச்சியடைவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பணிக் கொடையைப் பொறுத்தவரையில், அதிகபட்சம் ரூ. 36 ஆயிரம் என்று இருந்ததை ரூ. 50 ஆயிரமாக உயர்த்தியிருக்கிறீர்கள். அதன் மூலம் எந்த ஒரு தொடக்கப் பள்ளி ஆசிரியருக்கோ, ஏவலருக்கோ, எழுத்தருக்கோ, உதவியாளருக்கோ பலன் ஏற்படப் போவதில்லை. செயலாளர் பதவிக்கு சமமாக இருப்பவர்களுக்குத் தான் இதனால் பயன் ஏற்படும். செயலாளர் பதவியில் இருப்பவர் மூலம் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டிருப்பதால் அவர்களாகவே உங்களை ஏமாற்றி அதிகமாக அவர்கள் எடுத்துக் கொண்டார்களோ என்று ஐயப்பாடு கூட எங்களுக்கு இருக்கிறது. உயர் மட்டத்தில் உள்ளவர்களுக்கு அளிக்கப்படும் சலுகைகள் கீழ்மட்டத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு இல்லை. இதன்மூலம் எந்த ஒரு பலனும் கீழ்மட்டத்தில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் அரசு ஊழியர்களுக்கும் இல்லை. அடிமட்டத்திலிருப்பவர்களுக்கு உள்ளபடியே பெரிய நாமம் இந்த பட்ஜெட்டில் போடப்பட்டிருக்கிறது. அதைத் தவிர வேறு எதுவும் இந்த நிதிநிலை அறிக்கையில் கூறுவதற்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேர்தல் அறிக்கையில் சொன்னதுபோல், போனஸ் அளிக்கப்படவில்லை. இருவழி பயணச் சலுகைபற்றி எதுவும் இல்லை. தொழில் வரியை ரத்து செய்வதுபற்றி ஒன்றும் சொல்லவில்லை. எத்தனையோ ஆயிரக்கணக்கான ஆசிரியர்களுடைய பணி இன்னும் நிரந்தரம் செய்யப்படவில்லை. அவர்களைப்பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை. இப்படிப்பட்ட நிலையில் இந்த அறிக்கையில் அரசு ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் என்ன இருக்கிறது என்று நான் கேட்க விரும்புகிறேன். அவர்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய அளவுக்கு மகிழ்ச்சியடையக்கூடிய அளவுக்கு ஒன்றுமே இல்லை, இல்லை.

மற்றொன்றையும் நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். சென்ற முறை பேசும்போது கூட, நான் ஒரு வேண்டுகோள் விடுத்தேன். "இந்த ஆண்டு ஆசிரியர்களை மாறுதல் செய்யத் தேவையில்லை, அதற்கு தடை விதியுங்கள்" என்று சொன்னேன். தேர்தல் காலத்தில் ஏற்பட்ட கசப்புணர்வின் காரணமாக, ஆளும் கட்சி தரப்பினர் மாற்றுக் கட்சி தரப்பினர் என்று எண்ணி பலரை பழி வாங்கி விடுகிறார்



1985 ஏப்ரல் 8] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

கள் என்று சொன்னேன். மேலும் இப்படி 'டிரான்ஸ்பர்' செய்வதால், அரசுக்கும் இதற்காக நிதி செலவாகிறது. தேவையில்லாமல் 'டிரான்ஸ்பர்' செய்து விடுகிறார்கள். வத்திராயிருப்பில் அம்மாதிரி ஒரு நிலை. மாவட்டம் விட்டு மாவட்டமே அங்கே 'டிரான்ஸ்பர்' செய்யப்படுகிறது. அதுபோல் வேல்பாறையில் டிரான்ஸ்பர் செய்யப்படுகிறது. ஆண்டி மடத்தில் ஆசிரியர் தாக்கப்படக் கூடிய நிலை காணப்படுகிறது. நான் இங்கே ஏற்கெனவே அது பற்றிப் பேசியிருக்கிறேன். மண்டபத்தில் 1985 பிப்ரவரியில் 21 ஆசிரியர்கள் மாறுதல் செய்யப்பட்டார்கள். மண்டபம் ஒன்றியத்தில் பிப்ரவரியில் 21

(பிற்பகல் 12-15)

ஆசிரியர்கள், மார்ச் மாதத்தில் 27 ஆசிரியர்கள் மாற்றப்பட்டார்கள். இப்படி மாதாமாதம் ஆசிரியர்கள் மாற்றங்கள் நடைபெறுகின்றன. மாதந்தோறும் 21, 27 என்று ஆசிரியர்கள் மாற்றப்படுகிறார்கள். ஆண்டின் நடுவிலும் ஆண்டின் இறுதியிலும் ஆசிரியர்கள் மாற்றப்படக்கூடாது என்று அரசாணையே இருக்கிறது. ஆனாலும் அந்தந்தப் பகுதியில் இருக்கிற செல்வாக்கு மிக்கவர்கள், கட்சிக்காரர்களாக அதிகாரிகளைப் பயன்படுத்தி ஆசிரியர்களை மாறுதல் செய்து அவர்களை அலைக்கழிக்கிறார்கள். இதையெல்லாம் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, இப்படி அடிக்கடி மாறுதல் செய்வதைத் தடுத்தாலே நிதி கூட மிச்சப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவர்கள் ஆசிரியர்களைக் காரணமில்லாமல் மாறுதல் செய்கிறார்கள். ஆசிரியர்கள் மாறுதல் கேட்காதபோதே மாறுதல் செய்கிறார்கள். கணவன் மனைவியாக இருக்கும் ஆசிரியர்களை ஒருவரை விட்டு ஒருவர் நெடுதூரம் பிரித்து மாற்றுகிறார்கள். பதவி உயர்வு பெற்றவர்களைக் காரணமில்லாமல் 'பதவி இறக்கம் செய்கிறார்கள். மேல்முறையீடு செய்தவர்களைப் பழி வாங்குகிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகளையெல்லாம் போக்க வேண்டும் என்று கோரி போராட்டங்களே நடைபெறுகின்றன. எனவே இவைகளையெல்லாம் தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கல்வித் துறை எனக்கு மிகவும் பரிச்சியமான துறை. என்றாலும் கூட, அது இன்றைக்கு எங்கே போய்க் கொண்டிருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை. கல்வித் துறையினால் வெளியிடப்பட்ட பல்வேறு நூல்களைப் பற்றிய விமர்சனம் இன்றைக்கும் தொடர்ந்து நடைபெறுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருமே அறிவார்கள். சென்ற ஆண்டு "டூ வர்ஜின்ஸ்" என்ற ஆங்கிலத் துணைப் பாடப் புத்தகம் ஒன்று

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1985 ஏப்ரல் 8

பல்கலைக் கழகத்தாலே அனுமதிக்கப்பட்டது. அதில் பெண்களைப்பற்றி இழிவாக, ஆபாசமாக, அருவருக்கத்தக்க வகையில் எழுதப்பட்டிருக்கிறது என்பதை எடுத்துக்காட்டிய பிறகு அப்புத்தகம் நீக்கப்பட்டது. இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், பாடப் புத்தகங்களை தேர்ந்தெடுப்பவர்கள் இப்படிப்பட்ட புத்தகங்களையெல்லாம் படித்துப் பார்க்காமலேயே தேர்ந்தெடுக்கிறார்களா, அல்லது தங்களுக்கு வேண்டியவர்கள் என்பதற்காகத் தேர்ந்தெடுக்கிறார்களா? அல்லது ஆளுங்கட்சிக்குத் தேவையானவர்கள் எழுதினார் என்பதற்காகத் தேர்ந்தெடுக்கிறார்களா? அல்லது அவைகளையெல்லாம் படித்து ரசித்துப் பார்த்துத்தான் வைத்திருக்கிறார்களா? அல்லது கல்லூரிகளிலே "செக்ஸ்வல்" அறிவுதான் தேவை என்று எண்ணி வைத்திருக்கிறார்களா என்று எனக்குப் புரியவில்லை. அந்த அளவுக்குக் கீழ்த்தரமான உணர்ச்சிகளைத் தூண்டும் அளவுக்கு புத்தகங்களை கல்வித் துறை, இன்றைய தினம் பாடப் புத்தகங்களாக அனுமதித்திருக்கிறது என்பதை வருத்தத்துடன் தெரிவிக்க விரும்புகிறேன்.

சென்றமுறை மாண்புமிகு உறுப்பினர் திரு. கவிஞர் முத்துலிங்கம் அவர்கள் இங்கே "இன்குலாப்" கவிதைகளைப் பற்றி எடுத்துக் கூறினார்கள். அதில் பாரதத்தின் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி அவர்களைப் பற்றியும், இராஜராஜனைப் பற்றியும், டாக்டர் கலைஞர் அவர்களைப் பற்றியும் இழிவாக எழுதப்பட்டிருக்கிறது என்பதை இங்கே எடுத்துக் கூறியதற்குப் பின்னர் தான் பல்கலைக் கழகம் விழித்துக்கொண்டு அந்தப் புத்தகத்தைப் படித்துப் பார்த்திருக்கிறது. அதற்கு முன்னாலே அதையெல்லாம் படித்துப் பார்த்ததாகவே தெரியவில்லை. எனவே அதற்குப் பின்னாலே அந்தப் புத்தகத்தை எடுத்து விட்டார்கள். இந்தத் தொடர்ச்சியான நிகழ்ச்சிகளை வைத்துப் பார்த்தால் கல்வித்துறை எங்கே போய்க் கொண்டிருக்கிறது என்பதை என்னாலே புரிந்து கொள்ள முடியவில்லை.

அடுத்து, இன்னொரு சம்பவத்தையும் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். தற்போது தேர்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நான் இந்தச் சம்பவத்தைக் குறிப்பிடுவதாலே யாரும் வருத்தப்படக் கூடாது. எம். பில். தேர்வில் சென்ற ஆண்டு இங்கிலாந்து பிரதமர் திருமதி தாட்சர் அவர்களையும் இங்கே இருக்கிற ஒரு அம்மையாரையும் ஒப்பிட்டு ஒரு கட்டுரை எழுதுமாறு மாணவர்களிடம் கேட்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரியும். அதற்குப் பிறகு அதுபற்றிய விமர்சனம் இங்கே வந்ததும் அனைவருக்கும் தெரியும். மாணவர்கள் அவ்வாறு ஒப்பிட்டு எழுதினாலும் எழுதாவிட்டாலும், அந்த அம்மையாரைப் பல்வேறு மோசமான தரப்பினரோடு ஒப்பிட்டுப் பேசிய அமைச்சர்கள் பலர் இங்கு



1985 ஏப்ரல் 8] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

அவையில் இருக்கிறார்கள் என்பதும் நமக்குத் தெரியும். இது கல்வித் துறையில் தேவைதானா? அப்படிப்பட்ட ஒரு இழிநிலை கல்வித் துறையில் வரக் கூடாது என்பதற்காகத்தான் இதைச் சொல்ல முன்வருகிறேன். அதற்கு அடுத்து நடிகர்கள் பூர்ணிமா-பாக்கியராஜ் திருமணம் நடந்தது. அப்போது மேல்நிலைப் பள்ளி வினாத் தாள் ஒன்றில் அத்திருமணத்தைப் பற்றி கட்டுரை எழுது என்று மாணவர்கள் கேட்கப்பட்டார்கள். இது தேவை தானா? இது கல்வி துறைதானா? அல்லது கல்வி என்பதில் உள்ள புள்ளியை எடுத்துவிட்டு படித்தால் வருமே அந்தத் துறையா என்று எனக்குப் புரிய வில்லை. அந்த அளவுக்கு இன்றைய கல்வித் துறை கேவலமாய்ப் போய்க் கொண்டிருக்கிறது. என்பதை வேதனையோடு நான் இங்கே குறிப்பிட விரும்பு கிறேன்.

இன்னொரு நிகழ்ச்சியையும் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்த ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி. வினாத்தாளில் கேட்கப்பட்ட வினா பற்றி யது அது. ஏற்கெனவே மாண்புமிகு தலைவரிடம் அதைக் காட்டிவிட்டேன். எஸ்.எஸ்.எல்.சி. கணக்கு வினாத்தாளில் கேட்கப்பட்ட ஒரு வினாவில் "ஒரு சீட்டுக்கட்டில் 13 ஸ்பேடுகளும் 13 ஆட்டின்களும் 13 கிளாவர்களும் 13 டைமன் களும் இருக்கின்றன. அந்தச் சீட்டுக்கட்டிலிருந்து சரிசம வாய்ப்புடன் ஒரு சீட்டு எடுக்கப்பட்டால், அது கிளாவர் அல்லது ஸ்பேடு என்று ஆவதற்குரிய நிகழ் தகவு என்ன?" என்று கேட்கப்பட்டிருக்கிறது. அதாவது அந்த மாணவன் சீட்டுக்கட்டில் எத்தனை கிளாவர் இருக்கிறது, எத்தனை டைமன் இருக்கிறது, எத்தனை ஆட்டின் இருக்கிறது என்பதையெல்லாம் தெரிந்து, 10ஐத் தெரிந்து 9ஐத் தெரிந்து அதன் மதிப்பைத் தெரிந்து சூதாட்டத்தில் தேர்ந்து அதற்குப் பிறகு அவன் பரீட்சை எழுத வேண்டும். இல்லையேல் அவன் தேர்ச்சி பெறத் தகுதியற்றவன். எனவே இந்த அளவுக்குச் சீட்டுக் கட்டைத் தொடர்புபடுத்தி வினாக்கள் கேட்க வேண்டிய அவசியம் என்ன? கல்வித் துறை எங்கே போய்க் கொண்டிருக்கிறது? என மீண்டும் கேட்கிறேன். கல்வித் துறை இன்றைய தினம் கல்வித் துறையாக இல்லை என்பதைத்தான் இங்கே வேதனையோடு குறிப்பிட விரும்புகிறேன் . . . .

திரு. ஆர். டி. சீதாபதி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, படிக்கிற மாணவர்களுக்குச் சீட்டுக் கட்டைப்பற்றித் தெரிகிறதோ இல்லையோ அதைப்பற்றிக் கேட்கிற ஆசிரியருக்கு எல்லாம் தெரிந்திருக்கிறது என்பது புரிகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எப்படி மனப்பாடமாகப் படித்திருக்கிறார் என்பதிலிருந்து அவருக்கு நன்றாகத் தெரிந்திருக்கிறது . . . . .

. . . தெரிகிறது

[1985 ஏப்ரல் 8

திரு. க. மீனாட்சிசுந்தரம்; ஆசிரியர் என்பவர் அனைத்தும் தெரிந்தவர் தான். அதனால்தான் ஆசிரியர்களுக்கு "களவும் கற்றுமற" என்பது தெரிந் திருக்கிறது . . . . .

(பிற்பகல் 12-20)

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்): மாண்புமிகு உறுப்பினர் 20 நிமிடங்களாகப் பேசிக் கொண்டிருக்கிறார். விரைவில் முடிக்க வேண்டும். வேறு சில உறுப்பினர்களும் பேச வேண்டியிருக்கிறது.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: கொஞ்ச நேரத்தில் முடித்து விடுகிறேன். இன்று ஒருநாளைக்கு மட்டும்தானே. தயவு செய்து கொஞ்சம் நேரத்தை அதிகரித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் எதற்காகக் குறிப்பிடுகிறேன் என்றால், மாண்புமிகு அவை முன்ன வர் அவர்கள் இதையெல்லாம் குறிப்பெடுத்து கல்வித் துறைக்குப் பரிந்துரை செய்ய வேண்டும். இந்த ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி.கணக்குத் தேர்வில் நடக்காத பகுதிகளிலிருந்து வினாக்கள் கேட்கப்பட்டிருக்கின்றன. விடையே வராத கணக்குகளெல்லாம் கேட்கப்பட்டிருக்கின்றன. எனவேதான் மாணவர்கள் இந்தத் தேர்வில் 50 விழுக்காடு மதிப்பெண்கள்கூட வாங்க முடியாத அவசர நிலை; ஆசிரியரே விடை எழுதினால்கூட, அதற்கு மேல் வாங்குவது கஷ்டம். இத்தேர்வின்போது "மாணவர்கள் மயங்கி விழுந்தனர். மாணவர்கள் அதிர்ச்சி யடைந்தனர். மாணவர்கள் ஒரு மணி நேரத்திற்குள்ளாகவே தேர்வு அறையை விட்டு வெளியேறினார்கள்" என்றெல்லாம் 'தினசரி' போன்ற பத்திரிகை யிலேயே எழுதியிருந்தார்கள். இந்த ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு வினா வில் 20 ஆண்டுகளுக்கு முன்பிருந்த காம்போசிட் கணக்கில் இருந்த தேற்றங் கள் போன்றவைகள் கேட்கப்பட்டிருந்தன என்று சொல்லப்படுகிறது. இப்படிப் பட்ட வினாத் தாளை யார் தயாரித்தது? இதை யார் அனுமதித்தது? இதை யெல்லாம் சரியாகப் பார்க்காமல் அந்த வினாத் தாளை யார் வெளியிடச் சொன்னார்கள் என்பதையெல்லாம் கல்வித் துறை பார்க்க வேண்டும். அதில் 38-வது கணக்கில் சீட்டுக்கட்டு கணக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த முறை நீடிக்குமானால், எனக்கு என்ன தோன்றுகிறது என்றால், இனி எதிர் காலத்தில் இப்படியும் ஒரு கேள்வி கேட்கப்படலாம். அதாவது 100 மில்லி கள்ளச் சாராயத்தின் போதை 1,000 மில்லி அரசுச் சாராயத்தின் போதைக்குச்



சமம். எனவே வழக்கமாக 1,500 மில்லி அரசு சாராயம் சாப்பிடும் ஒருவன் எத்தனை மில்லி கள்ளச் சாராயம் சாப்பிட வேண்டும் என்றோ அல்லது கள்ளச் சாராயத்திற்கும் அரசுச் சாராயத்திற்கும் உள்ள போதையின் விகிதம் என்ன என்றோகூட வருங்காலத்தில் கேட்பார்கள். ஏனென்றால் செக்சில் ஆரம்பித்து, பிறகு திரைப்படத்திற்கு வந்து, பிறகு யார் யாரோடேக ஒப்பிடு வதற்கு முற்பட்டு பிறகு சீட்டுக்கட்டுக்கு வந்தவர்கள், இனி கள்ளச் சாராயத் திற்கு வர மாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்? எனவே இனி யாவது இப்படிப்பட்ட நிலைமைகள் கல்வித் துறையில் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று அரசை வற்புறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்பு கிறேன்.

அந்த வினாத்தாளில் 59, 60 வினாக்களுக்கு விடையே வராது. அந்த அளவுக்கு வினாவே தவறாக இருக்கிறது. எனவே இப்படிப்பட்ட தவறான முறையில் வினாத் தாளை வெளியிட்டதை ஈடு செய்வதற்காக 30 மார்க்குகள் அனைத்து மாணவர்களுக்கும் அதிகமாகப் போடப்பட வேண்டும். அதற்கு தயவு செய்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இனி இவ்வாறு நடக்காத வகையில் கல்வித் துறை திருத்தம் செய்யப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, முதுகுளத்தூரில் ஆசிரியர்களின் நல நிதியில் ஊழல் நடந்திருக் கிறது. நல நிதியில் 1,000 ரூபாய் ஆசிரியர்கள் கடன் பெற்றால், அது 1,500 ரூபாயாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதைப்போலவே 2,000 ரூபாய் கடன் வாங்கினால் ரூபாய் 3,000 ஆகக் கணக்கில் எழுதப்பட்டுள்ளது. இதை யெல்லாம் அங்கே இருக்கிற ஒரு ஹெட்கிளார்க் திரு. குழந்தைசாமி என்பவர் செய்து பெருந் தொகையை கையாடல் செய்திருக்கிறார். பதிவேடுகளைக் களவாடிச் சென்றிருக்கிறார். இதை எதிர்த்து ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டமே செய்துள்ளனர். களவு போன அந்தப் பதிவேடுகள் ஆசிரியர்களுக்கு வந்து சேர வில்லை. ஆசிரியர்களுடைய கணக்கில் பணம் சரியாக சேர்க்கப்படவில்லை என்று இன்னமும் அங்கே ஆசிரியர்கள் தொடர்ந்து போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இதையும் தவிர்க்கும் வகையில் அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று, இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மதுரைப் பல்கலைக் கழகத்தில்—காமராஜர் பல்கலைக் கழகத் தில் ஒரு பெண் தேர்வு எழுதினார். நல்ல முறையில் எழுதியிருக்கிறார். மிகச் சிறப்பாக சீராக, தெளிவாக, சுருக்கமாக ஆனால் பொருள் விளக்கத் தோடு எழுதியிருக்கிறார். ஆனால் அப்படி எழுதியதன் காரணமாக அந்த மாணவி மீது "மால்பிராக்டிசஸ்" செய்ததாக நடவடிக்கை எடுத்திருக்

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1985 ஏப்ரல் 8

கிறார்கள். ' தினமணி ' பத்திரிகையில் வந்தது இது. நாகர்கோயிலில் உள்ள ஸ்காட் கிருஸ்டியன் கல்லூரியில் படிக்கும் மாணவி அந்த மாணவி. பெயர் ரங்கநாயகி. தேர்வில் மிகச் சிறப்பாக, விளக்கமாக, சீராக, தெளிவாக விடை எழுதியதற்காக அந்த மாணவியிடம் விளக்கம் கேட்டிருக் கிறார்கள். தொடர்ந்து முதல் வகுப்பிலேயே தேர்வு பெற்று வந்திருக்கும் அந்தப் பெண் இந்த விளக்கம் கேட்டு வந்ததைப் பார்த்து அதிர்ச்சியடைந் திருக்கிறார். தப்பாக எழுதினால், அல்லது காப்பியடித்து, அது கண்டு பிடிக்கப்பட்டால் நடவடிக்கை எடுப்பது சரியாக இருக்க முடியும். ஆனால் "விடையைச் சரியாக எப்படி எழுதினாய்?" என்று விளக்கம் கேட்கிறார்கள் என்றால் எல்லோருக்குமே அதிசயமாகத்தான் இருக்கிறது. இப்படிக் கேட்ட திலிருந்து அந்த மாணவி 'வெக்ஸ்' ஆகி தொடர்ந்து நல்ல முறையில் தேர்வு எழுதும் மனோநிலையை இழந்தார். இதைப் பார்த்த நான் அந்த மாணவி மீது ஏதேனும் பர்சனல் கிரட்ஜ் இருக்குமோ என்று பல்கலைக் கழகத்திற்குக் கடிதம் எழுதினேன். அதற்கு பல்கலைக் கழகம் பதில் அளித்திருக்கிறது. அதாவது நான் இங்கே இப்படிக் கேட்பேன், விவகாரம் வெளியாகிவிடும் என்று தெரிந்த பிறகு, அவர்கள் எனக்கு பதில் அளிக்கிறார்கள்.

"The decision taken by the Syndicate in the matter is that the candi- date may be permitted to appear for the final examination. The papers in the last examination may be valued and result declared. As there is no evidence for any malpractice, she may be exonerated".

(பிற்பகல் 12-25)

என்று சொல்லி, இப்போது வருத்தம் தெரிவித்திருக்கிறார்கள். அனுமதி அளித்திருக்கிறார்கள். ஆகவே எப்படிப்பட்ட நிலைமை இப்போது உருவாகி யிருக்கிறது என்று பார்க்க வேண்டும். நன்றாகத் தேர்வு எழுதியிருக்கக் கூடிய ஒரு மாணவிக்கு இப்படிப்பட்ட நிலைமை உருவாகியிருக்கிறதென்றால், கல்வித் துறை எங்கே போய்க்கொண்டிருக்கிறது என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை என்று நான் கூறுவதை இந்த அவை உணரும் என்று கருதுகிறேன். அதை அமைச்சரவர்கள் கவனித்து தக்க நடவடிக்கை மேற் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, தண்ணீர்ப் பஞ்சம் இப்போது கடுமையாக எங்கும் இருக் கிறது. சேலம் மாவட்டத்தில், பரமத்தி ஒன்றியத்தில் தண்ணீர்ப் பஞ்சம் எப்படி இருக்கிறதென்றால், மக்களுக்கு மூன்று நாளைக்கு இரண்டு குடம் தண்ணீர் கொடுக்கிறார்கள். அங்கேயுள்ள பள்ளிப் பிள்ளைகள் குளிக்க வேண்டாமா குடிக்க தண்ணீர் வேண்டாமா? இப்படிப்பட்ட நிலையில் அங்கேயுள்ள பள்ளிகளைத் தொடர்ந்து நடத்துவதன் மூலம் மாணவர்களுக்கு இன்னும் கஷ்டத்தைக் கொடுக்கிறார்கள். இப்படித் தண்ணீர்ப் பஞ்சம்



1985 ஏப்ரல் 8] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

இருக்கக்கூடிய பகுதிகளில் உள்ள பள்ளிகளில் முன்கூட்டியே தேர்வுகளை நடத்தி முடித்து, பள்ளியை மூடக்கூடாதா? அங்கே சீக்கிரம் தேர்வு களை நடத்தி பள்ளிகளுக்கு விடுமுறை விடவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

காவல் துறைபற்றி ஒன்றைச் சொல்லி, முடித்துக்கொள்கிறேன். பெரும் பாலும் காவல் துறைபற்றி மேலவையில் பேச வாய்ப்புத் தருவதில்லை. தமிழ் நாடு சிறப்புக் காவல் படை (ஸ்பெஷல் போலீஸ்)யில், காவலர்களாகப் பணி யாற்றுபவர்கள், பல்வேறு மாவட்டங்களில் பத்தாண்டுக் காலம் பணிபுரிந் திருந்தால், அதன்பிறகு அவர்களை அவர்களுடைய சொந்த மாவட்டத்திற்கு மாற்றலாம் என்று 1281 ஆம் எண்ணிட்ட அரசு ஆணை 8-6-1981-ல் உள் துறையில் வெளியிடப்பட்டிருக்கிறது. அந்த ஆணை வெளியிடப்பட்டு மூன்றாண்டு காலம் முடிவுற்றும்கூட, அந்த ஆணை அதிகாரிகளால் செயல் படுத்தப்படவில்லை. மாறுதலுக்குரிய பேனல்கூட தயாரிக்கப்பட்டு பல ஆண்டுகளாக அமுல்படுத்தப்படவில்லை. பத்தாண்டுக் காலம் பதினைந்து ஆண்டுக் காலம் என்று வெளி மாவட்டங்களில் பணி புரிந்துவிட்டு, சொந்த மாவட்டத்திற்குச் செல்லலாம் என்ற உத்தரவின்படி அவர்கள் விண்ணப்பித் தால், அது நடைமுறைப்படுத்தப்பட வில்லை. அவர்களும் மனிதர்கள் தானே. குடும்பம் பிள்ளை குட்டியை விட்டுவிட்டு வெளி மாவட்டங்களில் பணியாற்றினார்களே, அவர்கள் சொந்த மாவட்டத்தில் பணியாற்ற அனு மதிக்கக் கூடாதா? ஆகவே அவர்களை சொந்த மாவட்டத்தில் பணியாற்ற அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதை அமுல் படுத்தாத அதிகாரி யார் என்று கண்டுபிடித்து, நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை சரபோஜி கல்லூரி அருகில் தமிழ் நாடு வீட்டு வசதி வாரியக் குடியிருப்பு இருக்கிறது. அங்கே அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் குடியிருக் கிறார்கள். அங்கே 1984 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஒரு பெருந்திருட்டு நடந்தது. காவல் துறையினருக்குப் புகார் செய்தும் எவ்வித நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை. மீண்டும் 19-2-1985 அன்று, சாத்தி யிருந்த கதவை உடைத்து உள்ளே நுழைந்து அங்கேயிருந்த பெண்களின் காதில் இருந்த நகைகளை அறுத்துக்கொண்டு ஓடியிருக்கிறார்கள். அது பற்றிக்காவல் துறைக்குப் புகார் செய்யப்பட்டும், பலனில்லை. உடனடியாகக் காவல் துறையோடு தொடர்பு கொள்ள, அந்தத் தஞ்சை தெற்கு காவல் நிலையத்தில் டெலிபோன் வசதி இல்லை. ஒரு மாவட்டத் தலைநகரின்



N85·214·1-3;1

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1985 ஏப்ரல் 8]

இருக்கக்கூடிய ஒரு காவல் நிலையத்தில் 'போன்' இல்லை. இது குறித்து மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளரைக் கேட்டால், "அந்தக் காவல் நிலையத்தில் 8 காவல்காரர்கள்தான் உள்ளனர். பல்வேறு பகுதிகளுக்கு அவர்கள் காவலுக்காக அனுப்பப்பட்டு விடுகிறார்கள், ஆகவே குறிப்பிட்ட சம்பவங்கள் பற்றி கவனிக்க முடியவில்லை" என்று சொல்லுகிறார். ஆகவே பொதுமக்களின் நலனைக் கருத்திற்கொண்டு, கல்லூரிகள், தொழிற்சாலைகள் நிறைந்த அந்தப் பகுதி காவல் நிலையங்களில் அதிகக் காவலர்களை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நடமாடும் காவல் நிலையங்கள் அங்கே அமைக்கப்பட வேண்டும். தொலைபேசி வசதி செய்துதர வேண்டும் என்று அங்குள்ள மக்கள் விரும்புகிறார்கள். அதைச் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக என்னுடைய தொகுதிபற்றி ஒன்றிரண்டு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். தலைஞாயிறு ஆரம்ப சுகாதார நிலையத்தின் சுற்றுப்புறச் சூழ்நிலை பாதிக்கப்பட்டிருக்கிறது. அங்கே சுற்றுச் சுவர் இல்லை. கழிப்பிடம் பழுது பார்க்கப்படவில்லை என்று முன்பே இந்த அவையில் சொல்லியிருக்கிறேன். அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க அனுப்பியிருக்கிறார்கள் என்று சில அதிகாரிகள் வந்து எழுதிக்கொண்டு போகிறார்கள். ஆனால் எந்தவித நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்பட வில்லை. கழிப்பிடம் பழுது பார்க்கப்படாததால், அது பயன்படுத்தப்பட வில்லை. அதைப் பழுது பார்ப்பதோடு தண்ணீர் வசதியும் செய்து தர வேண்டும்.

அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில் 3 வேன்கள் உள்ளன. மூன்றுமே பழுதடைந்திருக்கின்றன. அந்த வேன்களை ரிப்பேர் செய்ய அனுப்பினால், அங்கேயுள்ளவர்கள் ஏதோ எதிர்பார்க்கிறார்கள். அவர்கள் எப்படி லஞ்சம் கொடுப்பார்கள்? அந்த வேன்கள் நிறுத்தப்படுவதற்கு 'ஷெட்' இல்லை. அங்குள்ள குடியிருப்பு கட்டிடங்கள் வெள்ளையடிக்கப்படவில்லை. அங்கே பெண் டாக்டர்கள் இல்லை. இரண்டு ஆண் டாக்டர்கள் இருக்கிறார்கள். கிராமப்புற பெண்கள் கூச்சமில்லாமல் எப்படி ஆண் டாக்டர்களிடம் வைத்தியம் செய்து கொள்ள முடியும்? ஆகவே அங்கே ஒரு பெண் டாக்டரை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருவாரூர், திருத்துறைப்பூண்டி, தலைஞாயிறு, நாகப்பட்டினம் போன்ற பகுதிகள் காவிரியின் கடைமடைப் பகுதிகளாகும். பெரும்பாலான நேரங்களில் ஆற்றில் தண்ணீர் வருவதில்லை. ஆனால், ஆண்டுதோறும் மழைக் காலங்களில் அதிகப்படியான தண்ணீர் வருவதால், பாடுபட்டு விளை



[1985 ஏப்ரல் 8] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

வித்திருக்கும் பயிர்கள் பாழாகின்றன. அந்தத் தண்ணீர் கூட கடலுக்குச் சென்று வீணாகிறது. அப்படி வீணாகும் தண்ணீரைத் தடுத்து, ஆங்காங்கே அணைகளைக் கட்டி நிறுத்தி, பின்னாலே பம்பு செட்டுகள் மூலம் அந்தத் தண்ணீரை விவசாயத்திற்குப் பயன்படுத்த முடியும் என்று ஏற்கெனவே அரசிடம் ஒரு திட்டமிருந்தது. அந்தத் திட்டம் என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-30)

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

தஞ்சாவூர் மாவட்டம், ஒரு விவசாய மாவட்டம். வேளாண்மைக் கல்லூரி ஒன்றைத் துவக்க இருப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். அதைக் கீழத்தஞ்சையில் துவக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

உப்பளாச்சேரியில் உள்ள கால்நடைப் பண்ணையை இன்னும் நல்ல முறை யில் செயல்பட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய சொந்த ஊர் தஞ்சாவூர் மாவட்டம் கீவளூர் பகுதியில் இருக் கிறது. அங்கே வெட்டாறுக்குக் குறுக்கே பாலம் கட்ட வேண்டும் என்று சொல்லி, அதற்கு நிதியும் ஒதுக்கியிருக்கிறார்கள். ஊர்குடி என்ற கிராமத் தின் அருகில் கீவளூர் நகர் எல்லையில் பாலம் கட்ட நிதி ஒதுக்கம் செய்யப் பட்டிருக்கிறது. ஆனால் இதுவரை அதற்கான வேலைகள் எதுவும் செய்யப் படவில்லை. கிராலூர்-நாகூர் இணைப்பு சாலைக்கும் நிதி ஒதுக்கம் செய்தும் பணி தொடங்கப்படவில்லை. உடனே பணியை தொடங்கச் செய்யுங்கள்.

திருத்துறைப்பூண்டி பேரூராட்சியை நகராட்சியாக ஆக்கப் போவதாக 2, 3 ஆண்டுகளுக்கு முன்பே சொல்லப்பட்டது. ஆனால் திருத்துறைப் பூண்டியில் இதுநாள்வரை நகர ஆட்சிதான் நடக்கிறது. அங்கே விரைவில் நகராட்சியை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது போல் திருத்துறைப்பூண்டியில் தீ அணைப்பு நிலையம் இல்லை. அங்கு அது அவசியம் தேவை. அங்கு தீ அணைப்பு வண்டி வரவேண்டுமென்றால், மன்னார்குடி, அல்லது திருவாரூர் அல்லது நாகப்பட்டினத்திலிருந்துதான் வரவேண்டியிருக்கிறது. அவ்வண்டி வருவதற்குள் எல்லாம் எரிந்து சாம்பலாகி விடுகிறது. எனவே திருத்துறைப்பூண்டியில் தீ அணைப்பு நிலையம் ஒன்று அவசியம் ஏற்படுத்தித் தரவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

பெண்களுக்கான அரசினர் உயர்நிலைப் பள்ளி ஒன்று அங்கே தொடங்க இருப்பதாக அரசுத் தரப்பிலே சொல்லி, பொதுமக்கள் எல்லோரும் சேர்ந்து பணம் எல்லாம் கட்டி, மூன்று ஆண்டுகள் ஆகிறது. ஆனால் இதுவரை அங்கே பள்ளி திறக்கப்படவில்லை. அதேபோல் செம்பனார்கோவிலைப் பொறுத்தும் பணம் கட்டி மூன்று ஆண்டுகள் ஆகின்றன. அங்கேயும் திறக்கப்படவில்லை. ஆழியூர் என்ற ஊரில் உயர்நிலைப் பள்ளிக்கு பணம் கட்டி மூன்று, நான்கு ஆண்டுகள் ஆகின்றன. அங்கேயும் அனுமதிக்கப்படவில்லை. ஆகவே இவ்வாறு கட்டுவதாகச் சொல்லி பெண்டிங்கில் உள்ள அந்த இடங்களிலே முதலில் உயர்நிலைப் பள்ளிகளைக் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆளும் கட்சியினர் வேறு இடங்களுக்குச் சிபாரிசு செய்வதால், அங்கே அனுமதித்து விட்டோம் என்று சொல்லாதீர்கள். பல ஆண்டுகளாக 'பெண்டிங்' ஆக இருக்கும் இடங்களில் கட்டி முடிக்க, அவை செயல்பட இந்த ஆண்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தயவுசெய்து மன்னித்துக்கொள்ளுங்கள். இன்னும் ஒன்றே ஒன்றைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். ஸ்ரீலங்காப் பிரச்சினையைப்பற்றி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் உண்மையிலேயே எங்களையெல்லாம் அழவைத்தார்கள். உண்மையில் அதிலேயே அவர் உழன்றுகொண்டிருக்கிறார்கள். இதில் எந்தவித கருத்து வேறுபாடும் கிடையாது. இதுகுறித்து ஒன்றே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஸ்ரீலங்காப் பிரச்சினையை மட்டும் வைத்து நாடாளுமன்றத்திலே கூட விவாதம் செய்ய இருக்கிறார்கள். நாம் ஏன் இன்னும் அறைக்குள்ளேயே விவாதம் பண்ணிக் கொண்டிருக்கிறோம்? ஏன் நாம் இப்படி அவையில் விவாதம் பண்ணக் கூடாது? தமிழகத்திலும் சட்டமன்றப் பேரவை, மேலவை இருக்கிறது. ஆனால் இலங்கை பிரச்சினை பற்றி தனி விவாதம் நடத்தப்படவில்லை. பிரிட்டனில்கூட நாடாளுமன்ற உறுப்பினர்கள் 84 பேர் கையெழுத்திட்டு இலங்கைத் தமிழர்களை காப்பாற்றிட வேண்டியிருக்கிறார்கள். அதை ஏன் நாமும் செய்யக்கூடாது என்று கேட்க விரும்புகிறேன். இன்று அங்கே நடைபெறுகிற நிகழ்ச்சிகள் திருப்திகரமாக இல்லை. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் கூட "பெரிய மனதோடு செய்தோம்" என்று சொன்னார்கள். அதாவது திருவனந்தபுரத்தில் இறங்கிய ஆயுதம் நிறைந்த விமானத்தைக்கூட பெரிய மனதுடன் அனுப்பி வைத்தோம் என்று சொன்னார்கள். உங்கள் பக்கத்தில் அவர் இருப்பதால், அப்படித்தான் சொல்ல





முடியும். அவர் இந்தப் பக்கத்தில் இருந்தால், இன்னும் வேகமாகப் பேசுவார். அதுமட்டுமல்ல, நம் கடல் எல்லைக்குள் வந்த ஏழு பேரைக் கைது பண்ணி பாதுகாப்பாக விமானத்தில் அனுப்பி வைத்தோம். அதையும் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் சொன்னார்கள்.

நாடாளுமன்றத்திலே தி.மு.க.வைச் சேர்ந்த வை. கோபாலசாமி மாண்புமிகு உறுப்பினர் ஸ்ரீலங்காத் தமிழர் பிரச்சினை பற்றிப் பேசுகிறபோது, "கோழிக்குஞ்சை சுடுவதைப் போல தமிழர்களை சுடுகிறார்கள்" என்று பேசியபோது ஓர் அமைச்சர் எழுந்து "கோழி சைவமா? அசைவமா?" என்று கேட்டிருக்கிறார். இதற்கு என்ன பொருள்? நம்முடைய உணர்வினை எவ்வளவு கேவலப்படுத்துகிறார்கள்? இதை நாம் எந்த அளவுக்குக் கண்டிக்க இருக்கிறோம்? அல்லது அவர்களிடத்தில் போய் எடுத்துச் சொல்லி வாதிட்டு நாம் வெற்றி பெற இருக்கிறோம்? என அறிய விரும்புகிறேன். அதுமட்டுமல்ல, பிரதமர் இராஜீவ் அவர்கள்கூட திருவனந்தபுரத்தில் வந்து இறங்கிய விமானத்திலே இருந்த ஆயுதங்கள் தமிழர்களைக் கொள்வதற்காக என்று அதன் மீது எழுதி வைக்கப்படவில்லை என்று பேசினார்கள் . . . .

**திருமதி வி. ஜெயலட்சுமி :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சபையில் இல்லாத ஒருவரைப்பற்றி குற்றம் சாட்டி பேசிக் கொண்டிருந்தால், அந்தக் குற்றச்சாட்டிற்கு மறுமொழி அளிக்க முடியாத நிலையில், மற்றொரு சபையில் இருக்கும் ஒரு நபரைப்பற்றி இங்கே பேசலாமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** சபையில் இல்லாத யாரைப் பற்றிக் குற்றம் சாட்டிப் பேசினார்?

**திருமதி வி. ஜெயலட்சுமி :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மத்திய அமைச்சர் ஒருவரைப்பற்றிக் குறிப்பிட்டு அவர், 'சைவமா, அசைவமா' என்று கேட்டார்கள் என்று சொன்னார். அது என்ன 'context' -இல் எப்படிப் பேசினார் என்று தெரியாததனால், அவர் விளக்கம் அளிக்க முடியாத இந்த சபையில் அது குறித்துப் பேசலாமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** நாடாளுமன்றத்தில் ஓர் அமைச்சர் பேசியது பற்றிச் சொன்னார்கள். அது குறித்து மாண்புமிகு உறுப்பினரும் பேசலாம். உறுப்பினர் அவர்களும் அதற்குப் பதில் சொல்லலாம். அமைச்சரைப் பற்றி எதுவும் சொல்லக்கூடாது என்று சொல்லி விட்டால், இங்கே எந்த அமைச்சரைப்பற்றியும் பேசமுடியாத நிலைமை வந்துவிடும்.

**திருமதி வி. ஜெயலட்சுமி :** அங்கே நாடாளுமன்றத்தில் அங்கேயுள்ள உறுப்பினர்கள் அதைப்பற்றிப் பேசலாம். சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களும் பதில் கொடுக்க இயலும். ஆனால் இங்கே தன்னிலை விளக்கம் கொடுக்க முடியாத நிலைமையில் உள்ளவர்களைப்பற்றி நாம் பேசலாமா என்றுதான் கூறுகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் மத்திய நாடாளுமன்றத்திலே நடைபெற்ற விவாதத்தில் ஒரு சம்பவத்தைக் குறிப்பிட்டு பத்திரிகையிலே வந்த செய்தியைக் குறிப்பிட்டுச் சொல்கிறாரே தவிர, தனிப்பட்ட முறையில் உறுப்பினர் அவர்கள் நேரடியாக அந்த அமைச்சரைக் குற்றம் சாட்டிச் சொல்லவில்லை. ஆகவே பத்திரிகையிலே வந்த செய்தியை, "இப்படி வந்திருக்கிறது" என்று தெரிவிக்கிறார்கள். ஆகவே அதைக் குற்றச்சாட்டாக நாம் எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. ஏதாவது தனிப்பட்ட முறையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குற்றச் சாட்டிற்கு பொறுப்பேற்றுக்கொண்டு குற்றம் சாட்டினால், அதை இந்த அவையிலே விவாதிக்கலாமா என்று நாம் பரிசீலிக்க முடியும்.

(பிற்பகல் 12-35)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** நாடாளுமன்றத்தில் நடக்கின்ற நிகழ்ச்சியைப் பற்றி இங்கே இருக்கிற உறுப்பினர்கள் பேசுவதற்கு வாய்ப்பு இருக்க வேண்டும். இல்லாவிட்டால் நாட்டிலே நடக்கிற நிகழ்ச்சியைப் பற்றிப் பேச முடியாத ஒரு இயல்பு ஏற்பட்டு விடும். ஆகவே அவர்கள் பேசுவதைப் பொறுத்து, உறுப்பினர் அவர்கள் பேசும்போது அதை மறுத்து அல்லது குறுக்கிட்டுப் பேசலாம். இரண்டு பக்கமும் கேட்பதற்கு வாய்ப்பாக இருக்கும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** துணைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்கள் விடை அளித்ததற்குப் பிறகு, நான் அதைத் தொடர விரும்பவில்லை. ஆனால் ஒரு விஷயத்தை மட்டும் இங்கே சொல்லி முடித்துக் கொள்கிறேன். ஆஸ்திரேலியாவிலே, ஜெர்மனியிலே, நெதர்லாந்திலே எல்லாம் ஸ்ரீலங்கா தமிழர்களுக்காக நிதி ஒதுக்கம் செய்திருப்பதாகப் பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. இங்கே நாம் எந்த அளவுக்கு ஒதுக்கியிருக்கிறோம்? அவர்களை எந்த அளவுக்கு நாம் பாதுகாப்பாக வைத்திருக்கிறோம்? அவர்களுக்குத் தேவையான வசதிகளை எல்லாம் செய்து கொடுத்திருக்கிறோமா?





இன்னும் செய்யப் போகிறோமா என்ற சந்தேகம் இருக்கிறது. காரணம் நான் ஒரு அகதி முகாமுக்குச் சென்று பார்வையிட்டேன். அங்கு பார்த்த குறைகளை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அதே நேரத்திலே மற்றொரு விஷயத்தையும் கூடச் சொல்ல விரும்புகிறேன். பாகிஸ்தானிலிருந்து 150 கோடி ரூபாய்க்கு ஆயுதங்கள் வந்ததாகவும், இந்திய அரசு ஹெலிகாப்டரிலே வந்து பார்த்ததாகவும், அதை பத்திரமாக ஸ்ரீலங்காவிற்கே அனுப்பி வைத்ததாகவும் செய்தியைப் பார்த்தோம். அதே நேரத்திலே நாகையிலே ஒரு 15 கோடி ரூபாய்க்கு ஆயுதங்கள் வந்ததாகவும், அது ஸ்ரீலங்காவிலே இருக்கும் தீவிரவாதிகள் பயன்படுத்துவதற்காக வந்ததாகவும் கருதி அதை இங்கே நாம் முடக்கம் செய்திருக்கிறோம் என்றும் ஒரு செய்தி வந்திருக்கிறது. அதற்கு ஜெயவர்த்தனே பாராட்டுத் தெரிவித்ததாக எல்லாம் பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. தமிழகத்திலே இருக்கிற விடுதலைப் புலிகளை மத்திய அரசு கைது செய்து நம்முடைய அரசே சிறையிலே வைத்திருப்பதாகச் செய்தி வருகிறது. அது எந்த அளவுக்கு உண்மை என்று எனக்குத் தெரியாது. அதுபற்றி முன்னவர் அவர்கள் சொன்னால், நாங்கள் அறிந்து கொள்ள வாய்ப்பாக இருக்கும். விடுதலைப் புலிகளை இங்கே சிறை வைத்திருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, ஸ்ரீலங்காவிலே நடைபெறுகின்ற அந்தச் சம்பவங்களைப் பார்க்கின்றபோது . . . .

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இங்கே விடுதலைப் புலிகள் என்கிற காரணத்திற்காக யாரும் கைது செய்யப்பட்டதாகத் தகவல் ஏதுமில்லை. அப்படிப்பட்ட சம்பவங்கள் நிகழ்ந்ததாகவும் தெரியவில்லை. இங்கே கைது செய்யப்பட்டிருப்பார்களானால், வேறு ஏதாவது குற்றங்கள் அவர்கள் இழைத்து அது சம்பந்தமாக நம்முடைய நாட்டு சட்டப்படி அவர்கள் கைதுசெய்யப்பட்டிருப்பார்கள். ஆகவே விடுதலைப் புலிகள் இங்கே இருக்கிறார்கள் என்றோ, அவர்களை அரசு கைது செய்தது என்றோ இந்த அவையிலே பேசி, அது இந்த நாட்டுக்கும், வெளிநாட்டுக்கும் தவறான தகவலாக சென்றுவிட வேண்டாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்களுடைய இந்த விளக்கத்திற்கு நன்றி. இதிலே இன்னொரு சந்தேகம் கூட இருக்கிறது. ஸ்ரீலங்காவிலே புத்தளத்திலே மியானோ ஆற்றிலே அணை கட்டப்படுவதாகவும், அந்த அணைக்கு தமிழக அரசு உதவி செய்திருப்பதாகவும், மதகுக் கதவுகளை எல்லாம் நம்முடைய கட்டுமானக் கழகம் செய்து கொடுத்திருப்பதாகவும், அந்த விழாவிலே திரு.

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1985 ஏப்ரல் 8

பண்டாரி கலந்து கொள்வதாகவும் செய்தி வந்திருக்கிறது. நம்முடைய நாட்டிலேயிருந்து அந்த அரசுக்குக்கூட கைத்தறித் துணிகள் எல்லாம் அனுப்பப்படுவதாகவும் செய்தி வந்திருக்கிறது. அந்த நாட்டுக்குப் பொருளாதார முடக்கம் செய்ய வேண்டுமென்று பிற நாடுகள் எல்லாம் முயற்சி செய்து கொண்டிருக்கும்போது, நம்முடைய இனத்தினர் அங்கு அழிக்கப்படுகின்ற இந்த நேரத்திலே, நாம் உதவிகளையெல்லாம் செய்ய வேண்டுமா? இது நியாயம்தானா? என்று அறிய விரும்புகிறேன். அதற்கு அடுத்து மற்றும் சில முகாம்களைப்பற்றி மட்டும் சொல்லி விட்டு முடித்து விடுகிறேன்.

நான் ஒரு முகாமுக்குச் சென்றிருந்தேன். தலைஞாயிறுப் பகுதியிலே வெள்ளப்பள்ளம் என்ற ஊருக்குச் சென்றிருந்தேன். அங்கே இருக்கக்கூடிய அந்த அகதிகளுக்கு நம்முடைய அரசு 15 நாட்களுக்கு ஒரு ஆளுக்கு 55 ரூபாய் கொடுக்கிறது. அதைத் தவிர சிறிய பிள்ளைக்கு 13 ரூபாய் கொடுக்கிறது. ஒரு கணவன், மனைவி, குழந்தையோடு உள்ள ஒரு குடும்பத்திற்குத் தரப்படுகின்ற பணம் ரூ. 123. இந்த 123 ரூபாயிலே அவர்கள் வாழ்க்கையை நடத்த வேண்டும். அவர்கள் வெளியிலே போய் வேலை செய்வதற்கு அனுமதிப்பதில்லை. அது எப்படி என்று எனக்குத் தெரியவில்லை. பக்கத்திலே போய் பிழைப்பதற்கு வேலைகள் இருக்கின்றன. விவசாயம் செய்யலாம். வேறு வேலைகள் பார்க்கலாம். ஆனால் வெளியே போவதற்கு அனுமதிக்கப்படவில்லை. அனுமதிச் சீட்டு வாங்கிக்கொண்டுதான் வெளியே போக வேண்டும், உள்ளே வர வேண்டும். அவர்கள் ஒரு கைதி மாதிரி வைக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே அவர்கள் வெளியிலே போய்ப் பிழைப்பதற்கு வழியில்லை. ஆனால் அவர்களுக்குத் தரப்படுகின்ற பணத்தோடு கூட ஒரு நல்ல காரியத்தை அரசு செய்திருக்கிறது. அதை நான் பாராட்டுகிறேன். அங்கே ஒரு கிலோ அரிசி 55 காசுக்கு அவர்களுக்குத் தரப்படுகிறது. அரிசி மட்டும்தான். மற்ற அமுதம் அங்காடியிலே கொடுக்கும் ஏனைய பொருட்கள் தரப்படுகின்றனவா என்றால் இல்லை. அத்தனையும் வெளியிலே இருக்கக்கூடிய பொருட்கள். அத்தனையும் வெளி மார்க்கெட் ரேட்டுக்கு விலை கொடுத்துத்தான் வாங்க வேண்டியிருக்கிறது. விறகு கூட 1½ ரூபாய், கட்டை 4½ ரூபாய் கொடுத்து வாங்க வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். ஆகவே அவர்கள் வெளியிலே போய் சுள்ளி பொறுக்கக் கூட முடியவில்லை. அந்த அளவுக்கு அங்கே கஞ்சி காய்ச்சிக்கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய ஒரு அவல நிலை ஏற்பட்டிருக்கிறது.



1985 ஏப்ரல் 8] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

(பிற்பகல் 12-40)

அவர்களுக்கு அந்தத் தொகையை அதிகப்படுத்திக் கொடுக்க முடியுமா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். அந்த இடத்திலே குடிநீர் வசதியில்லை. அங்கே இரண்டு பம்புகள் போட்டிருக்கிறார்கள். அது போதவில்லை. அங்கே மேலும் மோட்டார் இருக்கிறது. கிணறு இருக்கிறது, ஆனால் அங்கே அவர்கள் அனுமதிக்கப்படவில்லை. அதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. அதற்குரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அங்கே உள்ளவர்கள் எல்லாம் வாரத்திற்கு ஒரு முறை தாலுக்கா தலைநகரங்களில் ரேஷன் வாங்கிவிட்டு கையெழுத்துப் போட வேண்டும் என்று சொல்லி எங்கே சென்றாவது பிழைக்கலாம் என்று சொன்னால், அவர்கள் பிழைத்துக்கொள்வார்கள். அதற்கு வழி செய்து தாருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். அல்லது அவர்களுக்குத் தரும் தொகை அதிகப்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே சிறு குழந்தைகள், பெரிய குழந்தைகள், படித்த குழந்தைகள் வந்திருக்கிறார்கள். இப்போது பள்ளி முடியும் காலம். ஆதலால் அவர்கள் பள்ளியிலே உட்கார்ந்து தேர்வு எழுதுவதற்கு ஸ்பெஷல் ஆர்டர் போட்டு அனுமதி தர வேண்டும். மதிய உணவு சாப்பிட வசதியாகவும் இருக்கும். அவர்களுக்கு ரிக்கார்ட் ஷீட் இருந்தால்தான் சேர்ப்போம் என்று சொல்லுகிறார்கள். அவர்கள் உயிருக்கு பயந்து எல்லாவற்றையும் விட்டுவிட்டு வந்திருப்பதால், அவர்களிடம் ரிக்கார்ட் கிடையாது. ஆகவே ரிக்கார்ட் இல்லாமல் பள்ளிகளிலே சேர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பாலர் பள்ளிகளில் மற்ற பள்ளிகளில் உள்ள குழந்தைகளோடு மதிய உணவு உண்ண ஏற்பாடு செய்யவேண்டும்.

அவர்கள் ராமேஸ்வரத்தில் படகை விட்டுவிட்டு வந்திருக்கிறார்கள். 60 வலைகள் காணாமல் போய் கண்டு பிடிக்கப்பட்டதாகச் சொல்கிறார்கள். அவர்களுடைய பொருள்களுக்கு பாதுகாப்புத் தர வேண்டும். அடுத்து, சென்டிமென்டலாக ஒரு விஷயம் கூறி முடிக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : முடிக்கப் போகிறேன், முடிக்கப் போகிறேன் என்று சொல்லிக்கொண்டே பேசுவதால், எப்போது முடிக்கப் போகிறார் என்ற சங்கடத்திலே நான் ஆழ்ந்து விடுகிறேன். ஆகவே முடிக்கப் போகிறேன் என்றால் முடித்துவிட வேண்டும்.

[1985 ஏப்ரல் 8

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** முடித்துவிடுகிறேன். ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இரண்டாம் தேதி எங்கேயோ வருகிறார்கள். தாய் இரண்டாம் தேதி வருகிறார், நான்காம் தேதி கணவன் வருகிறார், ஏழாம் தேதி மனைவி வருகிறார். இப்படி தனித்தனியாக வந்து சேருகிறார்கள். அவர்களை தனித்தனியாக 'நீ இந்த கேம்புக்குப் போ, நீ இந்த கேம்புக்குப் போ' என்று அனுப்புகிறார்கள். அப்படி அனுப்பியதிலே கணவர் ஓர் இடம், தாய் ஓர் இடம், மகன் ஓர் இடம் என்று சிதறுண்டு போகிறார்கள். ஆகவே மண்டபம் கேம்பில் ஒரு ரிஜிஸ்டர் வைத்து அவர்களை அப்ளை பண்ணச் சொல்லி, கணவன் பெயர், தாய், தந்தை ஆகியவர்களின் பெயர்களைக் கேட்டு 'கன்சாலிடேட்' பண்ணி, கண்டுபிடித்து, அவர்களுடைய குடும்பங்களை ஒன்றாகச் சேர்த்தால், அவர்கள் திருப்தியாக இருப்பார்கள். இப்போது அவர்களுக்குப் பிரிவினைத் துயரம் தாங்க முடியவில்லை. தங்களுடைய பிள்ளைகள் உறவினர்கள் எங்கே இருக்கிறார்களோ என்று கவலையோடு இருக்கிறார்கள். இதை கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முன்பு அங்கே பனை மர தும்புத் தொழிற்சாலைகளை நடத்திக் கொண்டிருந்தார்கள். அது இப்போது நிறுத்தப்பட்டுள்ளது. அத்தொழிலை மீண்டும் தொடங்கினால், அவர்களுக்கு நிரந்தர வாழ்வு கொடுக்க முடியும் என்று கூறி, இதையெல்லாம் செய்ய வேண்டும் என்று கேட்டு, நான் மிக நீண்ட நேரம் எடுத்துக் கொண்டதற்காக துணைத் தலைவர் அவர்கள் பொறுத்தருள வேண்டும் என்று கேட்டு வாய்ப்புக் கொடுத்தமைக்கு நன்றி கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** பொறுப்பதைத் தவிர தலைவருக்கு வேறு வழியில்லை என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

* **திரு. ஆர். டி. சீத்தாபதி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1985-86 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை நம்முடைய நிதியமைச்சர் நாவலர் அவர்கள் இந்த அவையில் கொண்டு வந்து அது சம்பந்தமாக உறுப்பினர்களுடைய கருத்தைத் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டதற் கிணங்க இன்றைய தினம் இந்த விவாதம் துவக்கப்பட்டிருக்கிறது. நான் சார்ந்திருக்கின்ற அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்துக்களை இந்த அவைக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

குறிப்பாக நான் பேசுகின்ற நேரத்தில் காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர்கள் யாரும் இல்லையே என்று மனதிற்குள் ஆதங்கம் இருந்தது. அதைத் தீர்த்து வைக்கின்ற வகையில் காங்கிரஸ் கட்சியினுடைய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், இந்த அவை உறுப்பினருமாகிய திருமதி ஜெயலட்சுமி



1985 ஏப்ரல் 8] [திரு. ஆர். டி. சீத்தாபதி]

(பிற்பகல் 12-45)

அவர்கள் அமர்ந்திருப்பது எனக்கு மகிழ்ச்சி அளிக்கிற ஒரு செய்தி. இன்றையதினம் மாண்புமிகு நாவலர் அவர்கள் மாநிலங்களுக்கு எந்த அளவுக்கு அதிகாரம் இருக்கின்றது என்பதை பட்ஜெட் பிரச்சினையில் சொல்லியிருக்கின்றார்கள். அதில் என்னுடைய கருத்துக்களை மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் மூலமாக இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதனாலேதான் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் உறுப்பினர் இங்கே இருக்க வேண்டும் என்று கருதினேன். அவர்களும் இங்கே இருப்பதால், என்னுடைய பேச்சைத் தொடங்க விரும்புகிறேன்.

நிதி நிலை அறிக்கையில் 3 ஆம் பத்தியில் "இன்றைய இந்தியக் கூட்டாட்சி அமைப்பு முறையில், மாநிலங்களின் அதிகாரங்களும், உரிமைகளும், நிதி ஆதாரங்களும் மிகவும் கட்டுப்படுத்தப்பட்டிருப்பதால், மாநில அரசுகள் மத்திய அரசின் உதவிகளைப் பெருமளவிற்கு அவ்வப்போது எதிர்பார்க்க வேண்டிய அவசிய நிலை ஏற்படுகிறது. எனவேதான், மாநிலங்கள் தாங்கள் வருவாய் ஈட்டும் வரிகளையும், வளங்களையும் பெறும் வகைகளையும் பெருக்கிக் கொள்ளும் நிலைகளை அடைய தேவையான தன்னாட்சி உரிமைகளும், அதிகாரங்களும், நிதிப் பங்கீடுகளும் மாநிலங்களுக்கு விரைவில் அளிக்கப்பட வேண்டும் என்பதை அழுத்தி வலியுறுத்தி வருகிறோம். இந்தியாவின் உண்மையான—வலிவான கூட்டாட்சி அமைப்புக்கு ஊறு நேராமல் இந்தியாவின் ஒருமைப்பாட்டு தன்மைக்கு உட்பட்டதான மாநிலத் தன்னாட்சி அமைப்புகள் ஏற்பட வேண்டும் என்ற கொள்கையைத் தான் இந்த அரசு அழுத்தி வலியுறுத்தி வருகிறது" என்று மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

பத்தி 4-ல் "அரசமைப்புத் தந்தையர் பேராசிரியரான வியர் அவர்கள், மத்திய அரசும், மற்ற மாநில அரசுகள் ஒவ்வொன்றும் தனது சொந்தப் பொறுப்பின்கீழ்த் தனிப்பட்ட அலுவல்களை ஏற்று நிறைவேற்றுவதற்குப் போதிய நிதி வளங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்" என்று தெளிவுபடுத்தியுள்ளார் என்று மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

அதுபோல் பத்தி 5-ல் கூட்டாட்சி-மாநிலத் தன்னாட்சி தன்மைகளைத் தெளிவுபடுத்திய பேரறிஞர் அண்ணா அவர்கள், "மாநிலங்கள் நகராட்சி மன்றங்களைப் போல் ஆண்டுக்கு ஆண்டு குறைந்து மாற்றப்பட்டு வருகின்றன. மாநிலங்கள் இருக்கும் இடம் தெரியாமல் ஆதிக்கம், அதிகாரம், நிதி ஆதாரம் ஆகியவற்றில் பின்னணிக்கு தள்ளப்பட்டு வருகின்றன. மாநிலத் தன்னாட்சி

[திரு. ஆர். டி. சீத்தாபதி] [1985 ஏப்ரல் 8

அதே கருத்தைத்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 17 ஆம் தேதி தமிழக சட்டமன்றப் பேரவையில் உரையாற்றிய போது, தெரிவித்திருக்கிறார்கள். அந்தக் கருத்தையும் நாவலர் அவர்களுடைய வாதத்திற்குத் துணையாகக் கொண்டுவர விரும்புகிறேன்.

"இந்திய அரசமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்ட நேரத்தில் யாரும் எதிர்பார்த்திராத பல புதிய போக்குகளும் மாற்றங்களும் தற்போது நிகழ்ந்துள்ளன. இப்புதிய போக்கு பொருளாதாரத் திட்டம் சம்பந்தப்பட்டதாகும். திட்டத்திற்காக நிதி ஆதாரங்களைத் திரட்டுவதில், ஒதுக்கீடு செய்தல், அதைப் பயன்படுத்துதல் சம்பந்தமாக மத்திய அரசு பெற்றுள்ள அதிகாரங்கள் யாவும், மாநிலங்களை மத்திய அரசிடம் உதவிக்காக மன்றாடும் பிச்சைக்காரர்களின் தகுதிக்குக் குறைத்துவிட்டன. மாநிலங்கள் தங்களின் விருப்பப்படி நிதி மானியங்களைப் பயன்படுத்தும் முழு உரிமையினைப் பெற வேண்டும். அவ்வகையில் தங்களது வருவாய்களைப் பெருக்க நிதி வாயில்களை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். மாநிலங்கள் ஒப்புக்கொண்ட அடிப்படையில் திட்டத்தின் (ஐந்து ஆண்டு) ஆதாரங்களை ஒதுக்கீடு செய்து, மாநிலங்களின் நிதி வருவாய் மூலங்கள் அதிக அளவிற்கு விரிவாக்கப்பட்டாலன்றி புதிய சமுதாயம் காண வேண்டுமென்ற மக்களுடைய விருப்பத்தினை மாநில அரசுகள் சமாளிக்க முடியாது; அவற்றின் பொறுப்புக்களையும் நிறைவேற்றிடவும் இயலாது. இவைகளைப் பல மாநில அரசுகளின் முதலமைச்சர்கள் உணர்ந்துள்ளனர்" என்று அறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு பேரவையிலே எடுத்துரைத்திருக்கிறார்கள்.

(பிற்பகல் 12-55)

மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்களுடைய உரைக்கு வலு சேர்க்கின்ற வகையில் மற்றொன்றையும் சொல்கிறேன். முன்னாள் முதலமைச்சரும் இன்றையதினம் இந்த அவையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் உறுப்பினராகவும் இருக்கின்ற டாக்டர் கலைஞர் அவர்கள் இதே மன்றத்தில் 28—4—1974 அன்று உரையாற்றியதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அதன் மூலம் மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்களுடைய வாதத்திற்கு வலுவூட்ட விரும்புகிறேன். 1935 ஆம் ஆண்டு இந்திய அரசியல் சட்டத்தின்படி மாநிலங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பொறுத்தவரையில், அதுவும் மாநில சுயாட்சி என்று தான் அழைக்கப்பட்டது. ஆனால் அந்த மாகாண சுயாட்சியை அன்றைய தேசியவாதிகள், காங்கிரஸ் தலைவர்கள் ஒருவரும் 'மாகாண சுயாட்சி' என்று ஏற்றுக்கொள்ளவில்லை. 'கவர்னர் சுயாட்சி'



1985 ஏப்ரல் 8] [திரு. ஆர். டி. சீத்தாபதி]

என்றுதான் அழைத்தார்களே தவிர, 'மாகாண சுயாட்சி' என்று அழைக்கவில்லை. ஆனால் காங்கிரஸ் கட்சியால் அன்றைக்கு கண்டிக்கப்பட்ட 'கவர்னர் சுயாட்சி' என்பது இன்றைய அரசியல் சட்டத்திலிருந்து நீக்கப்பட்டதா என்றால் நீக்கப்படவில்லை. "1935 ஆம் ஆண்டுச் சட்டம்தான் இன்றைக்கும் அரசியல் சட்டமாக இருக்கிறது. இதனை உடைத்து எறிய வேண்டும். இது நொறுக்கப்பட வேண்டும். கிழித்து எறியப்பட வேண்டும். இதற்கு எதிராக நாடு பூராவும் அர்த்தால் நடத்தப்பட வேண்டும்" என்று சொன்னோம். ஆனாலும் அந்தச் சட்டம் திருத்தப்பட்டதா என்றால் இல்லை. அப்படி என்றால் மக்களுக்கு அளித்த வாக்குறுதியை தன்னால் நிறைவேற்ற முடியவில்லை என்கிற பொருள்பட அன்றைய தினம் டாக்டர் கலைஞர் அவர்கள் உரையாற்றியிருக்கிறார்கள். இன்றைக்கு மிகப் பொருத்தமாக மாண்புமிகு நாவலர் அவர்களுடைய வாதம் வந்திருக்கிறது. மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் 1985-86 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை இங்கே வைத்திருக்கிறார்கள். அதன்மீது விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால் 10 ஆண்டுகளுக்கு முன்னால் 1975-76 ஆம் ஆண்டில் டாக்டர் கலைஞர் அவர்கள் நிதி நிலை அறிக்கையை வைத்து கோடிட்டுக் காட்டிய கருத்துக்களை இங்கே தெரிவிக்கிறேன். ஏனென்றால் இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் பேசும்போது, "அரசு இதை இதைச் செய்யவில்லையே, அது ஏன்?" என்று கேட்டார்கள். "எத்தகைய திட்டங்களாக இருந்தாலும், அவற்றை இந்த அரசால் நிறைவேற்ற முடியவில்லையே, அது ஏன்?" என்று கேட்டார்கள். இதே கேள்வியைத்தான் அன்றையதினம் கேட்டபோது, டாக்டர் கலைஞர் அவர்கள் பதிலாகச் சொன்னார்கள். "நிதி திரட்டுவதற்குரிய உரிமை நமக்குக் குறைவு. மொத்த நிதி வசதிகள் நமக்குக் கிடைக்காமல் போய்விடுகின்றன. நாட்டின் பொருளாதாரத்தில் உரிய பங்கு கொடுக்கப்படவில்லை என்பதுதான் நமது சங்கடங்களுக்கு எல்லாம் காரணம். மத்திய அரசின் வரி விதிப்பு, பற்றாக்குறை போன்றவற்றையும் நாம் தாங்கிக்கொண்டிருக்கிறோம். பெரிய திட்டங்களைத் தீட்டுவதற்கு தயக்கம் வருவதற்கு மத்திய அரசே காரணமாக, இலக்காக இருக்கிறது என்பதை என்னால் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. நமது அரசியல் அமைப்புச் சட்டத்தின் துவக்கமே மாநில ஒன்றியம் என்பது பற்றித்தான் சொல்லியிருக்கிறது. மாநில அரசுகளும் மத்திய அரசும் கலந்தாலோசித்து முடிவெடுப்பதன் மூலம் மட்டும்தான் மாநில ஒன்றியம் என்பதற்கு உண்மையான பொருள் ஏற்படும். உண்மையான கூட்டாட்சி

அடிப்படையில் மத்திய அரசு எடுக்கும் முடிவுகள் மாநில அரசுகளைக் கலந்தாலோசித்து எடுத்த கூட்டு முடிவாக இருக்க வேண்டும்" என்று டாக்டர் கலைஞர் அவர்கள் அன்றைக்குச் சொல்லியிருக்கிறார்கள்.

மேலும், மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்களுடைய வாதத்திற்கு ஆதாரமாக ஒன்றைச் சுட்டிக்காட்டுகிறேன்.

(பிற்பகல் 1-00)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவையின் அனுமதியோடு அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் விவாதத்திற்கு அதிக நேரமும், குறிப்புகளுக்கு குறைவான நேரமும் எடுத்துக்கொள்வது நல்லது.

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** "நாங்கிருக்கிற கவலை எல்லாம் தாக்கமுடியாத பாரத்தை மத்திய ஆட்சியினர் விரும்புகிறார்களே என்பதுதான். மத்திய அரசின் வலிவு என்பது மாநிலங்கள் ஒவ்வொன்றின் தனித்தனி வலிவையும் கூட்டியதால் ஏற்பட்ட மொத்த வலிவுதான் என்றால் வாதத்திற்கு ஏற்றது; நல்லது. காரியத்திற்கும் உகந்தது. ஆனால் மத்திய அரசுதான் எல்லா உரிமைகளையும், பலத்தையும் வைத்திருக்கும்; மாநிலங்கள் தத்தித் தத்தி நடக்கும் அதிகாரம்தான் வைத்திருக்கும் என்றால், அது எதற்கும் பொருத்தமுடையதல்ல. மாநில அதிகாரங்களையெல்லாம் எடுத்து மத்திய அரசு குவித்து வைத்துக்கொள்வதால், மாநிலங்கள் பலவீனமடையும் என்பது மட்டுமல்ல, மத்திய அரசுக்கென்று புதிய வலிவு எதுவும் ஏற்பட்டுவிடாது. நாட்டுப் பாதுகாப்பு தவிர மற்ற அதிகாரங்கள் அனைத்தையும் பற்றிச் சிந்திப்போம். மாநிலங்களுக்குத் தேவையான அதிகாரங்களை மாநிலங்கள் எடுத்துக் கொள்ளட்டும். பின்னர் மாநிலங்கள் விரும்பித் தருகின்ற மீதியுள்ள அதிகாரங்களை மத்திய அரசு எடுத்துக் கொள்ளட்டும். மக்களின் சுகதுக்கத்தோடு பின்னிப் பிணைந்திருப்பது மாநில அரசுதானே தவிர, மத்திய அரசு அல்ல. ஆகவே வலிவான மத்திய அரசுதான் பிரச்சினைகளைத் தீர்க்க முடியுமென்பது தவறு. மாநில சுயாட்சி தர தயக்கம் காட்டுவார்களேயானால், அளவுக்கு மீறிய அதிகாரங்களைத் தாங்கித் தாங்கி பாதுகாப்புப் போன்ற பெரிய விஷயங்களில் கோட்டை விட்டுவிடுவார்களோ என்பதுதான் எங்கள் சந்தேகம். மேல் அதிகாரம் அனைத்தும் டில்லியில் இருப்பதை மாற்றிடத்தான் மாநில சுயாட்சித் தத்துவம் பிறந்துள்ளது" என்று அறிஞர் அண்ணா அவர்கள், 1968 ஆம் ஆண்டில் தமிழக முதல்வர் பொறுப்பை ஏற்றிருந்தபோது, முழங்கிய கொள்கையை வெற்றிபெற வைப்பதுதான்

[திரு. ஆர். டி. சித்தாபதி] [1985 ஏப்ரல் 8

ஆகவே இவ்வளவு குறைவான அதிகாரங்களை வைத்துக்கொண்டு, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் தலைமையிலே நடைபோடும் இந்த ஆட்சி செம்மையான திட்டங்களை நிறைவேற்றி வருகிறது என்பதை நான் திட்டவட்டமாகச் சொல்ல முடியும். மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் தரவேண்டுமென்று கேட்கிற நேரத்தில், ஒரு பழைய நினைவை இங்கே கொண்டுவர விரும்புகிறேன். அதிக அதிகாரம் வேண்டுமென்பதில் திராவிட முன்னேற்றக் கழகம், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு நிச்சயமாக உறுதுணையாக இருக்குமென்பதில்

(பிற்பகல் 1-05)

எனக்கு எந்தவிதச் சந்தேகமும் இல்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைத் தலைவர் அவர்களே இங்கே அமர்ந்திருக்கிறார்கள். அவர்கள் கருத்து அவ்வாறு இல்லை என்றால், எங்களுக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை என்று சொல்லியிருப்பார்கள். மௌனம் சம்மதத்திற்கு அறிகுறி என்பார்கள். அந்த வகையில் . . . . . .

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தாபதி அவர்கள் பேராசிரியர் சித்தாபதியாக மாறி, இந்த அளவுக்கு மாநில சுயாட்சி பற்றி ஆராய்ச்சி செய்திருப்பதைப் பார்க்கும்போது, மகிழ்ச்சியடைவதோடு, நாங்கள் இந்தக் கருத்தில் மாறுபடவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** 1963 ஆம் ஆண்டு மாநிலங்கள் அவையில் பேறிஞர் அண்ணா அவர்கள் உரையாற்றும்போது, எவ்வாறு தமிழகத்தில் காங்கிரஸ் ஆண்டாலும் பரவாயில்லை, அவர்களுக்கு அதிகமான அதிகாரங்கள் தரப்பட வேண்டும் என்று கேட்டார்களோ, அப்படி இங்கே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜெயலட்சுமி அவர்கள் எங்களுக்கு உறுதுணையாக இருப்பார் என்ற நம்பிக்கையோடு நான் இன்னொரு கருத்தையும் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். முன்பு இங்கே காங்கிரஸ் ஆட்சி நடந்தபோது, நிதியமைச்சராக இருந்த திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்தபோது, "நாங்கள் கேட்பது மாநிலங்களுக்கு அதிக அதிகாரம். அதற்கு நீங்களும் ஒத்துழைப்பு தர வேண்டும்" என்று கேட்டார்கள் . . .



1985 ஏப்ரல் 8] [திரு. ஆர். டி. சீத்தாபதி]

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அம்மையார் அவர்களுடைய பெயரைச் சொல்லும்போது, திருமதி வி. ஜெயலட்சுமி என்பதற்குப் பதில் இரண்டு முறையும் 'விஜயலட்சுமி' என்று சேர்த்தே சொல்லிவிட்டார். அவராகவே திருத்திச் சொல்லுவார் என்று எதிர்பார்த்தேன். இரண்டு முறையும் அவ்வாறு சொல்லிவிட்டதால், அம்மையார் அவர்களின் பெயரை முறையாக திருமதி வி. ஜெயலட்சுமி என்றே சொல்ல வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** 1957 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது நடந்த விவாதத்திற்குப் பதில் சொல்லும் வகையில் ஜூலை 5 ஆம் தேதியன்று திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் பேறிஞர் அண்ணா அவர்களுக்கு பதில் சொல்லும் வகையில் தெரிவித்த கருத்துக்களை, ஒரு மூன்று பாராக்களை மட்டும், மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

"இன்று நாம் எல்லோரும் நமது ராஜ்யம்—இராஜ்யம் என்ற வார்த்தை எங்களுக்கு வராது. (அப்போது மாநிலத்தைப் பற்றிக் குறிப்பிடுவதற்கு அவர்கள் பயன்படுத்திய வார்த்தை அது) முழுவதும் முன்னேற வேண்டும் என்று பேசுகிறோம். நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து ராஜ்யத்தின் முன்னேற்றத்திற்குப் பாடுபடுவோம். அப்படி நாம் பாடுபடும்போது "முன்னேற்றத் திட்டங்களில் மத்திய அரசாங்கத்தார் நமக்குப் பாகுபாடு செய்துவிட்டார்கள். அவர்கள் நம்மை வேறு விதமாகக் கருதுகிறார்கள். நம் ராஜ்யத்தின் (அதாவது தமிழ்நாட்டில்) ஏற்பட்டிருக்க வேண்டிய அளவு முன்னேற்றம் இதனால்தான் ஏற்படவில்லை" என்று உணர்வோமானால் அப்போது நாம் எல்லோரும் சேர்ந்து நாட்டைப் பிரிக்க வேண்டுமென்ற இயக்கத்தைக் கிளப்பலாம்".

இதை யார் சொல்லியிருக்கிறார் என்றால், காங்கிரஸ் பேரியக்கத்தின் தலைவரான திரு. காமராஜர் அவர்களைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு, திரு. பக்தவத்சலம் அவர்களைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு, அன்றைய நிதியமைச்சராக இருந்த திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் "நாட்டின் விடுதலைக் கிளர்ச்சிக்கு காங்கிரஸ் தயார்" என்று அன்றைக்குக் குரல் கொடுத்திருக்கிறார்கள். இன்றையதினம் நாங்கள் விடுதலைக் கோரிக்கையை விட்டுவிட்டு இந்தியாவோடு ஒன்றாக இருக்க வேண்டும் என்று முயற்சித்துக் கொண்டிருக்கிறோம். அதற்காகத்தான் மாநிலத்திற்கு அதிக அதிகாரம் தேவை என்கிறோம். எங்களுடைய ஆட்சியை நன்றாக நடத்த அதிகமான அதிகாரம்

[திரு. ஆர். டி. சீத்தாபதி] [1985 ஏப்ரல் 8

தேவை என்றுதான் நாங்கள் கேட்டுக் கொண்டிருக்கிறோம். இப்போதுள்ள அதிகாரங்களை வைத்துக்கொண்டு எந்த அளவுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் முயற்சித்துக் கொண்டிருக்கிறார் என்பதை நாம் எல்லோரும் அறிவோம்.

(பிற்பகல் 1-10)

மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் அதிகமாக மேற்கோள் காட்ட வேண்டாம் என்று சொன்னதால், ஒன்றிரண்டை மட்டும் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். அவை முன்னவர் அவர்கள் ஆளுநர் உரைமீது பேசும்போது நமது சட்டங்கள் அமுல்செய்யப்படாமல் டில்லியில் எவ்வாறு தேங்கி இருக்கின்றன என்று குறிப்பிட்டபோது, டாக்டர் கலைஞர் அவர்கள் இதெல்லாம் தேவைதானா என்று கேட்டார்கள். நான் பழைய பல்லவிக்குப் போக விரும்பவில்லை. ஆனாலும் அவர் ஆட்சி நடத்திய நேரத்தில் இப்படிப் பட்ட திட்டம் இருந்ததா என்றால் இல்லை. அகில இந்திய அண்ணா தி.மு.க. ஒரு திட்டத்தைக் கொண்டுவந்தால், இங்கே அதற்கு உள்நோக்கம் கற்பித்து பத்திரிகைகளில் வந்த செய்திகளையெல்லாம் படித்தார்கள். இறுதியில் உள்ளதையும் படிப்பார்கள் என்று நான் பார்த்துக் கொண்டிருந்தேன். ஆனால் இறுதியில் இருந்தது என்னவென்றால் "தலைமை மாற வேண்டும்" என்று அறிவுரை தந்திருக்கிறார்கள். கலைஞர் அவர்கள் தமக்கே உரிய சாமர்த்தியம் காரணமாக அதைக் 'கட்' செய்துவிட்டு மற்றதைமட்டும் படித்தார்கள்.

அவர் 1972 ஆம் ஆண்டு மேட்டூர் மால்கோ நிறுவனத்தை அரசுடமை யாக்கும் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அந்த மசோதா டெல்லியில் இருந்தபோது, அவர் சொன்ன காரணம், "அந்த மசோதா எங்கே இருக்கிறது என்றால் குடியரசுத் தலைவருடைய காகிதக் கூடையின்கீழ் கண் மூடிக் கொண்டிருக்கிறது" என்று தனக்கே உரிய இலக்கிய நயத்தோடு குறிப்பிட்டார்கள். எங்களாலே முடியவில்லை என்று கைவிரித்துக் காட்டினார். அதைப்போலவே 1972 ஆம் ஆண்டில் தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தில் பங்கு தர வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது—சுதந்திர தின நாளில்—ஒரு சட்டம் கொண்டு வர விரும்பினோம். அந்தச் சட்டத்தையும் டெல்லிக்கு அனுப்பினோம். ஆனால் அது முடிந்ததா என்றால் அவரே சொன்னார் "பிரதமர் பாராட்டினார். ஆனால் அதற்கு அனுமதி மட்டும் தரவில்லை". எனவே இப்படிப்பட்ட நிலையைப் போக்க வேண்டும் என்று தான் புரட்சித் தலைவர் அவர்கள் இன்றையதினம் மத்திய அரசோடு நல்ல "உறவு நிலையை" உருவாக்க வேண்டும் என்று காரியமாற்றிக் கொண்டிருக்கிறார்.



1985 ஏப்ரல் 8] [திரு. ஆர். டி. சீத்தாபதி]

அடுத்து தமிழ் நாட்டில் பற்றி எரிந்து கொண்டிருக்கிற ஒரு பிரச்சினையைப்பற்றி நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். மாண்புமிகு அவை முன்னவர் அவர்களும் இங்கே அறிக்கை தந்திருக்கிறார்கள்; சட்டப் பேரவையிலும் அறிக்கை தந்து பேசியிருக்கிறார்கள். இங்குள்ள மக்கள் தொலைக் காட்சியை ஒரு பொழுது போக்குக்காகத்தான் பார்க்கிறார்கள். ஆனால் இன்றையதினம் தொலைக் காட்சி என்பது தொல்லை தருகிற காட்சியாக மாறியிருக்கிறது. அதற்காக நான் கடிதம் எழுதியிருக்கிறேன் என்று அவை முன்னவர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். அதற்கு பதில் வந்ததோ இல்லையோ எனக்குத் தெரியாது. ஆனால் நேற்றிரவுவரை அந்த நிகழ்ச்சி ஒதுக்கப்பட்டதா என்றால் இல்லை. எனவே இந்தி மீண்டும் தமிழ் நாட்டில் புகுந்துவிடுமோ என்ற அச்சம் தமிழ் நாட்டு மக்கள் மத்தியிலும் இளைஞர்கள் மத்தியிலும் இன்றைய தினம் வேரூன்றிக் கொண்டிருக்கிறது. அதற்கு எண்ணெய் ஊற்றி எரிய விடுவதைப்போல் வெளிவந்த செய்தியை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இந்தியக் குடியரசுத் தலைவர் இன்றையதினம் எரிகிற நெருப்பில் எண்ணெய்யை ஊற்றுவதுபோல் சண்டிகார் பல்கலைக் கழகத்தில் பேசியிருப்பதை, மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

"இந்தி விரைவாக வளர்ச்சி பெற்று அதற்குரிய இடமான தேசிய மொழி அந்தஸ்து பெறுவதை உறுதி செய்யும் வகையில் பாடுபட வேண்டும்" என்று ராஷ்டிரபதி ஜைல்சிங் கூறினார்.

ராஷ்டிரபதி பஞ்சாப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் ஞாயிற்றுக் கிழமையன்று சிறப்புரை நிகழ்த்துகையில் மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

"மேற்கு ஜெர்மனி, ரஷ்யா, சீனா போன்ற முன்னேற்றமடைந்துள்ள நாடுகள் அந்தந்த நாட்டு மொழிகளிலேயே இஞ்சினியர்கள், டாக்டர்கள் விஞ்ஞானிகள் இதர கல்விமான்களை உருவாக்கிக் கொண்டு வருகின்றன. அவ்வாறிருக்க வளரும் நாடான இந்தியா இன்னும் ஆங்கிலத்திலேயே மேற்கண்டவர்களை உருவாக்கி வருவதுடன் ஆங்கிலத்திற்குப் பதில் இந்தி மொழியில் இன்னும் கல்வி போதனை நடைபெறாதது வியப்பாக இருப்பதாகவும் ராஷ்டிரபதி தெரிவித்தார் . . . ."

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : ஆளுநர், மற்றும் குடியரசுத் தலைவர் ஆகியோருடைய பேச்சுக்களைத் தெரிவிப்பதில் தவறு இல்லை. ஆனால் அவர்களை விவாதத்திற்குரிய பொருளாக, பிரச்சினைக்குரிய பொருளாக ஆக்குவது நல்லதல்ல என்பதை மட்டும் நான் இங்கே நினைவு படுத்த விரும்புகிறேன்.

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** நான் அவர்களை விவாதப் பொருளாக்க விரும்பவில்லை. ராஷ்டிரபதி தெரிவித்த அவருடைய கருத்துக்களை மட்டும் அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

"இந்தி மொழியில், இன்னும் கல்வி போதனை நடைபெறாதது வியப்பாக இருப்பதாகவும் ராஷ்டிரபதி தெரிவித்தார்."

அதுமட்டுமல்ல. அவர் மேலும் சொல்லியிருக்கிறார் "கல்வி ஸ்தாபனங்கள் போன்றவற்றில் இந்தி மொழி துரித வளர்ச்சி காண வேண்டும் என்றார் ராஷ்டிரபதி ஜைல் சிங்."

இதை நான் இங்கே தெரிவிப்பதற்குக் காரணம் குடியரசுத் தலைவரை விமர்சிப்பதற்காக அல்ல. ஆனால் இந்தி பேசாத மக்களுக்கு பண்டித நேரு அவர்கள் கொடுத்த வாக்குறுதி என்னவாயிற்று என்பதை மட்டும் நான் இந்த அவையில் கேட்க விரும்புகிறேன். காரணம் இந்த அரசு கல்விக்காக அதாவது இருமொழித் திட்டக் கொள்கைக்காக இந்த ஆண்டு சுமார் 468 கோடி செலவழிக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் இந்தி எந்த அளவுக்கு வேகமாக இங்கே வர முயற்சிக்கிறது என்பதை எண்ணிப் பாக்க வேண்டும்.

(பிற்பகல் 1-15)

* **திருமதி வி. ஜெயலட்சுமி :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய நண்பர் திரு. சீத்தாபதி அவர்கள் சற்றுமுன்பு அப்போது நிதி அமைச்சராக இருந்த திரு. சி. சுப்பிரமணியம் அவர்களை மேற்கோள் காட்டிப் பேசினார்கள். அதே திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் மேற்கோள் காட்டியதை இந்த அவைக்கு நினைவூட்டலாம் என்று நினைக்கிறேன். ஒரு அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டத்திலே இந்தியை ஆட்சி மொழியாகக் கொண்டுவருவதைப்பற்றி விவாதம் வந்தபோது, அவர், "தமிழகத்தைப் பொறுத்தவரை இந்தியை ஆட்சிமொழியாகக் கொண்டுவருவதை தமிழகத்து மக்கள் முழுமையாக ஏற்றுக்கொள்ளும் வரையிலும் அதை ஆட்சிமொழியாகக் கொண்டுவரக்கூடாது" என்று மிகத் தெளிவாகச் சொன்னார்கள். அப்போதே அங்கே இருந்த வேறு பல தலைவர்கள், அதற்கு "எவ்வளவு காலம் செல்லும்?" என்று கேட்டபோது, "As long as the Tamilians will like" என்று அப்போதே உறுதிமொழி கொடுத்திருக்கிறார்கள். ஆகவே இந்தி மொழி ஆட்சி மொழியாக வரக்கூடாது என்பதைப்பற்றி திராவிட முன்னேற்றக் கழகமும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் மட்டும்தான் தீவிரமாக





இருக்கின்றன என்பதுபோல் தயவுசெய்து நினைக்க வேண்டாம். இந்த விஷயத்தில் காங்கிரஸ் உறுப்பினர்களும் எந்த அளவுக்குப் பங்கு கொள்ள வேண்டுமோ அந்த அளவுக்கு பங்கு கொள்வதற்குத் தயாராக இருக்கின்றோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், தமிழகத்தினுடைய ஆட்சி மொழியாக இருப்பது வேறு, அகில இந்திய அளவிலே ஆட்சிமொழியாக ஒன்று வரவேண்டும் என்பதிலே கொள்கை அளவிலே நாங்கள் வித்தியாசப் பட்டிருக்கலாம். ஆனால் அதற்காக தமிழகத்திலே இந்தியை ஆட்சி மொழியாகத் திணிக்கவிட மாட்டோம் என்பதில், நீங்கள் இருவரும்தான் மிகவும் தீவிரமாக இருப்பதுபோல காட்டி, தமிழக மக்களை மீண்டும் மீண்டும் திசை திருப்ப வேண்டாம் என்று சொல்லிக்கொள்கின்றேன். மேலும் உங்களுக்குள்ளே எவ்வளவு கருத்து வேறுபாடுகள் இருந்தாலும்கூட இப்படிப்பட்ட சில விஷயங்களில் நீங்கள் இருவரும், அந்தக் காலத்திலே நீங்கள் சொல்வதுபோல, இரட்டைக் குழல் துப்பாக்கிகளாகத்தான் செயல்படுவீர்கள் என்பது எங்களுக்குத் தெரியும். நாங்களும் இந்தமாதிரி 'சென்டிமென்ட்' விஷயங்களில் எவ்வளவு ஜாக்கிரதையாக அடி எடுத்து வைக்க வேண்டுமோ அந்த அளவுக்கு ஜாக்கிரதையாக அடி எடுத்து வைப்போம். இந்தியை தமிழ் நாட்டில் ஆட்சி மொழியாகக் கொண்டுவரக்கூடாது என்பதில் காங்கிரஸ்காரர்களும் மிகவும் தீவிரமாக இருக்கிறார்கள் என்பதையும் நான் இந்த மன்றத்தின் முன்னால் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜெயலட்சுமி அம்மாள் அவர்கள் நீண்ட விளக்கத்தைத் தந்தார்கள். ஆனால் அவர்களாலும் கூட இந்தி தமிழகத்தில் நுழையாது, அவ்வாறு நுழைவதை அனுமதிக்க மாட்டோம் என்று சொல்ல முடியவில்லையே என்றுதான் நான் வருத்தப் படுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜெயலட்சுமி அவர்கள் இரட்டைக் குழாய் துப்பாக்கி என்று தமிழகத்திலேயுள்ள திராவிட முன்னேற்றக் கழகம், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய இரண்டையும் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அதுவேறு விஷயம். இப்போது மணி 1-17 ஆகிறது. அவை முன்னவர் அவர்கள் ஒரு மணிக்கே போக வேண்டும் என்று சொன்னார்கள். எனவே உறுப்பினர்கள் இடையிலே குறுக்கிடாமல் இருந்தால், கூட்டத்தை நாம் விரைவாக முடிக்கலாம்.

[1985 ஏப்ரல் 8

திரு. ஆர். டி. சீத்தாபதி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உங்களுக்கு அந்த சங்கடத்தை அளிக்காமல் விரைவில் முடித்துவிடுகிறேன். அவை முன்னவர் அவர்களிடம் ஏற்கெனவே அனுமதி பெற்றிருக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : எவ்வளவு நாழி பேசுவதற்கு என்று அனுமதி பெற்றிருக்கிறார்கள் என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். (சிரிப்பு)

திரு. ஆர். டி. சீத்தாபதி : நான் பேசுகிறவரை அனுமதி நிச்சயமாக அவர்கள் தருவார்கள் என்ற நம்பிக்கை உண்டு.

இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தியைப்பற்றிச் சொன்னார்கள். நான் பதில் சொல்வதைவிட பண்டித ஜவஹர்லால் நேரு, எங்கள் அண்ணாவாலே, இந்தியாவின் தலைசிறந்த ஜனநாயகவாதி என்று பாராட்டுப் பெற்ற நேரு அவர்கள் சொல்லுகின்ற அந்தக் கருத்தை இங்கே சொல்வது பொருத்தம் என்று நான் கருதி அதை இங்கே எடுத்து வைக்க விரும்புகிறேன்.

"1959 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் இந்தி பேசாத மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதி. அவர்களுக்கு பதிலாக நான் தெரிவிக்க விரும்புகிறேன். தமிழ், தெலுங்கு, மராத்தி, குஜராத்தி போன்ற மாநில மொழிகள் அந்தந்த மாநிலங்களில் போதனா மொழிகளாக உள்ளது என்பதை நாம் மறுக்க முடியாது. இந்தப் புதிய ஏற்பாடு நம்முடைய தலைமுறைக்கு முழுவதும் மாறானதோர் எதிர்கால தலைமுறையை படைக்கப்போகிறது. தற்போதுள்ள சிக்கல் இந்தி மொழியா அல்லது ஆங்கிலமா என்பதல்ல என்பதை நாம் உணர வேண்டும். அது 14 தேசிய மொழிகளுக்கும் அல்லது 14 மொழிகளுக்கும் மேற்பட்டு அரசியல் சட்டத்தில் சொல்லப்படாத பல மொழிகளைச் சார்ந்த ஒரு பிரச்சினை. அந்த மொழிகளில் எல்லாம் தற்போது கல்வி கற்பிக்கப் படுகிறது. எனவே தவிர்க்க முடியாத நிலையில் ஆங்கிலம் இரண்டாம் மொழியாக ஆகிவிடுகிறது. இனி அது முதன்மையான தகுதியைப் பெற முடியாது. இந்தியைக் காட்டிலும் நிறைந்த வளத்தையும், இலக்கியங்களையும் பல இந்திய மொழிகள் பெற்றுள்ளன என்பது என்னுடைய அசைக்கமுடியாத நம்பிக்கையாகும்." "இந்திய மொழிகளில் தமிழ் தொன்மைவாய்ந்த மொழி" என்று அவர் எழுதி இருக்கிறார், தன்னுடைய 'லைப் ஹிஸ்டரி'யிலே. தமிழிலே சமஸ்கிருதம் புகுந்து பல்வேறு மொழிகளை ஆக்கியது என்று நேரு குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் நம் நாட்டில் உள்ள மொழிகளில் ஏதோ ஒரு மொழி ஆட்சி மொழியாக வேண்டும் என்பதாலே, இந்தி மொழி ஆட்சி



1985 ஏப்ரல் 8] [திரு. ஆர். டி. சீத்தாபதி]

(பிற்பகல் 1-20)

மொழியாகிறது. இந்தி திணிப்பு கூடாது என்று சொல்வதினுடைய நோக்கம், பொருள் அதுதான். "சென்னையோ, ஆந்திரமோ, கேரளமோ அல்லது வேறு எந்த மாநிலமோ தங்கள் மேல் இந்தி திணிக்கப்படவில்லை என்று கருதக் கூடிய வகையில் ஒரு மொழியை அம்மாநிலங்களின் மேல் திணிக்க நான் விரும்பவில்லை. அவர்கள் மேல் திணிக்கப்படுகிறது என்று அந்த மாநிலம் கருதுமேயானால் அம்மொழியை அம்மாநிலத்தில் திணிக்க நான் விரும்ப வில்லை. திணிக்கப்பட்ட மொழியினை எதிர்த்து அவை செயல்படுகின்றன. தமிழகம் எங்கும் கட்டாயம் இந்தி வேண்டாமென்று கூறினார்கள். அம்மாநிலத்திலே கட்டாய இந்தி தேவையில்லை. அதுவரையில் நாம் சற்று வளைந்து கொடுக்க வேண்டும்" என்று தெரிவித்திருக்கிறார்கள். அதுமட்டு மல்ல, துணைத் தலைவர் அவர்களே, நேரமாகிவிட்ட காரணத்தினால், நான் அதை முழுவதுமாகப் படிக்காமல் அடுத்த கட்டத்திற்கு வருகிறேன். 7—8—1959 ஆம் ஆண்டு நான் இரண்டு காரியங்களை யோசனையாகக் கூற விரும்புகிறேன். முதலாவதாக நான் ஏற்கெனவே கூறியபடி, இந்தி திணிக்கப் படக்கூடாது. இரண்டாவதாக முடிவு இல்லாத கால அளவுக்கு எவ்வளவு நீண்ட காலம் என்று எனக்குத் தெரியாது. அரசு காரியங்களுக்காகப் பயன் படுத்துவதற்கு துணை இணை மொழியாக ஆங்கிலம் இருக்கும். மக்கள் எத்தனைக் காலம் விரும்புகிறார்களோ அதுவரை ஆங்கிலம் மாற்று மொழியாக இருக்கும். அதனை மாற்ற முடிவு எடுப்பதை இந்தி பேசும் மக்களுக்கு நாங்கள் விடமாட்டோம் என்ற சொல்வது யார்? பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள். அவர் சொல்கிறார், அதை யாருக்கு விடுவேன் என்று சொன்னால், "இந்தி பேசாத மக்களே இந்த இறுதி முடிவை மேற்கொள்ள வேண்டும்" என்று சொல்லியிருக்கிறார். இந்தி பேசாத மக்கள் விரும்புகிற வரையிலும் அது இருக்கும் என்று பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் 7— —1959-ல் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் இதைச் சொல்வதற்குக் காரணம், இவ்வளவு அவசரப்படுகிறார்களே என்பதற்காகத் தான். எங்களுடைய அவை முன்னவர் அவர்கள் ஒரு சாதாரண விஷயம், பெரிய விஷயமல்ல, டி.வி.யிலே இருக்கிற இந்தி நிகழ்ச்சி 8½ மணிக்குத் தேவையில்லை என்று சொன்னால், மத்திய அரசு இன்னும் தயக்கம் காட்டிக் கொண்டிருக்கிறது. 6 நாட்களுக்கு முன் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகை யில் அரசியல் சட்டத்தை உருவாக்கியவரே ஒரு கட்டுரையை எழுதியிருக் கிறார். அதை, உங்கள் மூலமாக இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு

வருகிறேன். டில்லியிலே இருக்கிற நம்முடைய பிரதமர் திரு. இராஜீவ் காந்தி அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். யார் அந்த அரசியல் சட்டத்தை உருவாக்கினாரோ, அவரோ அந்தக் கருத்தைச் சொல்லியிருக்கிறார். அந்தக் கருத்தை உங்கள் முன்னாலே வைக்க விரும்புகிறேன். காரணம் நான் ஏற்கெனவே அனுமதி வாங்கிவிட்டேன். காங்கிரஸ் தியாகியும், அரசியல் சட்ட நிர்ணய சபை, உறுப்பினருமான திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி அவர்கள் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஏட்டிலே 6—4—1985 அன்று எழுதிய கடிதத்தில் "பஞ்சாப் பல்கலைக் கழக பட்டமளிப்பு விழாவில் நம் தேசிய குடியரசுத் தலைவர் திரு. ஜெயில்சிங் அவர்கள் இந்தி மொழிக்கு உரிய அங்கீகாரம் தரப்பட வேண்டுமென்று கூறியிருப்பதாகவும், சுதந்திரம் பெற்று 32 ஆண்டுக் காலமாகியும் இந்தி உரிய இடத்தைப் பெறமுடியாமல் இருப்பது கண்டு வருந்தப் படவேண்டிய விஷயம் என்று கூறியிருப்பதாகவும், 10 ஆண்டுகளுக்குத் தான் ஆங்கிலம் வைத்திருக்கப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டும் ஆங்கிலம் இன்றையதினம் கூட அதிகம் ஆதிக்கம் செலுத்துகிறது என்று கூறியதாகவும், அடிமைத்தனத்தின் கடைசி சின்னமான ஆங்கிலத்தை அகற்றுமாறு அவர் கல்வியாளர்களுக்கு வேண்டுகோள் விடுத்ததாகவும், செய்திகள் வந்துள்ளன. அரசியல் சட்டத்தை உருவாக்கியவர்களுள் நானும் ஒருவன். அரசியல் சட்டத்தை உருவாக்கிய நாங்கள் இந்தியையோ வேறு எந்த மொழிகளையோ தேசிய மொழிகளாக ஏற்கவில்லை. இந்தி மத்திய அரசில் நிர்வாகக் காரியங்களுக்கு ஆட்சி மொழியாக மட்டுமே ஏற்கப்பட்டது. ஆங்கிலம் இந்தியக் குடிமகனின் ஆட்சிமொழியாக, முதல் 15 ஆண்டுகளுக்கு ஆட்சி மொழியாக, பிரகடனம் செய்யப்பட்டது. குடியரசுத் தலைவர் கூறுவதுபோல், முதல் 10 ஆண்டுகள் இல்லை. மேலும் இந்தி பேசாத மக்கள் விரும்பும் வரை ஆங்கிலம் இணை ஆட்சிமொழியாக நீடிக்கும், பயன்படுத்தப் பட வேண்டுமென்று மக்களுக்கு பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் வாக்குறுதி தந்துள்ளார்கள். ஆங்கிலம் அடிமைத் தளத்தின் கடைசி சின்னம். அது ஒட்டுமொத்தமாக நீக்கப்படுமென்று கூறுகிறாரா குடியரசுத் தலைவர்? நம் நாட்டில் ஆங்கிலம் நீடிப்பது அடிமைத்தனத்தின் சின்னம் இல்லை. முரண்பாடு நிறைந்த இந்தியா என்னும் நாட்டை ஒன்றுபடுத்தியது ஆங்கிலமே.

(பிற்பகல் 1-25)

எனவே இன்றைய தினம் மத்திய அரசின் கூடுதல் ஆட்சி மொழியாக நீடிக்கும் ஆங்கிலத்தை தரம் குறைக்கவோ, நீக்கவோ செய்யப்படும் முயற்சி எதுவும் நாட்டின் ஒற்றுமைக்கே ஆபத்தாக முடியும்" என்று அவரே சொல்லுகிறார். அவை முன்னவர் அவர்கள் சொன்னால் வருத்தப்படுவார்கள்.





அவரே மேலும் சொல்லுகிறார், "தொலைக்காட்சியில் தமிழ் காட்சிகளின் நேரத்தைக் குறைத்தல், அதில் கூடுதலாக இந்தி நிகழ்ச்சிகளை நடத்துதல் உள்ளிட்ட பல வழிகளில் தமிழ் நாட்டின் மீது இந்தியைத் திணிக்க முனைவது துரதிருஷ்டமானதாகும்" இப்படி அரசியல் சட்டத்தை உருவாக்கிய திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி அவர்கள் கடிதம் எழுதியிருக்கிறார்கள். இந்த அவையின் முன்னவர் திரு. ஆர். எம். வீ. அவர்கள் சொன்னால் வருத்தப்படுவார்கள். தொலைக்காட்சியில் எந்த அளவிற்குத் தொல்லை என்பதை அரசியல் சட்டத்தை உருவாக்கியவர்கள் சொல்லுகிற நேரத்தில், ஏன் இன்னும் மத்திய அரசு தயக்கம் காட்டுகிறது என்பது அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கேள்வி: முதலமைச்சரும் கடிதம் எழுதுவதாக அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். நான் ஒன்றை டில்லி பேரவைக்கு நினைவு படுத்த விரும்புகிறேன்.

கோடம்பாக்கம் மாநாட்டில் இதே இந்தி நாட்டில் இரண்டாம் மொழியாக ஆக்கப்பட வேண்டும் என்பதற்காக மறைந்த சொல்லின் செல்வர் திரு. ஈ. வி. கே. சம்பத் அவர்கள் நடத்திய மாநாட்டில், திரு. பாபு ராஜேந்திர பிரசாத் அவர்கள் வருகிற நேரத்தில் அப்போது மேயராக இருந்த திரு. அப்துல் காதர் அவர்கள் கறுப்புக் கொடி காட்டுகிற நிகழ்ச்சியை அறிஞர் அண்ணா அவர்கள் உருவாக்கினார்கள் என்று கருதுகிறேன். என்னுடைய நினைவு எல்லாம் பின்னுக்குச் செல்கிறது. நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் 'போர்வாள்' வெளியீட்டு விழாவில் பேசிய நேரத்தில், "இந்தியைப் படித்து எல்லோரும் பயன் அடைய வேண்டும். அப்போதுதான் புரமோஷன் என்று சுற்றறிக்கை வந்திருக்கிறது. இப்படி வருமானால் திராவிட நாடு திராவிடருக்கே என்று கைவிடப்பட்ட பழைய நிலைக்கே செல்ல நேரிடும்" என்று சொல்லியிருக்கிறார். இதை யார் சொன்னது தெரியுமா, 'கோழை' என்று யாரைச் சொல்லுகிறார்களோ அவர்தான் சொன்னார். கலைவாணர் அரங்கில் சொன்னார். அப்போது அவை முன்னவர் அவர்கள்கூட அமர்ந்திருந்தார்கள். 'இந்தியைப் படித்தால்தான் புரமோஷன் என்று சொன்னால், திராவிட நாடு திராவிடருக்கே என்று கைவிடப்பட்ட அந்த பழைய நிலைக்குத் திரும்ப நேரிடும். அந்த பழைய நிலைக்குச் சந்திரன் பழைய நிலைக்கே திரும்ப நேரிடும். இந்த எம். ஜி. இராமச்சந்திரன் பழைய நிலைக்குத் திரும்பாமல் பார்த்துக்கொள்வது மத்திய சர்க்காரின் பொறுப்பு" என்று கூறியிருக்கிறார். இந்தியை இந்த நாட்டில் புகுத்தவிட மாட்டோம். இது எங்களுடைய இரத்த நாளங்களில் ஊறிப்போன கொள்கை. நிச்சயமாக அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இதிலிருந்து பின் வாங்காது என்பதைத் தெரிவித்து, மத்திய சர்க்கார் தொலைக் காட்சியில்

1985-86 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீது
பொது விவாதம்.

[திரு. ஆர். டி. சீத்தாபதி] [1985 ஏப்ரல் 8

இந்தி திணிப்பதைத் தடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இல்லையென்றால் "எங்களுக்கு ஆணையிடுங்கள், போராட்டத்திற்கு தேதி குறிப்பிடுங்கள், நாங்கள் சென்று வருகிறோம், வென்று வருகிறோம்" என்று கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

## 4. அறிவிப்பு.

மேலவை உறுப்பினர் திரு. அ. மயில்சாமி கைது செய்யப்பட்டது குறித்து.

**மாண்புமிகு** பேரவைத் துணைத் தலைவர் : சென்னை காவல் துறை ஆணையாளரிடமிருந்து மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு வரப்பெற்ற தகவலை அவைக்குத் தருகிறேன் :

"I have the honour to inform you that Thiru A. Mayil-
samy, M.L.C., was arrested along with other members of the Tamil
Nadu Graduate and Post Graduate Teachers' Association at 10-30
hours today (8th April 1985) in X-Station Crime No. 225|86 under
Section 151 Cr.P.C. when he and his followers attempted to picket
the Office of the Director of School Education on College Road,
Nungambakkam, Madras, over their 12-point Charter of Demands and
removed to the City Police Office, Madras-8".

மேலவையின் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை 9—4—1985 செவ்வாய்க் கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும்.
பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 1-29)

## 5. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

அ. சட்டப்படியான விதிகளும், ஆணைகளும்.

145. [illegible] மட்டும் திருநெல்வேலி மாவட்டத்தை அறிவிக்கப்பட்ட [illegible] குறித்து வேளாண்மைத் துறையின் 18—1—1985 ஆம் நாளிட்ட [illegible] ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.).



146. கோயம்புத்தூர், பல்லடம் மற்றும் மலையாடிபாளையத்தைச் சேர்ந்த அறிவிக்கப்பட்ட அங்காடிகள் பகுதிகளிலிருந்து சில கிராமங்களை நீக்கம் செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 2—1—1985 ஆம் நாளிட்ட 10 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளை பொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப் படுகிறது.).

147. தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தினரால் விற்கப்படும் காகிதங்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள்-அறநிலையத்துறையின் 15—11—1984 ஆம் நாளிட்ட 1247 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது).

148. தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு அமைச்சர்கள் பயணப்படி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பொதுத் துறையின் 13—10—1984 ஆம் நாளிட்ட 1750 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14(3) பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது).

149. தமிழ்நாடு 1968 ஆம் ஆண்டு மரக்கட்டை இடைமாறுபாட்டு விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வன-மீனளத்துறையின் 19—12—1984 ஆம் நாளிட்ட 1318 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. A (தமிழ்நாடு 1882 ஆம் ஆண்டு வனச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 5/1882) 64 பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது).

150. தமிழ்நாடு 1962 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வேளாண்மைத்துறையின் 11—2—1985 ஆம் நாளிட்ட 227 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.).

151. ஜீவா போக்குவரத்துக் கழகத்தின் 1983—84 ஆம் ஆண்டிற்கான முதலாம் ஆண்டறிக்கை. (தமிழ் மற்றும் ஆங்கிலம்). [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619 (A) பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது].

Vol 214 No. 2

பொருளடக்கம்

16 ... 1985

பக்கங்கள்

1. வினாக்கள்—விடைகள் .. .. .. 105—122

2. அறிவிப்புகள்—

(1) மேலவை உறுப்பினர் திரு. அ. மயில்சாமி கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப் பட்டது .. .. .. 123

(2) 1985-86 ஆம் ஆண்டுக்கான அலுவல் ஆய்வுக் குழுவிற்கு உறுப்பினர்கள் நியமனம் .. .. .. 123

(3) 1985-86 ஆம் ஆண்டுக்கான விதிக் குழுவிற்கு உறுப்பினர்கள் நியமனம் .. 124

(4) 1985-86 ஆம் ஆண்டுக்கான அரசு உறுதி மொழிக் குழுவிற்கு உறுப்பினர்கள் நியமனம் .. .. .. 124

(5) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவுகள் .. 125

(6) மேலவை உறுப்பினர் திரு. பா. ரா. தாமஸ் கைது செய்யப்பட்டது .. 174

3. தகவல் கோரல்—

ஒத்தி வைப்புத் தீர்மானங்களை எடுத்துக் கொள்ளாதது குறித்து .. .. 125—128

4. கவன ஈர்ப்பு—

(1) மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றி வரும் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் அனைவரையும் அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதலே பணி வரன் முறை செய்யாததால் அவ்வாசிரியர்கள் படும் இன்னல் குறித்து .. .. .. 129—132

(2) மாணவர் உதவித் தொகை பெறுவதற்கு 90 சதவிகித கட்டாய வருகை நியதியும் அதன் விளைவாக மாணவர்கள் அடையும் இடர்பாடும் குறித்து .. .. 132—134

5. 1985-86 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி. 134—

6. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.. .. 216—217

D

143948

D 2 C 16—V211,32'N85
N85.214.1-3;1

Vol 214 No. 2

பொருளடக்கம்

16 ... 1985


பக்கங்கள்

வினாக்கள்——விடைகள் .. .. .. 105—122

அறிவிப்புகள்—

(1) மேலவை உறுப்பினர் திரு. அ. மயில்சாமி கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப் பட்டது .. .. .. 123

(2) 1985-86 ஆம் ஆண்டுக்கான அலுவல் ஆய்வுக் குழுவிற்கு உறுப்பினர்கள் நிய மனம் .. .. .. .. 123

(3) 1985-86 ஆம் ஆண்டுக்கான விதிக் குழுவிற்கு உறுப்பினர்கள் நியமனம் .. 124

(4) 1985-86 ஆம் ஆண்டுக்கான அரசு உறுதி மொழிக் குழுவிற்கு உறுப்பினர்கள் நிய மனம் .. .. .. 124

(5) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவுகள் .. 125

(6) மேலவை உறுப்பினர் திரு. பா. ரா. தாமஸ் கைது செய்யப்பட்டது .. 174

3. தகவல் கோரல்—

ஒத்தி வைப்புத் தீர்மானங்களை எடுத்துக் கொள்ளாதது குறித்து .. .. 125—128

4. கவன ஈர்ப்பு—

(1) மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றி வரும் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் அனைவரையும் அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதலே பணி வரன் முறை செய்யாததால் அவ்வாசிரியர்கள் படும் இன்னல் குறித்து .. .. .. 129—132

(2) மாணவர் உதவித் தொகை பெறுவதற்கு 90 சதவிகித கட்டாய வருகை நியதியும் அதன் விளைவாக மாணவர்கள் அடை யும் இடர்பாடும் குறித்து .. .. 132—134

5. 1985-86 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக் கையின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி. 134—

6. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.. .. 216—217


D 143948

D 2 C 16—V211,32'N85
N85.214.1-3;1

[1985 ஏப்ரல் 8

152. பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் 1983—84 ஆம் ஆண்டிற்கான பத்தாம் ஆண்டறிக்கை. (தமிழ் மற்றும் ஆங்கிலம்). [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 ( A ) பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

153. தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் 1983—84 ஆம் ஆண்டிற்கான பதினான்காம் ஆண்டறிக்கை. (தமிழ் மற்றும் ஆங்கிலம்). [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 ( A ) பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது].

154. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் 1983—84 ஆம் ஆண்டிற்கான முப்பத்தைந்தாவது ஆண்டறிக்கை. (ஆங்கிலம்). [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 ( A ) பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

155. தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் 1982—83 ஆம் ஆண்டிற்கான கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை. (ஆங்கிலம்) [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு—அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 41-வது பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

156. பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் 1983—84 ஆம் ஆண்டிற்கான பதிமூன்றாவது ஆண்டறிக்கை. (தமிழ்). 1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 ( A ) பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது].

157. மதுரை பாண்டியன் பொறியியல் கழகத்தின் 1983—84 ஆம் ஆண்டிற்கான பத்தாம் ஆண்டறிக்கை. (தமிழ்). [1955 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 ( A ) பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

158. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் 1979—80 ஆண்டிற்கான எட்டாவது ஆண்டறிக்கை. (தமிழ் மற்றும் ஆங்கிலம்). [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619(A ) பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது]



1985 ஏப்ரல் 8]

159. கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் 1983—84 ஆம் ஆண்டிற்கான பத்தாம் ஆண்டறிக்கை. (ஆங்கிலம்). [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 ( A ) பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது].

160. மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகத்தின் 1983—84 ஆம் ஆண்டிற்கான இரண்டாம் ஆண்டறிக்கை. (ஆங்கிலம்). [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 ( A ) பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது].

161. வருவாய்த்துறையின் 7—9—1971 ஆம் நாளிட்ட [I-1/எண்.3987 ( D )/1971 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வருவாய்த்துறையின் 23—6—1984 ஆம் நாளிட்ட 1044 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு வேளாண் விளை நிலங்கள் (பதிவுரு குடிவார உரிமைகள்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1969) 18 (4) பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது].

162. தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளரமைப்பு மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறையின் 29—11—1984 ஆம் நாளிட்ட 1200 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

163. வருவாய்த்துறையின் 7—9—1971 ஆம் நாளிட்ட II-1/எண். 3987 ( b )/1971 ஆம் அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வருவாய்த்துறையின் 16—6—1984 ஆம் நாளிட்ட 906 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு வேளாண் விளை நிலங்கள் (பதிவுரு குடிவார உரிமைச்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1969) 18 (4) பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

இல்லை.

மிச்சப்படுவதற்கும் வாய்ப்பாக அமையும். அந்த உத்தேசம் இப்போது இல்லாவிட்டாலும், வருங்காலத்திலேயாவது அரசு அதை ஆராய்ந்து ஒரு முடிவு எடுத்து அதைச் செயல்படுத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, இது ஒரு பொதுப் பிரச்சினையாகவே தமிழ்நாட்டிலே இருக்கிறது. சமீப காலமாக மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு நாம் அதிக அதிகாரம் தந்திருக்கிறோம். முந்தைய ஊராட்சிப் பள்ளி ஆசிரியர்கள் இப்போது அரசுப் பணியாளர்களாக இருக்கின்றார்கள். தொடக்கப் பள்ளிகளில், நடுநிலைப் பள்ளிகளில் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தை அமல்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். அதனாலே மாணவர்கள் சேர்க்கையும் அதிகரித்திருக்கின்றது. அது மட்டுமல்லாமல், ஐந்து ஆண்டுக் காலத்தில், உயர்நிலைப் பள்ளிகள், தொடக்கப் பள்ளிகள், உயர் தொடக்கப் பள்ளிகள் என்று பள்ளிகள் கூடுதலாக ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. கூடுதலாக, ஒரு 40 உயர்நிலைப் பள்ளிகள் அல்லது மேல் நிலைப் பள்ளிகளுக்கு ஒரு மாவட்டக் கல்வி அலுவலர் என்று இருந்தால் நல்லது என்றுதான் இன்று கல்வித் துறை நினைத்துக்கொண்டிருக்கிறது. அதற்கான முயற்சிகளைத்தான் நாம் மேற்கொண்டிருக்கிறோம். இதைப் பொதுப் பிரச்சினையாகக் கருதி, மற்ற மாவட்டங்களோடு சேர்த்து, அரசு இந்தப் பிரச்சினையைப் பரிசீலிக்கிறது. கும்பகோணம், மன்னார்குடி போன்ற இடங்களில் மாவட்டக் கல்வி அலுவலகங்கள் வைக்கலாமா வேண்டாமா என்பதைப்பற்றிப் பரிசீலனை செய்யப்படும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, இந்த நான்கு கல்வி மாவட்டங்களுடன் மேலும் கல்வி மாவட்டங்கள் அமைக்க கல்வித் துறை ஆலோசித்து வருவதாக மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பதிலிலிருந்து தெரிகிறது. அது வரவேற்கத்தக்கது. அதற்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது இருக்கின்ற இந்த அலுவலகங்களை முழுப் பகுதிகளுக்கும் பயன்படுகிற அளவில் இடம் மாற்றுவதற்குரிய வாய்ப்பை விரைவிலே ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, நாம் திடீரென்று ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு மாற்றும்போது, எந்த இடத்திலேயிருந்து மாற்றப்பட இருக்கின்றதோ அங்கேயிருந்து பலத்த எதிர்ப்பு வரும். வீணான எதிர்ப்புகளை உருவாக்கிக்கொண்டிருக்கவேண்டாம் என்றுதான், பொதுப் பிரச்சினையாக அணுகி, நமது தேவைகளுக்கு ஏற்ப கல்வி மாவட்ட அலுவலகம் என்ற அடிப்படையிலே அமைத்துக் கொள்ளலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவர் அவர்களே, ஒரு மாவட்டத்தில் வருவாய் மாவட்டம் என்று பிரிக்கப்படும்போது, ஒரு வருவாய் மாவட்டத்திற்கு ஒரு முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகம் என்று நிர்ணயித்து, அரசு தானாகவே அதைச் செய்யவேண்டும். அந்தக் கொள்கையின் அடிப்படையிலே தான், வருவாய் மாவட்டத்தில், ரெவின்யூ டிவிஷன் ஏற்படுத்தும்போது, ஒரு ரெவின்யூ டிவிஷனுக்கு ஒரு மாவட்டக் கல்வி அலுவலகம் இருப்பது என்பது நியதி. அதுதான் நியாயமும் ஆகும். அந்த வகையிலே எந்தெந்த இடங்களில், ரெவின்யூ டிவிஷனில் மாவட்டக் கல்வி அலுவலகம் இல்லாமல் இருக்கின்றதோ அந்தந்த இடங்களிலேயாவது மாவட்டக் கல்வி அலுவலகம் ஏற்படுத்தும் செயற்குறிப்பை அரசு பரிசீலிக்குமா? உதாரணமாகச் சொல்வதென்றால், சிதம்பரத்தில் அவ்வாறு இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, நாம் மாவட்டக் கல்வி அலுவலகங்களைப்பற்றிச் சொல்லும்போது, அவைகளுக்கான ஒரு சீரமைப்புத் திட்டத்தைச் செயல்படுத்துகின்ற நிலைமை இருக்கின்றது. குறிப்பிட்ட இடத்திலுள்ள நிலைமைகளை வைத்துச் செயல்படுவதைவிட, பொதுவாகவே மாவட்டக் கல்வி அலுவலகங்கள் இப்படி இப்படி இருக்க வேண்டும் என்று ஆய்ந்து பார்த்து, அந்தப் புதிய கல்வி அலுவலகங்களைத் திறப்பது நல்லது என்று கருதுகிறோம்.

## *Special Pay for Commerce Teachers.*

* 7 Q.—Thiru C. R. LAKSHMIKANDHAN (on behalf of Thiru P. R. THOMAS): Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether it is a fact that the Madurai-Ramanathapuram Districts Commerce Teachers' Association has made an appeal to the Government, to enhance the Special Pay of Rs. 40 sanctioned as per G.O. Ms. No. 649, Education, dated 2nd April 1983, for the erstwhile Bifurcated Teachers irrespective of the number of periods they handle; and

(*b*) if so, the action taken thereon?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) ஆம்.

(இ) மேல்நிலைக் கல்விப் பணிக்கு உட்படுத்தப்பட்ட முன்னாள் இருமுனைப்பாட ஆசிரியர்களின் சிறப்பூதியத்தை ரூ. 25-லிருந்து ரூ. 40 ஆக உயர்த்த வேண்டுமென்று கோரிக்கை பெறப்பட்டது. அதனைப் பரிசீலித்து

## தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

---

செவ்வாய்க்கிழமை, 1985 ஏப்ரல் 9.

பங்குனி 27, ரக்தாக்ஷி, திருவள்ளுவராண்டு-2016.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-00 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### புதிய மாவட்டக் கல்வி அலுவலகங்கள்

* 6 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணம், மன்னார்குடி போன்ற இடங்களில், புதிய மாவட்டக் கல்வி அலுவலகங்களைத் திறக்கும் செயற் குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அவை எப்பொழுது திறக்கப்படும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இல்லை.

(இ) எழாது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலே, தஞ்சை, நாகை, பட்டுக்கோட்டை, மயிலாடுதுறை ஆகிய நான்கு கல்வி மாவட்டங்கள் இருக்கின்றன. அதிலே தஞ்சையைப் பொறுத்தவரையில், அது அந்தக் கல்வி மாவட்டத்தினுடைய எல்லைக்கு மேற்குப் பகுதியிலே இருக்கின்றது. நாகையைப் பொறுத்தவரையிலே, அந்த மாவட்டக் கல்வி அலுவலகங்கள், அந்தக் கல்வி மாவட்டத்தினுடைய கிழக்குப் பகுதியிலே இருக்கின்றன. அதற்குப் பின்னாலே கிழக்கிலே கடல் பகுதி இருக்கின்றது. கடல்தான் இருக்கிறது. ஆகவே அது ஒரு பகுதியாக ஒதுங்கி யிருக்கின்ற காரணத்தினாலே, அந்தக் கல்வி மாவட்டத்தினுடைய மையப் பகுதியாக நாகை கல்வி மாவட்டத்திற்கு மன்னார்குடியிலும் தஞ்சை கல்வி மாவட்டத்திற்கு கும்பகோணத்திலேயும் அந்த மாவட்டக் கல்வி அலுவலகங்கள் நிறுவப்பட்டால், அலுவலர்கள் சென்று வருவதற்கும் ஆசிரியர்கள் சென்று வருவதற்கும், அதே நேரத்திலே பயணப் படிகள் குறைவதற்கும். அரசுக்கு

சிறப்பூதியத்தை ரூ. 40 ஆக 2—4—1983 முதல் உயர்த்தி ஆணையிடப் பட்டுள்ளது. இதனை மேலும் உயர்த்துவதற்கு கருத்துரு ஆய்வில் இல்லை. எனினும் இவர்கள் சிறப்பூதியம் பெறுவதற்கு வாரத்திற்கு 24 பாட வேளைகள் கற்பிக்க வேண்டும் என்கின்ற நிபந்தனையை நீக்கி ஆணையிடப்பட்டுள்ளது.

(முற்பகல் 10-05)

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவரவர்களே, 24 பிரிவுகள் என்ற நிபந்தனை நீக்கப்பட்டுவிட்டது உண்மை. ஆனால் முன்னாள் இரு கூறாக்கப் பட்ட கல்வி முறையின்கீழ் வந்த ஆசிரியர்கள், இப்போது மேல்நிலைக் கல்வியில் தொழிற் கல்விக்காக ஈர்க்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களிலே மெக்கானிக் என்று சொல்லக்கூடிய ஒரு பிரிவினரும் வருகிறார்கள். இப்போது அமைச்சரவர்கள் குறிப்பிட்ட 40 ரூபாய் சிறப்பூதியச் சலுகை மெக்கானிக்கு களுக்கு வழங்கப்படுவதில்லை. அவர்கள் ஆசிரியர்கள் இல்லை என்று அதிகாரிகளுடைய சுற்றறிக்கை கூறுகிறது. ஆனால் அரசாணை,

*Memorandum No.* 39393/C-III/72-5, *Education, datea* 16-8-1972.
"The Director of School Education is informed that the Mechanics working in the High Schools may be treated as teaching staff inas much as the Mechanics in regular Government High Schools and in Government Aided Schools are treated as teaching staff".

என்றிருக்கிறது. அவர்களையும் ஆசிரியர்கள் என்று கருத வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. அந்த ஆணைக்கு விரோதமாக அவர்கள் ஆசிரியர்களல்ல, அவர்கள் இந்தச் சிறப்பூதிய சலுகையைப் பெற முடியாது என்று சொல்லுகிறார்கள். எனவே இதில் அமைச்சரவர்கள் தக்க நியாயத்தை வழங்குவார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஆசிரியர்கள்போல அவர்களும் கருதப்பட வேண்டுமென்பதுதான் அந்த உத்தரவு. ஆனால் அவர்கள் முழுமையான அளவுக்கு ஆசிரியர்களா, இல்லையா என்பது ஒரு பிரச்சினை யாக இருக்கிறதென்பது மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய கேள்வியிலிருந்து தெரிகிறது. அதை அரசு பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்கும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்கள் குறிப்பிட்டதையொட்டி, அதற்குப் பின்னாலே கல்விச் செயலாளர் அவர்கள் ஓர் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். 16—4—1984 நாளிட்ட மடல் எண் 102870/எச்.எஸ்./80-22-ல் மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றுகிற அனைத்து முழு நேர ஆசிரியர்களுக்கும் 40 ரூபாய் சிறப்பூதியமாக வழங்க வேண்டுமென்று கல்விச் செயலாளர் அவர்கள் ஒரு மடல்



எழுதியிருக்கிறார்கள். ஆனால் கல்வித் துறையிலே அதை அமல் நடத்த வில்லை. கல்விச் செயலாளர் போடும் உத்தரவையே அமல் நடத்தவில்லையே ! அந்த ஆணையை உடனே அமல் நடத்த மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லுகின்றபடி பார்த்தால், உத்தரவு போடப்பட்டிருக்கிறது என்றும், அது அமல் நடத்தப்படவில்லை என்றும் தெரிகிறது. எனவே அமல்நடத்தப் படாததற்கு என்ன காரணம் என்பதை அரசு பரிசீலிக்கும்.

### கோயம்புத்தூர் நகரில் ஆட்டோ ஓட்டுநர்கள்

* 8 வினா.—திரு. அ. மயில்சாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) கோயம்புத்தூர் நகரில், ஆட்டோ ரிக்ஷாக்களில் மீட்டர் பொருத்தப்பட்டிருந்தும், ஆட்டோ ஓட்டுநர்கள் உரிய கட்டணத்தைவிடப் பல மடங்கு அதிகமாக வாங்கி, பொதுமக்களைத் தொல்லைக்குட்படுத்துகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ?

(இ) ஆம் எனில், இதைத் தவிர்க்க அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) ஆம்.

(இ) இவைகளைத் தவிர்க்க 1984, ஜூன் மாதம் மற்றும் ஒவ்வொரு மாதமும் இயக்கூர்தி ஆய்வாளர்கள் கூட்டுத் தணிக்கை செய்து ஓட்டுநர்கள் மற்றும் ஆட்டோ ரிக்ஷா உரிமையாளர்கள்மீது தணிக்கை அறிக்கைகள் வழங்கி கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

திரு. அ. மயில்சாமி : தலைவரவர்களே, கோவை நகரில் ஆயிரக்கணக்கான ஆட்டோக்கள் ஓடிக் கொண்டிருக்கின்றன. அந்த ஆட்டோக்களில் மீட்டர்கள் பொருத்தப்பட்டிருப்பது உண்மை. ஆனால் மீட்டர்களைப் போடுவதில்லை என்று எல்லோரும் கூறுகிறார்கள். கோவையில் எங்கே பார்த்தாலும் தெரியும். ஒரு ஆட்டோவிலும் மீட்டரைப் போட்டு, பயணிகளை ஏற்றுவதில்லை. எனவே அங்கே இருக்கும் அதிகாரிகள் மீட்டரைப் பொருத்துவதோடு நின்று விடாமல், மீட்டரைப் பயன்படுத்த தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, மீட்டரைப் பயன் படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் மீட்டரைப் பொருத்த வேண்டு மென்று அரசு உத்தரவிட்டிருக்கிறது. அதன் காரணமாகத்தான் மாதத்திற்கு

நான்கு முறை கூட்டுத் தணிக்கை செய்து கொண்டிருக்கிறார்கள். அது தவிர தனிப்பட்ட முறையில் அதிகாரிகள் தினந்தோறும் வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் தணிக்கை செய்கிறார்கள். இன்னும் கடுமையான நடவடிக்கை எடுத்து, மீட்டர்களைப் பயன்படுத்துவதற்கான வழிமுறைகளை எதிர் காலத்தில் ஏற்படுத்தலாம்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** கோவையிலே ஆட்டோக்களில் மீட்டர் பொருத்த வேண்டுமென்று பல முறை மாவட்டக் கூட்டங்களில் வற்புறுத்தியிருக்கிறேன். மேலும் பொருத்தியிருக்கிற மீட்டர்கள்படி கட்டணம் வாங்க வேண்டுமென்றும் வற்புறுத்திச் சொல்லி அவர்களுடைய கோபத்திற்கு ஆளாகியிருக்கிறேன். அவர்களைப் பார்த்து நானும், என்னைப் பார்த்து அவர்களும் பயப்படும் நிலை ஏற்பட்டிருக்கிறது. ஏனவே சங்கத் தலைவர்களை அழைத்து இந்த இடத்திலிருந்து இந்த இடத்திற்கு இவ்வளவு வாடகை என்று நிர்ணயித்து, அதை அட்டையில் அச்சிட்டு, அதை அமுல்படுத்த வேண்டும். இப்போது சென்னை நகரில் சிறந்த முறையில் அப்படி அமுல்படுத்துகிறார்கள். அதைப்போல கோவையிலும் அமுல்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

(முற்பகல் 10-10)

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** 21—6—1984-ல் இப்படிப்பட்ட ஒரு கூட்டம் கூட்டப்பட்டபோது, சரியான கட்டணம் வாங்க வேண்டுமென்றும், மீட்டரை கட்டாயம் பயன்படுத்த வேண்டுமென்றும் அவர்களுக்கு அறிவுரை சொல்லப்பட்டது. அப்படிச் சொல்லியிருந்தும், அவர்கள் அதைக் கடைப் பிடிக்கவில்லையென்றால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவர்களைக் கண்டு பயப்படத் தேவையில்லை. ஆனால் இந்த விஷயத்தில் எல்லா அரசியல் கட்சிகளும் முழுமையாக ஒத்துழைத்தால், இன்னும் கடுமையான நடவடிக்கையை நாம் எடுக்கலாம். அப்படி நாம் நடவடிக்கையை இன்றைய தினம் எடுக்கிறபோது, இதுகுறித்துப் பேசுகிற அரசியல் கட்சிகள்கூட சங்கங்களைப் பயன்படுத்துகின்றன. அந்த வகையில் எல்லா அரசியல் கட்சிகளும் ஒத்துழைத்தால், நாம் இதில் வெற்றி பெறலாம்.

**திரு. அ. ப. சிவராமன் :** கடலூரிலும் பண்ருட்டியிலும் ஆட்டோக்கள் ஓடுகின்றன. ஆனால் அந்த ஆட்டோக்களில் மீட்டர்கள் பொருத்தப்படவில்லை. ஆதலால் ஆட்டோ ஓட்டுநர்கள் பயணிகளிடமிருந்து மனம் போன போக்கில் கட்டணம் வசூல் செய்கிறார்கள். அங்கு ஓடுகின்ற ஆட்டோக்களில் எல்லாம் உடனடியாக மீட்டர் பொருத்தப்பட நடவடிக்கை எடுக்கப்படுமா ?



**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** எல்லா இடங்களில் ஓடுகின்ற ஆட்டோக்களுக்கும் மீட்டர் பொருத்தப்பட வேண்டும். ஆனால் சிறிய சிறிய ஊர்களில் ஓடுகின்ற ஆட்டோக்களுக்கு மீட்டர் பொருத்தப்பட்டால், அவர்கள் வண்டிகளை ஓட்ட முடியாத சூழ்நிலை நடைமுறையில் இருக்கின்ற ஒன்று. அதையும் நாம் கவனிக்க வேண்டும். ஆதலால் அப்படிப்பட்ட இடங்களில் எல்லாம் இன்ன இடத்திலிருந்து இன்ன இடத்திற்கு இவ்வளவு கட்டணம் என்கிற வகையில் ஓர் அட்டையை அச்சடித்துக் கொடுத்தால், அது நன்றாக இருக்கும். அந்த வகையில் நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அதற்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** டீசல், பெட்ரோல் போன்றவைகளின் விலை ஏறியிருக்கிறது. ஆகவே மீட்டர் கட்டணத்துடன் பிளஸ் ஒரு ரூபாய் கொடுங்கள் என்று ஆட்டோ ஓட்டுநர்கள் பயணிகளிடம் கேட்பது அரசுக்குத் தெரியுமா ? விலை ஏறியிருக்கிற டீசல், பெட்ரோல் போன்றவற்றின் விலைக்கேற்ப மீட்டர் கட்டணங்கள் மாற்றப்பட்டிருக்கின்றனவா அல்லது பழைய மீட்டர் கட்டணப்படிதான் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** இப்பொழுது பெட்ரோல் விலை உயர்ந்திருக்கிற நிலையில் அவர்கள் பழைய மீட்டர் கட்டணப்படி வசூலித்தால், அவர்களுக்கு நஷ்டம் ஏற்படும் என்பது நமக்கு வெளிப்படையாகவே தெரிகிறது. மீட்டர்களை மாற்றியமைக்க வேண்டுமா வேண்டாமா என்பது பற்றி அவர்கள் வந்து பேசவும் இல்லை, பேச முயற்சி எடுக்கவும் இல்லை. ஆனால் அவர்களுடைய தலைவர்கள் இதுபற்றி நம்மிடம் வந்து பேசும்போது, அதற்குரிய முயற்சி எடுக்கப்படும். இங்கே மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து என்ன என்பதைச் சொன்னால், அது அரசுக்கு உதவியாக இருந்திருக்கும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இன்னும் ஒரு தடவை அவர் எழுந்திருக்க வேண்டுமா ? (சிரிப்பு).

**செல்வி ஆ. லீலாவதி :** பெட்ரோல் விலை ஏறியிருப்பதன் காரணமாக ஆட்டோ ஓட்டுநர்கள் கட்டணத்தை ஒரு ரூபாய் அதிகமாக ஆக்கிவிட்டார்கள். "ஒரு ரூபாய் கூடுதலாகக் கொடுத்தால்தான் ஏற்றுவோம், இல்லாவிட்டால் ஏற்ற மாட்டோம்" என்று சொல்கிறார்கள். அரசு இதுகுறித்து தக்க நடவடிக்கை எடுக்குமா ?

[1985 ஏப்ரல் 9

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பெட்ரோல் விலை ஏறிவிட்ட காரணத்தால்தான் கூடுதலாகக் கட்டணம் வாங்குகிறார்கள். எனவே அவர்களை அழைத்துப் பேசி, இதனால் ஏற்படும் நஷ்டம் எவ்வளவு, எவ்வளவு கட்டணத்தை நிர்ணயித்தால் ஒழுங்காக ஓட்ட முடியும் என்பதை எல்லாம் ஆராய்ந்து அதன் முடிவுகளை பிறகு அறிவிக்கலாம்.

திரு. அ. ப. சிவராமன்: சென்னை நகரில் ஆட்டோக்களில் திருத்தப்பட்ட மீட்டர் பொருத்தப்படவில்லையாதலால், அதிகமாகக் கட்டணம் வாங்குகிறார்கள். ஆகவே உடனடியாக திருத்தப்பட்ட மீட்டர் பொருத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பெட்ரோல், டீசல் விலை அடிக்கடி அதிகரித்துக் கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் எத்தனை முறை தான் மீட்டரைத் திருத்திக் கொள்வது? ஏற்கெனவே இரண்டு, மூன்று முறை திருத்தி விட்டார்கள். இப்பொழுது மறுபடியும் டீசல், பெட்ரோல் விலை ஏறியிருக்கிறது. தொடர்ந்து ஒரு மூன்று ஆண்டுகள் இதில் பிரச்சினை இல்லையென்றால், திருத்திக்கொள்வதில் அர்த்தம் இருக்கிறது. ஆனால் நிலைமை அப்படி இல்லை. இருப்பினும் இதுகுறித்து அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### தடம் எண் 18-ஏ

* 9 வினா.—திரு. எல். ஜெயச்சந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தாம்பரத்திலிருந்து பிராட்வே செல்லும் பல்லவன் போக்குவரத்துக் கழக தடம் எண் 18-ஏ-ல், ஓடும் பேருந்துகளின் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்பொழுது முதல் கூடுதல் பேருந்துகள் விடப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) மற்றும் (இ) பல்லவன் போக்குவரத்துக் கழகம் பயணிகளுடைய எண்ணிக்கையை அவ்வப்பொழுது ஆராய்ந்து கொண்டிருக்கிறது. பயணிகளின் தேவையைப் பூர்த்தி செய்ய அதிக பேருந்துகள் விட வேண்டும் என்று தெரிந்தால், உடனடியாக அதற்கான பேருந்துகள் விடப்படும்.



1985 ஏப்ரல் 9]

திரு. எல். ஜெயச்சந்திரன்: தாம்பரத்திலிருந்து பிராட்வேக்கு 18-ஏ தடம் தவிர இன்னும் குறிப்பிட்ட ஒன்றிரண்டு பேருந்துகள் தற்சமயம் போய்க் கொண்டிருக்கின்றன. இந்த வழித் தடத்தில் போதுமான எண்ணிக்கையில் பேருந்துகள் இல்லையாதலால், செங்கல்பட்டிலிருந்தும், தாம்பரத்திலிருந்தும் சென்னைக்கு வருகிறவர்கள் ரொம்ப சிரமத்துக்கு ஆளாகிறார்கள். எவ்வளவு தீவிரமாக நடவடிக்கை எடுத்து, எவ்வளவு கூடுதலாக இந்த வழித் தடத்தில் பேருந்துகளை அரசு விட இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: இப்பொழுது 27 பேருந்துகள் ஓட்டப் படுகின்றன. பீக் அவ்வர்சில் 9 நிமிடத்திற்கு ஒரு பேருந்தும், மற்ற நேரங்களில் 10 நிமிடத்திற்கு ஒரு பேருந்தும் ஓட்டப்படுகிறது. கூடுதலாக வருகின்ற பயணிகளின் எண்ணிக்கையைப் பொறுத்து, நாம் வண்டிகளை அதிகமாக ஓட்ட வேண்டியிருக்கிறது. இடையிலே பயணிகளின் எண்ணிக்கை குறைவானதால், பேருந்துகளின் எண்ணிக்கையும் குறைந்தது. இப்பொழுது மீண்டும் அதிக எண்ணிக்கையில் பயணிகள் பயணம் செய்கிறார்கள். அதற்கேற்ப பேருந்துகள் விடப்படும்.

திரு. அ. ப. சிவராமன்: உறுப்பினர் கேட்டிருக்கிற கேள்வி தொடர்பாக நான் ஒன்று கேட்கிறேன். நெல்லிக்குப்பம் நகராட்சிப் பகுதியாக இருக்கிறது. அங்கிருந்து சட்டமன்ற உறுப்பினர் ஒருவரும் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறார். திருவள்ளுவர் போக்குவரத்துப் பேருந்து அல்லது பல்லவன் போக்குவரத்துப் பேருந்து மூலம் இப்பொழுது அங்கிருந்து சென்னைக்கு யாராவது வர வேண்டுமென்றால், குறிப்பாக சட்டமன்ற உறுப்பினரே வர வேண்டுமென்றால்கூட, இப்பொழுது கடலூர் அல்லது பண்ருட்டி போய், அங்கிருந்து பேருந்து பிடித்துத்தான் இங்கு வர வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதை மாற்றியமைத்து அங்கிருந்து நேரடியாக சென்னைக்கு பேருந்தில் வரும் வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா?

(முற்பகல் 10-15)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களின் வசதியை முன்னிட்டு தனி பஸ்கள் விடுவது என்றால், அதைப்பற்றி யோசிக்க வேண்டும். பொதுமக்களின் நலனைக் கருதி பேருந்துகள் விடப்பட வேண்டுமென்றால், அதைப்பற்றி உடனடியாக நடவடிக்கைகள் எடுக்க முடியும்.

திரு. ஜேப்பியார் : தலைவர் அவர்களே, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத் துணைப் பேருந்து நிலையம் ஒன்றை, சட்டமன்ற உறுப்பினர் விடுதிக் கருகில் திறந்தால், சட்டமன்ற உறுப்பினர்கள் அங்கேயே தங்களுக்குத் தேவையான டிக்கட்டுகளை வாங்கிக்கொள்ள வசதி ஏற்படும், அதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : இது நல்ல யோசனை. உறுப்பினர் அவர்கள் தனக்கு இந்தத் திட்டம் பயனளிக்காது என்று தெரிந்தும், பொது நோக்கோடு சொல்லியிருக்கிறார்கள். இதுபற்றி அரசு யோசிக்கும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவர் அவர்களே, தாம்பரம்-பிராட்வே இடையே ஓடும் 18-ஏ தட பேருந்துகள் பெரும்பாலும் மீனம்பாக்கம் வழியாகத் தான் செல்கின்றன. ஆனால் தாம்பரத்திலிருந்து வேளச்சேரி மார்க்கமாக சென்னைக்கு வரவும் வாய்ப்பு இருக்கிறது. போக்குவரத்து நெரிசலைக் கருத்திற்கொண்டும், புதிய விமான தளம் கட்டப்பட்டு, போக்குவரத்து அதிகப் படுத்தப்பட்டிருப்பதால் ஏற்படும் நெரிசலைக் கருத்தில் கொண்டும், வேளச்சேரி வழியாக சில பேருந்துகளைத் திருப்பி விட முடியுமா? அப்படி திருப்பிவிட்டால், விபத்துக்கள் குறையவும் வழி இருக்கிறது. அதைப்பற்றி அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, பொதுவாக நகரப் பேருந்துகளின் தடங்களை நாம் மாற்றினால், பொதுமக்கள்தான் அதிகம் பாதிக்கப்படுவார்கள். காரணம், அவர்கள் குறிப்பிட்ட வழித்தடங்களில் பயணம் செய்து பழக்கப்பட்டவர்கள். ஆகவே நகரப் பேருந்துகளின் தடங்களை மாற்றுவது கடினம். தொலை தூரப் பேருந்துகளில், போக்குவரத்து நெரிசல் கருதி, தடமாற்றங்கள் செய்வது குறித்து யோசிக்கப்படும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : இந்தக் கேள்விக்குத் தொடர்பான இன்னொரு கேள்வியைத்தான் கேட்கிறேன். பெங்களூரில் நமது சட்டமன்ற உறுப்பினர்கள் கிடையாது. ஆனால் திருவள்ளுவர் போக்குவரத்துப் பேருந்துகள் அங்கேயும் செல்கின்றன. நான் ஒரு பணி காரணமாக பெங்களூர் சென்று திரும்பிய போது, திருவள்ளுவர் போக்குவரத்துப் பேருந்தில் என்னை ஏற்ற மறுத்து விட்டார்கள். சட்டமன்ற உறுப்பினர்களுக்கான தனி இரண்டு இருக்கைகள் இந்த வண்டியில் இல்லையென்றும், இடம் இல்லை என்றும் சொல்லி விட்டார்கள். ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்கள், வெளிமாநிலங்களுக்குச் செல்லும் திருவள்ளுவர் போக்குவரத்துப் பேருந்துகளில் ஏற்றப்படக்கூடாது





என்று ஏதாவது சட்டம் இருக்கிறதா? அப்படி இருந்தால் அதைத் தவிர்க்க முடியுமா? மேலும், நான் ஒருமுறை தாம்பரம் சென்றுவிட்டு, அங்கிருந்து பாண்டிச்சேரி செல்லும் பாயிண்ட்-டு-பாயிண்ட் வண்டியில் ஏற முயற்சித்தேன். அவர்களும் என்னை ஏற்ற மறுத்துவிட்டார்கள். பாண்டிச்சேரி போவதானால் ஏறுங்கள் என்றார்கள். இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் தமிழகத்தில் உள்ள தொகுதிகளிலிருந்துதான் வருகிறார்கள். ஆகவே அவர்கள் தமிழகத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் போக வசதி செய்யப் பட்டிருக்கிறது. பெங்களூர் பற்றி உறுப்பினர் சொல்லியதைப்பற்றி தனியாகத் தான் ஆய்வு செய்ய வேண்டும்.

பாண்டிச்சேரி போகிற வண்டிகளில் முன்பு பல பிரச்சினைகள் இருந்தன. அதில் இதுவும் ஒன்றாக இருக்கலாம். தேவையின் அடிப்படையில் பல்வேறு மாற்றங்கள் போக்குவரத்துக்களில் அவ்வப்போது செய்யப்படுகின்றன. ஆகவே இதுகுறித்து ஆய்ந்துதான் முடிவெடுக்க முடியும். பாயி பாயிண்ட் சர்வீஸ் பற்றி குறிப்பிட்டார்கள். மாண்புமிகு உறுப் அவற்றை நடுவழியில் நிறுத்துவதை முடிந்தவரையில் தவிர்க்கலாம். இருந்தாலும் சட் செய்தால் இந்தப் பிரச்சினைகள் தோன்றாது. உறுப்பினர்களின் வசதிக்காக சில மாற்றங்கள் செய்வது குறித்து யோசி படும்.

திரு. ஜேப்பியார் : திருவள்ளுவர் போக்குவரத்துப் பேருந்துகள் நீண்ட தூரம் செல்கின்றன. அந்த வண்டிகளில் பயணம் செய்வோர் நாட்டுநடப் களைப்பற்றித் தெரிந்துகொள்வதில் அக்கறை காட்டுவார்கள். ஆகவே, அத்தகைய வண்டிகளில் இலவசமாகப் பத்திரிகைகள் போடப்படுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : நாட்டு நடப்புகளை வெளியில் இருந்து தெரிந்துகொண்டுதான் அவர்கள் வண்டியிலேயே ஏறுகிறார்கள். பத்திரிகை களை யாராவது இலவசமாக, தங்களுடைய விளம்பரத்திற்காகக் கொடுத்தால், அவைகளை வண்டியில் போட தயாராக இருக்கிறோம். அரசு செலவழித்து, பத்திரிகைகள் வாங்கிப் போடுவது குறித்து இனிமேல்தான் யோசிக்க வேண்டும்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : 18-ஏ பேருந்துகள் நகரின் சாலைகளில் மிக வேகமாக ஓடி, விபத்துக்களுக்குக் காரணமாகின்றன. இலண்டன் போன்ற நகர்களில், நகரப் பேருந்துகள் நடுரோட்டில் ஓடாமல் ஓரமாக உள்ள ரோட்டில்தான் ஓடுகின்றன. அத்துடன் ஒன்றையொன்று அங்கு 'ஓவர் டேக்'

செய்வதில்லை. இதனால் அங்கே சாலை விபத்துக்கள் நடப்பதில்லை. மிகக் குறைவாகத்தான் இருக்கின்றது. அதுபோல் சென்னையிலும், நகரப் பேருந்து களுக்குத் தனி ரோடுகள் ஓரமாகப் போடப்பட்டு, ஓட்டப்படுமா? அதன்மூலம் விபத்துக்கள் தவிர்க்கப்பட நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** இந்திய துணைக்கண்டம் முழுவதும் எடுத்துக்கொண்டால், குறைவான விபத்துக்கள் நடந்தது பல்லவன் போக்குவரத்தில்தான். அப்படி இரண்டாவது இடத்தைப் பெற்றிருக்கிறது. ஆனால் இலண்டன் போன்ற நகர்களில் உள்ள பாதைகளின் நிலைமையே வேறு. இங்குள்ள பாதைகளின் நிலைமையே வேறு. அத்துடன் அங்குள்ள மக்கள் 'ரோடு ரூல்ஸை'-த் தவறாமல் கடைப்பிடிக்கிறார்கள். இங்குள்ளவர்கள் தவறாகக் கடைப்பிடிக்கிறார்கள். சாலை விதிகளை மீறுவோர்மீது நடவடிக்கை எடுத்தால், நான் யார் தெரியுமா என்று மிரட்டும் நிலை இங்கே இருக்கிறது. சாலை விதிகளை நமது மக்களும் கடைப்பிடிக்க வேண்டும். மேலும் வண்டிகள் 'ஓவர் டேக்' செய்வதைத் தவிர்க்க முடியாது. அப்படிச் செய்யாவிட்டால் நாம் பயணம் செய்யவே முடியாது. இருப்பினும் உறுப்பினர் சொன்ன கருத்துக்கள்பற்றி யோசிக்கப்படும்.

(முற்பகல் 10-20)

**திருமதி வி. ஜெயலட்சுமி :** தலைவர் அவர்களே, நம்முடைய நாட்டில் மனுநீதிச் சோழன் ஆண்ட காலத்திலே, கன்றுக்குட்டி ஒன்று தேர்க்காலிலே அடிபட்டு இறந்ததால், அதற்குக் காரணமாக இருந்த தன் மகனையே மனுநீதிச் சோழன் பலி கொடுத்ததாக அறிகிறோம். அப்படிப்பட்ட இந்த நாட்டில், இன்றைய சேர சோழ பாண்டியர்கள் ஏற்படுத்தும் விபத்துக்களைப் பார்க்கிறபோது, மிகவும் வேதனையாக இருக்கிறது. இதுகுறித்து ஆய்வு செய்கிறபோது, சில காரணத்தைச் சொல்கிறார்கள். போக்குவரத்துக் கழகங்களில் நிறைய ஓட்டுநர்களை தற்காலிகமாக நியமிக்கிறார்கள் என்றும், அவர்களை 'ரெகுலரைஸ்' பண்ணினால் அதனால் வரவேண்டிய சம்பளம், கிராஜுடி, அகவிலைப்படி போன்ற பல சலுகைகளைத் தரவேண்டும் என்பதற்காக அவர்களை 'ரெகுலரைஸ்' பண்ணுவதில்லை என்றும், அரசு இவ்வாறு போக்குவரத்துக் கழகங்களில் செய்துகொண்டிருக்கின்றது என்றும் சொல்கிறார்கள். 60, 70 பயணிகளையும் சுமார் 7 லட்சம் ரூபாய் பொறுமானமுள்ள பேருந்தையும் கொண்டு செல்லும் ஓட்டுநரின் நிலை இவ்வாறிருப்பதனால் தான் விபத்துக்களும், பொருள் நஷ்டமும் ஏற்படுகின்றன என்று சொல்கிறார் கள். இது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, விபத்துக்கள் நடப்பதால் எங்கே நம்மையும் பேருந்தின் சக்கரங்களின்கீழ் வைத்துவிடுவார்களோ என்ற எண்ணம்தான் ஏற்பட்டது. (சிரிப்பு) ஓட்டுநர்களைத் தேர்ந்தெடுக்கும்போது, நூற்றுக்கணக்கான பேர்களைப் பரிட்சித்து, அதில் பத்து, பதினைந்து பேர்களைத்தான் எடுக்கிறார்கள். அவர்கள் நன்கு பேருந்தை ஓட்டக் கூடியவர்களாக இருந்தாலும், உடனடியாக அவர்களைப் பேருந்து ஓட்ட விடுவதில்லை. அவர்களுக்கு 15 நாட்கள், ஒரு மாதம், தேவையானால் மூன்று மாதம் என்று பயிற்சி கொடுத்து, அவர்கள் பேருந்தை ஓட்டுவதில் நம்பிக்கை ஏற்பட்ட பின்புதான் பேருந்துகளை ஓட்டுவதற்கு அவர்கள் அனுமதிக்கப் படுகிறார்கள். இப்போது இந்தப் பிரச்சினையை முழுமையாகத் தீர்க்க வேண்டும் என்பதற்காகத்தான் பன்னிரண்டு ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளை ஆரம்பித்திருக்கிறோம். அதிலே பயிற்சி பெறுகிறவர்கள் சிறப்பாகப் பேருந்துகளை ஓட்டுவார்கள் என்று கருதி ஆரம்பித்திருக்கிறோம். மிச்சம் செய்வதற்காக ஓட்டத் தெரியாதவர்களுக்கு வேலை அளிக்கப்பட்டிருக்கிறது என்பது தவறான கருத்து என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## சத்துணவுத் திட்டம்

*** 10 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு சத்துணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இலவச சத்துணவுத் திட்டப் பணிகளைக் கண்காணிக்க, பகுதி நேர ஆசிரியர்கள் அல்லது ஊழியர்களை நியமனம் செய்யும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

**மாண்புமிகு திரு. இரா. சௌந்திரராஜன் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டப் பணிகளைக் கண்காணிப்பதற்கும், அங்கே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் விருப்பப்படி திருக்குறள் போன்ற நல்ல பாடங்களை மாணவர்களுக்குப் போதிப்பதற்கும், நல்ல கருத்துக்களை, அறிவுக் கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கும் இப்போது நியமிக்கப்பட்டிருக்கின்ற அந்த ஊழியர்கள் அல்லாமல், சத்துணவு மேற்பார்வையாளர்கள் அல்லாமல், பகுதிநேர

செய்வதில்லை. இதனால் அங்கே சாலை விபத்துக்கள் நடப்பதில்லை. மிகக் குறைவாகத்தான் இருக்கின்றது. அதுபோல் சென்னையிலும், நகரப் பேருந்துகளுக்குத் தனி ரோடுகள் ஓரமாகப் போடப்பட்டு, ஓட்டப்படுமா ? அதன்மூலம் விபத்துக்கள் தவிர்க்கப்பட நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** இந்திய துணைக்கண்டம் முழுவதும் எடுத்துக்கொண்டால், குறைவான விபத்துக்கள் நடந்தது பல்லவன் போக்குவரத்தில்தான். அப்படி இரண்டாவது இடத்தைப் பெற்றிருக்கிறது. ஆனால் இலண்டன் போன்ற நகர்களில் உள்ள பாதைகளின் நிலைமையே வேறு. இங்குள்ள பாதைகளின் நிலைமையே வேறு. அத்துடன் அங்குள்ள மக்கள் 'ரோடு ரூல்ஸை'-த் தவறாமல் கடைப்பிடிக்கிறார்கள். இங்குள்ளவர்கள் தவறாகக் கடைப்பிடிக்கிறார்கள். சாலை விதிகளை மீறுவோர்மீது நடவடிக்கை எடுத்தால், நான் யார் தெரியுமா என்று மிரட்டும் நிலை இங்கே இருக்கிறது. சாலை விதிகளை நமது மக்களும் கடைப்பிடிக்க வேண்டும். மேலும் வண்டிகள் 'ஓவர் டேக்' செய்வதைத் தவிர்க்க முடியாது. அப்படிச் செய்யாவிட்டால் நாம் பயணம் செய்யவே முடியாது. இருப்பினும் உறுப்பினர் சொன்ன கருத்துக்கள்பற்றி யோசிக்கப்படும்.

(முற்பகல் 10-20)

**திருமதி வி. ஜெயலட்சுமி :** தலைவர் அவர்களே, நம்முடைய நாட்டில் மனுநீதிச் சோழன் ஆண்ட காலத்திலே, கன்றுக்குட்டி ஒன்று தேர்க்காலிலே அடிபட்டு இறந்ததால், அதற்குக் காரணமாக இருந்த தன் மகனையே மனுநீதிச் சோழன் பலி கொடுத்ததாக அறிகிறோம். அப்படிப்பட்ட இந்த நாட்டில், இன்றைய சேர சோழ பாண்டியர்கள் ஏற்படுத்தும் விபத்துக்களைப் பார்க்கிறபோது, மிகவும் வேதனையாக இருக்கிறது. இதுகுறித்து ஆய்வு செய்கிறபோது, சில காரணத்தைச் சொல்கிறார்கள். போக்குவரத்துக் கழகங்களில் நிறைய ஓட்டுநர்களை தற்காலிகமாக நியமிக்கிறார்கள் என்றும், அவர்களை 'ரெகுலரைஸ்' பண்ணினால் அதனால் வரவேண்டிய சம்பளம், கிராஜுவிடி, அகவிலைப்படி போன்ற பல சலுகைகளைத் தரவேண்டும் என்பதற்காக அவர்களை 'ரெகுலரைஸ்' பண்ணுவதில்லை என்றும், அரசு இவ்வாறு போக்குவரத்துக் கழகங்களில் செய்துகொண்டிருக்கின்றது என்றும் சொல்கிறார்கள். 60, 70 பயணிகளையும் சுமார் 7 லட்சம் ரூபாய் பொறுமானமுள்ள பேருந்தையும் கொண்டு செல்லும் ஓட்டுநரின் நிலை இவ்வாறிருப்பதனால்தான் விபத்துக்களும், பொருள் நஷ்டமும் ஏற்படுகின்றன என்று சொல்கிறார்கள். இது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, விபத்துக்கள் நடப்பதால் எங்கே நம்மையும் பேருந்தின் சக்கரங்களின்கீழ் வைத்துவிடுவார்களோ என்ற எண்ணம்தான் ஏற்பட்டது. (சிரிப்பு) ஓட்டுநர்களைத் தேர்ந்தெடுக்கும்போது, நூற்றுக்கணக்கான பேர்களைப் பரீட்சித்து, அதில் பத்து, பதினைந்து பேர்களைத்தான் எடுக்கிறார்கள். அவர்கள் நன்கு பேருந்தை ஓட்டக் கூடியவர்களாக இருந்தாலும், உடனடியாக அவர்களைப் பேருந்து ஓட்ட விடுவதில்லை. அவர்களுக்கு 15 நாட்கள், ஒரு மாதம், தேவையானால் மூன்று மாதம் என்று பயிற்சி கொடுத்து, அவர்கள் பேருந்தை ஓட்டுவதில் நம்பிக்கை ஏற்பட்ட பின்புதான் பேருந்துகளை ஓட்டுவதற்கு அவர்கள் அனுமதிக்கப் படுகிறார்கள். இப்போது இந்தப் பிரச்சினையை முழுமையாகத் தீர்க்க வேண்டும் என்பதற்காகத்தான் பன்னிரண்டு ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளை ஆரம்பித்திருக்கிறோம். அதிலே பயிற்சி பெறுகிறவர்கள் சிறப்பாகப் பேருந்துகளை ஓட்டுவார்கள் என்று கருதி ஆரம்பித்திருக்கிறோம். மிச்சம் செய்வதற்காக ஓட்டத் தெரியாதவர்களுக்கு வேலை அளிக்கப்பட்டிருக்கிறது என்பது தவறான கருத்து என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## சத்துணவுத் திட்டம்

* 10 **வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு சத்துணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இலவச சத்துணவுத் திட்டப் பணிகளைக் கண்காணிக்க, பகுதி நேர ஆசிரியர்கள் அல்லது ஊழியர்களை நியமனம் செய்யும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

**மாண்புமிகு திரு. இரா. சௌந்திரராஜன் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டப் பணிகளைக் கண்காணிப்பதற்கும், அங்கே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் விருப்பப்படி திருக்குறள் போன்ற நல்ல பாடங்களை மாணவர்களுக்குப் போதிப்பதற்கும், நல்ல கருத்துக்களை, அறிவுக் கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கும் இப்போது நியமிக்கப்பட்டிருக்கின்ற அந்த ஊழியர்கள் அல்லாமல், சத்துணவு மேற்பார்வையாளர்கள் அல்லாமல், பகுதிநேர

ஆசிரியர்களை அந்தக் கல்விப் பணிகளுக்காக நியமிக்க வேண்டும் என்ற முதல் அமைச்சர் அவர்களின் கருத்தைப் பரிசீலனை செய்யும் வாய்ப்பு இருக்கிறதா என்கிற அடிப்படையில்தான் இந்தக் கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. தற்போது அதுகுறித்து கருத்துரு ஏதும் இல்லாவிட்டாலும், ஏராளமான மாணவர்கள் சேர்க்கப்படுகின்ற காரணத்தினால், இப்போது சிறந்த முறையில் கல்வி போதனை அளிக்கவும், மாலை நேரங்களில் இவர்களுக்குச் சிறந்த முறையில் பயிற்சி வகுப்புகள் நடத்தவும் வருங்காலத்திலாவது அதுபோன்று பகுதிநேர ஆசிரியர்களை—ஊழியர்களை நியமிக்க அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. சௌந்திரராஜன் :** தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டப் பணிகளைக் கண்காணிக்க பகுதி நேர ஆசிரியர்களை—ஊழியர்களை நியமனம் செய்வதற்கான கேள்வி இது. அதிகமாகச் சேர்கின்ற மாணவர்களுக்கு மாலை நேரங்களில் வகுப்புகள் நடப்பதுபற்றி கேள்வி கேட்டிருக்கிறார்கள். இது கல்வித் துறையில் கேட்கவேண்டிய கேள்வி.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வியே பகுதி நேர ஆசிரியர்கள்-ஊழியர்கள் பற்றித்தான். மூலக் கேள்வியே அதுதான். முழுநேர ஆசிரியர்கள்பற்றிக் கேட்கவில்லை. என்னுடைய மூலக் கேள்வியின் அடிப்படையிலே மீண்டும் கேட்கிறேன். சத்துணவு வழங்கப்படும் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு மாலை நேரங்களில், பள்ளிக்கூட நேரத்திற்கு அப்பாற்பட்ட நேரங்களில் பயிற்சி கொடுப்பதற்கு பகுதிநேர ஆசிரியர்களை நியமிக்கும் கருத்தை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. சௌந்திரராஜன் :** தலைவர் அவர்களே, பள்ளிக்கூட நேரங்களைத் தவிர மற்ற நேரங்களிலும் ஆசிரியர்களை நியமிப்பது குறித்து கல்வித் துறைதான் பரிசீலிக்க வேண்டுமே தவிர சத்துணவுத் துறை அல்ல.

(முற்பகல் 10-25)

**திரு. சி. இராமலிங்கம் :** தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டம் கிராமங்கள்தோறும், நகரங்கள்தோறும் முழுமையாக நல்லமுறையிலே நடக்கின்றது. ஆனால் கிராமங்களிலே சத்துணவுத் திட்டத்தை அமல்படுத்துவதற்கு ஆங்காங்கே மேற்பார்வைக் குழுக்கள் அமைக்கப்படுமா? அதுபோல ஒன்றியம் வாரியாக, அமைக்கப்படுமா? வட்டம் வாரியாக அமைக்கப்படுமா? மாவட்ட வாரியாக அமைக்கப்படுமா? அப்படி அமைக்கப்பட்டால், அந்தக் குழுக்கள் மாதம் ஒரு முறை கூடி பரிசீலனை செய்து எங்கெங்கே என்ன



குறைகள் இருக்கின்றன, எங்கெங்கே சத்துணவுத் திட்டம் நல்லமுறையில் நடக்கிறது என்று பரிசீலிக்க ஒரு திட்டத்தை அமல் செய்யுமா என்றும், இந்தக் குழுக்களிலே ஆங்காங்கே இருக்கின்ற பெண்களை நியமனம் செய்ய அரசு உத்தேசிக்குமா என்றும் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. சௌந்திரராஜன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஒரு நல்ல யோசனையைச் சொல்லியிருக்கிறார்கள். ஆங்காங்கே சத்துணவுக் கூடங்களைக் கண்காணிப்பதற்கு, ஆங்காங்கே போடப்படுகிற உணவு வகைகள் முறையாகப் பரிமாறப்படுகின்றனவா, தயாரிக்கப்படுகின்றனவா என்பதைப் பார்ப்பதற்கு ஒரு கண்காணிப்புக் குழு அமைக்க வேண்டுமென்ற யோசனையைக் கூறியிருக்கிறார்கள். தற்போது சத்துணவுத் திட்டத்தில் உயர்மட்டக் குழு ஒன்று இருக்கிறது. இந்த உயர்மட்டக் குழுவிலே கூட ஒவ்வொரு சத்துணவுக் கூடத்திற்கும் ஒரு கண்காணிப்புக் குழு நியமிக்கலாமா என்று ஆலோசித்துக் கொண்டிருக்கிறார்கள். விரைவில் இதுபற்றி அரசு ஒரு முடிவு எடுத்து, குறிப்பாக கிராமங்களிலே இருக்கிற சத்துணவுக் கூடங்களில் ஐந்து பெண்களைக் கொண்டு ஒரு கண்காணிப்புக் குழு அமைக்கலாமா என்று யோசித்து வருகிறோம். அதை விரைவில் அரசு முடிவு செய்யும்.

**திரு. ஜேப்பியார் :** தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டத்திலே பணியாற்றுகின்றவர்கள் பட்டதாரிகளாகவும் இருக்கிறார்கள் ; எஸ்.எஸ்.எல்.சி. படித்து பாஸ் செய்தவர்களாகவும் இருக்கிறார்கள். அந்தத் திட்டத்திலே உள்ள சூப்பர்வைசர் பதவிக்கு ஆள் எடுக்கிறபோது, இவர்களையும் அந்தப் பதவிக்கு நிரந்தரமாக நியமிக்கிற யோசனை அரசுக்கு உண்டா?

**மாண்புமிகு திரு. இரா. சௌந்திரராஜன் :** தலைவர் அவர்களே, அப்படி மேற்பார்வையாளர்களாக ஐ.சி.டி.எஸ். மற்றும் சத்துணவுத் திட்டத்திலே பணியாற்றுகின்றவர்கள் அந்தக் குறிப்பிட்ட காலம் வரை பயிற்சி பெற்றிருப்பார்களானால், அவர்களை நாம் மேற்பார்வையாளர்களாக இப்போது நியமித்துக் கொண்டிருக்கிறோம். அதே வழிமுறை பின்பற்றப்படும்.

**திரு. அ. ப. சிவராமன் :** தலைவர் அவர்களே. சத்துணவுத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கிற பாத்திரங்கள் பல்வேறு வகைகளில் பழுதுபட்டு, அதிலே சில பாத்திரங்கள் இல்லாமலும் இருக்கின்றன. இவைகளைப் பழுது பார்க்கிற பணிகளிலே அந்த அமைப்பாளர்கள் ஈடுபடுத்தப்படுகிறபோது, அவர்கள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகிறார்கள். எனவே இதைக் கருத்திலே கொண்டு

வருடந்தோறும் அந்தப் பாத்திரங்களைப் பழுதுபார்ப்பது அல்லது சுயம் பூசுவது போன்ற பணிகளுக்காகவும் நிதி ஒதுக்கீடு செய்வதற்கு இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. சௌந்திரராஜன் :** தலைவர் அவர்களே, தற்போது அப்படி பாத்திரங்கள் பழுதுபட்டிருக்குமானால், உடனடியாகப் பழுது பார்ப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அப்படி எங்காவது அவைகள் சரியாகப் பழுதுபார்க்கப்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அரசின் கவனத்திற்குக் கொண்டுவருவார்களானால், உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. எல். ஜெயச்சந்திரன்:** தலைவர் அவர்களே, சத்துணவுத் துறைக்கென்று தனியாக அமைச்சர் இருக்கும்போது, அதற்கென்று தனியாக ஒரு துறை இல்லை. சத்துணவுத் திட்டத்திற்கு தனியாக ஒரு துறை வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. சௌந்திரராஜன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய எண்ணம் விரைவில் நிறைவேறும்.

**திரு. ஜேப்பியார்:** தலைவர் அவர்களே, சத்துணவு மையங்களிலே மேற்பார்வை பார்க்கிற பொறுப்பு சமூகநலத் துறையிலே இருக்கிற சேவிகாக்களிடம் இருக்கிறது. அவர்கள் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்காக வெளியே சென்று பணியாற்றுவதால் சத்துணவு மையங்களிலே பார்க்கிறபோது அவர்கள் இல்லாமல் போய்விடுகிறார்கள். இதைப் பார்க்கிறவர்கள் அவர்கள் பணியில் இல்லை என்று குறை கூறி வேலையிலிருந்து நீக்கி விடுகிறார்கள். ஆகவே இவர்களைக் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்ட வேலைகளுக்கு அனுமதிக்காமல் சமூக நலத் துறையிலே உள்ளவர்களே அதைப் பார்த்துக்கொள்ளுமாறு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. சௌந்திரராஜன் :** தலைவர் அவர்களே, தற்போது சத்துணவுத் திட்டத்தில் பணியாற்றுகிறவர்களை, குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்கு ஆள் பிடிக்கிற பணியில் ஈடுபடுத்தக்கூடாது என்று நாம் திட்டவட்டமாக அறிவித்திருக்கிறோம். ஆனால் அவர்கள் அங்கே வருகின்ற தாய்மார்களிடத்தில் குடும்பக் கட்டுப்பாட்டைப் பற்றிப் பிரச்சாரம் மட்டும் செய்யலாமென்றும். அதனுடைய சிறப்புக்களை எடுத்துச் சொல்ல வேண்டுமென்றும் கூறியிருக்கிறோமே தவிர, அவர்கள் பணியிலே இருந்து வெளியே போய் ஆட்களைப் பிடித்து வரவேண்டுமென்று சொல்லவில்லை.



அப்படி யாராவது துன்புறுத்தப்படுகிறார்கள் என்று அரசினுடைய நேரடிக் கவனத்திற்குக் கொண்டு வரப்படுமானால், அவர்கள்மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**திரு. சி. இராமலிங்கம் :** தலைவர் அவர்களே, நான் கேட்ட கேள்வியிலே மாதந்தோறும் இந்தக் குழுக்கள் கூடி, அதில் நல்லது கெட்டதைப் பரிசீலனை செய்வதற்கு அந்தக் குழுவிற்கு அதிகாரம் கொடுக்கப்படுமா என்று கேட்டிருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்குத் தகுந்த விடை அளிக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. இரா. சௌந்திரராஜன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை நல்ல யோசனை என்று நான் சொல்லியிருக்கிறேன். ஆகவே அவருடைய கருத்தை முழுவதுமே அரசு பரிசீலிக்குமென்றுதான் பொருள். அவர்கள் குறிப்பிட்டபடி, அது மாதம் ஒருமுறை கூட்டம் நடத்தி, சத்துணவுக் கூடங்களிலே நடைபெறுகிற தவறுகள் என்ன, எப்படித் திருத்தலாம், என்றும் அதற்குரிய வழிவகைகளை எல்லாம் செயல்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதற்கு அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. விரைவில் அவைகள் செயல்படுத்தப்படும்.

(முற்பகல் 10-30)

**திரு. அ. ப. சிவராமன் :** தலைவர் அவர்களே, தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்திலிருந்து சத்துணவுக் கூடங்களுக்கு அரிசி, எண்ணெய், பருப்பு போன்ற பொருள்கள் வழங்கப்படுகின்றன. எடைபோடப்பட்ட இந்தப் பொருள்களிலிருந்து வழியிலேயே "லோடு மேன்"கள் எடுத்துக் கொண்டு எடை குறைவுள்ள இந்தப் பொருள்களை பெண் அமைப்பாளர்களிடம் வழங்குகிறார்கள். அந்தப் பெண் அமைப்பாளர்கள் இதைப்பற்றிக் கேட்டால், அவர்கள் மிரட்டப்படுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. இத்தகைய நிலைமை ஏற்படாமலிருக்க எல்லாச் சத்துணவுக் கூடங்களுக்கும் நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் வழங்கப்படும் பொருள்களை எடை போட்டுப் பார்க்க உரிய கருவிகள் வழங்குவதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. சௌந்திரராஜன் :** தலைவர் அவர்களே, ஒவ்வொரு சத்துணவுக் கூடத்திற்கும் ஒரு நிறுவை இயந்திரம் வழங்குவது என்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல. இப்போதே நுகர் பொருள் வாணிபக் கழகத்திலிருந்தும் மற்றும் பல்வேறு சிறப்பு அங்காடிகள் மூலமாகவும் வழங்கப்படும் உணவுப் பொருள்களையும் மற்றவற்றையும் பொறுத்தமட்டில், சத்துணவுக் கூடங்களில் எடைபோட்டுத்தான் தர வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம்.

அப்படித்தான் பல இடங்களில் நடைபெற்று வருகிறது. நானே கூட சில இடங்களில் பார்த்தேன். ஆங்காங்கே எடைபோட்டுத் தருகிறார்கள். எனவே இப்படி எடை போட மறுத்து, கேட்டால் மிரட்டுகிறார்கள் என்று சொன்னால், எங்கே யார் அப்படிச் செய்கிறார்கள் என்று குறிப்பாக அரசின் கவனத்திற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொண்டு வந்தால், உரிய நடவடிக்கை எடுக்க முடியும். நுகர் பொருள் வாணிபக் கழகமானாலும் மற்ற சிறப்பங்காடிகளானாலும், அவைகள் வழங்கும் பொருள்களை எடைபோட்டுத் தான் தர வேண்டும் என்று அறிவுறுத்தியிருக்கிறோம்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தற்போது சத்துணவுக் கூடங்கள் என்பவை பள்ளிகளிலேயே செயல்பட்டு வருகின்றன. எனவே சாப்பாடு வழங்கப்பட்ட பிறகு, வகுப்புகளெல்லாம் அசுத்தமடையக் கூடிய சூழ்நிலை இருந்து வருகிறது. அதோடு அங்கே உணவுப் பொருள்களுக்குப் பாதுகாப்பற்ற சூழ்நிலையும் இருக்கிறது. சத்துணவு அமைப்பாளர்கள் தங்கள் பொருள்களைப் பத்திரப் படுத்தி வைத்துக்கொள்ள முடியாத நிலை இருக்கிறது. மேலும் பள்ளிக்கு என்று ஒரு தலைமை ஆசிரியர் இருக்கிறார். சத்துணவு அமைப்பாளர் என்று ஒருவர் தனியே செயல்படுகிறார். இதன் காரணமாக பள்ளிகளில் இப்போது இரட்டை ஆட்சி முறை உருவாகி ஒற்றுமை இல்லாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே இதையெல்லாம் தவிர்க்கும் வகையில் பள்ளிகளுக்கு அருகிலேயே இனி எதிர்காலத்தில் சத்துணவுக் கூடங்கள் அமைக்கப்பட்டு அதற்கும் பள்ளிக்கும் தொடர்பு ஏதுமில்லாமல், உணவு வேளையில் பள்ளியிலிருந்து மாணவர்கள் சென்று உணவு உட்கொள்ளும் வகையில் அமைப்பதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** தலைவர் அவர்களே, கல்வியோடு சத்துணவும் இணைந்திருக்க வேண்டும் என்றுதான் பள்ளியிலேயே உணவு வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்து செயல்படுத்துகிறோம். பள்ளிகளுக்குப் பக்கத்தில் தனியாக உணவுக் கூடங்கள் கட்டப்பட்டு உணவு வழங்கப்பட்டால், அது கல்வியோடு இணைக்கப்பட்ட சத்துணவுக் கூடமாகக் கருதப்படாமல் ஏதோ வெறும் உணவு அருந்தும் ஹாஸ்டல் அல்லது உணவு அருந்தும் மாளிகை என்று வந்துவிடும். பள்ளியோடு இணைந்திருப்பது தான் சிறப்பாக இருக்கும். எனினும் இதில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப் போன்ற இடையூறுகள் இருந்தால், அவைகளைக் களைய அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)





## 2. அறிவிப்புகள்.

### (1) மேலவை உறுப்பினர் திரு. அ. மயில்சாமி கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நேற்று கைது செய்யப்பட்ட மேலவை உறுப்பினர் திரு. அ. மயில்சாமி அவர்கள் நேற்றே விடுதலை செய்யப்பட்டார் என்று காவல் துறை ஆணையாளரிடமிருந்து தகவல் வரப் பெற்றுள்ளேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### (2) 1985—86 ஆம் ஆண்டுக்கான அலுவல் ஆய்வுக் குழுவிற்கு உறுப்பினர்கள் நியமனம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மேலவை விதி 166-ன்படி 1985—86 ஆம் ஆண்டுக்கான அலுவல் ஆய்வுக் குழுவிற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்களை நான் நியமித்துள்ளேன் :—

1. மாண்புமிகு மேலவைத் தலைவர் (தலைவர்)
2. மாண்புமிகு மேலவை முன்னவர்
3. மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்
4. திரு. ஜேப்பியார்
5. திரு. எம். பி. சுப்பிரமணியம்
6. டாக்டர் மு. கருணாநிதி
7. திரு. பா. ரா. தாமஸ்
8. திரு. ப. மாணிக்கம்
9. திரு. வி. வி. வி. ஆனந்தம்.

மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு நிதியமைச்சர் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக இக்குழுவில் அங்கம்

[1985 ஏப்ரல் 9

(3) 1985—86 ஆம் ஆண்டுக்கான விதிக் குழுவிற்கு உறுப்பினர்கள் நியமனம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மேலவை விதி 192-ன்படி 1985-86 ஆம் ஆண்டுக்கான விதிக் குழுவிற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்களை நான் நியமித்துள்ளேன் :—

1. மாண்புமிகு மேலவைத் தலைவர் (தலைவர்)
2. மாண்புமிகு மேலவை முன்னவர்
3. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே; மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்
4. மாண்புமிகு திரு. ஜி. சுவாமிநாதன், மேலவைத் துணைத் தலைவர்
5. திரு. எம். பி. சுப்பிரமணியம்
6. டாக்டர் மு. கருணாநிதி
7. திரு. ஏ. ஜே. தாஸ்
8. திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா
9. டாக்டர் இரா. சனார்த்தனம்
10. திரு. பா. ரா. நாமல்
11. திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்
12. திரு. ப. மாணிக்கம்
13. திரு. வி. வி. வி. ஆனந்தம்
14. திரு. க. அருணாசலம்.

(4) 1985—86 ஆம் ஆண்டுக்கான அரசு உறுதிமொழிக் குழுவிற்கு உறுப்பினர்கள் நியமனம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மேலவை விதி 175-ன்படி 1985—86 ஆம் ஆண்டுக்கான அரசு உறுதிமொழிக் குழுவிற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்களை நான் நியமித்துள்ளேன் :

1. திரு. எம். பி. சுப்பிரமணியம்
2. திரு. ஆர். டி. சீத்தாபதி
3. கவிஞர் முத்துலிங்கம்
4. பிசா ஆர். கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன்
5. திரு. எஸ். ஜெயச்சந்திரன்
6. திரு. சி. ஆர். கோலப்பா
7. திரு. மு. செ. சங்கரலிங்கம்.

மேலவை விதி 176(1)-ன் கீழ் திரு. எம். பி. சுப்பிரமணியம் அவர்களை குழுவின் தலைவராக நியமித்துள்ளேன்.



1985 ஏப்ரல் 9]

(முற்பகல் 10-35)

(5) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவுகள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் கீழ்க்கண்ட நிகழ்ச்சி விவரம் முடிவு செய்யப்பட்டுள்ளது.

10—4—1985 — நிதிநிலை அறிக்கையின் மீது விவாதம்.

11—4—1985 — நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்திற்கு பதிலுரை.

12—4—1985 — அரசின் சட்ட முன்வடிவுகளை ஆய்வு செய்தல்.

மேலவை 12—4—1985 அன்றுடன் முடிவடைந்து மீண்டும் 1—7—1985 அன்று கூடும். மேலவை, தேவைப்பட்டால் 10—4—1985 அன்று மாலையிலும் நடைபெறும். 1—7—1985, 2—7—1985 ஆகிய நாட்களில் கல்வி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும். மேற்கொண்டு நிகழ்ச்சி விவரம் பின்னர் முடிவு செய்யப்படும்.

3. தகவல் கோரல்.

ஒத்திவைப்புத் தீர்மானங்களை எடுத்துக் கொள்ளாதது குறித்து.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவர் அவர்களே, On a point of clarification நம்முடைய அவையின் விதிமுறைகளையொட்டி ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். மேலவையின் விதி 43-ன்படி குறிப்பிட்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகளைப் பற்றி விவாதிக்க பிற அலுவல்களை ஒத்திவைக்க ஒரு தீர்மானம் கொண்டு வரலாம் என்று இருக்கிறது. அந்த அடிப்படையில் சில ஒத்திவைப்புத் தீர்மானங்களை இந்த அவையில் உள்ள உறுப்பினர்கள் கொடுத்தால், அந்தத் தீர்மானத்திற்கு குறிப்பிட்ட, சம்பந்தப்பட்ட, தொடர்புடைய துறையினுடைய அமைச்சர் அவர்கள்தான் பதில் அளிக்க முடியும் என்ற நிலை வரும்போது, நாங்கள் எந்தப் பொருளைக் குறித்து ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு முன்னறிவிப்பு கொடுக்கிறோமோ அந்தப் பொருளைப் பற்றி அந்தத் துறையைப் பொறுப்பேற்றுள்ள அமைச்சர் அவர்கள்தான் சில விளக்கங்களைக் கொடுக்க முடியும் என்ற நிலை இருக்கும்போது, அந்தப் பொருளைப்பற்றி நிதிநிலை அறிக்கையின் மீது பேசும்போது பேசலாம் என்று சொல்லி, ஒத்தி வைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்ளாமல் இருப்பது என்பது விதிமுறைகளுக்கு உட்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை மறுப்பதாக ஆகாதா என்று நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இந்த மாதிரி சந்தர்ப்பங்கள் நிறைய [1985 ஏப்ரல் 9
வந்ததுண்டு. சில நிலைமைகளை முன்னிட்டு தலைவர் அவர்கள் அவை
மாற்றலாம் என்பது மாண்புமிகு உறுப்பினருக்கே தெரியும். மாண்புமிகு
உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்
மானங்களைக் கூட முன்பு கவன ஈர்ப்புத் தீர்மானங்களாக மாற்றியிருக்
கிறோம். திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் கொடுத்த ஒத்திவைப்புத்
தீர்மானத்தைக் கூட கவன ஈர்ப்புத் தீர்மானமாக மாற்றியிருக்கிறோம். அந்த
மாதிரிதான் மாற்றியிருக்கிறோம். இது புதிதல்ல. இது ஒன்றும் சட்ட
விரோதமல்ல.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு தலைவர் அவர்கள்
கூறுகிற கருத்துக்களுக்கு நாங்கள் எப்போதும் மதிப்பளிக்கிறோம். இங்கே
கல்வித் துறை சம்பந்தப்பட்ட குறிப்பிட்ட ஒரு பொருள்பற்றி நிதிநிலை
அறிக்கை விவாதத்தின்போது நாங்கள் குறிப்பிட்டபோது, மாண்புமிகு நிதி
யமைச்சர் நாவலர் அவர்கள், கல்வித் துறை சம்பந்தமாக உள்ள பிரச்சினை
களைப்பற்றி சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுவார்கள்
என்று பலமுறை இங்கே சொல்லியிருக்கிறார்கள். வேண்டுமானால் அவைத்
தலைவர் அவர்கள் குறிப்பேடுகளைப் பார்க்கலாம். நாங்கள் கல்வித் துறை
யைப்பற்றி எப்போதெல்லாம் பிரச்சினை எழுப்புகிறோமோ அப்போதெல்லாம்
பதில் அளிக்கும்போது, கல்வித்துறை அமைச்சர் அவர்கள் பதில் அளிப்பார்
என்றுதான் நிதியமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். கடந்த
காலத்திலே நடந்த குறிப்பேடுகளைப் பார்த்தாலே இது தெரியும். நிலைமை
அப்படி இருக்கும்போது. அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த கல்வித்
துறை சம்பந்தப்பட்ட பொருளைப்பற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்
தால், மீண்டும் நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தின் மீது பேசலாம் என்று
சொல்லும்போது, மீண்டும் நாவலர் அவர்கள் 'கல்வி சம்பந்தமான
பொருளாக இருப்பதால், அதைப் பற்றி கல்வியமைச்சர் அவர்கள் பதில்
சொல்லுவார்கள்' என்று சொல்லும் நிலைமை வரும். ஆகவே இது எந்த
வகையிலே நியாயமாகும் என்பதை நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவைத் தலைவரை அறையிலே
சந்தித்து மாற்ற வேண்டும் என்று கேட்க மாண்புமிகு உறுப்பினருக்கு உரிமை
இருக்கிறது. தலைவர் எவ்வளவு கடுமையாகவா நடக்கிறார்? இல்லையே!
தாராளமாக அனுமதிக்கிறாரே! நாவலர் அவர்கள் அப்படிச் சொல்லுகிறார்
என்றால், அதற்கு வாய்ப்பு இல்லாமல் பண்ணுவார், என்று அவர் சார்பாக
நான் சொல்லுகிறேன்.





(திரு. மீனாட்சிசுந்தரம் எழுந்தார்).

ஆளுக்கு ஆள் எழுந்து பேசினால் இது ஒரு ஒத்திவைப்புத் தீர்மானமாக
ஆகிவிடும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : இந்த அவையில் ஒரு ஒத்திவைப்புத்
தீர்மானத்தைக் கூட அனுமதிக்கவில்லை, இது வரையில்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் இந்த
அவைக்குத் தவறான தகவலைக் கொடுக்கிறார்கள். பிறகு உரிமைப்
பிரச்சினை வந்துவிடும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : இந்தக் கூட்டத் தொடரிலே ஒன்றுகூட அனு
மதிக்கவில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இந்தக் கூட்டம் இரண்டு நாட்களாகத்
தான் நடக்கிறது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : சென்ற முறை நடந்த கூட்டத்திலே கூட
அனுமதிக்கவில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : கவனிக்கிறேன், உட்காருங்கள்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவர் அவர்களே . . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இதையே ஒரு ஒத்திவைப்புத் தீர்
மானமாக மாற்றி விவாதம் நடக்கிறது. இது தப்பு. இதற்கு என்
அனுமதியை மறுக்கிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நான்
ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையைக் குறித்து ஒத்தி
வைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன். ஆசிரியர்கள் போராட்டத்
திலே இறங்கி கைது செய்யப்பட்ட நிலைமை வந்தபோது, அதுவும் மேலவை
உறுப்பினர் திரு. மயில்சாமி, எங்கள் இயக்கத் தலைவர் அவர் தலைமையில்
போராட்டம் நடைபெற்று அவர் கைது செய்யப்பட்ட நிலைமை வந்தபோது,
அந்த நெருக்கடியைக் கூட இங்கே எடுத்துச் சொல்லுவதற்கு வாய்ப்புத் தராத

காரணத்தாலே, எனக்கு இந்த உரிமை மறுக்கப்பட்டதால், என்னுடைய ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொண்டு நானும் என்னுடைய அணியினரும் வெளிநடப்புச் செய்கிறோம்.

(பட்டதாரி-ஆசிரியர்கள் முன்னணியைச் சேர்ந்த உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தார்கள்.)

(முற்பகல் 10-40)

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** நானும் ஒரு ஆசிரியர் என்ற முறையிலே அவர்கள் உணர்விலே ஒன்றி நான் மட்டும் வெளி நடப்பு செய்கின்றேன்.

**திரு. ஜேப்பியார் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதிர்க் கட்சியில் கொறடா ஆக இருக்கிறார்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** நான் ஆசிரியர்கள் சார்பில் ஆசிரியர் என்ற முறையிலேதான் வெளியேறுகிறேன்.

(திரு. க. மீனாட்சிசுந்தரம் வெளிநடப்பு செய்தார்.)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் நினைத்தால் ஆசிரியர் பிரதிநிதி என்கின்றார். ஒருசில நேரங்களில் திராவிட முன்னேற்ற கழகப் பிரதிநிதி என்கின்றார்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மேலவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே மறியல், போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் ஆகியவைகள் ஒத்தி வைப்புத் தீர்மானத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. அப்படி முக்கியமான பிரச்சினையாக இருந்தால், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடமிருந்து விளக்கம் பெறவேண்டும் என்று விரும்புகின்றவர்களுக்கு கவன ஈர்ப்புத் தீர்மானம், குறுகிய கால வினா என்று வழி முறைகள் இருக்கின்றன. வினாக்கள் மூலமாகவே கேட்டுக்கொள்ளலாம். இந்த வகையிலே முழு அளவுக்குத் தெளிவாகவே குறிப்பிட்ட அமைச்சர் அவர்களிடமிருந்து விளக்கங்களைப் பெறலாம். அதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் மூலமாகத்தான் விளக்கம் பெற முடியும் என்பதல்ல.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நான் சொன்னது ரொம்ப சரியானதுதான். எப்போதுமே தலைவர் தீர்ப்பு முடிவானது. தலைவரின் தீர்ப்பை ஆட்சேபித்து வெளியேறுவது என்பது அவையில் வழக்கமல்ல. அது மரபுமல்ல. இதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொண்டு அடுத்த விஷயத்திற்கு வருகிறேன்.



## 4. கவன ஈர்ப்பு.

(1) **மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றி வரும் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் அனைவரையும் அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதலே பணிவரன்முறை செய்யாதது குறித்து.**

**செல்வி ஆ. லீலாவதி :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன் :—

"மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றி வரும் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் அனைவரையும் அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதலே பணி வரன்முறை செய்யாததால் அவ்வாசிரியர்கள் படும் இன்னல் குறித்து."

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, ஒரு விவர அறிக்கை @ அவையின் முன் வைக்கப்பட்டிருக்கிறது.

**செல்வி ஆ. லீலாவதி :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் 7 ஆண்டுக் காலமாக பணி நிரந்தரம் செய்யப்படாததனால், அவர்கள் எப்போது தேர்வாணைக் குழுவினால் அழைக்கப்படுவார்கள் என்று ஒரு குறிப்பிட்ட தேதியும் தெரியாததனால், பல ஆசிரியர்கள் பல இன்னல்களுக்கு உள்ளாகிக்கொண்டிருக்கின்றார்கள். முக்கியமாக பெண்கள் மெட்டர்னிடி லீவ், மற்ற எந்தவிதமான லீவும், மெடிக்கல் லீவும் எடுக்க முடியாமல் இருக்கின்றார்கள். தேர்வாணைக் குழு முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கும் ஏனைய பட்டதாரி ஆசிரியர்களுக்கும் அவசியம்தானா என்று அறிய விரும்புகிறேன். இன்னும் சொல்லப்போனால், கர்நாடக மாநிலத்திலும் ஆந்திர மாநிலத்திலும் இந்தத் தேர்வாணைக் குழு எடுக்கப்பட்டிருக்கின்றது. அதாவது புரோபஷனல் கோர்ஸ்கள் சம்பந்தப் பட்ட வரை, இவர்களுக்கெல்லாம் தேர்வாணைக் குழுவினால் துன்பம் இருக்கிறது. அந்த ஆசிரியர்கள் அல்லல் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பல ஆண்டுகளாக தேர்வாணைக் குழுவினால் அழைக்கப்படாததனால் நிரந்தரப்படுத்தப்படாமல் இருக்கிறார்கள். அதற்கும் மேலாக அவர்கள் பல ஆண்டுகள் கழிந்து ஒரு குடும்பத்தையும் அமைத்துக் கொண்டிருக்கின்றார்கள். அதற்குப் பிறகு அவர்கள் தேர்வாணைக் குழுவினால் அழைக்கப்பட்டு, தேர்ந்தெடுக்கப்படாமல் இருக்கின்றார்கள். இவர்களுடைய பிரச்சினைக்கு அரசு உடனடியாகத் தீர்வு கண்டு பல ஆண்டு காலம் தாழ்த்தாமல் இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

---

@ 217-ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

இன்னும் 1,200 பட்டதாரி ஆசிரியர்களும், பல்லாயிரக்கணக்கான முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களும் இந்த அவல நிலையில் இருக்கிறார்கள் என்பதை கல்வி அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அது அவருக்குத் தெரியாததல்ல, பல நேரங்களிலேயும் இதை நாங்கள் இந்த அவையிலே பேசியிருக்கிறோம். அவற்றிற்கு எந்த அளவிற்கு அவர் முடிவு காண்பார் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

(திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் வந்து இருக்கையில் அமர்ந்து எழுந்தார்கள்)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் உட்கார வேண்டும். அவையிலே ஏற்கெனவே நான் உறுப்பினர் பெயரை கவன ஈர்ப்பின்போது அழைத்தபோது, அவர் அவையில் இல்லை. ஒரு பிரச்சினை பின்பேரில் கவன ஈர்ப்பு முன்னறிவிப்பு கொடுத்தவர்கள் அந்த நேரத்திலே அவையிலே இல்லை என்றால் அந்தப் பிரச்சினை முடிந்துபோயிற்று என்று அர்த்தம். அடுத்தவரைக் கூப்பிட்டால், அத்துடன் அது முடிகின்றது. இந்த மரபைக்கூட உறுப்பினர் அவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்களா?

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் 3 பெயர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மூன்று பேர்கள் தீர்மானம் கொடுத்திருக்கின்றோம். அந்த மூன்றுபேரில் யாராவது ஒருவர் எடுத்துக்கொள்ளலாம். அதில் கேள்வி கேட்கலாம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அதை நானும் ஒத்துக்கொள்கிறேன். 3 பேர்களிலே முதல் பெயர் உறுப்பினர் பெயராக இருந்தது. கூப்பிட்டேன். அப்போது உறுப்பினர் அவையிலே இல்லை. 3-வது பெயரைக் கூப்பிட்டேன். ஆனால் உறுப்பினர் அவர்கள் அப்படி முதல் பெயரைக் கூப்பிட வேண்டும். அது முடியும் என்கின்றார்கள். அது எப்படி முடியும்? நான் அனுமதிக்கிறேன். நான் கண்டிப்பாக இருக்கிறேன் என்று சொல்கின்றார்கள். நான் கண்டிப்பாக இருப்பது என்பது ஒரு பெரிய பிரச்சினை இல்லை. ஆனால் நான் மரபுக்கு மாறான முறையிலே அவையை நடத்தக்கூடாது என்ற அளவில்தான் சொல்கிறேன். இப்போது உறுப்பினரை அனுமதிக்கிறேன்.

* **திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றி வரும் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் 28—4—1981-ல் தகுதி பெற்றிருந்தால், அவர்களையெல்லாம் 1985 செப்டம்பர் 30-க்குப் பின்னர் பணி நிரந்தரம் செய்யப்படுவதாக இந்த விவா





அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. 1978-லே மேல்நிலைப் பள்ளிகள் இங்கே, அறிமுகம் செய்யப்பட்டிருக்கின்றன. அன்று முதல் இன்று வரைக்கும் அவர்கள் நிரந்தரம் ஆகாமல் இருக்கின்றார்கள். அப்படிப்பட்ட நிலைமைகளில் அந்த ஆசிரியர்கள் இருந்துகொண்டிருக்கின்றார்கள்.

(முற்பகல் 10-45)

தகுதி பெற்றவர்கள் அன்றே இருந்திருக்கிறார்கள். 24—8—1981-லே இருந்தவர்களைக்கூட 30—9—1985-க்குப் பின்னே நிரந்தரம் செய்ய வேண்டிய அவசியமென்ன? அவர்கள் நிரந்தரமில்லாமல் இருந்து கொண்டிருக்கிறார்களே! அரசு ஊழியர்கள் 11,000 பேரை நிரந்தரம் செய்வதாகச் சொல்லி, இப்போது நிரந்தரம் செய்து கொண்டிருக்கிறார்களே! அரசுப் பள்ளிகளிலே பணியாற்றும் ஆசிரியர்கள் அரசு ஊழியர்கள் இல்லையா? அவர்களுக்கும் இந்த நிலையை உருவாக்கக்கூடாதா? எனவே தகுதி உடையவர்களை உடனடியாக நிரந்தரம் செய்ய வேண்டும். அதோடு, கல்வித் துறை நியமனங்களுக்கு தேர்வாணைக் குழுவின் ஒப்புதல் தேவையில்லை என்ற ஆந்திர மாநிலச் சட்டத்தைப்போல இங்கேயும் கொண்டுவர வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தோமே, அது என்னவாயிற்று என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இவர்கள் தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்கள். அரசு தானாக இதில் ஆணை போட முடியாது. இவர்கள் 10 (ஏ) (1) அடிப்படையில் நியமிக்கப்பட்டவர்கள். தேர்வாணைக் குழுவின் அனுமதியில்லாமல் அவர்களை நிரந்தரப்படுத்த முடியாது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவரவர்களே, அரசாணையின்படி 28—4—1981 வரை நியமிக்கப்பட்டவர்கள்; 30—9—1985 வரை நியமிக்கப்பட்டவர்கள் பற்றிய விவரங்களை நாம் தேர்வாணைக் குழுவிற்கு அனுப்பி, அவர்கள் அதைப் பார்த்து, ஒப்புதல் கொடுப்பது என்பது சாதாரண சம்பிரதாயம்தான். இதில் தேர்வாணைக் குழுவில் காலதாமதம் ஏற்படுகிறதா அல்லது கல்வித் துறையிலிருந்தே இன்னும் விவரங்கள் அனுப்பப்படாமல் கால தாமதம் ஏற்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன். கல்வித் துறையிலே கால தாமதம் இருந்தால், இங்கே விரைவு படுத்த வேண்டும். தேர்வாணைக் குழுவில் தாமதம் இருந்தால், இதை உடனடிப் பிரச்சினையாகக் கருதி, தேர்வாணைக் குழுவின் தலைவரோடு தொடர்பு கொண்டு அமைச்சரவர்கள் தக்க நடவடிக்கை எடுப்பார்களா?

[1985 ஏப்ரல் 9

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இந்தப் பிரச்சினை, தேர்வாணைக் குழுவின் இசைவைப் பெற்று, தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினை. தேவை யான விவரங்களை கல்வித் துறை அனுப்பி, அவர்கள் இசைவைப் பெற்றுத் தான் காரியங்கள் நடக்க வேண்டும். அதற்கு முன்னாலே அவசரப்பட்டு பொருளில்லை. இந்தக் காரியம் சீக்கிரம் நடைபெற வேண்டுமென்பதில் கல்வித் துறைக்கு அக்கறை இருக்கிறது. அதற்கான நடவடிக்கைகளைத் துறை எடுக்கும். தேர்வாணைக் குழுவின் இசைவைப் பெறாமல், அவர் களை நிரந்தரம் செய்ய முடியாது.

**(2) மாணவர் உதவித் தொகை பெறுவதற்கு 90 சதவிகித கட்டாய வருகை நியதியும், அதன் விளைவாக மாணவர்கள் அடையும் இடர்ப்பாடும் குறித்து.**

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் (திரு. பா. ரா. தாமஸ் சார்பில்):** மாண்பு மிகு தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:

"மாநிலம் முழுவதும் மாணவர் உதவித் தொகை பெறுவதற்காக மனு செய்யும் மாணவர்களுக்கு விதிக்கப்படும் 90 சதவிகித கட்டாய வருகை நியதியும் அதன் விளைவாக அவர்கள் அடையும் இடர்ப்பாடும் குறித்து".

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் :** மாண்புமிகு தலைவரவர்களே, இது சம்பந்தமான விவர அறிக்கை @ அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவரவர்களே, அறிக்கையினுடைய கடைசி பத்தியில் மாணவர்களுடைய கட்டாய வருகையான 90 சதவிகிதத்தில் 5 சதவிகிதம் தளர்வு செய்யலாம் என்று சம்பந்தப்பட்ட கல்வி நிலையத் தலைவர்களுக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. ஆனால் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்களைப் பொறுத்த வரையில், அவர்களுடைய நிலைமை அனைவருக்கும் நன்றாகத் தெரியும். சாதாரணமாக பள்ளிகளுக்குச் செல்லாமல், ஊர் சுற்றுபவர்கள் என்று சொல்லுவார்கள். இப்படி வேண்டுமென்றே பள்ளிகளுக்குச் செல்லாதவர்கள் மிகச் சிலர்தான். இந்த அறிக்கையிலேயே காரணங்கள் கூறப்பட்டிருக் கின்றன. அந்த முறையில் பல மாணவர்கள் பள்ளிக்கூடம் செல்ல முடியாத நிலை ஏற்படுகிறது. எனவே 5 சதவிகிதம் தளர்வு செய்யலாமென்ற சலுகை

---

@ 218-219 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1985 ஏப்ரல் 9] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

கூட நிச்சயமாக உதவி செய்யாது. இப்போது பள்ளிகளிலும், கல்லூரி களிலும் 75 சதவிகிதம் வருகைப் பதிவு இருந்தால் மாணவர்கள் தேர்வு எழுதலாமென்று இருக்கிறது. அப்படி அவர்கள் 75 சதவிகிதம் வருகை இல்லாவிட்டாலும்கூட, மருத்துவச் சான்றிதழ் கொடுத்து, 'கன்டொனேஷன்' பெற்று தேர்வு எழுதலாம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினரவர்கள் விளக்கம் கேட்கிறார்களா அல்லது சொற்பொழிவாற்றுகிறார்களா?

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவரவர்களே, இது தமிழகம் முழுவதும் உள்ள பிரச்சினை. கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் மாணவர்கள் தேர்வு எழுத அப்படிப்பட்ட சலுகையைக் கொடுத்திருக்கிறோம். மாணவர்கள் தேர்வு எழுத எந்த நிபந்தனை வைத்திருக்கிறோமோ அதே நிபந்தனையை உதவித் தொகை பெற வைத்தால், பாதிக்கப்பட்ட ஆயிரக் கணக்கான தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு நிவாரணமாக இருக்கும். இதை அனுதாபத்தோடு அமைச்சரவர்கள் பரிசீலனை செய்து, என்னுடைய கோரிக்கையை நிறைவேற்ற நடவடிக்கைகளை எடுப்பார்களா?

(முற்பகல் 10-50)

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் :** மாணவர்கள் ஒழுங்காகப் படிக்க வேண்டும் என்பதற்காகத்தான் இம்மாதிரி 90 சதவீத கட்டாய வருகை முறையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஒரு வருடத்திற்கு 365 நாட்கள் இருந்தாலும், மாணவர்கள் 180 நாட்கள் கட்டாயம் வருகை தந்திருக்க வேண்டும் ஒரு அக்காடமிக் ஈயரில் என்று இருக்கிறது. அரசு இப்பொருளை கவனமாகப் பரிசீலனை செய்து 5 பெர்சன்ட் குறைத்து 85 என்று ஆக்கியிருக் கிறது. இதுசம்பந்தமாக விரிவான உத்தரவு 26—3—1985 அன்று 824 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்டிருக்கிறது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** அமைச்சர் அவர்கள் அறிக்கையில் உள்ளதையே மீண்டும் சொல்கிறார்கள். இது போதாது என்றுதான் நான் கேட்கிறேன். சலுகைகள் மூலம் பாதிக்கப்பட்டுள்ள பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட அந்த மாணவர்களுக்கு நிவாரணம் கொடுக்க வேண்டும் என்பதை நான் இங்கே மீண்டும் அழுத்தந்திருத்தமாகச் சொல்கிறேன். உள்ளபடியே அவர்களுக்கு உதவி செய்வதாக இருந்தால், இந்த உதவி போதாது. இன்னும் அவர்களுக்கு வேறு வகையில் உதவி செய்ய வேண்டும். கன்டோனேஷனுக்காக மெடிக்கல் சர்ட்டிபிக்கெட்டை எடுத்துக் கொள்ள வேண்டும். சாதாரணமாக கல்லூரி, பள்ளி மாணவர்களுக்கு

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1985 ஏப்ரல் 9

தேர்வின்போது என்னென்ன சலுகைகள் கொடுக்கப்படுகின்றனவோ அதே
சலுகைகளை இவர்களுக்கு உதவித் தொகையை அளிப்பதற்கும்
கடைப்பிடிக்கலாம் என்ற கருத்தை நான் வலியுறுத்துகிறேன். இப்போது
இதுகுறித்து முடிவெடுக்க அவகாசம் இல்லாவிட்டாலும்கூட, ஓரிரு
நாட்களில் சம்பந்தப்பட்டவர்களைக் கலந்தாலோசித்து மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் அறிவித்துவிட்டால், இப்போது அந்த ஏழையெளிய
மாணவர்கள் தெருவில் நின்றுகொண்டிருக்கும் பரிதாப நிலையைப் போக்க
முடியும். அந்த வகையில் அமைச்சர் அவர்கள் முடிவெடுத்து அறிவிப்பாரா ?

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் :** இதுசம்பந்தமாக அனைத்துக்
கல்லூரி முதல்வர்களுக்கும் எல்லா நிறுவனங்களுக்கும் தகவல் அனுப்பப்
பட்டுள்ளது. இருந்தாலும் மாணவர்களுடைய வருகையைப் பொறுத்த
வரையில், டாக்டர் சர்ட்டிபிக்கேட்டை ஏற்றுக்கொள்வது நல்லது என்று
உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அப்படிப்பட்ட நிலையில் மாணவர்கள்
கல்லூரிக்குப் போகாமலேயே கூட டாக்டர் சர்ட்டிபிக்கேட் வாங்கிக் கொடுக்
கின்ற நிலை வந்துவிடக் கூடும். கல்வியின் தரம் உயர வேண்டுமென்ற
நல்லெண்ணத்தில்தான் 1977 ஆம் ஆண்டிலிருந்து இந்த 90 சதவிகித
அட்டென்டன்ஸ் முறையைக் கொண்டு வந்திருக்கிறோம். ஏற்கெனவே ஒரு
முறை விதி விலக்கு கொடுத்தோம். இந்த ஆண்டும் ஸ்காலர்ஷிப் கொடுக்கலா
மென்று நான் சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் சொல்லியிருக்கிறேன். இது
சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 5. 1985-86 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர்களுக்கு ஒன்று சொல்
கிறேன். நேற்று 4 உறுப்பினர்கள் நிதி நிலை அறிக்கை மீது பேசியிருக்
கிறார்கள். எப்பொழுதுமே நம்முடைய அவையிலே ஒரு மரபு உண்டு.
கட்சிகளிலே உள்ள ஒவ்வொருவரும் பேசுவது என்பது முடியாத காரியம்.
ஒவ்வொரு கட்சியும் நிதி நிலை அறிக்கை மீது இன்னாரைப் பேச அனுப்பு
கிறோம் என்று சொல்லிவிட்டால் நாம் நல்லமாதிரி குறிப்பிட்ட நாளில்
விவாதத்தை முடிக்க முடியும். ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும்
தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதத்தைத் தொடர்ந்து இந்த விவாதம்
நடைபெறுகிறது. அதில் பேசியவர்கள் இதில் பேசாமல் இருக்கும் வகையில்
கட்சிகளின் தலைவர்கள் தலைவருடன் ஒத்துழைப்பு கொடுத்தால் நன்றாக



1985 ஏப்ரல் 9] [மாண்புமிகு மேலவைத் தலைவர்]

இருக்கும். இங்கு இருக்கும் 42 பேரும் பேசுவது என்பது சாத்தியமல்ல.
ஒவ்வொருவரும் 10 நிமிடத்திற்குள் பேசி முடிப்பதாக இருந்தால், அது
சாத்தியமாக இருக்கும். பொதுவாக கட்சித் தலைவர்கள் பேசுவதற்கு
45 நிமிடம் எடுக்கிறார்கள். தயவுசெய்து இனிமேல் பேசுகிற உறுப்பினர்கள்
10 நிமிடத்திற்குள் பேசி முடிக்க வேண்டும். எப்படியும் 12ஆம் தேதிக்குள்
நாம் கூட்டத்தை முடித்தாக வேண்டும். 11 ஆம் தேதிக்குள் நிதி நிலை
அறிக்கை மீதான விவாதத்தை முடித்து 12 ஆம் தேதி சட்டமுன்வடிவுகளை
நிறைவேற்ற வேண்டும். இதில் மாறுதலே இல்லை. இதில் தலைவரும்
கண்டிப்பாக இருப்பார், உறுப்பினர்களும் இதில் கண்டிப்பாக இருந்து
ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, இந்த நிதி நிலை அறிக்கை
மீது விவாதம் நேற்றையதினம் தொடங்கி இன்னும் 2, 3 நாட்களுக்கு நடை
பெற இருக்கிறது. நேற்றையதினம் காலையில் விவாதம் ஆரம்பித்தபோது
துணைத் தலைவர் என்ற முறையில் நான் இங்கு தலைமை வகித்து அமர்ந்

(முற்பகல் 10-55)

திருந்தபோது சில உறுப்பினர்கள் பேசினார்கள். சில உறுப்பினர்கள் அரை
மணி நேரம் பேசினார்கள். இன்னும் ஒரு சிலர் 45 நிமிடம் பேசினார்கள்.
ஒருவேளை இன்றையதினம் நீங்கள், உறுப்பினர்கள் 10 நிமிடம்தான் பேச
லாம் என்று சொல்வீர்கள் என்று எனக்குத் தெரிந்திருந்தால், நானும்
நேற்றையதினமே அதிக நேரம் பேசியிருப்பேன். காரணம், நான்கு நாட்கள்
இந்த விவாதம் நடக்க இருக்கிற நிலையில், 20 அல்லது 25 உறுப்பினர்கள்தான்
பேசுவார்கள், ஆகவே 20-25 நிமிடங்கள் பேசலாம் என்றுதான் நானும் என்
பேச்சைத் தொடங்கலாம் என்று நினைத்தேன். இருந்தாலும் சில நாட்கள்
மாலை வேளைகளிலும் அவைக் கூட்டத்தை நடத்தி, பேசுகின்ற உறுப்பினர்
களுக்கு அதிக நேரம் வழங்க வேண்டுமென்று நான் தங்களைக் கேட்டுக்
கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அப்படியே இருந்தாலும் 42 பேரும்
பேச முடியாது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** ஆனால் 3 மணி நேரம் அவகாசம் கிடைக்கும்.
ஆகவே அதிக நேரம் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.
அப்படிக் கேட்பதற்குக் காரணம், தலைவர் அவர்கள் 10 நிமிடம் எனக்குக்
கொடுத்து, நானே 20-25 நிமிடம் பேசினால், பிறகு நான் துணைத் தலைமை

தேர்வின்போது என்னென்ன சலுகைகள் கொடுக்கப்படுகின்றனவோ அதே
சலுகைகளை இவர்களுக்கு உதவித் தொகையை அளிப்பதற்கும்
கடைப்பிடிக்கலாம் என்ற கருத்தை நான் வலியுறுத்துகிறேன். இப்போது
இதுகுறித்து முடிவெடுக்க அவகாசம் இல்லாவிட்டாலும்கூட, இரு
நாட்களில் சம்பந்தப்பட்டவர்களைக் கலந்தாலோசித்து மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் அறிவித்துவிட்டால், இப்போது அந்த ஏழையெளிய
மாணவர்கள் தெருவில் நின்றுகொண்டிருக்கும் பரிதாப நிலையைப் போக்க
முடியும். அந்த வகையில் அமைச்சர் அவர்கள் முடிவெடுத்து அறிவிப்பாரா?

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் :** இதுசம்பந்தமாக அனைத்துக்
கல்லூரி முதல்வர்களுக்கும் எல்லா நிறுவனங்களுக்கும் தகவல் அனுப்பப்
பட்டுள்ளது. இருந்தாலும் மாணவர்களுடைய வருகையைப் பொறுத்த
வரையில், டாக்டர் சர்ட்டிபிக்கேட்டை ஏற்றுக்கொள்வது நல்லது என்று
உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அப்படிப்பட்ட நிலையில் மாணவர்கள்
கல்லூரிக்குப் போகாமலேயே கூட டாக்டர் சர்ட்டிபிக்கேட் வாங்கிக் கொடுக்
கின்ற நிலை வந்துவிடக் கூடும். கல்வியின் தரம் உயர வேண்டுமென்ற
நல்லெண்ணத்தில்தான் 1977 ஆம் ஆண்டிலிருந்து இந்த 90 சதவிகித
அட்டெண்டன்ஸ் முறையைக் கொண்டு வந்திருக்கிறோம். ஏற்கெனவே ஒரு
முறை விதி விலக்கு கொடுத்தோம். இந்த ஆண்டும் ஸ்காலர்ஷிப் கொடுக்கலா
மென்று நான் சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் சொல்லியிருக்கிறேன். இது
சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### 5. 1985-86 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர்களுக்கு ஒன்று சொல்
கிறேன். நேற்று 4 உறுப்பினர்கள் நிதி நிலை அறிக்கை மீது பேசியிருக்
கிறார்கள். எப்பொழுதுமே நம்முடைய அவையிலே ஒரு மரபு உண்டு.
கட்சிகளிலே உள்ள ஒவ்வொருவரும் பேசுவது என்பது முடியாத காரியம்.
ஒவ்வொரு கட்சியும் நிதி நிலை அறிக்கை மீது இன்னாரைப் பேச அனுப்பு
கிறோம் என்று சொல்லிவிட்டால் நாம் நல்லமாதிரி குறிப்பிட்ட நாளில்
விவாதத்தை முடிக்க முடியும். ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும்
தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதத்தைத் தொடர்ந்து இந்த விவாதம்
நடைபெறுகிறது. அதில் பேசியவர்கள் இதில் பேசாமல் இருக்கும் வகையில்
கட்சிகளின் தலைவர்கள் தலைவருடன் ஒத்துழைப்பு கொடுத்தால் நன்றாக





இருக்கும். இங்கு இருக்கும் 42 பேரும் பேசுவது என்பது சாத்தியமல்ல. ஒவ்வொருவரும் 10 நிமிடத்திற்குள் பேசி முடிப்பதாக இருந்தால், அது சாத்தியமாக இருக்கும். பொதுவாக கட்சித் தலைவர்கள் பேசுவதற்கு 45 நிமிடம் எடுக்கிறார்கள். தயவுசெய்து இனிமேல் பேசுகிற உறுப்பினர்கள் 10 நிமிடத்திற்குள் பேசி முடிக்க வேண்டும். எப்படியும் 12ஆம் தேதிக்குள் நாம் கூட்டத்தை முடித்தாக வேண்டும். 11 ஆம் தேதிக்குள் நிதி நிலை அறிக்கை மீதான விவாதத்தை முடித்து 12 ஆம் தேதி சட்டமுன்வடிவுகளை நிறைவேற்ற வேண்டும். இதில் மாறுதலே இல்லை. இதில் தலைவரும் கண்டிப்பாக இருப்பார், உறுப்பினர்களும் இதில் கண்டிப்பாக இருந்து ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, இந்த நிதி நிலை அறிக்கை மீது விவாதம் நேற்றையதினம் தொடங்கி இன்னும் 2, 3 நாட்களுக்கு நடைபெற இருக்கிறது. நேற்றையதினம் காலையில் விவாதம் ஆரம்பித்தபோது துணைத் தலைவர் என்ற முறையில் நான் இங்கு தலைமை வகித்து அமர்ந்

(முற்பகல் 10-55)

திருந்தபோது சில உறுப்பினர்கள் பேசினார்கள். சில உறுப்பினர்கள் அரை மணி நேரம் பேசினார்கள். இன்னும் ஒரு சிலர் 45 நிமிடம் பேசினார்கள். ஒருவேளை இன்றையதினம் நீங்கள், உறுப்பினர்கள் 10 நிமிடம்தான் பேசலாம் என்று சொல்வீர்கள் என்று எனக்குத் தெரிந்திருந்தால், நானும் நேற்றையதினமே அதிக நேரம் பேசியிருப்பேன். காரணம், நான்கு நாட்கள் இந்த விவாதம் நடக்க இருக்கிற நிலையில், 20 அல்லது 25 உறுப்பினர்கள்தான் பேசுவார்கள், ஆகவே 20-25 நிமிடங்கள் பேசலாம் என்றுதான் நானும் என் பேச்சைத் தொடங்கலாம் என்று நினைத்தேன். இருந்தாலும் சில நாட்கள் மாலை வேளைகளிலும் அவைக் கூட்டத்தை நடத்தி, பேசுகின்ற உறுப்பினர்களுக்கு அதிக நேரம் வழங்க வேண்டுமென்று நான் தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அப்படியே இருந்தாலும் 42 பேரும் பேச முடியாது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** ஆனால் 3 மணி நேரம் அவகாசம் கிடைக்கும். ஆகவே அதிக நேரம் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிக் கேட்பதற்குக் காரணம், தலைவர் அவர்கள் 10 நிமிடம் எனக்குக் கொடுத்து, நானே 20-25 நிமிடம் பேசினால், பிறகு நான் துணைத் தலைமை

[திரு. ஜி. சுவாமிநாதன்] [1985 ஏப்ரல் 9

பொறுப்பேற்று நடத்தும்போது, அப்போது பேசும் உறுப்பினர்களை நான்
கண்காணிக்க இயலாமல் போகுமே என்பதற்காகத்தான் இப்போதே அதிக
நேரம் கொடுங்கள் என்று கேட்க விரும்புகிறேன்.

ஆளுநர் உரையின் மீது பேசுகிறபோது, நான் ஒரு கருத்தைச் சொல்லி,
சட்டமன்றத் தேர்தல்கள்பற்றிக் குறிப்பிட்டேன். சட்ட மன்றப் பேரவைத்
தேர்தல்களில் இரண்டு முக்கியமான அணிகளிடையேதான் போட்டி இருந்தது.
ஒன்று அ.தி.மு.க. அணி, இரண்டாவது தி.மு.க. அணி, இவர்களுக்கிடையே
தான் போட்டி. இந்தத் தேர்தலில் அ.தி.மு.க. அணி பெருமளவு இடத்தைப்
பெற்றது. தி.மு.க. அணி முந்தைய தேர்தலைவிட மிகக் குறைவான இடத்
தைப் பெற்றது என்பதை நான் அப்போது எடுத்துச் சொன்னேன். அப்படி
எடுத்துச் சொன்னதற்குக் காரணம். அந்தக் கட்சியைச் சேர்ந்த சில நண்பர்கள்
சட்டமன்றப் பேரவையிலும், மேலவையிலும் வெளியிலும் இந்தப்
பிரச்சினைபற்றிப் பேசி, அவர்கள் வாங்கியிருக்கிற வாக்குகளை எடுத்துச்
சொல்லி, தாங்கள் வெற்றியடையாமல், தோல்வியடைந்திருந்தாலும் கூட,
அவர்களுக்கு நாட்டு மக்களுடைய பேராதரவு இருக்கிறது என்ற கருத்தையும்
விகிதாச்சார முறைப்படி தேர்தல் நடந்தால், அதிக இடங்கள் கிடைத்திருக்
கும் என்றும் சொன்ன அடிப்படையை மனதில் வைத்துத்தான் நான்
அப்படிச் சொன்னேன்.

அப்படிச் சொன்னபோது, திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்
டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் இங்கே அமர்ந்திருந்தார்கள். அவர்
கள், நான் சொன்ன கருத்திற்கு பதில் சொல்கிற நோக்கில், தாங்கள் தோற்று
விட்டோம் என்று ஒப்புக்கொண்ட அதே நேரத்தில், 86 லட்சம் மக்கள்
வாக்களித்திருக்கிறார்கள் என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டுமென்று
சொன்னார்கள்.

அதற்கப்பால், இந்த மன்றத்திலும். பேரவையிலும், வெளியிலும் இந்தப்
பிரச்சினை பேசப்பட்டு வருவதை, தலைவர் அவர்களே, தாங்கள் அறிந்திருப்
பீர்கள். தஞ்சைக்குச் சென்ற திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்
அவர்கள், ஒரு கூட்டத்தில் பேசுகிறபோது, மேலவையில் நான் எழுப்பிய
கேள்வியையும் அதன் தொடர்பாக எழுந்த விவாதங்களையும் மீண்டும் அங்கே
எழுப்பி, "நாங்கள் அதிக இடங்கள் பெறாமல் தோற்று விட்டோம், ஆனால்
நாட்டு மக்களுடைய பெரும் ஆதரவு எங்களுக்கு இருக்கிறது" என்ற கருத்தை
மீண்டும் வலியுறுத்தியிருக்கிறார்கள். இதேபோன்று மற்றவர்களும் பேச
கிறார்கள். நான் ஒரு கருத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன். தங்
ளுக்கு நாட்டு மக்களிடம் பெரிய ஆதரவு இருக்கிறது, ஆனால் இடங்க



1985 ஏப்ரல் 9] [திரு. ஜி. சுவாமிநாதன்]

குறைந்துவிட்டன என்பதை வலியுறுத்தி வருவதை நான் பார்க்கிறேன். "சென்ற தேர்தலுக்கும் இந்தத் தேர்தலுக்கும் உள்ள இடைவெளியைப் பார்த்தால் ஒரு கருத்து தெரியவரும். எங்களுடைய அணிக்கும், தி.மு.க. அணிக்குமிடையில் இருக்கிற வாக்குகள் வித்தியாசம் 31 லட்சம் வாக்குகள்.

(முற்பகல் 11-00)

இந்த 31 லட்சம் வாக்குகளில் எங்களுக்கு 16 லட்சம் வாக்குகள் மாறியிருக்குமானால், அவர்கள் இருக்கும் இடத்திலே நாங்களும், நாங்கள் இருக்கும் இடத்திலே அவர்களும் இருப்பார்கள்" என்ற கருத்தை அங்கே மறுபடியும் எடுத்துச் சொன்னார்கள்.

1980 ஆம் ஆண்டில் தேர்தலிலே திராவிட முன்னேற்றக் கழக அணியும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அணியும் போட்டியிட்டு அந்தத் தேர்தலிலும் திராவிட முன்னேற்றக் கழக அணி தோற்றதற்குப் பிறகு, பேரவையிலே பேராசிரியர் அவர்கள் ஒரு சிறப்பான சொற்பொழிவை ஆற்றினார்கள். அப்போதும், பேராசிரியர் அவர்கள் இதே வாக்குப் பிரச்சினையைச் சொல்லி, "எங்களுக்கு 85 லட்சம் வாக்குகள் கிடைத்திருக்கின்றன. அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அணிக்கு 91 லட்சம் வாக்குகள் கிடைத்திருக்கின்றன. இவ்வாறு இரண்டு அணிக்கும் இடையில் சுமார் 5 லட்சம் வாக்குகள்தான் வித்தியாசம். இந்த 5 லட்சம் வாக்கு வித்தியாசத்தில் 2½ லட்சம் வாக்குகள் இடம் மாறி இருக்குமானால், முதலமைச்சராக அவர்களுடைய இடத்தில் எங்கள் தலைவரும், நாங்கள் இருக்கும் இடத்தில் அவர்களும் இருப்பார்கள்" என்று சொன்னார்கள். அப்போது சொன்னதற்கும், இப்போது சொல்வதற்கும் உள்ள வித்தியாசம் அப்போது 2½ லட்சம் வித்தியாசம் என்று சொன்னார்கள்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, எங்கள் தலைவர் வெளியிலே பேசிய பேச்சுக்கு இங்கே நம்முடைய துணைத் தலைவர் அவர்கள் பதில் அளித்துக்கொண்டிருக்கிறார்கள். எங்கள் தலைவர் வெளியிலே பேசினார்களா, எப்போது பேசினார்கள் என்பது பற்றியெல்லாம் அவை உறுப்பினர்கள் அறிந்து தெரிந்துகொள்ள வாய்ப்பில்லை. மேலும் சம்பந்தப்பட்ட அவர் இங்கு இல்லை. வெளியில் பேசியதற்கு இங்கே பதிலளிப்பது சரியா ?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவர் இல்லை என்றாலும் கட்சி இருப்பதால் சொல்லலாம். குற்றச்சாட்டுகள் சொல்லக் கூடாது. விளக்கம் தரலாம்.

**திரு. ஜீ. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, [1985 ஏப்ரல் 9
யிலேதான் நம்முடைய கட்சியே ஆட்சிக்கு வருகிறது. தேர்தலின் அடிப்படை
யிலே பேசும்போது, தேர்தலைப்பற்றிப் பேசுவதென்பது நிதிநிலை அறிக்கை
மேலவையிலும் மரபாக இருந்து வருகிறது. போவையிலும்,
எடுத்துப் பார்த்தால் நன்கு தெரியும். இது அவைக் குறிப்புகளை
சொல்வதைப்போல் பேராசிரியர் அவர்கள் அதனால்தான் சொல்கிறேன்.
என்று சொன்னேன். நாம் சொல்கிற விஷயங்கள் பேரவையிலே பேசினார்கள் நான்
சாட்டுவதாக இல்லாவிட்டால், சொல்லலாம் இன்னொருவரைக் குற்றம்
கிறேன். என்கிற முறையில்தான் சொல்

1980-க்கும் 1985-க்கும் இடையிலே உள்ள மாறுபாட்டை நாம் பார்க்கிற
போது, அன்றையதினம் என்ன சொன்னார்கள் என்றால், அன்றைய தினம்
வாக்குகள் வித்தியாசம் சுமார் 5 லட்சம் என்றும், அதில் 2½ லட்சம் வாக்குகள்
மாறியிருக்குமானால், முதலமைச்சரும் மாறியிருப்பார் என்றும் சொன்னார்கள்.
ஆனால் இந்தத் தேர்தலிலே 31 லட்சம் வாக்குகள் வித்தியாசம்
ஏற்பட்டிருக்கிறது. சுமார் 16 லட்சம் வாக்குகள் மாறியிருக்குமானால்,
நாங்கள் முதலமைச்சர் பதவிக்கு வந்திருப்போம் என்று சொன்னார்கள்.
இந்த நான்கு ஆண்டு கால இடைவெளியில் பார்க்கிறபோது, திராவிட
முன்னேற்றக்கழக அணி அன்று பெற்ற வாக்குகளுக்கும், திராவிட முன்
னேற்றக் கழக அணி இன்று பெற்ற வாக்குகளுக்கும் இடையிலே ஏற்பட்ட
சதவீதக்குறைவை எடுத்துப் பார்த்தால், கிட்டத்தட்ட 5½ சதவீதம்
அளவுக்கு நாட்டு மக்கள் ஆதரவை திராவிட முன்னேற்றக் கழக அணி இழந்
திருக்கிறது என்பது தெரியவரும். இதை இங்கு அமர்ந்திருக்கின்ற திராவிட
முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் ஒப்புக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.
இந்தத் தேர்தலுக்கும், சென்ற தேர்தலுக்கும் இடையிலே கிட்டத்தட்ட
35 லட்சம் வாக்குகளை அதிகமாகத் தந்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட திராவிட
முன்னேற்றக் கழக அணி சுமார் 13 லட்சம் வாக்குகளை இழந்திருக்கிறது
என்பதையும், சென்ற தேர்தலுக்கும் இந்தத் தேர்தலுக்கும் இடையிலே
அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அணி சுமார் 3½ சதவீதம் அதிக வாக்கு
களைப் பெற்றிருக்கிறது அல்லது எட்டு லட்சம் வாக்குகளை அதிகம் பெற்றி
ருக்கிறது என்பதையும், நாம் கவனத்தில் கொண்டு பார்த்தால், நாட்டு மக்கள்
மத்தியிலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் செல்வாக்கு குறைந்து கொண்டு
வருகிறது என்பதை நன்கு தெரிந்துகொள்ளலாம்.

திராவிட முன்னேற்றக் கழகம் நின்ற இடத்திலேயே, நின்றுகொண்டிருக்
கிறது அல்லது இன்னும் இழப்புக்கு ஆளாகிக் கொண்டிருக்கிறது என்ற
கருத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். சென்ற தேர்தல் முடிவு



1985 ஏப்ரல் 9] [திரு. ஜீ. சுவாமிநாதன்]

(முற்பகல் 11-05)

வந்தபோது, தினமணி ஆசிரியர் திரு. சிவராமன் ஒரு கருத்தைச் சொன்னார்கள். இந்தத் தேர்தலிலே திராவிட முன்னேற்றக் கழக அணி தோல்வி அடைந்ததற்கான காரணத்தை ஆராய்ச்சி செய்து சொல்கிறபோது, புதிதாக வருகிற வாக்காளர்கள் அந்த அணியை ஆதரிக்கவில்லை என்று தெளிவாகச் சொன்னார்கள்.

அதே கருத்தைத்தான் நான் இன்றும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். வரக்கூடிய புதிய வாக்காளர்களிடத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு செல்வாக்கு இல்லை. வளருகிற வாக்காளர் சமுதாயம் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆதரவு நல்கவில்லை என்ற ஒரு உண்மையை அவர்கள் ஒப்புக் கொள்ளவேண்டும். இன்னொன்று, அடுத்த தேர்தல் 5 ஆண்டுக் காலத்திலே வருமானால், ஒரு ஆண்டுக்கு ஒரு ஆண்டு கிட்டத்தட்ட 2 சதவீதம் அளவுக்கு வாக்காளர்களுடைய விகிதம் அதிகமாகிக் கொண்டிருக்கிற நேரத்தில், கிட்டத் தட்ட 5 சதவீதம் அளவுக்கு வாக்காளர்களுடைய எண்ணிக்கை உயர்ந்து கொண்டு வருகிற நேரத்தில், அடுத்த தேர்தலிலே வாக்காளர்களுடைய எண்ணிக்கை 25 சதவீதம் அதிகமாகும். அப்படி எடுத்துப் பார்க்கிறபோது, இதே நிலைமையிலே திராவிட முன்னேற்றக் கழகம் செல்லுமானால், அடுத்த தேர்தலிலே 31 சதவீதம் கூட வாக்குகளைப் பெறமுடியாத ஒரு துர்பாக்கியமான நிலைமை ஏற்படக் கூடும் என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, துணைத் தலைவர் அவர்கள் சொல்வது பட்டி மன்றம் போட்டுப் பேசவேண்டிய ஒரு பிரச்சினை. திரு. சிவராமன் சொல்லிவிட்ட காரணத்தினாலே அதை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதல்ல. புதிதாக வருகின்ற வாக்காளர்களிலே திட்டமிடப்பட்டு கொண்டுவந்து குவிக்கப்பட்டபோது, இதுவும் அதில் அடங்கும் என்ற கருத்தும் வெளியே வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜீ. சுவாமிநாதன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, அதே கருத்தைத் தான் சென்ற தடவையும் சொன்னார்கள். இந்தக் கருத்து இப்போது சொல்லப்பட்ட கருத்தல்ல. நம்முடைய மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். 1980-லே தேர்தல் நடந்த போது கூட, புதிய வாக்காளர்கள் எங்களை ஆதரிக்கவில்லை என்று சொன்னால், புதிய வாக்காளர்களைத் திட்டமிட்டுக் கொண்டுவந்தார்கள்

என்று சொன்னார்கள். அப்போது பதில் சொல்கிறபோது, "ஆட்சி எங்க
ளுடைய கையிலே இல்லாத நிலையில், ஆட்சியை மத்திய அரசு கலைத்து
விட்டு, நாங்கள் தேர்தலுக்கு நிற்கும் நேரத்தில் எப்படி நாங்கள் புதிய
வாக்காளர்களைக் கொண்டுவந்திருக்க முடியும்' என்ற கேள்வி 1980-லேயே
எழுப்பப்பட்டது. ஆகவே இது புதிதாக எழுப்பப்பட்ட கேள்வி அல்ல.
"உங்களுக்கு சீட்டுகள் மட்டும் குறையவில்லை. உங்களுக்கு நாட்டு மக்களி
டத்திலே இருக்கிற ஆதரவும் குறைந்து கொண்டிருக்கிறது என்ற உண்மையை
நீங்கள் ஒப்புக்கொள்வது நல்லது" என்ற கருத்தை நான் சொன்னேன். நான்
சொல்வதை பட்டிமன்றத்திலே பேசலாமென்று சொன்னார்கள். பட்டிமன்றத்
திலே பேசுவதைப்பற்றி யாருக்கும் ஆட்சேபணை இல்லை. தாங்களும்
பேசலாம்.

அடுத்து, நான் ஸ்ரீலங்கா தமிழர் பிரச்சினையைப் பற்றிய கருத்தைச்
சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நேற்றையதினம் இங்கே பேசிய மதிப்பிற்
குரிய ஆளும் கட்சியைச் சேர்ந்த நண்பர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள்
தமிழர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், எவ்வளவு
கவலை கொண்டிருக்கிறார்கள் என்ற கருத்தை எடுத்துச் சொன்னார்கள்.
அதற்கு அடுத்தபடியாகப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சி
சுந்தரம் அவர்கள் அவருடைய பேச்சை எடுத்துக்காட்டி, "அவர் பேசுகிற
அளவுக்குத்தான் பேச முடியும், இன்னும் அதிகமாக அந்த இடத்திலிருந்து
அவரால் பேசமுடியாது" என்று இங்கே சொன்னார்கள். இன்றையதினம்
ஸ்ரீலங்கா தமிழர் பிரச்சினை ஏதோ ஒரு கட்சிக்குரிய பிரச்சினையல்ல.
அந்தப் பிரச்சினை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சொந்தப் பிரச்சினை
போலவும், பாக்கிக் கட்சிக்காரர்களுக்கு ஸ்ரீலங்கா தமிழர்களிடத்திலே
அனுதாபமே இல்லை என்பதுபோலவும், அவர்கள் இருந்தாலும், அவர்கள்
இறந்தாலும் அதைப்பற்றி யாரும் கவலைப்படப் போவதில்லை என்பது
போலவும் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும், திராவிட முன்னேற்றக்
கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்களும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அந்த
முறையிலே ஸ்ரீலங்கா தமிழர் பிரச்சினையில் மட்டுமல்ல, இந்திப் பிரச்சினை
யிலும், "இந்தியை எதிர்க்க வேண்டுமென்று சொன்னால், இந்தியை எதிர்க்கி
றவர்கள் நாங்கள் தான். பாக்கி யாரும் இந்தியை எதிர்ப்பவர்கள் அல்ல"
என்று சொன்னார்கள். அதற்குத்தான் மாண்புமிகு உறுப்பினர் திருமதி
ஜெயலட்சுமி அம்மையார் அவர்கள் இங்கே நேற்று பேசுகிறபோதுகூட,
குறிப்பாக எடுத்துச் சொன்னார்கள். "எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக
இருந்தாலும், தமிழகத்திலே இந்தி நுழையுமானால், திராவிட முன்னேற்றக்





கழகமாக இருந்தாலும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமாக யிருந்தாலும், காங்கிரஸ் கட்சியாக இருந்தாலும், எல்லோரும் எதிர்ப்போம்" என்று சொன்னார்கள். அதே கருத்தைத்தான் நாங்கள் இன்றையதினம் . . .

**திருமதி வி. ஜெயலட்சுமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, 'நுழையுமானால்' என்று சொல்லவில்லை. மக்களுடைய விருப்புக்கு எதிராக இந்தி திணிக்கப்படுமானால் எதிர்ப்போமென்று சொன்னேனேயொழிய, தமிழகத்திலே நுழையுமானால் நாங்கள் எதிர்ப்போமென்று சொல்லவில்லை. எனவே தயவுசெய்து தங்களுடைய கருத்தை மாற்றிக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் உணர்ச்சிகளைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அவர்கள் சொன்ன வார்த்தைகளில் வித்தியாசம் இருக்கலாம்.

**திருமதி வி. ஜெயலட்சுமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, உணர்ச்சிகள் வேறாக இருக்கலாம், வார்த்தைகள் வேறாக இருக்கலாம். ஆனால் அந்த வார்த்தைகள் அந்த உணர்ச்சிகளில்தான் இருக்கின்றன என்பதை நீங்கள் உங்களுக்குச் சாதகமாக இருக்கும் வரையில் உபயோகப்படுத்திக்கொள்வீர்கள். ஆனால் இதே உணர்ச்சிகள் மாறுபடும் நேரம் வரும்போது அதை பாதகமாக மாற்றிக்கொள்ளக்கூடிய வாய்ப்புகள் உண்டு. அதனால் வார்த்தைகளிலே உள்ள உணர்ச்சிகளைப்பற்றி நீங்கள் பேசக்கூடாது. வார்த்தைகளைத்தான் நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் சொல்கிற கருத்து "இந்தி எதிர்ப்பு என்பது அல்லது இந்தி கட்டாயமாகத் திணிக்கப்படும் நிலைமைகள் ஏற்படுமானால் அந்த நிலைமைகளை எதிர்ப்பவர்கள் திராவிட முன்னேற்றக் கழகம்தான். அப்படிப்பட்ட நிலைமைகள் வரும்போது பாக்கி இருக்கக்கூடிய மற்ற கட்சிக்காரர்களுக்கு தமிழைப் பற்றியோ அல்லது இந்தி திணிப்பைப் பற்றியோ கவலையே இல்லை" என்பதைப்போல ஒரு உருவகம் கொடுக்கப்படுகிறது. அந்த உருவகம் சரியானதல்ல . . . .

*** திரு. பி. டி. ஆர். பழனிவேல்ராஜன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றிப் பல அரிய கருத்துக்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நன்றி. ஆனால் நீங்கள் இல்லாத நேரத்தில் அவர் எங்கள் தலைவர்.

[திரு. பி. டி. ஆர். பழனிவேல்ராஜன்] [1985 ஏப்ரல் 9

(முற்பகல் 11-10)

ஆளும் கட்சி சார்பிலே பேசுவதற்கு ஏராளமான நண்பர்கள் இருக்கிறார்கள்.
போதாததற்கு அருமை நண்பர் திரு. சுப்பு அவர்களும் இங்கே வந்துவிட்டார்
கள். ஆகவே முடிந்தவரை, துணைத் தலைவர் அவர்கள் எங்களுக்கு ஒரு
கடுமையான நிலையை ஏற்படுத்தாத வகையில் சொல்வது இந்த அவையின்
மரபைக் காப்பாற்றும் என்று கருதி, அவர்கள் பொதுவான கருத்துக்களைச்
சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஸ்ரீலங்கா தமிழர் பிரச்சினை
யானாலும் சரி, இந்தி மொழிப் பிரச்சினையானாலும் சரி, திராவிட
முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் தீவிரமாக இருக்கிறார்கள் என்பதை
யாரும் மறுப்பதற்கில்லை என்றாலும், மற்றவர்களுக்கு அதில் அக்கறை இல்லை
என்று எந்தக் காலத்திலும் யாரும் சொன்னது கிடையாது. எனவே அப்படிப்
பட்ட குற்றச்சாட்டுக்களைச் சொல்வதாக இருந்தால், அதற்கான ஆதாரத்
தோடு பேச வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, நான் துணைத் தலைவ
ராக இருக்கிற காரணத்தால், பொதுவான கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டு
மென்று ஒரு புதிய கருத்தை எனது மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. பி. டி.
ஆர். பழனிவேல் ராஜன் அவர்கள் சொல்கிறார்கள். அவையின் தலைவராக
இருக்கிறவர் எல்லோருக்கும் பொதுவாக இருக்க வேண்டும். தலைவராக
இருப்பவர் கட்சிக் கூட்டங்களில் கலந்துகொள்ளக் கூடாது. ஆனால் துணைத்
தலைவராக இருப்பவர் அவையில் உறுப்பினராகவும் இருக்கிறார். எனவே
உறுப்பினர் என்ற முறையில் எனக்கு ஒரு இடம் இங்கே ஒதுக்கப்பட்டிருக்
கிறது. உறுப்பினராக இருக்கிறபோது நான் கட்சிக்காரனாக இருக்கிறேன்.
ஒரு கட்சியைச் சார்ந்தவனாக இருக்கிறேன். நான் சார்ந்திருக்கிற கட்சி
யின் கருத்துக்களை எடுத்துச் சொல்லுகிற உரிமை எனக்கு இருக்கிறது.
ஆனால் அவையின் தலைவர் ஸ்தானத்தில் அமர்ந்திருக்கும்போது, தலைவர்
பணியைச் செய்யும்போது, பொதுவாகச் செயல்பட வேண்டுமே தவிர, நான்
இங்கே துணைத் தலைவராக இருக்கிறேன் என்ற காரணத்திற்காக நான் சார்ந்
திருக்கிற கட்சியைப்பற்றி எடுத்துச் சொல்லவோ அல்லது எங்களை எதிர்க்கிற
கட்சியைப்பற்றி விமர்சிக்கவோ கூடாது என்பதாகவோ அல்லது துணைத்
தலைவராக இருப்பவர் பொதுப்படையான கருத்துக்களை மட்டும்தான் பேச
வேண்டும் என்றோ சொல்லும்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை
புரிந்துதான் பேசுகிறாரா அல்லது புரியாமல் பேசுகிறாரா என்று எண்ண
வேண்டியிருக்கிறது . . . .



[1985 ஏப்ரல் 9]

**திரு. பி. டி. ஆர். பழனிவேல்ராஜன் :** இங்கே நான் அவையின் மரபைப் பற்றிதான் குறிப்பிட்டேன். சட்டத்தைப் பற்றிப் பேசவில்லை. துணைத் தலைவர் அவர்கள் ஒரு கட்சியின் உறுப்பினர் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். அவர் பல்வேறு காலங்களில் பல்வேறு அரசியல் கருத்துக்கள் உள்ளவராக இருந்திருக்கிறார் என்பதும் எனக்கு நன்றாகத் தெரியும். இங்கே மேலவையின் மரபு காப்பாற்றப்பட வேண்டும் என்பதுதான் முக்கியம். சட்டம் முக்கியமல்ல என்ற அடிப்படையில் தான் துணைத் தலைவர் அவர்கள் எங்களின் மரியாதைக்குரியவர். பெரும்பாலான நேரங்களில் அவர்தான் அவையில் தலைமை தாங்குகிறார், ஆகவே முடிந்தவரை பொதுவான கருத்துக்களைச் சொன்னால் அவையின் மரபைக் காப்பாற்றுவதற்கு உறுதுணையாக இருக்கும் என்று குறிப்பிட்டேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. டி. ஆர். பழனிவேல் ராஜன் அவர்கள் துணைத் தலைவர் அவர்களைப் பேசக்கூடாது என்று சொல்லவில்லை. பொதுப்படையாக இருப்பது நல்லது, ரொம்பவும் ஆழமாகவும், அகலமாகவும் எதிர்க் கட்சியை விமர்சிக்க வேண்டாம் என்றுதான் சொன்னார். நானும் ஒன்றைச் சொல்லிக் கொள்கிறேன். நானும் இங்கே அவையின் துணைத் தலைவராக இந்தப் பீடத்தில் அமர்ந்திருந்து பேசியிருக்கிறேன். குற்றச்சாட்டுக்கள் ஆவேசமாக இருக்கக் கூடாது என்ற கருத்தில் உறுப்பினர் அவர்கள் சொல்லுவதை துணைத் தலைவர் ஏற்றுக்கொள்கிறார். அவருடைய பேச்சில் அவரும் அப்படிப் பேச வில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் உணருவார்கள். அவர் விளக்கம்தான் சொல்லிக்கொண்டிருக்கிறார். அப்படி இல்லாமல் கோபமாக, குற்றச்சாட்டாகச் சொல்லுவாரானால், அதைத் தலைவரே கவனித்துக் கொள்வார் என்பதையும் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** இன்றைய தினம் தமிழகத்தில் உள்ள மிகப் பெரிய முக்கியமான பிரச்சினை ஸ்ரீலங்கா தமிழர் பிரச்சினை. ஸ்ரீலங்கா தமிழர் பிரச்சினையைப்பற்றி பொதுவான அபிப்பிராயங்கள் கட்சிகளுக் கிடையே இருக்கின்றன. அந்தக் கருத்துக்களை எடுத்துச் சொல்வது பொது வான கருத்துத்தான். ஆனால் தனிப்பட்ட முறையில் ஒரு கட்சியைப் பற்றியோ அல்லது அதன் தலைவரையோ நான் தாக்கிப் பேசுவதைப்போல் மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. டி. ஆர். பழனிவேல் ராஜன் அவர்கள் சொல் வதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஒரு கட்சியின் அபிப்பிராயத்தை எடுத்துச் சொல்வது அவையின் மரபுக்கு மாறானது என்று நான் கருதவில்லை என்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

என் இதைச் சொல்கிறேன் என்றால், ஸ்ரீலங்கா தமிழர் பிரச்சினையைப் பொறுத்தவரையில், திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் எவ்வளவு ஆர்வம் கொண்டவர்களாக இருக்கிறார்களோ அந்த அளவுக்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த நண்பர்களும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர்களும் அதைப் போலவே தமிழக முதல்வர் அவர்களும் ஆர்வத்தோடு இருக்கிறார்கள் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. ஸ்ரீலங்கா தமிழர் பிரச்சினையில் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களும் மும்முரமாக இருக்கிறார்கள் என்பதையும் மறுப்பதற்கு இயலாது.

அண்மையில் ராஜ்ய சபையில் பேசும்போது தமிழகத்தைச் சார்ந்த திரு. தங்கபாலு அவர்கள் மிகக் கடுமையான கருத்துக்களை இந்தப் பிரச்சினையில் தெரிவித்திருக்கிறார் என்பதையும் அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அதைப் போலவே எங்கள் கட்சியைச் சார்ந்த ராஜ்ய சபை உறுப்பினர் திரு. வலம்புரிஜான் அவர்கள் பேசும்போது, எவ்வளவு தூரம் கடுமையான கருத்துக்களைச் சொல்லி விமர்சிக்க முடியுமோ அந்த அளவுக்கு அங்கே பேசியிருக்கிறார்கள் என்பதையும் இங்கே அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். எனவே கட்சி சார்பு இல்லாமல் கட்சிக்கு அப்பாற்பட்டு தமிழர்களின் பிரச்சினை என்ற கண்ணோட்டத்தில்தான் தமிழகத்தில் உள்ள அனைத்துக் கட்சிகளுமே ஸ்ரீலங்கா தமிழர் பிரச்சினையைப் பற்றி செயல்பட்டு வருகின்றன.

(முற்பகல் 11-15)

அந்த அடிப்படையிலேதான் தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவருக்கும், அந்தக் கட்சிக்கும் "எல்லோரும் சேர்ந்து தமிழர்கள் பிரச்சினை என்ற அடிப்படையிலே மத்திய அரசுக்கு எடுத்து அறிவுறுத்துவோம், வாருங்கள்" என்று அழைத்திருக்கிறார்கள். அதற்கு வர இயலுமா, இயலாதா என்பதல்ல. சர்வ கட்சிக் கூட்டத்தை முதல்வர் அவர்கள் கூட்டியிருக்கிறார்கள் என்றால், அந்தப் பிரச்சினையை முக்கியமான பிரச்சினை என்று திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கருதினால், அவரே அந்தக் கூட்டத்திற்குச் சென்றிருக்கலாம். ஆனால் சர்வ கட்சிக் கூட்டத்திற்கு திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் செல்லவில்லை. அவருக்குப் பதிலாக யாரோ சென்றிருக்கிறார்கள்.

இந்த அவையிலே கச்சத் தீவு பிரச்சினை எழுந்தபோது கூட, மத்திய அரசு கச்சத் தீவை ஸ்ரீலங்கா அரசுக்குக் கொடுத்து விட்டது என்ற பிரச்சினை எழுந்தபோது கூட, அப்போது முதல்வராக இருந்த டாக்டர் கருணாநிதி





அவர்கள் அந்தப் பிரச்சினையைப் பற்றி பேரவையிலும், மேலவையிலும் தீர்மானம் கொண்டு வந்தார்கள். அப்போது, தலைவர் அவர்களே, நீங்கள் கூட இந்த அவையிலே இருந்து அந்தத் தீர்மானத்தின் மீது பேசியிருக்கிறீர்கள். எதிர் வரிசையில் திரு. பழனிவேல்ராஜன் அவர்கள் இப்போது உட்கார்ந்திருக்கும் இடத்திலே அன்றைக்கு இருந்த திரு. இராமகிருஷ்ணத் தேவர் அவர்கள், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும், எவ்வளவு வலிமையாகப் பேசினார் என்பதை நாம் அறிவோம். ஸ்ரீலங்காவிற்கு கச்சத் தீவு கொடுக்கப்பட்ட நேரத்தில், அப்போதிருந்த முதல்வர் அவர்கள் சர்வ கட்சிக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும் என்றும், சர்வ கட்சித் தலைவர்களை அழைத்துக்கொண்டு செல்ல வேண்டும் என்றும் பேசினார்களே தவிர ஸ்ரீலங்காவோடு போராட வேண்டும். இந்திய அரசாங்கத்தோடு போராட வேண்டும் என்று சொல்லவில்லை.

அதே போல காவிரிப் பிரச்சினை எழுப்பப்பட்டபோதும், எல்லாக் கட்சிக்காரர்களும் சேர்ந்து அனைத்துக் கட்சித் தலைவர்களும், முதல்வர் அவர்களை முன்னோடியாக வைத்து மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும் என்றுதான் கருத்து தெரிவித்தார்களே தவிர, அதற்கு மாறுபட்ட கருத்தை அவர்கள் தெரிவிக்கவில்லை. அதே போல முக்கியமான, தமிழகத்தின் பிரச்சினையாக இருக்கக்கூடிய இந்தப் பிரச்சினையிலும் மத்திய அரசுக்கு எடுத்துச்சொல்லக் கூடியவர் யாராவது ஒருவர் இருக்கிறார் என்றால், அது தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவராகத்தான் இருப்பார். ஏனென்றால் இவர்கள் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் புரட்சித் தலைவர்தான் தமிழகத்தின் முதல்வராக இருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் எப்படி தமிழர்களுடைய ஏகோபித்த பிரச்சினைகளில் அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டி, தீர்மானங்களை நிறைவேற்றி எடுத்துச் சொன்னார்களோ, அதே போலவேதான் இன்றைய தினம் முதல்வர் அவர்கள் செய்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்வதை காதில் வாங்காமல், தாங்கள்தான் தீவிரமாக இருக்கிறோம் என்று காட்டிக்கொள்ள வெளியே நின்று பேசுவோம் என்று சொன்னால், "தமிழர்களிடையே ஒற்றுமை இல்லை, தமிழர் நலன் பாதுகாப்பைவிட கட்சி நலன் பாதுகாப்புதான் முக்கியம் என்று கருதுகிறார்கள்" என்ற எண்ணம் அங்கே இருக்கக் கூடிய திரு. ஜெயவர்த்தனேவுக்கு ஏற்படும். அதனால் அங்கேயுள்ள தமிழர்களுக்கு மேலும் அவதி ஏற்படக்கூடிய நிலைமைகள் உருவாகும் என்று சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இதை நான் சொல்லவில்லை. ஸ்ரீலங்கா விடுதலைப் புலியாக இருக்கக்கூடிய திரு. உமாமகேஸ்வரன் அவர்கள் அண்மையில் கரூரில் பேசியிருக்கிறார்கள்.

[திரு. ஜி. சுவாமிநாதன்] [1985 ஏப்ரல் 9

'விடுதலைப் புலி உமாமகேஸ்வரன் அழைப்பு' என்ற பெயரில் திருச்சி-தஞ்சை 'மாலை முரசு' பத்திரிகையில் வெளி வந்திருக்கிறது. இங்கேயுள்ள தமிழர்கள் கட்சி பேதமின்றி மாநில, மத்திய அரசுகள் எடுத்துச் சொல்ல வேண்டும் என்ற கருத்தை அவர் அதில் சொல்லியிருக்கிறார். இங்கேயுள்ள தமிழர்கள், தமிழகத்திலே இருக்கக்கூடிய கட்சியைச் சேர்ந்தவர்கள்—அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமானாலும் சரி, திராவிட முன்னேற்றக் கழகமானாலும் சரி, காங்கிரஸ் கட்சியாக இருந்தாலும் சரி,—தமிழர்கள் ஏகோபித்த பிரச்சினை என்ற அடிப்படையிலே முழு உருவமாக, முழுப் பிரச்சினையாக மத்திய அரசுக்குச் சொல்ல வேண்டுமே தவிர, அரசியலில் ஏதோ அடைய வேண்டும் என்பதற்காகவோ, அரசியலில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை விட தாங்கள்தான் தீவிரமாக இருக்கிறோம் என்று காட்டுவதற்காகவோ, தனக்குத்தான் தமிழகத்திலே இடம் இருக்க வேண்டும் என்பதற்காகவோ செய்யக்கூடாது. ஆகவே இந்தப் பிரச்சினையில் நாங்கள் சேர்ந்து பேச மாட்டோம் என்றோ, நாங்கள் மறியல் செய்யப் போகிறோம், தனியாகத்தான் இந்தப் பிரச்சினையை எழுப்புவோம் என்றோ சொன்னால், அது நாட்டுக்கும் நல்லதல்ல, தமிழகத்திற்கும் நல்லதல்ல என்று நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, சர்வ கட்சிக் கூட்டத்தினை மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூட்டியதற்குப் பின்னாலே திராவிட முன்னேற்றக் கழகம் மறியல் போராட்டத்தை அறிவித்ததைப் போல துணைத் தலைவர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே அறிவித்து அதற்குரிய நடவடிக்கை எடுத்த பின்னர்தான் சர்வ கட்சிக் கூட்டம் கூட்டப் பட்டது. திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நண்பர்கள் அந்தக் கூட்டத்திற்குச் சென்றிருக்கிறார்கள். அவர்கள் அனுப்பிய அழைப்பை மறுத்ததாகவும் எங்கள் தலைவர் குறிப்பிடவில்லை. அந்தப் போக்கிலே பேச வேண்டாம். வரமாட்டேன் என்று சொல்லவில்லை. ஆகவே அழைப்பை ஏற்றுக்கொள்ளவில்லை என்று குற்றம் சாட்ட வழியில்லை.

(முற்பகல் 11-20)

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே சர்வ கட்சிக் கூட்டத்தைக் கூட்டி, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அழைப்பு கொடுத்து, நீங்களும் டெல்லிக்கு வாருங்கள் என்று அழைத்த பிறகு, தனியாக மறியல் செய்யப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** முன்னாலேயே அறிவிக்கப்பட்ட மறியல் அது



1985 ஏப்ரல் 9]

**திரு. ஜி. சுவாமிநாதன் :** முன்னதாகவே அறிவிக்கப்பட்டதாக இருக்கலாம். அறிவித்த மறியலைத் திரும்பப் பெறுவது என்பது திராவிட முன்னேற்றக் கழகத் தலைவருக்கு கடினமானதல்ல.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** அது கட்சிக் கூட்டத்தில் செய்ய வேண்டிய முடிவு. அதைப்பற்றி இங்கே பேசுவதற்கில்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இப்படி குறுக்கிட்டுப் பேசிக்கொண்டிருந்தால் எப்படி பேசி முடிப்பது?

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு முதல்வர் அவர்கள் சர்வ கட்சிக் கூட்டத்தை கூட்டி, "இந்திய நாட்டினுடைய, தமிழகத்தினுடைய ஒரு முக்கியமான பிரச்சினை. தாங்கள் தமிழகத்திலே முதலமைச்சராக இருந்தவர், நாட்டுமக்களிடையே செல்வாக்கு உள்ளவர். அப்படிப்பட்ட தாங்களும் என்னுடன் துணையாக வந்து அங்கே இருக்கக்கூடிய பிரதமரிடத்திலே ஸ்ரீலங்காவிலே வாழ்கின்ற தமிழர்களைப் பற்றி எடுத்துச்சொல்ல வேண்டும், தமிழர்களைப்பற்றி எல்லோரும் ஒட்டுமொத்தமான முறையிலே, சொல்ல வேண்டும்" என்றுதான் சொல்லியிருக்கின்றார்கள். ஆனால் இவர்கள் "மறியல் நடத்தி விட்டு வருகின்றேன்" என்று சொல்கின்றார்கள். "அந்தக் கூட்டத்திற்கு டாக்டர் கலைஞர் அவர்கள் வரவில்லையே தவிர, கட்சியைச் சேர்ந்தவர்கள் வந்தார்கள். கட்சியைச் சேர்ந்த திரு. கந்தப்பன் அவர்கள் கலந்துகொண்டிருக்கின்றார்கள்" என்று சொல்கின்றார்கள். அதை நான் ஆட்சேபிக்கவில்லை. அவர்கள் கட்சியைச் சேர்ந்த திரு. பாலு அவர்கள் கலந்து கொண்டிருக்கின்றார்கள். நான் அதை ஆட்சேபிக்கவில்லை. என்னுடைய கருத்து டாக்டர் கலைஞர் அவர்கள் அங்கே சென்று கலந்து கொண்டிருந்தால், அதனுடைய முக்கியத்துவம் இன்னும் கொஞ்சம் அதிகமாக ஆகியிருக்கும். டாக்டர் கலைஞரையும், திரு. கந்தப்பனையும், திரு. பாலுவையும் ஒரு ஈடாக வைத்துப் பார்க்க என்னாலே முடியவில்லை. உறுப்பினர் அவர்களால் இயலக்கூடும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்படிச் சொல்வதன் மூலமாக அதிலே ஒரு புத்திசாலித்தனம் இருப்பதாக எண்ணி, எங்களை 'கிரிட்டிசைஸ்' செய்வதாக அவர்கள் கருதுகின்றார்கள். எங்களுடைய கட்சியைச் சேர்ந்த பொருளாளர் திரு. சாதிக் பாட்சா அவர்கள் கலந்துகொண்டிருக்கின்றார்கள். அவர் தலைவருடைய கட்டளையின் பேரில்தான் கலந்து கொண்டிருக்கின்றார்கள். தலைவருடைய கருத்தைத்தான் இங்கே அவர்கள் பிரதிபலித்துக் கொண்டிருக்கிறார்கள். தலைவர் தான் அந்தக் கருத்தைச் சொல்ல வேண்டும் என்பதல்ல. எங்கள் கட்சியிலே அப்படி இல்லை. உங்கள் கட்சியிலே எப்படியோ?

**திரு. ஜி. சுவாமிநாதன் :** நான் பத்திரிகையிலே பார்த்தேன். திரு. கந்தப்பன் அவர்களும் திரு. பாலு அவர்களும் கலந்து கொண்டிருக்கின்றார்கள் என்று இருந்தது. ஒருவேளை திரு. சாதிக் பாட்சா அவர்களும் கலந்துகொண்டு இருக்கலாம். என்னுடைய பிரச்சினை . . . .

*** திரு. ஆர். கணேசன் என்கிற மிசா ஆர். கணேசன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, முதல் நாள் எங்களுடைய கழகத்தினுடைய பொருளாளர் திரு. சாதிக் பாட்சா அவர்கள் தான் கலந்து கொண்டிருக்கின்றார்கள். அன்றைய தினம் அவருடைய தங்கையார் திடிரென்று மறைந்துவிட்ட காரணத்தினாலேயே அடுத்த நாள் கூட்டத்திலே அவர் கலந்துகொள்ள முடியாத நிலையிலேதான், திரு கந்தப்பன், திரு. பாலு அவர்கள் கலந்து கொண்டிருக்கின்றார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, திரு. சாதிக் பாட்சா அவர்களை நான் மதிக்கிறவன். திரு. கந்தப்பன் அவர்களும் எனக்கு நெடுநாட்களாகத் தெரிந்தவர். ஆகவே அவரும் என்னுடைய மதிப்பிற்குரியவர். அது வேறு சமாசாரம். ஆனால் தமிழகத்தைப் பாதிக்கின்ற இப்படிப்பட்ட ஒரு முக்கியமான விஷயம் குறித்து அதுவும் முதலமைச்சர் கூட்டுகின்ற ஒரு சர்வ கட்சிக் கூட்டத்தில், அதை முக்கியமான விஷயமாக திராவிட முன்னேற்றக் கழகம் நினைத்திருக்குமானால், அதனுடைய தலைவர் அதில் கலந்துகொண்டிருந்தால், அந்தக் குழுவிற்கே இன்னும் கொஞ்சம் மரியாதை அதிகமாக ஆகியிருக்கலாம். மத்திய அரசைப் பொறுத்தவரையிலே, கொஞ்சம் அவர்கள் செவி சாய்ப்பதற்கு இன்னும் வாய்ப்பாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அந்த அடிப்படையிலே தான் நான் இன்னொன்றைக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பி. டி. ஆர். பழனிவேல்ராஜன்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் அந்தக் கூட்டத்திலே கலந்து கொள்ள முடியாது என்று எந்த நேரத்திலும் சொன்னது கிடையாது. இப்படிப்பட்ட கூட்டங்களிலே யார் கலந்து கொள்கின்றார்கள் என்பதுகூட முக்கியமல்ல. திரு. சாதிக் பாட்சா ஆக இருக்கலாம், திரு. மீனாட்சிசுந்தரமாக இருக்கலாம், என்னைப் போன்ற கடைசிப்பட்ட தொண்டனாக இருக்கலாம். அங்கே உருவான பொதுவான கருத்து என்ன என்பதைப்பற்றி துணைத் தலைவர் அவர்கள் பேசினால், அந்தக் கருத்து எல்லாக் கட்சியினருக்கும் உடன்பாடாக



இருக்குமானால், நிச்சயமாக எங்கள் தலைவர் அந்தத் தூதுக்குழுவிலே இடம் பெறுவார் என்பதை இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** உடன்பாடான கருத்துக்கள் உருவாக்கப்பட வேண்டும். பல கட்சியைச் சேர்ந்தவர்கள் எவ்வளவோ கேட்டுவிட்டோம். உங்களுக்கு ஒரு கருத்து உடன்பாடாக இருக்கலாம். தமிழ் ஈழம் தான் உங்களுடைய உடன்பாடு.

**திரு. பி. டி. ஆர். பழனிவேல் ராஜன் :** இதற்கு முன்னால் ஒரு ஒருமைப்பாடான கருத்து வந்தால்தான் தூதுக்குழுவிலே இடம் பெற முடியும். ஒரு டிராப்ட் ஒபினியன் போட்டு அனுப்புவதாக ஆளுங்கட்சி சார்பிலே, அரசாங்கத்தின் சார்பிலே சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கருத்து ஒத்த கருத்தாக இருந்தால், நிச்சயமாக கலைஞர் அவர்கள் கலந்து கொள்வார்கள் என்ற உறுதியை இந்த நேரத்திலே அளிக்கிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, தூதுக்குழுவிலே திராவிட முன்னேற்றக் கழகம் பங்கேற்றுக் கொள்வதுபற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். ஒத்த கருத்து இருக்குமானால், அதிலே நியாயம் இருக்கும் என்று சொல்கின்றார்கள். அப்படியென்றால் மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா அவர்களும் மற்றவர்களும் கலந்துகொண்டது ஒப்புக்குத்தானா என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. பி. டி. ஆர். பழனிவேல் ராஜன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, பேச்சுவார்த்தையிலே ஒரு ஒருமைப்பாடான கருத்து உருவாவதற்காக நடத்தப்பட்ட கூட்டம் இது. தமிழ்நாடு அரசாங்கம் எந்த நிலையிலே மத்திய அரசை அணுகப் போகிறது என்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட்டிய கூட்டத்திற்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அந்தக் கட்சியைச் சேர்ந்த மேலவை எதிர்க் கட்சித் துணைத் தலைவரும் பொருளாளருமான மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா அவர்கள் கலந்து கொண்டிருக்கின்றார்கள். அங்கே பல்வேறு கட்சித் தலைவர்கள் பல்வேறு கருத்துக்களைச் சொன்னார்கள். அந்தக் கருத்துக்களின் அடிப்படையிலே டெல்லி மாநகரத்திற்கு தமிழக அரசின் சார்பில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் சார்பில் ஒரு தூதுக்குழு செல்ல வேண்டும் என்ற ஒரு கருத்து உருவாகி, அங்கே போய் இந்தியப் பிரதமரிடம் தமிழ்நாடு

[திரு. பி. டி. ஆர். பழனிவேல் ராஜன்] [1985 ஏப்ரல் 9

அரசின் சார்பிலே என்ன கருத்து சொல்ல வேண்டும் என்பதற்காகக் கூட்டப்
பட்ட கூட்டம் அது. அங்கே தமிழக அரசு எந்தக் கருத்தைச் சொல்லப்
போகிறது என்பதிலே ஒற்றுமை ஏற்பட்டால், நிச்சயமாக திராவிட முன்னேற்
றக் கழகம் அந்த தூதுக்குழுவிலே இடம் பெறும் என்பதை இந்த நேரத்திலே
தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-25)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல்
ராஜன் அவர்கள் நல்ல சமரச முடிவு ஏற்படுவதாகச் சொன்னதால், மேலே
போகலாம்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** சர்வ கட்சிக் கூட்டங்களில், நான் சுதந்திராக்
கட்சித் தலைவராக இருந்தபோது கலந்து கொண்டிருக்கிறேன். சர்வ கட்சிக்
கூட்டம் என்றால், முதலமைச்சரவர்களும், மற்ற கட்சித் தலைவர்களும்
அமர்ந்து, ஏதாவது ஒரு பிரச்சினையைப்பற்றிப் பேசி, முடிவெடுத்து,
மத்திக்குச் செல்வது என்பது பழக்கமே தவிர, மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் சொல்வதுபோல் அல்ல. மாண்புமிகு முதல்வரவர்கள் ஒரு டிராப்ட்
போட்டு, இப்படித்தான் பேசப் போகிறோம் என்று சொல்லி, நீங்கள் எல்லாம்
ஒத்துழைக்கிறீர்களா என்று கேட்பதற்கு சர்வ கட்சிக் கூட்டம் கூட்டப்
படுவதில்லை. இது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியாதது அல்ல.

**திரு. பி. டி. ஆர். பழனிவேல் ராஜன் :** தலைவரவர்களே, நான் சொன்னது
ஒருவேளை என்னுடைய அறியாமையின் காரணமாக, துணைத் தலைவர்
அவர்களுக்குப் புரியவில்லையோ என்னவோ. சர்வ கட்சிக் கூட்டத்திலே
எல்லாக் கட்சித் தலைவர்களின் கருத்துக்களைக் கேட்டுக்கொண்டு, மையமான
கருத்தை அரசின் சார்பிலே கொடுப்பார்கள். சர்வ கட்சிக் கூட்டத்திலே
திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே கருத்து சொல்லப்பட்டிருக்கிறது.
இந்தக் கருத்துக்களை எல்லாம் வைத்து, ஒரு மையமான கருத்தை, ஒரு
மாதிரி கருத்தை தமிழக அரசு சார்பிலே எல்லாக் கட்சித் தலைவர்களுக்கும்
கொடுப்பதாக முடிவெடுக்கப்பட்டது. ஒருவேளை இது துணைத் தலைவர்
அவர்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். அப்படி எடுக்கப்படும் முடிவில்
ஒற்றுமை இருந்தால், நிச்சயமாக திராவிட முன்னேற்றக் கழகம் தூதுக்
குழுவில் கலந்துகொள்ளும்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு மேலவைத்
தலைவரவர்களே, ஸ்ரீலங்கா பிரச்சினைபற்றி மாண்புமிகு உறுப்பினர், துணைத்
தலைவர் திரு. சுவாமிநாதன் அவர்கள் விளக்கிக் கொண்டு வருகிறார்கள்.



1985 ஏப்ரல் 9] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தை மாண்புமிகு முதல்வரவர்கள் கூட்டியது அவர்கள் முதலிலே எடுத்துச் சொல்லியபடி, அனைத்து மக்களும், அனைத்துக் கட்சிகளும் ஸ்ரீலங்கா வாழ் தமிழர்களுக்கு உரிய உரிமைகளும், பாதுகாப்பும், நிரந்தரமான சிறுபான்மையினருக்கு அளிக்கப்படும் வசதி, வாய்ப்பும் அளிக்கப்பட வழிமுறைகளைக் காண வேண்டும் என்பதற்காகத் தான். இதில் அத்தனை பேரும் ஒருமித்த கருத்தைத் தெரிவிக்கிறோம் என்ற நிலையை உருவாக்கத்தான் அனைத்துக் கட்சிக் கூட்டத்தை மாண்புமிகு முதல்வரவர்கள் கூட்டினார்கள். ஆனால் அணுகுமுறையிலே, இந்தப் பிரச்சினையை எப்படித் தீர்ப்பது என்பதிலே, அதற்கு வழிவகை கூறுவதிலே கட்சிக்குக் கட்சி வேறுபாடு இருக்கிறது. அந்தந்தக் கட்சியினுடைய தன்மைகளைப் பொறுத்தும், கொள்கைகளைப் பொறுத்தும், அவர்களின் அணுகு முறையைப் பொறுத்தும் வேறுபாடு இருக்கிறது. இந்த நிலைமைகளை ஒட்டித்தான் அனைத்துக் கட்சிக் கூட்டம் கூட்டப்பட்டது. அங்கே ஒவ்வொருவரும் ஒவ்வொரு யோசனையைச் சொன்னார்கள். அப்படிச் சொல்லப்பட்ட கருத்துக்களிலேகூட மாறுபட்ட கருத்துக்கள் இருந்தன. ஆனால் அத்தனை பேராலும் ஒரு கருத்து ஒத்துக்கொள்ளப்பட்டது. இதில் முடிவு காண்பதற்கான அதிகாரமும், வசதி, வாய்ப்பும் கொண்டது மத்திய அரசு. மத்திய அரசு என்ன செய்ய வேண்டுமென்று எடுத்து உணர்த்த வேண்டிய கடப்பாடு நம்மிடத்தில் இருக்கிறது. தமிழக மக்களின் சார்பாக அனைத்துக் கட்சித் தலைவர்களும் மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. இராஜீவ் காந்தி அவர்களை நேரடியாகச் சந்தித்து, எடுத்துச் சொல்ல வேண்டுமென்பதுதான் அந்தக் கருத்து. இதற்காக ஒரு கருத்தை உருவாக்க வேண்டும். அது தீவிரமாகவும் இராது, மிகச் சாதாரணமாகவும் இராது. குறைந்த அளவுக்கு எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய ஒரு தன்மையின் அடிப்படையில் அந்தக் கருத்து அமைய வேண்டுமென்ற முறையிலே அரசு அதற்கான ஒரு நகல் வடிவுஉள்ள தீர்மானத்தை உருவாக்கி, எல்லாக் கட்சித் தலைவர்களுக்கும் அனுப்பி வைப்பதென்றும், அதற்குப் பிறகு அவரவர் களுடைய கருத்தை அறிந்து, மீண்டும் தேவையானால் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டி ஒருமித்த ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, அந்தத் தீர்மானத்தோடு போய் பிரதமர் அவர்களோடு பேசுவோம் என்றும், அப்படிப் பேசும்போது தீர்மானத்திற்கு மேலாக அவரவர்கள், கட்சித் தலைவர்கள் தங்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லலாம். அதாவது பதில் வாங்க வேண்டிய இடத்தில் கருத்துக்களை எடுத்துச் சொல்வதில் தவறில்லை. தமிழக மக்கள் சார்பாகச் செல்லும்போது, ஒருமித்த தீர்மானமாக இருக்க வேண்டும். அதற்காக ஒரு நகல் தயாரிக்கப்பட்டு,

மாண்புமிகு மேலவைத் தலைவர்: ஏற்கெனவே என்ன பேசியிருந்தாலும் டாக்டர் நாவலர் அவர்கள் பேசியதற்குப் பிறகு அவர்கள் சொன்னதுதான் அதிகாரபூர்வமான தகவல்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் எங்களுடைய மதிப்பிற்குரியவர். அவர்கள் இதில் சுற்றி வளைக்கவில்லை. பத்து நிமிடத்திற்குள் இதுகுறித்து விளக்கமாகப் பேசி முடித்துவிட்டார்கள். அவர்கள் கருத்தைச் சொன்ன பிறகு, அதற்கு பதில் சொல்லி விளக்கங்களை நான் சொல்வது சரியாக இல்லை. ஆகவே அதற்கு மேல் நான் ஸ்ரீலங்கா தமிழர் பிரச்சினைக்குள் போகவில்லை. அவர்கள் பேசியதற்குப் பிறகு அதுபற்றிப் பேசுவது நல்லதல்ல என்பதால், அந்தப் பிரச்சினையை இத்துடன் விட்டு விடுகிறேன். தொடர்ந்து ஒன்றிரண்டு பொதுவான கருத்துக்களை மட்டும் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் ராஜன் அவர்களுக்குக் கூட உடன்பாடான கருத்துக்களைச் சொல்லி என் உரையை முடித்து விடுகிறேன்.

(முற்பகல் 11-35)

அண்மையில் நான் தஞ்சைக்குச் சென்றிருந்தேன். நான் தஞ்சைக்குச் செல்லும்போதெல்லாம் அங்குள்ள பிரகதீஸ்வரர் ஆலயம் சென்று வணங்குவது வழக்கம். அப்படி அங்கே சென்றபோது, அங்குள்ள ஊழியர்களுக்கு கடந்த எட்டு மாத காலமாக எவ்விதமான சம்பளமோ, படிகளோ கொடுக்கப்பட வில்லை என்பதைக் கேள்விப்பட்டேன். எவ்வித வருமானமும் இல்லாத சூழ்நிலையில் அவர்கள் பட்டினி கிடக்கும் அவல நிலை இருக்கிறது என்று அங்குள்ளவர்கள் சொன்னார்கள். அதேபோல், கும்பகோணம் பக்கத்தில் உள்ள தாராசுரம், ஐராவதசுவாமி ஆலயத்திற்கும் சென்றிருந்தேன். அது சோழ மன்னர்களால் கட்டப்பட்ட கோயில். அங்கு சோழர் காலசிற்பங்கள் எல்லாம் அற்புதமாக அமைந்திருக்கின்றன. அந்தக் கோயிலும் இதே நிலைமையில்தான் இருக்கிறது. கடந்த இரண்டாண்டு காலமாக, அங்கு பணியாற்றுபவர்களுக்கு எவ்வித வருமானமும் கிடையாது என்று அங்குள்ளவர்கள் கூறினார்கள். அங்கு வேலை செய்கிறவர்கள் வாழ வழியில்லாமல் இருக்கிறார்கள்.

அத்துடன், கடந்த மூன்று தினங்களுக்கு முன்பு, நான் காசநோய்த் தடுப்பு மாநாடு ஒன்றில் பேச வாய்ப்பு ஏற்பட்டது. அங்கே பேசுகிறபோது, தஞ்சை அருகில் செங்கிப்பட்டி காசநோய்த் தடுப்பு மருத்துவ மனை இருப்பதாகவும், அதற்கு 600 ஏக்கர் நிலம் சொந்தமாக இருப்பதாகவும்



தெரிவித்தார்கள். அந்த சொத்துக்களின் மதிப்பு ஏறத்தாழ 30 லட்சம் ரூபாயாகும். ஆண்டுக்கு 30 லட்சம், 40 லட்சம் ரூபாய் என்று வருமானம் வரக்கூடிய சொத்துக்களாகும். அவைகள் நிலங்களாக இருக்கின்றன. ஆனால் அவைகள் குத்தகைக்கு விடப்பட்ட காரணத்தால், எவ்விதமான வருமானமும் இல்லாமல் இருக்கிறது. அந்த நிலங்கள் பல ஆண்டுகளுக்கு முன்பு தஞ்சையில் இருந்தவர்கள், அதிலே எனது உறவினர்கள் சிலர் கூட கொடுத்த நிலங்கள் தான் அவை. அந்த நிலங்கள் தனிப்பட்ட அறக்கட்டளைகளுக்கும், கோயில் களுக்கும் கொடுக்கப்பட்டன. அந்த நிலங்களை இப்போது குத்தகைதாரர்கள் வைத்துக்கொண்டு வருமானத்தைக் கொடுக்காமல் இருப்பதால், இன்னும் ஒன்றிரண்டு ஆண்டுகளில் நாம் கோயில்களையே இழுத்து மூடக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிடும் என்ற அச்சத்தை நான் அரசுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு கேள்விக்கு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது, 36 கோடி ரூபாய் அளவுக்கு இத்தகைய நிலங்களிலிருந்து அரசுக்கு வருமானம் வரவேண்டுமென்று சொன்னார்கள். 1974 ஆம் ஆண்டு, தி.மு.க. ஆட்சிக் காலத்தில், தனியார் அறக்கட்டளைகள், கோயில் நிலங்களை நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் எடுக்க வேண்டுமென்று ஒரு மசோதா தாக்கல் செய்யப்பட்டது. அப்படிப் பார்க்கிறபோது, தனியார் அறக் கட்டளைகள், கோயில்களுக்கு இருக்கிற நிலங்கள் என்று பார்த்தால், ஒரு லட்சம் ஏக்கர்கள்தான் இருக்கும் என்ற நிலைமை இருந்தது. அதை எவ்வளவு பேருக்குக் கொடுக்கலாம் என்றால், 50 ஆயிரம் பேர்களுக்குக் கொடுக்க முடியும். அவ்வளவு பேர்தான் குத்தகைதாரர்கள் இருப்பார்கள் என்றும் சொல்லப்பட்டது.

என்னுடைய கருத்து என்னவென்றால், சோஷலிசம் என்பது தனியாருடைய சொத்தை எடுத்து, பொதுவான, நியாயமான காரியத்திற்குச் செலவு செய்வது என்பதுதான். ஆனால் இங்கே, பொதுவாக மக்கள் பயன் படுத்தக்கூடிய, கோயில்கள், அறக்கட்டளைகள் ஆகியவற்றின் சொத்தை எடுத்து, ஏதோ 100 அல்லது 1,000 பேர்களுக்குக் கொடுத்து அவர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். இது சோஷலிசத்திற்கு எதிரான தத்துவமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நாட்டு மக்களுக்குப் பயன்படக்கூடிய அளவில், நமது முன்னோர்கள் கொடுத்த சொத்துக்களுக்கு இப்பொழுது மிகவும் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதால், இதை உடனடியாக மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நாமும் கடந்த 2-3 ஆண்டுகளாக இதைப்பற்றி என்ன செய்வது என்று பேசிக்கொண்டிருக்கிறோம். இதிலே நான் ஒரு கருத்தைச்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 ஏப்ரல் 9

எல்லோருக்கும் அனுப்பப்படும். அதில் வேறுபாடு இருந்தால், மேலும் ஒரு கூட்டம் கூட்டப்படும். அதிலே சமாதானம் சொல்லி, ஒருமித்த தீர்மானத்தை உருவாக்க வேண்டும். இதைத்தான் மாண்புமிகு முதல்வரவர்கள் தெரிவித்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர், டாக்டர் கலைஞர் அவர்கள் தூதுக் குழுவில் கலந்துகொண்டு, டெல்லிக்கு வர வேண்டுமென்ற விண்ணப்பத்தையும் அவர்கள் தெரிவித்தார்கள். இந்தக் கருத்தை டாக்டர் கலைஞர் அவர்களிடம் தெரிவிப்பதாக அதிலே கலந்துகொண்ட திரு. கந்தப்பன் அவர்கள் தெரிவித்தார்கள். தாங்கள் எப்படிப்பட்ட திட்டங்களை, முறைகளை

(முற்பகல் 11-30)

வைத்திருந்தாலும்கூட சர்வ கட்சிகள் எடுக்கும் முடிவுகளுக்கு தாங்களும் ஒத்துழைப்பு கொடுக்கத் தயார் என்றுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும் சொல்லப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட, போராட்டத்தை நிறுத்தி விடுங்கள் என்று கேட்டுக்கொள்ளவில்லை. ஆனால் பாரதப் பிரதமர் மாண்புமிகு திரு. இராஜீவ் காந்தி அவர்களைச் சென்று பார்த்து தெளிவு அடையவில்லையென்றால், ஏதாவது போராட்டம் நடத்துவது என்கின்ற நிலை வந்தால், எல்லோரும் ஒன்று சேர்ந்து போராடலாம், அதற்குத்தான் எல்லோரும் ஒத்துழைப்புத் தர வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். உங்களுடைய போராட்டத்தை விட்டுவிடுங்கள் என்று முதல்வர் அவர்கள் சொல்லவில்லை. ஆனால் பிரதமர் அவர்களைச் சென்று பார்த்த பிறகு, அப்படிப்பட்ட நிலை வந்தால், தனிக் கட்சி போராட்டத்தை நடத்துவதைவிட எல்லோரும் சேர்ந்து நடத்து வதற்கான சூழ்நிலை உருவாவது நல்லது. ஆகவே பிரதமர் அவர்களைச் சென்று பார்த்து வந்த பிறகு, அவர்கள் சொல்கிற கருத்தையொட்டி முடிவு செய்யலாம். திரு. நெடுமாறன் அவர்கள் படகில் ஸ்ரீலங்காவிற்குப் போவோம் என்கிற வகையில் தீவிரம் கொண்டவராக இருக்கலாம். முத்தமிழ் காவலர் திரு. கி. ஆ. பெ. விஸ்வநாதன் பாராளுமன்றத்தின் முன் மறியல் செய்வதன் மூலம் தன்னுடைய லட்சியத்தை அடையலாம் என்று கருதலாம். மத்திய அரசு அலுவலகங்களுக்கு முன்னால் மறியல் செய்வதன் மூலம் இப்பிரச்சினையைத் தீர்க்கலாம் என்று திராவிட முன்னேற்றக் கழகம் நினைக்கலாம். அதிலும் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் இன்னும் வேறு வகையில் கருதலாம். இப்பிரச்சினையில் நாம் எல்லாம் ஈடுபடுவதற்கு முன்பு இருந்தே அவர்கள் ஸ்ரீலங்காவிற்குச் சென்று இப்பிரச்சினையில் ஈடுபட்டவர்கள். மேலும் இப்பிரச்சினையில் அகில உலகமும் தெரியும் அளவுக்கு



1985 ஏப்ரல் 9] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அவர்கள் ஈடுபாடு கொண்டிருக்கிறார்கள். இன்னமும் சொல்லப்போனால், அவர்களுடைய சொந்த ஊர் யாழ்ப்பாணமாக இருக்குமோ என்று மற்றவர்கள் கருதும் அளவுக்கு அவர்கள் மிகத் தீவிரமான கருத்துக்களைக் கொண்டிருக்கிறார்கள். அதற்கும் ஒரு படி மேலே போய் மாண்புமிகு அமைச்சர் டாக்டர் காளிமுத்து அவர்கள் "திரு. ஜெயவர்த்தனேவை எதிர்க்க மந்திரி பதவியை விட்டு விட்டு, விடுதலைப் புலிகளுடன் ஒருவராகச் சேர்ந்து போராடத் தயார்" என்று சொல்லியிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் சொன்னதுபோல், ஐந்து கோடி தமிழ் மக்கள் சார்பில் ஒன்றுசேர்ந்து அனைவரும் போராடக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டால், அங்குள்ள தமிழர்களுக்கு நாம் வலு ஊட்டுவதாக இருக்கும். நாம் எடுத்துக் கொண்ட லட்சியத்திற்கும் வெற்றி கிடைக்கும். அந்த வகையில்தான் எல்லாக் கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் சொன்னதுபோல், டெல்லிக்குப் போகும் தூதுக் குழுவைப் பொறுத்தவரையில், பத்திரிகையில் வந்துள்ள செய்திப்படி அதில் கலந்துகொள்ளும் நிலையில் டாக்டர் கலைஞர் அவர்கள் இருக்கிறார்கள் என்று அறிகிறேன். இப்பிரச்சினையைப் பொறுத்தவரையில், நமக்குள் கருத்து மாறுபாடு இல்லை, முரண்பாடு இல்லை என்பதை உலகத்திற்கு உணர்த்த வேண்டும். குறிப்பாக ஸ்ரீலங்கா வாழ் தமிழ் மக்களுக்கும் சிறப்பாக திரு. ஜெயவர்த்தனே அவர்களுக்கும் இதனை உணர்த்தும் வகையில் நம்முடைய நடவடிக்கைகள் அமைய வேண்டும். அந்த வகையில் நம்முடைய அணுகுமுறைகள் அமைய வேண்டுமென்று நான் இம்பேரவை மூலம் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தக் கருத்துக்கு தன்னுடைய வாதத்தைக் கொண்டு வருவதற்காகத்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் இப்படிப் பேசுகிறாரே அல்லாமல் வேறல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும் தமிழக முதல்வருமான நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய போராட்டத்தை ஒத்தி வைக்க வேண்டும், ரத்து செய்ய வேண்டும் என்று சொல்லவில்லை என்று இங்கே மாண்புமிகு நிதியமைச்சர் சொல்கிறார். ஆனால் அந்தக் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் சற்று முன்பு பேசும்போது, "நீங்கள் அறிவித்த போராட்டத்தை ஏன் ரத்து செய்யக் கூடாது?" என்று கேட்கிறார். அப்படியென்றால் அந்தக் கட்சியின் தலைவர் கருத்து இந்த உறுப்பினருக்குத் தெரியாதா? அல்லது அவர் தலைவர் கருத்தை அவரே மறுக்கிறாரா?

சொல்ல விரும்புகிறேன். அரசே அத்தகைய நிலங்களை எடுத்து, லாண்ட் சீலிங் பாண்ட் என்று அதற்கான சர்டிபிகேட்டுகள் கொடுத்து, 10 ஆண்டு களுக்கு வசூல் செய்யுமாறு சொல்லலாம். அதைச் செய்ய முடியவில்லை யென்றால், லாண்ட் டெனன்ட் பைனான்ஸ் கார்ப்பரேஷன் என்ற நிறுவனத்தையாவது ஆரம்பித்து, நம்முடைய அரசு மட்டுமல்லாமல், எல்.ஐ.சி. போன்ற பொது நிறுவனங்கள், வங்கிகள் ஆகியவற்றில் மொத்தமாக நிதி உதவி பெற்று, அந்த நிலங்களுக்காகக் கொடுத்துவிட்டு, குத்தகைதாரர்களிடமிருந்து அந்தப் பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம். மூன்றாவதாக, கேரளாவில் இருப்பதைப்போல், தஸ்திக் அலவன்ஸ் கொடுக்கும் வகையில், ஆண்டுக்காண்டு பணவீக்கம் ஏற்படுகிறது என்ற அடிப்படையில், ஐந்தாண்டு பத்தாண்டு கழித்து, அதற்குத் தக்கவாறு அதிகப் பணம் தருகிற வகையில் அது அமைய வேண்டும். அது சிறந்ததாக இருக்கும் என்பது எனது கருத்து. ஆகவே அரசு இதற்கு ஒரு விரைவான முடிவெடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, அம்பாசங்கர் கமிஷன் அறிக்கைபற்றி சில கருத்துக்கள் சொல்ல விரும்புகிறேன். அந்தக் கமிஷன் அறிக்கையைப்பற்றி பத்திரிகைகளில் பல்வேறு விதமாக செய்திகள் வந்தன. அந்த அறிக்கையை சட்டமன்றத்தில் வைப்பார்களா இல்லையா என்பது எனக்குத் தெரியாது. என்றாலும்கூட ஒரு கருத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அம்பாசங்கர் கமிஷன்

(முற்பகல் 11-40)

174 சாதிகள் பிற்பட்டவர்கள் என்றும், பாக்கி சாதிகள் முற்பட்டவர்கள் என்றும் கூறியது. ஜஸ்டிஸ் கட்சி ஆரம்பிக்கப்பட்ட காலத்தில், திரு. முத்தையா முதலியார் என்பவர்தான் கம்யூனல் ஜி.ஓ. கொண்டுவந்து, அதில் பிராமணர்-பிராமணர் அல்லாதார் என்ற இரு பிரிவுகளாகச் செய்தார்கள். பிராமணர் எல்லாம் முன்னேறியவர்கள் என்றும், பிராமணர் அல்லாதார் எல்லாம் பிற்பட்டவர்கள் என்றும் அன்றைக்குச் செய்தார்கள். எங்கள் சொந்தக் காரராக இருந்த திரு. முத்தையா முதலியார் அவர்கள்தான் அவ்வாறு செய்தார்கள். அவரைப் போன்றவர்கள் எல்லாம் சேர்ந்துதான் பிராமணர்கள் இருக்கக்கூடிய இடங்களைப் பிடிக்க வேண்டும் என்கிற அளவில் பிராமணர்-பிராமணர் அல்லாதார் என்ற இரு பிரிவுகளைச் செய்தார்கள். கொஞ்சநாள் கழித்து பிராமணர் அல்லாதார் போர்வையில் முதலியார், செட்டியார் போன்ற பெருந்தனக்காரர்கள்—முன்னேறிய பிராமணர் அல்லாதார்—எல்லாச் சலுகை களையும் எடுத்துக்கொள்ள ஆரம்பித்துவிட்டார்கள். ஆகவே பிராமணர் அல்லாதார்களிலும் பிற்பட்டோர்-முற்பட்டோர் என்று பிரித்து பிராமணர்



அல்லாதாரிலும் ஒரு பிரிவினர் முற்பட்டோர் என்று வழங்கப்படும் நிலையை இன்றைக்குப் பார்க்கிறோம். ஆகவே பிராமணர் அல்லாதாரில் எங்களைப் போன்றவர்கள் முற்பட்டோர் பட்டியலில் வைக்கப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். எனவே இப்போது பிராமணர் அல்லாதாராக இருப்பதைவிட பிராமணராக இருப்பதே நல்லது என்று தோன்றுகிறது. இதை ஏன் சொல்கிறேன் என்றால், 1980 ஆம் ஆண்டு சுப்ரீம் கோர்ட்டில் சொன்னார்கள். 31 சதவீதம் பிற்பட்டவர்களுக்கும், 18 சதவீதம் தாழ்த்தப்பட்டவர்களுக்கும், மீதமுள்ள 51 சதவீதம் முற்பட்டவர்களுக்கும் இடம் கொடுங்கள் என்று சொன்னார்கள். பிறகு நாம் 50 சதவீதம் பிற்பட்டவர்களுக்கும் 18 சதவீதம் தாழ்த்தப்பட்டவர்களுக்கும், மீதமுள்ள 32 சதவீதம் முற்பட்டவர்களுக்கும் என்று செய்திருக்கிறோம். இதனால் பிராமணர், பிராமணர் அல்லாதார்களில் பல பேர் படிக்க முடியாத, வேலைக்குச் செல்ல முடியாத நிலைமைகள் ஏற்படுகின்றன. இன்றையதினம் இதுதான் குஜராத்தில் பேசப்பட்டு வருகிறது. எப்படி இந்த பிற்பட்ட வகுப்பினர்கள் கட்டியல் நிர்ணயிக்கப்படுகிறது என்று பார்த்தால், திடீர் திடீர் என்று அரசு இவர்கள் எல்லாம் பிற்பட்டவர்கள் என்று ஒரு ஆணைமூலம் நிர்ணயித்துவிடும்.

1974 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி நடை பெற்றுக்கொண்டிருந்தபோது, கோயம்பத்தூரில் இருக்கக்கூடிய கவுண்டர்கள் என்று சொல்கிற ஜாதியார்களைத் திடீரென்று ஒரு சட்டத்தின்மூலம் பிற்பட்டவர்கள் என்று ஆக்கிவிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. மாயசாமி அந்த ஜாதியைச் சேர்ந்தவரா இல்லையா என்று எனக்குத் தெரியாது. இப்படி சுமார் 25 ஆண்டுகாலம் முற்பட்டவர்களாக இருந்தவர்களை ஓர் அரசாணை மூலம் பிற்பட்டவர்களாக்கி விட்டார்கள். இப்போதும் அண்மையில் பல முற்பட்ட சாதிகளைச் சேர்ந்தவர்கள் திடீர் திடீர் என்று அரசாணைகள்மூலம் பிற்பட்டவர்களாகி இருக்கிறார்கள்.

இன்னொன்றையும் இதுதொடர்பாகச் சொல்ல விரும்புகிறேன். இந்த பிற்பட்டவர்களிலேயே யார் யார் படிப்பதற்கும் உத்தியோகம் பெறுவதற்கும் வாய்ப்பு பெறுகிறார்கள் என்று ஆராய்ந்தால், பிற்பட்ட வகுப்புகளில் மேல்தட்டில் இருப்பவர்களுக்குத்தான் அந்த வாய்ப்புகள் கிடைக்கின்றன. பிற்பட்ட வகுப்பினரில் உள்ள சாதாரண ஏழை எளிய மக்களுக்கு அந்த வாய்ப்புகள் வருவதில்லை. இதைத் தவிர்க்க வேண்டும் என்பதற்காகத்தான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் 9,000 ரூபாய்க்கு மேலாக வருமானம் உள்ளவர்களுக்கு இந்தச் சலுகைகள் வேண்டாம், அதற்குக் கீழ் வருமானம்

உள்ள பிற்பட்டவர்களைக் கவனியுங்கள் என்று சொன்னார்கள்.
உடைத்தார்கள். மீண்டும் அதைப் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன். அதையும்

சுப்ரீம் கோர்ட் கொடுத்த காலக் கெடு முடிந்துவிட்டது. அதற்கு அரசு
ஒரு அறிக்கை சமர்ப்பித்தாக வேண்டும். இந்த நேரத்தில் நான் மீண்டும்
கேட்டுக்கொள்கிறேன். அந்த 9,000 ரூபாய் குறைவு என்று சொன்னால், அதை
இப்போது வருமான வரி வரம்பு 18,000 ரூபாய் என்று சொல்கிறார்கள்.
அதற்கு மேலாக இருப்பவர்கள் வசதி படைத்தவர்கள் என்று எடுத்துக்
கொண்டு, 18,000 ரூபாயை உச்ச வரம்பாக நிர்ணயித்து, அந்த வருமானத்திற்கு
மேல் இருக்கும் பிற்பட்டவர்களுக்கும் இந்தச் சலுகை கிடையாது என்று
கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதிலே நல்ல நியாயத்தை
வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11 45)

இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில், மாண்புமிகு
உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள்.
இது கீறல் விழுந்த கிராமபோன் பிளேட்டாக இருக்கிறது என்றும்,
ஒன்றுமே இல்லை என்றும் சொன்னார்கள். எனக்கு உள்ள சங்கடம் எல்லாம்
இதில் கீறல் விழுந்த கிராமபோன் தட்டு யார் என்று எனக்குத் தெரியவில்லை.
நிதி நிலை அறிக்கை கீழே விழுந்ததா? அல்லது சொல்பவர்கள் கீழே
விழுந்தவர்களா? கடந்த பல ஆண்டுகளாக ஒன்றுமில்லை, ஒன்றுமில்லை,
ஒன்றுமில்லை என்று சொல்லி, எது இருந்தாலும்கூட ஒன்றுமில்லை என்று
சொல்லக்கூடிய நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதைத்தான்
பார்க்கிறோம். இந்த நிதிநிலை அறிக்கையைப்பற்றி ஒன்று சொல்லக் கடமைப்
பட்டிருக்கிறேன். 'தினமணி' பத்திரிகையிலே ஒரு தலையங்கம் எழுதி
யிருந்தார்கள். நிதிநிலை அறிக்கை நல்லமுறையிலே இருக்கிறது என்ற ஒரு
கருத்தை அவர்களே சொன்னார்கள். தமிழ்நாடு 1985-86 ஆம் ஆண்டு நிதிநிலை
அறிக்கையில் மொத்தம் 54 கோடி ரூபாய்க்கு புதிய விற்பனை வரிப்
பிரேரணைகள் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், இது சாமானிய மக்களை
அதிகம் பாதிக்காத வகையில் அமைந்திருப்பது திருப்தி அளிக்கிறது என்று
சொல்லி, பலமுனை விற்பனை வரியை ஒரு முனை வரியாக மாற்றுவது
சாதாரண மக்களால் மட்டுமின்றி, சிறு வியாபாரிகளாலும் வரவேற்கப்
படுமென்று தினமணியிலே எழுதியிருந்தார்கள். திட்டத்தட்ட அதிலே
20 விஷயங்கள் சொல்லப்பட்டன. அது மக்களுக்குச் சாதகமானவை. அதை
மட்டும் படித்து நான் என்னுடைய உரையை முடிக்க விரும்புகிறேன்.



இந்த நிதிநிலை அறிக்கையில் ஏழை எளிய குழந்தைகளுக்கு இலவசச் சீருடை, புத்தகங்கள் தர ரூ. 25 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அத்தியாவசிய மான பொருட்கள் மிளகாய், புளி, மிளகு, மஞ்சள், கொத்துமல்லி விலை குறைய ஒரு முனை வரி விதிக்கப்பட்டிருக்கிறது. குடிசைமாற்று வாரியம் மூலம் வீடுகள் கட்ட ஐந்து கோடி ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்கு 155 கோடி ரூபாய் கடனுதவி கொடுக்கப்பட்டிருக்கிறது. நெசவாளர்களுக்கு ஐந்து ஆயிரம் வீடுகள் கட்டப்பட இருக்கிறது. ஆண்டுத் திட்டத்திற்கு 102 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு மறுவாழ்வுத் திட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் புதிய 10 சர்க்கரை ஆலைகள் அமைக்கப்பட இருக்கின்றன. 108 கோடி ரூபாயில் இரசாயன ஆலை அமைக்கப்பட உள்ளது. 20.85 கோடி ரூபாயில் வெடிமருந்து தொழிற்சாலை அமைக்கப்பட இருக்கிறது. புதிய தொழில் மையங்கள் அமைக்கப்பட இருக்கின்றன. கதர் தொழில் வாரியம் மூலம் 20 பேர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆதி திராவிடர் நலன்களுக்கு 126 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. கிராமப்புற நிலமற்றோர்க்கு வேலை வாய்ப்பு அளிக்க 65 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் பயன்படுத்தும் உரங்களுக்கு ஐந்து சதவீதம் விற்பனை வரி ரத்து செய்யப்பட்டுள்ளது. இப்படி எடுத்துப் பார்த்தால் அநேக சலுகைகள் இருக்கின்றன. அரசு பணியாளர் நலன் குறித்து, குடும்பநல நிதித் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் மொத்தத் தொகை 10 ஆயிரம் ரூபாயிலிருந்து 20 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப் பட்டுள்ளது. ஓய்வுபெறும் அரசுப் பணியாளர்களுக்கு ஓய்வூதியத் தொகை உச்சவரம்பு ரூ. 1,500 நீக்கப்பட்டுள்ளது. இப்படிப் பலவிதமான திட்டங்கள் சொல்லப்பட்டிருக்கிற இந்த சிறந்த நிதிநிலை அறிக்கையை நம்முடைய எதிர்க் கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் கீறல் விழுந்த கிராமபோன் தட்டு என்று சொன்னால், அது நிதிநிலை அறிக்கையா என்ற சந்தேகம் எங்களுக்கு எழுகிறது என்று சொல்லி, இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று, இவ்வளவு சிறந்த ஒரு நிதிநிலை அறிக்கையை அளித்த நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டைத் தெரிவித்து என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, நிதி நிலை அறிக்கை மீதான விவாதத்தில் என்னுடைய அணியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். அதற்கு முன்பாக தங்களிட மிருந்து ஒரு விளக்கத்தைப் பெற விரும்புகிறேன். இன்று காலை பத்தே கால் மணி அளவில் எங்கள் அணியினுடைய தலைவரும், மேலவை உறுப்பின

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1985 ஏப்ரல் 9

ருமான மதிப்பிற்குரிய திரு. பி. ஆர். தாமஸ் அவர்கள் கைது செய்யப்பட்ட
தாக எங்களுக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. தங்களுக்கு அந்தத் தகவல்
வந்திருக்கிறதா ? பத்தே கால் மணிக்குக் கைது செய்யப்பட்ட
தங்களுக்கு வந்து சேர்ந்திருக்கிறதா ? அந்த விவரம் எங்களுக்குத் தெரிய
வேண்டுமென்று விருப்பப்படுகிறோம். ஆகவே, தலைவர் அவர்களே, அந்தச்
செய்திபற்றி அவைக்கு தங்களுடைய அறிவிப்பை நாங்கள் எதிர்பார்க்கிறோம்.
இன்று காலை பத்தே கால் மணியளவில் எங்கள் அணியின் தலைவரும்,
மேலவை மாண்புமிகு உறுப்பினருமான திரு. பி. ஆர். தாமஸ் அவர்கள் கைது
செய்யப்பட்டதாக எங்களுக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. தங்களுக்குச்
செய்தி வந்திருக்கிறதா ? அப்படி அந்தச் செய்தி வந்திருந்தால், அவைக்குத்
தெரிவிக்கப்பட வேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** எனக்கு இதுவரை தகவல் வரவில்லை.
வந்தால் வழக்கம்போல் உண்டு. நேற்றுக்கூட அறிவிக்கப்பட்டது. வந்
தால் அறிவிக்கப்படும்.

(மாற்றுத் தலைவர் திருமதி வி. ஜெயலட்சுமி தலைமை)

**திரு. சி. ரா லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்
களே, நேற்றுக்கூட காலை பத்தேகால் மணியளவில் மதிப்பிற்குரிய மேலவை
உறுப்பினரும், தமிழ் நாடு பட்டதாரி-முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் கழகத்
தலைவருமான திரு. மயில்சாமி அவர்கள் கைது செய்யப்பட்டது குறித்து
எங்களுக்கு உண்மையாகச் செய்தி கிடைத்தது. ஆனால் அவைக்கு மிகவும்
தாமதமாகச் செய்தி வந்தது. இன்றுகூட இதுவரை திரு. பி. ஆர். தாமஸ்
கைது செய்யப்பட்ட செய்தி அவைக்கு வராததிலிருந்து, அவைக்குச் செய்தி
களைத் தெரிவிப்பதில் தாமதம் ஏற்படுகிறது என்பதை தங்களுடைய கவனத்
திற்குக் கொண்டுவந்து, சம்பந்தப்பட்ட துறைக்கு, சட்டசபை நடந்து
கொண்டிருக்கும்போது உடனுக்குடன் உறுப்பினர்கள் கைது செய்யப்பட்ட
விவரத்தைத் தெரிவிக்க வேண்டுமென்று ஒரு அறிவுரை வழங்க வேண்டு
மென்று இந்தச் சமயத்திலே தங்கள் மூலமாக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-50)

நிதிநிலை அறிக்கையின் மீது நடைபெறுகின்ற பொது விவாதத்தில் என்
னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த ஆண்டு நிதிநிலை
அறிக்கையைப் பொறுத்த வரையில், பலரும் பலவிதமான கருத்துக்களைச்
சொல்லியிருக்கிறார்கள். பல பத்திரிகைகளும் கருத்து தெரிவித்திருக்
கின்றன. ஒரு நிதிநிலை அறிக்கையைத் தயாரிக்கும்போது, மாண்புமிகு



1985 ஏப்ரல் 9] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

நிதியமைச்சர் அவர்கள் மேற்கொள்கிற கடுமையான முயற்சிகளையும், அவருக்கு ஏற்படும் சிரமங்களையும் அதைப்போலவே அவருக்கு உறுதுணையாக இருக்கிற அதிகாரிகளின் சிரமங்களையும் அனைவரும் அறிவோம். என்றாலும் ஒரு நிதிநிலை அறிக்கை என்பது ஒரு "எடுத்துக்காட்டான நிதிநிலை அறிக்கையாக" அமைய வேண்டுமானால், சாதாரண பாமர ஏழை எளிய மக்களின் வாங்கும் சக்தியையும், அதைப் போலவே தனி நபர் வருமானத்தையும் உயர்த்தும் திட்டங்களை அறிவிப்பதாக அமைய வேண்டும். நாம் போடுகிற மறைமுக அல்லது நேர்முக வரிகளையெல்லாம் தாங்கக்கூடிய அளவுக்கு நம் நாட்டு தனி நபர் வருவாய் உயர்ந்திருக்கிறதா என்பதைப் பார்க்க வேண்டும். அரசு ஊழியர்களாக இருந்தாலும் சரி, அப்படியில்லாத ஏழை எளிய பாமர மக்கள் மற்றும் தினக்கூலிகளாக இருக்கும் மக்களாக இருந்தாலும் சரி, அவர்களின் வருவாய் உயர்ந்தால்தான், நாம் போடுகிற நேர்முக வரிகளையும் மறைமுக வரிகளையும் அவர்கள் தாங்க முடியும். அதைப்போலவே அரசு கட்டுப்பாட்டில் உள்ள பொதுத் துறை நிறுவனங்கள் தங்களின் உற்பத்திப் பொருள்களின் விலையை உயர்த்தினால், அதனையும் தாங்கக் கூடிய அளவுக்குத் தனி நபர் வருமானம் உயர்ந்திருக்கிறதா என்பதைப் பார்க்க வேண்டும். அதற்கான திட்டங்கள் நிதிநிலை அறிக்கையில் சேர்க்கப்பட்டிருக்கின்றனவா என்பதையும் நாம் பார்க்க வேண்டும். எனவே ஒரு நல்ல நிதிநிலை அறிக்கையா என்பதைப் பார்க்க இப்படிப்பட்ட வாங்கும் சக்தியை உருவாக்குகிற அளவுக்கு அல்லது தனி நபர் வருவாயை உயர்த்தும் அளவுக்கு நாம் என்னென்ன திட்டங்களைச் சேர்த்திருக்கிறோம் என்பதையும் பார்க்க வேண்டும். இது ஒரு முக்கியமான அம்சம்.

அடுத்தது, வசதி படைத்தவர்களிடமிருந்து, மிக அதிகமான செல்வத்தைச் சேர்த்து வைத்திருப்பவர்களிடமிருந்து அதிகப்படியான வரி மூலமாக செல்வத்தைப் பெற்று ஏழைகளுக்கு வழங்குவதற்குத் திட்டம் இருக்க வேண்டும். இது பொருளாதார நிபுணர்கள் சொல்லுகிற கருத்து. இதற்காக செல்வம் வைத்திருப்பவர்களை ஏழைகளாக மாற்ற வேண்டும் என்று நான் சொல்லவில்லை. அளவுக்கு மீறி அல்லது தேவைக்கு மீறி செல்வத்தைக் குவித்து வைத்திருப்பது கூட திருட்டுக்குச் சமம் என்று மகாத்மா காந்தி சொல்லியிருக்கிறார். எனவே அவர்களுடைய செல்வக் குவிப்பைக் குறைத்து, அவர்களின் வருவாயைக் குறைத்து எந்த அளவுக்குப் பாமர மக்களின் அல்லது தனி நபர்களின் வருவாயை உயர்த்தும் அளவுக்கு நாம் செலவழிக்கிறோம்

என்பதையும் பார்க்க வேண்டும். இந்த இரண்டு கண்ணோட்டத்தில்தான்
ஒரு நல்ல நிதிநிலை அறிக்கை அமைந்திருக்கிறதா இல்லையா என்று பார்க்க
வேண்டும் என்று பொருளாதார நிபுணர்கள் சொல்லுகிறார்கள்.

இப்படிப்பட்ட அம்சங்கள் அடங்கியதாக ஒரு நிதிநிலை அறிக்கை இருந்
தால்தான், அதை ஒரு "எடுத்துக்காட்டான நிதிநிலை அறிக்கை" என்று
சொல்ல முடியும். இன்றையதினம் மத்திய அரசானாலும் சரி, மாநில அரசா
னாலும் சரி, அப்படிப்பட்ட ஒரு "எடுத்துக்காட்டான நிதிநிலை அறிக்கை
யைத் தயாரிக்க முடியவில்லை" என்பதுதான் என்னுடைய கருத்து.

ஒவ்வொரு ஆண்டும் நிதிநிலை அறிக்கையைப் பார்த்தால், வருவாய்
இனங்களில் சில மாறுதல்களையும், அதைப்போலவே செலவினங்களில் சில
மாறுதல்களையும், அதைப் போலவே திட்டங்களில் சில மாறுதல்களையும்
செய்து, சில விவரங்களையும் சேர்த்து, நிதிநிலை அறிக்கையைத் தயாரிப்பது
என்பது அநேகமாக எல்லா அரசுகளாலும் பின்பற்றப்படும் முறையாக இருந்து
வருகிறது. யார் ஆட்சியில் இருந்தாலும் சரி, இந்த நிலைமைதான் இருக்
கிறது. இந்த நிலைமை மாற வேண்டுமென்றால், நிதிநிலை அறிக்கையைத்
தயாரிப்பதற்கு முன்பு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நிதித் துறை
அதிகாரிகளையும்—அவர்களெல்லாம் சேர்ந்து பல்வேறு இரவு பகல்களாக
கண் விழித்து இந்த அறிக்கையைத் தயாரிக்கிறார்கள்—மற்றவர்களையும்
கலந்து ஆலோசிப்பதைப் போலவே பொருளாதார நிபுணர்களையும்,
பொருளாதாரத்தில் நல்ல அனுபவம் பெற்றவர்களையும் கலந்து ஆலோசிக்க
வேண்டும். இதற்காகப் பொருளாதாரத்தில் பல்கலைக் கழகப் பட்டம்
பெற்றவர்களைக் கலந்து ஆலோசிக்க வேண்டும் என்று நான் சொல்ல
வரவில்லை. நடைமுறையில் பொருளாதார அனுபவம் பெற்றவர்கள், நடை
முறைப் பொருளாதார அறிவாற்றல் மிக்கவர்கள் ஆகியோரின் கருத்துக்
களைக் கேட்டு எந்தெந்தத் துறையில், எந்தெந்த இனத்தில் வரியை விதிக்க
லாம், எந்த எந்த வகையில் தனி நபர் வருவாயைப் பெருக்கலாம் என்று
கேட்டறிந்து, அதன் அடிப்படையில் நிதிநிலை அறிக்கையைத் தயாரித்தால்,
அது நாட்டில் உள்ள அனைத்துத் தரப்பில் உள்ளவர்களும் பாராட்டக்கூடிய
நிதிநிலை அறிக்கையாக அமையும்.

அப்படி அரசுக்கு ஆலோசனை சொல்லக் கூடிய பொருளாதார அறிவாற்
றல் மிக்கவர்கள்—நான் பட்டம் பெற்றவர்களை மட்டும் சொல்லவில்லை—
அனுபவ ஆற்றல் மிக்கவர்களின் குழுவை அரசு நிரந்தரமாக ஏற்படுத்தி,
அவர்கள் கருத்துக்களைக் கேட்டறிந்து, நடைமுறையில் அவைகளைப் பின்
பற்றி நிதிநிலை அறிக்கையைத் தயாரித்தால், நாட்டில் அனைத்துத் தரப்பு



மக்களும் அந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டி வரவேற்க முடியும். அந்த நிலையை உருவாக்க தமிழக அரசு பாடுபட வேண்டும். இதுவரை இல்லையென்றால்கூட, இனியாவது இத்தகைய ஒரு நிரந்தர அமைப்பை உருவாக்க மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஒவ்வொரு ஆண்டும் அரசு எதிர்பார்க்கிற வருவாயை "ஆன்டிசி பேட்டெட் ரெவின்யூ" எனப்படும் இனத்தைக் குறைத்துக் காட்டுவதும் அரசின் செலவினத்தை அதிகமாகக் காட்டுவதும் நிதித் துறைக்கு ஒரு வழக்கமாகவே இருந்து வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் எந்த அளவுக்கு வருவாயை எதிர் பார்க்கிறோம், எதிர்பார்த்த நிலையில் எந்த அளவுக்கு வருவாய் வந்தது, செலவினங்கள் எந்த அளவுக்கு எதிர்பார்க்கப்பட்டன, அதில் எந்த அள வுக்கு செலவினங்கள் ஏற்பட்டன, இவைகளெல்லாம் எதிர்பார்த்ததைவிட அதிகரித்ததா அல்லது குறைந்ததா என்பதையெல்லாம் துல்லியமாக ஆண்டு தோறும் நிதித் துறை உறுப்பினர்களுக்குக் கொடுத்தால், அது எங்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-55)

அந்த வகையிலே நிதிநிலை அறிக்கை அமைய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பொதுவாக தெளிவில்லாமல் விவரங்களைச் சொல்லிவிட்டு பிறகு அது என்னவாயிற்று, அதனுடைய புள்ளிவிவரம் என்ன என்பதை நாங்கள் வருகின்ற ஆண்டுகளில்தான் தெரிந்துகொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறோம். கடந்த ஆண்டுகளில் நடந்த விவரங்களைப்பற்றி துல்லிய மாக நடப்பாண்டில் உறுப்பினர்களுக்குக் கொடுத்தால், அதைப்பற்றியும் விமர்சனம் செய்வதற்கு உதவியாக இருக்கும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கல்வித் துறையைப் பொறுத்த வரையில், அலட்சியப்படுத்துகிறோமா என்ற கவலை எங்களுக்கு வருகிறது. கல்வித் துறையிலிருந்து வருமானம் கிடையாது. மற்ற துறைகளில் வருவாய் இருக்கிறது. ஆகவே அந்தத் துறையை மட்டும் அதிகமாகக் கவனித்தால் போதும், கல்வித் துறையில் பள்ளிக்கூடம் இருக்கிறது, மாணவர்கள் படிக்கிறார்கள், பட்டம் பெறுகி றார்கள், அதிலே அன்றாட வருவாய் கிடையாது, செலவுதான் செய்கிறோம் என்ற அடிப்படையிலே கல்வியைப் பார்த்தால், இந்த நாட்டினுடைய சீரழி வைக் கொண்டு வருவதற்கு நாம் உறுதுணையாக இருக்கிறோம் என்றுதான் பொருள். கல்வியைப் பொறுத்த வரையில், அதற்குச் செலவிடும் தொகை

ஒரு தேசிய முதலீடு என்று மிகப் பெரிய பொருளாதார நிபுணர் ஆல்ப்ரட்
மார்க்சிஸ்ட் சொல்லியிருக்கிறார். காலையில் முதலீடு போட்டால் மாலையில்
வருமானம் வருமா, இன்றைக்கு முதலீடு போட்டால் நாளைக்கு வருமானம்
வருமா, அல்லது அடுத்த மாதம் வருமானம் வருமா என்று எதிர்பார்க்க முடி
யாது. கல்வித் துறையில் நாம் செலவழிக்கக் கூடிய தொகைக்கு நாம்
எதிர்பார்க்கக் கூடியது வருமானம் அல்ல, நல்ல அறிவு நிரம்பிய மாணவர்
களும், அறிஞர்களும், விஞ்ஞானிகளும்தான். நல்ல அறிஞர்களையும்,
விஞ்ஞானிகளையும் உற்பத்தி செய்து அவர்களுடைய அறிவையும் ஆற்றலை
யும் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்குப் பயன்படுத்த வேண்டும்
என்ற அந்தத் தொலை நோக்குக் கண்ணோட்டத்திலே கல்வியைப் பார்க்க
வேண்டும். அன்றாட வருவாயைப் பார்த்து நாம் நிதி ஒதுக்கீடு செய்தால்,
நிச்சயமாக மிகவும் வருந்தத்தக்க நிலைதான் ஏற்படும் என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

பள்ளிக்கூடக் கட்டிடங்களைக் கட்ட 100 கோடி ரூபாய் தேவை என்று
ஏற்கெனவே தமிழக அரசின் சார்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. இந்த 100
கோடி ரூபாயை எல்.ஐ.சி. மூலமாகப் பெறுவதற்காக முயற்சி செய்யப்பட்ட
தாகத் தெரிவிக்கப்பட்டது. அதற்கு எல்.ஐ.சி. மறுத்ததாகவும், மத்திய
அரசின் மூலமாக அவர்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி அதன் சட்ட
திட்டங்களைத் திருத்திப் பெறலாம் என்ற கருத்தும் சொல்லப்பட்டது. பிறகு
ரிசர்வ் வங்கி மூலமாக குறைந்த வட்டிக்குக் கடன் பெறலாம் என்றும், அதற்கும்
மத்திய அரசின் உதவியை நாடலாம் என்ற கருத்தும் அரசுத் தரப்பிலே
தெரிவிக்கப்பட்டது. அதுபற்றி என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்
பட்டன? என்னென்ன நிறைவேற்றப்பட்டன? மத்திய அரசுடன் தொடர்பு
கொண்டோமா? எல்.ஐ.சி. யின் சட்ட திட்டங்களை மாற்ற என்னென்ன
முயற்சிகளை அரசு கொண்டுள்ளது என்ற விவரங்களையெல்லாம் அவைக்குத்
தெரிவித்தால், நாங்கள் அது குறித்தும் பேச வாய்ப்பாக இருக்கும். நமக்கு
வேண்டியது 100 கோடி ரூபாய் என்று இருக்கும்போது, இப்போது மிகக்
குறைந்த அளவே இந்தப் பள்ளிக் கட்டிடங்களைக் கட்டுவதற்காக ஒதுக்கி
யிருக்கிறோம். தேவையில் பத்தில் ஒரு பங்கு கூட ஒதுக்கவில்லை. பல
பள்ளிக்கூடங்கள் இன்னும் கட்டிடங்கள் இல்லாமல் இருக்கின்றன. நான்
சொல்லுவது நவீன வசதிகள் கொண்ட கட்டிடங்கள் அல்ல. மழை, வெய்
யில், காற்று இவைகளிலிருந்து மாணவர்களுக்குப் பாதுகாப்பு கொடுத்து,
அவர்கள் தங்கிப் படிக்க சாதாரண ஆஸ்பெஸ்டாஸ் ஓடு போட்ட கட்டிடங்கள்
தான். அப்படிப்பட்ட கட்டிடங்களுக்குத்தான் 100 கோடி ரூபாய் தேவை





யென்று அரசுத் தரப்பிலே சொல்லப்பட்டது. இந்தத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு இந்த பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு செய்யவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப் போலவே ஆசிரியர் பணியிடங்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதையே நானும் திரும்பச் சொல்லவில்லை. ஆசிரியர் பணியிடங் களைப் பற்றி தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இன்று உயர்நிலைப் பள்ளிகள், தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் ஆகிய எல்லாப் பள்ளிகளுக்கும் சேர்த்து தேவைப்படுகிற ஆசிரியர்களின் எண் எண்ணிக்கை 48,000. இதை நான் சொல்லவில்லை. மதிப்பீட்டுக் குழுவில் விவாதத்திற்கு வரும்போது, அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் தலைவர் உட்பட இருந்து, இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு சொல்லப்பட்டது. அரசு ஏற்படுத்தியிருக்கிற விதிமுறைகளின்படி தேவைப்படுகிற டீச்சிங் போஸ்ட்ஸ் 48,000. இதை நிறைவேற்ற என்ன நடவடிக்கை எடுத்திருக் கிறார்கள் என்று கல்விச் செயலாளரிடம் கேட்டபோது, 'நிதி வசதி சரி யில்லை' என்ற பதில் வந்தது. மீண்டும் இந்த மதிப்பீட்டுக் குழு என்ன செய்தது? நிதி ஆதாரத்தின் அடிப்படையில் இந்தக் கோரிக்கையை மறுப்பது

(நண்பகல் 12-00)

சரியல்ல, அதை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று சொல்லிற்று. மதிப் பீட்டுக் குழு அதை மீண்டும் கல்வித் துறை பரிசீலிக்க வேண்டும் என்று கோரிக்கை அனுப்பியது. ஆனால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று தெரியவில்லை. அனைத்துக் கட்சி மதிப்பீட்டுக் குழுவின் கருத்தைப் பற்றி மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தெரிந்துகொள்ளவேண்டும் என் றால், அந்தக் குறிப்பேடுகளை எடுத்துப் பார்த்துக்கொள்ளலாம். உண்மையான நிலைமைகளை, ஒரு குழுவே துல்லியமான எடை போட்டுச் சொல்லி யிருக்கின்றது. நூற்றுக்கு ஒரு மடங்காவது இன்றைக்கு ஆசிரியர்கள் பணி யிடங்கள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனவா என்று பார்க்க வேண்டும். நாங்கள் என்ன மெஜிஷியன்களா? நாங்கள் என்ன மந்திரவாதிகளா? 100 பேர்கள், 150 பேர்களுக்கு ஒரு ஆசிரியர் என்று இருந்தால் எப்படி பாடம் சொல்லிக்கொடுக்க முடியும், 30 பேரை வைத்துப் பாடம் சொல்லிக் கொடுக்கக் கூடிய ஆசிரியர்கள் எப்படி 100 பேர்களை வைத்துக்கொண்டு பாடம் சொல் லிக்கொடுப்பது? இந்த அளவிலே நாம் எதிர்பார்க்கக்கூடிய கல்வித் தரத்தை, கல்வி வளர்ச்சியை நாம் எப்படி ஏற்படுத்த முடியும் என்பதை இந்த அரசினு டைய கவனத்திற்குக் கொண்டு வந்து இதுவும் போதாது என்பதை நான் மன வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1985 ஏப்ரல் 9

மாணவர்களுடைய நலன்களுக்காக இந்த அரசு எடுத்துக் கொண்டிருக்கின்ற, புகுத்தியிருக்கின்ற திட்டங்களை நாங்கள் முழு மனதோடு வரவேற்கிறோம். இதைப் பாராட்டுவதற்கு எனக்குச் சொற்களே கிடைக்கவில்லை. அந்த அளவுக்கு பாராட்டுவதற்கு நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம். இந்த நாட்டினுடைய ஏழைக் குழந்தைகளுக்கு, ஒரு வேளை சோற்றுக்கு வழியில்லாமல் இருக்கும் குழந்தைகளுக்கு ஒரு வேளை சோற்றுக்கு வழிசெய்து திட்டம் தீட்டி இருப்பதை நாங்கள் பாராட்டுகிறோம். அதிலே குற்றங்குறைகள் இருந்தாலும் பாராட்டுகிறேன். எங்களுக்குக்கூட அதிலே உள்ள குறைகள் தெரியும். மதிய உணவுக் கூடங்களை நாங்கள் பார்க்கிறோம். இருந்தாலும், நிர்வாகச் சீர்திருத்தத்தின் மூலமாக பல நடவடிக்கைகள் எடுத்து சரி செய்துவிடலாம். ஆகவே இந்தத் திட்டங்கள் வேண்டும் என்று சொல்லி, அதை நான் பாராட்டுகிறேன். அதைப்போலவே குழந்தைகளுக்கு இலவச சீருடை, புத்தகங்கள் கொடுப்போம் என்று இருக்கும் திட்டங்களையும் நாங்கள் மனதாரப் பாராட்டுகிறோம். வேறு யாரையும்விட, ஆசிரியர்களுக்கு மாணவர்கள் முன்னேற்றத்தில் ஆர்வமும் அக்கறையும் இருக்கும். மற்றவர்களைவிட அதிகமாக அக்கறை ஆசிரியர்களுக்கு உண்டு. அதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்போது மாணவர்களுக்காக உருவாக்கப்பட்டிருக்கின்ற இந்தத் திட்டத்தினால் எதிர்காலத்தில் ஒரு நல்ல சமுதாயம் உருவாகும் என்பார்கள். திரு. ஆல்பிரட் மார்ஷல் என்று சொல்லக் கூடிய ஒருவர் சொல்லியிருக்கின்றார் "Education is a national investment" என்று. அந்தத் தத்துவத்தின் அடிப்படையிலே இந்தத் திட்டங்கள் உதவிகரமாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன். இன்னும் இதை விரிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 8 வது வரை என்பதை இன்னும் 10-வது, 12-வது வரை படிப்படியாக உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாணவர்களுக்கு இலவசச் சீருடை, புத்தகங்கள் கொடுப்பது அனைத்து மட்டங்களில் இருக்க வேண்டும் என்று வலியுறுத்திச் சொல்லிக்கொள்கிறேன். அப்படிப்பட்ட முற்போக்குத் திட்டங்களையெல்லாம் எவ்வளவு பாராட்டினாலும் அதற்கு ஈடு இணையில்லை என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் கல்வித் தரத்தை மேம்படுத்தும் திட்டங்களைப்பற்றி எடுத்துச் சொல்லி, அதை வலியுறுத்தியிருக்கிறோம். கல்வித் தரத்தினுடைய அடித்தளமே முதுகெலும்பே ஆசிரியர்கள்தான் என்பதை பல அறிஞர்கள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அது ஒரு பெரிய கொள்கை. "Teacher is the nervous system of the Educational System" என்பார்கள். அந்த nervour system பலவீனம் அடைந்தால்,



1985 ஏப்ரல் 9] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

ஆயிரக்கணக்கான ரூபாய்கள் செலவிட்டாலும்கூட, அந்தத் திட்டம் பாழாகிவிடும் என்று சொல்வார்கள். ஆகவேதான் சொல்கிறேன். கல்வித் துறையிலே ஒரு பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது. "நீங்கள் எல்லாம் இருக்கின்றீர்கள். ஆசிரியர்கள் எல்லாம் அரசினுடைய செல்லப்பிள்ளைகள்" என்று சொல்கின்றார்கள். இங்கே மேலவை உறுப்பினர்கள் இப்படி வர்ணித்திருக்கின்றார்கள். இப்போது அங்கே எழுந்துள்ள பிரச்சினை என்ன? ஆயிரக்கணக்கான ஆசிரியர்களுக்குப் பணிப்பாதுகாப்புப் பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அன்றைக்கு கல்வி அமைச்சராக இருந்திருக்கின்றார்கள். அந்த நேரத்திலே 1973ஆம் ஆண்டு இதே பிரச்சினை எழுந்தது. பட்டதாரி ஆசிரியர்களுடைய பணியை நிரந்தரப்படுத்துவதற்கு எழுந்த பிரச்சினை. இன்று அந்தப் பிரச்சினை எழுந்திருக்கிறது. அந்தப் பிரச்சினை 11 ஆண்டுகளுக்கு முன்பாக எழுந்தது. அப்போது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கல்வி அமைச்சராக இருந்தார்கள். அவர்கள் அந்தப் பொறுப்பேற்றிருந்தார்கள். அன்று பணிப் பாதுகாப்புக்காக போராட்டம் நடத்தவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அரசுத் தரப்பிலே சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பேரில் நாங்கள் திருப்தி அடையாமல் நாங்கள் போராட்டத்தில் இறங்குகிறோம். நாங்கள் அப்போது போராட்டத்தில் ஈடுபட்ட நேரம் இப்போதைய நம்முடைய டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள், புரட்சித் தலைவர் அவர்கள், எனக்கு நன்றாக நினைவில் இருக்கிறது,—திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து பிரிந்து வந்து தனிக் கட்சி அமைத்த நேரம். அப்போது அந்தப் போராட்டத்தை அவர்களே முன்வந்து ஆதரித்து, வாழ்த்தி, போராட்டத்தில் கலந்துகொண்ட ஒவ்வொரு ஆசிரியரையும் கைகுலுக்கினார்கள். அது மதுரையில் நடைபெற்ற சம்பவம். நீங்கள் எல்லாம் நியாயத்திற்காகப் போராடுகின்றீர்கள், என்றும் உங்கள் பக்கம் நான் இருப்பேன் என்றும் அவர்கள் அன்று எங்களுக்குச் சொல்லியது எனக்கு ஒரு பெரிய டானிக்காக இருந்தது. ஆனால் அது அரசியல் போராட்டமல்ல. யாருக்கும் எதிராக நடந்த போராட்டமல்ல. அப்போதுகூட அந்தப் போராட்டத்திற்கு அரசியல் சாயம் பூசப்பட்டது. ஆசிரியர்களின் பணிப் பாதுகாப்புக்காக நடத்திய போராட்டம் அது.

(பிற்பகல் 12-05)

**மாற்றுத் தலைவர் (திருமதி வி. ஜெயலட்சுமி): மாண்புமிகு உறுப்பினரவர்கள்** 15 நிமிடங்களுக்கு மேலாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் பட்டியலில் 5 உறுப்பினர்கள் பெயர் கொடுத்திருக்கிறார்கள். எனவே உறுப்பினரவர்கள் கூடுமானவரையில் சீக்கிரமாக முடித்துக் கொள்ள வேண்டும்.

[1985 ஏப்ரல் 9

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : நான் பேசியதையே மீண்டும் மீண்டும்
பேசி, இந்த அவை உறுப்பினர்களையும், மற்றவர்களையும் சங்கடத்தில் ஆழ்த்த
விரும்பவில்லை. திரும்ப அதைப் பற்றிப் பேசப் போவதில்லை. அடிப்
படைப் பிரச்சினையைத்தான் சொல்கிறேன். அந்தப் பிரச்சினை இப்போது
வந்திருக்கிறது. பணி வரன்முறை செய்யப்படாமல் உள்ள ஆயிரக் கணக்கான
பட்டதாரி, முதுகலைப் பட்டதாரி, தமிழாசிரியர்களுக்கு பணிப் பாதுகாப்பு
கொடுக்க வேண்டுமென்று போராடுகிறோம். இது குறித்து கல்வி
அமைச்சரவர்களிடம் கேட்டால், பணியிடங்கள் அனுமதிக்கப்பட வேண்டு
மென்று சொல்லுகிறார்கள். கல்வித் துறை அதிகாரிகளைக் கேட்டால், நிதித்
துறையோடு பேசி முடிவெடுக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். எங்கள்
பிரச்சினையைப் பொறுத்தவரையில், கல்வித் துறை, நிதித் துறை, மாண்புமிகு
முதலமைச்சரவர்கள் அனைவரும் சேர்ந்து முடிவு எடுக்க வேண்டிய பிரச்
சினை. நாங்கள் எழுப்பியுள்ள பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டிய
பொறுப்பு எல்லோருக்கும் இருக்கிறது. கூட்டுப் பொறுப்பு அது. எல்லோரும்
பிரச்சினைகளை எடுத்துச் சொல்லி, அவற்றுக்கு மரியாதைக்குரிய
டாக்டர் நாவலர் அவர்கள் பதில் சொல்லும்போது, கல்வித் துறைப் பிரச்
சினைகளுக்கு கல்வி அமைச்சரவர்கள் பதில் சொல்லுவார்கள் என்று சொல்லு
வார்கள். ஆனால் கல்வி அமைச்சரவர்கள் பக்குவமாக அதற்குள் செல்லா
மல், வேறு சிலவற்றுக்குப் பதில் சொல்லிவிட்டுப் போவார்கள். நாங்கள்
யாரிடம் போய் கேட்பது? எத்தனையோ முறை பேச்சு வார்த்தை நடத்தி
யிருக்கிறோம். அதிகாரிகளைப் பார்க்காதவர்களா, அமைச்சரவர்களைப்
பார்க்காதவர்களா? இதிலே எந்தக் குறைபாடும் யாரும் சொல்ல முடியாது.
அடிக்கடி அமைச்சரவர்களைச் சந்திக்கிறோம். அடிக்கடி அதிகாரிகளைச்
சந்திக்கிறோம். பேச்சு வார்த்தை நடத்துகிறோம். ஆனால் பலனில்லை.
இன்னும் 4 நாட்களில் பணியிலிருந்து நீக்குவோமென்று சொல்லுகிறார்கள்.
இது அரசுக்கு எதிரான போராட்டமல்ல அரசின் கவனத்திற்கு எங்க
ளுடைய கோரிக்கைகளைக் கொண்டுவர. வேறு வழியே இல்லாமல் கதவுகள்
மூடப்பட்டதால், நடத்தும் போராட்டம். நேற்று ஒரு சகோதரியை கைக்
குழந்தையுடன் கைது செய்தார்கள். ஏன் நீங்கள் வந்தீர்கள் என்று கேட்
டோம். வேலையே இல்லாமல் வறுமையில் வாடுவதைவிட, சிறைக்கே செல்ல
லாம் என்று அவர்கள் சொன்னார்கள். இன்னொரு சகோதரி. உடல் ஊன
முற்ற அடிப்படையில் பணியில் சேர்ந்தவர்கள், அவரை சர்வீஸ் கமிஷன்
நிராகரித்திருக்கிறது. அவர்கள் கண்ணீர் விடுகிறார்கள். அவர்களை வர
வேண்டாமென்று சொன்னாலும், அவர்கள் வலுக்கட்டாயமாக வருகிறார்கள்.



1985 ஏப்ரல் 9] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

இதை மாண்புமிகு அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்து, இதற்கு
முற்றுப்புள்ளி வைத்து, விரைவில் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டு
மென்று வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய அரசு 1984 செப்டம்பர் 22 தேதியிட்டு ஓர் அரசாணையை
வெளியிட்டிருக்கிறது. தேர்வுக் குழுவின் அதிகார வரம்பிலுள்ள 12,000 இள
நிலை உதவியாளர்களை, தேர்வாணைக் குழுவின் மூலமாக பணி வரன்முறை
செய்ய வேண்டுமென்ற நியதி உள்ளவர்களை, 22—9—1984 தேதியிட்ட பணி
யாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் அரசாணை 966-ல் வரன்
முறை செய்ய ஆணையிட்டிருக்கிறது. ஒரு நாள் பதவியில் இருந்தவர்
களைக்கூட பணி வரன்முறை செய்திருக்கிறதென்றால், ஏன் இந்த ஆசிரியர்
களின் பணியை அரசே வரன்முறை செய்யக்கூடாது? இந்த அதிகாரத்தைப்
பயன்படுத்தி ஆயிரக் கணக்கான ஆசிரியர்களை வீட்டுக்கு அனுப்பும் நிலை
யைத் தவிர்த்து, அவர்களைப் பணி வரன்முறை செய்யக்கூடாதா என்று
கேட்டு, அதற்கு மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்களிடமிருந்து மன மகிழ்ச்சி
யான பதிலை எதிர்பார்க்கிறோம்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

எங்கள் கோரிக்கைகள் எத்தனை இருந்தாலும், அவைகளை 2 இனங்களில்
பிரிக்கலாம். ஒன்று improvement in service conditions
அதாவது சர்வீஸ் கண்டிஷன்ஸ்-ல் சீரான நிலைமை வேண்டுமென்று கேட்கி
றோம். அடுத்து, Job security —பணிப் பாதுகாப்பு. இதைத்தான்
கேட்கிறோம். எத்தனை கோரிக்கைகள் இருந்தாலும், அவற்றை இரண்டாகப்
பிரித்துவிடலாம். இன்றைக்கு நகராட்சிப் பள்ளி ஆசிரியர்கள், தனியார்
பள்ளி ஆசிரியர்களெல்லாம் அரசு ஊழியர்களுக்குச் சலுகை கொடுத்தால்,
தங்களுக்கும் வேண்டுமென்று கேட்கிறார்கள். கேட்டால் பதில் இல்லை.
தனியார் பள்ளிகளுக்கு அமைச்சரவர்கள் செல்லும்போது, அங்கேயுள்ள
கல்வித் தரத்தையும், அங்கே ஆசிரியர்கள் எப்படி போதிக்கிறார்கள் என்பதை
யும் வாயாறப் புகழ்ந்து, பாராட்டிவிட்டு வருகிறார்கள்.

(முற்பகல் 12 10)

ஆக, நல்லமுறையில் கல்வியின் தரத்தை நிலைநிறுத்த அதிகாரபூர்வமாகப்
பாடுபடும் ஆசிரியர்களுக்குரிய சலுகைகளை மறுப்பது எந்த வகையில் நியாயம்
என்று நான் அறிய விரும்புகிறேன். மற்றவர்களுக்குக் கொடுக்கின்ற சலுகை
களை இவர்களுக்கும் தயவுசெய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்
கிறேன். இந்த விஷயத்தில் பாகுபாடு, டிஸ்கிரிமினேஷன் இருக்க வேண்டாம்

என்றுதான் சொல்கிறோம். எல்லோருக்கும் அரசுதான் சம்பளம் தருகிறது. தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும், தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கும் கூட இன்றையதினம் அரசு தான் சம்பளம் தருகிறது. அந்த வகையில் எங்களுக் கெல்லாம் இன்றைக்கு அரசு தான் நிர்வாகி. அரசிடம் தான் கோரிக்கை களை வைக்க முடியும். இந்தக் கோரிக்கைகளை வைத்துத் தான் ஆசிரியர் கள் போராட்டத்தில் இறங்கியிருக்கிறார்கள். நாங்கள் மகிழ்ச்சியாக இப் போராட்டத்தில் இறங்கவில்லை. சட்டம் ஒழுங்கைக் கெடுத்து அரசுக்குக் கெட்ட பெயர் ஏற்படுத்த வேண்டுமென்ற கண்ணோட்டத்தில் போராட்டத்தில் இறங்கவில்லை. எங்களுடைய நியாயமான நாங்கள் களை அரசு ஏற்க வேண்டும். உடனடியாக கோரிக்கை எடுக்க வேண்டும். அதோடு இப்பிரச்சினை இதுகுறித்து நடவடிக்கை படையில் தான், நாங்கள் தீர்ந்துவிட்டது என்கிற அடிப் போராட்டத்தில் இறங்கினோம். நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் அருள்கூர்ந்து மாண்புமிகு யில் கவனம் செலுத்த வேண்டுமென்று இந்தப் பிரச்சினை பட்டதாரி ஆசிரியர்கள், முதுகலை கேட்டுக்கொள்கிறேன். தமிழ் நாடு கோரிக்கைளைப்பற்றி சம்பந்தப்பட்டவர்களுக்கு பட்டதாரி ஆசிரியர்கள் அணி இந்தக் வித்திருக்கிறது. மாண்புமிகு எல்லாம் ஏற்கெனவே தெரி ஏற்கெனவே கொடுக்கப்பட்டிருக்கிறது. அமைச்சர்களிடம் கூட இக்கோரிக்கை மான கோரிக்கைகள் குறித்து நிர்வு இருந்தும் எங்களுடைய நியாய எங்களுக்கு வேறு வழி என்ன காணப்படவில்லை என்ற நிலையில், வேண்டும். என்பதைப்பற்றிச் சிந்தித்துப் பார்க்க நேற்று காலையில் கைது செய்யப்பட்ட விடுதலை செய்யப்பட்டார்கள். ஆசிரியர்கள் மாலையில் இன்றும் போராட்டம் இப்படிக் கைது செய்து மாலையில் விடுதலை நடைபெறுகிறது. தண்டனை கொடுப்பதன் மூலமோ செய்வதன் மூலமோ எத்தனை நாட்கள் பிரச்சினைகளைத் தீர்க்கவே அல்லது வேண்டுமானாலும் முடியாது. காரணம் வெளியிலே பாதுகாப்பு சிறைச்சாலையில் இல்லாத நிலையில் வையுங்கள். சிறைச்சாலைக்குள்ளே பாதுகாப்புடன் நடமாடுவதை விட, மானால் நீண்ட காலம் இருப்பது நல்லதுதானே. சிறைச்சாலையில் வேண்டு கோரிக்கைகள் நிறைவேறும் போடுங்கள். வரையில் நாங்கள் எங்களுடைய யாதது. போராட்டத்தை நீடிப்பது போராடுவது தவிர்க்க முடி என்பதை நான் இங்கே தவிர, எங்களுக்கு வேறு வழியில்லை மிகவும் மன வருத்தத்துடனும், மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் வேதனையுடனும் கொண்டு வருகிறேன். அவர்களுடைய கவனத்திற்குக் எதற்கெடுத்தாலும் சர்விஸ் கமிஷன், சர்வீஸ் கமிஷன் என்கிற பூதத்தைக் காட்டி, சட்ட திட்டங்களைக் காட்டி பணிப் பாதுகாப்பு



இல்லாமல் பணியிலிருந்து நீக்கப்படுகின்ற ஆசிரியர்களுக்கு சாக்குப்போக்கு சொல்கின்றார்கள். அரசே ஏற்படுத்தியது தான் சர்வீஸ் கமிஷன். அதன் தலைவரையும் உறுப்பினர்களையும் அரசு தான் நியமிக்கிறது. அரசியல் சட்டப்படி தான் கமிஷன் அமைக்கப்படுகிறது. சர்வீஸ் கமிஷன் தாறுமாறாக தங்கள் இஷ்டப்படி செயல்பட்டுவிட முடியாது. அதற்கென்று கடமைகள், உரிமைகள் வரையறுக்கப்பட்டுள்ளன. அரசு தான் அதையும் வரையறுத்திருக் கிறது. இந்த அரசு சொல்வதைத் தான் அவர்கள் செய்ய முடியும். சர்வீஸ் கமிஷனுடைய அனுமதி இல்லாவிட்டால் கூட, நிரந்தரம் செய்வதற்கு 320 வது பிரிவில் அதற்கான வழிவகை இருக்கிறது. இதுபற்றி 3-வது பத்தியில், உட் பிரிவில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

"Provided that the President, as respects the all-India Services and also as respects other services and posts in connection with the affairs of the Union, and the Governor, as respects other services and posts in connection with the affairs of a State, may make regulations specifying the matters in which, either generally or in any particular class or case or in any particular circumstances, it shall not be necessary for a Public Service Commission to be consulted".

என்று சொல்லப்பட்டிருக்கிறது. அரசியல் சட்டத்திலேயே அதற்கு வழி வகை இருக்கிறது. 'கன்சல்ட்' பண்ணாமலே பணியை நிரந்தரம் செய் வதற்கு அரசுக்கு வழிவகை இருக்கும்போது, சர்வீஸ் கமிஷன் என்ற முட்டுக் கட்டையைக் காட்டி ஏற்கெனவே பணியில் இருக்கின்றவர்களை வீட்டுக்கு அனுப்புகின்ற சூழ்நிலை இன்னும் நீடிக்கலாமா? இப்படிச் செய்வது ஒரு வெல்பேர் ஸ்டேட்டுக்கு அழகா என்று நான் கேட்க விரும்புகிறேன். இன்றைக்கு இந்தப் பிரச்சினையை இந்த அரசு, குறிப்பாக மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் கனிவுடன் பரிசீலனை செய்து முற்றுப்புள்ளி வைத்து, நிர்வு காண வேண்டுமென்று வலியுறுத்தி, கேட்டுக் கொள்கிறேன். இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும்,

(பிற்பகல் 12-15)

கோரிக்கைகள் நிர்க்கப்பட வேண்டும். கல்வியமைச்சர் அவர்களைப் பார்த்துப் பேசினால், எல்லோரையும் கலந்து பேசவேண்டும் என்று சொல்வதும், நிதியமைச்சர் அவர்களைப் பார்த்துப் பேசினால், கல்வி அமைச்சர் பதில் சொல்வார் என்பதும் தான் பதிலாக வருகிறது. இது பிரச்சினையைத் தீர்க்கக்கூடியதாக இருக்காததோடு, பிரச்சினைகள் நீடித்துக்கொண்டே போகத்தான் வழி ஏற்படும் என்று வருத்தத்தோடு நான் இங்கே தெரிவித்துக்

கொள்கிறேன். ஆகவே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்கு இப்பிரச்சினைகளைக் கொண்டுவந்து, நேற்றையதினம் எங்கள் தலைவர் திரு. பா. ரா. தாமஸ் அவர்கள் பேசியதை முன்மொழிந்து, வழிமொழிந்து, அதையே நான் பேசிய கருத்துக்களாக எடுத்துக் கொண்டு, ஆசிரியர்களுடைய போராட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும், தீர்வு காணப்பட வேண்டும். அவைகள் நியாயமற்ற, பேராசை யான கோரிக்கைகள் என்று அரசு கருதினால், அவைகளை நாட்டுக்கு அடையாளம் காட்டுங்கள், அப்படி பேராசை பிடித்த கோரிக்கைகளாக இருந்தால், நாங்கள் பகிரங்கமாக பொது மன்னிப்பு கேட்கத் தயார் என்று தெரிவித்துக்கொள்கிறேன். நியாயமில்லை, பேராசை பிடித் தவை என்றால், அது எந்தவகையில் இந்த அரசின் நிதி நிலைமையைக் கட்டுப் படுத்துகிறது, எந்தெந்த விதிமுறைகளுக்கு ஒத்து வராதது என்று சொல்லுங் கள், அதற்குப் பதில் சொல்ல நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதை யும் தெரிவித்து, இக்கட்டான நிலைமைகளை மாற்ற, அரசு மெத்தனப் போக் கில் இருக்கக்கூடாது என்று வலியுறுத்தி, தமிழ் நாடு முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்கள் நடத்தும் போராட்டத்தை அவர்களின் கோரிக்கைகளை நிறை வேற்றுவதன் மூலமாக, தீர்வு காண்பதன் மூலமாக, நிறுத்த வேண்டும், பிரச் சினைகளைத் தீர்க்கவேண்டும் என்று சொல்லி, அதற்கான நல்ல பதிலை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய பதிலில் கொடுக்க வேண்டுமென்று கேட்டு, அப்படிக் கொடுப்பார்கள் என்ற நம்பிக்கையுடன் நான் அமைகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு திட்ட வட்டமாக, தெளிவாக, ஆழமாக நான் கருத்துக்களைச் சொல்லிட இப்போது எதுவுமில்லையென்றாலும், பொதுப்படையாக சில கருத்துக்கள் மட்டும் சொல்ல முடியும்.

இந்த அரசு பிரச்சினைகளையும், கோரிக்கைகளையும் முடிந்தவரையில் தீர்த்துக் கொண்டு வருகிறது. ஆசிரியர்கள் வைத்த கோரிக்கைகளையெல்லாம் 10-15 ஆண்டுக்காலமாக நாம் கணக்கிட்டுப் பார்ப்போமேயானால், அரசு முயன்று முயன்று தீர்த்துக் கொண்டுதான் இருந்து வந்திருக்கிறது. பிரச்சினைகள் தீரத்தீர, பிரச்சினைகளும் வளர்ந்து கொண்டேதான் இருக்கின்றன என்பதைக் காணலாம். 400 குடிசைகள் உள்ள ஒரு சேரிப் பகுதியில் 50 குடிசைகளை அகற்றிவிட்டு மாற்று ஏற்பாடுகளைச் செய்து விடலாம் என்றால், அதற்குள் அங்கே 500 குடிசைகள் தோன்றிவிடுவதைப்





போல, பிரச்சினைகள் தீரத்தீர பிரச்சினைகள் புதியதாகத் தோன்றிக் கொண்டேதான் இருக்கின்றன. முப்பது ஆண்டுக்கால வரலாற்றை எடுத்துப் பார்த்தால் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு அரசு செய்து கொண்டுதான் வருகிறது. ஆசிரியர்கள் பிரச்சினை 30 ஆண்டுக்காலத்திற்கு முன் எப்படி இருந்தது. 10-15 ஆண்டுக்காலமாக எப்படி இருந்து வருகிறது என்று பார்த்தால், கூடுமானவரையில் யூனிபார்மிடியை மெள்ள மெள்ள ஆனால் படிப்படியாகச் செய்து கொண்டிருக் கிறோம். ஆனால் இதனுடைய முறைகளை கல்வித் துறை மேற்கொள்ள வேண்டுமென்று சொல்வதற்குக் காரணம், இருக்கிற நிலைமைகளை ஆராய்ந்து எடுத்துச் சொல்லவேண்டியவர்கள் அவர்கள்தான். நிதி சம்பந்தம் இல்லை என்றால், அவர்களே முடிவு எடுத்துக்கொள்ள அவர்களுக்கு முழு உரிமை யுண்டு. நிதி என்று வருகிறபோதுதான் நிதித் துறைக்கு வரவேண்டி யிருக்கிறது. நிதித் துறை 468 கோடி ரூபாய்தான் கல்வித் துறைக்கு ஒதுக்க முடிந்திருக்கிறது. இந்த ஆண்டு பட்ஜெட்டில் அவ்வளவுதான் ஒதுக்க முடியும். அதில் எதைக் குறைக்கலாம் என்று நீங்களே சொல்லுங்கள், நீங்கள் எல்லாம் ஆசிரியர்கள், கணக்கு ஆசிரியர்கள் கணக்கு நன்றாகப் போடுவீர்கள். ரூபாய் 468 கோடியில் எதையெதை நீக்கிவிட்டு, எதற்குச் செலவழிக்கலாம் என்று திரு. லெட்சுமிகாந்தன் கூட சொல்லவேண்டாம், இனிமேல் பேசக்கூடியவர்கள் கூட சொல்லலாம். அதைக் கேட்டு அதற்கான தன்மைகளைச் செய்யலாம். பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடாது என்பது அரசின் எண்ணமல்ல. கல்வித் துறையைக் கலக்காமலே இவர்கள் எதுவும் செய்ய முடியாது. நிதித் துறையைக் கலக்காமல் அவர்களும் எதுவும் செய்ய மாட்டார்கள். கல்வித் துறையே வாரி வாரி வழங்கிவிட நிதித் துறையும் அனுமதிக்க இயலாது. அவர்கள் கேட்கிற கூடுதலான நிதியை ஒதுக்கவேண்டிய நிலைமைகளை ஆராய வேண்டும். அந்தப் பிரச்சினைகளையும் நிதித் துறைதான் செய்ய வேண்டும். பிரச்சினைகளில் நியாயம் இருக்கிறது என்று ஒத்துக் கொள்கிறேன். தீர்க்கப்படவேண்டிய பிரச்சினைகள் பல இருக்கின்றன என்பதையும் ஒத்துக்கொள்கிறேன். பிரச்சினை என்பது எங்களுக்கும் இருக்கிறது. அரசுக்கும் இருக்கிறது, மாநிலத்திற்கும் இருக்கிறது. நிதி அமைச்சருக்கும் தீர்க்கவேண்டிய பிரச்சினைகள் ஏராளமாக இருக்கின்றன. ஆனால் அந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான அணுகுமுறையில், நாம் கூடுமானவரையில் ஒருமித்த கருத்தைக் கொள்வதன் அடிப்படையில் வரவேண்டுமென்றுதான் முயன்று கொண்டிருக்கிறோம். கல்வித் துறைக்கும் நிதித் துறைக்குமிருக்கிற சிக்கல் தீர்க்கப்பட வேண்டும். அதற்கு இயலாது

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 ஏப்ரல் 9

என்று சொன்னால், 48,000 ஆசிரியர்களையும் நியமிக்க வேண்டும், பணியிடங்
களையும் ஏற்படுத்த வேண்டுமென்று முடிவு செய்துவிடலாம். அதற்கு
வேண்டிய நிதியை இந்த 468 கோடியிலேயே செய்து கொள்ளலாமா என்பது
பற்றியும் யோசிக்கலாம். ஆனால் கூட்டமைப்பினரையில் இந்தக் கோரிக்கைகள்,

(பிற்பகல் 12-20)

பிரச்சினைகள், மற்றவைகளைப்பற்றி மேலவையிலே மாண்புமிகு
உறுப்பினர்கள் பலதரம் பேசி, அதைத் தொடர்புடைய துறையினரும்
அவ்வப்போது அறிந்து, ஆராய்ந்து முடிவுகளை எடுத்துக்கொண்டு
வருகிறார்கள். இவ்வாறு பல பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு வருகின்றன
என்பதை ஒப்புக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

மாண்புமிகு ஆசிரியர் பிரதிநிதிகள் கல்வித் துறையினரிடமும்,
அமைச்சரிடமும் உட்கார்ந்து பேசும்போதுதான் முடிந்த முடிவுகள் ஏற்படுமே கல்வி
தவிர, அதைவிட்டு போராடுவதினாலோ, சிறை செல்வதினாலோ, மறியல்
செய்வதினாலோ பலன் ஏதும் ஏற்பட நியாயம் இல்லை. அவர்களுக்கும் பலன்
இல்லை, அரசுக்கும் பலன் இல்லை என்பதைக் கூறிக் கொண்டு,
பிரச்சினைகளை எப்படித் தீர்ப்பது, எந்த வகையில் தீர்ப்பது என்பதில் நிதித்
துறையும் கவனம் செலுத்தும், நேரத்தைச் செலவிடும், அதற்கு எனக்கு
ஒன்றும் ஆட்சேபணை இல்லை என்றும் கூறி, மற்றவைகளை மாண்புமிகு
கல்வி அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்வார்கள் என்று கூறி
அமைகிறேன்.

## 2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

**(6) மேலவை உறுப்பினர் திரு. பா. ரா. தாமஸ் கைது செய்யப்பட்டது.**

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : சென்னை காவல்துறை
ஆணையரிடமிருந்து மேலவைக்குக் கீழ்க்கண்ட தகவல் வரப்பெற்றுள்ளது :

"I have the honour to inform you that Thiru P. R. Thomas,
M.L.C. was arrested, along with other members of the Tamil Nadu
Graduate and Post-Graduate Teachers' Association at 10.30 Hours
today (9th April 1985) in X-Station Crime No. 230 of 1985 under
Section 151 Cri. P.C. when he and his followers attempted to
picket the Office of the Director of School Education at College
Road, Nungambakkam, Madras, over their 12-point Charter of
Demands and removed to the City Police Office, Madras-8



1985 ஏப்ரல் 9]

## 5. 1985-86 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையின்மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

**செல்வி ஆ. லீலாவதி :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்குப் பின் இன்னும் மூவர் பேச வேண்டியிருப்பதால், மிகக் குறைந்த நேரம் பேச நானே ஒப்புக்கொண்டு, மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களை என்னை அழைக்குமாறு கேட்டுக்கொண்டேன். அதன்படி நான் பத்தே நிமிடத்தில் என்னுடைய பேச்சை முடித்துக்கொள்வேன் என்று உறுதி கூறிக்கொண்டு, முதலில் நிதிநிலை அறிக்கைமீது பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி என்னுடைய பேச்சைத் தொடங்குகிறேன்.

மாண்புமிகு நிதி அமைச்சர் நாவலர் அவர்கள், "இப்போது ஆசிரியர்கள் போராட்டம் செய்துகொண்டிருக்கின்றார்கள், அவர்கள் பிரச்சினையை வாதம் செய்து நீங்கள் தீர்க்கலாம், அவர்கள் போராட்டத்தில் இறங்குவது அவ்வளவு நல்லதல்ல" என்று கூறினார். நான் ஆசிரியர்கள் சார்பில் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். ஏழு ஆண்டு காலமாக ஆசிரியர்கள் இந்தப் பிரச்சினையை அரசின் முன்னாலே வைத்தும் இது இன்னும் தீர்க்கப்படவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

1983 ஆம் ஆண்டு தேர்வாணைக் குழுவினர் நடத்திய தேர்வில் பணியிலிருந்த 2,400 ஆசிரியர்கள் தேர்வு எழுதினார்கள். அவர்களில் 1,300 பேர் தேர்வு செய்யப்பட்டார்கள் மீதமுள்ள 1,100 பேர் தேர்வு செய்யப்படவில்லை. எந்தவித அனுபவமும் இல்லாத 800 பேரை வெளியிலிருந்து ஆசிரியப் பணிக்கு அவர்கள் எடுத்திருக்கிறார்கள். ஏழு ஆண்டுகாலம் வேலைபார்த்த 1,100 ஆசிரியர்கள் தேர்வு செய்யப்படாதவர்களாகிவிட்டார்கள். ஆனால் அனுபவமே இல்லாத 800 பேர் தேர்வாணைக் குழுவினரால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த 1,100 ஆசிரியர்கள் குடும்பம் இன்று தெருவில் நின்று கொண்டிருக்கிறது. நேற்று என்னுடைய அறையிலே வேலையிழந்த பெண் ஆசிரியர்கள் வந்து தங்கி, இன்றைய போராட்டத்திலே கலந்துகொண்டார்கள். அவர்களில் ஒரு பெண் ஆசிரியர் சொன்னார், அவரும் 10 (ஏ) (1)-ன்படி நியமிக்கப்பட்டவர்; அவர் கணவரும் 10 (ஏ) (1)-ன்படி நியமிக்கப்பட்டவர். இப்போது இருவரும் வீட்டுக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்களாம். அவர்கள் குடும்ப நிலை என்னவாகும்? ஆசிரியர்கள் மிகச் சாதுவானவர்கள், போராட்டத்தை விரும்பாதவர்கள். ஆனால் அவர்கள் போராட்டத்திற்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள் என்பதைத்தான் நான் இந்த நேரத்திலே அரசுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நிதி நிலை அறிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது, சில வார்த்தைகளை ஆசிரியர்கள் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வகையில் அறிவிக்க வேண்டும் என்று நான் ஆசிரியர்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆளுநர் உரையின்மீதான விவாதத்தின்போது ஆசிரியர்கள் பல பிரச்சினைகளை எடுத்துவைத்து இந்த அவையிலே பேசியிருக்கின்றோம். அப்போதும் மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் ஆசிரியர்கள் பிரச்சினைகளை அரசு கவனிக்கும் என்று தெரிவித்தார்கள்.

(பிற்பகல் 12-25)

ஆனால் இந்த நேரத்திலே ஒருசில கோரிக்கைகளை அவர் கண்டிப்பாக அனுதாபத்தோடு கவனிக்க வேண்டுமென்று ஆசிரியர்களின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன். அந்த அறிக்கையை அவர் வெளியிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இங்கே ஆசிரியர் பிரதிநிதிகள் ஏறக்குறைய ஏழு, எட்டு பேர்கள் அமர்ந்திருக்கிறார்கள். ஆசிரியர்களே இந்த அவையை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று மாண்புமிகு தலைவர் அவர்களே கூறியிருக்கிறார்கள். பல ஆண்டுகளாக எங்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இருக்கும்போது, அரசுதான் எங்களுடைய குறைகளையெல்லாம் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் ஆசிரியர்கள் எங்களிடத்தில் கூறுவது என்னவென்றால், முதல்வர் அவர்களை நேராகப் பார்த்துச் சொன்னால், உண்மையிலேயே முதல்வர் அவர்கள் பிரச்சினைகளை நிச்சயமாகத் தீர்த்துவிடுவார் என்று சொல்கிறார்கள். "12 ஆயிரம் அரசு ஊழியர்களை முதல்வர் அவர்கள் நிரந்தரப்படுத்தியபோது, நாங்கள் 1,200 ஆசிரியர்கள்தான் இருக்கிறோம், அவர்களை எல்லாம் ஏன் நிரந்தரப்படுத்தக் கூடாது? தேர்வாணைக் குழுவின் வரம்பிலிருந்து எங்களை ஏன் விலக்கக் கூடாது?" என்று அந்த ஆசிரியர்கள் நியாயமான கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். இப்போது இங்கே அவை முன்னவர் அவர்கள் உட்கார்ந்திருக்கிறார்கள். அவர் முதல்வர் அவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி ஆசிரியர்களைத் தேர்வாணைக் குழுவின் வரம்பிலிருந்து விடுவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 12 ஆயிரம் அரசு ஊழியர்களை தேர்வாணைக் குழுவிலிருந்து விடுவித்ததுபோல, எங்களுடைய இந்த பர்னிங் பிராப்ளத்தை அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். இன்னும் தனியார் பள்ளிகளிலே அரசு நேரடியாக சம்பளம் கொடுப்பதில்லை. அதை நேரடியாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நேற்று மாண்புமிகு உறுப்பினர்



திரு. தாமஸ் அவர்களும், இன்று திரு. லெட்சுமிகாந்தன் அவர்களும் கூறியது போல, எல்லா ஆசிரியர்களுடைய கோரிக்கைகளையும், பிரச்சினைகளையும் பற்றி பல ஆண்டுக்காலமாக இங்கே பேசிக் கொண்டு வருகிறோம். எல்லாப் பிரதிநிதிகளும் பேசி வருகிறோம். ஆனால் நாங்கள் விரக்தி மனப்பான்மையோடு இருக்கிறோம். "உங்களை நாங்கள் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிறோம். எதை நீங்கள் தீர்த்து வைத்திருக்கிறீர்கள்?" என்று நாங்கள் வெளியே போகும்போது ஆசிரியர்கள் கேட்கும் கேள்விகளுக்கு நாங்கள் பதில் சொல்ல முடியாமல் இருக்கிறோம்.

சில நியாயமான கோரிக்கைகள் இருக்கின்றன. பிராவிடண்ட் பண்டைப் பற்றிச் சொன்னார்கள். தனியார் பள்ளிகள் பிராவிடண்ட் பண்டை போஸ்டல் டிபார்ட்மென்டிலே போட்டால், 5 பர்சென்ட் வட்டி ஆசிரியர்களுக்கு வருகிறது. ஆனால் அதை வங்கியிலே போடும்போது, அவர்களுக்கு 9 பர்சென்ட் வருகிறது. இதனால் ஒரு ஆசிரியருக்கு 30 ஆயிரம் ரூபாய் இழப்பு ஏற்படுகிறது. இதையாகிலும் அரசு அறிவிக்கலாம். அரசுக்கு இது எந்தவிதத்திலும் நட்டம் இல்லை. இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே இந்தப் பிரச்சினையையும் தீர்த்துவைத்து முடிவு காணவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1—4—1984-லே தனியார் பள்ளியிலே ஆசிரியர்கள் ஓய்வு பெற்றிருக்கிறார்கள். அவர்களுக்கு ஐந்து ஆயிரம் ரூபாய் கொடுக்கவில்லை. அவர்களுக்கும் அந்த ஐந்து ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டும். இந்த நிதி நிலை அறிக்கை விவாதம் முடியும்போது அந்தச் சலுகைகளை எல்லாம் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் எம்.எட். படித்தால் அவர்களுக்கு 'இன்சென்டிவ்' ஊதிய உயர்வு கொடுக்கவேண்டும். அனைத்துத் தரப்பினருக்கும் 'இன்சென்டிவ்' கொடுக்கப்பட்டிருக்கிறது . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : உறுப்பினர்கள் அமைதி காக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**செல்வி ஆ. லீலாவதி** : அட்வகேட்ஸ், டாக்டர்கள் எல்லாரும் 'இன்சென்டிவ்' வாங்கும் ஒரு நிலை இருக்கிறது. நாங்கள் நிதி அமைச்சர் அவர்களிடம் கூறும்போது, அவர் இதில் நியாயம் இருக்கிறதென்று கூறினார். முதுகலைப் பட்டதாரிகளுக்கு 'இன்சென்டிவ்' வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நாங்கள் வைப்பது நான்கே கோரிக்கைகள்தான்.

ஆசிரியர்களுடைய குறை a cray in the wilderness என்று இருக்கக் கூடாது. நாங்கள் நான்கு பிரச்சினைகளை இங்கே வைக்கிறோம். அந்தப் பிரச்சினைகளை அரசு தீர்க்க வேண்டும். தேர்வாணைக் குழு வரம்பிலிருந்து ஆசிரியர்களை விடுவிக்க வேண்டும். தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு நேரடியாகச் சம்பளம் அளிக்க வேண்டும். பிராவிடன்ட் பண்டை வங்கியிலே போட அரசு ஆணை பிறப்பிக்க வேண்டும். தனியார் பள்ளி ஆசிரியர்கள் ஓய்வுபெறும்போது 1—4—1984-லிருந்து ஐந்து ஆயிரம் ரூபாய் அவர்களுக்கு அளிக்க வேண்டும். எம்.எட். முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு இன்சென்டிவ் அளிக்க வேண்டும். இந்த பர்னிங் பிராபிளம்சை "நீங்கள் ஆசிரியர்கள்தானே, உங்களுடைய பிரச்சினையைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம்" என்று சொல்லாமல், நிதிநிலை அறிக்கையின்மீது விவாதம் முடியும்போது, முன்னவர் அவர்களோ, நிதி அமைச்சர் அவர்களோ பதில் அளிக்கும்போது, இவற்றிற்குத் தீர்வு கண்டு ஆசிரியர்களை மகிழ்விக்க வேண்டுமென்று கூறி எனக்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி அமைகிறேன். வணக்கம்.

(பிற்பகல் 12-30)

திரு. க. சுப்பு: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தின் முன்னால் வைக்கப்பட்டிருக்கிற நிதிநிலை அறிக்கையின் மீது நான் ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

நடைபெற்று முடிந்த புதிய பொதுத் தேர்தலுக்குப் பிறகு கூடுகிற இந்த அவையில் அரசாங்கத்தின் கொள்கைகளைப் பிரதிபலிக்கக் கூடிய வகையிலும், திட்டங்களை நடைமுறைப்படுத்துகிற வகையிலும் இந்த நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. முந்தைய அரசாங்கத்தின் தொடர்ச்சியாக மூன்றாம் முறையாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, இந்த நிதிநிலை அறிக்கை இங்கே வைக்கப்பட்டிருக்கிறது. தொடர்ச்சியாக வருகிற காரணத்தாலே சென்ற ஆண்டில் எஞ்சியிருக்கிற திட்டங்களை நிறைவேற்றுவது குறித்தும், புதிய திட்டங்களை மேற்கொள்ளுவது குறித்தும் வகைப்படுத்திக் கொடுக்கும் ஒரு கணக்காக இது இங்கே அச்சிடப்பட்டு கொடுக்கப்பட்டிருக்கிறது. இதைப் பார்த்த எதிர்க் கட்சித் தலைவர்களில் சிலர் கீறல் விழுந்த கிராமஃபோன் ப்ளேட் மாதிரி இந்த நிதிநிலை அறிக்கை இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் ஆண்டுதோறும் திரும்பத் திரும்ப பட்ஜெட் என்றே சொல்லுகிறார்களே—இப்படிச் சொன்னதையே திரும்பத் திரும்பச்





சொல்கிறார்களே, இதைக்கூட மாற்ற வேண்டும் என்று சொல்லுவார்கள் போல் இருக்கிறது. எனவே இந்த பட்ஜெட் கீறல் விழுந்த கிராமஃபோன் ப்ளேட் மாதிரி இருக்கிறதோ இல்லையோ, எதிர்க் கட்சிக்காரர்களின் கருத்து தான் இன்றைக்கு கீறல் விழுந்த கிராமஃபோன் ப்ளேட் போல் இருக்கிறது. இந்த நிதிநிலை அறிக்கையில் எந்தெந்தத் திட்டங்களைக் கைவிட்டு விட்டார்கள் அல்லது எந்தெந்தத் திட்டங்களைச் சேர்க்கவில்லை என்பதையெல்லாம் விளக்கியிருப்பார்களானால் ஓரளவுக்கு உதவியாக இருந்திருக்கும்.

மாண்புமிகு உறுப்பினர்கள் அதிலும் குறிப்பாக எதிர்க் கட்சித் தரப்பில் இருப்பவர்கள் பேசும்போது, கல்வித் துறைக்கு இன்னும் கூடுதலாகத் தொகை ஒதுக்கியிருக்கலாம் என்று சொன்னார்கள். அதிகமாக நிதி ஒதுக்கலாம், நியாயம்தான். அப்படித்தான் அதிக நிதி ஒதுக்கப்பட வேண்டும் என்று கேட்கிறது கல்வித் துறை. ஆனால் ஒதுக்க முடியவில்லையே என்கிறது நிதித் துறை. இது இங்கே மட்டுமல்ல. மத்திய அரசிலேகூட இதுதான் நிலை. நிதி அமைச்சகத்திற்கும் திட்டக் குழுவுக்கும் இந்த நிதி ஒதுக்கம்பற்றித்தான் விவாதமே நடந்துகொண்டிருக்கிறது. எவ்வளவு நிதி ஒதுக்கலாம் என்று துறைகள் கேட்டால், எவ்வளவு நிதியைக் குறைக்கலாம் என்று திட்டக் குழு சொல்லுகிறது. இங்கேயேகூட நிதியமைச்சர் அவர்கள் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு எவ்வளவு ஒதுக்குவது என்பது முடிவாகவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நாம்தான் அதை 7,000 கோடி ரூபாய் என்று வரையறுத்து வைத்திருக்கிறோம். ஆனால் 7,000 கோடி ரூபாய்க்கான அனுமதி இன்னும் வழங்கப்படவில்லை. ஏற்கெனவே பொதுத் துறையில்—அரசுத் துறையில்—அரசு நிறுவனங்களுக்காக எவ்வளவு ஒதுக்கலாம் என்று மத்திய அரசாலேகூட நிர்ணயிக்க முடியவில்லை. மறைந்த பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் உயிரோடு இருந்தபோது, அதை 1,80,000 கோடியாக ஒதுக்கினார்கள். அன்றைய நிதியமைச்சர் அவர்கள் அதையேகூட ஒப்புக்கொள்ளவில்லை. அவர் 1,45,000 கோடியாக இருக்க வேண்டும் என்று சொன்னார். ஆனால் திருமதி இந்திரா காந்தி அம்மையார் 1,80,000 கோடியாக இருக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டிருந்தார். இன்றைக்கு அவர் இல்லை. அவருடைய புதல்வர் இருக்கிறார். அந்தத் தொகையை ஏன் குறைக்கக் கூடாது என்ற கொள்கையைக் கொண்டவர், இன்றைக்கு ஆட்சிக்கு வந்திருக்கிறார். அந்த அளவுக்கு மத்திய அரசிலேயே புதிய தடுமாற்றங்கள், அடிப்படை மாற்றங்கள் வந்திருக்கின்றன. மத்திய அரசாங்கம் அளித்துள்ள நிதிநிலை அறிக்கையை பல்கிவாலா வரவேற்கிறார். அதைப்போலவே பிசினஸ் ஹவுஸ்கள் பல வரவேற்கின்றன, அதற்குக் காரணம் என்ன? அவர்களுடைய 'கார்ப்பரேட்

[திரு. க. சுப்பு] [1985 ஏப்ரல் 9

டேக்ஸ்' இன்றையதினம் பட்ஜெட்டில் குறைக்கப்பட்டிருக்கிறது. 'வெல்த் டேக்ஸ்' இல்லை. 'எஸ்டேட் ட்யூடி' இல்லை. 'டேக்ஸ் எக்சம்ப்ஷன்' வரையறை உயர்த்தப்பட்டிருக்கிறது. எம்.ஆர்.டி.பி. எக்சம்ஷனை இன்றைக்கு ரூ. 20 கோடியிலிருந்து 100 கோடி ரூபாயாக ஆக்கியிருக்கிறார்கள். மானாபலி ஹுவ்ஸ்பல் இதை 20 கோடியிலிருந்து ரூ. 50 கோடியாக உயர்த்த வேண்டு மென்று கேட்டார்கள். ஜனதா கட்சி ஆட்சியில்கூட, இதை 50 கோடி அளவுக்குத்தான் உயர்த்த வேண்டும் என்று பிரிஜ்லால் வர்மா என்பவர் தொழில் துறை அமைச்சராக இருந்தபோது, கேட்கப்பட்டது. ஆனால் அப்போது அதன் தலைவராக இருந்த திரு. சந்திரசேகர் அவர்கள் அதைக் கடுமையாக எதிர்த்த காரணத்தால், அந்தத் திட்டம் அப்போது கைவிடப் பட்டது. ஆனால் அன்றைக்கு ஜனதா கட்சி செய்ய முடியாததை இன்றைக்கு திரு. இராஜீவ் காந்தி செய்திருக்கிறார். நான் அதைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. இன்றையதினம் 100 கோடி ரூபாயாக இதை உயர்த்தியதன்மூலம் இந்திய அரசு சோஷலிசப் பாதையிலிருந்து விலகிச் செல்வதாக அமைய வில்லையா? இதற்கு பதில் சொல்ல வேண்டியது காங்கிரசின் பொறுப்பாகும். நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், மத்திய அரசிலேயே இத்தகைய கொள்கைத் தடுமாற்றமான நிலைமை இருக்கும்போது தமிழகத்தில் அத்தகைய நிலைமை வருமில்லை என்பதைப் பார்க்க வேண்டும். அதையாவது தமிழக எதிர்க் கட்சிகள் வரவேற்க வேண்டாமா?

நம்முடைய நிதிநிலைமையிலே நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது என்பதற்காக நாம் கல்வித் துறையில் செலவழித்துக் கொண்டிருந்ததைக் குறைத்திருக் கிறோமா? இல்லையே? 500 புதிய பதவிகளை அல்லவா உருவாக்கி யிருக்கிறோம். அதுகூட தவறு என்றால், நிறுத்திக்கொள்ளலாம். நிதிப் பற்றாக் குறை என்ற காரணத்திற்காக நாம் சத்துணவுத் திட்டத்தைக் கைவிட்டுவிட வில்லையே? சீருடை வழங்கப் போகிறோம், புத்தகங்கள் வழங்கப் போகிறோம். இதற்காக மேலும் ரூ. 25 கோடி ஒதுக்கியிருக்கிறோம். மேலும் 100 கோடிக்குக்கூட செலவழிக்கலாம். ஆனால் முடியவில்லையே? இது தாயன்பு காட்டுகிற பட்ஜெட். தாயன்பு என்பது எதையாவது எதிர்பார்த்து காட்டுகிற அன்பு அல்ல. இருப்பதைக் கொண்டு இல்லாததை எண்ணி ஏங்கிக் கொண்டிருக்கக் கூடாது. குழந்தை கேட்பதையெல்லாம் தாய் வாங்கிக் கொடுக்க முடியாது. அப்படியே வாங்கிக் கொடுத்தாலும் அது சந்தையில் அலைகிற குழந்தையாக மாறிவிடும். எது முடியுமோ அதைத்தான் செய்ய முடியும். அந்த வகையில் இங்கே தாயன்பு காட்டுகிற ஒரு முதலமைச்சர் இருக்கிற காரணத்தால், இது தாயன்பு ததும்புகிற பட்ஜெட்டாக இருக்கிறது.



1985 ஏப்ரல் 9] [திரு. க. சுப்பு]

(பிற்பகல் 12-35)

நிதி ஆதாரங்களை எப்படி பெருக்குவது என்று கூறினால், அதை நிச்சயமாக வரவேற்கலாம். நம்முடைய வருத்தமெல்லாம் நிதி ஆதாரம் குறைவாக இருக்கிறது என்பதுதான். வருமானம் எல்லாம் மத்தியில்தான் உள்ளது. நிதி ஆதாரங்களைப் பெருக்க வேண்டும் என்பது நமக்கும் ஆசைதான். புதிதாக வரியைப் போடலாமா என்றால் போடக்கூடாது. பிறகு திட்டத்தைச் சுருக்க வேண்டும். திட்டத்தைச் சுருக்கக் கூடாது என்று திட்டக் கமிஷன் சொல்லுகிறது. வெல்ஃபேர் ஸ்டேட்டில் திட்டத்தைச் சுருக்கக் கூடாது. திட்டத்தைச் சுருக்காமல் நிறைவேற்ற வேண்டும். ஆகவே நிதி வாயில்களை அதிகமாகப் பெருக்க வேண்டும். அதற்கு வரி வசூலை முடுக்க வேண்டும்; சிலவற்றைக் குறைக்க வேண்டும். நிதி இலாக்காவைக் கேட்டால், எப்படி நிதி வரும்? அவர்கள் எப்படி நிதியைப் பெருக்குவது என்று கேட்க மாட்டார்கள். எப்படி சுருக்குவது என்றுதான் கேட்பார்கள். டெய்லர் வேலை மாதிரி. வெட்டுவதும் ஒட்டுவதும்தான் அவர்கள் வேலை. வெல்ஃபேர் ஸ்டேட்டில் இருக்கின்ற ரிசோர்சஸ் கன்ஸ்ட்ரெய்ன்ட்ஸில் என்ன செய்ய முடியும்? இருக்கின்ற நிதியை எப்படிப் பயன்படுத்த முடியும்? எந்தக் காரியத்திற்குப் பிரையாரிட்டி கொடுக்க முடியும் என்று பார்க்கிறோம். ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் அணுகுமுறையைப்பற்றி 'அப்ரோச்' பேப்பரில் சொல்லியிருக்கிறார்கள். பட்ஜெட்டில் கூட நாவலர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். உணவு உற்பத்தி, வேலை வாய்ப்பு, உற்பத்தித் திறன் இந்த மூன்றையும் மையமாகக் கொண்டுதான் அணுகுமுறை இருக்கிறது. இதைப் பிரதிபலிப்பதாக நம்முடைய வரவு-செலவுத் திட்டம் இருக்கிறதா, இல்லையா என்று சொன்னால், நலமாக இருக்கும்.

எதிர்க் கட்சியில் இருக்கிறவர்களை ஒரு வகையில் பாராட்ட வேண்டும். மத்திய பட்ஜெட்பற்றிப் பேசினார்கள். மத்திய பட்ஜெட் சரியாக இருந்தால் தான், நமக்குப் பணம் வரும். நாம் நிதி ஒதுக்கினால் பணம் எங்கேயிருந்து வரும்? ஆகவே நாம் கடுமையாக இருக்க வேண்டாமா என்றால் கடுமையாகத் தான் இருக்க வேண்டும்.

இந்த பட்ஜெட்டிலே தமிழில் இருப்பதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த் திருப்பதில் இன்னும் கடுமையாகத்தான் இருக்கிறது. சென்டர்-ஸ்டேட் ரிலேஷன்ஷிப்பில் எட்டாவது பைனான்ஸ் கமிஷனின் ட்ரீட்மென்ட் என்று வரும்போது 'அநீதி இழைத்துவிட்டது' என்று சொல்லப்பட்டிருக்கிறது. அநீதி இழைத்துவிட்டது, அவர்கள் செய்தது தவறு என்று எடுத்துக் கூறி, அந்த அடிப்படைத் தவறை மாற்ற வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

[திரு. க. சுப்பு] [1985 ஏப்ரல் 9

இன்னும் கடுமையாகச் சொல்லலாம் என்றாலும், கடுமையாகச் சொல்லவில்லை என்று யாரும் சொல்ல முடியாது. தற்போது நிதி ஒதுக்கீட்டில் பாகுபாடு இருக்கிறது. மக்கள் தொகை அடிப்படையில் ஒதுக்க வேண்டும் என்பதில் பாகுபாடு இருக்கிறது. இதையெல்லாம் சுட்டிக்காட்டி நிதி வேண்டும் என்று வற்புறுத்தியிருக்கிறோம். நல்ல அணுகுமுறையை நாம் கடைப்பிடித்திருக் கிறோம். அவர்கள் 1,002 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள் என்று சொல்லப் படுகிறது. நாம் எவ்வளவு செலவழிக்கிறோம் என்றால் 1,112 கோடி. நூறு கோடி அதிகமாக வைத்துக்கொண்டிருக்கிறோம். நமக்கு ஆசை இருக்கிறது அதிகமாகச் செலவழிக்க, ஆனால் வசதியில்லை. ஆகவே சுருக்க வேண்டி யிருக்கிறது. பட்டதாரிகள் பல கோரிக்கைகளைச் சொன்னார்கள். அதிலே நியாயம் இருக்கிறது. ஆனால் அதை நிறைவேற்ற நிச்சயமாக நமக்குப் பணம் இல்லை. இந்த இரண்டுக்கும் மத்தியிலே தான் நாம் 'பேலன்ஸ்' செய்ய வேண்டியிருக்கிறது.

தொழில் துறைக்கு ஊக்கம், வழிவகை செய்யப்படவில்லை, தொழிற் சாலைகள் துவங்கவில்லை என்று சொல்லுகிறார்கள். ஆனால் தொழிற் சாலைகளை மூடும் அளவிற்கு நிலைமை இருக்கிறது என்று சொல்லவில்லை. ஆசிரியர் பிரதிநிதிகள் அதிகமாக இருப்பதால், இங்கே ஆசிரியர்களைப் பற்றியே சொல்லியிருக்கிறார்கள். தொழில் துறையைப் பொறுத்தவரையில், பல சிக்கல்கள் இருக்கின்றன. ஆனால் தொழிற்சாலைகளே இல்லையென்று சொல்ல முடியாது என்பதை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மத்திய அரசில் இரும்பு விலையை ஏற்றியிருக்கிறார்கள். அவர்கள் 25 சதவீதம் ஏற்றியிருக்கிறார்கள். பிளாக் மார்க்கெட்டில் 80 சதவீதம் ஏறியிருக்கிறது. இங்கே தமிழ்நாட்டில் இரும்பு கிடைக்கவில்லை. இந்த நாட்டிலே இருக்கக் கூடிய நிலக்கரி, இரும்பு ஆகியவை தெற்கே சரியாக வருவதில்லை. நிலக்கரி, இரும்பு எப்படி வருகிறது, அனுமாரா அதைத் தூக்கிக் கொண்டு வருகிறார்? இல்லை, ரெயில்வே வேகன்களில் வருகிறது. அதை 'ஹாண்டில்' பண்ணுகிறவன் மனிதன். மனிதன் தன் குணத்தைக் காட்டுகிறான். வாகன்களில் வரும்போது தனக்குத்தானே எடுத்துக்கொள்கிறான். மேலும் வருகிற நிலக்கரி மோசமாக இருக்கிறது. நிலக்கரி மோசமாக இருக்கிறது என்று எப்போது தெரிகிறது? பாய்லர் வெடித்த பிறகுதான் தெரிகிறது. முதலிலே தெரியவில்லை. ஆகவே இப்படி குறைபாடுகள் இருக்கலாம். குறைபாடுகளைச் சுட்டிக்காட்டுவது நியாயம். பத்திரிகையிலேகூட பார்த்தேன். கடல் உணவு ஏற்றுமதிக் கழகம் (சீ புட் எக்ஸ்போர்ட் அசோசியேஷன்) என்று வைத்து கடலிலிருந்து மீன், இறால், லாப்ஸ்டர் போன்றவற்றை ஏற்றுமதி செய்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில்,



1985 ஏப்ரல் 9] [திரு. க. சுப்பு]

நிச்சயமாக நாம் இதிலே கவனம் செலுத்த முடியும். ஏனென்றால் இந்தியா விலேயே அதிக நீளமுள்ள கடற்கரையைக் கொண்டது தமிழ்நாடு. இங்கே நிறைய மீன் கிடைக்கிறது. நல்ல மீனும் கிடைக்கிறது. இறால் இங்கே கிடைக்கிறது. அதுவும் பெரிய அளவில் கிடைக்கிறது. ஆகவே இங்கே மீன் பிடிக்கக் கூடிய சூழ்நிலை நமக்கு இருக்கிறது. இதையெல்லாம் யாரும் மறுக்க

(பிற்பகல் 12-40)

முடியாது. அந்த மாதிரியான கடல் நமக்கு இருக்கிறது. பிரான்ஸ், மீன்கள் எல்லாம் கிடைக்கின்றன. மணல் பரப்பு இருக்கின்றது. அங்கே லாப்ஸ்டர் எல்லாம்கூட கிடைக்கிறது. நல்ல நிதி ஆதாரங்களைப் பெற்றுத் தரக்கூடிய அளவுக்கு நமக்கு நீண்ட கடற்கரை இருக்கின்றது. அது இயற்கையாகவே அமைந்திருக்கிறது. அதுமாதிரியே முத்து நமக்குக் கிடைக்கிறது. அப்படி எங்கேயும் கிடைக்காது. அதுவும் தூத்துக்குடியிலே கிடைக்கின்ற முத்து உலகத்திலேயே பெயர்பெற்ற முத்து. இப்படி பொருள்கள்மூலம் நிதி ஆதாரங்களைப் பெருக்கலாம். இப்படிப்பட்ட நிதி ஆதாரங்களைப் பெருக்குவதன் மூலமாக நம்முடைய மாநிலத்தினுடைய வளர்ச்சியைப் பெருக்க முடியும். அதற்கு வழிவகுக்க வேண்டும். ஆனால் இன்றைக்கு இருக்கக் கூடிய மீனவத் துறையில், மீன்களை ஏற்றுமதி பண்ணும்போது, ஏற்றுமதி பண்ணுகின்றவர்கள் அண்மையிலே தகராறு பண்ணுகின்றார்கள். மீன்களை ஏற்றுமதி செய்பவர்கள் நிறைய கம்பெனிகள் வைத்திருக்கின்றார்கள். அந்த கடற்கரை ஓரங்களிலே வாழ்கின்ற மீனவர்களைச் சேர்த்துக்கொண்டு அவர்கள் கூட்டம் கூட்டுகின்றார்கள். அந்த ஏழை மீனவர்களுக்காக வருத்தப்பட்டு கூட்டம் போடுகின்றார்கள். அதுவும் தாஜ் கோரமண்டல் ஓட்டலிலே கூட்டம் போடுகின்றார்கள். அவர்கள் ஏழை மீனவர்களுக்காகப் பேசுகின்றார்களாம். அதற்கு அவர்கள் போடுகின்ற கூட்டம், இடம் தாஜ் கோரமண்டல். எப்படிப் பட்ட ஆட்களாக இருப்பார்கள் என்று பாருங்கள். அங்கே போய் "மீனவர் களுக்கு கேரளத்திலே இப்படிச் செய்திருக்கின்றார்கள், கர்நாடகத்திலே இப்படிச் செய்திருக்கின்றார்கள். ஆனால் தமிழ்நாட்டில் ஒன்றுமே செய்ய வில்லை. என்ன செய்வது?" என்று சொல்கின்றார்கள். "நாங்கள் ஏற்றுமதி செய்வதை யாரும் தடுக்கக்கூடாது" என்கின்றார்கள். அதைச் சொல்லத்தான் அவர்கள் அங்கே வருகின்றார்கள். ஏழைகளைப்பற்றிப் பேசுகின்றதாகச் சொல் கின்றார்களே தவிர, அந்த ஏழைகளைப்பற்றி அவர்கள் வருத்தப்படவில்லை. தாஜ் கோரமண்டலில் கூட்டம் கூட்டி, அங்கே நிருபர்களை வரவழைத்து விருந்து கொடுத்து ஏமாற்றிவிடலாம் என்று நினைத்தால் அது நடக்காது.

அப்படி அவர்கள் நடத்தவிடமாட்டார்கள். அது முடியாது. அவர்கள் அ
என்ன சொல்கின்றார்கள்? மீன்கள்மீது வரி போடுவது தப்பு என்கின்றார்கள்
ஏற்றுமதி பண்ணக்கூடிய அந்த மீன்களுக்கு வரியே போடக்கூடாது என்
சொல்கின்றார்கள். தமிழக சர்க்கார் 'பர்ச்சேஸ் டாக்ஸ்' என்
போடுகின்றது. ஐந்து பர்செண்ட் போட்டிருக்கிறது. சர்சார்ஜ் என்
இரண்டு பர்செண்ட் போட்டிருக்கின்றது. டோடல் டர்ன்ஓவரில் இர
பர்செண்ட் போட்டிருக்கின்றார்கள். வரி போடாமல் என்ன செய்ய முடியு
வரி யாருக்குப் போடுகின்றோம்? 'எக்ஸ்போர்ட்' பண்ணுகின்றவர்களு
தான். ரூபாய் 35 கோடி அளவுக்கு 'எக்ஸ்போர்ட்' பண்ணுகின்றவர்களு
வரி போடுகிறோம். 35 கோடி ரூபாய் அளவுக்கு 'எக்ஸ்போர்ட்' ஆகி
இரண்டு வருடங்களுக்குள்ளே இன்னும் 'இம்ப்ரூவ்' பண்ணி 200 கோ
ரூபாய்க்கு 'எக்ஸ்போர்ட்' பண்ணுவோம் என்று அவர்களே சொல்கின்றார்
இன்னும் சும்மா விட்டால், கடலையே பதம் பார்த்துவிடுவார்கள். அந்தமா
நிலைமைகள் இருக்கின்ற, அப்படி வருமானம் இருக்கக்கூடிய துறை
தமிழக சர்க்காருக்கு வருமானம் கிடைக்க அவர்கள் வரி கொடுக்க மு
மாட்டேன் என்கின்றார்கள். அடிக்கிறது பூராவும் கொள்ளை. அவர்
அடிக்கின்ற கொள்ளை மீனவர்களுக்குப் போய்ச் சேர்கின்றதா?
மீனவர்களுடைய வேலை என்ன? மீன் பிடித்துக்கொடுப்பதுதான்.
வேலை இல்லை. மறுபடியும் கடலுக்குப் போவதுதான் வேலை கடலு
போக வேண்டியது, திரும்பி வரவேண்டியது. திரும்பவும் கடலுக்கு
பிடிக்கப் போவது. இதுதான் வேலை. இந்த இரண்டு வேலைதான் அவ
அவன் என்ன அந்த மீனைச் சாப்பிட்டிருப்பானா? மீன்கள் பூ
வெளிநாட்டிற்கு ஏற்றுமதியாகின்றன. 'பாரின் எக்சேன்ஜ்' கிடை
வாய்ப்புகள் இருக்கின்றன. ஜப்பான், அமெரிக்கா, இங்கிலாந்து இப்படிப்
நாடுகளுக்கெல்லாம் மீன் ஏற்றுமதி ஆகிறது. நல்ல 'பாரின் எக்சே
கிடைக்கிறது. அது 'பாரின் எக்சேன்ஜ்' கொடுக்கக்கூடிய அருமை
தொழில். ஆனால் அந்தத் தொழிலிலேயிருந்து இன்றையதினம் தமிழக
இரண்டு பர்செண்ட், ஐந்து பர்செண்ட் என்று வரி போட்டுக் கேட்கின்
அவர்கள் 'எக்ஸ்போர்ட்' கம்பெனிகள் வைத்துக்கொண்டிருக்கின்றார்
அவர்கள் என்ன சொல்கின்றார்கள்? "நீங்கள் வரி கேட்டால்,
16 ஆம் தேதியிலிருந்து மீன்கள் கொள்முதல் பண்ணமாட்டோம்"
சொல்கின்றார்கள். ஒரே அடி. தாஜ் கோரமண்டலில் ஒரு கூட்டத்தைக்
இந்த சர்க்காரை எந்த அளவுக்குத் திட்ட வேண்டுமோ அந்த அ
திட்டியிருக்கின்றார்கள். ஒரு அன்புதான் அதற்குக் காரணம்.
சும்மா விட்டால் ஒன்றும் சொல்ல மாட்டார்கள். வரி போட்ட





ஆரம்பித்துவிடுகின்றார்கள். நாங்கள் தவறாக என்ன சொல்கின்றோம்? தமிழ் நாட்டின் திட்டங்களுக்கு பணத்திற்கு நாம் எங்கே போகிறது? ரூபாய் 35 கோடி அளவிற்கு மீனை 'எக்ஸ்போர்ட்' பண்ணுகின்றார்கள். அவர்கள் இதனால் எப்படி பாதிக்கப்படுகின்றார்கள் என்று சொல்லக்கூடாதா? "கேரளாவிலே வரி போட்டார்கள், நாங்கள் சுப்ரிம் கோர்ட்டிலே ஸ்டே வாங்கியிருக்கிறோம்" என்கின்றார்கள். அப்படி சுப்ரிம் கோர்ட்டிலே ஸ்டே வாங்கியிருந்தால், இங்கே வரி போடக்கூடாதா? வரி போடக்கூடாது என்று அர்த்தமா? 'உங்களுக்குத்தான் ஆட்கள் இருக்கின்றார்களே. கோர்ட்டிலே தடை வாங்கியிருந்தால், வேண்டுமானால் இங்கேயும் கோர்ட்டிலே போட்டு ஸ்டே வாங்கிக்கொள்ளுங்கள். நினைத்தவுடனே வாங்கலாம். சர்க்காரிலே ஒரு உத்தரவு போட்டால், ஸ்டே பண்ணுவதற்கு என்று இருக்கின்றார்கள். கோர்ட்டிலே அதுவரையும் கீழே இறங்காதவர்களும் இருக்கின்றார்கள். அப்படி பல பேர்கள் உட்கார்ந்துகொண்டிருக்கின்றார்கள். அங்கே போய் ஸ்டே வாங்கவேண்டியதுதானே. நிதி ஆதாரங்களைப் பெருக்குவதற்கு வரி போடுவதிலே தவறு கிடையாது. நல்ல லாபம் சம்பாதிக்கின்றார்கள். ஒன்றும் இல்லாத ஆட்களாக இருந்தார்கள். டிப்ளமோ படித்துவிட்டு, நம்முடைய இன்ஸ்டிடியூட்லே படித்துவிட்டுப் போனவர்கள் இன்று எப்படி இருக்கின்றார்கள்? நமக்குப் பார்த்தால் தெரியும். விசாக்லே கோடீஸ்வரர்களாக உட்கார்ந்துகொண்டிருக்கின்றார். எப்படி அப்படி கோடீஸ்வரனாக வளர்ந்திருக்கின்றான்? இந்த மீன்களை ஏற்றுமதி பண்ணுவதிலே, கொள்முதல் பண்ணுவதிலே கோல்மால் பண்ணியிருக்கின்றான். அந்தத் துறையில் சம்பந்தம் இல்லாதவர்கள் எல்லாம் அப்படி இருக்கின்றார்கள். ஒரு ஆள் இருக்கின்றார். முக்கியமான ஆள். எமர்ஜென்சியிலே ஆட்சி கலைக்கப்பட்ட உடனே டிஸ்மிஸ் செய்யப்பட்டார். அவர் 2½ ஆண்டுகாலம் இருந்தார். அவர் 'ஆண்டி டேட்' போட்டு ஆர்டர் வாங்கி சேர்ந்தார். அதற்குப் பிறகு அவர்கள் பல நாடுகளுக்குப் போய் சுற்றிப்பார்த்துவிட்டு வந்தார்கள். எல்லாவற்றையும் தெரிந்துகொண்டார்கள். எண்பது லட்ச மதிப்பில் ஒரு 'மெக்சிகன் ட்ராலர்' கூட வாங்கியிருக்கின்றார்கள். இதற்கு லைசென்ஸ் கொடுக்க வேண்டியது மாநில அரசு அல்ல. செண்ட்ரல் கவர்ன்மென்ட். செண்டால் கவர்ண்மென்டுடன் நமக்கு நல்ல உறவு இருக்கும் நேரத்திலே அந்த லைசென்சை வாங்கியிருக்கின்றார்கள். இரண்டு கம்பெனிகள் வைத்திருக்கிறார்கள். ஒன்று கன்சல்டன்சி கம்பெனி. இன்னொன்று ஷிப்பிங் கம்பெனி. பெயரைப் பார்த்தால் புரிந்துகொள்ள முடியாது. வட இந்தியப் பெயராக கம்பெனிக்குப் பெயர் இருக்கும். இந்திப் பெயராக இருக்கும். 'மச்சாய' என்று ஆரம்பிக்கும். அப்படி என்றால் என்ன அர்த்தம்? மச்சம் என்றால்

[திரு. க. சுப்பு] [1985 ஏப்ரல் 9

மீனாம். ஒன்று இந்தி பெயரிலே இருக்கும். அவர் வீடு அசோக் நகரிலேதான்
இருக்கின்றது. இன்னொரு பெயர் என்ன தெரியுமா? சோழமண்டல் ஷிப்பிங்
கம்பெனி. இரண்டும் ஒரே ஆளுடையதுதான். ஒன்று மனைவி பெயரில்
இருக்கும். இன்னொன்று மகன் பெயரில் இருக்கும். என்ன என்று கேட்டால்,
எனக்கும் அவர்களுக்கும் சம்பந்தம் இல்லை என்று சொல்வார்கள். ஏதோ
பினாமியாகப் போட்டு ஆரம்பிப்பார்கள். இது யார்? நம் துறையிலே, நம்
இலாகாவிலே வேலை பார்த்தவர். அவர்கள் டைரக்டர் ஆஃப் பிஷரிஸ் ஆக
இருக்கும்போது, எம்.பி.ஈ.ஏ. மெரைன் புராடெக்ட்ஸ் எக்ஸ்போர்ட்
அத்தாரிட்டியிலே ஜாயின்ட் டைரக்டராக இருந்தார்கள். அந்த நேரத்திலே
ஊரையெல்லாம் சுற்றிப்பார்த்து, அந்த நிலைமைகளை எல்லாம் புரிந்து
கொண்டு, பிறகு ஒரு ஷிப்பிங் கம்பெனி ஆரம்பித்திருக்கின்றார்கள். இப்படி
ஒரு கன்சல்டன்சி கம்பெனி, இன்னொன்று ஷிப்பிங் கம்பெனி. இப்படி ஒரு
ஆள், இரண்டு ஆட்கள் அல்ல. பல ஐ.ஏ.எஸ். ஆபிசர்கள் இப்படிட்
போகின்றார்கள். அந்த மாதிரியெல்லாம் இருக்கின்றார்கள். இப்போது

(பிற்பகல் 12-45)

அவர்கள் சந்திக்கும்போது எப்படி உறவு பிறக்கும்? இதை எல்லாம் மீ
நம்முடைய இலாக்காவுக்கு லாபம் வர வேண்டும். நம்முடைய இலா
காவுக்கு லாபம் வர இப்போதுதான் ஒரு திட்டம் போட்டார்கள். உடனே
ஒரு டெட்-லைன் வைத்திருக்கிறார்கள். 16 ஆம் தேதி இந்த வரியை நீக்கா
விட்டால், மீன்களைக் கொள்முதல் செய்வதை நாங்கள் நிறுத்திவிடுவோம்
என்று 'சேலஞ்ச்' செய்கிறார்கள். ஆனால் ஆசிரியர்கள் டெட்லைன்
வைக்கவில்லை. எனவே, நாங்களே ஏற்றுமதி செய்கிறோமென்று சொல்ல
வேண்டும். ரோட்டிலே உட்கார்ந்து கொண்டு, கள்ளக் கணக்கு எழுதுகிற
வர்கள் செய்கின்ற வேலையை தமிழக சர்க்காரால் செய்ய முடியாதா? அந்த
வேலையை நாம் செய்ய வேண்டும். அதற்கான திட்டங்களைப் போட
வேண்டும். மேலும் பிராசசிங், எக்ஸ்போர்ட் செய்கிறவர்களைத் தொல்லை
பண்ணக் கூடாது. அவர்கள் கஷ்டம் என்று நினைக்கிறார்கள். இதில்
லாபம் வராது என்று நினைக்கிறார்கள். அதையெல்லாம் பரிசீலித்து, அவர்
களை இந்தத் தொழிலிலிருந்து நீக்க வேண்டும். உங்களைத் தொல்லைப்படுத்த
விரும்பவில்லை என்று சொல்ல வேண்டும். அவர்கள் பிராசசிங் பிளான்ட்
வைத்திருக்கிறார்கள். அவற்றுக்கு வேலையில்லாமல் இருக்கும். அவை
ஐடிலாக இருக்கக்கூடாது. எனவே அவற்றுக்கு ஒரு 'நாமினல் லீஸ்
அமெளன்ட்' கொடுத்து, பூராவையும் அரசே எடுத்துக்கொள்ளலாம். அந்தத்
தொழிலில் ஈடுபட்டுள்ள ஆட்களைப் பார்த்தால், பெரிய ஆட்கள்தான். ஆ



1985 ஏப்ரல் 9] [திரு. க. சுப்பு]

இந்தியா லெவலில் பெரிய ஆட்கள். நாம வரி போட்டால், அங்கே ஓடுவது,
அங்கே வரி போட்டால் இங்கே வருவது. மீனைவிட மோசமானவர்கள்.
நழுவின மீனிலே நழுவுகிற மீனாக இருக்கிறவர்கள். அவர்களை இந்தத்
தொழிலிலே விடக்கூடாது. நியாயமாக அவர்கள் வரி கொடுத்தால், அவர்
களுக்கு எல்லாவித ஒத்துழைப்பும் தர வேண்டும். கர்நாடக மாநிலத்தில்
எல்லை ரொம்ப சுருக்கம்தான். அங்கே நம்மைவிட அதிகமாக 'எக்ஸ்
போர்ட்' பண்ணுகிறார்கள். கேரளாவில் அதிகமாக 'எக்ஸ்போர்ட்'
பண்ணுகிறார்கள். நமக்கு அதிக வாய்ப்புகள் இருக்கின்றன. நல்ல முறையில்
செய்தால், நிச்சயமாக வருவாய் அதிகமாகக் கிடைக்கும்.

அடுத்து ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் ரிசைன் பண்ணிவிட்டு, தொழில் பண்ணு
கிறார்கள். அவர்கள் வெளி நாட்டுக்காரர்களோடு தொடர்பு வைத்துக்கொள்
கிறார்கள். அவர்களை முதலில் குண்டர்கள் சட்டத்தின்படி உள்ளே போட
வேண்டும். அரசாங்கச் செலவில் எல்லா ஊர்களுக்கும் போய்விட்டு வந்து,
இப்படிச் செய்கிறார்கள். இங்கே லைசன்ஸ் இல்லாமல், கள்ளச் சாராயம்
காய்ச்சுபவர்களை குண்டர்கள் சட்டத்தின்கீழ் பிடிக்கிறோம். ஆனால்
இவர்கள் நாம் அனுப்பிய காரணத்திற்கு விரோதமாக, அவர்கள் இஷ்டத்
திற்குப் போகிறார்கள். இவர்களையும் நாம் தடுக்க வேண்டும்.

தொழில் துறையில் செய்துள்ள முதலீடுபற்றி டாக்டர் நாவலர் அவர்கள்
சொன்னார்கள். புதிய தொழில்கள் தொடங்க இருக்கிறோமென்றும், 51
கோடி ரூபாய் முதலீடு பற்றியும், ஜாயின்ட் செக்டாரில் தொழில் தொடங்க
இருப்பதுபற்றியும் சொன்னார்கள். நமக்கு இருக்கின்ற வாய்ப்புகளில், எது
எதற்கு லைசன்ஸ் வாங்க வேண்டுமோ, அவற்றுக்கு வாங்குகிறோம். லைசன்ஸ்
வேண்டாமென்று இப்போது மத்திய அரசு சொல்லுகிறது. இதனால் மற்ற
மாநிலத்துக்காரர்கள் வந்து விடுவார்கள். பல தொழிற்சாலைகள் ஆரம்
பிப்பது பற்றிய திட்டத்தைச் சொன்னார்கள். டிட்கோ பற்றிச் சொன்
னார்கள். ஜாயின்ட் செக்டார் தொழில்கள் பற்றிச் சொன்னார்கள். அதில்
கொஞ்சம் யோசனை பண்ண வேண்டும். நாம் முதலீடாக 25 சதவிகிதம்
போடுகிறோம். ஆனால் கன்ட்ரோல் கிடையாது. கன்ட்ரோலை அவன்
எடுத்துக்கொள்கிறான். 'டே-டு-டே அட்மினிஸ்டிரேஷன்' அவன் செய்
கிறான். 'அப்பாயின்ட்மென்ட்' அவன் செய்கிறான். 'அப்பாயின்ட்
மென்ட்' அவனுக்கு, 'டிஸ்அப்பாயின்ட்மென்ட்' நமக்கு. கெட்ட பெயர்
நமக்கு. ஸ்பிக்கில் செய்யப்படும் அப்பாயின்ட்மென்டுகளைப் பார்க்கும்
போது, இப்போதுகூட அதை 'கேன்சல்' பண்ணினால் நல்லது. எல்லாமே,

ஊரான் வீட்டு நெய், என் பெண்டாட்டி கை என்பது போல இருக்கிறது. 25 சதவிகிதம் முதலீட்டை சர்க்கார் போட்டாலும், யார் யாரோ அங்கே உட்கார்ந்திருக்கிறார்கள். தனியார்களை 'ப்ளீஸ்' பண்ண இது பயன்படலாம். அகில இந்தியாவில் இப்படிப்பட்ட பாலிசியைக் கொண்டு வந்ததால், தமிழ்நாட்டிலும் அதைக் கொண்டு வந்தார்கள். நம்முடைய ஷேர் கேப்பிடல் 25 சதவிகிதம். பெயருக்கு ஒருவரை எம்.டி. ஆகப் போடுவார்கள். அவரும் போக மாட்டார். ஏனென்றால், போகாமல் இருக்கத்தானே போட்டிருக்கிறீர்கள் என்று சொல்லுவார். எல்லாமே நாமினல்தான். நிர்வாகத்தை அவர்கள் வைத்திருக்கிறார்கள். எதற்காக அரசு 25 சதவிகிதம் ஷேர் காபிடல் கொடுக்க வேண்டும்? அங்கே 'ப்ளாக் மணி' வருகிறது, 'ஃபிராட்' வருகிறது. இவற்றை எல்லாம் 'ரெட்யூஸ்' பண்ணி, சரியான முறையில் இயங்கச் செய்ய வேண்டும். அகில இந்திய ரீதியிலும் இதே கதைதான். முன்னாள் பாரதப் பிரதமர் அன்னை இந்திரா காந்தி அவர்கள் இருக்கும் போது, இதனால் கஷ்டப்பட்டார்கள். 'பாரின் இண்டியன் நேஷனல்ஸ்' இருக்கிறார்களே, அவர்கள் இங்கே முதலீடு செய்ய ஊக்குவிக்கிறோமென்று சொல்லி, ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். எஸ்கார்ட், டி.சி.எம்.

(பிற்பகல் 12-50)

என்கிற இரண்டுக்கும் முதலில் கொண்டு வந்தார்கள். அவர்கள் பெரிய பெரிய ஆட்கள். நந்தா என்றால் மிகப் பெரியவர். பரசுராம், சிரசுராம், நந்தா இப்படி எல்லாம் ஆட்கள் இருப்பார்கள். நம் ஆட்களை எல்லாம் அவர்கள் பந்தாடுவார்கள். நாம் ஒன்றும் பண்ண முடியாது. போட்டிருக்கிற முதலீடு எவ்வளவு என்றால் 'லெஸ் தேன் 10 பெர் செண்ட்'. டைரக்டர்கள் எல்லாம் யார் என்று கேட்டால், ஒன்றிரண்டு பேரைத் தவிர மற்றவர்கள் எல்லாம் அவர்கள் ஆட்கள். பெரும்பாலும் ரிட்டையர்ட் ஐ.சி.எஸ்., ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைத் தான் டைரக்டர்களாகப் போட்டிருப்பார்கள். மேலும் அவர்களுடைய வீட்டிலுள்ள பெரும்பாலானவர்களை டைரக்டர்களாகப் போட்டிருப்பார்கள். அப்படி டைரக்டர்களாகப் போட முடியவில்லையென்றால், அவர்களுக்கு உத்தியோகம் கொடுப்பார்கள். அந்த மாதிரி ஒரு பரந்த மனப்பான்மை அவர்களுக்கு. மக்களுடைய பணத்தை 'ஸ்விண்டில்' பண்ணுவது, சுரண்டுவது தான் அவர்கள் பண்ணுவதெல்லாம். இது தான் நடப்பது. அந்தமாதிரி 'இன்டஸ்ட்ரீஸ்' வைத்திருப்பவர்களுக்கு 'கேப்டன் ஆப் இன்டஸ்ட்ரீஸ்' என்று பெயர் வேறு வைத்திருக்கிறார்கள். எந்த வகையில் அவர்கள் இன்டஸ்ட்ரீசுக்கு கேப்டன் ஆக முடியும்? அவர்கள் எது செய்தாலும், அவர்களை எதிர்த்து அரசாங்கம் ஒன்றும் கேட்க முடியாது. தங்களுக்குச் சாதகமாக அரசு இருக்கும்வரை பேசாமல் இருப்பார்கள்.



தங்களுக்கு சாதகமாக அரசு இல்லையென்றால், அன்னை இந்திரா காந்தி என்றாலும் கூட, கோர்ட்டுக்குப் போய்விடுவார்கள். அவர்களுக்குச் சாதகமாக அரசு இல்லையென்ற உடனேயே பம்பாயிலே கோர்ட்டுக்குப் போயிருக்கிறார்களே, சுப்ரீம் கோர்ட்டுக்குப் போயிருக்கிறார்களே. 'எக்ஸ்ட்ராரர்டினரி ஜெனரல் பாடி மீட்டிங்' கூட்டியது குறித்து கூட பிரச்சினை ஏற்பட்டதே. இன்றைக்கு பெரிய பெரிய வக்கீல்களாக இருக்கிறவர்கள் எல்லாம், நிமிடத்திற்கு இவ்வளவு ரூபாய் என்று வாங்குகிறவர்கள் எல்லாம் யார்? எல்லாம் கம்பெனி எக்சிகியூட்டிவ்ஸ் தான். இன்றைக்கு பாரதப் பிரதமர் திரு. இராஜீவ் காந்தி அவர்களைக் கிண்டலாக திரு. சரண் சிங் அவர்கள் சொல்கிறார்கள். "திரு. இராஜீவ் காந்தி அவர்களைச் சுற்றியிருப்பவர்கள் எல்லாம் பெரும்பாலும் கம்பெனி எக்சிகியூட்டிவ்ஸ், அவர்களுக்கு கிராமங்களைப்பற்றி ஒன்றுமே தெரியாது" என்று திரு. சரண் சிங் சொல்லியிருக்கிறார். "எருமை மாட்டுக்கும் கறுப்பு நிறப் பசுவுக்கும் வித்தியாசம் தெரியாதவர்கள் எல்லாம் ஆலோசனை சொல்கிறார்கள்" என்று அவர் மேலும் சொல்லியிருக்கிறார். அதையெல்லாம் நாம் விட்டு விடுவோம்.

இன்றைக்கு பப்ளிக் செக்டாரில் இருக்கின்ற டிட்கோ, டான்சம், தமிழ் நாடு ஸ்டீல் போன்ற நிறுவனங்களில் எல்லாம் ஏகப்பட்ட தகராறுகள். ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை அங்கெல்லாம் டைரக்டர்களாகப் போடுகிறார்கள். அவர்கள் எது வேண்டுமானாலும் செய்கிறார்கள். முதலமைச்சருடைய அறையில் இல்லாத வசதிகளை எல்லாம் அவர்களுடைய அறையில் செய்கிறார்கள். அமைச்சர்களுடைய அறைகளிலே கூட ஏர் கண்டிஷன் வசதி இருக்காது. ஆனால் அவர்களுடைய அறைகளில் ஏர் கண்டிஷன், பெடஸ்டல் பேன், அது, இது என்று எல்லா வசதிகளும் செய்திருக்கிறார்கள். அங்கிருந்து அவர்களைக் கூப்பிட்டால், அவர்கள் ரிசைன் பண்ணுகிறார்களே தவிர, மறுபடியும் வேலைக்கு வரமாட்டேன் என்கிறார்கள். ஓர் ஐ.ஏ.எஸ். அதிகாரி டூர் போனார். அப்படியே சிங்கப்பூரில் செட்டில் ஆகிவிட்டார். சிட்கோவில் இருந்து பூராவையும் பார்த்து வருவதற்காக அவர் டூர் போனார். சிங்கப்பூருக்குப் போனவர் அப்படியே டாட்டா கம்பெனியில் ஒரு 'கன்சல்ட்டண்ட்' ஆக உட்கார்ந்து விட்டார். இப்படி டூர் போயிருப்பவர்களை எல்லாம் நாம் பார்த்தால், இங்கிலாந்துக்கு ஒருவர் போயிருக்கிறார் என்றால், அவருக்கு அங்கு ஏதாவது உறவினர்கள் அல்லது 'டாட்டர்' இருப்பார். அவரைப் பார்ப்பதற்காக ஒரு டூர். அப்படியே தொழில் சம்பந்தப்பட்ட அனைத்தையும் பார்த்து வருவதாகப் போய் வருகிறார்கள். அப்படி டூர் போய் வந்த பிறகு நிரந்தரமாக அங்கேயே இருக்கிறார்களா என்றால், அப்படி இருப்பது

மில்லை. அவர்கள் பூராவும் பார்த்து வந்த உடனே, அவர்கள் வேறு இலாகா வுக்கு அனுப்பப்படுகிறார்கள். அப்படி என்றால் எதற்காக அவர்களை டூரில் அனுப்ப வேண்டும்? அதனால் என்ன பலன் ஏற்படும் என்று அறிய விரும்பு கிறேன். அப்படிப்பட்ட ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுடைய பட்டியல் ஒன்றை வைத்திருக்கிறேன். அதைப் படித்தால் நேரம் ரொம்ப ஆகி விடும், அதோடு அப்படிப் படிப்பது சரியில்லை என்று கருதுகிறேன்.

அடுத்து, டான்சம் இருக்கிறது. சிமெண்ட், இரும்பு போன்றவற்றை 'அலாட்' பண்ணுகின்ற முறை இருக்கிறது. ஒரு மானேஜிங் டைரக்டர் ஸ்டாஃப்புக்கு சிமெண்ட் 'அலாட்' பண்ணக் கூடாது என்று உத்தரவு போடு கிறார். அவர் இப்போது மானேஜிங் டைரக்டராக இல்லை. அவர் இல்லாத போது எல்லோருக்கும் சிமெண்ட் 'அலாட்' ஆகிறது. அண்ணா நகரில் எப் பிளாக்கில் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் வீடு கட்டியிருக்கிறார்கள். அவர் களைப்பற்றி நான் பொறாமையால் சொல்லவில்லை. விதிகளை ஐ.ஏ.எஸ். அதிகாரிகளே மீறினால், அதன் பயன் சாதாரண பொதுமக்களுக்கு எப்படிப் போய்ச் சேரும்? சிமெண்ட் கட்டுப்பாடு பூராவும் நம்மைப் போன்றவர்களுக்கு மட்டும் தான். ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் வீடு கட்டும்போது, எங்காவது சிமெண்ட் கட்டுப்பாடு வந்திருக்கிறதா? யாராவது அப்படிக் கேள்விப்பட்டிருப் பார்களா? அதுபோல் பிளான் அப்ரூவல் வாங்குதல், இம்பிளிமெண்டேஷன் பண்ணுதல் எல்லாவற்றிலும் அவர்களுக்குத் தடை எதுமில்லை. போலீஸ் ஸ்டேஷன் எதிரில் வீடு கட்டுவது வேறு. ஏனென்றால் யாரும் பார்க்க கூடாது அல்லவா? எவ்வளவு பெரிய ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் எல்லாம் ரூல்லை மீறு கிறார்கள். அப்படிப் பண்ணக் கூடாது. அது நியாயம் இல்லை. ரூல்லைப் பாதுகாக்க வேண்டியவர்களே அவற்றை மீறினால் எப்படி? பொதுமக்களுக்கு சிமெண்ட் வேண்டுமென்றால், ரெஜிஸ்ட்ரேஷன் பண்ண வேண்டும். அவர்கள் தங்கள் பெயரைப் பதிவு செய்து கியூவில் நின்று சிமெண்ட் வாங்குகிறார்கள். ஆனால் மயிலாடுதுறையில் கல்யாணசுந்தரம் என்பவர் சிமெண்ட் வேண்டு மென்று பெயரைப் பதிவு செய்து பணத்தைக் கட்டுகிறார். பிறகு அவரே சிமெண்ட் வேண்டாம் என்று சொல்கிறார். பிறகு அதே அலாட்மெண்டில் ரிட்டையர்ட் ஐ.ஏ.எஸ். அதிகாரி ஒருவருக்கு சிமெண்ட் 'அலாட்' ஆகிறது. அவர் மதுரா பாங்கியில் அக்கவுண்டிலிருந்து பணத்தைக் கட்டுகிறார். எப்படி ஐயா இன்னொருவர் பெயரில் இருக்கும் அலாட்மெண்டுக்குப் பணத்தைக் கட்டினீர் என்று கேட்டால், 'என்கொயரி' பண்ண ஓர் அதிகாரி உட்கார் கிறார். 'என்கொயரி' பண்ணியவரும் ஓர் அதிகாரிதானே. வர்க்கம் வர்க்கத்தோடுதானே சேரும். அவர் சொல்கிறார், "இதனால் அரசுக்கு



இழப்பு இல்லை" என்று. அது முறைகேடு அல்ல என்று நம்மையெல்லாம் எவ்வளவு சாமர்த்தியமாக ஏமாற்றுகிறார்கள். கல்யாணசுந்தரம் சிமெண்ட் வாங்கினாலும் அந்தக் காசுதான் வரும், சுப்பிரமணியம் சிமெண்ட் வாங்கி னாலும் அந்தக் காசுதான் வரும், ஆகவே இதனால் அரசுக்கு இழப்பு ஒன்று மில்லை என்கிற முறையில் மிக சாமர்த்தியமாய் சொல்கிறார். ஐ.ஏ.எஸ். அதிகாரியை எப்படி, யார் கேட்பது? 'போர்ட் ஆப் டைரக்டர்ஸ் எல்லோரும் அவர்கள்தான். எப்படி அவர்களைக் கேட்க முடியும்?

அடுத்து, ஒரு 'அப்பாயின்ட்மெண்ட்' போடச் சொல்கிறார்கள். டெல்லி தமிழ்நாடு ஹவுசில் வேலை பார்க்கிற ஒரு அதிகாரியினுடைய மகளுக்கு அந்தப் பெண் 'அப்ளை' பண்ணும்போது சொல்கிறார் "என் அம்மா, அப்பா மெட்ராசில் இருக்கிறார்கள், நான் மட்டும் தனியாக டெல்லியில் இருக்கிறேன், அதனால் எனக்கு அப்பாயின்ட்மெண்ட் மெட்ராசில் கொடுக்க வேண்டும்" என்று.

(பிற்பகல் 12-55)

"என் அம்மா சென்னையில்தான் இருக்கிறார்கள். அதனால் எனக்கு சென்னையிலேயே அப்பாயின்ட்மெண்ட் கொடுங்கள்" என்கிறது அந்தப் பெண். அப்பா டெல்லியில் இருக்கும்போது, அம்மா சென்னையில் இருக்குமா? டெல்லியில்தான் இருப்பார்கள். ஆனால் அப்ளிகேஷனில் போடுவது 'சென்னை' என்று. அங்கே இருக்கிற அதிகாரிகள் அடிக்கடி டெல்லி செல்லவேண்டும். ஆகவே ஏகதாட்சண்யத்திற்காக அவர் பெண் ணுக்கு சென்னையில் வேலை செய்ய ஆர்டர் கொடுக்கிறார்கள். அந்த நிறுவன சேர்மன், "இந்தப் பெண்ணை டான்சேம்-மிலோ அல்லது இதர துறைகளிலோ நியமனம் செய்யுங்கள்" என்று எழுதுகிறார். அந்த நோட்டை 'போர்டு ஆப் டைரக்டர்ஸ்' கூட்டத்தில் வைக்கிறார்கள். அங்கே அதைப் படிக்கிறார்கள். சிபாரிசு செய்தது சேர்மன். மறுப்பார்களா? அங்கும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள்தான் இருக்கிறார்கள். ஆகவே போடுங்கள் என்று வேலை போட்டுக் கொடுத்துவிடுகிறார்கள். எந்த ரூல்சும் கிடையாது. இதைக் கேட்டவுடன் தொழிற் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் சும்மா இருப்பார் களா? அமைச்சருக்கு ரிப்போர்ட் கொடுக்கிறார்கள். அமைச்சரும், "இப்படி நீங்களாகவே எப்படி வேலை போட்டுக் கொடுக்க முடியும்? எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்ச் மூலம் வந்தாரா?" என்று விசாரித்ததும், உடனே அந்தப் பெண் வேலையைவிட்டு எடுக்கப்பட்டு விடுகிறார். இதில் வேடிக்கை என்னவென்றால், மறுபடியும் அந்தப் பெண்ணை அங்கே வேலைக்கு நியமித்துவிட்டார்கள். இந்த முறை எப்படி? அவர் நம்பர்

[திரு. க. சுப்பு] [1985 ஏப்ரல் 9

எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்சிலிருந்து வந்தது என்றார்கள். 1982-ல் பதிவு செய்தவர், அதுவும் பார்வர்டு கம்யூனிட்டியைச் சேர்ந்தவர், எப்படி வந்தார் என்றால், அவர் பார்வர்டு கம்யூனிட்டி, அதனால் அவர் பார்வர்டுக்கு வந்தார் என்றார்கள். அதுதான் வேடிக்கை. நம்மை எவ்வளவு தூரத்திற்கு ஏமாற்றுகிறார்கள், பாருங்கள். எப்படி இதுமாதிரி செய்கிறார்கள் என்கிறீர்களா ? நாம் இரண்டு மூன்று மாதம் ஊரில் இருக்கமாட்டோம். அப்போது மறுபடியும் 'அப்பாயிண்ட்மெண்ட்' செய்து விடுகிறார்கள். ஆனால் எதிர்க் கட்சிகள் ஆளுங்கட்சி என்ன தவறு செய்கிறது, கவர்ன்மெண்ட் என்னென்ன தவறு செய்கிறது என்று பார்க்கிறார்களே தவிர, நிர்வாகத்தில் உள்ள ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் என்னென்ன தில்லுமுல்லு செய்கிறார்கள் என்று பார்ப்பதில்லை. அப்படி அவர்களை எதிர்க் கட்சிகள் கண்காணித்தால், அவையில் இருப்பவர்கள் எல்லோரையும் கவனிக்கிறார்கள், அவர்களுக்கு எல்லா விஷயமும் தெரிந்திருக்கிறது என்று அச்சப்படுவார்கள். அப்படி அவர்களுக்கு அச்சம் இருந்தால், நிர்வாகம் ஒழுங்காக நடக்கும். அமைச்சர் அளவில் விளக்கம் கேட்டு அதிகாரிகளுக்கு நோட்டீஸ் போனவுடன், ரூல்லை மீறி வேலையில் சேர்த்தவர்களையெல்லாம் ஊஸ்ட் செய்துவிட்டார்கள். ஆனால் மறுபடியும் அதே பெண்ணுக்கு 'அப்பாயிண்ட்மெண்ட்' ஆகிவிட்டது. 'ரெகுலரைஸ்' செய்தாகிவிட்டது. யார் செய்தது ? எப்படி வந்தது ? இதையெல்லாம் 'என்கொயரி' செய்தால் அதிகாரிகள் மாட்டிக்கொள்வார்கள். இதில் நாம் வருத்தப்பட்டு என்ன செய்ய முடியும் ? அதிகாரிகள் இப்படி இருந்தால், நாம் அவர்களை வைத்துக்கொண்டு எப்படி வேலை வாங்குவது ? அதில் எவ்வளவு சிரமம் என்பது புரியும். இதேமாதிரி இன்னொரு இடத்தில் ரிட்டயர் ஆன ரயில்வே அதிகாரி அப்பாயிண்ட்மெண்ட் செய்யப்படுகிறார். அங்கேயும் ரூல்லை குளோஸ் செய்துவிட்டார்கள். என் ஐயா அவரைப் போட்டாய் என்று கேட்டால், அவரை டிஸ்மிஸ் பண்ணிவிடுகிறார்கள். ஆனால் மறுபடியும் 3 மாதத்திற்குப் பிறகு அவரை போஸ்ட் செய்கிறார்கள். அப்படி மூன்று மாதத்திற்குள் எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்சு மூலம் இல்லாமலேயே செய்யலாம் என்று ரூல்ஸ் இருக்கிறது. ஒரு முறையோடு அவர் போய் விடுகிறாரா என்றால் இல்லை. தொடர்ந்து நீட்டித்துக் கொண்டேயிருக்கிறார்கள். இது எதைக் காட்டுகிறதென்றால், அமைச்சரே சொன்னாலும், அதை மீறி நெளிவு சுளிவோடு அதிகாரிகள் வேலை செய்கிறார்கள். அப்படி நெளிவு சுளிவு கற்றுக்கொண்ட அதிகாரிகள் நம்மிடையே தான் இருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் பதவியில் இருப்பது ஐந்தாண்டுக் காலம்தான். ஆனால் அவர்கள் 58 வயதுவரை இருக்கிறார்கள். இவர்களால் எங்கே போனாலும் கம்யூனிட்டி இன்ட்ரஸ்ட்



1985 ஏப்ரல் 9] [திரு. க. சுப்பு]

வந்துவிடுகிறது. அவர்களுக்கு வேண்டாதவர்கள் எங்கே இருந்தாலும் அவரை நீக்குவதற்கு என்னென்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்கிறார்கள். அதுமாதிரி நடக்கக் கூடியவர்களிடம் நாம் விழிப்புணர்ச்சியோடு இருந்துகொள்ள வேண்டும். நம்மிடம் பிரைவேட் செகரட்டரியாக இருந்தவர்தானே. இவருக்கு எப்படியாவது ஐ.ஏ.எஸ். வாங்கிக் கொடுத்துவிட வேண்டும், எத்தனை பேராக இருந்தாலும் அவர்களை ஓவர்லுக் செய் என்று அவருக்கு ஐ.ஏ.எஸ். வாங்கிக் கொடுத்து விடுகிறார்கள். அதற்கேற்ப ரூல்லை 'ரிலாக்ஸ்' செய்கிறார்கள். 'ஆண்ட்டி டேட்' போட்டு ஆர்டர் போடப்பட்டு அவர் நியமிக்கப்படுகிறார். அவர் எப்படி ஒழுங்காக இருப்பார் ? எப்படி ஒழுங்காக இருக்க முடியும் ? இருக்க முடியுமா ? அவர் ஒழுங்காக இருக்கக் கூடாது என்பதற்காகத்தானே இப்படி 'ஓவர்லுக்' செய்து போட்டார்கள். அவர் ஒழுங்காக இருந்தால் அவர் துரோகம் செய்கிறார் என்பதுதானே அர்த்தம். அப்படி 'அப்பாயிண்ட்மெண்ட்' கொடுத்த தானைத் தலைவருக்கு துரோகம் செய்யலாமா? அதனால் என்ன செய்கிறார் என்றால், பிளாக் மணியை எங்கெங்கே ஒயிட்டாக மாற்றலாம் என்று இருக்கிறதோ அங்கங்கே அவர் நுழைந்து விடுகிறார். ஃபிஷரீஸ் கார்ப்பரேஷன் ஏராளமான மீன்களை ஏற்றுமதி செய்கிறது, வேறு பொருட்களை இறக்குமதி செய்கிறது. அதில் கறுப்புப் பணத்தை வெள்ளையாக மாற்ற வழி இருக்கிறது. இந்த மாதிரி தொழில் துறையிலும் ஒரு தவறு நடக்கிறது. தொழில் துறையில் நடக்கும் தவறுகளைக் கேட்கிற தொழில் சங்கக்காரர்களை சப்தம் போடாமல் ரொம்ப பெருந்தன்மையாக வேறு ஊருக்கு மாற்றிவிடுகிறார்கள். 'நீயெல்லாம் இங்கே இருக்கக்கூடாது?' என்கிறார்கள். அவர்கள் மீது ஏதாவது சார்ஜ் ஷீட் போட்டு, டிஸ்மிஸ் கூட செய்கிறார்கள். இதற்கெல்லாம் என்ன செய்ய வேண்டுமென்றால், உண்மையாகவே அங்கே செய்ய வேண்டியதை, வாய் வார்த்தை அல்ல, அதாவது நிர்வாகத்தில் அவர்களுக்கும் பங்கு கொடுக்க வேண்டும். அப்படிச் செய்தால், ஒன்று அங்கே சுத்தமான நிர்வாகம் நடக்கும். இல்லாவிட்டால் அங்கே திருடுகிற பணத்தில் இவனுக்கும் பங்கு கொடுக்க வேண்டியது ஏற்படும். தப்பு பண்ணினால் மொத்தமாகப் பண்ணு, இல்லையென்றால் அந்தப் பக்கம் போகாதே. தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தில் பங்கு கொடுத்து வைத்திருந்தால், குறைகளைச் சொல்வதற்கு வாய்ப்பு இருக்கும். இப்போது அது இல்லை. அங்கே பூராவும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் தான் இருக்கிறார்கள். நல்ல ஆட்களை சேர்மனாகப் போட வேண்டும். அரசியல்வாதிகளைப் போடுங்கள். எதிர்க்கட்சிக்காரர்களை வேண்டுமானாலும் போடுங்கள். இங்கே திரு. பி. டி. ஆர். பழனிவேல்ராஜன் இருக்கிறார். அவரை சேர்மனாகப் போடுங்கள். அவர் நிச்சயமாகத் தப்பு பண்ண

மாட்டார். அரசியல்வாதிகளை தொழிற்சாலைகளில் சேர்மனாகப் போட்டால், நிர்வாகம் ஒழுங்காக நடக்கும். அரசியல்வாதிகளைப் போட்டால் என்ன தவறு நடந்துவிடும்? சும்மாவானும் அரசியல்வாதி தப்பு பண்ணுகிறான் என்று நாமே 'ஹைலைட்' பண்ணுவதால், என்ன நடக்கும்? அதிகாரிகள் நம்மை ஒதுக்கித் தள்ளிவைத்துவிடுகிறார்கள். நாமெல்லாம் பட்ஜெட்டை இன்னும் படிக்கவே ஆரம்பிக்கவில்லை. படிப்பதற்கே இன்னும் ஆரம்பிக்கவில்லையென்றால், எப்போது அதிலுள்ள குறைகளைக் கண்டு பிடிப்பது? இன்னும் எவ்வளவு வருஷம் ஆகும்? எனக்கு இன்னும் ஒரு வருடத்தில் 'டெர்ம்' ஓவராகிறது.

இப்படி இருக்கிற சிக்கலான நிர்வாக அமைப்பில் நாம்தான் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இப்போது புதிதாக ஒன்றைச் சொல்கிறார்கள். மத்திய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், புதிய சகாப்தத்தைப் படைத்து விட்டார் என்கிறார்கள். யார்? திரு. இராஜீவ் காந்தி. அவர்தான் எல்லாருக்கும் வரியில்லாமல் பண்ணிவிட்டாரே என்கிறார்கள். 98 சதவீதம் வரியை பட்ஜெட் வருவதற்கு முன்னே போட்டுவிட்டார்கள். மீதி இரண்டு பர்சென்ட் போடாமல் விட்டுவிட்டார்கள். அதுதானே நடந்திருக்கிறது.

(பிற்பகல் 1-00)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவையின் அனுமதியோடு அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரை மணி நேரமாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

**திரு. சி. இராமலிங்கம்:** அவர் பேசுவது கன்னிப் பேச்சு.

**திரு. க. சுப்பு:** கன்னியைக் காயப்படுத்தாதீர்கள். (சிரிப்பு) இந்த மாதிரி கொள்கைகளிலிருந்து விலகிவிடாமல் பேச வேண்டும். இவ்வளவு பிரச்சினைகளுக்கு மத்தியிலும் எப்படி கொள்கைகளுக்கு உள்ளே நிற்கிறோம் என்று பாருங்கள். அதுதான் சாமர்த்தியம்.

மாண்புமிகு நாவலர்கூட சொன்னார்கள். ஸ்ரீலங்கா தமிழர் பிரச்சினையில் தமிழகம் ஒரே மனிதனாக நிற்கிறது. என்ன நிலை எடுக்க வேண்டும்? அதைத்தான் பேசிக்கொண்டிருக்கிறோம். இங்கேயே நாம் ஒன்றாக இல்லை என்றால், திரு. ஜெயவர்த்தனே எப்படி நமக்குச் சாதகமாக வருவார்? நாம் எல்லாப் பிரச்சினையிலும் ஒன்றாக இருக்க முடியாது. காவிரி நீர்ப் பிரச்சினையில், வேறு பல பிரச்சினைகளில் ஒருமித்த கருத்து வருவது நல்லது. ஆனால் ஸ்ரீலங்கா தமிழர் பிரச்சினை வெளிநாட்டுத்





தமிழர் பிரச்சினையாக இருப்பதால், அதிலேயுள்ள பல்வேறு சிக்கல்களை
உணர்ந்துதான், தமிழக அரசு எல்லோரையும் கூப்பிட்டு, 'நாம் இந்தப் பிரச்
சினையில் ஒரே மனிதனாக நிற்க வேண்டும்' என்று கூறுகிறது. நம்முடைய
'லோகல் பாலிடிக்ஸ்' என்னவாக வேண்டுமானாலும் இருக்கலாம். லோகல்
பிரச்சினைகளில் ஒருமித்த கருத்துக்கு வருவதற்குச் சிரமப்பட்டால்கூட
பரவாயில்லை. இந்தப் பிரச்சினையில் ஒருமித்த கருத்துக்கு நாம் வந்தாக
வேண்டும். அதனால்தான் எல்லோரையும் கூப்பிட்டுப் பேசுகிறதே தவிர
வேறல்ல. அவர்கள் சொல்கிற கருத்து நமக்குத் தெரியாததா? தெரியும்.
இருந்தாலும் கூப்பிடுகிறோம். ஆனாலும் வரவில்லை. இதற்காக அமைக்கப்பட்ட
கூட்டத்திற்கும் வரவில்லை. இதிலே ஜனதாவும், தி.மு.க.வும் ஒன்றாக
நிற்க முடியவில்லை. நிற்பதற்குப் பார்க்க வேண்டும். தேர்தலில் 14
கட்சிகள் ஒன்றாக நிற்க முடிகிறது. நீங்கள் வெற்றி பெறுவதற்கு ஒன்றாக
நிற்க முடிந்தது. ஒரு சீட்டு, 2 சீட்டுகளுக்காக ஒன்றாக நிற்க முடிந்தது.
ஆனால் ஸ்ரீலங்கா தமிழர்களைக் காப்பாற்றுவதற்கு ஒன்றாக நிற்க ஏன்
முடியவில்லை? குறைந்தபட்சம் ஒரு ஒத்த கருத்துக்காவது வர வேண்டும்.
ஏன் அப்படி வர முடியவில்லை? கர்நாடக முதல்வர் மாண்புமிகு திரு.
இராமகிருஷ்ண ஹெக்டே அவர்கள், தென்னக முதல்வர்களை எல்லாம்,
ஸ்ரீலங்கா தமிழர் பிரச்சினை குறித்து பிரதமர் இராஜீவ் காந்தி அவர்கள்
அழைத்துப் பேச வேண்டும் என்று சொல்கிறார். "தமிழ் மக்களுக்கு உதவு
வதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்" என்று சொல்கிறார். ஆனால் நம்
எதிர்க் கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் தனியாகத்தான் போவேன்
என்கிறார். திரு. ஹெக்டே அவர்கள் ஆளைச் சேர்க்கிறார். இவர் ஆளைப்
பிரிக்கிறார். இது என்ன நியாயம்?

தமிழ் ஈழம் வேண்டும் என்று கையெழுத்து வாங்க வேண்டாம் என்று யாரும் சொல்ல மாட்டோம். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் நேற்று நம் எல்லோரையும் அழ வைத்துவிட்டார். கையெழுத்துப் போடுவதால் தமிழ் ஈழம் கிடைக்கும் என்றால், நாங்களும் போடத் தயார். ஆனால் நிலைமை என்ன? கையெழுத்து போடுவதால் ஈழம் கிடைக்குமா, அல்லது அங்குள்ள தமிழர்களுக்கு உதை கிடைக்குமா என்றுதான் பார்க்க வேண்டும். இதனால் சிக்கல்கள் அதிகமாகும். அதைததான் பார்க்க வேண்டும்.

பிரதமர் இராஜீவ் காந்தி தெளிவாகச் சொல்லியிருக்கிறார். தமிழ் ஈழம் வேண்டுமா வேண்டாமா என்பது ஸ்ரீலங்காவில் உள்ள தமிழர்களும், அந்த அரசாங்கமும் முடிவு காணவேண்டிய விஷயம். முடிவு காணவேண்டியது

[திரு. க. சுப்பு] [1985 ஏப்ரல் 9

அவர்கள். ஆனால் அங்கே இருக்கிற தமிழர்களை மனிதாபிமான முறையில் நடத்தவேண்டும் என்று சொல்வதற்கு நாம் கடமைப்பட்டிருக்கிறோம். Hunnia right வயலேட் பண்ணினால், அவர்கள் அகதிகளாக அனுப்பப்பட்டுக்கொண்டிருந்தால், நாம் அதைச் சகித்துக்கொண்டிருக்க முடியாது என்று சொன்னார். அதில் நாங்கள் தலையிட வேண்டியதிருக்கும்.

எனவேதான சொல்கிறேன். ஈழம் வேண்டுமா வேண்டாமா என்று நாம் எப்படி முடிவு செய்ய முடியும்? இவ்வாறு ஸ்ரீலங்கா தமிழர் பிரச்சினையை கட்சி அரசியல் பிரச்சினையாக ஆக்குவது வேடிக்கையாக இருக்கிறது.

தாயகம் திரும்பிய தமிழர்களுக்கு 40 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். அகதிகளுக்கு 66 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. தாயகம் திரும்பிய தமிழர்கள் இங்கேயே நிரந்தரமாக இருக்கப் போகிறவர்கள். அவர்களுக்குக் கடனாகவும், மான்யமாகவும் குறிப்பிட்ட தொகையைக் கொடுக்கிறோம். ஆனால் அகதிகளாக வருபவர்கள் திரும்ப பத்திரமாகப் போகவேண்டும். எனவே அவர்களை பாதிக்கப்பட்ட விருந்தினர்களாகப் பார்க்கிறோம். அதனால்தான் பங்களா தேஷிலிருந்து வந்த அகதிகள் பாகிஸ்தானிலிருந்து வந்த அகதிகள், காஷ்மீரிலிருந்து வந்த அகதிகள் முதலியோருக்கெல்லாம் ஏகப்பட்ட பணம் செலவழித்தோம். அந்த அளவுக்கு இங்கே ஸ்ரீலங்காவி லிருந்து வரும் தமிழ் அகதிகளுக்காக பணம் செலவழிக்க மத்திய அரசாங்கம் முன்வர வேண்டும். பங்களா தேஷிலிருந்து வருபவர்களுக்கு ஒரு மாதிரியும், ஸ்ரீலங்காவிலிருந்து வருபவர்களுக்கு இன்னொரு மாதிரியும் ஏன் செலவு செய் கிறார்கள்? ஏன் இந்த வேறுபாடு? அது வேறு அகதி, இது வேறு அகதி என்று பார்க்கக்கூடாது. இவர்களுக்கும் மத்திய அரசாங்கம் எல்லா உதவி களையும் செய்ய வேண்டும், விரைந்து அதைச் செய்ய வேண்டும்.

ஸ்ரீலங்காவில் நம்முடைய சகோதரர்கள் தாக்கப்படும்போது, நாம் ஒன்றாக இருப்பதற்கு எந்த அளவுக்கு நம்மை நாம் தயார்படுத்திக்கொண் டிருக்கிறோம் என்பதை எடுத்துச் சொல்வதன் வாயிலாகத்தான் நாம் அந்தப் பிரச்சினையை மற்றவர்களுக்குத் தெளிவாக எடுத்துக்கூறி, வெற்றி காண முடியும்.

அதுபோல் வேறு சில கருத்துக்கள் இங்கே சொல்லப்பட்டன. உலக வங்கியில் கடன் வாங்கினார்கள். அதனால் சர்க்கார் மக்களை அடகு வைத்து விட்டது என்று சொல்லப்பட்டது. கடன் எல்லாவற்றிற்கும்தான் வாங்கு கிறோம்.



1985 ஏப்ரல் 9] [திரு. க. சுப்பு]

(பிற்பகல் 1-05)

உலக வங்கியிலிருந்து கடன் வாங்குகிறது. இந்திய சர்க்காரும் வாங்குகிறது. நாமும் உலக வங்கியிலிருந்து வாங்குகிறோம். உலக வங்கி என்பது நாமும் ஷேர் போட்டு நடத்துவது. இந்தியாவுக்கும் அதிலே ஷேர் இருக்கிறது. யாருக்காவது ஒரு நாமினல் ஷேர் இருக்கலாம். அது வேறு விஷயம். எல்லா பாங்குகளையும் நாமா வைத்திருக்கிறோம்? எத்தனையோ பாங்குகள் இருக்கின்றன. யாரோ ஒருவர் கஜூர் வைஸ்யா வங்கி. அவருக்கு வட்டி கொடுக்க வேண்டுமா? வங்கியில் கடன் வாங்காமல் இருந்தால் வட்டி கொடுக்க வேண்டியதில்லை. வட்டி ஏன் கொடுக்கிறோம்? வாங்குகிறோம், கொடுக்கிறோம். அது டெபாசிட் பண்ணுகிற பொது மக்களுக்குப் போக வேண்டாமா? அதுமாதிரி உலக பாங்கு என்பது—சைனா கூட இன்று அப்ளை பண்ணி வைத்திருக்கிறது. சைனாவை சோஷலிஸ்ட் நாடாக நாம் பல பேர் பேசுகிறோம். நாம் அதைவிட சோஷலிஸ்ட்டா? அவர்களும் உலக வங்கியில் சேர வேண்டுமென்று 'அப்ளை' பண்ணி வைத்துவிட்டு காத்துக் கொண்டிருக்கிறார்கள். எதற்காகக் காத்திருக்கிறார்கள்? அந்தப் பணத்தை குறைந்த வட்டியிலோ, சலுகை வட்டியிலோ, மானியமாகவோ வாங்கி வளர்ச்சித் திட்டங்களுக்குப் பயன்படுத்துகிறார்கள். அதுமாதிரி தான் இங்கே நாம் வைத்திருக்கிறோம். பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டம் வைத்திருக்கிறோம். ரோடு போடுவதற்கு செலவழிக்கிறோம். குழந்தை களுக்குச் செலவழிக்கிறோம். இதுமாதிரி எல்லாத் திட்டங்களுக்கும் உலக வங்கியிலிருந்து பணம் கொடுக்கிறார்கள். அந்தப் பணத்தை சலுகை வட்டி யிலே நாம் வாங்கிக் கொண்டிருக்கிறோம். அதிலே பஸ் கட்டணத்தை உயர்த்த வேண்டி வருகிறது. பாங்கில் கடன் வாங்காவிட்டாலும், உயர்த்தித் தான் ஆகவேண்டும். டீசல் விலை உயர்ந்துவிட்டால், பஸ் கட்டணத்தை எப்படி உயர்த்தாமல் இருக்க முடியும்? இங்கே பஸ் கட்டணத்தை கூடுமான வரை உயர்த்தாமல் இருக்க வேண்டுமென்றால், என்ன செய்யலாம்? மத்திய சர்க்கார் பார்த்து உதவி செய்யலாம். இங்கே அசோக் லேலண்டு கம்பெனி இருக்கிறது. பெரிய டன்லப் டயர் கம்பெனி இந்தியாவில் இருக்கிறது. எல்லா டயர் கம்பெனிகளையும் நாட்டுடைமையாக்கிவிடலாம். அப்புறம் இஷ்டம் போல விலையை உயர்த்த முடியாது. இப்போது இஷ்டம்போல விலையை ஏற்றுகிறார்கள். இதுமாதிரி எல்லாவற்றையும் நேஷனலைஸ் பண்ணுகிற வரைக்கும் நமக்குச் சிக்கல்தான். சென்னை நகரத்திலே பஸ் கட்டணத்தை உயர்த்துவது என்பது ரொம்பக் குறைவு. மாணவர்களுக்கு சலுகைக் கட்டணம் அளிக்க வேண்டியிருக்கிறது. அதுபோல் மற்றவர்களுக்கு . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் விரைவாக முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் சில உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். மதிய உணவுக்கும் போக வேண்டியிருக்கிறது.

**திரு. க. சுப்பு:** எனக்குக்கூட பசிக்கிறது. சென்னையிலே இருக்கிற மக்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஓட்டு போடாததால், வேண்டுமென்றே பஸ் கட்டணத்தை உயர்த்தியிருக்கிறார்கள் என்று குற்றம் சாட்டினார்கள். மக்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஓட்டுப் போடாமல் இல்லை. ஒவ்வொரு தெருவிலும் ஓட்டு இருக்கிறது. ஒவ்வொரு வீட்டிலேயும் கூட மாறி மாறி பெண்களும் ஓட்டுப் போடுகிறார்கள் ; ஆண்களும் போடுகிறார்கள். எந்தத் தெருவிலே என்று நாங்கள் விட்டு விட்டா பார்க்க முடியும்? அது நியாயமான விமர்சனம் அல்ல ; அது அநியாயமான விமர்சனம். அது அநியாயம் என்பதை உணர்ந்துதான் சட்ட மன்றத்தில் அப்படி குற்றச்சாட்டு சொல்லவில்லை. அதற்கு நாம் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அடுத்து, பேக்வோர்டு க்ளாஸ் கமிஷனைப்பற்றிச் சொன்னார்கள். ஜாதி உணர்வுகளுக்கு அப்பாற்பட்டு, உண்மையிலே பொருளாதாரத்திலே, சமுதாயத் திலே பின்தங்கி இருப்பவர்களை கை தூக்கி விடவேண்டும் என்பதற்காகத் தான் பேக்வர்ட் கிளாஸ் கமிஷனைப் போடுகிறோம். அதற்குத் தலைவரைப் போடுகிறோம். மெம்பர்களைப் போடுகிறோம். அவர்களே ஜாதியைத்தான் பார்க்கிறார்கள். அவர்கள் எந்த ஜாதியைச் சேர்ந்திருக்கிறார்களோ அந்த உணர்விலே இருந்துதான் அந்த அறிக்கையே தயாராகிறது. என்ன காரணம்? இன்னும் அதற்குள்ளே ஜாதி இருக்கிறது என்று வருத்தப்பட்டார்கள். ஜாதி இருக்கக்கூடாது என்று சொன்னவரையே காணோம். அதனால் ஜாதி களைப் பற்றிப் பேசிப் பேசி எல்லோரும் கம்யூனல் மைன்டெட்டாக ஆகிவிட் டார்கள். அது ரொம்ப வருந்தத்தக்கது. படித்தவர்கள், பண்பாளர்கள் எல்லோரும் கடைசியிலே செக்ட், சப் செக்ட்-க்கு வந்து விட்டார்கள். மதிப் பிற்குரிய திரு. பழனிவேல்ராஜன் அவர்கள் கூட அப்போது சொன்னார்கள். " நாங்கள் காலையில்கூட முதலியார் மன்றம் நடத்தினோம் " என்று சொன் னார்கள். அவர் சும்மா ஒரு விளையாட்டாகப் பேசுகிறார். அங்கே அவர்கள் பேசுவதை வைத்துச் சொன்னார்கள். இது நாம் விளையாட்டாகச் சொல்வது. இப்போது இது வினையாக நடந்து கொண்டிருக்கிறது. அவர்கள் சொன்னார்கள், " எங்களை எல்லாம் முற்போக்கான ஜாதியிலே வைத்து விடலாம் " எங்களைக் கேட்டால் ஓரே ஜாதி, தமிழ் ஜாதி என்று வைத்து விடலாம். ஏதாவது ஒரு ஜாதியைப் போட வேண்டுமென்றால்,



தமிழ் ஜாதி என்று வைத்துவிடலாம். அதற்குள்ளே, பொருளாதாரத் துறை யிலே, மற்றத் துறையிலே பின்தங்கி இருக்கிறவர்களை முன்னேற்றுவதற்கு என்ன திட்டம் கொண்டு வரவேண்டுமோ அதைக் கொண்டு வந்தால் நன்றாக இருக்கும். நமக்குள்ளே இந்தக் கேஸ்ட்டைப் பார்த்துப் பார்த்து தகராறுக்கு வந்துவிட்டது. முன்னாள் 9 ஆயிரம் ரூபாய் இன்-கம் லிமிட் வைத்திருந்தார்கள். கிராமங்களிலே இருந்தவர்களுக்கு எல்லாம் அது கிடைத்தது. பல பேர்கள் மெடிக்கல் காலேஜ், இன்ஜினியரிங் காலேஜ்-க்கு வந்தார்கள். கிராமப்புறத்திலே இருந்து ஏன் வருகிறார்கள் என்று நினைத்து, லிமிட்டை மறுபடியும் ஏற்றச் சொல்லிவிட்டார்கள். இந்த மாற்றத்தினால் அது பூராவும் பில்ட்டர் ஆகிவிட்டது. இன்னும் கூட சிந்திக்க வேண்டியது தான். அம்பாசங்கர் கமிஷனோடேயே இந்தப் பிரச்சினை தீர்ந்துவிடாது. குஜராத்திலே இன்னும் தகராறு நடந்து கொண்டிருக்கிறது. குஜராத்திலே ஆன்ட்டி ரிசர்வேஷன் இயக்கம் நடந்து கொண்டிருக்கிறது. இது பூராவும் கம்யூனலாகவே நடந்து கொண்டிருக்கிறது. இதையெல்லாம் மாற்றுவதற்கு இந்த ஜாதிக்குள்ளேயே புதிய ஜாதியைப் புகுத்துகிறார்கள். இதையெல்லாம் மாற்றுவதற்கு என்ன வழி என்பதைச் சிந்தித்துப் பார்த்து, குறைந்தபட்சம் நமக்குச் சலுகைகள் பெறுவதற்கு வேறு எதையாவது பயன்படுத்தலாம். இந்தச் சலுகைகள் உண்மையிலேயே பயன்படுகின்றனவா என்றால், 90 சதவீதம் பயன்படவில்லை.

பின்தங்கிய பகுதிகளில் தொழில்களைத் தொடங்க வேண்டுமென்று சலுகைகள் கொடுக்கிறோம். ஆனால் பின்தங்கிய பகுதிகள் தொழில்களைத் திலே முன்னேறி இருக்கின்றன என்று கேள்விப்படுகிறோமா? ஒரு பத்து வருஷம் சலுகை கொடுக்கிறார்கள் என்றால், அதுவரைக்கும் தொழிலை அங்கே வைத்திருந்து, முடிந்த உடனே தூக்கி வந்துவிடுகிறான். அந்தச் சலுகையை வாங்குகிற வரைக்கும் அங்கே தொழிற்சாலையை வைக்கிறான். சலுகைகளை அடைந்த உடனே ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி, குளோசப் நோட்டீஸ் கொடுத்து விடுகிறான். தொழிலாளியைக் கூட வீட்டுக்குப் போகச் சொல்லி விடுகிறான். இவர் வீட்டுக்கு வந்து விடுகிறார். என்ன காரணம் ? பேக்வோர்டு ஏரியா என்று சொன்னால், வசதிகள் கிடைக் கிறது, வட்டியிலோ, மின்சாரத்திலோ, கடன் வாங்குவதிலோ கிடைக்கிறது. அதைப் பயன்படுத்திக்கொண்டு மறுபடியும் ஓடத்தான் பார்க்கிறார்களே தவிர, உண்மையிலேயே இந்தச் சலுகைகளை வைத்துக்கொண்டு அந்தப் பகுதிகளை முன்னேற்றியிருக்கிறார்களா என்றால், இல்லை. அதைத்தான் நாங்கள் தினந்தோறும் பார்க்கிறோம். லேபர் கோர்ட்டிலே பார்த்துக் கொண்டிருக் கிறோம். எப்படியெல்லாம் நோட்டீஸுகளைக் கொடுக்கிறார்கள் என்று

பார்க்கிறோம். அதையெல்லாம் உண்மையிலேயே மறுபரிசீலனை செய்ய வேண்டியதுதான், கம்யூனல் விதத்திலே. அரசாங்கத்தைப் பொறுத்தவரை முதலாளியாக இருக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை.

(பிற்பகல் 1-10)

அரசாங்கம் முதலாளி என்ற மனப்பான்மையில் செயல்பட வேண்டுமென்று நான் சொல்லவில்லை. ஆனால் ஒரு சமூக நீதியை நிலைநாட்ட, நாம் வகுக்கும் விதிமுறைகளை அமுல்படுத்துவதில் நாமே முதலில் முன்மாதிரியாக இருக்க வேண்டும். அரசாங்கமே ஒரு மாடல் எம்ப்ளாயராக இருக்க வேண்டும். இரண்டாண்டுக் காலத்தில் ஒரு தொழிலாளி 450 நாள் தொடர்ந்து பணியிலிருந்தால், அவன் நிரந்தரமாக்கப்பட வேண்டும் என்று நாம் சட்டம் போட்டால், முதலில் நாம்தான் அதை அமுல்படுத்த வேண்டும். பொதுத் துறையில் இருக்கிற நாம் முதலில் அதை அமுல்படுத்த வேண்டும். அப்படிப்பட்ட தொழிற்சாலைகளுக்குத்தான் அரசு பரிசளிக்க வேண்டுமே தவிர, நிறைய லாபம் சம்பாதித்த தொழிற்சாலைக்குப் பரிசளிக்கக் கூடாது. இன்றையதினம் பல்லவன் போக்குவரத்து நிறுவனத்தில் நட்டம் ஏற்படுகிறது என்றால், அதற்குக் காரணம் என்ன என்பதைப் பார்க்க வேண்டும். அங்கே டிக்கட்டில் ஃபிராட் நடப்பதில்லை. அங்கே வரி ஒழுங்காகக் கட்டப்படுகிறது. சமுதாயத்தில் நலிந்த மற்றும் மெலிந்த பிரிவினருக்குச் சலுகை கொடுக்கிறோம். மாணவர்களுக்குச் சலுகை கொடுக்கிறோம். எனவே நட்டம் ஏற்படுகிறது. இதையெல்லாம் நட்டமாகக் கருதக்கூடாது. இதெல்லாம் சமுதாய நீதிக்காகக் கொடுக்கிற விலை. தனிப்பட்டவர்கள் வேண்டுமானால் லாப நட்டம் பார்க்கலாம். அரசு லாபநட்டம் பார்க்க முடியாது. இந்த நட்டமெல்லாம் நாம் மேற்கொண்டிருக்கிற இலட்சியத்திற்குக் கொடுக்கும் விலை என்று எண்ண வேண்டும். இங்கேயுள்ள மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் பொறுப்பில் இருக்கிற துறைகளில் உள்ள பல்வேறு குறைகளை நான் அறிவேன். மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜெயலட்சுமி அவர்கள்கூட குறிப்பிட்டார்கள். அங்கே அதிகமான அன்ஃபேர் லேபர் பிராக்டிசஸ் நடைபெறுகின்றன என்று குறிப்பிட்டார்கள். ஒருவர் அப்ரெண்டிஸ் ஆக எடுக்கப்படுகிறார். ஒரு வருஷத்திற்குள்ளாகவே அப்பிரெண்டிஸ் கண்டக்டர். பிறகு அப்ரெண்டிஸ் டிரைவர். டிரைவரில் போய் எங்காவது அப்ரெண்டிஸ் டிரைவர் என்று இருக்க முடியுமா? 2 வருஷம், 3 வருஷம் அவர்கள் இம்மாதிரி 'எக்ஸ்பிளாய்ட்' செய்யப்படுகிறார்கள். அங்கே எக்ஸ்பிளாய்டேஷன் டு தி கோர். இதையெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் எடுத்துச் சொன்ன பிறகுதான்,



"அவர்களையெல்லாம் வேலையை விட்டு நீக்கக் கூடாது எல்லோருக்கும் வேலை கொடுங்கள்" என்று சொன்னார். இதையெல்லாம் நான் ஏதோ அமைச்சர் மீது குறையாகச் சொல்லவில்லை. காரணம் நிர்வாகத்தில் இருக்கிற அதிகாரிகளைக் கேட்டால், அவர்கள் அதைத்தான் சொல்வார்கள், 'பாலிசி' என்பது நம்முடையது. இம்ப்ளிமென்டேஷன்தான் அவர்களுடையது. அரசாங்கம் போடும் சட்டங்களை முதலில் அரசாங்கம்தான் நிறைவேற்ற வேண்டும். அங்கேயே அந்தச் சட்டங்கள் அமுலாக்கப்படவில்லை என்றால், அவைகள் 'ஸ்கிரேப்' செய்யப்பட வேண்டும். எனவே அப்படிப்பட்ட திட்டங்கள் எல்லாம் செயல்படுத்தப்படும் போக்கு இந்த வரவு-செலவுத் திட்டத்தில் பிரதிபலிக்கப்படுவதால் இதை ஆதரித்து நான் அமைகிறேன்.

* திருமதி வி. ஜெயலட்சுமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதன் முதலாக தமிழக அரசின் நிதிநிலை அறிக்கையின் மீது காங்கிரஸ் கட்சியின் சார்பில் பேசுவதற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். அந்த வாய்ப்பைத் தந்ததற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

நேற்று இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். டி. சீத்தாபதி அவர்கள் மாநில சுயாட்சிபற்றி மிகவும் விளக்கமாகப் பேசினார்கள். மாநில சுயாட்சிபற்றிப் பேச வேண்டிய கால கட்டத்தில் நாம் இருக்கிறோம் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். மாறிவரும் ஒரு சமுதாயத்தில் இது தவிர்க்க முடியாதது. அதுவும் நம்முடைய அரசியல் சாசனம் வகுக்கப்பட்டபோது, இந்திய அரசியலமைப்பும் இந்திய சமூக அமைப்பும், ஒரு மாதிரியாக இருந்திருக்கும். இப்போது 30, 35 ஆண்டுகளுக்குப் பிறகு அதையெல்லாம் மறுபரிசீலனை செய்யும் கால்கட்டம் உருவாகுமானால், எல்லோரும் ஒன்றுகூடி அதை எப்படிச் செய்யலாம் என்பதைப்பற்றி ஆலோசித்து விவாதித்து ஒரு ஒருமித்த கருத்தை உருவாக்கலாம் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

அதைத் தவிர தமிழகத்திலிருந்து செல்கிற அமைச்சர்களுக்கு தேசிய அபிவிருத்திக் குழுவில்கூட மாநில சுயாட்சி தேவை என்பதையும், நமக்கு எவ்வாறு உரிய அதிகாரங்கள் சரியாகக் கொடுக்கப்படவில்லை என்பதையும் எடுத்துக் கூறுவதற்கான வாய்ப்பும் வசதியும் இருக்கிறது என்பதையும் தெரிவிக்க விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல. மத்திய மாநில அரசுகளின் உறவுமுறைகள் எவ்வாறு இருக்க வேண்டும், மாநிலங்களுக்கு எத்தகைய சுயாட்சி உரிமைகள் வழங்கப்படவேண்டும் என்று விவரங்களைச் சேகரிப்பதற்காக என்றே சர்க்காரியாக்

கமிஷன் நியமிக்கப்பட்டிருக்கிறது. எனவே அந்தக் கமிஷன் முன்பு நம்முடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லி நல்லவிதமாக இதற்கு ஒரு முடிவு காணலாம் என்பதை காங்கிரஸ் கட்சியின் சார்பில் இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நேற்றையதினம் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். டி. சீத்தாபதி அவர்கள் பேசும்போது, "காங்கிரஸ் உறுப்பினர்கள் இங்கே இருக்க வேண்டும், யாராவது இருந்தால்தான் என்னால் பேச முடியும்" என்று குறிப்பிட்டார்கள். அவர் பேசி முடிக்கும் வரை நான் இங்கே அவையில் இருந்தேன். நாங்கள் என்ன செய்ய வேண்டுமென்று அவர் நினைக்கிறார் என்று அவர் ஒரு கருத்தும் சொல்லவில்லை. அவர் சொல்லாவிட்டால்கூட பரவாயில்லை. நான் என்னுடைய கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

திரு. ஆர். டி. சீத்தாபதி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் ஒரு கருத்தும் சொல்லவில்லை என்று சொல்கிறார். மத்திய அரசு மாநில அரசுக்கு அதிக அதிகாரம் தர வேண்டும் என்றும் அதற்கு அவர் துணையாக இருக்க வேண்டும் என்றுதான் அழைத்தேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-15)

திருமதி வி. ஜெயலட்சுமி: நன்றி. என்னுடைய ஒத்துழைப்பு எப்போதும் உங்களுக்கு உண்டு.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: கூடுமானவரைக்கும் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். டி. சீத்தாபதி அவர்களின் பெயரைச் சொல்லிப் பேசாமல் இருப்பது நல்லது. பெயரைச் சொன்னால் பிறகு அவர் குறுக்கிட நேரிடும். அதனால் நேரம் ஆகும்.

திருமதி வி. ஜெயலட்சுமி: துணைத் தலைவர் அவர்களே, நான் பேசும் போது குறுக்கீடு இல்லாமல் இருந்தால், என்னுடைய எண்ணங்களை எடுத்துச் சொல்ல வாய்ப்பாக இருக்கும். காங்கிரஸ் கட்சியின் சார்பில் நான் பேசுகிறேன். கட்சிவாரியாக நேரம் ஒதுக்குகிறீர்களா என்று அவை முன்னவர் அவர்களைக் கேட்டேன். அத்தகைய மரபு இங்கே இல்லை என்று சொன்னார்கள். அவரவர்கள் பேச வேண்டிய நேரத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று





சொல்லியிருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஒன்றிரண்டு நபர்கள் பேசுவதால், கணிசமான நேரத்தை எங்களுக்கு ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் மாநில சுயாட்சியைப்பற்றிப் பேசுபவர்கள் மத்தியிலே அதிகாரம் குவிந்து கிடக்கிறது, மாநிலங்களுக்கு அதிகாரம் இல்லை என்று சொன்னார்கள். அதே சமயத்தில் 'Charity begins at home என்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். பதினைந்து ஆண்டுக் காலமாக உள்ளாட்சித் தேர்தலையும், கூட்டுறவுத் தேர்தலையும் நடத்த முடியாத நிலைமையில் நாம் இருக்கிறோம். என்னுடைய கிராமத்திற்கு வேண்டியவைகளைச் செய்ய நான் இங்கே கோட்டையிலேயிருந்து எடுத்துச் சொல்ல வேண்டிய நிலைமை உருவாகியிருக்கிறது. 'கேளுங்கள் கொடுக்கப்படும், தட்டுங்கள் திறக்கப்படும்' என்ற முறையில் கடந்த 11 ஆண்டுக் காலமாக ஏன் இன்னும் தேர்தல் நடத்தப்படவில்லை என்று மக்கள் மன்றம், பொது மேடைகள், இந்த மன்றம் ஆகியவற்றின் மூலமாகக் கேட்டுக்கொண்டதற்குப் பிறகு, நேற்று உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், சீக்கிரம் இந்தத் தேர்தல் நடத்தப்படும் என்ற முறையில் ஒரு மசோதாவை சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்திருப்பதாக அறிகிறேன். அதை என்னுடைய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே வரவேற்கிறேன். மீண்டும் 'கானல் நீர்' போல போகாமல் நிச்சயமாக உள்ளாட்சித் தேர்தல்கள் நடக்கும் என்ற நம்பிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்கள், இந்த அவை முன்னவர் அவர்கள், நிதியமைச்சர் நாவலர் அவர்கள் கொடுப்பார்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் நிதிநிலை அறிக்கையின்மீது விவாதத்தைத் தொடர்கிறேன்.

இதிலே உள்ள நல்ல அம்சங்களை நான் வரவேற்பதோடு, அதை நிறைவேற்றும்போது ஏற்படக்கூடிய ஒரு சில குறைபாடுகளை நான் சுட்டிக் காட்டும்போது, ஆளும் கட்சியினர் வேறுவிதமாக எடுத்துக்கொள்ள மாட்டார்கள் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். குடும்பநல நிதியை 10 ஆயிரம் ரூபாயிலிருந்து 20 ஆயிரம் ரூபாய் என உயர்த்தியிருக்கிறார்கள். இதை நான் உளமார வரவேற்கிறேன். மதிய சத்துணவுத் திட்டத்திற்குக் கணிசமான அளவிற்கு தொகை ஒதுக்கப் பட்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல், உணவும் கொடுத்து கல்வி மேம்பாட்டிற்காகவும், பாடப் புத்தகங்கள் விநியோகிப்பதற்காகவும் 20 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். யூனிஃபார்ம் கொடுக்க நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். இத்தகைய நல்ல பல திட்டங்களை நான் வரவேற்கிறேன்.

[திருமதி வி. ஜெயலட்சுமி] [1985 ஏப்ரல் 9

ஆசிரியர்களுடைய குறைகளைப்பற்றி ஆசிரியப் பெருமக்கள் அனைவரும் எடுத்துச் சொன்னார்கள். 48,000 பணியிடங்களுக்குத் தேவையிருக்கும்போது, 850 பணியிடங்கள் மட்டும் ஏற்படுத்துவதாக இந்த வரவு-செலவுத் திட்டத்திலே சொல்லப்பட்டிருப்பதை நான் பார்க்கிறேன். ஆனால் ஒவ்வொரு வகுப்பறையிலும் தேவைக்கு மேல் மாணாக்கர்கள் மிகவும் அதிகமாக இருக்கிறார்கள். ஒவ்வொரு பிரிவிலும் 80 மாணவர்களுக்குக் குறையாமல் இருக்கிறார்கள். ஒரு பக்கத்திலே வேலையில்லாத் திண்டாட்டம். ஒரு பக்கத்திலே கல்வித் துறையிலே சரியான முறையில் ஆசிரியர்கள் மாணவர் களின் பால் கவனம் செலுத்தி 'கோச்சிங்' கொடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. இதற்கு நிதிப் பற்றாக்குறை காரணம் என்ற வாதம் இங்கே வைக்கப்பட்டிருக்கிறது. கூடுமானவரைக்கும் நிதிநிலை அறிக்கையில் கல்விக்குரிய இடத்தைக் கொடுக்க வேண்டும். கல்விக்காக செலவழிக்கும் தொகை 'நேஷனல் அசெட்' என்று எடுத்துக்கொண்டு உண்மையாகவே கல்வித்துறையில் நல்லபல திட்டங்களைத் தீட்ட வேண்டும்.

1985-86 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் பள்ளிக் கட்டிடங்களுக்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் நம்முடைய தேவை 100 கோடி ரூபாய். பல பள்ளிக் கட்டிடங்கள் ஓலைக் குடிசைகளில் செயல் படுகின்றன. கிழக்கு, மேற்கு இராமநாதபுரம் பகுதிகளில் அநேக பள்ளிகள் ஓலைக் குடிசைகளில்தான் நடக்கின்றன. இத்தகைய நிலை இருக்கும்போது, ஒரு கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது ஏதோ 'கடலில் பெருங்காயம் கரைத்ததைப்போல' இருக்கிறது. ஆகவே கூடுமானவரைக்கும் அதிக நிதி ஒதுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 1-20)

அடுத்து, வேளாண்மைத் துறையைப்பற்றிச் சொல்கிறேன். Agriculture is the base industry என்ற முறையிலே இந்த அரசு நல்லவிதமாகச் செய்ய வேண்டும். வேளாண்மைத் துறைக்கு என்றைக்கு இந்த அரசு முன்னுரிமை கொடுக்கின்றதோ, அன்றைக்குத்தான் இந்த முன்னேற முடியும் என்ற கருத்தை வைத்துக்கொண்டு திட்டங்கள் தீட்ட நாடு வேண்டும். அந்த அளவிலே திட்டங்கள் தீட்டுகின்றார்கள். வேளாண்மைத் துறையைப் பொறுத்தவரையில், நான் இன்னொன்றும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய பேரவை அதிக நாட்கள் நடக்கின்றது. ஆனால் நமது மேலவை குறைந்த நாட்களே நடக்கின்றது. அதுவும் 12 தேதி வரையில் என்று இருந்தது. இப்போது 11 தேதி வரையில் என்று நான் கேள்விப் படுகிறேன்.



1985 ஏப்ரல் 9]

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மேலவை 12 ஆம் தேதி வரையிலும் நடக்கின்றது. 11 ஆம் தேதி வரையில் நிதிநிலைபற்றி விவாதம். 12 ஆம் தேதி சட்ட முன்வடிவுகள்மீது விவாதம் இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி வி. ஜெயலட்சுமி :** சட்டமன்றப் பேரவையிலே மானியக் கோரிக்கைகள் என்று இருக்கின்றன. அவைகளில் பேசுவதற்கு வாய்ப்புக்கள் கிடைக்கின்றன. இங்கே கொள்கைக் குறிப்புகள் வரும்போது பேச வாய்ப்பு இருக்கின்றது. இருந்தாலும் எல்லா உறுப்பினர்களும் பேசுவதற்கு இங்கே வாய்ப்பு கிடைக்காது. ஆகவே இந்த நிதிநிலை அறிக்கையில் பேசும்போது இன்னும் கொஞ்ச நேரம் அதிகமாக எடுத்துக் கொள்ள அனுமதித்தால், நன்றாக இருக்கும். அந்த உரிமையை எடுத்துக் கொள்ள அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக வேளாண்மையைப் பொறுத்தவரையிலே, தமிழகத்தைப் பொறுத்தவரையிலே, இன்னும் நீர் பற்றாக்குறைதான் இருக்கின்றது. முதலிலே நீர் பற்றாக்குறை, இரண்டாவது மின் பற்றாக்குறை என்ற அளவிலே நம் வேளாண்மைத் துறை இருந்துகொண்டிருக்கின்றது. இங்கே நிலத்தடி நீரைப் பயன்படுத்துவதற்கு, நாம் 600 மீட்டர் தூரத்திற்கு பம்புசெட்டு பயன்படுத்த மின் இணைப்பு கொடுக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறோம். ஆனால் அதே 600 மீட்டர் தூரத்திலே மட்டுமல்ல, 100 மீட்டர் தூரத்திலே இன்னொரு கிணற்றிலேயிருந்து ஆயில் என்ஜின்கள் மூலமாக எவ்வளவு வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம் என்று எடுத்துக்கொண்டிருக்கின்றான். மின் இணைப்பு கொடுப்பதற்கு மட்டும்தான் அந்த 600 மீட்டர் என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஆனால் நிலத்தடி நீரை உபயோகப்படுத்துவதற்கு அவன் பெரிய பணக்காரனாக இருந்தால், எத்தனையோ ஹார்ஸ் பவர் வைத்து டீசல் என்ஜின்களைப் போட்டு எடுத்துக்கொள்ளக்கூடிய நிலைமைகள் அங்கே இருக்கின்றன. அந்த 600 மீட்டர் என்ற நிலைமை மின் இணைப்புக்கு மட்டும் என்று இல்லாது, மற்ற வகையிலேயும், கிணறுகளை வெட்டுவதற்கு நில வள வங்கிகளிலே லோன் கொடுக்கும்போதும் நிச்சயமாக இதையும் ஒரு ஆஸ்பெக்ட்டாக எடுத்துக் கொள்ள வேண்டும். அதையும் மீறி சொந்தப் பாசனம் இருக்கின்ற பல பேர் அதிலே ஊடுருவி தங்களுடைய வசதி வாய்ப்புகளை எல்லாம் பயன்படுத்திக்கொண்டிருக்கின்றார்கள். அவனைச் சுற்றி நிலம் வைத்திருக்கின்ற ஏழை விவசாயினுடைய நிலம் பாழ்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஆகவே இதையெல்லாம் அரசு கவனித்துச் செய்ய வேண்டும். கடன் கொடுப்பதற்கு மட்டும் அந்த 600 மீட்டர் தூரம் இல்லை,

[திருமதி வி. ஜெயலட்சுமி] [1985 ஏப்ரல் 9

ரிப்போர்ட்' தெளிவாகச் சொல்லியுள்ளது. மோசமாக ஆடிட் ரிப்போர்ட்டில்
சொல்லப்பட்டுள்ளது. இந்தத் துறையினுடைய அமைச்சர் விழுப்புரத்தில்
பேசும்பொழுது, மத்திய அரசு தன்னுடைய திட்டங்களை எல்லாம் வீணாக்கிக்
கொண்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள்.

**Mr. DEPUTY CHAIRMAN**: There is much noise from the
lobby. People are talking in the lobby. The Sergeant may please
attend to it.

**திருமதி வி. ஜெயலட்சுமி**: நமது மின் துறை அமைச்சர் அவர்கள் மத்திய
சர்க்கார் வீணாக, தேவையில்லா செலவு செய்துகொண்டிருக்கிறது என்று
சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் கலந்துகொண்ட அந்த நிகழ்ச்சியில்
மூன்று நாட்கள் இடைவிடாமல் தொடர்ந்து வளைவுகள் அலங்காரத்திற்கு
மின்சாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர் சொல்லியிருக்கும் முறைகளைப்
பார்த்தால், மத்திய அரசைக் குற்றம் சாட்டும் வகையில் சொல்லியிருக்கிறார்.
இந்த நேரத்தில் அவர் தன்னுடைய இலாகாவை எப்படி நிர்வகிக்கிறார்
என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.
லட்சக்கணக்கான ரூபாய் பெறுமான டிரான்ஸ்பார்மர்கள் மின் வாரியத்திற்காக
இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன. உள்நாட்டில் உள்ளவர்களுக்கு ஆர்டர்
கொடுத்துவிட்டு, குறிப்பிட்ட நேரத்தில் 'இன்ஸ்டால்' செய்யாததால்,
வீணாக அவை முடக்கப்பட்டிருக்கின்றன. மீண்டும் காலம் தாழ்த்தி
அவைகளை சப்ஸ்டேஷன்களில் நிறுவும்போது அவை 'டிபக்டிவ்' ஆக
ஆகிவிடுகின்றன. அத்தகைய பழுதடைந்த டிரான்ஸ்பார்மர்கள் எண்ணிக்கை
ஏராளமாக இருக்கிறது. அதற்குக் காரணம் சொல்லியிருக்கிறார்கள். ஒரு
வருடத்திலிருந்து நான்கு வருட காலமாக . . .

(பிற்பகல் 1-35)

....one to four years in erection of transformers in some cases. The
Board attributed the delays to lack of transport facilities for trans-
porting higher capacity transformers, non-completion of sub-stations
and non-construction of associated transmission lines.

இவ்வாறு 10-11 காரணங்களைச் சொல்லியிருக்கிறார்கள். ஏன் இந்த அளவுக்கு
மெத்தனமாக மின்வாரியம் செயல்படுகிறது என்று தெரியவில்லை. முக்கியமான
காரணங்களாகச் சொல்லியிருக்கிறார்கள்.

"The stock of sick transformers had increased from 692 as on 31st
March 1978 to 1,362 as on 31st March 1980."



1985 ஏப்ரல் 9] [திருமதி வி. ஜெயலட்சுமி]

1980-ல் 1,362 பழுதடைந்த டிரான்ஸ்பார்மர்கள் இருப்பதாகக் கணக்கிட்
டிருக்கிறார்கள். அப்படியானால் 1985-ல் எவ்வளவு இருக்கும்? தெரியவில்லை.
மின்துறையில் பற்றாக்குறை வருகிறது என்பதைப் பார்த்தால் இத்தகைய
சீர்கேடுகளைக் கவனித்து, நல்லமுறையில் நிர்வாகம் செய்திருந்தால்,
இவ்வளவு பெரிய நஷ்டம் ஏற்பட்டிருக்காது என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன். மேலும் அங்கே வாரியத்தில் ஊழியர்களிடையே ஒற்றுமை
இடையாது என்று சொல்கிறார்கள். ரூபாய் 326 கோடிக்கு பட்ஜெட்
தயாரிக்கிறார்கள். ஆனால் டிரான்ஸ்பார்மர்களை எடுத்துச்செல்ல, ஹெவி
டிரைலர்கள் கிடையாது. கல்பாக்கம் அணுமின் நிலையத்தில் இருப்பதை
அவ்வப்போது கேட்டுத்தான் பயன்படுத்துகிறார்கள். இப்படி ஒரு அவலமான
நிலைமை மின்சார வாரியத்தில் இருக்கிறது. ரூபாய் 326 கோடி ஒதுக்கி
யிருக்கிற மின்சார வாரியத்திற்கு, ஒரு ஹெவி டிரைலர் வாங்க முடியவில்லை
என்ற நிலைமை இருப்பதை நான் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.
மேலும் சில அறிக்கைகளை டெக்னிகலாகச் சொல்லியிருக்கிறார்கள். ஒரு
எம்.வி.ஆர். கெபாசிட்டி, எச்.டி. ஃபீடர் லைனை நிறைவேற்றினால், ஒரு
லட்சம் யூனிட் மின்சாரம் வீணாகாமல் பாதுகாக்கலாம் என்று அங்குள்ள
தெர்மல் பவர் தலைமைப் பொறியாளர் தன்னுடைய சூப்பிரெண்ட் இன்ஜினியர்
களுக்குச் சொல்லியிருக்கிறார். ஷன்ட் கெபாசிட்டர் நிறுவாத நிலையில்
எவ்வளவு நஷ்டம் வந்திருக்கிறது என்று சப்-ஸ்டேஷன் வாரியாக அறிக்கை
கொடுத்திருக்கிறார்கள். இவற்றை நான் குறையாகச் சொல்லவில்லை.
இவைகளை நல்ல முறையில் கண்காணித்து குறைகளைக் களைய வேண்டு
மென்பதற்காகச் சொல்கிறேன்.

அடுத்ததாக, கால்நடை வளர்ப்புத்துறை பற்றிச் சில கருத்துக்களைச்
சொல்ல வேண்டும். கால்நடை மருந்தகங்களைப் பொறுத்தவரையில், ஒரு
டிஸ்பென்சரிக்கு ரூ. 2,000 தான் மருந்து வாங்க கொடுக்கிறார்கள். அந்தப்
பணத்திற்குள் எவ்வளவு மருந்துகளை வாங்க முடியும் என்று அங்குள்ள
டாக்டர்கள் கேட்கிறார்கள். ஆகவே ரூ. 2,000-ஐ அதிகப்படுத்தி, விலைவாசி
உயர்வினைக் கணக்கிட்டு, அதிகப் பணம் ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். கால்நடைத் துறையில் பி.வி.எஸ்.சி. படித்தவர்களை வேலைக்கு
அமர்த்துகிறார்கள். சமீபத்தில் 180 பதவிகளை 'அபாலிஷ்' செய்திருக்
கிறார்கள். அப்படி அந்தப் பதவிகளை 'அபாலிஷ்' செய்துவிட்டு
ஸ்டாக்மேன்-னிடம் பொறுப்புக்களைக் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள்
இந்தப் பணத்தில் மருந்துகளை வாங்கி வைத்துக்கொண்டு தனியார்களிடம்
அதிக விலைக்குக் கொடுக்கிறார்கள். பல கால்நடை அதிகாரிகளுக்கு
கிராமங்கள் எங்கே இருக்கின்றன என்றே தெரியாது. டிஸ்பென்சரிகளில்

[திருமதி வி. ஜெயலட்சுமி] [1985 ஏப்ரல் 9

பொதுவாகவே எல்லா வகையிலும் இனிமேல் 600 மீட்டர் அளவிற்கு ஒரு கிணறு இருக்கக்கூடாது என்று ஒரு பொதுவான நிலைமை உருவாகுமானால், நலமாக இருக்கும் என்று இங்கே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அது தவிர 'ரெய்ன் வாட்டர்' என்ற அடிப்படையிலே இந்தத் தண்ணீரைப் பயன்படுத்தினால், குறிப்பாக இராமநாதபுரம், திருநெல்வேலி போன்ற வறட்சி மாவட்டங்களிலே எல்லாம் நல்லவிதமாக நாம் செய்யமுடியும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதாவது 'டிரிப்பிங் வாட்டர் சிஸ்டம்' என்ற ஒரு புதிய முறையைக் கொண்டு எல்லா பயிர்களையுமே சாகுபடி செய்ய முடியாது; குறிப்பாக பலாமரம், தென்னைமரம் போன்றவைகளுக்குத்தான் பயன்படுத்த முடியும் என்று அந்தத் துறையினரிடம் பேசிக்கொண்டிருக்கும் போது கேட்டு தெரிந்துகொண்டேன். அவர்கள் அப்படித்தான் சொல்லியிருக்கின்றார்கள். அப்படி இருக்குமானால், அந்தத் திட்டத்தையும் திறமையாக ஆராய்ந்து பார்த்துச் செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக, ஸ்பிரிங்கிளிங் வாட்டர் Sprinkling Water System பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வறட்சியினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் எவ்வளவு குறைவான தண்ணீர் கிடைக்கிறதோ அந்தக் குறைவான தண்ணீரைக் கொண்டு நிறைய ஏக்கர்களுக்குப் பாசனம் செய்யும் வகையிலே ஏற்பாடு செய்து தர வேண்டும். அப்படிப்பட்ட ஒரு திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஒரு விவசாயி வந்தால், அவன் பெரிய விவசாயியாக இருந்தாலும் சரி, சிறிய விவசாயியாக இருந்தாலும் சரி, பாகுபாடு இன்றி அவர்களுக்கு எந்த உதவிகள் செய்ய வேண்டுமோ அவைகளைச் செய்ய வேண்டும். வங்கிகள் மூலமாகவோ, பஞ்சாயத்து ஒன்றியங்கள் மூலமாகவோ, அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் ஆர்.ஐ.ஈ.பி., என்.ஆர்.ஈ.பி. என்ற முறையிலே கோடிக்கணக்கான ரூபாய்களை நாம் இங்கே செலவழித்துக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லும்போது, கிராமப்புறங்களிலே ஆர்.ஐ.ஈ.பி. உள்ள நிலமற்ற விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுப்பது ஒன்றை மட்டும் குறியாக நாம் எடுத்துக் கொள்ளக்கூடாது. அநேக கண்மாய்கள் தூர்ந்து கிடக்கின்றன. அந்தக் கண்மாய்களைத் தூர் எடுக்கும்போது அதற்கு வருகின்ற சப்ளை சேனல்களையும் Supply Channel சேர்த்து தூர் எடுத்தால் தான், அந்தக் கண்மாய்கள் நிறையக்கூடிய வாய்ப்பு இருக்கும் என்பதைக் கூறுகிறேன். அவ்வாறு டிசில்டிங் என்று புரோகிராம் போடும்போது, அந்தக்



1985 ஏப்ரல் 9] [திருமதி வி. ஜெயலட்சுமி]

கண்மாய்களுக்கு வரக்கூடிய சப்ளை சேனல்களையும் சேர்ந்து தூர் எடுக்க வேண்டும் என்று தலைவர் அவர்கள் மூலமாக நான் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கு எடுத்துச் சொல்கிறேன். அதுவும் தவிர, அரசு எவ்வளவோ நல்ல திட்டங்களைப் போட்டுச் செய்தாலும்கூட, எத்தனை சிறுபாசனத் திட்டங்களை எல்லாம் போட்டுச் செய்தாலும்கூட, அவைகளை நல்லவிதமாகச் செய்யவேண்டும் என்று அமைச்சர் அவர்கள் நினைத்தாலும் கூட, கீழே உள்ளவர்கள் அதை நிறைவேற்றுவதில்லை. அப்படிப்பட்ட நிலைமைகள் இங்கே இருக்கின்றன. அமைச்சர்கள் நல்லவிதமாக

(பிற்பகல் 1-25)

நினைத்தாலும், கீழேயுள்ள அதிகாரிகள் மேலெழுந்தவாரியாக இருக்கிறார்கள் என்பதை ஆடிட் ரிப்போர்ட்டில் பார்த்தால் தெரிந்துகொள்ளலாம். நான் மேலெழுந்தவாரியாக அரசைக் குறை சொல்வதாக நினைக்கக்கூடாது. 1980-81 ஆம் ஆண்டு ஆடிட் ரிப்போர்ட்டில் 'மைனர் இர்ரிகேஷன் பிராஜக்ட்ஸ்' பற்றி சொல்லியிருக்கிறார்கள். திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் சுந்தர தீர்த்தம் என்ற கண்மாயை வெட்டும்போது, 10 லட்சத்து 69 ஆயிரம் ரூபாய் செலவழித்திருக்கிறார்கள். 10 லட்சத்து 69 ஆயிரம் ரூபாய் செலவழித்தும்கூட இன்றைக்கு அது பிரயோசனமில்லாமல், வீணாகியிருக்கிறது என்று ரிப்போர்ட்டில் சொல்லப்பட்டிருக்கிறது. இதைப்போல சந்தையூர்குளம் கிராமத்தில் குளத்தை வெட்டியிருக்கிறார்கள். அதுவும் பீசிபிள் திட்டமில்லை என்று கைவிட்டுவிட்டார்கள். இதைப்போல ஜம்பூத் ஓடை பக்கத்தில் தெற்கால் வெட்டி கிராமத்தில் குளம் வெட்டியிருக்கிறார்கள். ரூபாய் 8.69 லட்சம் செலவு. அதுவும் இன்று பிரயோசனமில்லாமல் இருக்கிறது. தாதகவுண்டன் பட்டியில் 5.79 லட்சம் ரூபாய் செலவழித்து, அதுவும் வீணாகியிருக்கிறது. குளங்கள் பல லட்சக்கணக்கில் விழுங்கி, ஒன்றும் செயல்படாமல் இருக்கின்றன. அங்கே இன்ஜினியர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள்? சீஃப் இன்ஜினியர், இன்வெஸ்டிகேஷன் இன்ஜினியர் ரிப்போர்ட் கொடுத்தால். பீசிபிளா, இல்லையா என்று பார்க்க வேண்டாமா? டெக்னிகல் செல் என்ன செய்து கொண்டிருக்கிறது? இதுபோன்று மேலும் தணிக்கை அறிக்கைகள் வந்தால், இதுபோன்ற குறைகள் எவ்வளவு இருக்கின்றன என்பதைத் தெரிந்து கொள்ளலாம். 1980-81 ஆம் ரிப்போர்ட்டே இவ்வளவு மோசமான நிலைமைகளைத் தெரிவிக்கிறது. பிராஜக்டுகள் நஷ்டத்திலே நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. எனவே இப்படிப்பட்ட திட்டங்கள் வரும்போது, அது பீசிபிளா, இல்லையா என்று பார்த்து, நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சி. இராமலிங்கம்:** 1980-81 ஆம் ஆண்டு ஆடிட் ரிப்போர்ட் பற்றிச் சொல்கிறார்கள். 'சப்ஜெக்ட்.' எந்த வருடம் என்பதையும் சொல்ல வேண்டும்.

**திருமதி வி. ஜெயலட்சுமி:** எந்த ஆண்டு சப்ஜெக்டாக இருந்தாலும், இந்த அரசைக் குறை சொல்வதாக நினைக்கக்கூடாது. இப்படிப்பட்ட ரெவ்யூ ரிப்போர்ட்டுகளை அடிக்கடி வைத்தால் கருத்துக்களை எடுத்துச் சொல்ல வசதியாக இருக்குமென்று சொன்னபோது, கேட்க வேண்டிய இடத்தில் கேட்டு, கொடுக்க வேண்டிய இடத்தில் கொடுத்து விட்டோமென்று அவை முன்னவர் அவர்கள் சொன்னார்கள். பொது நிறுவனமாக இருந்தாலும் சரி, அரசு நிறுவனமாக இருந்தாலும் சரி, இவ்வாறு ஆடிட் ரிப்போர்ட்டுகளில் உண்மையான தகவல்களைக் கொடுத்தால்தான், இந்த மன்றங்களிலே நல்ல முறையிலே விவாதிக்க முடியும். மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் மூலமாகச் சொல்கிறேன், கதர் கிராமக் கைத்தொழில் வாரியம் இன்னும் ஆடிட் ரிப்போர்ட் 'சப்மிட்' பண்ணவில்லை. ஏன் இவ்வாறு அரசாங்க இலாக்காக்கள் செயல்படுகின்றன என்பதைக் கவனித்து, ஒவ்வொரு இலாக்கா வாரியாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் பிற்பகல் 1-30 வரை அவையை நடத்தலாமென்று அபிப்பிராயப்பட்டார்கள். அதற்குள் உறுப்பினரவர்கள் முடித்தால் நல்லது.

**திருமதி வி. ஜெயலட்சுமி:** இன்னும் 10 நிமிடங்களில் முடித்துக் கொள்கிறேன். வருடவாரியான ஆடிட் ரிப்போர்ட்டுகளை இந்த மன்றத்தில் வைத்தால் அதிலுள்ள லாப நஷ்டங்களைச் சொல்வதற்கு வசதியாக இருக்கும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தாபதி அவர்கள் பேசும்போது, காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும் மத்திய அரசுக்குச் சொல்ல வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தார்கள். இதையெல்லாம் அரசு 'ஹைலைட்' பண்ணியிருந்தால், சொல்வதற்கு வசதியாக இருக்கும். மேலும் தமிழக மக்களுக்கு உறுதுணையாக இருக்க முடியுமென்ற அடிப்படையில் இதைச் சொல்கிறேன்.

(பிற்பகல் 1-30)

அடுத்து, தொழில் துறையை எடுத்துக்கொண்டால், மூன்று ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டில் தமிழகத்தில் புதிய தொழில்களைத் தொடங்கப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதே நேரத்தில் மின் பற்றாக்குறையின் காரணமாக 950 தொழிற்சாலைகள் மூடப்பட்டதாக மின்துறை அமைச்சர் சொன்னதாக பத்திரிகையில் செய்தி வந்தது. இப்பொழுது மின்சாரம் என்பது





மிக முக்கியமான ஒரு ரா மெட்டீரியல். இன்றைக்கு மின் பற்றாக்குறை காரணமாக அரசு பல தொழில்களை முடக்கி வைக்க வேண்டிய நிலை இருக்கிறது. சிப்காட், டிட்கோ போன்றவைகள் எல்லாம் எப்படிச் செயல்படுகின்றன என்பதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு இங்கே எடுத்துச்சொன்னார். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். டிட்கோ மூலமாக பல்வேறு தொழில்களை ஆரம்பித்திருக்கிறோம். இங்கே நான் சொல்வதெல்லாம் ஆடிட் ரிப்போர்ட்டின் அடிப்படையில்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். டிட்கோ மூலம் ஆரம்பிக்கப்படுகின்ற ஒவ்வொரு தொழிலையும் 25 பெர்சன்ட் முதலீட்டுடன் தனி நபர்களுடைய முதலீட்டையும் சேர்த்து ஆரம்பிக்கிறோம். இன்றைக்கு டிட்கோவால் ஆரம்பிக்கப்பட்ட தொழில்களைப் பார்த்தால், ஏதாவது ஒரு வகையில் எல்லாத் தொழில்களுமே முடக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. டிட்கோ, டிக் போன்றவற்றின் மூலம் முதலீடு செய்யும்போது, அரசு மிகவும் கவனத்துடன் செயல்பட வேண்டும். மாண்புமிகு அமைச்சர்கள் அறிவில் சிறந்தவர்கள், அனுபவத்தில் முதிர்ந்தவர்கள். ஆனால் ஆடிட் ரிப்போர்ட்டைப் பார்த்தால், எவ்வளவு மோசமாக டிட்கோ இயங்குகிறது என்பதை நாம் அறியலாம். இத்தகைய குறைகளை எல்லாம் களைய வேண்டும்.

அடுத்து, மின் வாரியத்தை எடுத்துக்கொண்டால், 1984-85-ல் 270 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. ஆனால் அந்தச் சரியான வகையில் செலவழிக்காத காரணத்தால், 90 கோடி ரூபாய் 'சரண்டர்' செய்யப்பட்டிருக்கிறது என்கிற செய்தியை நான் பார்த்தேன். எந்த வகையில் செலவழிப்பது என்று தெரியாமல் இப்படி நடந்ததா? அல்லது உள்ளபடியே சரியாகச் செலவழிக்காமல் திருப்பி அனுப்பப்பட்டிருக்கிறதா? அதுபோல் 1985-86-ல் 326 கோடி ரூபாய் மின் வாரியத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பவர் ஜெனரேஷனுக்கு இவ்வளவு, அட்மினிஸ்ட்ரேஷனுக்கு இவ்வளவு என்கிற விவரத்தை எல்லாம் மானியக் கோரிக்கை மூலம் அறிந்துகொள்ளலாம் என்று நினைக்கிறேன். நெய்வேலி நிறுவனத்திற்கு 83 கோடி ரூபாய் பாக்கி இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி என்றால், வருடா வருடம் அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லையா? அல்லது இரண்டு வருடத்தில் இவ்வளவு அக்குமுலேஷன் ஏற்பட்டதா என்று அறிய விரும்புகிறேன். மின் துறையைப் பொறுத்தவரையில், நான் சிறிது கடுமையாக விமர்சித்து விடுவேனோ என்று நான் ஐயப்படுகிறேன். காரணம் இங்கே ஓர் அமைச்சர் மின் துறையைச் சேர்ந்தாற்போல் பல ஆண்டுகளாக கவனிக்கிறார். கடந்த 10 ஆண்டுகளாக இந்தத் துறையில் நடந்துள்ள சீர்கேடுகளைப்பற்றி 'ஆடிட்

[திருமதி வி. ஜெயலட்சுமி] [1985 ஏப்ரல் 9

(பிற்பகல் 1-45)

எனது மாவட்டம் வறட்சியினால் பாதிக்கப்பட்ட ஒன்றாக இருந்தாலும் கூட, தொழில் ரீதியில் முன்னேறி இருக்கிறோம். அதனால்தான் எங்களுக்குக் கொடுக்கப்படுகிற அத்தனை நிதியும் குறைக்கப்படுகிறதோ என்று அச்சப் படுகிறேன். இராஜபாளையத்தைப் பொறுத்தமட்டிலும், நீராற்று ஐயனார் கோவிலிலிருந்து 'வெஸ்ட்டர்ன் காட்' மூலமாக வண்டிப்-பெரியார் வரைக்கும் ஒரு சாலையைப் போட்டு இணைத்துவிட்டால், வீணாகச் சுற்றிக்கொண்டு வருவதால் ஏற்படும் விரயத்தைத் தடுக்க முடியும். ஃப்யூவல் பற்றாக்குறை, பெட்ரோல் பற்றாக்குறை இருக்கிற நேரத்தில் நல்ல ஒரு கணிசமான அளவுக்கு அந்நியச் செலாவணியையும் நாம் மிச்சப்படுத்த முடியும். அதுமட்டுமல்ல, இதன்மூலம் சரக்குகள் போக்குவரத்துக்கும் வசதியாக இருக்கும். அந்த வெஸ்ட்டர்ன் காட் ஏரியாவிலே ரோடு போடுவதற்கு அரசு வசதி செய்து கொடுக்க வேண்டும்.

அடுத்து, சாத்தூரில் நீண்ட நெடுங்காலமாக ஒரு 'இன்டஸ்ட்ரியல் எஸ்டேட்' வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். நிச்சயமாக இந்தத் தடவை கொடுத்துவிடுவார்கள் என்று சொன்னார்கள். ஆனால் என்ன காரணமோ தெரியவில்லை, பல இடங்களுக்கு 'இன்டஸ்ட்ரியல் எஸ்டேட்' பெயர்களைச் சொல்லியும்கூட, சாத்தூர் அதிலே சேர்த்துக்கொள்ளப்பட வில்லை. தயவுசெய்து அமைச்சர் அவர்கள் சாத்தூரையும் அதிலே சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எவ்வாறு சிவகாசி என்று சொன்னால், அச்சுத் தொழிலும், பட்டாசுத் தொழிலும் ஞாபகத்துக்கு வருகின்றனவோ அதுபோல சாத்தூர் என்று சொன்னால், தீப்புத் தொழில் ஞாபகத்துக்கு வரவேண்டுமென்று அறிவுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். முன்னாள் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் தங்கக் கட்டுப்பாட்டுத் திட்டம் கொண்டு வந்தபோது, அத்தனை பொற்கொல்லர்களும் வேலை வாய்ப்பை இழந்தபோது, சாத்தூரிலே இருந்த பொற்கொல்லர்களும் அதைச் சுற்றியிருந்த பொற்கொல்லர்களும் தீப்பு பேக்டரியைத் தொடங்கினார்கள். அந்த தீப்பு பேக்டரிகள் தங்களுக்கு வேண்டிய ரா மெட்டீரியல்லை இன்னும் எம்.எம்.டி.சி.-யிலிருந்துதான் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு எஸ்.எஸ்.ஐ. யூனிட்டிலிருந்து நல்ல சர்ட்டிபிகேட் கொடுத்தால்தான், ஆர்.சி. கொடுக்கிறார்கள். அது வருவதற்கு இரண்டு ஆண்டுக் காலம் ஆகிவிடுகிறது. நடுவிலே உள்ள காலத்திலே வெளியிலே கிடைக்கின்ற எவர்சில்வர் தகடுகளை வாங்கித்தான் அவர்கள் இந்தத் தொழிலைச் செய்துகொண்டிருக்கிறார்கள். அந்தத் தொழிலுக்கு உறுதுணையாக இருக்கும் அந்த ரா மெட்டீரியல்ஸ்



1985 ஏப்ரல் 9] [திருமதி வி. ஜெயலட்சுமி]

உடனடியாகக் கிடைப்பதற்கு—எப்படி இங்கே 'ரா மெட்டீரியல்ஸ் பாங்கு' என்று தீப்பெட்டித் தொழிலுக்கும் மற்றத் தொழிலுக்கும் வைத்திருக் கிறார்களோ, அதுபோல—அந்த தீப்புத் தொழிலுக்கும் ஒரு அமைப்பினை ஏற்படுத்தி, வேண்டிய அனைத்து ரா மெட்டீரியல்லும் கிடைப்பதற்கு அரசு உறுதுணையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் காலையிலே கேள்வி நேரத்திலே போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இருந்தபோது நான் ஒரு பிரச்சினையைக் கிளப்பினேன். இப்போது நம்முடைய மதிப்பிற்குரிய நண்பர் திரு. சுப்பு அவர்கள்கூட என்னுடைய வாதத்தை உறுதிப்படுத்தினார்கள். எனக்குக் கிடைத்த தகவல் தவறாக இருக்கலாம். ஆனால் 52 நாட்களுக்கு ஒருமுறை ஒரு டிரைவரைப் பணியில் அமர்த்துவது, மீண்டும் அந்த 52 நாட்கள் முடிந்த உடன் அவரைப் போகச் சொல்வது என்ற ஒரு ரொட்டேஷனிலே, கண்டக்டர்கள், டிரைவர்களை எடுப்பதாக நான் கேள்விப்பட்டேன். நிச்சயமாக அந்த முறை மிகவும் கெடுதலான முறை. அதோடு மட்டுமல்ல, விலை உயர்ந்த உயிர்களையும், வண்டி களையும் அவர்கள் கையிலே கொடுப்பது மிகவும் ஆபத்தானது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தைப்பற்றி ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். திருநெல்வேலி மற்றும் நாகர்கோவில் போன்ற இடங்களுக்கு நேஷனல் ஹைவேஸ்ஸில் போய்க் கொண்டிருக்கும் பேருந்துகளை நல்ல பேருந்துகளாக விடுவது என்று உறுதி எடுத்திருக் கிறார்களோ என்னவோ தெரியவில்லை. இந்தத் தடங்களைத் தவிர மற்ற இடங்களில் விட்டிருக்கும் திருவள்ளுவர் பேருந்துகள் அனைத்துமே அதில் பிரயாணிகள் உட்கார்ந்து செல்லக்கூடிய நிலைமையில் இல்லை என்பதை நான் மிகவும் வேதனையுடன் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். முக்கியமான தொழில் கேந்திரம் சிவகாசி. அங்கிருந்து சென்னைக்கு, கோவைக்கு இரண்டு அல்லது மூன்று திருவள்ளுவர் பேருந்துகளை விட்டிருக் கிறார்கள். எங்களுடைய ரயில்வே ஸ்டேஷனில்கூட பர்ஸ்ட் கிளாஸை எடுத்துக் கொண்டால், ஆறு பர்த்துக்கள்தான் எங்களுக்கு 'ரிசர்வேஷன்' உண்டு. அதேபோன்று மூன்று டயர் கம்பார்ட்மென்ட்டை எடுத்துக்கொண்டால், 15 பர்த்துக்கள்தான் எங்களுக்கு 'ரிசர்வேஷன்'. ஆக மீதிப் பேர்கள் எல்லாம் மதுரை வந்து மதுரையிலிருந்து பல 'மோட் ஆப் டிரான்ஸ்போர்ட்' மூலமாக சென்னை, கோவை போன்ற நகரங்களுக்கெல்லாம் செல்லுகிறார்கள். முக்கிய வியாபாரக் கேந்திரமாக இருக்கும் ராஜபாளையம், சிவகாசி நகரங்களிலே திருவள்ளுவர் போக்குவரத்துப் பேருந்துகளை இன்னும் கூடுதலாக விரிவு படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையிலே

[திருமதி வி. ஜெயலட்சுமி] [1985 ஏப்ரல் 9

உள்ள நல்ல பல அம்சங்களையெல்லாம் வரவேற்பதோடு, நாங்கள் சுட்டிக் காட்டியிருக்கிற ஒருசில குறைகளையெல்லாம் நல்லவிதமாக நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டு, எனது உரையை முடிக்கிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை 10—4—1985 புதன்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 1-49)

## 6. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

164. இந்துசமய-அறக்கட்டளைகள் சட்டத்தின் 36-வது பிரிவின் வழிவகைகளிலிருந்து திருநெல்வேலி மாவட்டம், திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலுக்கு விலக்களிப்பது குறித்து வணிக வரிகள்-அறநிலையத் துறையின் 1—8—1983 ஆம் நாளிட்ட 860 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து-சமய அறக் கட்டளைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116 (3) பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

165. இந்து-சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் 36-வது பிரிவின் வழிவகைகளிலிருந்து மதுரை மாவட்டம், பழனி, தண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தானத்திற்கு விலக்களிப்பது குறித்து வணிக வரிகள்-அறநிலையத்துறையின் 23—6—1984 ஆம் நாளிட்ட 679 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்துசமய-அறக்கட்டளைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116 (3) பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

166. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்துசமய அறக்கட்டளைகள் சட்டத்தின் 36-வது பிரிவின் வழிவகைகளிலிருந்து சில கோவில்களுக்கு விலக்களிப்பது குறித்து வணிகவரிகள்-அறநிலையத்துறையின் 4—8—1984 ஆம் நாளிட்ட 853 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்துசமய-அறக்கட்டளைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116 (3) பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]



1985 ஏப்ரல் 9]

167. தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளரமைப்பு மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் 25—2—1985 ஆம் நாளிட்ட 190 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.

168. தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகத்தின் 1982-83 ஆம் ஆண்டிற்கான ஒன்பதாம் ஆண்டறிக்கை. (தமிழ் மற்றும் ஆங்கிலம்). (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 (A) பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.)

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

இல்லை.

## இணைப்பு I

[129 ஆம் பக்கத்தில் இனம் 4 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

மேல்நிலைக் கல்விப் பணிக்கென சிறப்பு விதிகள் வழங்கிய அரசாணையின் படி தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்டு 28—4—1981 அன்று பணியில் உள்ள முதுநிலை பட்டதாரி ஆசிரியர்கள், முதுநிலை மொழியாசிரியர்கள் ஆகியோர்களின் பணியினை அவர்கள் அப்பணிக்கு முழுத் தகுதி படைத்தவர்களாக இருப்பின், தமிழகத் தேர்வாணைக் குழுவின் இசைவினைப் பெற்று பணிவரன்முறைப்படுத்தப்பட உள்ளது.

தமிழ்நாடு மேல்நிலைக் கல்விப்பணி விதிகளில் வரையறுக்கப்பட்டுள்ள முழுத் தகுதிகளையும் அப்பணி விதிகள் வெளியிடப்பட்ட நாளாகிய 28—4—1981-ல் பெறாத இந்த வகையைச் சார்ந்த ஆசிரியர்கள் தங்களைத் தகுதி படைத்தவர்களாக ஆக்கிக்கொள்ள தமிழ்நாடு மேல்நிலைக் கல்விப்பணி விதி 11-ன்படி அவர்களுக்கு 30, செப்டம்பர், 1985 வரை கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே, இவ்வகையான தகுதி பெறாத ஆசிரியர்கள் தகுதி பெற்ற பின், 30—9—1985-க்குப் பிறகு தேர்வாணைக் குழுவின் ஒப்புதலுடன் இவர்களது பணிவரன்முறை செய்யப்படும். அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் உள்ளாட்சித்துறை பள்ளிகளிலும் தகுதிபெற்ற ஆசிரியர்களின் பணியை அவர்கள் நியமனம் பெற்ற நாளிலிருந்தே பணிவரன்முறை செய்யப்பட்டு வருகிறது. அதுபோன்று 28—4—1981-க்குப் பின்னர் அரசு பள்ளிகளில் தற்காலிகமாக முதுகலை ஆசிரியர்களாக நியமனம் பெற்றவர்கள் பணியை வரன்முறை செய்வது குறித்து தேர்வாணைக் குழுவுடன் கலந்து பரிசீலிக்கப்படும்.

[1985 ஏப்ரல் 9

## இணைப்பு II

[132 ஆம் பக்கத்தில் 4 (2)-க்கான அடிக் குறிப்பைக் காண்க.)

1977 ஆம் ஆண்டில் மாணவர்களின் முன்னேற்றம் மற்றும் நலத்தைக்
கருத்தில்கொண்டு அவர்களுக்கு உதவித் தொகை வழங்குவதற்கு பள்ளி
மற்றும் கல்லூரிகளில் குறைந்த அளவு வருகை தருதல் வேண்டும் என்ற விதி
யினை நிர்ணயிப்பது நல்லது எனக் கருதப்பட்டது. அதன்படியே 310 எண்
ணுள்ள 4—4—1977 நாளிட்ட சமூக நலத்துறை அரசாணையில், 1977-78 ஆம்
கல்வி ஆண்டு முதற்கொண்டு, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்
துறை மற்றும் பிற்பட்டோர் நலத்துறையால் வழங்கப்படும் 10-ம் வகுப்புக்கு
முன்பும், பின்னரும் கல்வி பயில்வோருக்கு (தங்கிப் பயில்வோருக்கும்
தங்காமல் பயில்வோருக்கும்) வழங்கப்படும் எல்லாவிதமான உதவித் தொகை
களும் மாணவர்களின் 90 சதவீத வருகைக்குட்பட்டே வழங்கப்படும் என்ற
வகையில் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

2. இருப்பினும், கோரிக்கைகள் மாணவர்களிடமிருந்து பெற்றதன் பேரில்
தனிச் சலுகையாக, இவ்விதியினை முறையே, 1979-80, 1980-81, 1981-82 ஆகிய
ஆண்டுகளுக்கு தளர்த்தப்பட்டது. 1982-83 ஆம் ஆண்டுக்கு, அரசு முதலில்
90 சதவீத வருகை நியதி கண்டிப்பாக செயலாக்க வேண்டுமென ஆணை
பிறப்பித்தது. ஆனால், பின்னர் இது தளர்த்தப்பட்டது. எனினும் 90
சதவீத வருகைப் பதிவு நியதி கட்டாயப்படுத்துதல் 1983-84 ஆம் ஆண்டுக்கு
தொடரலாமா வேண்டாமா என்பது தனியாக விரிவான முறையில் பரிசீலனை
செய்யப்பட்டது. 90 சதவீத வருகை விதி என்பது ஆதி திராவிடர், பிற்
படுத்தப்பட்ட மாணவர்களின் முன்னேற்றத்தின் பொருட்டே என்பதாலும்,
ஆதிதிராவிட, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கும் இதர இனத்தைச் சார்ந்த
மாணவர்களுக்கும் இடையே பாகுபாட்டை தவிர்க்கும் பொருட்டும் 90 சதவீத
வருகை நியதி அரசு உதவித் தொகை பெறும் அனைத்து மாணவர்களுக்கும்
நிர்ணயம் செய்ய கருதப்பட்டது. அதன்படியே, 144 எண்ணுள்ள 30—1—85
நாளிட்ட சமூக நலத்துறை, அரசாணையில், மாணவர்கள் முந்தைய ஆண்டு
படிப்பு காலத்தில் 90 சதவீத வருகை தரத் தவறினால், தற்போதைய
படிப்புக் காலத்திற்கு உதவித்தொகை பெறுவதை இழப்பர் என்ற வகையில்
ஆணை பிறப்பிக்கப்பட்டது.

3. இதன் விளைவாக, முன்புபோலவே, 90 சதவீத வருகை விதியினைத்
தளர்த்த வேண்டுமென கோரிக்கைகள் அரசால் பெறப்பட்டுள்ளன. மாண
வர்கள் உண்ணாவிரதப் போராட்டம் தொடங்கியுள்ளனர் என்றும், பல விடுதி
மாணவர்கள் விடுதிக்கான தொகை கட்டாததால், விடுதியிலிருந்து வெளி



1985 ஏப்ரல் 9]

யேற்றப்படும் நிலைக்கு உள்ளாகியுள்ளவர் என்றும் (வழக்கமாக உதவித்
தொகை பணத்திலிருந்து சரிக்கட்டப்படும்) கல்லூரி நிர்வாகம் தேர்வு எழுத
ஹால் டிக்கெட் தர மறுக்கின்றனர் என்றும் அரசின் கவனத்திற்குக் கொண்டு
வரப்பட்டுள்ளது.

4. அரசு, இப்பொருளை கவனமாகப் பரிசீலனை செய்தது. 20 சதவீத
வருகையை கட்டாயப்படுத்துவது, மாணவர் தமது முன்னேற்றத்தைக்
கருதியே என கருதுகிறது. இருந்தாலும், ஆதிதிராவிடர், பழங்குடியினர்,
பின்தங்கிய, மிகவும் பின்தங்கிய குற்றப் பரம்பரையிலிருந்து நீக்கப்பட்ட
வகுப்புகளைச் சார்ந்த மாணவர்களைப் பொறுத்தமட்டில், குறிப்பிட்ட
மாணவர், மாணவியருக்கு மற்றும் மாணவர்/மாணவியரின் வீட்டில் எதிர்
பாராமல் ஏற்படுகின்ற துக்க துயர நிகழ்ச்சிகள், எதிர்பாராமல் ஏற்படுகின்ற
ஆபத்து நிகழ்ச்சிகள், நோய்வாய்ப்படும் நிலைமைகள் ஆகியவற்றை ஒட்டி
தொடர்புடைய கல்வி நிறுவனத் தலைவர்கள் 5 சதவீதம் வரையில் தளர்வு
செய்யலாம் என அரசு முடிவு செய்து அதன்படியே விரிவான உத்தரவுகள்
26—3—1985 நாளிட்ட அரசாணை எண். 824-ல் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

VM 214 No. 3

26-4-1985
எழும்பூர் ... சென்னை-600 008

பொருளடக்கம்

பக்கங்கள்

1. வினாக்கள் விடைகள் .. .. .. 221—241

2. அறிவிப்புகள்—

(1) மேலவை உறுப்பினர் திரு. பா. ரா தாமஸ் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப் படாதது குறித்து .. .. .. 244

(2) கவன ஈர்ப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்ளப் படாதது குறித்து .. .. 245

3. 1985-86 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி 245—369

143948

D

V2l1,32'N85

N85.214.1-3;1

## தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

---

**புதன்கிழமை, 1985 ஏப்ரல் 10.**

பங்குனி 28, ரக்தாட்சி—திருவள்ளுவராண்டு 2016.

சென்னை, செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில், முற்பகல் 10-00 மணியளவில், மாண்புமிகு மேலவைத் தலைவர் **(டாக்டர் ம. பொ. சிவஞானம்)** அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### அனல் மின்நிலையங்கள்.

* 11. வினா—**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர்-திருச்சிராப்பள்ளி பகுதிகளில், அனல் மின்நிலையங்கள் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, நம் நாட்டில் மின் பற்றாக்குறை மிக அதிகமாக இருக்கிறது. இயற்கை பாதிப்புகள் காரணமாக புனல் மின் நிலையங்கள் நமக்குத் தேவையான அளவுக்கு மின்சாரத்தை வழங்குவதற்கு இயலாமல் இருக்கின்றன. எனவே தனியார் துறையில் மின் உற்பத்தி செய்வதை ஊக்குவிக்கும் திட்டத்தைக்கூட அமுல்படுத்தலாமா என்றுகூட அரசு ஆலோசித்துக் கொண்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் இங்கே ஏற்கெனவே விளக்கமளித்திருக்கிறார்கள். தனியார்களுக்கே இத்தகைய முயற்சியில் ஊக்கம் தருவதைவிட அரசுத் தரப்பிலேயே அதிகமான அளவுக்கு அனல் மின் நிலையங்களை உருவாக்கி நமது தேவைக்குப் போதுமான அளவுக்கு மின் உற்பத்தி செய்யும் நடவடிக்கை பற்றி இப்போது எந்தத் திட்டமும் இல்லையென்றாலும் கூட, இனி வருங் காலத்திலாவது அத்தகைய முயற்சிகளை மேற்கொள்ளும் செயற்குறிப்பு

இருக்கிறதா? அதிலும் குறிப்பாக தொழில் வளர்ச்சியில்லாத தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் இத்தகைய மின் நிலையங்களை அமைக்கும் பொருட்டுப் பற்றி எதிர்காலத்திலாவது அரசு பரிசீலனை செய்ய முன்வருமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, தஞ்சை-திருச்சிப் பகுதிகளில் இப்போது இல்லை என்றுதான் சொன்னேன். அனல் மின்நிலையத் திட்டங்களைப் பொறுத்தவரையில், மற்ற பகுதிகளில் ஏற்கெனவே அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. பொதுவாக கடல் வழியாக, இருக்கிற துறைமுகங்கள் மூலமாக நிலக்கரி கொண்டு வருவது எளிதாக இருக்கிறது. அந்த வகையில்தான் அனல் மின் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தஞ்சை-திருச்சி பகுதிகளில் இப்போதைக்கு இல்லை என்றுதான் சொன்னேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** கடல் வழியாக நிலக்கரி கொண்டு வருவது சுலபம் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனாலும் தஞ்சை-திருச்சி பகுதிகளில் இத்தகைய திட்டம் இல்லை என்றும் சொல்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தில் நாகைப் பகுதியில் கடற்கரையும் துறைமுகமும் இருக் கிறது. தஞ்சை மாவட்டத்தில் தொழில் வளம் மிகவும் குறைவாக இருக் கிறது. அது ஒரு விவசாய மாவட்டம். விவசாயத்தை மட்டும் நம்பி யிருக்கிற மாவட்டம். எனவே அந்தப் பகுதியில் கடல்வழி இருப்பதால், நிலக்கரியைச் சுலபமாகக் கொண்டு வரலாம். எனவே இப்போது இல்லா விட்டாலும், வருங்காலத்திலாவது தஞ்சை மாவட்டத்தில் அனல் மின்திட்டம் உருவாக்கி மின் உற்பத்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** நான் என்னுடைய பதிலைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். இல்லை என்பதற்கும், தற்போது இல்லை என்பதற்கும் நிறைய வேறுபாடு இருக்கிறது. சென்னைத் துறைமுகத்தைப் பயன்படுத்தி, சென்னையில் மிகப் பெரிய மின் உற்பத்தித் திட்டம் ஒன்றை உருவாக்க இருக்கிறோம். அதைப்போலவே கடலூர் துறைமுகத்தைப் பயன் படுத்தி அந்தப் பகுதியிலும் ஒரு மின் உற்பத்தித் திட்டத்தை உருவாக்க இருக் கிறோம். நாகைப்பட்டினம் ஒரு துறைமுகமாக இருந்தாலும், அது "சைக் ளோன் புரோன் ஏரியா" என்று சொல்லப்படுகிறது. இருந்தாலும் அதைப் பற்றியும் எதிர்காலத்தில் பரிசீலிக்கலாம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** தலைவர் அவர்களே, அனல் மின் நிலையங் களை அமைக்க தனியார் துறைக்கே கூட அரசு அனுமதி அளிக்கும் என்று சொல்லப்பட்டதே, அப்படி ஏதேனும் தனியார்கள் இத்தகைய மின் உற்பத்தித்



திட்டத்தை மேற்கொள்வதற்கு முன்வந்திருக்கிறார்களா? தனியார் அனல் மின் நிலையங்களை ஏற்படுத்துவது என்பது மிகவும் கஷ்டம். நஷ்டம் ஏற்படும் என்று அவர்கள் கருதுகிறார்கள். எனவே அப்படிப்பட்ட முயற்சியில் ஈடுபடுவோருக்கு அரசு உதவி செய்து மின்நிலையம் அமைக்க வழிவகை காணப்படுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** சென்னையிலிருக்கிற பெரிய தொழில் அதிபர்கள் ஒன்று கூடி தங்களுடைய தொழில் தேவைக்கு ஏற்ப ஒரு அனல் மின் நிலையத்தை உருவாக்க முன்வந்தனர். அதை நாமும் அங்கீ கரித்து, இந்திய அரசுக்குப் பரிந்துரை செய்து அனுப்பியிருக்கிறோம். அவர்களுக்கு இன்னும் அனுமதி கிடைக்கவில்லை. அதில் இலாப நஷ்டம் பார்த்து, அவர்களுக்கு உதவி செய்வது என்பது இயலாத காரியம். அவரவர் களுடைய தேவையை அவரவர்களே நிறைவு செய்துகொள்ள முன்வருவார் களானால், நமக்கிருக்கிற பளு குறையும் என்ற வகையில்தான் இத்தகைய முயற்சிகளை நாம் ஊக்குவிக்கிறோம்.

**திரு. பா. ரா. தாமஸ்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடல் வழிப் பகுதிகளில் அனல் மின் நிலையத் திட்டங்களை உருவாக்குவதில் முன்னுரிமை வழங்கப்படும் என்று தெரிவித்தார்கள். முகவை மாவட்டம் தொழில் துறையில் மிகவும் பின்தங்கிய மாவட்டம். அங்கேயும் கடல்வழி இருக்கிறது. எனவே முகவைப் பகுதியில் மின்நிலையத் திட்டத்தை உருவாக்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** கடலோரப் பகுதிகளைப் பொறுத்தவரையில், வருங்காலத்தில் துறைமுகங்களைப் பயன்படுத்தியாக வேண்டும். அந்தக் கருத்தைத்தான் நான் சொன்னேன். மின் தேவை நமக்கு அதிகமாக அதிகமாக, மின் உற்பத்தியை நாமே பெருக்கியாக வேண்டும் என்று நினைக்கிறபோது, அனல் மின் நிலையங்களைத்தான் உருவாக்க வேண்டும். அப்போது இத்தகைய கடலோரத் துறைமுகங்களைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

(முற்பகல் 10-05)

**திரு. சி. இராமலிங்கம்:** வட சென்னையில் ஒரு அனல் மின் நிலையம் அமைக்கப்படும் என்று ஏற்கெனவே அறிவித்திருந்தார்கள். அது எப்போது அமைக்கப்படும் அதில் காலதாமதத்திற்கு என்ன காரணம் என்று அறிய விரும்புகிறேன்.

இருக்கிறதா ? அதிலும் குறிப்பாக தொழில் வளர்ச்சியில்லாத தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் இத்தகைய மின் நிலையங்களை அமைக்கும் பொருட்டு குறிப்பு பற்றி எதிர்காலத்திலாவது அரசு பரிசீலனை செய்ய முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, தஞ்சை-திருச்சிப் பகுதிகளில் இப்போது இல்லை என்றுதான் சொன்னேன். அனல் மின்நிலையத் திட்டங்களைப் பொறுத்தவரையில், மற்ற பகுதிகளில் ஏற்கெனவே அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. பொதுவாக கடல் வழியாக, இருக்கிற துறைமுகங்கள் மூலமாக நிலக்கரி கொண்டு வருவது எளிதாக இருக்கிறது. அந்த வகையில்தான் அனல் மின் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தஞ்சை-திருச்சி பகுதிகளில் இப்போதைக்கு இல்லை என்றுதான் சொன்னேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** கடல் வழியாக நிலக்கரி கொண்டு வருவது சுலபம் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனாலும் தஞ்சை-திருச்சி பகுதிகளில் இத்தகைய திட்டம் இல்லை என்றும் சொல்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தில் நாகைப் பகுதியில் கடற்கரையும் துறைமுகமும் இருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் தொழில் வளம் மிகவும் குறைவாக இருக்கிறது. அது ஒரு விவசாய மாவட்டம். விவசாயத்தை மட்டும் நம்பியிருக்கிற மாவட்டம். எனவே அந்தப் பகுதியில் கடல்வழி இருப்பதால், நிலக்கரியைச் சுலபமாகக் கொண்டு வரலாம். எனவே இப்போது இல்லாவிட்டாலும், வருங்காலத்திலாவது தஞ்சை மாவட்டத்தில் அனல் மின்திட்டம் உருவாக்கி மின் உற்பத்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** நான் என்னுடைய பதிலைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். இல்லை என்பதற்கும், தற்போது இல்லை என்பதற்கும் நிறைய வேறுபாடு இருக்கிறது. சென்னைத் துறைமுகத்தைப் பயன்படுத்தி, சென்னையில் மிகப் பெரிய மின் உற்பத்தித் திட்டம் ஒன்றை உருவாக்க இருக்கிறோம். அதைப்போலவே கடலூர் துறைமுகத்தைப் பயன்படுத்தி அந்தப் பகுதியிலும் ஒரு மின் உற்பத்தித் திட்டத்தை உருவாக்க இருக்கிறோம். நாகைப்பட்டினம் ஒரு துறைமுகமாக இருந்தாலும், அது "சைக்ளோன் புரோன் ஏரியா" என்று சொல்லப்படுகிறது. இருந்தாலும் அதைப் பற்றியும் எதிர்காலத்தில் பரிசீலிக்கலாம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** தலைவர் அவர்களே, அனல் மின் நிலையங்களை அமைக்க தனியார் துறைக்கே கூட அரசு அனுமதி அளிக்கும் என்று சொல்லப்பட்டதே, அப்படி ஏதேனும் தனியார்கள் இத்தகைய மின் உற்பத்தித்



திட்டத்தை மேற்கொள்வதற்கு முன்வந்திருக்கிறார்களா? தனியார் அனல் மின் நிலையங்களை ஏற்படுத்துவது என்பது மிகவும் கஷ்டம். நஷ்டம் ஏற்படும் என்று அவர்கள் கருதுகிறார்கள். எனவே அப்படிப்பட்ட முயற்சியில் ஈடுபடுவோருக்கு அரசே உதவி செய்து மின்நிலையம் அமைக்க வழிவகை காணப்படுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** சென்னையிலிருக்கிற பெரிய தொழில் அதிபர்கள் ஒன்று கூடி தங்களுடைய தொழில் தேவைக்கு ஏற்ப ஒரு அனல் மின் நிலையத்தை உருவாக்க முன்வந்தனர். அதை நாமும் அங்கீகரித்து, இந்திய அரசுக்குப் பரிந்துரை செய்து அனுப்பியிருக்கிறோம். அவர்களுக்கு இன்னும் அனுமதி கிடைக்கவில்லை. அதில் இலாப நஷ்டம் பார்த்து, அவர்களுக்கு உதவி செய்வது என்பது இயலாத காரியம். அவரவர்களுடைய தேவையை அவரவர்களே நிறைவு செய்துகொள்ள முன்வருவார்களானால், நமக்கிருக்கிற பளு குறையும் என்ற வகையில்தான் இத்தகைய முயற்சிகளை நாம் ஊக்குவிக்கிறோம்.

**திரு. பா. ரா. தாமஸ்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடல் வழிப் பகுதிகளில் அனல் மின் நிலையத் திட்டங்களை உருவாக்குவதில் முன்னுரிமை வழங்கப்படும் என்று தெரிவித்தார்கள். முகவை மாவட்டம் தொழில் துறையில் மிகவும் பின்தங்கிய மாவட்டம். அங்கேயும் கடல்வழி இருக்கிறது. எனவே முகவைப் பகுதியில் மின்நிலையத் திட்டத்தை உருவாக்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** கடலோரப் பகுதிகளைப் பொறுத்தவரையில், வருங்காலத்தில் துறைமுகங்களைப் பயன்படுத்தியாக வேண்டும். அந்தக் கருத்தைத்தான் நான் சொன்னேன். மின் தேவை நமக்கு அதிகமாக அதிகமாக, மின் உற்பத்தியை நாமே பெருக்கியாக வேண்டும் என்று நினைக்கிறபோது, அனல் மின் நிலையங்களைத்தான் உருவாக்க வேண்டும். அப்போது இத்தகைய கடலோரத் துறைமுகங்களைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

(முற்பகல் 10-05)

**திரு. சி. இராமலிங்கம்:** வட சென்னையில் ஒரு அனல் மின் நிலையம் அமைக்கப்படும் என்று ஏற்கெனவே அறிவித்திருந்தார்கள். அது எப்போது அமைக்கப்படும் அதில் காலதாமதத்திற்கு என்ன காரணம் என்று அறிய விரும்புகிறேன்.

[1985 ஏப்ரல் 10

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** வட சென்னை அனல் மின் திட்டத்தைப் பொறுத்தவரையில், 547.79 கோடி ரூபாய்க்கு திட்டம் தயாரிக்கப் பட்டு மத்திய அரசின் மின்சக்தி துறையின் அனுமதி பெற்று திட்டக் குழுவி னிடத்திலே இப்போது இருக்கிறது. திட்டக் குழு அதற்கு அங்கீகாரம் அளித்தவுடன், அந்தத் திட்டம் விரைவிலே தொடங்கப்படும். அந்தத் திட் டத்திற்காக இந்த ஆண்டு ஏதேனும் நிதி ஒதுக்கியிருக்கிறோமா என்று மத்திய அரசிடத்திலிருந்து கேட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு 9.5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியிருக்கிறோம் என்று தெரிவித்துக் கடிதம் எழுதியிருக்கிறோம். ஆகவே விரைவிலே ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம்பற்றி முடிவாகிறபோது, நிச்சயமாக இந்தத் திட்டத்திற்கு அனுமதி கிடைக்கும் என்று நம்புகிறேன்.

**திரு. அ. ப. சிவராமன்:** தென்னார்க்காடு மாவட்டம், கடலூரில் 1050 மெகாவாட் கொண்ட அனல் மின் நிலையம் அமைக்கும் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது? அது விரைவுபடுத்தப்படுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** 1050 மெகாவாட் என்று முதலிலே தீர்மானித்தோம். இப்போது 210 மெகாவாட் திறன் கொண்ட மூன்று யூனிட்டுகள், அதாவது 630 மெகாவாட் உற்பத்தி செய்யும் திட்டம் தயாராகிக் கொண்டிருக்கிறது. அது விரைவிலே இந்திய அரசுக்கு அனுப்பி வைக்கப் படும்.

### மின்சாரத்திற்கான கட்டணம்.

* 12. வினா—**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) கல்பாக்கம் அணு மின் திட்டத்திலிருந்து வழங்கப்படும் மின்சாரத் திற்கான கட்டணம், முடிவு செய்யப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், இது இராஜஸ்தான் அணு மின் நிலையத்தினுடை யதைவிட, அதிகமானதா அல்லது குறைவானதா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** (அ) ஆம்.

(இ) இராஜஸ்தான் அணு மின் நிலையத்தின் மின் கட்டணத்தை விட அதிகம்.



1985 ஏப்ரல் 10]

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** இராஜஸ்தான் அணு மின் நிலையத்தின் மின்சாரக் கட்டணத்தைவிட கல்பாக்கம் அணு மின் நிலையத்தின் மின்சாரக் கட்டணம் அதிகமாக இருப்பதற்குரிய காரணம் என்ன? அதைக் குறைத்துப் பெற அரசு ஏதாவது முயற்சி மேற்கொண்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன். கல்பாக்கம் அணு மின் நிலையம் தமிழகத்திலே இருப்பதால், அதிலிருந்து உற்பத்தியாகும் மின்சாரத்தில் தமிழகத்தின் தேவையைப் பூர்த்தி செய்துவிட்டு மற்ற மாநிலங்களுக்கு வழங்க வேண்டு மென்று மத்திய அரசிடத்திலே வற்புறுத்திப் பெறுவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** இராஜஸ்தானில் இருக்கக்கூடியது பழைய திட்டம், மூலதனச் செலவு குறைவு. கல்பாக்கத்திலே இருப்பது புதிய திட்டம், மூலதனச் செலவு அதிகம். ஆகவே இங்கே உற்பத்திச் செலவு கூடுதல், அங்கே உற்பத்திச் செலவு குறைவு. அதுதான் இந்த வேறுபாடுக்குக் காரணம்.

கல்பாக்கத்தில் உற்பத்தியாகும் மின்சாரம் முழுவதையும் நமக்குத் தர வேண்டும் என்று தெரிவித்து, கடைசியில் மறைந்த பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள், கல்பாக்கத்தில் உற்பத்தியாகும் மின்சாரத்தில் முதல் யூனிட்டில் உற்பத்தியாகும் மின்சாரம் நமக்கு என்றும், இரண்டாவது யூனிட்டில் உற்பத்தியாகும் மின்சாரத்தில் பாதி அளவு நமக்கு என்றும் தெரி வித்திருந்தார்கள். அந்த வாக்குறுதியைத் திரும்ப வற்புறுத்தி இந்திய அரசை ஏற்றுக்கொள்ள வைத்திருக்கிறோம். தென்னகத்திலே உள்ள மற்ற வர்கள் தங்களுக்கும் பங்கு வேண்டும் என்று கேட்டிருந்தும்கூட, நாம் வற்புறுத்தியதை இந்திய அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. இதுவே போதும் என்ற நிலையை இந்த அரசு தீர்மானித்திருக்கிறது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** கல்பாக்கம் அணு மின் திட்டத்தைப்போல இந்திய அரசினுடைய வேறு திட்டங்கள் வெளி மாநிலங்களில் இருக்கின் றனவா? இங்கிருந்து அங்கேயுள்ளவர்களுக்கு மின்சாரத்தை வழங்குவதைப் போல, அங்கிருந்து மின்சாரத்தை நமக்கு வழங்க இந்திய அரசு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறதா அல்லது அதற்கான முயற்சிகளை நம்முடைய அரசு எடுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** அணு மின் நிலையம் என்று பார்ப்பதில்லை. தென் பகுதியை எடுத்துக்கொண்டால், தமிழகம், ஆந்திரம், கர்நாடகம், கேரளம் ஆகிய நான்கு மாநிலங்களும் சேர்ந்தது ஒரு ரீஜன். இந்த ரீஜனில் எந்தத் திட்டத்தைப் போட்டாலும், இந்த நான்கு மாநிலங் களுக்கும் கொடுக்க வேண்டும் என்பதைப்போல ஒரு கொள்கையை 1977 ஆம்

ஆண்டிலிருந்து வைத்திருக்கிறார்கள். கல்பாக்கம் அணு மின் திட்டம் அதற்கு முன்பே நம்முடைய தேவையை நிறைவு செய்ய இந்திய அரசால் நிறைவேற்றப்படுகிற திட்டம் என்பதால், இந்தத் திட்டத்திற்கு இந்தக் கொள்கையை புகுத்தக் கூடாது என்று கூறி, இந்த உரிமையை நாம் பெற்றிருக்கிறோம். தென்னகத்திலே அந்தக் கொள்கை வந்த பிறகு இராமகுண்டம் அனல் மின்நிலையத் திட்டம் மத்திய அரசால் துவக்கப்பட்டால், அதிலிருந்து நமக்கு உரிய பங்கு உண்டு.

**திரு. அ. ப. சிவராமன் :** தமிழ் நாட்டில் மேலும் அனல், புனல் மின் நிலையத் திட்டங்களை அமைக்கச் சாத்தியக்கூறுகள் குறைவாக உள்ளன. ஆகவே தமிழகத்திலே இரண்டாவது அணு மின் நிலையத்தை ஏற்படுத்த மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா? நெய்வேலியிலிருந்து பெறப்படும் மின்சாரத்திற்கு யூனிட் ஒன்றுக்கு எவ்வளவு கட்டணம் தரப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** இது சம்பந்தமாக இந்திய அரசுக்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் வற்புறுத்திக் கடிதம் எழுதி வருகிறார்கள். இந்திய அரசிடத்திலேகூட இரண்டாவது அணு மின் நிலையத்தை, தென்னாட்டைப் பொறுத்தவரையில், எங்கே வைப்பது என்று தீர்மானமாகவில்லை. நம்முடைய முதல்வருடைய கருத்தை கவனத்திலே வைத்துக்கொண்டு முடிவு எடுக்கப்படும் என்று இந்திய அரசு பதில் சொல்லியிருக்கிறது.

கோலாரிலிருந்து பெறுகிற மின்சாரத்திற்கு யூனிட் ஒன்றுக்கு 42 காசுகள் தருகிறோம். தேசிய அனல் மின் நிலையம் அதாவது இராமகுண்டத்திலிருந்து பெறுவதற்கு 47 காசுகள் தருகிறோம். கல்பாக்கத்தைப் பொறுத்த வரையில், 39 காசுகள் தருகிறோம்.

(முற்பகல் 10-10)

**திரு. சி. இராமலிங்கம் :** தலைவர் அவர்களே, நெய்வேலியில் மூன்றாவது அனு மின் நிலையம் அமைப்பது பற்றி பத்திரிகையிலே செய்தி வந்திருக்கின்றது. அப்படி அமைக்கப்பட்டால், முழு மின்சாரத்தையும் தமிழகத்திற்குத் தருவது பற்றி அரசு கேட்டறியுமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, நெய்வேலியில் மூன்றாவது சுரங்கம் வெட்டப்படுவதன் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட வேண்டும். இது இந்திய அரசின் திட்டம். சென்ட்ரல் செக்டார்



ஸ்கீம். இதை உடனடியாக இந்த ஐந்தாண்டுத் திட்டத்திலே மேற்கொள்ள வேண்டுமென்ற கருத்தை சென்ற முறை டெல்லிக்குச் சென்றிருந்தபோது, மின்சாரத்துறை அமைச்சர் அவர்களிடம் வலியுறுத்தினேன். அவர்கள் விரைவிலே பரிசீலித்து ஏற்றுக்கொள்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்தத் திட்டம் வந்த பிறகு, அதன் உற்பத்தியை எப்படிப் பகிர்ந்துகொள்வது என்பதுபற்றி நாம் இந்திய அரசிடம் பேசலாம்.

**திரு. பா. ரா. தாமஸ்:** தலைவர் அவர்களே, கல்பாக்கம் மின் நிலையத்திலிருந்து கிடைக்கும் மின்சாரத்திற்குக் கட்டணம் அதிகமாக இருக்கின்றது என்பதுபற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஒருவேளை அங்கு 235 மெகாவாட் அளவுக்கு உற்பத்தி செய்தால், அங்கிருந்து கிடைக்கக் கூடிய மின்சாரத்திற்கு கட்டணத்தைக் குறைக்கக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றனவா ? உற்பத்தித் திறன், அதாவது மூலதனத்தின் காரணமாக முழு அளவுக்கு மின் உற்பத்தி அதிகமாகும்போது, விலை குறையக்கூடிய வாய்ப்பு இருக்குமல்லவா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட வாய்ப்பு இல்லை. ஏனென்றால் இப்போதுள்ள உற்பத்தித் திறன்படி, 230 மெகாவாட் உற்பத்தி செய்கின்றார்கள். மற்றபடி மின் நிலையங்களைப் பொறுத்தவரையில், குறைந்த அளவிலே அணு மின் நிலையம் உற்பத்தி செய்வதில்லை. முழு உற்பத்தித் திறனிலேதான் நிலையத்தை ஓட்டுவார்கள். இராஜஸ்தானில் இருக்கக்கூடிய பழைய பிளாண்ட்டிலே உற்பத்தி செய்து தரக்கூடிய மின்சாரத்தை விட விலை கூடுதலாக இருக்கின்றது என்பதற்குக் காரணம் இந்த கல்பாக்கம் மின் நிலையம் இப்போது உருவாக்கப்பட்டது.

### திரைப்படங்களில் ஆபாசக் காட்சிகள்.

13. வினா—திரு. சி. ரா. வெட்டுமிகாந்தன்: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அண்மையில் வெளிவரும் திரைப்படங்களில், ஆபாசக் காட்சிகளும், வன்முறையையும், பால் உணர்வையும் தூண்டும் காட்சிகளும் அதிகரித்து வருகின்றன என்பதை அரசு அறியுமா ?

(இ) ஆம் எனில், அவற்றைத் தடுக்கும் வகையில் சட்டம் இயற்ற ஆய்வு ஏதும் மேற்கொள்ளப்பட்டுள்ளதா?

(உ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

[1985 ஏப்ரல் 10

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** (அ), (இ) மற்றும் (உ) விடை @
அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** தலைவர் அவர்களே, இந்த அறிக்கையில்
"பொதுமக்கள் பார்க்க உகந்ததல்லாத தணிக்கை செய்யப்பட்ட காட்சிகளைக்
காட்டுவதன் மூலம் தணிக்கை விதிகளை மீறினால், தியேட்டர் உரிமை
யாளர்கள் மட்டுமின்றி திரைப்பட தயாரிப்பாளர் மற்றும் விநியோகஸ்தர்
களும் மத்திய திரைப்படச் சட்டம் 1952 பிரிவு 7 (1) (ஏ)-ன் கீழ் தண்டனைக்
குரியவராவார்" என்று இருக்கிறது. அப்படி என்றால், தணிக்கை செய்யப்
பட்ட காட்சிகளைக் காட்டுவதன் மூலம், ஏற்கெனவே சட்டத்தின்படி
"தணிக்கை செய்யப்பட்ட காட்சிகளைக் காட்டுவதன்மூலம் தணிக்கை
விதிகளை மீறினால்" என்று இருக்கின்றது. அது குறித்து மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** தலைவர் அவர்களே, நான் அந்த
அறிக்கையை இறுதியாகப் பார்க்கின்றபோது, இந்தக் கருத்துக் குழப்பம்
வரும் என்று எண்ணவில்லை. அவர்கள் சட்டப்படி, ஆங்கில வார்த்தைகளை
வைத்து அப்படியே மொழி பெயர்த்திருக்கின்றார்கள். 'தணிக்கை செய்யப்
பட்ட' என்றால் 'தணிக்கை செய்து, அவர்களால் மறுக்கப்பட்ட' என்று
அதற்குப் பொருள். தணிக்கை செய்கின்றபோது, "இது வெளியிடப்படக்
கூடாது, காட்டப்படக்கூடாது" என்று இருக்கின்ற காட்சிகளை மீண்டும்
காட்டினால், திரையிட்டால்" என்று பொருள். அப்படிக் காட்டினால்,
அப்படிக் காட்டுகின்றவர்கள், தயாரிக்கின்றவர்கள், விநியோகிப்பவர்கள்
எல்லோருக்கும் இந்தச் சட்டத்தின்படி, விதிகளின்படி தண்டனை வழங்கப்
படும் என்பதுதான் பொருள்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** தலைவர் அவர்களே, தணிக்கைக் குழுவி
னுடைய தணிக்கை முறை மாநிலத்திற்கு மாநிலம் வேறுபட்டு விட முடியாது.
தமிழ் நாட்டில் பல மொழிப் படங்கள் திரையிடப்படுகின்றன. பல்வேறு
பிராந்திய குழுவினரால் தணிக்கை செய்யப்பட்ட படங்கள் வரும்போது,
அதில் பாகுபாடுகள் இருப்பதன் காரணமாக, ஆபாசக் காட்சிகள், பல இடங்
களிலே, பல்வேறு மொழிப் படங்களிலே இடம் பெறுகின்றன. அப்படி
தணிக்கை செய்யப்பட்ட பிறகு, ஆபாசமாக இடம் பெறுகின்ற அந்தக்
காட்சிகளின் மீது நம்முடைய மாநில அரசுகளின் அதிகாரத்திற்குட்பட்டு
எந்த நடவடிக்கைகளை நாம் எடுக்க முடியும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

@ 149 ஆம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



1985 ஏப்ரல் 10]

திரைப்படக் காட்சிகள் மட்டுமல்ல, திரைப்படங்களை வெளியிடுகின்ற சுவ
ரொட்டிகளிலே ஏராளமான ஆபாசங்கள் வந்து அதனால் பல பிரச்சினைகள்
எழும்புகின்றன. இளம் உள்ளங்களை இது பாழ்படுத்துகின்றது. போக்கு
வரத்தை பாதிக்கின்றது. இந்த நிகழ்ச்சிகளை நாம் எவ்வாறு தடுப்பது?
அதன் மீது எவ்வாறு நடவடிக்கை எடுப்பது? மாநில அரசின் அதிகாரத்தை
எப்படிப் பயன்படுத்தி, அவர்கள் மீது அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்
பார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** தலைவர் அவர்களே, இந்தச் சட்டம்
அகில இந்திய சட்டமாக இருக்கிறது. இந்தியா முழுவதும் ஒரே மாதிரியான
சட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்கின்ற அடிப்படையிலேதான் இந்தச்
சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 10-15)

சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இந்தியாவிலே பல மொழிகள், பல
இனங்கள், பல கலாச்சாரங்கள் இருக்கின்றன. அவைகள் தொடர்பாக திரைப்
படங்கள் தயாரிக்கப்படுகின்றன. அவர்களுடைய பழக்க வழக்கங்களிலே
மாறுதல்கள் இருக்கின்றன. இவை தவிர, வெளி நாடுகளிலிருந்து ஆங்கிலப்
படங்கள், வேற்று மொழிப் படங்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. அந்தக்
கலாச்சாரத்தை ஒட்டி, நாகரிகத்தை ஒட்டி எடுக்கப்படுகின்ற படங்களை,
அவர்கள் தணிக்கை செய்ததற்குப் பிறகு, தவிர்க்க முடியாமல் காட்சிகள்
அனுமதிக்கப்பட்டு, அவைகள் திரையிடப்படுகின்றன. தமிழ்நாட்டுக்கு பல
மாநிலங்களிலிருந்தும், வெளி நாடுகளிலிருந்தும் வரும் படங்களில்
அனுமதிக்கப்படும் காட்சிகள் இங்கே அனுமதிக்கப்படவில்லை என்ற ஒரு
குறை சொல்லப்படுகிறது. அப்படி அனுமதிக்கப்படுவதில்லை என்பதோடு,
அந்தக் காட்சிகளைப் பார்க்க மக்கள் விரும்பி அதிகமாகச் செல்கிறார்கள்
என்ற அந்த அடிப்படையை ஒட்டி, இங்கேயுள்ள தயாரிப்பாளர்கள்
அப்படிப்பட்ட காட்சிகளை நம்முடைய படங்களிலே புகுத்தினால்தான் ஓடும்,
போட்ட முதல் கிடைக்குமென்று அந்த முயற்சியில் ஈடுபடுகிறார்கள். ஒரு
காட்சியை இன்னொரு படத்திலே அனுமதித்துவிட்ட தணிக்கைக் குழு,
இந்தப் படத்திற்கு அனுமதி மறுக்க சட்டப்படி முடியாமல், நியாயப்படி
முடியாமல், எந்த அளவுக்குக் குறைக்க முடியுமோ, வெட்ட முடியுமோ அந்த
முயற்சியில் ஈடுபடுகிறார்கள். இந்தப் பிரச்சினை குழப்பமான பிரச்சினையாக
இருக்கிறது. மாநில அரசுகள் அவர்களுக்கென்று ஒரு விதியை வைத்துக்
கொண்டு, தணிக்கை செய்வது என்று தொடங்கினால், இந்திப் படங்கள்
அல்லது வேற்று மொழிப் படங்களை இங்கே திரையிட முடியாத சூழ்நிலை

வரக்கூடும். காரணம், அந்தப் பழக்கத்திற்கு, கலாச்சாரத்திற்கு ஏற்ப எடுக்கப்படும் படங்கள் நம்முடைய கலாச்சாரத்திற்கு மாறுபட்டதாக, உகந்ததாக இல்லாத சூழ்நிலை இருக்கும். அதைத் தடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். ஒரு பகுதியில் செல்லுபடியாகிற சூழ்நிலை, இன்னொரு பகுதியில் தடுக்கப்படுகிறது என்ற சட்டவிரோதமான அடிப்படையில் பிரச்சினை தோன்றக் கூடும். இந்தச் சிக்கலான பிரச்சினையில், மிகவும் ஜாக்கிரதையாக, எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு தணிக்கைக் குழு ஈடுபட்டு, வன்முறைக் காட்சிகளை அல்லது ஆபாசக் காட்சிகளை அவரவர்கள் எண்ணுகின்ற அளவுக்கு வியாக்கியானப்படுத்தி, தடுத்துக் கொண்டு வருகிறார்கள்.

அடுத்து, சுவரொட்டிகள், விளம்பரங்கள் பற்றிக் குறிப்பிட்டார்கள். இதுதான் மிகுந்த முக்கியமான ஒன்று. ஆபாசம் என்பது திரைப்படங்களில் வருவதோடு, பேனர்களிலும், சுவரொட்டிகளிலும் காட்டுவதுதான் மக்களைப் பெரிதும் பாதிக்கிறது. திரைப்படங்களிலே கண் மூடி கண் திறப்பதற்குள் சில காட்சிகள் போய்விடக் கூடும். மூன்று அடி, நான்கு அடி என்பது ஒரு வினாடியில் நகர்ந்துவிடும். படம் பார்க்கும் சூழ்நிலையில், மக்களுடைய கவனத்தை இவை அதிகம் கவராமல் இருக்கக்கூடும். ஆனால் சில ப்ரேம்களில் வரும் காட்சிகளை இங்கே போஸ்டர்களாக, பேனர்களாக வைத்து, அதன் மூலம் மக்களைக் கவர ஒரு தவறான அடிப்படையை மேற்கொள்கிறார்கள். அதைக் கண்டிப்பாக, கடுமையாகத் தவிர்க்க வேண்டுமென்று மாநில அரசு கருதுகிறது. மேலும் அதைத் தடுக்கும் உரிமையும் மாநில அரசுக்கு இருக்கிறது. அப்படிப்பட்ட போஸ்டர்களை அல்லது விளம்பரங்களைத் தடுக்க அரசு ஒரு சட்டம் நிறைவேற்றுவதற்காக தயாரித்துக் கொண்டிருக்கிறது. விரைவிலே சட்டமன்றத்திலே அது நிறைவேற்றப்படும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவரவர்களே, திரைப்படங்களைப் பொறுத்தவரையில், அமைச்சரவர்கள் கூறியதுபோல, தர்மசங்கடமான நிலை இருக்கிறது. வெளி மாநிலப் படங்கள் அவர்கள் கலாச்சாரத்திற்கேற்ப தயாரித்து, அனுப்புகிறார்கள். அதை அனுமதிக்கும்போது, இங்கேயும் அனுமதிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. நம்முடைய தமிழ்நாட்டின் கலாச்சாரம், பண்பாடு, ஒழுக்கம் இன்றைக்கு சினிமாவினாலேதான் பாழடைந்து வருகிறதென்று வரையறுத்துக் கூற முடியும். உரையாடல்கள் மிகவும் மோசமாக இருக்கின்றன. பாடல்களிலேகூட இரு பொருள் தரும் முறையில் ஆபாசமாக இயற்றுகிறார்கள். காட்சி அமைப்புகளிலே மட்டு மல்லாமல், பாடல்கள், உரையாடல்கள் இவைகளிலேகூட ஆபாசம்



இருக்கிறது. எனவே நம்முடைய கலாச்சாரத்திற்கேற்ப எப்படி படங்களை உருவாக்க வேண்டுமென்று ஒரு முடிவெடுத்து, அந்த முடிவுக்கேற்ப இருக்கும் வெளி மாநில, வெளி நாட்டுப் படங்களைத்தான் இறக்குமதி செய்ய முடியு மென்ற நிலையை உருவாக்கி, மத்திய அரசை இணங்கச் செய்ய தீவிர நடவடிக்கை எடுத்தால்தான் நம்முடைய கலாச்சாரம், பண்பாடு, மொழி காப்பாற்றப்படும். ஆகவே பொருளை மட்டும் கருதாமல், இதற்குரிய நடவடிக்கைகளை தொலை நோக்கோடு எடுக்க மாண்புமிகு அமைச்சரவர்கள் முயற்சி செய்வார்களா ?

(முற்பகல் 10-20)

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** முன்னாலே நான் சொன்னது போன்று, எது ஆபாசம், எது மக்களைக் கெடுக்கிறது என்று நிர்மானிப்பதிலே தான் மிகப் பெரிய சங்கடம் இருக்கிறது. ஒவ்வொன்றுக்கும் ஆதாரம் வைத்திருக்கிறார்கள். ஒவ்வொன்றுக்கும் முன்மாதிரி வாதங்களை வைத்திருக் கிறார்கள். மக்கள் விரும்புகின்ற ஒவ்வொன்றும் ஆபாசமற்றவை என்று நாம் முடிவெடுத்துவிட்டால், நாம் எதை ஆபாசம் என்று எண்ணுகிறோமோ அதற்குத் தான் மக்கள் ஆதரவு அளிக்கிறார்கள். ஆகவே மக்கள் ஆதரவு அளிக்காத எல்லாமே ஆபாசமானவை என்று நாம் சொல்லிவிட்டோம் என்றால், அவர்கள் தொழிலே நடத்த முடியாது. இன்றைக்கு திரைப்படங் களில் மட்டுமல்ல, பத்திரிகை மூலமாகவும் மற்றும் எல்லாத் துறைகளின் மூலமாகவும் ஆபாசம் புகுந்திருக்கிறது. திரைப்படங்களில் பாடல் எழுதுகின்றவர்களைக் கேட்டால், சங்க இலக்கியங்களிலிருந்துதான் நாங்கள் எழுதுகிறோம் என்று வாதிடுகிறார்கள். அதுபோல் உடை அலங்காரம் செய்பவர்கள், ஓவியம் தீட்டுபவர்கள் இவர்களைக் கேட்டால், "பத்திரிகையில் வருவதைப் பார்த்துத்தான் நாங்கள் தயாரிக்கிறோம்" என்று வாதிடு கிறார்கள். ஆனால் திரைப் படங்களைப் பார்க்க பணம் கொடுத்து தியேட்டருக்குப் போகும் மக்கள் ஏதோ ஒரு மணி நேரம், இரண்டு மணி நேரத்தில் திரைப்படத்தைப் பார்த்துவிட்டு வெளியே வந்த உடனே மறந்து போய்விடுகிறார்கள். ஆனால் இன்றைக்கு தினசரி என்றும், வாரப் பத்திரிகை என்றும் வீடுகளில் கொண்டு போடுகின்ற பத்திரிகைகளிலேகூட ஆபாசம் இருப்பதுபற்றி விமர்சனங்கள் இருக்கின்றன. அதிலே வருகின்ற படங்கள் பற்றி, கருத்துக்கள் பற்றி, ஜோக்குகள்பற்றி எல்லாம் விமர்சனங்கள் இருக் *கின்றன. ஆகவே சமுதாயம் ஒரு மாறுதலான கட்டத்திலேதான் வந்து நிற்கிறது. ஒரு குழப்பமான சூழ்நிலையிலே சமுதாயம் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. தெளிவான, திட்டவட்டமான முடிவெடுத்து இதுதான் பண்பாட்டுக்குரியது, நாகரீகத்திற்குரியது, இதுதான் ஆபாசமற்றது என்று

அறிவிப்பதிலே மிகப் பெரிய சிக்கல் இருக்கிறது. மனிதர்கள் பண்பாட்டை வளர்க்க வேண்டும். மனித உணர்வுகள் பண்பாட்டை வளர்க்கின்ற நிலைக்கு வந்துவிட்டால், ஆபாசமே இயற்கையாக அற்றுப் போய்விடும். அதற்கு இது ஒன்றுதான் வழி.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** ஆடி ஓய்ந்தவர்களுக்கு ஆபாசமாகத் தோன்றுவது இளைஞர்களுக்கு ஆனந்தமாக இருக்கிறது. (சிரிப்பு) இன்றைக்கு பால் உணர்வு திரைப்படங்களில் இருக்கிறது என்பது உண்மை. பல நாட்கள் சந்திக்காத காதலர்கள் திடீரென்று ஒரு நாள் சந்தித்தால், கட்டிப்பிடிப்பது இயற்கை. கத்தரிக்கோலுக்கு ஆபாசம் வெட்டப்படுவதோடு கூட, ஆபாசமான திரைப்படங்களை வயது குறைந்தவர்கள் பார்க்கக் கூடாது என்கின்ற அளவிலும், விளம்பரங்களில் ஆபாசம் இருக்கக் கூடாது என்கிற வகையிலும் ஏற்பாடு செய்வதற்கு அரசு வழிவகை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** ஆடி ஓய்ந்தவர்களுக்கு ஆபாசமாகத் தெரிவது இளைஞர்களுக்கு ஆனந்தமாக இருக்கிறது என்று சொன்னார். உறுப்பினர் ஆடி ஓய்ந்தவரா அல்லது இளைஞரா என்பது தெரியவில்லை. உணர்வுகளைப் பொறுத்தவரையில், இளைஞர்களைவிட வயதான ஆடி ஓய்ந்தவர்களுக்கு அதிகம் இருப்பதாகச் சொல்கிறார்கள். இதிலேதான் இன்றைக்கு மிகப் பெரிய சிக்கல் இருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஆடி ஓய்ந்தவர்களிலே " சில பேருக்கு " என்று சொல்லலாம். (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** விளம்பரங்களைப் பொறுத்த வரையில் நிச்சயமாக ஆபாசம் என்று வரும்போது அதை கடுமையான பிரச்சினையாக அரசு கவனிக்கிறது. திட்டமிட்டு மக்களை ஏமாற்றுகின்ற வகையிலும், திசை திருப்புகின்ற வகையிலும், மக்களிடமிருந்து பணம் பறிக்கின்ற வகையிலும் இது செய்யப்படுகிறது. இன்னும் சொல்லப்போனால், மன்னிக்க வேண்டும், விபச்சார உணர்வோடு அப்படி விளம்பரத்தைப் பயன் படுத்துகிறார்கள். அப்படிப்பட்ட போக்கைத் தடுப்பதற்கும், அதையும் மீறினால் கடுமையான தண்டனை அளிக்கவும் வழிவகை செய்யக்கூடிய சட்ட முன்வடிவு தயாரிக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. ப. சிவராமன் :** பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒருமுறை " சட்ட மன்றப் பேரவையிலும் மேலவையிலும் " என்ன இளம் பார்லிமென்டேரியன்களை மூத்த பார்லிமென்டேரியன்கள் அழைத்து உற்சாகம் அளிக்க வேண்டும் " என்று எழுதினார்கள். இன்றைக்கு ஒரு மூலக் கேள்வி போடப்படுகிறது.



பிறகு துணைக் கேள்வி போடுகிறோம். சீனியர் மெம்பராக இருக்கின்றவர்கள் மூலக் கேள்வியைக் கேட்டுவிட்டு துணைக் கேள்வியையும் அவர்களே போடுகிறார்கள். நான் கேள்வி கேட்க வேண்டுமென்று நினைக்கும்போது, கேட்க வேண்டியவைகளை சீனியர் மெம்பர்கள் கேட்டு முடித்து விடுகிறார்கள். மாண்புமிகு தலைவர் அவர்கள் பயிற்சி பெறுகின்ற நிலையிலுள்ள எங்களைப் போன்றவர்களுக்கு முதலிடம் தர வேண்டும். அப்படியானால்தான் நாங்கள் அனுபவம் பெற முடியும்.

(முற்பகல் 10-25)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர் அவர்களுக்கு ஒரு மரபைச் சொல்ல வேண்டும். பழைய உறுப்பினர்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை. உறுப்பினர் புதியவராகையால் சொல்கிறேன். மூலக் கேள்விகள் போடு கிறவர்கள், மேலும் விளக்கம் பெறுவதற்காக, இரண்டு துணைக் கேள்விகள் போட பொதுவாக அனுமதிக்கப்படுகிறார்கள். அதற்குப் பிறகும் விளக்கம் பெற, மற்றவர்கள் ஒவ்வொரு துணைக் கேள்வி கேட்க அனுமதிக்கப் படுகிறார்கள். ஆனால் உறுப்பினர் அவர்கள் மூலக் கேள்வியே போடாமல் ஒவ்வொரு முறையும் மூன்று துணைக் கேள்விகள் கேட்கிறார்கள். இப்படி இருந்தால், அதிகமான துணைக் கேள்விகள் கேட்கும் திரு. மீனாட்சிசுந்தரத்திற்கு நான் எப்படி பதில் சொல்ல முடியும் ? (சிரிப்பு) சரி, கேளுங்கள்.

**திரு. அ. ப. சிவராமன் :** ஆகவே, காட்சிகள் என்று மட்டுமல்ல, வசனங்கள், திரைப்படப்பாடல்கள் கூட இரண்டு அர்த்தம் தெரிவிக்கக்கூடிய அளவில் இப்போது அமைக்கப்படுகின்றன. அதைத் தடுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, எது ஆபாசம், எது ஆபாசமல்ல, என்பதைக் கண்டறிய தணிக்கைக்காக படத்தை அனுப்பும்போது, அரசு அதிகாரிகள், அலுவல் சார்பற்றவர்கள், பெண்கள் உட்பட உறுப்பினர்களாக இருப்பவர்கள், அங்கே இருக்கிறார்கள். அவர்கள் அப்படங்களைப் பார்த்து விவாதித்து, எந்தெந்தப் படங்களை அனைவரும் பார்க்கலாம், எந்தெந்தப் படங்களை வயது வந்தவர்கள் என்று சொல்லக்கூடிய பெரியவர்கள் பார்க்கலாம் என்ற சான்றிதழை வழங்க அதிகாரம் பெற்றிருக்கிறார்கள். அந்த அதிகாரத்தின்படிதான் அங்கே தணிக்கை நடக்கிறது. இதற்குள்ளே மாநில அரசு தலையிட இயலாது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஆபாசம் என்று சொல்லிக்கொண்டே, நிறைய உறுப்பினர்கள் கேள்விகள் கேட்கிறார்கள். (சிரிப்பு)

[1985 ஏப்ரல் 10

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது, உரைநடையில், பாடல்களில் இருக்கிற ஆபாசத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். பழைய பாடல்களில் கூட அப்படி இருந்தது என்று சொன்னார்கள். பழைய பாடல்கள் பற்றி தாங்களே கூட அறிவீர்கள். அதில் ஆபாசம் என்பது, இலைமறை, காய்மறையாகத்தான் இருக்குமே தவிர, பச்சையாக எந்த விஷயமும் இருக்காது. ஒன்றை உதாரணத்திற்குச் சொல்கிறேன். 'அத்திக்காய், காய், காய்' என்று காய்களைப் பற்றிச் சொல்லும்போதும், 'மரம், மரம்' என்றே மரங்களின் பெயர்களை சொல்வது போல் பாடல்கள் இயற்றி தங்கள் எண்ணங்களையும், உணர்வுகளையும் வெளியிட்டார்கள் பழைய பாடல்களில். ஆனால் தற்போது வரும் பாடல்கள், 'வயத்தைப்பயம்' (இலந்தைப் பழம்), 'அது இம்மாம் சைஸ்' (உறுப்பினர் கையினால் அளவு காட்டினார்) என்று பாடல் காட்சிகள் அமைவது, பார்ப்பவர்களுக்குக் கேவலமாகப் படுகிறது. அப்படி வெள்ளையாக பச்சையாக, கவிஞர்கள் பாட்டு எழுதுவது கட்டுப்படுத்தப்படுமா? அதைத் தடுக்க அரசு முயற்சி செய்யுமா?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** தலைவர் அவர்களே, இதைப்பற்றி விவாதம் வருகிறபோது, கவிஞர்கள் உவமையோடு சொல்கிறார்கள். அன்றைக்கு இலைமறை, காய்மறையாக இருந்தது என்றால், சொல்வதைப் புரிந்து கொள்ளக்கூடியவர்கள் இருந்தார்கள் என்பதை கவிஞர்கள் புரிந்து வைத்திருந்தார்கள். இன்றைக்கு அப்படிப் புரிந்துகொள்ளாதவர்கள் இருக்கிறார்கள் என்பதால், இது மாதிரி எழுதுகிறார்கள். இது சமுதாயத்தின் வளர்ச்சி. இந்த வளர்ச்சிக்கு எங்களை ஏன் குறை சொல்கிறீர்கள் என்று கேட்கிறார்கள். இதில், யார், எப்போது, எப்படி முடிவு கட்டுவது என்பதுதான் பிரச்சினை.

**திரு. எல். ஜெயச்சந்திரன் :** திரைப்படங்கள் தணிக்கைக்குச் செல்கிறபோது, வயதுவந்தோர் மட்டும் பார்க்கலாம் என்று சான்றிதழ் கொடுக்கப்படுகிறது. அத்தகைய படங்கள் திரையரங்குகளில் காட்டப்படும்போது, பள்ளி மாணவர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். மேலும், முன்பு திரையரங்குகளில் மூன்று காட்சிகள்தான் காட்டப்பட்டன. இப்போது காலைக்காட்சிகளும் காட்டப்படுகின்றன. இதனால் பள்ளி மாணவர்கள், கல்லூரி மாணவ, மாணவிகள் வகுப்புகளுக்குச் செல்லாமல், திரையரங்குகளுக்குச் சென்று விடுகிறார்கள். அதைத் தவிர்க்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



1985 ஏப்ரல் 10]

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** தலைவர் அவர்களே, வயதுவந்தோர் மட்டும் பார்க்க அனுமதிக்கப்படுகிற படங்களுக்கு, வயது குறைந்தவர்கள் அனுமதிக்கப்பட்டால், திரையரங்கு உரிமையாளர்களுக்கு, சட்டப்படி அதற்கான தண்டனை இருக்கிறது. எப்போது யார் பார்க்கிறார்கள், அனுமதிக்கிறார்கள் என்று கண்டுபிடித்துச் சொல்வதில்தான் சிக்கல் இருக்கிறது. அப்படி வயதுக்கு வராதவர்களை அத்தகைய படங்களுக்கு அனுமதிப்பது தவறு. அனுமதிக்கப்படக்கூடாது என்பதுதான் விதி. காலைக்காட்சிகள் பற்றிச் சொன்னார்கள். காலையிலேயே காட்சிகள் காட்டப்படுவதில்லை. 12 மணிக்குத்தான் தொடங்கப்பட வேண்டுமென்று இருக்கிறது. 2½ மணி காட்சி, 3 மணி காட்சி என்பது, 12½ மணி காட்சியாகத் தொடங்கப்படுகிறது. 12½ மணிக் காட்சிக்கு மாணவர்கள் செல்கிறார்கள் என்பதைவிட, எந்தப் படத்திற்கு, எப்போது போகிறார்கள் என்பதுதான் பிரச்சினை. படிக்கிற மாணவர்கள், படிப்பையும், வகுப்பையும் விட்டுவிட்டுச் செல்ல மாட்டார்கள். நானும் பார்க்கிறேன், 10 நாட்களாகப் பரீட்சைகள் நடந்துகொண்டிருக்கின்றன. வீட்டில் பிள்ளைகள் விழுந்து விழுந்து படிக்கிறார்கள். திரைப்படம் பார்க்க வேண்டும் என்றால்கூட வரமாட்டோம் என்று அவர்கள் கூறிவிடுகிறார்கள். ஆகவே, நம்முடைய ஆசிரியர்கள் மாணவர்களைப் படிப்பில் அக்கறை செலுத்துபவர்களாக மாற்றினால், தேவையற்ற நேரத்தில் அவர்கள் படத்தைப் பார்க்கவே செல்ல மாட்டார்கள்.

(முற்பகல் 10-30)

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டுவர இருப்பதாகச் சொன்ன சட்ட முன்வடிவு குறித்து மகிழ்ச்சி. ஆனால் அந்தச் சட்ட முன்வடிவிலே சேர்க்கப்பட வேண்டிய ஒரு பொருளைப் பற்றி அறிந்துகொள்ள விரும்புகிறேன். தணிக்கை செய்யப்பட்டு திரையிடப்படுகின்ற திரைப்படங்களில், இடைச் செருகலாக சில நிர்வாணப் படங்களை இணைத்து சில திரை அரங்குகளில் வெளியிடுகிறார்கள். அப்படிப்பட்ட திரையரங்குகளை மூடிவிடுகின்ற வகையில், நிரந்தரமாக மூடிவிடுகின்ற வகையில், ஒரு கடுமையான சட்டப் பிரிவையும் உத்தேசிக்கப்பட்டுள்ள சட்ட முன்வடிவில் சேர்ப்பதற்கு அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** தலைவர் அவர்களே, கொண்டுவரப்பட இருக்கிற சட்ட முன்வடிவு என்பது, மாநில அரசினுடைய அதிகாரத்திற்கு உட்பட்ட, ஆபாச விளம்பரங்களை பொது இடங்களில் வைப்பதைத் தடுக்கின்ற சட்ட முன்வடிவாகும். ஆனால் மாண்புமிகு

[1985 ஏப்ரல் 10

உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற குற்றத்திற்கான தண்டனை விதிகள் இப்போதிருக்கின்ற திரைப்படச் சட்டத்திலேயே இருக்கின்றன. அது கொஞ்ச நாட்கள் வரை அமல்படுத்தப்படாமல் அல்லது கவனிப்பாரற்று விடப் பட்டிருந்தது. இப்போது பல இடங்களில் ஒதுக்குப்புறமாக உள்ள திரை யரங்குகளில் கவனிப்பாரற்ற சூழ்நிலையில், மக்கள் கூட்டத்தைப் பெருக்கு வதற்காக, ஏதாவது ஒரு திரைப்படத்தினுடைய பெயரைச் சொல்லிவிட்டு, அதற்கிடையிலே ஆபாசப் படங்கள் சுமார் 3,000, 4,000 அடிகள் திரை யிடப்படுவதாகப் புகார்கள் வந்ததற்குப் பிறகு, கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, பல இடங்களில் தியேட்டர் உரிமையாளர்கள் கைது செய்யப் பட்டிருக்கிறார்கள். தியேட்டர்களின் உரிமங்கள் முழுமையாகவே ரத்து செய்யப்பட வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அது ஒரு கடுமையான தண்டனைக்குரிய குற்றம். ஆனால், அது எப்படி நடைபெறுகிறது, எப்போது நடைபெறுகிறது என்பதைப் பார்ப்பவர்கள் வந்து சொன்னால்தான், நமக்குத் தெரிய வரும்.

**திரு. பா. அங்கமுத்து :** தலைவர் அவர்களே, கோவில்களிலும், கோபுரங் களிலும் நிர்வாணச் சிலைகள் பல இருக்கின்றன. அவை பார்ப்பவர்களின் பாலுணர்ச்சியைத் தூண்டாத அளவிற்கு, அவற்றிற்கு சேலைகள் போட்டு மறைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இது திரைப்படங்கள் மீதான பிரச்சினை. கோவில் பிரச்சினை அல்ல.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** தலைவர் அவர்களே, எனக்கு ஏற்படுகிற ஆச்சரியமே, கலைத் துறையிலே இந்தச் சிற்பங்களை வடிப்பதிலே புகழ் பெற்ற கலைஞர் அங்கமுத்து அவர்களே இதைக் கேட்கிறாரே என்பது தான். அவரே உருவாக்கியிருக்கின்ற சிற்பங்கள், சிலைகள் எல்லாம் பல இடங்களில் இருக்கின்றன. இன்றைக்கும் இருக்கின்றன. தத்துவமே மனிதன் எந்த உணர்வோடு, எந்தக் கண்ணோட்டத்தோடு பார்க்கிறான் என்பதை வைத்துத்தான் குற்றங்களே நிரூபிக்கப்படுகின்றன ; உருவாகின்றன. ஆகவே மனிதனின் உணர்வைச் சுத்தப்படுத்திக் கொண்டால், ஆபாசம் இல்லாமல் ஆக்கிக்கொண்டால், அதிலேயிருந்து ஆபாசங்கள் தோன்றாமல் தவிர்க்க முடியும். அல்லது ஆபாச உணர்வு தோல்வியுறுகின்ற வகையில் அந்த உணர்வை ஒழித்துவிட்டால், ஆபாசத்தினால் விளைகின்ற தீமைகள் உண்டாகாமல் தவிர்க்க முடியும்.



1985 ஏப்ரல் 10]

**செல்வி ஆ. லீலாவதி :** தலைவர் அவர்களே, திரைப்படங்களுக்காக வெளி யிடப்படுகின்ற சுவரொட்டிகளைவிட, சில பொருள்களை விளம்பரப்படுத்து வதற்கான விளம்பரங்களில் பெண்களைப் பயன்படுத்துகிறார்கள். இவ்வா றான விளம்பரங்களுக்கும் தணிக்கைக் குழு இருக்கிறதா? அவ்வாறு தணிக்கைக் குழுக்கள் இருந்தால், அதில் பெண்கள் இருக்கின்றார்களா ? அப்படி இல்லை என்றால், அதில் பெண்கள் அதிகமாக இடம் பெற ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** தலைவர் அவர்களே, திரையரங்கு களில் காட்டப்படுகின்ற எந்தப் படமாக இருந்தாலும், அது தணிக்கைக்கு உட்பட்டு, சான்றிதழ் பெற்றுத்தான் திரையிடப்படுகின்றன. அது செய்திப் படமாக இருந்தாலும் அல்லது விளம்பரத் துண்டுப்படமாக இருந்தாலும், தணிக்கை செய்யப்பட்டுத் தான் திரையிடப்படுகின்றன. அந்தத் தணிக் கைக்குழுவிலே பெண்களும் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் அந்தப் படங்களைப் பார்க்கிறார்கள். இதைப் பெண்கள் பார்க்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்களே, அதில் நடிப்பவர்களே பெண்கள்தானே. பெண்கள்தானே மாடல்களாக இருந்து நடிக்கிறார்கள். ஆகவே இதிலேதான் உள்ளே நுழைகிறபோது, பல சிக்கல்கள் வருகின்றன என்று நான் சொன்னேன். அது ஒரு மிகப் பெரிய சமுதாய மாற்றத்தை அடிப்படையாக வைத்து இன்றைக்கு நுழைந்துகொண்டிருக்கிற ஒரு பிரச்சினை. இதற்கு சட்டமன்றத்திலே விவாதிப்பதாலே மட்டும் முடிவு கண்டுவிட முடியாது. ஆனாலும் இந்த விவாதத்தின் மூலம் சட்டமன்றம் இதைப்பற்றி மிகுந்த அக்கறை செலுத்துகிறது ; சமுதாயத்தைப்பற்றிக் கவலைப்படுகிறது என்பதைப்பற்றி சம்பந்தப்பட்டவர்கள் புரிந்துகொள் வதற்கும், அதிலே எச்சரிக்கையாக இருப்பதற்கும் உதவியாக இருக்கும். அந்தத் துண்டுப் படங்கள், விளம்பரப் படங்கள் எல்லாம் தணிக்கை செய்யப் பட்டுதான் வருகின்றன. அதில் பெண்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அவர்கள் பார்த்ததற்குப் பிறகு சான்று வழங்கப்பட்டதற்குப் பிறகுதான், அவை திரையிடப்படுகின்றன.

(முற்பகல் 10-35)

**திரு. சி. இராமலிங்கம் :** தலைவர் அவர்களே, இன்று திரைப் படங்களிலே வருகின்ற காட்சிகள் ஆபாசப் படங்கள் என்ற நிலையிலே நாம் கேள்விகள் கேட்கிறோம். அதுபோல் இன்றைக்குப் பார்க்கின்ற காட்சிகளை நாம் ஆபாசமாக எடுத்துக் கொண்டால், அது அவர்களுடைய உள்ளத்தைப் பொறுத்தது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் இதிலே எது ஆபாசம், எது ஆபாசம் இல்லை என்று பார்க்கும்போது, ,

[1985 ஏப்ரல் 10

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** கேள்வியைக் கேட்க வேண்டும்.

**திரு. சி. இராமலிங்கம் :** கேள்வியைத்தான் கேட்கிறேன். இன்றைக்கு குறிப்பாக திருப்புகழை எடுத்துக்கொண்டால், அதிலுள்ள பாடல்கள் அத்தனையுமே ஆபாசமாக இருக்கின்றன. அதைப்பற்றி நாம் என்ன முடிவு எடுப்பது என்ற கேள்வி எல்லாம் எழுகின்றது. அதேநேரத்தில் சினிமாத் துறையிலே சில குறிப்பிட்ட மைனாரிட்டி மக்கள் தான் இந்த விளம்பரங்களுக்காகவும், மதிப்புக்காகவும் ஆபாசமாக நடிக்கிறார்கள். ஒருசில குறிப்பிட்ட சமுதாய மக்கள் செய்கின்ற அந்த ஆபாசக் காட்சிகளை இந்த நாட்டு மக்களே பார்த்து, அதைத் தெரிந்துகொண்டு, அதுபோல நடிப்பது. . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நீங்கள் சொற்பொழிவு ஆற்றுகிறீர்களா அல்லது கேள்வி கேட்கிறீர்களா ? கேள்வியைக் கேளுங்கள். ஏராளமாக இந்தக் கேள்வியைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். எவ்வளவு நாழியாகிறது. நான் விடாவிட்டாலும் வருத்தப்படுகிறார்கள் ; விட்டாலும் என்னை விடமாட்டேன் என்கிறார்கள்.

**திரு. சி. இராமலிங்கம் :** தலைவர் அவர்களே, இப்போது முடித்து விடுகிறேன். அந்த ஒருசில ஆபாசக் காட்சி நடக்கும்போது மற்ற எல்லோரும் பார்க்க வேண்டிய ஒரு நியதி ஏற்படுகிறது. அதைத் தவிர்ப்பதற்கு ஏதாவது வழிவகை உள்ளதா ; ஒருசிலர் செய்கின்ற அந்த ஆபாசக் காட்சிகளைத் தவிர்ப்பதற்கு வழிவகை உள்ளதா ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, உறுப்பினரவர்கள் அருணகிரிநாதரே, தமிழையே ஆபாசமாகப் பாடியிருக்கிறார் என்று அவரை இழிவுபடுத்துகிற வகையிலே குறிப்பிடுகிறார். . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவர்தான் நிறைய பக்திப் பாடலையும் பாடியிருக்கிறார்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, அதைத்தான் நான் முன்பே சொன்னேன். ஆகவே தயவுசெய்து இனிமேல் அருணகிரிநாதரை இந்த வம்புக்கு இழுக்க வேண்டாமென்று அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். யாரோ ஒரு மைனாரிட்டி பிரிவினர் தான் இப்படி நடிக்கிறார்கள், நடிக்கிறார்கள் என்று சொன்னார்கள். அதன் பொருள் எனக்குப் புரியவில்லை. எந்த மைனாரிட்டி? எண்ணிக்கைக் குறைவை மைனாரிட்டி என்று சொல்கிறாரா ? அல்லது ஏதாவது ஒரு வகுப்பைச் சொல்கிறாரா என்று எனக்குப் புரியவில்லை. இப்போது எது ஆபாசம் என்று



1985 ஏப்ரல் 10]

நாம் கருதுகிறோமோ அது அவர்களுக்கு ஆபாசமாகத் தெரியவில்லை. அதுதான் பிரச்சினையே தவிர, அவர்கள் அது ஆபாசமென்று உணர்ந்தால், அவர்களும் நடிக்கமாட்டார்கள். ஒருவேளை ஏழையாக இருக்கும்போது ஆபாசமாகத் தெரியவில்லை ; பணம் வந்த பிறகு அதுவே அவர்களுக்கு ஆபாசமாக மாறிவிடுகிறது. சூழ்நிலைக்கு ஏற்ற நினைப்பு என்று அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதைப்போல், அவரவர்கள் நிலைமைகளுக்கு ஏற்ற நினைப்புகள் வருகின்றன ; நினைப்புக்கு ஏற்ற செயல்கள் வருகின்றன ; செயல்கள் சமுதாயத்தை உருவாக்கிக்கொண்டிருக்கின்றன.

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற நேரத்தில் திரையரங்குகளிலே நடைபெறுகின்றதைப் பார்த்துவிட்டுச் சொன்னால் நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொன்னார்கள். எந்தெந்தத் திரையரங்குகளிலே அந்த ஆபாசக் காட்சிகள் காட்டுகிறார்கள் என்று அவரே சொன்னால், அதை நாங்களே பார்த்துவிட்டு அந்தந்தத் திரையரங்குகள் என்று சொல்வதற்கு ஏதுவாக இருக்கும். அந்தத் திரையரங்குகளை அரசு சொல்ல முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சீத்தாபதி அவர்களுக்கு அதிலே மிகுந்த அக்கறை இருப்பதாகத் தெரிகிறது. அவர் கேட்கவேண்டிய இடம் மாண்புமிகு திரு. மீனாட்சிசுந்தரம் ; தவறி என்னிடத்திலே கேட்டுக் கொண்டிருக்கிறார்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, . . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அடுத்த கேள்வி 14. **திரு. பா. ராமஸ்.** ,

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, ஆபாசக் காட்சியைப் பார்க்க மீனாட்சிசுந்தரத்தைக் கேட்கவேண்டியது என்று எந்த அடிப்படையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார் என்று என்னால் தெரிந்து கொள்ள முடியவில்லை. அதற்குரிய விளக்கத்தைத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அதிலேயெல்லாம் நகைச்சுவையை அனுபவிக்கத் தெரியவில்லையே.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, இந்தக் குறிப்பிலே திரு. லெட்சுமிகாந்தன் என்று தந்திருக்கிறார்கள்.

[1985 ஏப்ரல் 10

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே,
மாண்புமிகு திரு. மீனாட்சிசுந்தரம் என்பதற்குப் பதிலாக மாண்புமிகு
திரு. லெட்சுமிகாந்தன் என்று திருத்திக்கொள்ள வேண்டும்.

## *Yellow Kuttai.*

* 14. Q.—Thiru P. R. THOMAS and
Thiru L. JAYACHANDRAN : Will the Hon. the Mini-
ster for Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that I.R. 20 paddy crops are attacked
by a new type of disease called "Yellow Kuttai" and it causes much
damages to the crops; and

(*b*) if so, the action taken to prevent this ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** (அ) வெள்ளை பொன்னி, சி.ஆர்.
1009, ஏ.யு. 42-1 போன்ற சில ரகங்களைத் தவிர, ஐ.ஆர். 20 உட்பட மற்ற
எல்லா நெல் ரகங்களிலும் மஞ்சள் நிறம் படர்ந்து பயிர் பாதிக்கப்பட்டது.

(இ) மஞ்சள் குட்டை ஒரு நோயா அல்லது இது ஊட்டச்சத்து இன்மை
யால் ஏற்படுகிறதா என்று திட்டவட்டமாக இன்னும் தெரியவில்லை.
இந்நோயின் காரணம், தடுக்கும் முறைகள் முதலியவற்றைப் பற்றி,
வேளாண்மைப் பல்கலைக் கழக விஞ்ஞானிகளும், விவசாயத் துறையினரும்
மற்றும் ஹைதராபாத்திலுள்ள அகில இந்திய நெல் ஆராய்ச்சி நிபுணர்களும்,
பலதரப்பட்ட ஆராய்ச்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

**திரு. பா. ரா. தாமஸ் :** தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்திலே
பரவலாக பல பகுதிகளிலே, அதிகமான நெல் விளையக்கூடிய பகுதியாகிய
சோழவந்தான் போன்ற பகுதியிலே இந்த மஞ்சள் குட்டை நோய் பரவி,
அதற்குத் தகுந்த மருந்துகள் அடிப்பதற்கு வேளாண்மைத் துறையினரே
அறிவுரை வழங்கி அதைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். அவ்வாறு பயன்
படுத்தியும் பயன் தரவில்லை. அதுமட்டுமல்ல, சாதாரணமாக புகையான்
நோய் கண்டுபிடிக்கப்பட்டபோது கூட, ஓரளவு நெல் விளைபொருள்
கிடைத்தது. அந்த நோய் முழுவதுமாக அழிக்கப்பட்டுவிட்டது. மஞ்சள்
குட்டை நோய் குறித்து மதுரையிலுள்ள வேளாண்மைப் பல்கலைக் கழகம்
ஆராய்ச்சி செய்திருக்கிறதா? ஏதாவும் கண்டுபிடிக்கப்படாவிட்டால், வேறு
என்ன முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன? வருங்காலத்தில் இத்தகைய
பெரும் இழப்பு ஏற்படாமல் பாதுகாக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
என்ன முடிவு எடுத்திருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்



1985 ஏப்ரல் 10]

(முற்பகல் 10-40)

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே தெரிவித்ததைப்போல், இதுபற்றிய திட்டவட்டமான கருத்து ஏதும் கொள்ளப்படவில்லை. இதைக் குறித்து ஐதராபாத்திலுள்ள அகில இந்திய நெல் ஆராய்ச்சி நிலையம் ஆராய்ச்சியை மேற்கொண்டிருக்கிறது. நமது மாநில வேளாண்மைப் பல்கலைக் கழகமும் ஆராய்ந்து வருகிறது. பாதிக்கப்பட்ட இந்தப் பயிரை பிலிப்பைன்சில் உள்ள உலக நெல் ஆராய்ச்சி நிலையத்திற்கும் அனுப்பியிருக்கிறோம். இதைத் தடுப்பதற்கு இப்போது ஒரு முறையைக் கண்டுபிடிக்கவில்லை என்றாலும், இதைத் தாக்குப் பிடிக்கத் தக்க புதிய நெல் ரகங்களைக் கண்டுபிடிக்கும் முயற்சிகளையும், அத்தகைய நெல் ரகங்களை வழங்கும் முயற்சியையும் மேற்கொள்ளலாம்.

**திரு. எல். ஜெயச்சந்திரன்:** தலைவர் அவர்களே, இந்த நோய் குறித்து வேளாண்மைப் பல்கலைக் கழகம் விரிவான ஆய்வையும் தடுப்பு நடவடிக்கை குறித்த ஆராய்ச்சியையும் மேற்கொண்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த நோயின் காரணமாக தென்னாற்காடு, வடாற்காடு மற்றும் செங்கை மாவட்ட விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அரசு ஏதாவது உதவி அளிக்க முன்வருமா? அதாவது நிதியுதவி என்று இல்லாவிட்டாலும்கூட, பெர்டிலைசர் போன்றவற்றிற்காவது மானியமாக ஒரு தொகையை அளிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** பாதிப்பின் அளவைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு நிவாரணம் அளிக்கத்தக்க விதிமுறைகளுக்குட்பட்டிருந்தால், அரசு இதை ஆராயும். விவசாயத் துறையைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே அவர்களுக்கு 50 சதவீத மானிய விலையில் மருந்துகள் வழங்கப்படுகின்றன.

**திரு. பா. ரா. தாமஸ்:** இந்திய ஆராய்ச்சி நிறுவனத்தால் வெளியிடப்படுகிற அதிகப்படியான உற்பத்தி தரும் நெல் வகைகளை விளைச்சல் செய்யும் போது இயற்கை உரங்களை நாம் அதிகமான அளவுக்குப் பயன்படுத்தாத காரணத்தால், இத்தகைய நோய்கள் பயிரைத் தாக்கும் நிலை ஏற்படுகிறது என்று சொல்லப்படுகிறது. நடைமுறையில் அதிகமான அளவுக்கு விவசாயத்தில் ஈடுபடுகிறவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றால், இத்தகைய நோய் வந்து பயிர்களைத் தாக்குவதற்குக் காரணம் நாம் இயற்கையான உரங்களை அதிகமாகப் பயன்படுத்தாததுதான் என்கிறார்கள். நிலத்திலேயே

இயற்கையான சத்து இருந்தால், இத்தகைய நோய்களைத் தடுக்க முடியு என்கிறார்கள். எனவே இத்தகைய நோய்கள் பயிர்களைப் பாதிக்கும்போ இயற்கையான உரங்களை அதிகமாகப் பயன்படுத்துகிற வகையில் வேளா மைத் துறை விவசாயிகளுக்கு அறிவுரை வழங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** நாம் ஒவ்வொன்றிலிருந்தும் பு புதிய பாடத்தைப் பெறுகிறோம். தொடர்ச்சியாக நாம் நடவடிக்கைகள் மேற்கொள்கிறோம். அதன் அடிப்படையில் புதிய புதிய முயற்சிகளை மேற்கொள்கிறோம். ஒரு நெல் ரகம் அதிகமான விளைச்சலைத் தருகிற என்றால், அதை நாம் விவசாயிகளுக்குப் பரிந்துரை செய்கிறோம். அ நோய் தாக்குதல் ஏற்படும்போது அதைக் கட்டுப்படுத்துவதற்கா முயற்சியில் வேளாண்மைத் துறை அதிகாரிகள் ஈடுபடுகிறார்கள்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தஞ்சை, புதுக்கோட்டை மற்றும் திரு மாவட்டங்களில் துங்ரோ மற்றும் மஞ்சள் குட்டை நோயால் பல விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இதன் காரணமாக அதிகமா நட்டம் ஏற்பட்டிருக்கிறது. பாதிப்பின் அளவைக் குறித்து வேளாண்மை இலாக்கா புள்ளிவிவரங்களைச் சேகரிக்கிறது என்று அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். இவ்வாறு பயிர்களுக்கு நோய் வந்ததன் காரண மாக பாதிக்கப்பட்ட விவசாயப் பெருங்குடி மக்களிடம் ஏற்கெனவே கடன் வசூல் என்ற பெயரால் ஜப்திகள் போன்றவை நடைபெறுகின்றன. எனவே பாதிக்கப்பட்ட விவசாயிகள் பற்றிய புள்ளிவிவரங்கள் தயாரிக்கப்பட்டு அவ களுக்கெல்லாம் நட்ட ஈடு தரவோ, வரி ரத்து செய்யவோ வேண்டும். அதற்கு முன்னாலே வரி வசூல், ஜப்தி போன்றவற்றை ஒத்தி வைத்துப் பின்னாலே வசூலிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென்று இந்தத் துறை வருவாய்த் துறைக்குப் பரிந்துரை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** நடவடிக்கைகள் வருவாய்த் துறை மூலமாக எடுக்கப்படுகின்றன. பாதிப்பின் அளவைக் கணக்கில் எடுத்துக் கொண்டு, உரிய கருத்துக்களை நாம் வருவாய்த் துறைக்குத் தெரிவிக்கிறோம். அவர்களும் நிச்சயமாக அதைக் கருத்தில் கொள்வார்கள்.



**'துங்ரோ"**

***15 வினா—திரு. எல். ஜெயச்சந்திரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) பல மாவட்டங்களில், 'துங்ரோ' என்ற நோயினால், சுமார் ஒரு லட்சம் ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள நெற்பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், இது குறித்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** (அ) ஆம். சுமார் 25,000 ஏக்கர்கள் பாதிக்கப்பட்டன.

(இ) இந்நோய் சொர்ணவாரி மற்றும் குறுவை பட்டத்தில் சுமார் 25,000 ஏக்கர் பரப்பில் காணப்பட்டது. நோய் தாக்கிய பகுதிகளில் இந் நோயைப் பரப்பும் பச்சைத் தத்துப் பூச்சியை ஒழிக்க பூச்சி மருந்துகள் 50 சத மானியத்திலும், மருந்தடிக்க ஒரு எக்டேருக்கு ரூ. 30 மானியமாகவும் வழங்கப்பட்டு பரந்த அளவில் மருந்தடிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு இந்நோய் கட்டுப் படுத்தப்பட்டது.

(முற்பகல் 10.45)

**திரு. எல். ஜெயசந்திரன்:** இந்த நோய் ஏற்படுவதற்கு முக்கிய காரணம் என்ன என்பதை விரிவாக அரசு தருமா என்பதை அறிய விரும்புகிறேன். வாய்க்கால் சரியாக இல்லாமல் நீர் தேங்கியிருப்பதுதான் இந்த நோய் வருவ தற்குரிய காரணம் என்று அறியப்படுகிறது. அது உண்மையா என்பதை அறிய விரும்புகிறேன். வாய்க்கால்களை ஆங்காங்கே ஆக்கிரமித்துக்கொண் டிருப்பதால் இந்த நோய் இருக்கிறது என்று கேள்விப்படுகிறோம். அதுவும் உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** இதற்கும் அந்த நோய்க்கும் எந்த விதமான தொடர்பும் இல்லை. இந்த நோய் பரவலாக பல மாவட்டங்களில் காணப்படுகிறது. அது பரவாமல் தடுப்பதற்குரிய முயற்சிகளை நாம் மேற் கொண்டிருக்கிறோம். இப்போது பாதிப்பு அதிக அளவிலே இல்லையென்ற நிறைவு இருக்கிறது. இதற்காக பெருமளவில் பல திட்டங்களை வகுத்து விவசாயப் பெருமக்களுக்குத் தெரிவித்துக் கொண்டிருக்கிறோம்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: நீலகிரி மாவட்டத்தில் கிழங்கு விவ சாயத்தில் அதிக பாதிப்பு இல்லாமல் இருப்பதற்காக பயன்படுத்துவது 'கெமிக்' என்ற மருந்தாகும். அது போப்பால் கார்பைட் தொழிற்சாலையில் தயா ரிக்கப்பட்டு வந்தது. இப்போது அந்தத் தொழிற்சாலை மூடப்பட்டு விட்ட தால், அந்த மருந்து கிடைக்கவில்லை. ஆகவே விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ள சூழ்நிலையில் புதிய மாற்று மருந்தை தயாரித்து அளிக்கும் நோக்கம் அரசுக்கு உண்டா? இது குறித்து ஏதேனும் செயல்முறையை அரசு மேற்கொண்டிருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** இதுபற்றி அரசு ஆராயும்.

**திரு. எல். ஜெயச்சந்திரன்:** பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகள் அரசிடம் நஷ்ட ஈடு கோரியிருப்பதாக அறிகிறேன். அவர்களுடைய கோரிக்கையை அரசு ஏற்று நிவாரணம் அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தொடர்புடைய மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அப்படிப்பட்ட சில பரிந்துரைகள் வந்திருக்கக்கூடும் என்று நினைக்கிறேன். அதுபற்றி அரசு கனிவோடு முடிவு எடுக்கும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்படவில்லை என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்புகள்.

### (1) மேலவை உறுப்பினர் திரு. பா. ரா. தாமஸ் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டது குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** 9—4—1985 அன்று கைது செய்யப் பட்ட மேலவை உறுப்பினர் திரு. பா. ரா. தாமஸ் அவர்கள் நேற்று மாலை விடுதலை செய்யப்பட்டார் என்ற தகவல் காவல் துறை ஆணையரிடமிருந்து வந்திருக்கிறது. அவரும் வந்து இங்கே அமர்ந்திருக்கிறார் என்பதை மகிழ்ச்சி யோடு தெரிவித்துக்கொள்கிறேன்.



### (2) கவன ஈர்ப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்ளப்படாதது குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** கவன ஈர்ப்புத் தீர்மானம் சம்பந்தப் பட்ட அமைச்சர் அவையில் இல்லாததால், அது நாளைக்கு எடுத்துக்கொள்ளப் படும்.

## 3. 1985-86 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எவ்வளவு தான் வேண்டுகோள் விடுத்தாலும், விளக்கங்கள் கொடுத்தாலும், நேரம் நீள்வது நிற்கவே மாட்டேன் என்கிறது. குறுக்கீடுகள் இல்லாமல் இருந்தால், பேசுபவர்கள் பேசி முடிப்பார்கள். ஆகவே, தயவுசெய்து குறுக் கீடுகளை நிறுத்திக்கொள்ள வேண்டும். பேசுபவர்களும் பத்து நிமிடங் களுக்குள் முடிக்குமாறு வேண்டிக்கொள்கிறேன். நாம் இன்றைக்குள் இதை முடித்தாக வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. அருணாசலம் அவர் களை அழைக்கிறபோது, இதைச் சொல்வதாக எண்ண வேண்டாம். தொடக் கத்திலே இருப்பதால், இதைச் சொல்கிறேன்.

*** திரு. க. அருணாசலம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் பங்கேற்றுக் கொள்ள எனக்கு வாய்ப்புக் கொடுத்த தங்களுக்கு நன்றி சொல்லிக் கொள்கிறேன்.

1985-86 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை ஒரு பற்றாக்குறை அறிக்கை. ஒட்டு மொத்தமாக வருவாய்க் கணக்கு, மூலதனக் கணக்கு, பொது நிதிக் கணக்கு இவற்றைக் கூட்டிக் கழித்து 264.20 கோடி ரூபாய் பற்றாக்குறை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனினும் வருவாய்க் கணக்கில் வரவு 2,368.46 கோடி, செலவு 2,314.86 கோடி. ஆகவே வருவாய்க் கணக்கில் உபரி யாக 53.60 கோடி ரூபாய் கிடைத்திருக்கிறது. மூலதனக் கணக்குச் செலவு, பொது நிதி இவைகளைச் சேர்த்து பற்றாக்குறை ரூ. 313.20 கோடியாக இருக்கிறது. இறுதியில் நிதி வாயில்களை எப்படியாவது பெருக்குவது என்பது நியாயமானது, தவிர்க்க முடியாதது. இவ்வாண்டு நிதி வாயில் களைப் பெறுவதற்காக வரி வதிப்பு செய்திருக்கிறார்கள். இதன் மூலமாக 49 கோடி ரூபாய் கிடைக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த வருவாய் அவசியம்தான். இருந்தாலும் 264.20 கோடி ரூபாயை நமது அரசு சிக்கனம் மூலமாகவும் வர வேண்டியவைகளைச் சரியாக வசூலிப்பதன்

[திரு. க. அருணாசலம்] [1985 ஏப்ரல் 10

முல்லையாகவும் பெறலாம். இதற்கு முந்தைய ஆண்டுகளில்கூட உபாயமாகக்
காட்டியிருக்கிறார்கள். 313.20 கோடி ரூபாய் பற்றாக்குறையை நிறைவு செய்
வதற்காக 49 கோடி ரூபாய் வரிவிதிப்பு செய்திருக்கிறார்கள். இந்த வரி

(மாற்றுத் தலைவர் திருமதி வி. ஜெயலட்சுமி தலைமை)

(முற்பகல் 10-50)

விதிப்பையும் எந்தத் துறையிலே செய்திருக்கின்றார்கள் என்று பார்க்க
வேண்டும். நேற்றையதினம் ஆளும் கட்சி உறுப்பினர் அவர்கள் அரசுக்குள்ள
வருவாய் வாய்ப்புகளைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அந்த வாயில்களை
எல்லாம் நாம் சரியாகப் பயன்படுத்தியிருந்தால், இந்தக் குறைவுகூட இருந்
திருக்காது. இந்த நிதிநிலை அறிக்கையில் ஆயத் தீர்வை மேலும் பல்க்
லிட்டருக்கு ரூ. 4-லிருந்து ரூ. 6-க்கு உயர்த்தப்பட்டிருக்கின்றது
என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். இதன் மூலம் ரூ. 40 கோடி அளவுக்கு
வருவாய் கிடைக்கும் என்று இருக்கின்றது. இந்த ரூ. 40 கோடி வரி விதிப்பை
மக்கள் கண்ட உடனே, அவர்களுக்கெல்லாம் ஒரு சந்தேகம் ஏற்படுகிறது.
அண்மையில் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் வருகின்ற செப்டம்பர்
15 ஆம் தேதி அன்று மதுவிலக்கு தீவிரமாக அமுலாக்கப்படும் என்று
அறிவித்திருந்தார்கள். அது நடக்குமா, அது சந்தேகமாகிவிடுமா என்ற
எண்ணத்தை அவர்களிடையே உண்டாக்குகின்றது. ஆனால் அந்த வரியை
நேரடியாகக் கொடுத்து விடுவார்கள், அதனால் விலை உயராது என்று
சொல்கின்றார்கள். வழக்கமாக எந்தப் பொருள் மீதாவது விற்பனை வரி
போடப்பட்டால், அதை வியாபாரிகள் கொடுப்பதில்லை. அது மக்களைத்
தான் சேருகின்றது. மக்கள் கொடுத்து அதைத்தான் வாங்கிக் கொடுப்பார்கள்.
சிலர் விலை கூடுதல் என்று குடிக்காமல் விட்டாலும் விட்டுவிடலாம் என்று
சொல்லலாம். ஆனால் குடிக்கின்றவர்கள் அதிகமாகக் குடிக்க வேண்டும்
என்று நினைத்தால், அதன் காரணமாக கள்ளச் சாராயம்தான் அதிகமாக
ஆகக்கூடும். இப்போதெல்லாம் பலர் குடிக்கின்றார்கள். முன்பெல்லாம்
ஊரிலே ஒருவர் இருவர் என்று குடிப்பவர்கள் இருப்பார்கள். அவர்களைப்
பார்த்து குடிக்காதவர்கள் சிரிப்பார்கள். இப்போதெல்லாம் குடிப்பவர்கள்
அதிகமாக ஆகிக் கொண்டிருக்கின்றார்கள். இப்போது யார் யாரைப்
பார்த்துச் சிரிப்பது? அவர்களே அவர்களைப் பார்த்துச் சிரித்துக்கொள்ள
வேண்டியதுதான். இந்த நிலைமைகள்தான் வளர்ந்திருக்கின்றன. இந்த
நிலை மாற்றப்பட வேண்டும். சாராயத்தின் மீது உள்ள வரி வருவாய் ரூ. 40
கோடியை, ஆயத் தீர்வை விலக்கப்பட்டிருக்கின்றது என்று சொல்லிவிட்டால்,



1985 ஏப்ரல் 10] [திரு. க. அருணாசலம்]

மக்கள் எல்லாம் அமைதியாக இருப்பார்கள். மதுவிலக்கு வரும் என்று
இருக்கின்றார்கள். மதுவிலக்கைக் கண்டிப்பாக அமுல் நடத்துவார்கள்
என்று திருப்தியடைகிறார்கள், செப்டம்பர் மாதத்தில் வரும் என்று மக்கள்
காத்துக் கொண்டிருக்கின்றார்கள். இந்த வரியை விலக்கினால்தான், மக்கள்
அந்த உணர்வைப் பெறுவார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன். நான்
கேட்டுக்கொள்வது, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் எப்படியாவது
வேறு வழியிலே வரி பெற்றுக் கொள்ளலாம். நாம் நீண்ட கடற்கரையைப்
பெற்றிருக்கின்றோம். அங்கே மீன்வளம் இருக்கின்றது. முத்து வளம் இருக்
கிறது. இவற்றின் மீதெல்லாம் வரி போட்டு பணத்தை எடுத்துக் கொள்ளலாம்.
வரி போடும்போது அதைப் பார்க்க வேண்டும். நேரடியாக வியாபாரி
களிடம் பெறலாம். அல்லது அந்த வியாபாரத்தை அரசே எடுத்துக்
கொள்ளலாம். இப்போது மறைமுக வரி போடுகின்றார்கள். மத்திய
அரசானாலும் சரி, நம்முடைய அரசானாலும் சரி, நேர்முக வரி போடு
வதற்கு ஏன் பயப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதை
யெல்லாம் நேற்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள்.
அதையும் திரும்ப நினைவுபடுத்துகிறேன். எனக்கு நேரம் குறைவாக இருப்
பதால், நான் இதைப்பற்றி இன்னும் அதிகம் பேசாமல், இந்த ஆயத்தீர்வை,
பல்க் லிட்டருக்கு ரூ. 4 என்று இருப்பதை ரூ. 6 ஆக உயர்த்தும் உத்தேசத்தை
விட்டுவிடும்படியாகக் கேட்டுக் கோள்கிறேன்.

கிராம வளர்ச்சிபற்றிப் பார்க்கிறோம். கிராமங்களின் எண்ணிக்கை
வளர்ந்து கொண்டிருக்கின்றது. இதற்கு முன்னால் பணக்காரர்கள் மிகப்
பணக்காரர்களாகவும், ஏழைகள் எல்லாம் மிக ஏழைகளாகவும் ஆகிக்கொண்
டிருக்கின்றார்கள் என்று சொல்லிக் கொண்டிருந்தோம். 1970 ஆம்
ஆண்டுக்கும் 1980 ஆம் ஆண்டுக்கும் இடையிலே உள்ள காலத்தை ஆராய்ச்சி
செய்து டெல்லியிலே இருக்கும் அப்ளைட் எகனாமிக்ஸ் ரிசர்ச் வல்லுநர்கள்
சொல்லியிருக்கின்றார்கள். சில ஏழைகள் பணக்காரர்கள் ஆகியிருக்கின்றார்
கள், பணக்காரர்கள் ஏழைகள் ஆகியிருக்கின்றார்கள் என்று அந்த நிறுவனம்
சொல்லியிருக்கின்றது. அது உண்மையாக இருக்குமானால் சரி. ஆனால்
எனக்கு அப்படித் தெரியவில்லை. நாம் உண்மையாக எடுத்துக்கொண்டிருக்
கின்ற முயற்சிகளினால் மேலும் நல்ல வளர்ச்சி அடைய முடியும். கூடிய
சீக்கிரத்திலே நம் நாட்டிலே சமதர்மத்தை உண்டாக்கிவிடலாம் என்ற
நம்பிக்கை நமக்கு உண்டாகியிருக்கின்றது. ஆனால் இந்த வரிகளைப்
போடும்போது, சில பொருள்களுக்கு 5 சதவிகிதம் கொடுத்துவிட்டு, சில
வற்றிற்கு ஒரு முனை வரி போட வேண்டும் என்று இருக்கின்றது. 5 பொருள்

களுக்கு ஒருமுனை வரி போட்டிருக்கிறோம். அனுபவத்தின் பேரில் பார்த்து அவசியமான பொருள்களுக்கு ஒருமுனை வரி கொண்டுவரலாம். இப்போது எடுத்துக் கொண்டிருக்கின்ற பொருள்கள் மக்களுக்கு மிகவும் அவசியமானவைகள். வரி 5 சதவிகிதத்திலிருந்து 8 சதவிகிதமாகியிருக்கிறது. அதனால் விலை ஏறக்கூடும். புளி, மஞ்சள், கொத்தமல்லி போன்ற விவசாயப் பொருள்களின்மீது இந்த வரியைப் போட்டிருப்பது, மக்கள் மத்தியிலே ஒரு அதிருப்தியை ஏற்படுத்தும். சந்தேகம் ஏற்படும். ரூ. 4, 5 கோடி வரும் என்று இருக்கிறோம். அதை அவசியம் குறைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-55)

இன்னொன்று நான் சொல்ல விரும்புகிறேன். கிராமங்களிலே எல்லாம் இப்போது மண் சுவர்கள் வைத்தாலும், வெள்ளை அடித்து அழகாக வைத்துக் கொள்கிறார்கள். முன்பெல்லாம் கோயம்பத்தூரிலேதான் எல்லோரும் வெள்ளை அடித்து, அழகாக வைத்திருப்பார்கள். இப்போது மதுரை மாவட்டத்திலும் மண் சுவர் வைத்து தாங்களாகவே வீடுகளைக் கட்டிக்கொண்டு, அதற்கு சுண்ணாம்பால் வெள்ளையடித்து வைத்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே சுண்ணாம்புக்கல் மீது போட்டிருக்கும் வரியை எடுத்துவிட்டால், அரசுக்குப் பெரிய நஷ்டம் வந்துவிடாது. மக்களுக்கும் இன்னும் சுத்தமாக இருக்க வேண்டும், ஆரோக்கியமாக இருக்க வேண்டும், சுண்ணாம்பு அடிப்பதன்மூலம் பல நோய்களைத் தடுக்கலாமென்ற எண்ணம் வரும்.

கிராம வளர்ச்சியைப்பற்றி நாம் அதிகம் பேசுகிறோம். அதற்கு முதலிடம் கொடுத்து, வேளாண்மைத் துறையிலே, தொழிற் துறையிலே மற்றும் பல துறைகளிலே வளர்ச்சிப் பணிகளைச் செய்து வருகிறோம். கிராமங்களுக்கு முதுகெலும்பு மாதிரி இருப்பது கல்வி நிறுவனங்கள், பஞ்சாயத்துக்கள், கூட்டுறவு ஸ்தாபனங்கள் என்று நேரு அவர்களே சொல்லியிருக்கிறார்கள். சுவரை வைத்துத்தானே சித்திரம் எழுத வேண்டும். சுவர் இல்லாமல் சித்திரம் எழுத முடியாது. அதைப்போல செலவழிக்கும் பணமெல்லாம் ஏழை மக்களுக்கு உதவாமல் போய்விடுகிறது. ஆகவே, இப்போது பஞ்சாயத்துக்களை பலப்படுத்த முயற்சி எடுக்கப்படுகிறதென்று சொல்லுவது மகிழ்ச்சியை அளிக்கிறது. பஞ்சாயத்துத் தேர்தல்கள் நடந்து, பஞ்சாயத்து அமைப்புகள் வந்தால், அவர்களுக்குத் தேவையான வாய்ப்புகளையும், வசதிகளையும் கொடுக்க வேண்டும். எப்படி மத்திய அரசு மாநில அரசுக்கு





நிதியாதாரங்களையும் வசதி வாய்ப்புக்களையும் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறோமோ அதைப்போல நாமும் கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு வாய்ப்புகளைக் கொடுத்து, உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் கல்வி அமைச்சராக இருந்தவர்கள். பள்ளிகளில் வாழ்க்கை முறையோடு ஒன்றிய கல்வி முறை வரப் போகிறது. அதற்காக ஏராளமான பணம் தேவையாக இருக்கும் என்றும், உலக வங்கியிடம் கடன் வாங்கிச் செய்யப் போகிறோமென்றும் சொல்லியிருக்கிறார்கள். முதலிலே அந்த வேலையைச் செய்வதற்கு ஒரு காசும் தேவையில்லை. நான் பல ஆண்டுகள் குழந்தைகளோடு பணியாற்றியவன் என்ற முறையில் சொல்கிறேன். குழந்தைகளை, சூழ்நிலையை உற்றுப் பார்க்க வாய்ப்பு கொடுப்பதன் மூலமாகவும், அங்கேயுள்ள வசதிகளை வைத்துக்கொண்டே அவர்களைத் தயாரிப்பதன் மூலமாகவும், பணச் செலவு இல்லாமல் வாழ்க்கை முறையோடு ஒன்றிய கல்வி முறையைக் கொண்டுவர முடியும். இதற்காக ஒன்றும் அதிகம் செலவாகாது. கல்வித் துறையும் இதைப்பற்றி அதிகமாக கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். இப்போது பள்ளிக்கூடங்கள் எல்லா ஊர்களிலும் இருக்கின்றன. ஆனால் ஒரு பள்ளியிலும் சுகாதார வசதி கிடையாது. கேட்டால், சுகாதார வசதிகளை ஏற்படுத்த பணமில்லை என்று சொல்லுகிறார்கள். மக்கள் நல்வாழ்வுத் துறையினர் ஏராளமான ஆஸ்பத்திரிகளை ஏற்படுத்த செலவிட்டுக் கொண்டிருக்கிறார்கள். நோய் வந்த பிறகு சிகிச்சை பண்ண செலவழிக்கிறார்களே தவிர, குழந்தைகளுக்குக் கழிப்பறைகள் கட்ட முன்வரவில்லை. இதை எல்லாம் செய்து கொடுத்தால், நோய் வராமலே போய்விடும். இதிலும் கவனம் செலுத்த வேண்டும்.

அடுத்து, இன்டகிரேடட் டெவலப்மென்ட் பற்றி அதிகமாகப் பேசுகிறார்கள். இதற்காக பல துறைகளில் ஏராளமான பணத்தைச் செலவழித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்தில் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஆங்கில முறை மருத்துவத்திற்கு ஏராளமான ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன. சேலத்திலே ஒரு மருத்துவக் கல்லூரி வரப் போகிறதென்று சொல்லுகிறார்கள். அதற்காக மகிழ்ச்சி ஆனால் அந்தக் கல்லூரி சித்த மருத்துவக் கல்லூரியா, இயற்கை மருத்துவக் கல்லூரியா என்று தெளிவாக இல்லை. ஒன்றைக் குறைத்துத்தான் இன்னொன்றைச் செய்ய வேண்டுமென்று சொல்லு

[திரு. க. அருணாசலம்] [1985 ஏப்ரல் 10

வார்கள். ஆங்கில மருத்துவம் வேண்டாமென்று சொல்லவில்லை. சித்த மருத்துவர்கள் ஆங்கில முறை மருந்தை சில சமயங்களில் கொடுக்கிறார்கள். அதில் தவறில்லை. ஆனால் சித்த மருத்துவர்கள் சித்த மூலிகைகளை அதிகமாகப் பயன்படுத்துகிறார்கள் என்று நம்புகிறோம். எனவே இதில் மேலும் அதிக அக்கறை கொள்ள வேண்டும். இந்திய மருத்துவ முறை வளர அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று சொல்லி, நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளவற்றை இதற்குத் தகுந்த முறையில் மாற்றி ஆவன செய்யவேண்டுமென்று கேட்டு, வாய்ப்பு தந்த தலைவரவர்களுக்கு நன்றி தெரிவித்து, அமைகிறேன்.

(முற்பகல் 11-00)

* திரு. மிசா கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன் : மாற்றுத் தலைவர் அவர்களே, 1985-86ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை மீது நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில பல கருத்துக்களை எடுத்து வைக்கின்ற வாய்ப்பினை நல்கியமைக்கு முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு நிதியமைச்சர் இந்த அறிக்கையிலே ஒரு நல்ல கருத்தைத் தெரிவித்திருக்கிறார். 112வது பாராவில், இந்த மன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்கள் இந்த அறிக்கையின் மீதான விவாதத்தின்போது நல்ல பல கருத்துக்களை எடுத்துச்சொன்னால், அந்தக் கருத்துக்களின் தன்மையிலே இந்த அவை பெருமைப்படத்தக்க அளவிலே அவைகளுக்கு உரிய முக்கியத்துவம் தரப்படும் என்று மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு நல்ல உணர்வை மாண்புமிகு நிதியமைச்சர் வளர்த்திருப்ப தற்கு முதலிலே அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். இதிலே இருக்கின்ற பல நல்ல அம்சங்களை எதிர்த் தரப்பினர் பாராட்டக் கூடாதா என்று ஆளும் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டார்கள். நல்லவைகளை உள்ளபடியே நாங்கள் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

குறிப்பாக சிறார் நலத் திட்டங்கள் என்கிற பெயரில் 15—9—1985-லிருந்து இலவசச் சீருடை அளிக்க இந்த அரசு முடிவு செய்துள்ளதை உள்ள படியே நான் பாராட்டுகிறேன். அதைப்போலவே முதல் வகுப்பிலிருந்து 8வது வகுப்பு வரை படிக்கின்ற மாணவர்களுக்கு 11.5 கோடி ரூபாய் செலவில் இலவசமாகப் பாடப் புத்தகங்கள் வழங்க இருப்பதாகச் சொல்லியிருக்கி



1985 ஏப்ரல் 10] [திரு. மிசா கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன்]

றார்கள். சத்துணவு தொடர்பாக இலவசச் சீருடை, இலவசப் புத்தகங்கள் வழங்க இந்த அரசு முடிவெடுத்திருப்பது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். சீருடைக்காக 13.5 கோடி ரூபாயும், பாடப் புத்தகங்களுக்காக 11.5 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. மொத்தத்தில் இதற்காக 25 கோடி ரூபாய அரசு ஒதுக்கியிருப்பது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். ஆனாலும இதிலே "ஏழையெளிய மாணவர்களுக்கு" என்கிற ஒரு வார்த்தையைச் சொல்லியிருக்கிறார்கள். அப்படி இல்லாமல் சத்துணவு சாப்பிடுகின்ற அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவசமாகச் சீருடை வழங்குகின்ற திட்டத்தையும், இலவசமாகப் பாடப் புத்தகங்கள் வழங்குகின்ற திட்டத்தையும் நீட்டிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால், உள்ளபடியே இன்னும் நாங்கள் வரவேற்கக்கூடிய ஒன்றாக இருக்கும். இப்படி இத்திட்டத்தைப்பற்றி அறிவிக்கின்றபோது, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இதுதொடர்பாக வேறு சில திட்டங்களையும் அறிவித்திருக்கிறார்கள். இப்படி இலவசச் சீருடை வழங்குவதன் வாயிலாக கிராமப்புறங்களிலுள்ள நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க வகை செய்திருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதுபோல் கிராமப்புற இளைஞர்களுக்கான சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் சீருடை தைக்க மகளிர் பயன்படுத்தப்படுவார்கள். அதன் மூலம் அவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்றும், அவர்களுக்குத் தையல் இயந்திரம் வழங்கப்படும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். இப்படி இலவசச் சீருடை வழங்குவதன் மூலம் அது தொடர்பாக பல திட்டங்கள் ஏற்பட வாய்ப்பிருக்கிறது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த வகையிலே உள்ளபடியே இதனை நான் வரவேற்கிறேன். ஆனால் இருக்கின்ற சங்கடம் எல்லாம், உள்ளபடியே இவைகள் நடைமுறைக்கு வருகின்றபோது, அப்படி நடைபெறுவதில்லை என்பதை நான் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் தெரிவிக்கும்போது என்னவோ நல்ல நோக்கத்தோடுதான் தெரிவிக்கிறார்கள். ஏனென்று சொன்னால் ஏற்கெனவே சென்னையில் ஒரு முறை அப்படித்தான் தமிழகத்தின் முதலமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் படித்து வேலையில்லாத வாலிபர்களுக்கு வேலைவாய்ப்பு தருவதற்காக மூன்று சக்கர வண்டிகளிலே காய்கறி தெருக்களிலே கொண்டுபோய் அங்குள்ள வீடுகளுக்கு அளிப்பதாகச் சொல்லி மிகப் பெரிய விழாவுக்குக் கூட ஏற்பாடு செய்தார்கள். அப்போது அவர்கள் மிகத் தெளிவாகச் சொன்னார்கள். "வெறும் காய்கறித் திட்டம் என்று இதை எண்ண வேண்டாம். படித்து வேலையில்லாதிருப்பவர்களுக்கு வேலைவாய்ப்பு தருவது மட்டுமல்ல, வீடு தேடி காய்கறி வருகிறது என்பது மாத்திரமல்ல, மூன்று சக்கர சைக்கிள் செய்ய தொழிலாளர்கள் தேவைப்

[திரு. மிசா கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன்] [1985 ஏப்ரல் 10

படுவார்கள், அதுபோல் நட் செய்ய, போல்ட் செய்ய தொழிலாளர்கள் தேவைப் படுவார்கள். அந்த அடிப்படையில் வேலைவாய்ப்பு ஏராளமான பேர்களுக்குக் கிடைக்கும்" என்று சொல்லி ஒரு நல்ல திட்டத்தை அவர்கள் அன்றையதினம் அறிமுகம் செய்தார்கள். ஆனால் உள்ளபடியே காய்கறி சென்னையிலிருக்கிற வீடுகளை நோக்கி மூன்று சக்கர சைக்கிள்களில் வரவேயில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தத் திட்டத்தின்கீழ் படித்து வேலையில்லாத

(முற்பகல் 11-05)

வாலிபர்கள் எவ்விதப் பயனும் அடையவில்லை. அதைப்போலவே அதன் தொடர்பாக மூன்று சக்கர சைக்கிள்கள் தயாரிக்கும் தொழிலும் சரியாகப் பெருக உரிய வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது என்று எண்ணுகிறபோது, இதிலே "இலவசச் சீருடை பள்ளிப் பிள்ளைகளுக்கு வழங்குவோம், அதன் காரணமாக நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பு பெருகும், தைப்பதற்கு, பெண் களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்" என்று அறிவிக்கிறபோது, இவைகளை யாவது நல்லமுறையில் நிறைவேற்ற வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் திட்டங்களை நிறைவேற்ற என்னென்ன நிதியாதாரங்கள் இருக்கின்றன என்பதைக் குறிப்பிடுகிறபோது, நிதியமைச்சர் அவர்கள், "இம்மாநிலத்தின் நிதிவாயில்களைப் பெருக்க வேண்டிய அவசியம் மிக அதிகமாக இருந்தபோதிலும், மத்திய அரசின் வரவு-செலவுத் திட்டத்தில் அறிவித்துள்ள புதிய வரிகளால் பெட்ரோலியப் பொருட்களின் விலைகள் உயர்ந்துள்ள நிலையில், வரி உயர்வால் நுகர்வோர்களுக்கு இடர்ப்பாடு உண்டாகக்கூடிய பண்டங்கள் மீது புதிய வரிகள் விதிப்பதையும் வரிகளைக் கூடுதலாக்குவதையும் தவிர்த்துள்ளேன். சாதாரண மக்களைப் பாதிக்காத வகையில் கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்டக்கூடிய தெரிந்தெடுக்கப்பட்ட சில வரி விதிப்பு நடவடிக்கைகள் மட்டும்தான் கருதிப் பார்க்கப்பட்டுள்ளன. அடுத்த ஆண்டில் நிறைவேற்றக் கருதப்பட்டுள்ள வரிவிதிப்பு நடவடிக்கை களாக, சாராயத்தின் மீதுள்ள ஆயத்தீர்வையை பல்க் லிட்டர் ஒன்றுக்கு நான்கு ரூபாயிலிருந்து ஆறு ரூபாயாக உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது" என்றும், "சாராயத்தின் மீதான விற்பனை வரி தற்பொழுதுள்ள ஆறு விழுக்காட்டிலிருந்து 25 விழுக்காடாக உயர்த்தப்படும்" என்றும் தனது நிதிநிலை அறிக்கையில் டாக்டர் நாவலர் அவர்கள் சொல்லிவிட்டு, இந்த நடவடிக்கைகளால் அரசுக்குக் கூடுதலாக ரூ. 40 கோடி அளவுக்கு வருவாய் கிடைக்குமென எதிர்பார்ப்பதாகவும் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அதற்கு



1985 ஏப்ரல் 10] [திரு. மிசா கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன்]

மாறாக, இந்த வரி உயர்வால் நுகர்வோர் பாதிக்கப்படமாட்டார்கள் என்று அதிலேயே கூறப்பட்டிருக்கிறது. போடவேண்டிய வரிகளைப் போட்டுவிட்டு, நுகர்வோர் இதனால் பாதிக்கப்படமாட்டார்கள் என்றால், எப்படி என்று எனக்குப் புரியவில்லை. 40 கோடி ரூபாய் வரி வருவாயாக வருகிறது என்று இதிலே தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. டாக்டர் நாவலர் அவர்கள் சிறந்த தமிழில் பேசும் திறமைபெற்றவர்கள். சொல்கிற வார்த்தையில் வேறு ஒரு அர்த்தம் தொனிக்கிற அளவுக்குக் கூட பேசக்கூடியவர்கள். அவர்கள் இந்த வரியினால் நியாயமான அளவுக்கு அதிகமாகவே வியாபாரிகள் பயன் அடைந்திருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள் என்றால், சாராய வியாபாரிகள் ரூ. 40 கோடிக்கும் அதிகமாகவே லாபம் பெற்றிருக்கிறார்கள் என்றுதான் குறிப்பிட்டிருக்கிறார்கள். இது எப்படி இருக்கிறதென்றால், தேர்தலில் நாங்கள் தோல்வியடைந்தோம் என்று சொல்லாமல் . . .

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இப்போதே அதை விளக்கிவிடுவது நல்லது என்று கருதுகிறேன். மொத்த வியாபாரிகளுக்கோ, மற்றவர்களுக்கோ நாம் விற்பனை செய்த விலையிலிருந்து கூட்டவோ, குறைக்கவோ எந்த உரிமையும் கிடையாது. நாம் என்ன விலை நிர்ணயம் செய்கிறோமோ அதன்படிதான் அவர்கள் விற்க வேண்டும். ஆனால் சில்லறை வியாபாரிகள் எந்த விலைக்கு வேண்டுமானாலும் விற்கலாம். அதை நாம் கட்டுப்படுத்த முடியாது. இப்போது அவர்கள் விற்கிற விலையைக் கவனிக்கிறபோது, சில்லறை வியாபாரிகள், அவர்கள் ஏலம் எவ்வளவுக்கெவ்வளவு வித்தியாசத்தில் எடுக்கிறார்களோ அதற்குத் தக்கவாறு, கடைக்குக் கடை, ஜில்லாவுக்கு ஜில்லா, அவர்களுடைய தொகைக்கேற்ப விலை ஏற்றமாக இருக்கிறது. நான் சில்லறை வியாபாரத்தைப் பற்றித்தான் குறிப்பிட்டேன். மொத்த வியாபாரத்தைப் பொறுத்தவரையில், நியாய விலைக்கு மேல் விற்க முடியாது என்பதைத் திட்டவட்டமாக, தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். ஒரு வார்த்தை வேண்டுமானால் விடுபட்டு இருக்கிறது என்பதை ஒத்துக்கொள்கிறேன். 'சில்லறை வியாபாரிகள்' என்ற வார்த்தை விடுபட்டிருக்கிறது. சில்லறை வியாபாரிகள் என்று இல்லாமல், வியாபாரிகள் என்று இருப்பதால், எல்லா வியாபாரிகளுக்கும் வருகிறது என்ற எண்ணம் ஏற்பட்டுவிட்டது என்று கருதுகிறேன். அது சில்லறை வியாபாரி களுக்குத்தானே தவிர, மொத்த வியாபாரிகளுக்கல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1985 ஏப்ரல் 10

**திரு. மிசா கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன் :** அதை நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், அவர்கள் நியாயத்திற்கு அதிகமாகவே பெற்றிருக்கிறார்கள் என்று சொல்லியிருப்பதைக் குறிக்கத்தான். உதாரணமாக, நான் ஐந்து தோசை சாப்பிடுகிறேன் என்றால் அது நியாயம். 25 தோசை சாப்பிட்டால் அது நியாயமல்ல, அநியாயம் என்றுதான் மற்றவர்கள் குறிப்பிடுவார்கள். எனவே அவர்கள் சொல்லியிருக்கிற அர்த்தத்தில் பார்த்தாலும், 40 கோடி ரூபாயை அநியாயமாக அவர்கள் பெற்றிருக்கிறார்கள் என்றுதான் அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். நியாயமான விலைக்கு விற்கப்படுவதாக இப்போது விளக்கம் கொடுத்தார்கள். அதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இன்றையதினம், 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையில், திரு. கே. எஸ். ராமகிருஷ்ணன் என்பவர் ஒரு பெட்டிச் செய்தியாக இதே விஷயத்தைப் பற்றித் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். இந்த வரியை உயர்த்துவதன் மூலமாக, மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்பு தெளிவாகச் சொல்லிய ஒரு கருத்து, 1985 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15 ஆம் தேதியிலிருந்து சாராயக்கடைகள் தமிழ்நாட்டில் நிச்சயமாக மூடப்படும் என்று சொல்லிய கருத்து, அடிபட்டுப் போய்விடுகிறது என்று

(முற்பகல் 11-10)

சொல்லியிருக்கிறார். அப்படி மூட மாட்டார்களோ என்ற ஐயத்தை உருவாக்குகிறது என்பது முதல் கருத்து. அதை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. அருணாசலம் அவர்கள்கூட எடுத்துச் சொன்னார்கள். அதைப்போலத்தான் இதிலே சொல்லியிருக்கிறார்கள். திரு. கே. எஸ். ராமகிருஷ்ணன் என்பவர் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

"The major portion of the additional tax is to come from increased rate of excise and sales tax on arrack. Finance Minister Mr. Nedunchezhiyan, by disclosing that these higher rates will be met by the licensees from out of the present high margins and will not be passed on to the consumers has, in fact, conceded the Opposition charge. . .

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் போலத்தான், திரு. ராமகிருஷ்ணனும் தவறாகப் புரிந்துகொண்டு எழுதியிருக்கிறார். இதுகுறித்துப் பேரவையிலும் விளக்கம் கூறியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களைப் போன்று அவரும் தவறாகக் கருதிக்கொண்டு, மொத்த வியாபாரிகளைக் கருத்தில் கொண்டு எழுதியிருக்கிறார். நான் சொல்வது



1985 ஏப்ரல் 10] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

மொத்த வியாபாரிகளுக்கு அல்ல. லைசென்ஸ் கொடுப்பது சில்லறை வியாபாரிகளுக்குத்தான். ஏனென்றால் இப்போது கூட கசண்டு கொடுப்பது குறைவாக இருக்கிறது. கசண்டு குறைவாக கொடுப்பதாலே உற்பத்தி குறைவாக இருக்கிறது. உற்பத்தி குறையும்போது ஏராளமாக விலையை ஏற்றியிருக்கிறார்கள். அதை எல்லாம் கணக்குப் பார்த்துத்தான் லாபம் என்று அளிக்கிறோம். அந்த வரியை விட்டுவிட்டுக்கூட நிதிநிலை அறிக்கையத் தயாரித்திருக்கலாம். ஆனாலும் அவர்கள், ஏற்றியிருக்கிற விலையை வாங்குவார்கள் என்றுதான் செய்திருக்கிறோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. மிசா கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன் :** மிக்க நன்றி. வேறு சில கருத்துக்களுக்காகத் தொடர்ந்து படிக்கலாம் என்றிருந்தேன். நான் அதைக் கூட விட்டுவிடுகிறேன். அவர்கள் எப்படி மூடுவதாக உத்தேசித்து பின்னர் மூடமாட்டார்களோ என்ற ஐயத்தை உண்டாக்குகிறது என்பதற்காகச் சொல்கிறேன். அதிலே சொல்கிறார்கள் :

"The Budget makes it clear that liquor shops will continue to exist beying M.G.R.'s repeated public assurance prior to his illness that if re-elected, his Government would definitely re-impose total prohibition from September 15, 1985".

என்று சொல்லியிருக்கிறார்கள். ஆக இப்படிச் சொல்வதன் மூலம், இதிலே தான் மிகப்பெரிய வருமானத்தை எடுத்து, அந்த வருமானத்தின்மூலம் ஏழைக் குழந்தைகளுக்குச் செலவு செய்கிறார்கள். நாற்பது கோடி ரூபாய் இதிலே யிருந்து வருமானம் வரும் என்று சொல்லியிருக்கிறீர்கள். இந்த 40 கோடி ரூபாய் எங்கேயிருந்து வருகிறது? பட்ஜெட்டிலேகூட சாதாரண மக்களைப் பாதிக்காத அளவு இது இருக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். சாராயத்தை யார் குடிக்கிறார்கள்? எந்தக் குழந்தைக்கு சத்துணவு சீருடை வழங்குகிறார்களோ அந்தக் குழந்தையின் தகப்பனார்தான் குடிக்கிறார். கடுமையாக உழைத்து சம்பாதித்த பணத்தை, வீட்டைக் கவனிக்காமல் பெண்டு பிள்ளைகளைக் கவனிக்காமல் குடித்துவிட்டு, வீட்டில் நிலைமை தடுமாறி விழும்போது, இந்த அரசு சத்துணவு வழங்குகிற, சீருடை வழங்குகிற அந்தக் குழந்தைகளின் மனது எந்த அளவு பாதிக்கப்படும் என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். மாலையில் மீண்டும் தகப்பனார் குடித்துவிட்டு வந்து பெண்களை எல்லாம் துன்பப்படுத்துகிற சூழ்நிலையை உருவாக்கி இருக்கும் போது, அந்தக் குடும்பத்திலே நல்ல சூழ்நிலை இருக்குமா என்பதை எடுத்துக்

[திரு. மிசா கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன்] [1985 ஏப்ரல் 10

காட்டத்தான் இதையெல்லாம் கூறுகிறேனேயல்லாமல் வேறு எதற்காகவும்
அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைத்
தான் அவரும் சொல்கிறார் :

"Significantly the expenditure of Rs. 184 crores on Nutritious
Meals, Uniforms and free Textbooks to poor children is exactly equal
to the excise income from arrack and toddy mainly consumed by the
very parents of these children".

இவ்வாறு எந்தக் குழந்தைக்காக இந்த அரசு ஒரு நல்ல
சிறப்பான திட்டத்தைக் கொண்டுவந்து அமல்படுத்துவதாகச் சொல்கிறதோ
அந்தக் குழந்தையின் பெற்றோர் குடித்துவிட்டு வருகிற துர்ப்பாக்கியமான
நிலை இருப்பதைத்தான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். திட்டத்தை,

அடுத்தபடியாக, மோட்டார் வாகனம்மீது வரியை மிகுதி உயர்த்த
உத்தேசிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். மாண்புமிகு நிதி
அமைச்சர் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்
பட்டிருக்கிறேன். அதில் இந்த வரி உயர்வு என்பது நகரத்திலே இருக்கக்கூடிய
பயணிகளுக்கு என்று, கூறியிருக்கிறீர்கள். இன்றைக்குள்ள நிலைமை என்ன?
சைக்கிள்களைப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறவர்கள், லூனா, மோபெட்
போன்றவைகளைப் பயன்படுத்திக்கொண்டிருக்கிற நிலைமைகளைப்
பார்க்கிறோம். சாதாரண குடும்பத்திலே இருப்பவர்கள்தான் இவற்றைப் பயன
படுத்துகிறார்கள். இந்த வரி உயர்வை ஸ்கூட்டருக்கு அதிகப்படுத்தலாம்,
மோட்டார் பைக்குக்கு அதிகப்படுத்தலாம். ஆனால் லூனா, மோபெட்
போன்ற வாகனங்களுக்கு அதிகப்படுத்த வேண்டாம் என்று கேட்டுக்
கொள்கிறேன். இன்றைக்கு நடைமுறையில் பார்க்கின்றோம். தாய்மார்கள்
தங்கள் குழந்தைகளை லூனா மோபெட்டில் உட்காரவைத்து, பள்ளிகளில்
விட்டுச் செல்வதைப் பார்க்கிறோம். இந்த வாகனங்களுக்கும் வரியை
30 ரூபாயிலிருந்து 55 ரூபாய் என்று இரண்டு மடங்காக ஆக்கியிருக்கிறார்கள்.

(முற்பகல் 11-15)

பால் விலை உயருகிறது; பஸ் கட்டணம் உயருகிறது. தாய்மார்கள்
தங்களுடைய குழந்தைகளைக் கொண்டுபோய் விடுகின்ற லூனா
மோபெட்டுக்கு மட்டும் இதிலிருந்து வரி விலக்கு அளிக்கலாம். ஏனென்றால்,
ஸ்கூட்டர் என்பது ஒரு பெரிய வாகனம். அதற்கு 30 ரூபாயிலிருந்து 55 ரூபாய்
வரை வரி போடலாம். ஒரு சமுதாயத்திலே உயர்ந்தவர்கள்தான் அதை
வைத்திருக்கிறார்கள். அவர்கள் மோட்டார் சைக்கிள் வைத்திருக்கிறார்கள்,



1985 ஏப்ரல் 10] [திரு. மிசா கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன்]

கார் வைத்திருக்கிறார்கள், பஸ் வைத்திருக்கிறார்கள், இவர்களுக்கு வரி போடலாம். இந்த லூனா மோபெட்டைப்பற்றி, நேற்றைக்கு முன்தினம் கூட 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையில், கிட்டத்தட்ட 1.35 லட்சத்துக்கு, இதுபோன்ற வாகனங்கள் சென்னையிலே மட்டும் பதிவாகி இருப்பதாகச் சொன்னார்கள். எனவே அதை உபயோகிப்பவர்களுக்கு வரி விலக்கு அளிக்கலாமென்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, சுற்றுப்புறச் சூழ்நிலைக்காக இந்த நிதிநிலை அறிக்கையிலே ரூ. 99.76 லட்சம் ஒதுக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சென்னையிலே இருக்கிற சில பிரச்சினைகளைப்பற்றி நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரலாம் என்று கருதுகிறேன். சுற்றுப்புறச் சூழ்நிலையைப்பற்றி அன்றைக்கு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாகக் கேள்வி நேரத்திலே சொன்னார்கள். எப்படிப்பட்ட சட்டம் எல்லாம் கொண்டு வந்திருக்கிறோம் என்று சொன்னார்கள். அதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் அதேநேரத்திலே இன்றைக்கு பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலையத்தைப் பார்க்கின்றபோது, அதைச் சுற்றி, 5, 6 கிலோ மீட்டர் தூரத்திற்கு எல்லாப் பகுதிகளிலேயும், காற்று எந்தப் பக்கம் அடிக்கிறதோ அந்தப் பக்கங்களில் எல்லாம் பாதிக்கின்ற அளவுக்கு பயங்கரமாக கரித்தூசி படிகின்றது. அந்த கரித் தூசி படிவதன் மூலம், அந்தப் பகுதியிலே இருக்கின்ற குழந்தைகள், தாய்மார்கள், பெரியவர்கள் அத்தனை பேருக்கும் டி.பி. வருகின்ற சூழ்நிலை வந்து, அவர்கள் மருத்துவமனைக்குச் சென்று, சளித் தொந்தரவு இருக்கிறது என்று சொன்ன உடனே, "நீங்கள் பேசின் பிரிட்ஜ் பகுதியிலே இருந்து வருகிறீர்களா அல்லது சுற்றுப்புறத்திலே இருந்து வருகிறீர்களா" என்று டாக்டர்கள் கேட்கின்ற அளவுக்கு அந்த அனல் மின் நிலையம் பெரிய தொந்தரவைத் தந்து கொண்டிருக்கிறது. நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மின்சாரத் தட்டுப்பாடு பயங்கரமாக இருக்கிறது. இந்த பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலையத்தை வைத்துக்கொண்டு மட்டும் நாம் இந்த மின்சாரக் கஷ்டத்தை நிவர்த்தி செய்துவிட முடியாது. அதை எடுத்துவிடலாம். நான் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னைவிட அவர்கள் நன்றாகக் கலராக இருக்கக்கூடியவர்கள். என்னோடு இரண்டு நாட்கள் அவர்கள் அங்கே வந்தால் அவர் என்னுடைய கலருக்கு வந்துவிடுவார். அந்த பேசின் பிரிட்ஜ் பகுதியிலே அந்த அளவுக்கு கரித் தூசி படிகிறது. நான் இன்னொன்றையும் விளையாட்டாகக்கூடக் குறிப்பிட விரும்பவில்லை. அந்தப் பேசின் பிரிட்ஜ் பகுதியிலே காற்று எந்தப்

[திரு. மிசா கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன்] [1985 ஏப்ரல் 10]

பக்கம் அடிக்கிறதோ அந்தப் பக்கத்திலே கரி விழுந்து படிகிறது. மாண்புமிகு
உறுப்பினர்கள் எல்லாம் கூட என்னோடு வரலாம். அந்த மின்ட் பகுதியிலே
இருக்கிற பால் கடைக்குப் போனால், மாலையிலே ஒரு அட்டையிலே வெறும்
பால் என்று போட்டிருப்பான். ஒரு மணி நேரம் கழித்து அந்த அட்டையை
எடுத்துவிட்டு பிறகு மசாலாப் பால் என்று போட்டிருப்பான். நான் ஒருநாள்
இதையா மசாலாப் பால் என்று சொல்கிறீர்கள் என்று கேட்டேன். பேசின்
பிரிட்ஜ் பகுதியிலிருந்து அடிக்கிற கரித் தூசி எல்லாம் இந்தப் பாலிலே
விழுந்த உடனே, அது மசாலாப் பாலாக ஆகிவிடுகிறது என்று சொன்னார்கள்.
நான் விளையாட்டாகச் சொல்லவில்லை. அந்தக் கரித் தூசியைத் தவிர்க்க
முடியவில்லை. அங்கே இருக்கிற பாத்திரத்தில் வைத்து பால் வியாபாரம்
பண்ணுகிறபோது, இந்தத் தூசி படிவதைத் தவிர்க்க முடியவில்லை.
இப்படிப்பட்ட சூழ்நிலையில் அந்த பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலையம்
நமக்குத் தேவைதானா? இதிலேயிருந்து கிடைக்கிற மின் உற்பத்தியைக்
கொண்டு சென்னையில் இருக்கிற மின்சாரத் தட்டுப்பாட்டைத் தடுத்துவிட
முடியுமா? அன்றைக்குக் கூடச் சொன்னார்கள். தனியார்கள் கூட மின்சாரம்
தயாரிப்பதற்கு சில முறைகளை வகுக்கலாம் என்று சொன்னார்கள். எனவே
பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலையத்தை முதலிலே அந்த இடத்திலிருந்து
அகற்ற வேண்டும். அதை வேறு எங்கேயாவது வெளியே கொண்டு செல்லலாம்.
அது சென்னை நகரத்திலே, மையப் பகுதியிலே இருந்துகொண்டு, சுற்றுப்புறம்
எல்லாப் பக்கமும், சென்ட்ரல் ரயில்வே ஸ்டேஷன், சூளை பக்கம், மின்ட்
பக்கம் எல்லாம் கரித் தூசியைப் படியவைக்கிறது. காற்று எந்தப் பக்கம்
அடிக்கிறதோ அந்தப் பக்கமெல்லாம் தூசி படிகிறது. எனவே அந்த
அளவுக்குப் பெரிய தொல்லையாக இருந்துகொண்டிருக்கிற அந்த பேசின்
பிரிட்ஜ் அனல் மின் நிலையத்தை கட்டாயமாக எடுப்பதற்கான முயற்சிகளை
இந்த அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, புரொபெஷன் டாக்ஸ் என்று வசூலிக்கிறார்கள். ஆயிரம்
ரூபாய்க்குக் கீழே இருந்தால் ஒன்பது ரூபாய் என்றும், ஆயிரத்துக்கு மேலே
இருந்தால் 18 ரூபாய் என்றும், அதற்கு மேலே 36 ரூபாய் என்றும் அதை
வசூலிக்கிறார்கள். அதை எல்லா இடத்திலேயும் வசூலிப்பது இல்லை.
சென்னையைப் பொறுத்தவரையில், சில நியாயமான கம்பெனிகள் அவர்
களுடைய ஊழியர்களிடமிருந்து வசூலித்துத் தருகிறார்கள். சிலர் அதில்
பெரும் பகுதியை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நடவடிக்கை



1985 ஏப்ரல் 10] [திரு. மிசா. கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன்]

எடுத்து எல்லோரிடத்திலும் வசூலிக்கவில்லை. அதை வசூலிப்பதாலே இந்த
அரசுக்கு ஒரு பெரிய வருமானம் வந்துவிடப் போவதில்லை. அதனாலே பலர்
பாதிக்கப்பட்டு, சிலர் அதிலே லாபம் பெறுகின்ற அளவுக்கு இன்றைக்கு
புரொபெஷன் டாக்ஸ் இருக்கிறது. அதை தயவுசெய்து எடுக்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வழக்கு மன்றங்களைப் பார்க்கின்றபோது, சென்னை
நகரத்திலே கிட்டத்தட்ட 19 சிட்டி சிவில் கோர்ட்டுகள் உயர்நீதிமன்றத்தின்
வளாகத்தில் இருக்கின்றன. ஸ்மால் காஸ் கோர்ட்டுகள் 14 இருக்கின்றன.
சென்னையிலே மூன்று பகுதிகளாக—ஜார்ஜ் டவுனில் ஒரு மெட்ரோபாலிட்டன்
கோர்ட்டும், எழும்பூர் மற்றும் சைதாப்பேட்டையிலே ஒவ்வொரு
மெட்ரோபாலிட்டன் கோர்ட்டும் இருக்கின்றன. அங்கே வழக்கறிஞர்கள்
சென்றால், அமர்வதற்கு நாற்காலிகள் கிடையாது. அங்கே இருக்கின்ற
நீதிபதிகளுக்கும் நாற்காலிகள் கிடையாது. நான் வேடிக்கையாக,
விளையாட்டாகச் சொல்லவில்லை. ஒரு நீதிமன்றத்திலே நான் வழக்கு
நடத்தினேன். அப்போது கிட்டத்தட்ட 7, 8 புத்தகங்களை ஆதாரமாகக்
கொண்டுபோய் வழக்குமன்றத்திலே வாதாடினேன். நீதிபதி தீர்ப்பைக் கூட
தெரிவித்துவிட்டார் . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி வி. ஜெயலட்சுமி) :** 15 நிமிடங்கள்
ஆகிவிட்டன. சீக்கிரம் முடிக்க வேண்டும்.

**திரு. மிசா கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன் :** அந்தப் புத்தகங்கள்
எனக்குத் திரும்ப வரவில்லை. நான் அங்கே இருக்கிற குமாஸ்தாவைக்
கேட்டேன். நீதிபதி வழக்கில் தீர்ப்புக் கூடச் சொல்லிவிட்டாரே, அந்தப்
புத்தகங்களை எல்லாம் பாருங்கள் என்று சொன்னதற்கு, அந்த உதவியாளர்

(முற்பகல் 11-20)

சொன்னார். "நீதிபதி அவர்களின் நாற்காலியில் இருக்கிற கால் ஒன்று
ஒடிந்து விழுந்துவிட்டது. அந்தக் காலுக்குப் பதிலாக உங்களுடைய
புத்தகங்களைத்தான் முட்டுக் கொடுத்திருக்கிறோம். அடுத்த நாற்காலி
வருகிறவரை கொஞ்சம் தயவுசெய்து பொறுத்துக் கொள்ளுங்கள்" என்றார்.
இதையேதான் சென்னை உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி அவர்கள்
காஞ்சிபுரத்தில் கோர்ட் கட்டிடம் ஒன்றைத் திறந்து வைக்கும்போது குறிப்பிட்
டிருக்கிறார். அதாவது அங்கே போதுமான அளவுக்கு நாற்காலிகள் போன்றவை
இல்லாததைக் குறிப்பிட்டு, "அது சரியாக அலங்கரிக்கப்படாத மணமகளைப்

போன்று காட்சியளிக்கிறது" என்று குறிப்பிட்டிருக்கிறார். இந்த நிலைமை
சென்னையிலுள்ள சிட்டி சிவில் கோர்ட்டுகளிலும், ஸ்மால் காஸ் கோர்ட்டு
களிலும் மற்றும் மெட்ரோபாலிடன் மேஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகளிலும்
இருக்கின்றது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.
அங்கெல்லாம் தேவையான அளவுக்கு நாற்காலிகள் கிடையாது. மின்விசிறிகள்
கிடையாது. எனவே இத்தகைய சூழ்நிலைகளையெல்லாம் விரைவில் மாற்றி
யமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஹைக்கோர்ட்டு வளாகத்தில் சிட்டி சிவில் கோர்ட்டுகளுக்கு
அருகில் நிறைய ஸ்டாம்ப் வெண்டார்கள் இருக்கிறார்கள். மாண்புமிகு சட்ட
அமைச்சர் திரு. பொன்னையன் அவர்களும் அதைப்போலவே மாண்புமிகு
பால்வளத் துறை அமைச்சர் திரு. கிருஷ்ணசாமி அவர்களும் சென்னையில்
தான் தங்களின் வழக்குரைஞர் தொழிலைத் தொடங்கி நடத்திக்கொண்டிருந்
தார்கள். அவர்களுக்கு அங்கேயுள்ள நிலைமைகள் நன்கு தெரியும். அவ்வாறு
இருக்கும் ஸ்டாம்பு வெண்டார்கள் 10,000 அல்லது 20,000 ரூபாய் மதிப்புள்ள
ஸ்டாம்பு பேப்பர்களையெல்லாம் தரையில் வைத்துக்கொண்டு விற்கிற
நிலைமைதான் இருக்கிறது. மழை பொழிந்தால் எல்லாவற்றையும் எடுத்துக்
கொண்டு ஓட வேண்டிய நிலைமை இருக்கிறது. எனவே அவர்களுக்கு என்று
அங்கே ஒரு ஷெட் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று அரசைக் கேட்டுக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே அங்கே உள்ள வழக்குரைஞர்களுக்கு என்று ஒரு
கேன்டீன் இருக்கிறது. ஆனால் கோர்ட்டில் வேலை பார்ப்பவர்களுக்கு அந்தக்
கேன்டீனில் அனுமதி கிடையாது. எனவே அங்கே பணிபுரிபவர்களுக்கும்
தனியாக ஒரு கேன்டீன் வசதி செய்து தர வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன். (மாற்றுத் தலைவர் மணி அடித்தார்.) இறுதியாக ஒரு
கருத்தை மட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன். மாநகராட்சித்
தேர்தலுக்காக சட்டத்தைத் திருத்தி வெகு விரைவில் தேர்தல்களை நடத்த
இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். சென்னை மாநகரில் வள்ளுவர்
கோட்டத்திற்கு எதிரே பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு நாங்கள் ஒரு
சிலை வைத்திருக்கிறோம். தற்போது அந்தச் சிலையைச் சுற்றி பயங்கரமான
வகையில் பல கடைகளைக் கட்டியிருக்கிறார்கள். அந்தக் கடைகளெல்லாம்
எவ்வாறு அங்கே அனுமதிக்கப்பட்டன என்பது புரியவில்லை. மாநகராட்சி
எல்லைக்குள் ஒரு கடை கட்ட வேண்டுமென்றாலும், அதற்கு உரிய முறையில்,
மாநகராட்சி அதிகாரிகளுக்கு விண்ணப்பித்து அவர்களின் அனுமதி பெற்றுத்





தான் கட்ட வேண்டும் என்று விதி இருக்கிறது. ஆனால் மிக அழகான
அண்ணா சிலையின் பக்கத்திலேயே இப்போது பல கடைகளைக் கட்டி
யிருக்கிறார்கள். நாங்கள் அங்கே அண்ணா சிலையை வைப்பதற்கான
முறையான அனுமதி பெற்று வைத்திருக்கிறோம். அது மட்டுமல்ல, அந்தச்
சிலையைப் பராமரிக்க ஆகிற பணத்தையும் ஆண்டுக்கு இவ்வளவு என்று
கட்டியிருக்கிறோம். இந்த நிலைமையில் அந்தச் சிலையைச் சுற்றி எவ்வாறு
கடைகள் கட்டப்பட அனுமதி அளிக்கப்பட்டது என்றுதான் எனக்குப்
புரியவில்லை. அங்கே கிரஷ் விற்பதாகச் சொல்லி அண்ணா சிலையையே
மறைக்கும் வகையில் கட்டியிருக்கிறார்கள். இதையெல்லாம் நீக்குவதற்கான
முயற்சிகளை அரசு மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.
சென்னை மாநகராட்சியைப்பற்றி நிறைய பேச வேண்டும் என்றாலும் . . .

* திரு. ஆர். டி. சீத்தாபதி : மாற்றுத் தலைவர் அவர்களே, குறுக்கிடு
வதற்காக மன்னிக்க வேண்டும். அறிஞர் அண்ணா சிலை ஒரு கட்சியின்
சார்பில் வைக்கப்பட்டாலும் அது இப்பொழுது சர்க்காருக்குச் சொந்தமான
சிலை என்பதை மட்டும் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

திரு. மிசா கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன் : அதைத்தான்
நானும் சொல்கிறேன். சர்க்கார் சிலையைச் சுற்றி அனுமதி இல்லாமல்
இன்றைக்குக் கடைகளைக் கட்டுகிற நிலை இருக்கிறது, அது அரசுக்குத்
தெரியுமா என்றுதான் கேட்க விரும்புகிறேன். அப்படி அமைக்கப்பட்டிருக்கிற
கடைகளை அகற்ற வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : மாற்றுத் தலைவர் அவர்களே,
வள்ளுவர் கோட்டத்திற்கு எதிரே அமைக்கப்பட்டிருக்கிற பேரறிஞர் அண்ணா
அவர்களின் சிலையைச் சுற்றி அனுமதி இன்றி கடைகள் ஏற்படுத்தப்பட
வில்லை. முன்னாலே குறுக்கும் நெடுக்குமாக தாறுமாறாக வள்ளுவர்
கோட்டத்தின் முன்தோற்றத்தையே குலைக்கிற அளவுக்குக் கடைகள்
அனுமதிக்கப்பட்டிருந்தன. அங்கே முன்புறத்தில் ஒரு சுற்றுச்சுவர் எழுப்ப
வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டு அந்தச் சுற்றுச் சுவரை எழுப்பு
வதற்காகத் தற்போது அந்தக் கடைகள் தற்காலிகமாக வரிசைப்படுத்தப்பட்டு
அண்ணா சிலைக்குப் பின்னால்தான் வைக்கப்பட்டிருக்கின்றன. சிலையைச்
சுற்றி இல்லை. நானே நேரில் போய்ப் பார்த்து, சுற்றுச் சுவர் எழுப்புவதற்காக
அவர்களிடம் கேட்டுக்கொண்டு அண்ணா சிலைக்குப் பின்னாலே சாலை

[இராம. வீரப்பன்] [1985 ஏப்ரல் 10

ஓரத்தில் இப்போது வரிசையாக வைக்கப்பட்டிருக்கின்றன. அதற்கு அருகில் இருக்கிற திறந்த வெளி நீரேற்று வடிகால் வாரியத்தின் குழாய்களைப் போட்டிருக்கிற இடத்தைக் காலி செய்த அந்தக் கடைகளை அங்கே அப்புறப் படுத்தி முறையாக வைக்க வேண்டும் என்ற திட்டம் இருக்கிறது. தற்காலிகமாக அண்ணா சிலைக்குப் பின்னால்தான் ஒழுங்காக அந்தக் கடைகள் அமைக்கப் பட்டிருக்கின்றன.

(முற்பகல் 11-25)

**திரு. மிசா கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்கள் அளித்த விளக்கத்திற்கு நன்றி தெரிவித்துக்கொண்டு அப்படிப்பட்ட முயற்சிகளை விரைவில் எடுக்க வேண்டும், அந்த அளவிற்கு சிலை பாதுகாக்கப்பட வேண்டும் என்று தெரிவித்து, இந்த அளவிற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன். வணக்கம்.

**திரு. காடுவெட்டி கண்ணப்பன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1985-86 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது நடைபெற்று வருகிற விவாதத்தில் கலந்துகொள்கிற வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில், சாதாரண மக்கள் பாராட்டுகிற வகையில், அந்த மக்களுடைய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற வகையில் பல நல்ல திட்டங்களையெல்லாம் தந்திருக்கிறார்கள். இந்த அவையிலேயும், வெளியிலேயும் இந்த நிதிநிலை அறிக்கையை நல்ல இதயம் படைத்த பெரியவர்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு நல்ல தீர்க்கதரிசனத் துடன், எதிர்காலம் சிறப்பாக அமைய வேண்டும் என்ற அடிப்படை நோக்கத்தில், தமிழக அரசு நல்ல முற்போக்குத் திட்டங்களை இந்த நிதிநிலை அறிக்கையில் தந்திருக்கிறது. இவற்றுக்கு நிதி உதவுவதில் மைய அரசு தாராளப் போக்கோடு நடந்துகொள்ள வேண்டுமென்பதில் அனைவரும் ஒன்றுபட்டு நிற்கிறோம் என்பதில் கருத்து வேறுபாடில்லை.

மக்கள் பெருக்கக் கட்டுப்பாடு என்ற தேசியத் திட்டத்தை அமுல் படுத்துவதில் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் தமிழகம் சிறப்பாகச் செயல் பட்டு மைய அரசிடத்திலேயிருந்து கேடயங்களைக்கூடப் பெற்றிருக்கிறது. அதுவும் கடந்த ஓராண்டுக் காலமாக. இந்தத் திட்டத்திலே முன்னணியில் நின்று சிறப்பாக தமிழகம் செயல்பட்டு வருகிறது என்பதை நாடு பூராவும்



1985 ஏப்ரல் 10] [திரு. காடுவெட்டி கண்ணப்பன்]

உணர்ந்திருக்கிறது. ஆனால் அந்தத் திட்டத்தின் அடிப்படையில் தமிழகத் திற்கு மிகப் பெரிய இழப்பு ஏற்பட்டிருக்கிறது. பாராளுமன்றத்தில் 41 இடங் களாக இருந்தது 39 இடங்களாகக் குறைந்து இரண்டு இடங்களை தமிழகம் இழந்திருந்தாலும்கூட, மக்கள் கட்டுப்பாட்டுத் திட்டத்தை தமிழகம் சிறப்பாகச் செயலாற்றி வருகிறது. அப்படி வருகிறபோது அந்தத் திட்டத்தின் அடிப்படையில் மைய அரசு நமக்குக் கொடுக்க வேண்டிய நிதியை முழுவது மாகக் கொடுக்காமல், நபர்வாரி வருமானப் பெருக்கத்தைக் காட்டி மிகவும் குறைத்து வருகிறது என்பதை நாம் எல்லோரும் அறிவோம். எனவே அப்படிப்பட்ட நிலை இல்லாமல் நல்ல திட்டங்களைச் செயலாக்கி வருகிற தமிழக அரசுக்கு தாராள போக்கோடு மைய அரசு நிதி ஒதுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போலவே எட்டாவது நிதியாணைக் குழுவின் சிபார்சுகளிலும் உண்மையிலேயே தமிழகத்திற்கு நியாயம் வழங்கப்படவில்லை. வருங்காலச் சந்ததியினர் வாழ்வு பெற வேண்டும் என்பதற்காகவும், எதிர்கால தமிழகம் ஒளி மிக்க தமிழகமாக இருக்க வேண்டும் என்பதற்காகவும் இந்தியாவில் எங்குமே இல்லாத சத்துணவுத் திட்டம், மாணவர்களுக்கு இலவசச் சீருடை போன்ற நல்ல பல சேமநலத் திட்டங்களையெல்லாம் தருகிற தமிழக அரசுக்கு எட்டாவது நிதியாணைக் குழுவின் சிபார்சுகள் திருப்தியளிப்பதாக இல்லை, அதிருப்தியைத் தந்து கொண்டிருக்கின்றன என்பதை இங்கே சொல்லிக் கொள்கிறேன்.

மற்ற மாநிலங்களைவிட தமிழகத்தின் நிதி நிர்வாகம் சிறப்பாக இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. அப்படி நிதி நிர்வாகத்தில் சிறப்பாக இருக்கிறது என்ற காரணத்தைக் காட்டி தமிழகத்தை மாற்றாந் தாய் மனப்பான்மையோடு ஒதுக்கக் கூடிய சூழ்நிலையை மைய அரசு தவிர்க்க வேண்டும் என்று இந்த நேரத்தில் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக அரசைப்பற்றிக் குற்றம் சாட்டுபவர்கள், தொழில் துறையிலே தமிழகம் சிறப்பான இடத்தைப் பெறவில்லை, தொழில் துறையில் சுணக்கம் காட்டுகிறது, விரிவாக்கக் கூடிய திட்டங்களைத் தரவில்லை என்று சொல்லிக் கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். அவர்களுக்கெல்லாம் பணிவன்போடு ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன். காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும், அதற்குப் பிறகு வந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலும் 1977 ஆம் ஆண்டு இறுதிவரை தமிழகத்திலே பதிவு செய்யப்பட்ட சிறுதொழில்கள் ஏறத்தாழ பதினெட்டாயிரம்தான் என்பதை நாம் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். 1977 வரை அன்றைய ஆட்சிக்காலத்திலே தமிழகத்தில் பதிவு

[திரு. காடுவெட்டி கண்ணப்பன்] [1985 ஏப்ரல் 10

(முற்பகல் 11-30)

செய்யப்பட்ட சிறிய தொழில்கள் 18 ஆயிரம்தான். 1977-க்குப் பின்னர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னர், இந்தத் தமிழகம் தொழில்துறையிலே சிறப்பாக இருக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு, அதற்காக பல நல்ல திட்டங்களைத் தந்ததற்குப் பின்னர், 1984 டிசம்பர் இறுதிவரை, தமிழகத்தினுடைய சிறுதொழில்கள் சம்பந்தப்பட்டவரை, ஏறத்தாழ 60 ஆயிரம் தொழில்கள் தமிழ்நாட்டிலே பதிவு செய்யப்பட்டிருக் கின்றன என்பதை நாம் கவனத்திலே கொள்ள வேண்டும். கடந்த ஏழு ஆண்டுக் காலத்திலே ஏறத்தாழ 42 ஆயிரம் சிறு தொழில்கள் தமிழ்நாட்டிலே வந்திருக் கின்றன. தமிழ்நாடு இதில் ஒரு சிறப்பான இடத்தைப் பெற்று இந்த நாட்டினுடைய சராசரி மனிதனுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் முனைப்பாக இருக்கிறது என்பதைக் கவனத்திலே கொண்டு நாட்டு மக்களுடைய கவனத்தை திசை திருப்ப மாட்டார்கள் என்று நம்புகிறேன். அப்படி திசை திருப்பாமல் இருக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் வருடாவருடம் அந்தத் தொழில்களுக்காக அரசு ஒதுக்கிய தொகைக் கணக்கைப் பார்த்தால், கடந்த காலத்தில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்தில் 1971 முதல் 1976 வரை, அந்த இடைப்பட்ட ஆறு ஆண்டுகாலத்தில் தமிழ்நாட்டில் சுய வேலை வாய்ப்புக்காக ஒதுக்கிய தொகை 36 கோடி ரூபாய். தமிழ்நாட்டில் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னால், 1978-க்குப் பின்னர் சுய வேலை வாய்ப்புத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 12 கோடி. 1980 ஆம் ஆண்டு 17 கோடி ரூபாய். 1981 ஆம் ஆண்டு ரூ. 36 கோடி. 1982 ஆம் ஆண்டு ரூ. 52 கோடி. 1984 ஆம் ஆண்டு அது ரூ. 57 கோடியாக உயர்ந்தது. நடப்பாண்டில் அது ரூ. 60 கோடியாக உயர்ந்திருக்கிறது என்று சொன்னால், இந்த நாட்டிலே தொழில் துறை, புரட்சித் தலைவர் அவர்கள் காலத்தில் எந்த அளவுக்கு வளர்ந்திருக்கிறது, அதில் அவர்கள் எந்த அளவுக்குக் கவனம் செலுத்திக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும். அது மட்டுமல்ல. கடந்த ஏழாண்டு காலத்தில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்தில் நூறு கோடி ரூபாய்க்கு மேலாகச் செலவிட்டு, அரசுப் பொறுப்பிலே செலவிட்டு, ஒரு கனரகத் தொழிற்சாலை இந்த மாநிலத்திலே உருவாக்க முடிந்ததா? அதை தயவுசெய்து நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். இன்றைய அரசு ரூ. 230 கோடிக்குச் செலவு செய்து, புகளூரில் மிகப் பெரிய காகித ஆலையை நிறுவி, அதன் காரணமாக இன்று ரூ. 50 கோடி அளவுக்கு



1985 ஏப்ரல் 10] [திரு. காடுவெட்டி கண்ணப்பன்]

அந்நியச் செலவாணி பெறுகின்ற நிலைமைகள் இருக்கின்றன. அப்படிப்பட்ட ஒரு பெரிய தொழிற்சாலையை வரச்செய்து, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியின் பெருமையை கம்பீரமாக உயர்த்தியிருக்கிறார்கள் என்பதைத்தான் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கொடுக்கப்பட்டிருக்கின்ற நேரம் குறைவாக இருப்பதால் அடுத்த விஷயத்திற்கு வருகிறேன்.

அடுத்தது விவசாயக் கடன்கள். கிராமத்திலே இருக்கின்ற கூட்டுறவுச் சங்கங்கள் கடன் வழங்குகின்ற தகுதியை இழந்துகொண்டிருக்கின்றன என்பதை இருக்கின்ற அனைத்துக் கட்சியைச் சார்ந்த தலைவர்களும், அனைத்துக் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களும் கவனத்திலே கொள்ள வேண்டும். விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் கடன் கொடுக்கின்ற தகுதியை இழந்துகொண்டிருக்கின்றன. அதற்குக் காரணம் என்னவென்றால், விவசாயிகள் என்ற போர்வையிலே சில மிராசுதார்கள் இருந்துகொண்டிருக்கின்றார்கள். மேட்டுக்குடியில் இருக்கின்ற இந்த விவசாயிகள் அந்தக் கடனை வாபஸ் பெற வேண்டும் என்று கோஷங்கள் போட்டுக்கொண்டிருக்கின்றார்கள். தமிழகத்தில் விவசாயி என்ற வார்த்தையில் அடங்குபவர்கள் யார் யார் என்பதை நாம் தயவுசெய்து எண்ணிப்பார்க்க வேண்டும். இரண்டு ஏக்கர், மூன்று ஏக்கர் நிலம் என்றும் அதற்குக் குறைவாகவும்கூட வைத்திருக்கின்ற நிலச் சொந்தக்காரன் விவசாயி என்ற வார்த்தையிலே அடங்குகின்றான். நாற்பது ஏக்கர், ஐம்பது ஏக்கர் பினாமியாக வைத்துக்கொண்டிருக்கின்ற நிலச் சொந்தக்காரர்கள் எல்லாம் விவசாயிகள் என்ற வார்த்தையிலே அடங்குவார்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். ஆக இந்த விவசாயினுடைய கடனை செல்லுபடி செய்ய வேண்டும். அந்தக் கடனையெல்லாம் வாங்க வேண்டும் என்று நிர்ணயம் செய்ய வேண்டும். மூன்று ஏக்கர், நான்கு ஏக்கர் என்று வைத்துள்ள சராசரி விவசாயி, குறுநில சொந்தக்காரர்கள், விவசாயிகள் வாங்கிய கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டும். இதை நம் நாட்டிலே முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக்காலத்திலே செய்து கொண்டிருக்கின்றார்கள். பெரு விவசாயிகள் நிலத்தைக் காட்டி பணம் வங்கியிலேயிருந்து வாங்கியிருக் கின்றார்கள். அவர்கள் இன்றையதினம் வங்கியிலே வாங்கி மேல்வட்டிக்கு விடுகின்றார்கள். இப்படி சிறிய விவசாயிகளுக்கு மத்தியிலே இருக்கின்ற பெரிய நிலச் சொந்தக்காரர்களும் இருக்கின்றார்கள். அவர்களிடத்திலே கண்டிப்பாகக் கடனை வசூல்செய்தாக வேண்டும். உண்மையான விவசாயிகளுடைய கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டும். அதைச் செய்கின்ற பெரு நோக்கத்தைக் கொண்டுள்ள இந்த அரசு மிராசுதார்கள் வாங்கிய கடனைக் கண்டிப்பாக

(முற்பகல் 11-35)

வசூல்செய்தாக வேண்டும். இதை அரசு எண்ணிப்பார்க்க வேண்டும். விவசாயக் கூட்டுறவு வங்கி கடன் தரும் தகுதியை இழக்குமானால், இன்று கிராமங்களிலே பாய் முடைகிறவன், கல் உடைக்கிறவன், மாடு வாங்கிப் பிழைக்க வேண்டுமென்று எண்ணுகின்ற சாதாரணக் குடிமக்களுக்குக் கடன் கொடுக்க முடியாது. காரணம், கூட்டுறவு வங்கிகள் கடன் வழங்கும் தகுதியை இழக்கும் காரணத்தாலே, சாதாரண ஏழை எளிய மக்களுக்குக் கடன் வழங்க வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. இப்படி கடன் கிடைக்காத சூழ்நிலையில் இருக்கின்ற ஏழை எளிய மக்களெல்லாம் ஒன்று சேர்ந்து நாட்டிலே அவர்கள் ... ஆரம்பித்தால், நிலைமை என்னவாவது என்பதைத் தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டும். அவர்கள் ஊமைகளாக இருந்து கொண்டிருக்கிறார்கள். விவசாயிகள் என்ற போர்வையைப் போட்டுக்கொண்டிருக்கும் மிராசுதாரர்கள் வாங்கியுள்ள கடன்களை, திருப்பிக் கொடுக்க அவர்களுக்குத் தகுதியிருந்தும் கொடுக்க மறுக்கிறார்கள். எனவே ஊர்தோறும் ஒரு குழுவை அமையுங்கள். அதிலே சர்வ கட்சிகளைச் சேர்ந்தவர்களை அங்கத்தினர்களாகப் போடுங்கள். கடன் வாங்கியுள்ளவர்களின் பட்டியலை அவர்களிடம் தாருங்கள். யாரிடம் வசூல் செய்யலாம், யாருடைய கடனைத் தள்ளுபடி செய்யலாம் என்று பரிசீலித்து, வசூல் செய்யக்கூடிய வாய்ப்பு உள்ள, திருப்பித் தரக்கூடிய நிலையில் இருக்கிற விவசாயிகள் என்ற போர்வையில் இருக்கிற மிராசுதாரர்களிடமிருந்து கடனைக் கண்டிப்பாக வசூல் செய்து, விவசாயக் கூட்டுறவு வங்கிகளைக் காப்பாற்றியாக வேண்டும். வீதி ஓரங்களில் பேச முடியாமல் ஊமைகளாக இருக்கும் ஏழை எளிய மக்களுக்கு இந்த வாய்ப்பு, வசதி போய்ச் சேருமளவுக்கு அந்தக் கடன்களை வசூல் செய்தாக வேண்டும். தமிழ் நாட்டில் மட்டும் இந்தக் கடன்களை வசூல் செய்வதாக எண்ண வேண்டாம். கேரளாவில் உள்ள அரசு—பொது உடமைக் கட்சியாகிய கம்யூனிஸ்ட் கட்சி இருந்த நேரத்தில் விவசாயக் கடன்கள் அனைத்தையும் காவல் துறையைப் பயன்படுத்தி வசூல் செய்திருக்கிறார்கள். உத்தரப் பிரதேசத்தில் இன்னும் தினம் போலீஸ் துணையோடு விவசாயக் கடன்கள் வசூல் செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது. மேற்கு வங்கத்தில் உள்ள மாண்புமிகு திரு. ஜோதிபாசு அவர்கள், விவசாயக் கடன்களை வசூல் செய்ய வேண்டுமென்று காவல் துறையை முடுக்கிவிட்ட நேரத்தில் அங்கே ஊராட்சி ஒன்றியத் தேர்தல் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அங்கே அவர்களோடு இணைந்துள்ள வலது சாரியினர் ஒரு துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டார்கள். 2,000 ரூபாய்க்கு மேலே உள்ள கடனை மாத்திரம் வசூல் செய்யலாம் என்றும், அப்படி வசூல்



செய்தால் கூட்டணியில் பிளவு இருக்காது என்றும் சொல்லி, பேச்சு வார்த்தை மூலமாக ரூ. 2,000-க்கு மேல் உள்ள கடன்களை காவல் துறை துணை கொண்டு மேற்கு வங்கத்தில் வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் இரண்டு, மூன்று, நான்கு ஏக்கர் வைத்துக்கொண்டுள்ள குறு நில விவசாயிகள், சிறு விவசாயிகள் என்று சொல்கிற அனைத்து விவசாயிகளின் கடனை, ஏறத்தாழ 200 கோடி ரூபாய்க்கு மேலாகத் தள்ளுபடி செய்து, விவசாயிகள் வயிற்றிலே பாலை வார்த்திருக்கிறார்கள். விவசாயிகள் என்ற போர்வையிலே ஏமாற்றும் மிராசுதாரர்கள் வாங்கியுள்ள கடனை வசூல் செய்தாக வேண்டும். பட்டணத்தில் வீடு கட்டி, வாடகைக்கு விடும் பெரிய மனிதர்களை நாட்டுக்கு அடையாளம் காட்டியாக வேண்டும். அவர்கள் வாங்கியுள்ள கடனை வசூல் செய்து, தயவு செய்து விவசாயக் கூட்டுறவு வங்கிகளைக் காப்பாற்றுங்கள். அவை கடன் கொடுக்கும் தகுதியை இழந்து கொண்டு வருகின்றன. அவற்றையெல்லாம் இழுத்து மூடும் சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

நமது நாட்டிலே நீண்ட காலமாக கங்கையையும், காவிரியையும் இணைக்கலாமென்று சொல்லிக் கொண்டிருக்கிறார்களே தவிர, அதைப்பற்றிக் கவலைப்படாமல் இருக்கிறார்கள். ஆண்டுக்காண்டு வெள்ளம், வறட்சி என்று 1,500 கோடி ரூபாய்க்கு மேலாக செலவிட்டுக் கொண்டிருக்கிறார்கள். நான் இந்த நேரத்தில் ஒன்றைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். தென்மாநிலத்தில் உள்ள நதிகளையாவது தேசிய மயமாக்க வேண்டும். மாண்புமிகு புரட்சித் தலைவரவர்கள் நெஞ்சு உயர்ந்து சொன்னார்கள், இந்தியாவில் உள்ள அனைத்து நதிகளையும் தேசிய மயமாக்க வேண்டும்; அப்போதுதான் சாதாரண மனிதன் சோற்றுக்கு அலைவதை விட்டு, அவனுடைய எண்ணங்கள் வேறு திசையில் திருப்பி விடப்படும் என்று.

மாற்றுத் தலைவர் (திருமதி வி. ஜெயலட்சுமி): மாண்புமிகு உறுப்பினரவர்கள் சீக்கிரம் முடித்துக்கொள்ள வேண்டும்.

திரு. காடுவெட்டி கண்ணப்பன்: அந்த அடிப்படையில் தென்னகத்தில் உள்ள அனைத்து ஆறுகளையும் தேசிய மயமாக்கி இந்த நாட்டிலே பஞ்சத்தை மாற்றக்கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டும். கேரளாவில் உள்ள ஆறுகளைத் திருப்பி விடப் போகிறோம் என்றார்கள். அப்படித் திருப்பிவிடும் சூழ்நிலை வர வேண்டுமென்று எண்ணிக் கொண்டிருக்கிறோம். மத்திய அரசோடு பேசி, இது குறித்து தீர்க்கமானதொரு முடிவை எடுக்க வேண்டும்.

நாட்டிலுள்ள நலிந்த மக்கள், ஏழை எளிய மக்கள், பேச முடியாத ஊமையான மக்கள் பேசித் தீர வேண்டுமென்ற வகையில் அவர்களை ஊக்குவிக்க நல்ல பல திட்டங்களைத் தந்துள்ள அரசைப் பாராட்டி, வாழ்த்தி, அமைகிறேன்.

(முற்பகல் 11-40)

**திரு. மு. செ. சங்கரலிங்கம் :** மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே வைக்கப்பட்டிருக்கின்ற நிதி நிலை அறிக்கை குறித்துப் பேசும்போது, ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் இது ஒரு புரட்சிகரமான நிதி நிலை அறிக்கை என்று பேசினார்கள். இது ஆளும் கட்சி தரப்பினர் வழக்கமாகக் கூறுகின்ற ஒன்றுதான். அதுபோல் எதிர்க் கட்சியிலே இருப்பவர்கள் இந்த நிதி நிலை அறிக்கையிலே திட்டங்களே இல்லை, புரட்சிகரமான திட்டங்கள் ஒன்றுமே இல்லை, கீரல் விழுந்த கிராமஃபோன் ரெக்கார்ட் என்றெல்லாம் பேசினார்கள். ஆனால் இது புரட்சிகரமான அறிக்கையா இல்லை புரட்சிகரமாக இல்லாத அறிக்கையா என்று எந்த அளவுகோலைக் கொண்டு அளப்பது என்று விளக்கினால், என்னைப் போன்றவர்கள் இதைப் புரிந்துகொள்ள முடியும். ஆனால் என்னைப் பொறுத்தவரையில், இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்ற நிதி நிலை அறிக்கையைப் பொறுத்தவரையில் இது ஓர் இன்டர்-லிங்க்ட் பட்ஜெட் ஆக இல்லை. இது துண்டு துண்டாகப் போடப்பட்டுள்ள பட்ஜெட். இங்கே பேசியவர்கள் நாட்டு மக்களுக்குப் பயன்படும் வகையில் இருப்பதாகவும், தீர்க்கதரிசனத்துடன் கூடிய ஒன்றாக இருப்பதாகவும் பேசினார்கள். என்னைப் பொறுத்தவரையில், இது தீர்க்கதரிசனமான ஒன்றா, உற்பத்தித் திறன் இதன் மூலம் அதிகமாக ஏற்படுமா, வேலைவாய்ப்பு அதிகமாக ஏற்படுமா, உற்பத்திப் பொருள் அதிகமாக ஏற்படுமா, செலவழிக்கின்ற பணம் எல்லாம் தொழில் துறையில் முடக்கப்படுமா என்றெல்லாம் சீர்தூக்கிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முன்னாள் நிதிச் செயலாளர் திரு. குகன் இதுகுறித்து ஒன்றை ஓர் அறிக்கையின் வாயிலாக எழுதியுள்ளார். இந்தியாவிலுள்ள 15 மாநிலங்களில் தொழில் துறையில் முதலீடு செய்துள்ள நிலையை ஆராய்ந்து பார்த்த அவர், தமிழ்நாடு 12-வது இடத்தில் இருக்கிறது என்று சொல்லியுள்ளார். இதை தமிழக அரசு மறுக்க முடியாது என்று எண்ணுகிறேன். இதனை அவர் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார். இப்படி 12-வது இடத்தில் இருக்கிற தமிழகத்திற்காக வேண்டி கோடிக் கணக்கில் திட்டம் வகுத்திருக்கிறோம், நாட்டு மக்களுக்காக எங்களுடைய திட்டங்கள் எல்லாம் போய்க்கொண்டிருக்கின்றன என்று சொன்னால், நான் எப்படி ஒத்துக்கொள்ள முடியும்?





வேலைவாய்ப்பைப் பொறுத்தவரையில், நான் இந்த நிதி நிலை அறிக்கையைத் துருவித் துருவிப் பார்த்தேன். எந்த வகையிலாவது வேலை வாய்ப்பு கொடுத்திருக்கிறார்களா என்று பார்த்தேன். ஏதோ ஆறு ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு அளிப்பதன் மூலம் தொழில் துறை முன்னேறும் என்கிற பொருள்பட இதிலே ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். இந்தியாவிலேயே வேலையில்லாத் திண்டாட்டம் தமிழ்நாட்டிலேதான் மிக அதிகமாக இருப்பதாக அறிஞர்களும், விஞ்ஞானிகளும், தீர்க்கதரிசிகளும் சொல்லியிருக்கிறார்கள். போஸ்ட் கிராஜுவேட்டை எடுத்துக்கொண்டால், 11,827 பேர் வேலை வேண்டி தங்கள் பெயரைப் பதிவு செய்து காத்திருக்கிறார்கள். பட்டம் பெற்றவர்கள் 1 லட்சத்து 43 ஆயிரம் பேர் வேலைக்காகக் காத்திருக்கிறார்கள். பி.யு.சி. படித்தவர்கள், பிளஸ் டு படித்தவர்கள் 87 ஆயிரம் பேர் வேலை வேண்டி காத்திருக்கிறார்கள். எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்கள் 2 லட்சத்து 91 ஆயிரம் பேர் வேலை வேண்டி காத்திருக்கிறார்கள். அதுபோல் எட்டாவது படித்தவர்கள் 2 லட்சத்து 46 ஆயிரம் பேர் வேலை வேண்டி காத்திருக்கிறார்கள். இப்படி வேலை வேண்டி தங்கள் பெயர்களை வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்து விட்டு வேலைக்காகக் காத்திருக்கின்ற இவர்களுக்கெல்லாம் ஏதாவது வேலைவாய்ப்புக்கான திட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றனவா என்று கேட்டால், எதுவும் இல்லை. இந்த அரசு தொழில் துறையில் அதிகமாக முதலீடு செய்யவில்லை என்றுதான் அறிஞர்களும் சொல்கிறார்கள்.

இந்நிலையில் வரவேற்கக்கூடிய திட்டங்கள் இருக்கின்றனவா என்று கேட்டால் இருக்கின்றன. உதாரணமாக இலவசமாகப் புத்தகம் அளிப்பதாகவும் சீருடை அளிப்பதாகவும் சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே சத்துணவு அளிக்கப்படுகிறது. மக்களுக்கான வெல்பேர் ஸ்டேட்டாக இருக்கிறது. மக்கள் வாழ வேண்டாமா என்று கேட்டால், அதை வரவேற்கிறேன். ஆனால் நான் ஒன்று சொல்கிறேன், வாழ வேண்டிய இளவல்களுக்காக திட்டம் ஒன்றும் இல்லையே இது ஏன்? ஆறு ஆயிரம் பேருக்கு மட்டும் வேலைவாய்ப்பு கொடுத்துவிட்டால் போதுமா? இன்றைக்கு 17 பொறியியல் கல்லூரிகள் மூலமும், 57 பாலிடெக்னிக் மூலமும் பல பேரை உற்பத்தி செய்திருக்கிறோமே இவர்களுக்கெல்லாம் வேலைவாய்ப்புக்கான வழிவகை செய்திருக்கிறோமா என்றால் இல்லை. ஒருவேளை கல்விக்காக என்று தனி பட்ஜெட், தொழிலுக்காக என்று தனி பட்ஜெட், பைனான்ஸ் பட்ஜெட் என்று தனித் தனியாக பட்ஜெட் இருந்தால், அதன் மூலம் திட்டங்கள் மக்களுக்குப் போய்ச் சேரக் கூடிய வாய்ப்பு ஏற்படலாம் என்று கருதுகிறேன். அந்த வகையில் இந்த பட்ஜெட் மக்கள் ஒத்துக்கொள்ளக்கூடிய வகையில் இல்லை. நான் இங்கே

இந்தப் புள்ளிவிவரங்களைச் சொல்லும்போது, நான் சொல்கின்றவைகள் தவறா என்று கேட்டால் சொல்கிறேன், என் தவறல்ல, அரசின் தவறு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தியாவிலேயே 52 சதவிகிதம் ஏழை

(முற்பகல் 11-45)

மக்கள், வறுமைக்கோட்டுக்குக் கீழே இருப்பவர்கள் தமிழ்நாட்டில்தான் இருக்கிறார்கள் என்று புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. அப்படி இருப்பவர் களுக்கு இந்த நிதிநிலை அறிக்கையில், நாங்கள் வாரி வழங்குகிறோம், அவர்களுக்காக திட்டங்கள் போட்டிருக்கிறோம் என்று சொல்லப்பட்டிருக் கிறது. எப்படி வறுமைக்கோட்டுக்குக் கீழே இருப்பவர்கள் ஆண்டுக்காண்டு அதிகமாகிக் கொண்டே போகிறார்கள் என்பதை அந்தப் புள்ளிவிவரத்தில் நிபுணர்கள் கூறுகிறார்கள். ஆகவே இத்தகைய திட்டங்களால் நாட்டு மக்களுக்கு நன்மை போய்ச் சேரவில்லை என்பதுதான் உண்மையான நிலைமை. அதேபோல், திட்டங்களுக்காகக் கொடுக்கப்பட்ட ரூ. 2,600 கோடி இங்கே செலவழிக்கப்படப்போவதாக அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. அப்படி செலவழிக்கிற காலகட்டத்தில் அது சரியாகச் செலவழிக்கப்படுகிறதா என்று கவனிக்கிற பொறுப்பு நமக்கு இருக்கிறது. ஆனால் அதைப் பாதுகாக்கத் தவறியிருக்கிறோம் என்பதுதான் எனது கருத்து. ஏனென்றால், கி.பி. 2000 ஆண்டுக்குள், நல்வாழ்வுத் துறை மூலம் மக்களுக்கு நோய்கள் வராமல் காக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். 2,000 ஆண்டுக்குப் பிறகு நாம் வாழவேண்டாமா? இப்போதிருக்கிற நிலைமையைப் பார்த்தால் 2,000 ஆண்டுகள் வரைதான் நாம் வாழ முடியும் என்று என்றுகிறார்கள் போல இருக்கிறது. அதுதான் நிலைமையும்கூட.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், திருநெல்வேலி வைத்தியக் கல்லூரி ஆஸ்பத்திரியில், நோயாளிகளுக்கு எந்தவிதமான வசதியும் இல்லாமல் அவதிப்படுவதைச் சொல்லலாம். அங்கே தலைவலிக்கோ, அல்லது பஞ்சு, ஆஸ்பிரின், டெலிபிரின் போன்ற சாதாரண மாத்திரைகள் கூட கிடைக்காது. மருத்துவ மனையில் நான்கு மாத்திரைகள் சாப்பிடுவதற்குப் பதிலாக, அதே பெயருள்ள மாத்திரை ஒன்றை வெளியிலிருந்து வாங்கிச் சாப்பிட்டால் நோய் தீர்ந்துவிடுகிறது. ஆஸ்பத்திரிகளில் கொடுக்கப்படும் மாத்திரைகளில் சக்தியே கிடையாது. இதற்கு என்ன காரணம் என்று அங்கு பணியாற்றும் மருத்துவர் களைக் கேட்டபோது, "மருந்துகள் வாங்க டெண்டர் விடப்பட்டு காண்ட்ராக்டர் விடப்படுகிறது. குறைந்த விலையுள்ள மருந்துகளைத்தான் காண்ட்ராக்டர் சப்ளை செய்கிறார். அதனால் தரம் இல்லை. இதைத்தான் சாப்பிட்டாக





வேண்டும்" என்று அவர்கள் சொன்னார்கள். ஆனால் முன்பு இந்த முறை இல்லை. மைய மருந்துக் கிடங்குக்கு மாத்திரை, மருந்துகள் மொத்தமாகக் கொடுக்கப்பட்டு, அங்கிருந்து மருத்துவமனைகளுக்கு வழங்கப்படும் மருந்துகள் தரமானவையாக இருக்கும். அது இப்போது இல்லாததோடு, ஆஸ்பத்திரியை சரியாக வைத்திருக்கக்கூட, சுத்தமாக வைத்திருக்கக்கூட அவர்களால் முடியவில்லை. குடிக்கவோ, கழுவவோ அங்கே தண்ணீர் வசதி இல்லை. பக்கத்திலேயே தாமிரபரணி ஆறு ஓடுகிறது. கிணற்றில் நீர் இருந் தாலும், அதை மேலே ஏற்ற, மோட்டார் பம்ப்செட் இல்லை. அப்படியே இருந்தாலும், அது ஓடவில்லை. நான்கூட அதைப் பார்ப்பதற்குப் போனேன். நோயால்கூடச் சாவதில்லை, அங்கே கரடுமுரடாக இருக்கும் பாதைகளில் பாசி இருப்பதால் வழுக்கி விழுந்து எலும்பு ஒடிந்து சாகிறவர்கள்தான் அதிகம் என்று அங்குள்ளவர்கள் சொன்னார்கள்.

"We are not curing the disease; but we are killing the patients knowingly"

என்று அங்குள்ள மருத்துவர்களே சொல்கிறார்கள்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** கி.பி. 2000 ஆண்டுக்குள் அனைவருக்கும் மருத்துவ வசதி தரப்படவேண்டுமென்று கூறியிருப்பதை, உறுப்பினர் அவர்கள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்று கருதுகிறேன். இது நாங்கள் சொன்னதல்ல. உலக சுகாதார நிறுவனம் இதைச் சொல்லி யிருக்கிறது. அவர்கள் எல்லா நாடுகளையும் அழைத்து, உலக மக்கள் அனைவருக்கும் மருத்துவ வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று சொல்லி, அதற்கான இலக்குகளையும் வைத்திருக்கிறார்கள். மூன்றாவது உலகம் என்று சொல்லக்கூடிய பல்வேறு நாடுகளை அழைத்து—இந்தோனேஷியா, பங்களாதேஷ், பாகிஸ்தான், இந்தியா போன்ற நாடுகளை அழைத்து, ஜனத்தொகை அதிகமாக, ஏராளமாக அங்கே இருக்கிற காரணத்தால், கி.பி. 2000 ஆண்டுக்குள் அத்தனை பேருக்கும் மருத்துவ வசதி தர வேண்டு மென்று திட்டத்தைக் கொடுத்தார்கள். அதற்கு 'ஆல்மா அடா' என்று பெயர்.

'Health for all by 2000 A.D.' is the objective. It is known as the Alma Ata Declaration.

ஒவ்வொரு ஆண்டுக்கும் இலக்கு வைத்திருக்கிறார்கள். அந்த இலக்கை நாம் மிஞ்சியிருக்கிறோம். உறுப்பினர்கள் எதை வேண்டுமானாலும் பேசலாம். நெல்லை மருத்துவக் கல்லூரியில், முந்தைய ஆண்டுகளை விட, இந்த ஆண்டு புற நோயாளிகள் அதிக அளவில் சிகிச்சை பெற்றிருக்கிறார்கள். ஆண்டுக்

[டாக்டர் எச். வி. ஹண்டே] [1985 ஏப்ரல் 10

காண்டு இதை நாம் அளவுகோலாக வைத்திருக்கிறோம். மருத்துவ மனைகள் எந்த அளவுக்குப் பயன்படுகின்றன என்பதற்கு அந்த அளவுகோல் உதவுகிறது. அங்குள்ள மருத்துவ மனைகள் சிறப்பாகச் செயல்படுவதால், அங்குள்ள பிரைவேட் பிராக்டிஷனர்களுக்கு இது தொல்லையாக இருக்கிறது. ஆகவே

(முற்பகல் 11-50)

தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன் கருத்தை மாற்றிக்கொள்ள வேண்டும். பொதுநலனுக்காகத்தான் இதைச் சொல்கின்றேன். எது வேண்டு மானாலும் சொல்வதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு உரிமை இருக்கிற காரணத்தால், அவர்கள் சொல்கிறார்கள். அது இல்லை, இது இல்லை என்று சொல்கிறார்கள். ஆனால் மருந்து வேலை செய்வதில்லை என்று சொல்வதை முழுக்க முழுக்க ஒரு அர்த்தமற்ற பேச்சாகத்தான் நான் கருதுகிறேன். எல்லா மருந்துகளும் வேலை செய்யும். அதற்கு அந்த மருந்துகளை நாம் பரிசோதனை செய்தால் தெரியும். இங்கே 'காண்ட்ராக்ட் பேசிஸ்' பிரச்சினையே வரவில்லை. ஏனென்றால் மற்ற உறுப்பினர்களுக்கும், பொதுமக்களுக்கும் மாசு கற்பிப்பது மிக எளிது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இன்னும் விவரங்கள் வேண்டுமானால், தரத் தயாராக இருக்கிறேன். ஆகவே இவ்வாறு சொல்ல வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. மு. செ. சங்கரலிங்கம் :** நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நான் எது வேண்டுமானாலும் பேசுவதற்காக இல்லை. இந்தக் குறைபாடுகளை நீக்க வேண்டும் என்கிற அடிப்படையில்தான் நான் இங்கே . . .

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, மருத்துவமனைக்கு வருகிறபோது, நோயாளிகளாக வருகிறார்கள். போகிறவர்கள் 100 சதவிதம் பிணங்களாகவே போகிறார்கள் என்று சொன்னார்கள். அந்தப் புள்ளி விவரங்கள் சென்ற ஆண்டு எவ்வளவு பேர் மருத்துவமனைக்குப் போனார்கள், எவ்வளவு பேர் இறந்து வெளியே வந்தார்கள் என்று கணக்கு எடுத்தால் தெரியும். அதைத்தான் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும் சொன்னார்கள். குற்றச் சாட்டுகள் சொல்லலாம், குறைகள் சொல்லலாம். ஆனாலும் போகிறவர்கள் எல்லாம் பிணங்களாகவே வெளி வருகிறார்கள் என்றால், பின் மருத்துவ மனைகளையே மூடிவிடலாமே. உள்ளே வருவானேன், வெளியே பிணங்களாகப் போவானேன் ? இதற்கு வெளியிலே நோயாளியாக இருப்பதே நல்லதாயிற்றே!



1985 ஏப்ரல் 10] [திரு. மு. செ. சங்கரலிங்கம்]

**திரு. மு. செ. சங்கரலிங்கம் :** தலைவர் அவர்களே, நான் அந்தக் கருத்துப்பட கூறவில்லை என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன். நோயாளிகளுக்கு மருந்து இல்லாத காலகட்டத்தில் மருந்து வேண்டும். மருந்து இல்லை என்றால் மருந்து வாங்கிக்கொடுக்க முடியாத காலகட்டத்தில் அங்கே போகின்றவர்கள் இறந்துபோகக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்பதற் காகத்தான் இதைச் சொன்னேன். வருகின்றவர்கள் எல்லாம் பிணங்களாக வெளியே போகின்றார்கள் என்ற பொருளில் இதை நான் கூறவில்லை என்று கூறிக்கொள்கிறேன். குறைந்தபட்ச வசதியாவது மருத்துவமனைகளில் இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் கூறுகிறேன். அப்படி இருக்கிறதா இல்லையா என்பதைக் கண்காணிக்க வேண்டும் என்பதற்காகத்தான் இதைக் கூறுகிறேன். கொடுக்கப்பட்ட மருந்து எல்லாம் வேலை செய்யவில்லை என்பது என்னுடைய கருத்து அல்ல, அங்கே வருகின்ற நோயாளிகளுடைய கருத்து. அது தவறுதலாக இருக்கிறதா இல்லையா என்பதை கெமிகல் அனலிஸிஸ் செய்து சொல்ல வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன்.

பல மாதங்களாக எக்ஸ்ரே படங்கள் எடுக்கப்படவில்லை. எக்ஸ்ரே பிலிம் இருக்கிறது. கெமிகல் இல்லை. இந்நிலையை மாற்றிட வழிவகை காணவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் இதற்குள் அதிகமாகப் போகாமல், மருத்துவமனைகளில் உள்ள இதுபோன்ற நிலைமைகளைச் சீராக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நிதிநிலை அறிக்கையில் ஒதுக்குகின்ற பணம், ஒழுங்காக மக்களுக்குப் போய்ச் சேரவேண்டும் என்பதற்காகத்தான் இவற்றைக் கூறுகிறேனே தவிர, தவறான கருத்தைக் கூற வேண்டுமென்பதற்காக அல்ல.

நான் ஆசிரியர்கள் பிரதிநிதி. இருப்பினும் ஆசிரியர்கள் பிரதிநிதி என்ற முறையில் வழக்கம்போல அதிகமாக ஆசிரியர்களைப்பற்றி கண்டிப்பாகப் பேச மாட்டேன். இந்த அவையில் அது ஒரு குற்றச்சாட்டாகவே இருக்கிறது. ஆனால் ஆசிரியர்கள் பிரச்சினை ஏன் வருகிறது என்பதை அரசு புரிந்து கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் ஒருசில உதாரணங்களை மட்டும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இங்கே பல்வேறு கோரிக்கைகளைப்பற்றி பல்வேறு காலகட்டத்தில் பேசியிருக்கின்றோம். ஆனால் அவற்றிற்கு நிவாரணம் இதுவரை கிடைக்காத காரணத்தினால்தான் பட்டதாரி, முதுநிலை பட்டதாரி ஆசிரியர்களும், ஆசிரியர் உறுப்பினர்களும் இன்றைக்கு . . .

(மணியடிக்கப்பட்டது).

**மாற்றுத் தலைவர் (திருமதி வி. ஜெயலட்சுமி) :** இன்னும் இரண்டு நிமிடத்தில் முடிப்பீர்களானால், நன்றாக இருக்கும். நிறைய உறுப்பினர்கள் பேசவேண்டியிருப்பதால், பதினைந்து நிமிடங்களுக்குமேல் எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. மு. செ. சங்கரலிங்கம் :** போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய உணர்வுகளைப் புரிந்துகொண்டு, அரசு பேச்சுவார்த்தை நடத்தியிருந்தால், பிரச்சினை முடிந்திருக்கும். ஆசிரியர்களை [illegible] செய்து சிறை சென்றார்களா, விடுதலை செய்யப்பட்டார்களா என்ற பொருளில் நான் சொல்லவில்லை. அவர்களை அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தால் பிரச்சினை முடிந்திருக்கும்.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்கூட, "468 கோடி ரூபாய் கல்விக்காக நிதி ஒதுக்கியிருக்கிறோம், அதற்குள் இருந்தால் நாங்கள் கவனிக்கிறோம்" என்று தெரிவித்தார்கள். இந்தக் கோரிக்கைகள் 468 கோடி ரூபாய்க்குள் வருகின்ற கோரிக்கைகள்தான். ஏற்கெனவே ஏழு ஆண்டுகளாக வேலை பார்த்துக் கொண்டிருந்த ஆசிரியர்களைப் பணியில் வைத்துக்கொள்ள வேண்டும். ஏழு ஆண்டுகளாகப் பணியில் இருக்கிற ஆசிரியர்களுக்கு இந்த நிதியிலிருந்துதான் பணம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே 468 கோடி ரூபாயைவிட்டு வெளியே செல்ல வேண்டியதில்லை என்ற காரணத்தினால், இதை அரசு உன்னிப்பாகக் கவனித்து இந்தப் போராட்டத்தை நிறுத்தி, ஏழு ஆண்டுகளாக வேலை பார்த்தவர்களை வெளியே போகாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பல்வேறு காலமாகவே கல்வி அமைச்சகத்திற்கும், நிதி அமைச்சகத்திற்கும் எந்தக் கோரிக்கைகள் வைத்தாலும், அங்கே இருக்கிறது, இங்கே இருக்கிறது என்று சொல்லி அது நின்றுபோய்விடுகிறது. இதற்குப் பல

(முற்பகல் 11-55)

காரணங்கள் இருக்கின்றன. அரசிலிருந்து கொடுக்கப்படுகிற பணம் எல்லாம் தனியார் நிறுவனத்தின் மூலமாகக் கொடுக்கப்படுகிறது. தனியார் நிறுவனங்கள் இந்தப் பணத்தை ஒழுங்காகச் செலவழிக்கின்றனவா ? முழுக்க முழுக்க அரசு நிதியிலே நிற்கின்ற கல்வி நிறுவனங்கள் சம்பந்தப்பட்டவரை, உரிமைகள் எல்லாம் நிர்வாகத்திற்கு ; உரிமையே இல்லாத நிலைமைதான் அரசுக்கு. அப்படி ஒரு ஜாயின்ட் செக்டார் நிறுவனம் இருக்க முடியாது. இரண்டுமே நடப்பதாக இருந்தால், இருவருக்குமே சம உரிமை இருக்க வேண்டும். ஆனால்,





நிதியைப் போட்டவருக்கு உரிமை இல்லாமலும், நிதியை வாங்கியவருக்கு முழு உரிமையும் கொடுக்கப்படுகின்ற காரணத்தினாலேதான், அரசு சொல்கிற எந்த ஆணையையுமே தனியார் நிறுவனம் ஏற்றுக்கொள்ளவில்லை.

கல்வியை வளர்க்கின்ற கல்லூரி முதல்வரை, சேலம் அரசுக் கல்லூரி முதல்வரை, அந்த நிர்வாகம் செருப்பால் அடித்ததுகுறித்து, அவர் தன்னை அடிக்க வந்ததாக கவர்னருக்கு மனுக் கொடுத்திருக்கிறார் ; அரசுக்கும் கொடுத்திருக்கிறார். அந்த நிர்வாகத்தின்மீது இந்த அரசு எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. அந்தக் கவர்னரிடம் கொடுத்த மனுக்கூட என்னிடமும் இருக்கிறது. ஆகவே அநியாயம் செய்யும் அந்த நிர்வாகத்தின்மீது நடவடிக்கை எடுக்க அரசு தனக்குள்ள சக்தியையும், உரிமையையும் பெருக்கிக்கொள்ள வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்தே தவிர வேறொன்றுமல்ல. இவ்வாறு கல்லூரி ஆசிரியர்களுக்கும், பள்ளி ஆசிரியர்களுக்கும் பணிப் பாதுகாப்பு இல்லை என்பதைவிட, உயிர் பாதுகாப்பே இல்லாத நிலைமை இன்னும் இருந்து கொண்டிருக்கிறது. திருப்பத்தூர் கல்லூரியிலே அப்துல் ஜபார் என்ற பேராசிரியர் நிர்வாகத்தினுடைய தூண்டுதலினால் தாக்கப்பட்டிருக்கிறார். காவல் துறை அந்த நிர்வாகத்தின் மீது நடவடிக்கை எடுக்காமல் தாக்கப்பட்டவர் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறது. இதுபோன்ற நிகழ்ச்சிகள் எல்லாம் மேலும் நடந்து கொண்டிருக்கின்றன. முதல் போட்ட அரசு, தரகராக இருக்கின்ற நிர்வாகத்தின் மீது நடவடிக்கை எடுக்கக் கூடிய உரிமை, சட்டப்படி அதற்கு இல்லாததால் தான் இதுபோன்று நடந்து கொண்டிருக்கிறது. இதுபோக இந்த அவைக்கு இன்னொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன். இராமநாதபுரம் மாவட்டத்தில் கீழ்க்கரையில் உள்ள பாலிடெக்னிக்கில் கடந்த ஜனவரி மாதம் ஒரு நிகழ்ச்சி நடந்தது. அங்கு தீ பிடித்துவிட்டது. தீ பிடித்தது மாணவர்களுடைய ஹாஸ்டல் அறை. பாதிக்கப்பட்ட மாணவர்கள் தங்களுக்கு நிவாரணம் வேண்டுமென்று ஊர்வலம் நடத்தினார்கள். ஊர்வலம் நடத்திய மாணவர்களுக்கு அந்த நிர்வாகம் எலக்ட்ரிக் ஷாக் கொடுத்திருக்கிறது ; 200 மாணவர்களுக்குக் கொடுத்திருக்கிறது. எலக்ட்ரிக் ஷாக் கொடுக்கும்படி சொன்னவர், "எனக்கு மாண்புமிகு திரு. இராஜீவ் காந்தியைத் தெரியும் ; மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.-ஐத் தெரியும் ; என்னை ஒன்றும் சொல்லமாட்டார்கள்" என்று சொல்லியிருக்கிறார். ஃபேக்ட் ஃபைண்டிங் கமிட்டியில் அவரைப் பிடித்திருக்கிறார்கள். 200 மாணவர்களுக்கு எலக்ட்ரிக் ஷாக் கொடுக்கப்பட்டது தமிழ்நாட்டிலேதான். அந்த நிர்வாகம் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ? அந்தச் செய்தி அரசுக்குத் தெரியுமா ?

[திரு. மு. செ. சங்கரலிங்கம்] [1985 ஏப்ரல் 10

எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. அந்தச் செய்தி 'ஹிம் த்ரிபு_' என்ற பத்திரிகையிலே வந்திருக்கிறது. எனக்கு ஃபேக்ட் ஃபைண்டிங் கமிட்டியிலே இருந்து செய்தி கொடுக்கப்பட்டிருக்கிறது. (மணி அடிக்கப்பட்டது) நான் சீக்கிரம் முடித்துவிடுகிறேன். கொடுக்கப்பட்ட பணம் ஆங்காங்கே சரியாகச் செலவழிக்கப்படுகிறதா என்று பார்க்கும் பொறுப்பு அரசுக்கும் இருக்கிறது; நமக்கும் இருக்கிறது.

தமிழ் பல்கலைக் கழகம் ஒன்று தஞ்சாவூரில் இருக்கிறது. அந்தப் பல்கலைக் கழகத்தில் இதுவரை 64 பேராசிரியர்கள் பதவிக்கு அமர்த்தப்பட்டவர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டிருப்பார்கள் அல்லது ராஜினாமா செய்திருப்பார்கள். 3½ ஆண்டுகளில் ஒரு தமிழ் பல்கலைக் கழகத்தில் தமிழ் பேராசிரியர்கள், அறிஞர்கள் ஏன் பணி நீக்கம் செய்யப்பட்டார்கள் ? ஏன் ராஜினாமா செய்தார்கள்? பல்கலைக் கழகத்தில் ஏதாவது கோளாறு இருக்கிறதா? அது அரசுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறதா? பல லட்சக்கணக்கான ரூபாய் சம்பளம் கொடுக்கப்பட்டிருக்கிறது. சம்பளம் வாங்கி 2 ஆண்டுகளில் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அல்லது ராஜினாமா செய்திருக்கிறார்கள். இதுபோன்ற நிகழ்ச்சிகளை எல்லாம் அரசு கவனத்தில் கொண்டு, நாம் ஒதுக்குகின்ற நிதி எல்லாம் சரியாக மக்களுக்குப் போய்ச் சேர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற அடிப்படையில்தான் நான் இதையெல்லாம் சொல்லிக்கொண்டிருக்கிறேன்.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் கூட ஒரு கல்லூரி பிரின்சிபால், காப்பி அடிப்பதற்காக இரானிய மாணவர்களிடமிருந்து பணம் வாங்கிக்கொண்டு அவர்களுக்கு உதவியதாக அவர் மீது புகார் செய்யப்பட்டு, அதை விசாரிப்பதற்கு, அவரே ஒரு சிண்டிகேட் உறுப்பினர், அவரும் இன்னொரு சிண்டிகேட் உறுப்பினரும் விசாரித்து எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அவருக்கு ஜாயின்ட் டைரக்டர் பதவி கூடக் கொடுக்கப் போவதாக ஒரு செய்தி. இதை இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை ஒரு clue ஆகப் போட்டிருக்கிறது. ஆக பல்கலைக் கழகத்திலே மாணவர்கள் காப்பி அடிக்க அலவ் பண்ணுகிறார்களா; (மணி அடிக்கப்பட்டது) எனவே நாம் ஒதுக்குகிற பணம் சரியாகச் செலவிடப்படுகிறதா என்பதை அரசாங்கம் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இனிமேல் தாங்கள் மணி அடிக்க வேண்டாம் என்று சொல்லி, எனக்கு வாய்ப்பு அளித்ததற்காக நன்றி கூறி விடைபெறுகிறேன்.

**மாற்றுத் தலைவர் (திருமதி வி. ஜெயலட்சுமி):** உறுப்பினருக்கு நன்றி.

(மாற்றுத் தலைவர் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் தலைமை)



1985 ஏப்ரல் 10]

(நண்பகல் 12-00)

*** திரு. வி. வி. வி. ஆனந்தம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1985-86 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது காந்தி காமராஜர் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் பங்கு கொள்ளும் வாய்ப்பினை நல்கியதற்காக நான் முதலில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு நாட்டின் பொருளாதாரம் சிறக்க வேண்டுமென்றால், அங்குள்ள மக்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழே இல்லாமல் உயர்த்தப்பட வேண்டுமென்றால், அங்கே உழவும் தொழிலும் செழிக்க வேண்டும். அவ்வாறு உழவும் தொழிலும் செழிப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகளை தமிழக அரசு எடுக்க முன் வந்திருக்கிறது என்றாலும்கூட, நம்முடைய துரித வளர்ச்சிக்கு அது போதுமானதாக இல்லை என்ற என்னுடைய கருத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

விவசாயப் பொருள்களுக்குரிய விலை இன்றைக்குக் கொடுக்கப்படவில்லை. தமிழகத்தில் நீர்ப்பாசன வசதிக்கு ஆதாரமான நதிகள் எல்லாவற்றிலும் ஏற்கெனவே நாம் அணைக்கட்டுகளைக் கட்டி பாசன வசதியைச் செய்துவிட்டிருக்கிறோம். அந்தப் பாசன வசதிகளின் மூலமாக சிக்கனமாக நீரைச் செலவழிப்பதற்கான வகையில் பல புதிய திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. வைகை நீர்ப்பாசனத் திட்டத்தில் அந்தகைய சிக்கன முறைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதைப்போலவே தஞ்சை மாவட்டத்திலும் நீரைச் சிக்கனமாகச் செலவழிப்பதற்கான முறையில் கால்வாய்களின் கரையோரங்களில் கான்க்ரீட் தளம் பதிக்கப்பட்டு சீராக்கும் திட்டத்தை அரசு மேற்கொண்டிருக்கிறது. எனவே அதை நான் மிகவும் பாராட்டி வரவேற்கிறேன். ஆனால் காமராஜர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், பெரிய அளவில் நீர்ப்பாசன வசதிக்கான ஆறுகள் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. காடுவெட்டி கண்ணப்பன் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல், நமது அண்டை மாநிலமான கேரளத்தோடு ஒரு உடன்படிக்கை செய்து கொண்டு அங்கே மேற்கு நோக்கிப் பாய்ந்து கடலில் போய் வீணாகக் கலந்து கொண்டிருக்கிற ஆற்று நீரை தமிழகத்திற்குத் திருப்பி விடுவதன் மூலமாக அந்த மாவட்டத்திற்கு நீர்ப்பாசன வசதியை உருவாக்கலாம். அதுமட்டுமல்ல. அதன் காரணமாக மின் சக்தியையும் நாம் பெருக்குவதற்கான வாய்ப்பும் இருக்கிறது

[திரு. வி. வி. வி. ஆனந்தம்] [1985 ஏப்ரல் 10

அடுத்து, நிதிநிலை அறிக்கையில் இயற்கை உரத்திற்கு, அதாவது இடு பொருளுக்கு இருந்த வரி நீக்கப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். தமிழகத்தில் நாம் பெரிதும் வான் மழையைத்தான் நம்பி விவசாயம் செய்ய வேண்டியிருக்கிறது. இதனால் விவசாயிகளுக்குப் பெரும் இழப்பு ஏற்படுகிறது. அதற்குப் பயிர் பாதுகாப்பு இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டும். அடுத்து, விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு நல்ல விலை கிடைத்தால்தான், அவர்கள் விவசாயத்தில் ஊக்கத்துடன் ஈடுபடுவார்கள். அந்த முறையில் தமிழகத்தில் நெல்லுக்குப் போதிய விலை கொடுக்கப்படுவதில்லை. இப்போது அண்மையில் கோதுமைக்கு விலையை உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். அதைப்போலவே நெல்லுக்கும் விலையை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜப்பான் போன்ற நாடுகளில் 'பெர் ஏக்கர் யீல்டு' என்பது மிகவும் அதிகமாக இருக்கிறது. அதாவது ஒரு ஏக்கருக்குக் கண்டு முதல் அங்கெல்லாம் மிக அதிகமாக இருக்கிறது. ஏக்கருக்கு 60 மூட்டை கூட விளைகிறது என்று சொல்லுகிறார்கள். அதைப் போல் இங்கேயும் ஏக்கருக்கு அதிகமான கண்டு முதல் காண்பதற்காக வழிவகைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதற்குத் தரமான விதைகளும் சரியான உரமிடுவதற்கு ஊக்கமும் அரசு அளிக்க வேண்டும். பஞ்சாப் மாநிலத்தில் ஒரு ஏக்கருக்கு எவ்வளவு நெல் விளைகிறதோ அதைவிட தமிழகத்தில் குறைவாகத்தான் விளைகிறது. அந்த நிலைமை மாற்றி நம் மாநிலத்திலும் ஒரு ஏக்கருக்கு அதிகமான நெல் விளைச்சலைப் பெறும் வகையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நமது விவசாயிகளில் இறைவைப் பாசனம் செய்து பயிர் செய்பவர்களும் இருக்கிறார்கள். இதன் காரணமாக அவர்களுக்கு உற்பத்திச் செலவு அதிகமாக ஆகிறது. எனவே தமிழக விவசாயிகளுக்கு உற்பத்திச் செலவு அதிகமாக ஆவதன் காரணமாக, இப்போது அவர்களின் உற்பத்திப் பொருள்களுக்குக் கொடுக்கப்படுகிற விலை கட்டுப்படியாகிற விலையாக இல்லை.



1985 ஏப்ரல் 10] [திரு. வி. வி. வி. ஆனந்தம்]

(பிற்பகல் 12-05.)

ஆண்டு பூராவும் லெவி வைத்திருப்பது பல்வேறு ஊழல்களுக்கு இடமளிக்கிறது. தஞ்சை, தென்னாற்காடு போன்ற அதிக நெல் உற்பத்தியாகாத காமராஜ் மாவட்டம், முகவை போன்ற இடங்களில் எல்லாம் லெவி வைத்து வற்புறுத்தி வாங்குவதால், விவசாயத்தில் ஈடுபடுவதற்கு உற்சாகம் இல்லாமல் இருக்கிறது. ஆகவே அறுவடைக் காலத்திலே மட்டும், நெல் அதிகமாக உற்பத்தியாகிற இடத்திலே மட்டும் லெவியை வைத்துக் கொண்டு, மற்ற இடங்களிலே மற்ற நேரங்களில் லெவியை நீக்கிவிட்டால், விவசாயப் பொருள்கள் தாராளமாக தமிழகத்திலே நடமாட ஏதுவாக இருக்கும். எல்லாப் பகுதியில் உள்ளவர்களுக்கும் சீரான விலையில் பொருள்கள் கிடைக்கும். இல்லாவிட்டால் காமராஜ் மாவட்டத்திலே உள்ளவர்கள் தஞ்சை மாவட்டத்திலே உள்ளவர்களை விட அதிக விலை கொடுத்து நெல், அரிசி போன்றவற்றை வாங்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. ஆகவே அந்த மாதிரியாக லெவி முறை இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலுக்கு மிகவும் அத்தியாவசியமானது மின்சக்தி. நம் நாட்டில் ஆண்டுதோறும் மின்பற்றாக்குறை இருப்பதும், மின்வெட்டு என்பதும் நடைமுறை ஆகிவிட்டது. மின்வெட்டால் பல வகையில் தொழில்கள் பாதிக்கப்படுகின்றன. தொழில்களுக்குப் போதுமான மின்சாரம் இல்லாததால், தொழில் முனைவர்கள் இங்கே தொழிலை ஏற்படுத்தத் தயங்குகிறார்கள். மின் உற்பத்திக்காக கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றாலும்கூட, இது போதுமானதல்ல என்பது என்னுடைய கருத்து. மேலும் பல மின் திட்டங்களை ஏற்படுத்த முனைய வேண்டும். குறிப்பாக ஒகனேக்கல் மின் திட்டத்தை கர்நாடக அரசும், தமிழக அரசும் சேர்ந்து கூட்டாக ஏற்படுத்த வேண்டும். அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரிக்கு வெளி மாநிலங்களை நாம் நம்பியிருக்க வேண்டிய நிலை இருக்கிறது. நிலக்கரிப் பற்றாக்குறை ஏற்பட்டால், நம்முடைய அனல் மின் நிலையங்கள் பாதிக்கப்படும். ஆகவே அணு மின் நிலையம், புனல் மின் நிலையம் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

இப்போது எரிபொருள்கள் மிகவும் கிராக்கியாக இருக்கின்றன. குறிப்பாக விலை கூடிவிட்டது. சிறுதொழில்களுக்குத் தேவையான நிலக்கரி கிடைப்பதில்லை என்பதால் அவர்கள் விறகை உபயோகப்படுத்துகிறார்கள். விறகுக்காக காடுகள் அழிக்கப்படுகின்றன. விறகை வைத்து உஷ்ணசக்தியைப் பெறுகிறார்கள். இதற்குப் பதிலாக மாற்று சக்தியாக சூரிய சக்தியை

[திரு. வி. வி. வி. ஆனந்தம்] [1985 ஏப்ரல் 10

உபயோகிக்க ஊக்கம் அளிக்க வேண்டும். பாய்லர்கள் கண்டிப்பாக சூரிய
சக்தியைத்தான் பயன்படுத்த வேண்டும் என்று அரசாங்கம் அறிவிக்க வேண்டும்.
மற்றும் காற்றுச் சக்தியைப் பயன்படுத்தி இறவை இயந்திரங்களை இயக்கலாம்.
கையத்தாறுக்குப் பக்கத்திலே கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தால்
காற்று இயந்திரம் பயன்படுத்தப்படுகிறது. அந்த மாதிரியாக காற்று
இயந்திரங்களை உபயோகிக்க முயற்சி எடுத்துக்கொள்ள ஊக்கம் அளிக்க
வேண்டும். கிராமங்கள்தோறும் சாண எரிவாய்வுத் திட்டத்தை விரிவாக்க
வேண்டும். அப்போதுதான் காடுகள் அழிப்பது குறைக்கப்படும். காடுகளை
மிகுதியாக வளர்க்க வேண்டும். எரிபொருள்களுக்காக மட்டுமல்லாமல், மழை
வளத்திற்காகவும், நம்முடைய தேவைக்கான மரத்திற்காகவும் காடுகள் பயன்
படுவதால், நிறைய காடுகளை வளர்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்
கொள்கிறேன்.

போக்குவரத்துச் சாலைகள் எதுவும் சீரான சாலைகளாக இல்லை.
குறிப்பாக சென்னையில் அண்ணா சாலைதான் சீராக இருக்கிறது.
மதுரையைப் பொறுத்தவரையில், எந்த ரோடும் சீராக இல்லை. எங்கு
பார்த்தாலும் வேகத் தடைகளை புதிதாக ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஏதோ
ஓர் இடத்திலே விபத்து நடந்தது என்பதற்காக இந்த மாதிரியாக எல்லா
இடங்களிலும் வேகத் தடுப்பு போடுவதற்கு உத்தரவிட்டார்களோ என்னவோ
தெரியவில்லை. எனவே லெவல் கிராசிங்குகளில் எல்லாம் வேகத் தடுப்புகளைப்
போட்டிருக்கிறார்கள். அதனால் சிறிய வண்டிகளில் போகும்போது
அவற்றிற்குச் சேதம் ஏற்படுகிறது. ஏற்கெனவே சாலைகளே வேகத்
தடுப்புகளாக இருக்கும்போது, மேலும் இப்படி வேகத் தடுப்புகள் போட
வேண்டுமா? வேகத் தடுப்புகள் இருப்பதை உணர்த்த, வண்ணம் தீட்ட
வேண்டாமா? நம் நாட்டில் சீரான சாலைகள் வேண்டும். சென்னையிலிருந்து
விழுப்புரம் வரையில் போவதற்கும் வருவதற்கும் பெரிய பாதைகள் போட
வேண்டும். ஆக்கிராவிலிருந்து டில்லிக்கும், டில்லியிலிருந்து சண்டிகாருக்கும்
இடையே பெரிய பாதைகள் இருக்கின்றன. தமிழகத்தில் அது மாதிரி பெரிய
சாலைகள் தென்படவில்லை. நம் தேசிய நெடுஞ்சாலையை அம்மாதிரி அகலப்

(பிற்பகல் 12-10)

படுத்த வேண்டும் என்று வற்புறுத்த வேண்டும். கிழக்குக் கடற்கரை ஓரமாக
ஒரு சாலையை அமைக்கவேண்டியது மிகவும் அவசியம். அது ஏற்கெனவே
ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தாலும், அதற்காக போதிய நிதி ஒதுக்கீடு செய்யப்
படாமல் இருக்கின்றது. கிழக்குக் கடற்கரைச் சாலை போடுவதன் மூலமாக
கிழக்குக் கடற்கரைக்கு ஒரு பாதுகாப்பு ஏற்படும்.



1985 ஏப்ரல் 10] [திரு. வி. வி. வி. ஆனந்தம்]

இன்றைய ஸ்ரீலங்கா பிரச்சினையைப் பார்க்கும்போது, அந்நிய நாடுகளிலே யிருந்து ஆயுதங்களைக் குவிப்பதைப் பார்த்தால், நமக்கு பாதுகாப்புக்குக் கடற்கரைச் சாலை மிகவும் அவசியம். கிழக்கு கடற்கரைச் சாலை மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் கூறியதுபோல, நம்முடைய நெடிய கடற்கரையிலே தமிழகத்திலேயுள்ள மீன் வளத்தைப் பெருக்குவதற்கும், கடலிலே அவர்கள் பிடிக்கக்கூடிய மீன்களை நாட்டிற்குள் அனுப்புவதற்கும் போக்குவரத்திற்கும் வசதியாக அந்தச் சாலைகளை எல்லாம் கண்டிப்பாக அமைக்க வேண்டும். கிழக்குக் கடற்கரைச் சாலை மற்றும் சேது சமுத்திரத் திட்டத்தையும் மேற்கொள்வதற்கு, அதுவும் இராணுவம் வேகத்துடன் அந்த முயற்சிகளை நிறைவேற்றுவதற்கு இந்திய அரசை நாம் வலியுறுத்த வேண்டும். இந்தத் திட்டங்களை நாம் இங்கே செயல்படுத்தும்போது, இலங்கை வாழ் தமிழர்கள் தாயகம் திரும்புவதற்குமுன் அவர்களுக்கும் வேலைவாய்ப்பு செய்து கொடுப்பதற்கு அது உதவியாக இருக்கும் என்பதைக் கூறிக் கொள்கிறேன்.

பொதுவாக நாட்டினுடைய சுகாதாரம் நாம் எதிர்பார்க்கின்ற அளவுக்கு மேம்பாடாக இல்லை. சில இடங்களில் முன்பு இருந்ததைவிட சுகாதாரம் கெட்டிருக்கிறது என்பதைத்தான் நாம் பார்க்கிறோம். இப்போது கொசுவை ஒழிப்பதற்காக, மலேரியாவை ஒழிப்பதற்காக, பெரும் அளவில் செலவு செய்திருக்கிறோம். எல்லா இடங்களிலும் கொசுவை ஒழித்துவிட்டோம் என்கின்றார்கள். ஆனால் அவைகள் இப்போது பெருவாரியாகப் பெருகி விட்டன. கொசு உற்பத்தியாகும் குளம் குட்டைகளைச் சீர்படுத்தவில்லை. பெரிய நகரங்களில், கிராமங்களில் எல்லாம் சாக்கடைகள் துப்புரவாக இருப்பதில்லை. விருதுநகரில் பாதாளச் சாக்கடை இல்லை. ஒவ்வொரு வீட்டிலேயிருந்தும் கழிப்புகள் வருகின்றன. அந்தக் கழிப்புகளை சாக்கடைகள் மூலமாக ஓபன் ட்ரெயினேஜில் கொண்டு வந்து சேர்த்து விடுகின்றார்கள். பாதுகாக்கப்பட்ட குடிநீர் எல்லா நகரங்களிலும் வழங்கப் படுகிறது என்று சொன்னாலும், அது உண்மையிலேயே பாதுகாக்கப்பட்ட தண்ணீர்தானா என்று சந்தேகமாகத்தான் இருக்கின்றது. அண்மையில் மதுரையில் மஞ்சள் காமாலை நோய்க்கு நிறைய பேர்கள் உள்ளாக்கப் பட்டிருக்கின்றார்கள். மக்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். அதற்குக் காரணம் என்ன என்றால், பாதுகாக்கப்பட்ட குடிநீர் சரியாக வழங்கப்பட வில்லை. அது பாதுகாக்கப்பட்ட தண்ணீர் இல்லை. குடிநீர் வழங்கப்படுவதும் போதுமான அளவுக்கு வழங்கப்படுவதில்லை. அதற்குப் பல்வேறு காரணங்கள் சொல்கின்றார்கள். குடிநீர் உற்பத்தியாகின்ற கிணற்றிலே தண்ணீர்

இருந்தாலும்கூட, அதை இறைத்து அனுப்ப மின்சாரம் இல்லாமல் இருக்கின்றது. அதே மாதிரி விருதுநகர் டவுனுக்கு அரியலூரிலே உள்ள சிமெண்ட் ஆலையினுடைய, கல் குவாரியில் இருந்து தண்ணீர் எடுத்து அனுப்புகின்றார்கள். அங்கேயும் தண்ணீர் இருக்கிறது. ஆனால் மின்சாரம் இல்லை. இந்த நிலையில் அந்தத் தண்ணீரை 'சப்ளை' செய்ய முடியாமல் இருக்கிறது. இப்போது விருதுநகர் காமராசர் மாவட்டத்திற்குத் தலைநகராக இருக்கிறது. இப்போதே அங்கே தண்ணீர் இல்லை. அது தலைநகர் ஆகும்போது, தண்ணீர் தேவை இன்னும் அதிகமாக ஆகும். அதற்கு ஏற்ப தண்ணீர் ஆதாரங்களை நாம் கண்டறிய வேண்டும். அங்கு தண்ணீர் மக்களுக்குத் தொடர்ந்து கிடைக்கும்படியான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அதே மாதிரி பல்வேறு இடங்களில், ஊர்களில் தண்ணீர் சரியான முறையில் சப்ளை செய்யப்படுவதில்லை.

அடுத்து, பல்வேறு சமுதாய நோக்கில் திட்டங்களை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது. ஏழையெளிய மக்களுக்கு சத்துணவுத் திட்டம், இலவச சீருடை, இலவசப் புத்தகங்கள் அளிக்கும் திட்டம் இவைகள் எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதை செப்டம்பர் மாதத்திற்குமுன் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதை நாம் தள்ளி வைத்தால், அதனால் உரியவர்களுக்குப் பயன் ஏற்படாது. இலவச சீருடை செப்டம்பர் மாதத்தில் கொடுப்பதில் எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. அவர்களுக்குப் பள்ளிப் புத்தகங்களை இப்போதே கொடுத்தால், அவர்களுக்குப் பயன் இருக்கும். இலவச சீருடை. இலவச சத்துணவு எல்லாம் அவர்களுக்கு அளிக்கும்போது, அந்தப் பெற்றோர்களுக்கு நாம் ஒரு கண்டிஷன் போட வேண்டும். குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை நாம் ஆதரிப்பதால், இரண்டு குழந்தைகளுக்கு மேல் இருப்பவர்களுக்கு இந்த மாதிரியான சலுகைகள் கிடையாது என்று அரசு அறிவிப்பு செய்ய வேண்டும். மக்களுக்கு இம்மாதிரி சலுகைகள் கொடுத்து அரசு ஒவ்வொரு குடும்பத்தினுடைய எல்லாப் பொறுப்புகளையும் ஏற்றுக்கொண்டால், அவர்களுக்கு அவர்களுடைய குடும்பத்தைக் கட்டுப்படுத்துகின்ற நோக்கம் இல்லாமலே போய்விடும். ஆகவே இரண்டு குழந்தைகள் உள்ளவர்களுக்குத்தான் சலுகைகள் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்வியைப் பொறுத்தவரையில், செய்தித் தாளில் பார்த்தேன், நமது மதிப்பிற்குரிய மாண்புமிகு உப ஜனாதிபதி திரு. ஆர். வெங்கட்டராமன் அவர்கள் சில கருத்துக்களைக் கூறியிருக்கின்றார்கள். நமது நாட்டினுடைய



(பிற்பகல் 12-15)

பண்பாடும், கலாச்சாரமும் அழிந்து வருகின்றன. அவை அவ்வாறு அழிந்து விடாமல் இருக்க, கல்வியைச் சீர்திருத்தம் செய்ய வேண்டும்; லார்ட் மெக்காலேவால் கொண்டுவரப்பட்ட கிளார்க்குகளை உற்பத்தி செய்யும் கல்வித் திட்டத்திலிருந்து இன்னும் நாம் மாறுபடவில்லை; இன்னும் நிறைய கல்லூரிகளை வைத்துக் கொண்டிருப்பதில் பிரயோசனமில்லை; ஆரம்பக் கல்வியில் மாணவர்களுக்கு ஒழுக்கத்தைப் போதிக்கும் அறநெறி வகுப்புகளுக்கு ஒரு பாடவேளை ஒதுக்கி, அதைக் கற்பிக்க வேண்டுமென்று அவர் கூறுகிறார். இதையும் கருத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய பள்ளிக்கூடங்களில் எல்லாம் ஒரு ஆசிரியர் கவனிக்க வேண்டிய குழந்தைகளின் எண்ணிக்கை 50 வரை கூட இருக்கிறது. ஒரு வீட்டிலே ஐந்து பிள்ளைகளை வைத்துப் பராமரிக்க முடியவில்லை. தாயாராலும் பராமரிக்க முடியவில்லை. தாயார், தந்தையார் இரண்டு பேரும் கூட்டாக இருந்தும், ஐந்து பிள்ளைகளைப் பராமரிக்க முடியாத நிலை இருக்கிறது. இந்த நிலையில் ஒரு வகுப்பில் 50 பிள்ளைகள் இருந்தால், மாணவர்களுடைய செயல் திறன், அபிலாஷை என்ன என்பதை அறிந்து, அவர்களை ஊக்கப்படுத்த முடியாது. எனவே ஒரு ஆசிரியருக்கு 20 அல்லது 25 மாணவர்களுக்கு மேல் இருக்கக்கூடாது என்பது என்னுடைய கருத்து. இம்மாதிரி ஆசிரியர்-மாணவர் விகிதாச்சாரத்தை ஏற்படுத்தும்போது, நிறைய ஆசிரியர்கள் தேவைப்படும். அதனால் நிறைய ஆசிரியர்களுக்கு, படித்த பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு கொடுத்ததாகவும் இருக்கும். அடுத்து இதற்காக நிறைய கட்டிடங்கள் வேண்டுமே என்ற எண்ணம் வரும். அதற்காக கல்விக் கூடங்களில் சீர்திருத்தம் செய்ய வேண்டும். மூதறிஞர் இராஜாஜி அவர்கள் சொல்லியபடி, காலையில் 7 மணி முதல் பிற்பகல் 1 மணிவரை ஒரு ஷிப்ட்; பிற்பகல் 2 மணி முதல் இரண்டாவது ஷிப்ட் என்று மாற்றி அமைத்தால், நிறைய மாணவர்கள் படிக்க வசதியாக இருக்கும். மாணவர்களின் கல்வித் தரம் உயர வாய்ப்பாக இருக்குமென்று கூறிக்கொள்கிறேன்.

இப்போது விற்பனை வரியைப் பொறுத்தவரையில், ஒரு சில பொருள்களுக்கு ஒரு முனை வரி கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஒரு முனை வரி வேண்டுமென்பதுதான் வணிகர்களுடைய கோரிக்கையாக இருந்தது. ஆனால் ஒவ்வொரு பண்டத்தின் வியாபார முறை பல முறைகளில் வித்தியாசப்படுவதால், நன்றாக ஆராய்ந்து வரி போட வேண்டியிருக்கிறது. மிளகாய், புளி,

[திரு. வி. வி. வி. ஆனந்தம்] [1985 ஏப்ரல் 10

இருந்தாலும்கூட, அதை இறைத்து அனுப்ப மின்சாரம் இல்லாமல் இருக்கின்றது. அதே மாதிரி விருதுநகர் டவுனுக்கு அரியலூரிலே உள்ள சிமெண்ட் ஆலையினுடைய, கல் குவாரியில் இருந்து தண்ணீர் எடுத்து அனுப்புகின்றார்கள். அங்கேயும் தண்ணீர் இருக்கிறது. ஆனால் மின்சாரம் இல்லை. இந்த நிலையில் அந்தத் தண்ணீரை 'சப்ளை' செய்ய முடியாமல் இருக்கிறது. இப்போது விருதுநகர் காமராசர் மாவட்டத்திற்குத் தலைநகராக இருக்கிறது. இப்போதே அங்கே தண்ணீர் இல்லை. அது தலைநகர் ஆகும்போது, தண்ணீர் தேவை இன்னும் அதிகமாக ஆகும். அதற்கு ஏற்ப தண்ணீர் ஆதாரங்களை நாம் கண்டறிய வேண்டும். அங்கு தண்ணீர் மக்களுக்குத் தொடர்ந்து கிடைக்கும்படியான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அதே மாதிரி பல்வேறு இடங்களில், ஊர்களில் தண்ணீர் சரியான முறையில் சப்ளை செய்யப்படுவதில்லை.

அடுத்து, பல்வேறு சமுதாய நோக்கில் திட்டங்களை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது. ஏழையெளிய மக்களுக்கு சத்துணவுத் திட்டம், இலவச சீருடை, இலவசப் புத்தகங்கள் அளிக்கும் திட்டம் இவைகள் எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதை செப்டம்பர் மாதத்திற்குமுன் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதை நாம் தள்ளி வைத்தால், அதனால் உரியவர்களுக்குப் பயன் ஏற்படாது. இலவச சீருடை செப்டம்பர் மாதத்தில் கொடுப்பதில் எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. அவர்களுக்குப் பள்ளிப் புத்தகங்களை இப்போதே கொடுத்தால், அவர்களுக்குப் பயன் இருக்கும். இலவச சீருடை, இலவச சத்துணவு எல்லாம் அவர்களுக்கு அளிக்கும்போது, அந்தப் பெற்றோர்களுக்கு நாம் ஒரு கண்டிஷன் போட வேண்டும். குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை நாம் ஆதரிப்பதால், இரண்டு குழந்தைகளுக்கு மேல் இருப்பவர்களுக்கு இந்த மாதிரியான சலுகைகள் கிடையாது என்று அரசு அறிவிப்பு செய்ய வேண்டும். மக்களுக்கு இம்மாதிரி சலுகைகள் கொடுத்து அரசு ஒவ்வொரு குடும்பத்தினுடைய எல்லாப் பொறுப்புகளையும் ஏற்றுக்கொண்டால், அவர்களுக்கு அவர்களுடைய குடும்பத்தைக் கட்டுப்படுத்துகின்ற நோக்கம் இல்லாமலே போய்விடும். ஆகவே இரண்டு குழந்தைகள் உள்ளவர்களுக்குத்தான் சலுகைகள் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்வியைப் பொறுத்தவரையில், செய்தித் தாளில் பார்த்தேன், நமது மதிப்பிற்குரிய மாண்புமிகு உப ஜனாதிபதி திரு. ஆர். வெங்கட்டராமன் அவர்கள் சில கருத்துக்களைக் கூறியிருக்கின்றார்கள். நமது நாட்டினுடைய



1985 ஏப்ரல் 10] [திரு. வி. வி. வி. ஆனந்தம்]

(பிற்பகல் 12-15)

பண்பாடும், கலாச்சாரமும் அழிந்து வருகின்றன. அவை அவ்வாறு அழிந்து விடாமல் இருக்க, கல்வியைச் சீர்திருத்தம் செய்ய வேண்டும்; லார்ட் மெக்காலேவால் கொண்டுவரப்பட்ட கிளார்க்குகளை உற்பத்தி செய்யும் கல்வித் திட்டத்திலிருந்து இன்னும் நாம் மாறுபடவில்லை; இன்னும் நிறைய கல்லூரிகளை வைத்துக் கொண்டிருப்பதில் பிரயோசனமில்லை; ஆரம்பக் கல்வியில் மாணவர்களுக்கு ஒழுக்கத்தைப் போதிக்கும் அறநெறி வகுப்புகளுக்கு ஒரு பாடவேளை ஒதுக்கி, அதைக் கற்பிக்க வேண்டுமென்று அவர் கூறுகிறார். இதையும் கருத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய பள்ளிக்கூடங்களில் எல்லாம் ஒரு ஆசிரியர் கவனிக்க வேண்டிய குழந்தைகளின் எண்ணிக்கை 50 வரை கூட இருக்கிறது. ஒரு வீட்டிலே ஐந்து பிள்ளைகளை வைத்துப் பராமரிக்க முடியவில்லை. தாயாராலும் பராமரிக்க முடியவில்லை. தாயார், தந்தையார் இரண்டு பேரும் கூட்டாக இருந்தும், ஐந்து பிள்ளைகளைப் பராமரிக்க முடியாத நிலை இருக்கிறது. இந்த நிலையில் ஒரு வகுப்பில் 50 பிள்ளைகள் இருந்தால், மாணவர்களுடைய செயல் திறன், அபிலாஷை என்ன என்பதை அறிந்து, அவர்களை ஊக்கப்படுத்த முடியாது. எனவே ஒரு ஆசிரியருக்கு 20 அல்லது 25 மாணவர்களுக்கு மேல் இருக்கக்கூடாது என்பது என்னுடைய கருத்து. இம்மாதிரி ஆசிரியர்-மாணவர் விகிதாச்சாரத்தை ஏற்படுத்தும்போது, நிறைய ஆசிரியர்கள் தேவைப்படும். அதனால் நிறைய ஆசிரியர்களுக்கு, படித்த பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு கொடுத்ததாகவும் இருக்கும். அடுத்து இதற்காக நிறைய கட்டிடங்கள் வேண்டுமே என்ற எண்ணம் வரும். அதற்காக கல்விக் கூடங்களில் சீர்திருத்தம் செய்ய வேண்டும். மூதறிஞர் இராஜாஜி அவர்கள் சொல்லியபடி, காலையில் 7 மணி முதல் பிற்பகல் 1 மணிவரை ஒரு ஷிப்ட்; பிற்பகல் 2 மணி முதல் இரண்டாவது ஷிப்ட் என்று மாற்றி அமைத்தால், நிறைய மாணவர்கள் படிக்க வசதியாக இருக்கும். மாணவர்களின் கல்வித் தரமும் உயர வாய்ப்பாக இருக்குமென்று கூறிக்கொள்கிறேன்.

இப்போது விற்பனை வரியைப் பொறுத்தவரையில், ஒரு சில பொருள்களுக்கு ஒரு முனை வரி கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஒரு முனை வரி வேண்டுமென்பதுதான் வணிகர்களுடைய கோரிக்கையாக இருந்தது. ஆனால் ஒவ்வொரு பண்டத்தின் வியாபார முறை பல முறைகளில் வித்தியாசப்படுவதால், நன்றாக ஆராய்ந்து வரி போட வேண்டியிருக்கிறது. மிளகாய், புளி,

* கவிஞர் முத்துலிங்கம் : மாற்றுத் தலைவர் அவர்களே, தங்க முகத்தையும் மன்ற உறுப்பினர்கள் முகத்தையும் மட்டுமே பார்த்துப் பே வேண்டிய நான் இங்கே பெரும்பாலாக இருக்கின்ற பைக்குகளைப் பார்த்துப் பேச வேண்டிய நிலையில் இருப்பதால், ஐந்து நிமிடங்களுக்குள் முடித் விடுகிறேன். பணக்காரர்களுக்கு மட்டுமே சலுகைகள் அளிக்கக்கூடிய மத்தி பட்ஜெட் மாதிரி இல்லாமல் ஏழையெளிய மக்களுக்கும், விவசாயப் பெருங்கு மக்களுக்கும் பயனளிக்கக்கூடிய வகையில் நல்ல பல திட்டங்களை உள்ளடக்கிய நிதிநிலை அறிக்கையாக இது அமைந்திருப்பதால், நான் இதனை வரவேற்கிறேன். நாங்கள் ஆட்சிக்கு வந்தால், 8 ஆவது வகுப்புவரை படிக்கிற ஏழையெளிய மாணவர்களுக்கு இலவசமாக சீருடையும், இலவசமாகப் பாடப் புத்தகங்களும் வழங்குவோம் என்றும் அரசு ஊழியர்கள் பணிக் காலத்தில் இறந்துபோனால் அவர்கள் குடும்பத்திற்கு வழங்குகின்ற குடும்ப நிதியை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ. 20 ஆயிரமாக உயர்த்தி வழங்குவோம் என்றும் தேர்தல் அறிக்கையில் சொன்னோம். சொன்னதை எல்லாம் நிறை வேற்றினோம். கொடுத்த வாக்குறுதிகளை எல்லாம் இந்த அரசு நிறைவேற்றி வருகிறது என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு. பொதுவாக மரங்களை எடுத்துக்கொண்டால், நான்கு வகையான மரங்கள் உண்டு. பாக்கு மரம், மாமரம், வாழை மரம், பலா மரம். அது போல் மனிதர்களிலும் நான்கு வகை உண்டு. பாக்குமரத்துக்குத் தண்ணீர் ஊற்றினால் அது பலன் கொடுக்கும். இல்லாவிட்டால் பலன் கொடுக்காது. அதுபோல் மனிதர்களை எடுத்துக் கொண்டால், ஒருவகையினருக்கு உதவி செய்தால்தான், அவர்கள் திருப்பி உதவுவார்கள். அவர்கள் பாக்குமரத்தைப் போன்றவர்கள். மாமரம் ஆயிரக் கணக்கில் பூக்கள் பூக்கும். நூற்றுக்கணக்கில் பூக்கள் உதிர்ந்து விடும். மீதிப் பூக்கள்தான் காயாகி பலன் கொடுக்கும். அதுபோல் அம்மாதிரியான மனிதர்கள் 10 வாக்குறுதிகள் கொடுத்தால், இரண்டு வாக்குறுதிகளைத்தான் நிறைவேற்று வார்கள். அவர்கள் மாமரத்துக்கு ஒப்பானவர்கள். வாழை மரம் மட்டும் பூக்கின்ற பூக்கள் எல்லாம் காயாகி பலன் கொடுக்கும். ஒன்று கூட வீணாகாது. அதுபோல் சில பேர் சொல்லுகின்ற வாக்குறுதிகள் அனைத்தையும் நிறை வேற்றுவார்கள். அது போல் இந்த அரசின் நிதி நிலை அறிக்கையும் அமைந்திருக்கிறது. வாழைப்பூவாக இந்த நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு

(பிற்பகல் 12-25)

டாக்டர் நாவலர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கையில் 10 கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் திறக்க, ஏழாவது ஐந்தாண்டுக் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எதிர்பார்ப்பதாகக் கூறியிருக் கிறார்கள். இந்தியாவிலேயே கரும்பு உற்பத்தியில் முதலிடம் பெற்றிருப்பது





இறது. ஆனால் அப்படி விளையக் கூடிய கரும்பை வாங்கக்கூடிய சர்க்கரை ஆலைகள் போதுமானவையாக இல்லை என்பதை நாம் உணர்ந்திருக்கிறோம். ஆகவே, உற்பத்தியாகக் கூடிய கரும்பை வாங்கக்கூடிய அளவுக்கு ஆலைகள் இல்லாததால, விவசாயிகளுக்குக் கட்டுபடியாகக்கூடிய விலை கிடைப்பதில்லை. தனியார் சர்க்கரை ஆலைகள், உற்பத்திக்கேற்ற விலையைக் கொடுக்க முன்வருவதில்லை.

முன்பெல்லாம், விவசாயிகள், கொண்டுபோய்க் கொடுக்கிற கரும்புக்கு முன்னதாகவே பணம் கொடுத்து சர்க்கரை ஆலையில் வாங்கிக்கொள்வார்கள். ஆனால் இப்போது, கரும்பு விற்பனை முடிந்தபிறகும் கூட, இரண்டு மூன்று மாதங்களுக்கு கரும்புக்கான பணம் வருவதில்லை என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதனால் விவசாயிகளுக்கு பாதிப்பான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, விவசாயிகள், தனியார் சர்க்கரை ஆலைகளை நம்பாமல், தாமே சர்க்கரையை, வெல்லத்தை உற்பத்தி செய்து, அயல் மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யலாம் என்று நினைத்து, கரும்புத் தோட்டத்திற்குப் பக்கத்திலேயே அந்தக் கரும்புகளைக் காய்ச்சி, வெல்லத்தை மகாராஷ்டிரா மாநிலத்திற்கு அதிக அளவில் ஏற்றுமதி செய்கிறார்கள். மீதி யிருக்கக்கூடிய வெல்லத்தை, இங்கே கள்ளச் சாராயம் காய்ச்ச வாங்கிக் கொண்டு போய்விடுகிறார்கள். போதுமான சர்க்கரை ஆலைகள் தமிழ்நாட்டில் இல்லாததால்தான், கள்ளச் சாராய உற்பத்தி பெருகுகிறது என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட நிலை வரக்கூடாது என்பதற்காகத்தான், இப்போது நிதிநிலை அறிக்கையில் கூட்டுறவுத் துறை மூலம் 10 சர்க்கரை ஆலைகள் அமைக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில், உற்பத்தியான கரும்புக்கு முன்னதாகவே எல்லாப் பணத்தையும் கொடுத்துவிடுகிறார்கள். மேலும் லாபத்தில் விவசாயி களுக்கு ஊக்க ஊதியம் கொடுக்கப்படுகிறது. ஆனால் இந்தச் சலுகைகளை தனியார் சர்க்கரை ஆலைகளில் கொடுக்க மறுக்கிறார்கள். கரும்பு விவசாயி களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று நினைத்தால், விவசாயிகளிடம் உத்தரப்பிரதேச மாநிலம்தான். இரண்டாவதாக தமிழ்நாடு இடம் பெற்றிருக் சரியாக நடக்காத தனியார் சர்க்கரை ஆலைகளை அரசே மேற்கொள்ள வேண்டும். முன்பு இப்படி விவசாயிகளிடம் சரியாக நடக்காத தொழிலாளர் களின் நலனைப் பேணாத பாண்டியராஜபுரம் சர்க்கரை ஆலை, தொழில் தகராறு காரணமாக மூடப்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டபோது, அரசு அதன் பொறுப்பை ஏற்றது. இப்போது அதன் நிர்வாகம் சரியான முறையில்

* கவிஞர் முத்துலிங்கம் : மாற்றுத் தலைவர் அவர்களே, தங்க
முகத்தையும் மன்ற உறுப்பினர்கள் முகத்தையும் மட்டுமே பார்த்துப் பே
வேண்டிய நான் இங்கே பெரும்பாலாக இருக்கின்ற மைக்குகளைப் பார்த்
பேச வேண்டிய நிலையில் இருப்பதால், ஐந்து நிமிடங்களுக்குள் முடி
விடுகிறேன். பணக்காரர்களுக்கு மட்டுமே சலுகைகள் அளிக்கக்கூடிய மத்தி
பட்ஜெட் மாதிரி இல்லாமல் ஏழையெளிய மக்களுக்கும், விவசாயப் பெருங்கு
மக்களுக்கும் பயனளிக்கக்கூடிய வகையில் நல்ல பல திட்டங்களை
உள்ளடக்கிய நிதிநிலை அறிக்கையாக இது அமைந்திருப்பதால், நான் இதனை
வரவேற்கிறேன். நாங்கள் ஆட்சிக்கு வந்தால், 8 ஆவது வகுப்புவரை படிக்கி
ஏழையெளிய மாணவர்களுக்கு இலவசமாக சீருடையும், இலவசமாகப் பாடப்
புத்தகங்களும் வழங்குவோம் என்றும் அரசு ஊழியர்கள் பணிக் காலத்தில்
இறந்துபோனால் அவர்கள் குடும்பத்திற்கு வழங்குகின்ற குடும்ப நிதியை
ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ. 20 ஆயிரமாக உயர்த்தி வழங்குவோம் என்றும்
தேர்தல் அறிக்கையில் சொன்னோம். சொன்னதை எல்லாம் நிறை
வேற்றினோம். கொடுத்த வாக்குறுதிகளை எல்லாம் இந்த அரசு நிறைவேற்றி
வருகிறது என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு. பொதுவாக மரங்களை
எடுத்துக்கொண்டால், நான்கு வகையான மரங்கள் உண்டு. பாக்கு மரம்,
மாமரம், வாழை மரம், பலா மரம். அது போல் மனிதர்களிலும் நான்கு வகை
உண்டு. பாக்குமரத்துக்குத் தண்ணீர் ஊற்றினால் அது பலன் கொடுக்கும்.
இல்லாவிட்டால் பலன் கொடுக்காது. அதுபோல் மனிதர்களை எடுத்துக்
கொண்டால், ஒருவகையினருக்கு உதவி செய்தால்தான், அவர்கள் திருப்பி
உதவுவார்கள். அவர்கள் பாக்குமரத்தைப் போன்றவர்கள். மாமரம் ஆயிரக்
கணக்கில் பூக்கள் பூக்கும். நூற்றுக்கணக்கில் பூக்கள் உதிர்ந்து விடும். மீதிப்
பூக்கள்தான் காயாகி பலன் கொடுக்கும். அதுபோல் அம்மாதிரியான மனிதர்கள்
10 வாக்குறுதிகள் கொடுத்தால், இரண்டு வாக்குறுதிகளைத்தான் நிறைவேற்று
வார்கள். அவர்கள் மாமரத்துக்கு ஒப்பானவர்கள். வாழை மரம் மட்டும்
பூக்கின்ற பூக்கள் எல்லாம் காயாகி பலன் கொடுக்கும். ஒன்று கூட வீணாகாது.
அதுபோல் சில பேர் சொல்லுகின்ற வாக்குறுதிகள் அனைத்தையும் நிறை
வேற்றுவார்கள். அது போல் இந்த அரசின் நிதி நிலை அறிக்கையும்
அமைந்திருக்கிறது. வாழைப்பூவாக இந்த நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு
டாக்டர் நாவலர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். இந்த நிதிநிலை

(பிற்பகல் 12-25)

அறிக்கையில் 10 கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் திறக்க, ஏழாவது ஐந்தாண்டுக்
காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எதிர்பார்ப்பதாகக் கூறியிருக்
கிறார்கள். இந்தியாவிலேயே கரும்பு உற்பத்தியில் முதலிடம் பெற்றிருப்பது



இறது. ஆனால் அப்படி விளையக் கூடிய கரும்பை வாங்கக்கூடிய சர்க்கரை ஆலைகள் போதுமானவையாக இல்லை என்பதை நாம் உணர்ந்திருக்கிறோம். ஆகவே, உற்பத்தியாகக் கூடிய கரும்பை வாங்கக்கூடிய அளவுக்கு ஆலைகள் இல்லாததால, விவசாயிகளுக்குக் கட்டுபடியாகக்கூடிய விலை கிடைப்பதில்லை. தனியார் சர்க்கரை ஆலைகள், உற்பத்திக்கேற்ற விலையைக் கொடுக்க முன்வருவதில்லை.

முன்பெல்லாம், விவசாயிகள், கொண்டுபோய்க் கொடுக்கிற கரும்புக்கு முன்னதாகவே பணம் கொடுத்து சர்க்கரை ஆலையில் வாங்கிக்கொள்வார்கள். ஆனால் இப்போது, கரும்பு விற்பனை முடிந்தபிறகும் கூட, இரண்டு மூன்று மாதங்களுக்கு கரும்புக்கான பணம் வருவதில்லை என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதனால் விவசாயிகளுக்கு பாதிப்பான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, விவசாயிகள், தனியார் சர்க்கரை ஆலைகளை நம்பாமல், நாமே சர்க்கரையை, வெல்லத்தை உற்பத்தி செய்து, அயல் மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யலாம் என்று நினைத்து, கரும்புத் தோட்டத்திற்குப் பக்கத்திலேயே அந்தக் கரும்புகளைக் காய்ச்சி, வெல்லத்தை மகாராஷ்டிரா மாநிலத்திற்கு அதிக அளவில் ஏற்றுமதி செய்கிறார்கள். மீந்து யிருக்கக்கூடிய வெல்லத்தை, இங்கே கள்ளச் சாராயம் காய்ச்ச வாங்கிக் கொண்டு போய்விடுகிறார்கள். போதுமான சர்க்கரை ஆலைகள் தமிழ்நாட்டில் இல்லாததால்தான், கள்ளச் சாராய உற்பத்தி பெருகுகிறது என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட நிலை ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான், இப்போது நிதிநிலை அறிக்கையில் கூட்டுறவுத் துறை மூலம் 10 சர்க்கரை ஆலைகள் அமைக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில், உற்பத்தியான கரும்புக்கு முன்னதாகவே எல்லாப் பணத்தையும் கொடுத்துவிடுகிறார்கள். மேலும் லாபத்தில் விவசாயி களுக்கு ஊக்க ஊதியம் கொடுக்கப்படுகிறது. ஆனால் இந்தச் சலுகைகளை தனியார் சர்க்கரை ஆலைகளில் கொடுக்க மறுக்கிறார்கள். கரும்பு விவசாயி களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று நினைத்தால், விவசாயிகளிடம் உத்தரப்பிரதேச மாநிலம்தான். இரண்டாவதாக தமிழ்நாடு இடம் பெற்றிருக் சரியாக நடக்காத தனியார் சர்க்கரை ஆலைகளை அரசே மேற்கொள்ள வேண்டும். முன்பு இப்படி விவசாயிகளிடம் சரியாக நடக்காத தொழிலாளர் களின் நலனைப் பேணாத பாண்டியராஜபுரம் சர்க்கரை ஆலை, தொழில் தகராறு காரணமாக மூடப்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டபோது, அரசு அதன் பொறுப்பை ஏற்றது. இப்போது அதன் நிர்வாகம் சரியான முறையில்

சிறப்பாக நடக்கிறது. ஆகவே இதை முன் உதாரணமாகக் கொண்டு விவசாயிகளிடம் சரியாக நடக்காத தனியார் சர்க்கரை ஆலைகளை அரசே மேற்கொண்டு எடுத்து நடத்த வேண்டும். கரும்புக்குச் சரியான விலை கொடுக்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், நெல் விவசாயிகளுக்கும் சரியான உற்பத்தி விலை கொடுக்கப்படுவதில்லை என்பது விவசாயிகளின் நீண்ட நாள் பிரச்சினையாகும். கோதுமைக்குக் கொடுக்கப்படும் விலை, ஊக்க ஊதியம் நெல்லுக்கும் கொடுக்கப்பட வேண்டும் என்று அவர்கள் கேட்கிறார்கள். கோதுமை விளைவிக்க எவ்வளவு கஷ்டமுண்டோ அவ்வளவு கஷ்டம் நெல் விளைவிப்பதில் இருக்கிறது என்பதை கோதுமை சாப்பிடுபவர்கள் உணரவில்லை என்று கருதுகிறேன். ஆகவே நெல்லுக்கும் கோதுமைக்குக் கொடுக்கப்படுவது போல் விலை நிர்ணயம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எல்லாவற்றுக்கும் அடிப்படையாக மின்சாரம் தேவைப்படுகிறது. தமிழ்நாட்டில் அடிக்கடி மின்சாரத் தட்டுப்பாடு வருகிறது. தமிழ்நாட்டில் எந்தெந்த இடத்தில் நீர் மின் நிலையம் அமைக்க வேண்டுமோ அங்கெல்லாம் அமைத்துவிட்டோம். அப்படி அமைக்காத ஒரு இடம் ஒகனேக்கல்தான். கர்நாடக முதல்வர் திரு. ஹெக்டே அவர்கள் அண்மையில் சென்னை வந்தபோது, நமது முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஒகனேக்கல் நீர் மின்திட்டம் பற்றிப் பேசியிருக்கிறார். இந்தத் திட்டம் பற்றி 1964 ஆம் ஆண்டிலிருந்து காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலிருந்தே பேசப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தை கர்நாடக எல்லையில் நிறைவேற்றுவதா, தமிழ்நாட்டு எல்லையில் நிறைவேற்றுவதா என்ற பிரச்சினை இருந்து வருகிறது. புரட்சித் தலைவர் அவர்கள் காலத்தில் இதற்கு ஒரு முடிவு காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எப்படி நூறாண்டுக் காலமாக கிடப்பில் கிடந்த கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்தை இப்போது எடுத்து, அதைச் செம்மையாக நடத்திக்கொண்டிருக்கிறார்களோ, அதேபோல் ஒகனேக்கல் திட்டத்தையும் நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புரட்சித் தலைவர் அவர்கள், சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு அண்ணா அறக்கட்டளை ஒன்றை ஆரம்பித்து, அண்ணாவின் படைப்பிலக்கியங்களை ஆராய்ச்சி செய்ய ரூ. 21 லட்சம் கொடுத்தார்கள். இன்றைய ஆண்டுக்காலமாக ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா என்றால், எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பல்கலைக் கழகம் வழக்கம்போல் தூங்கிக்கொண்டுதான் இருக்கிறது. புரட்சித் தலைவர் அவர்கள் பணம் கொடுத்த அதே



நேரத்தில்தான் கிருஸ்தவ இலக்கியங்களையும், ஜெயின் மத இலக்கியங்களையும் ஆராய்ச்சி செய்ய, சிலர் பணம் கொடுத்தார்கள். அங்கே திரு. இக்னாசி தலைமையில் கிறிஸ்தவ இலக்கிய ஆராய்ச்சி நடக்கிறது.

(பிற்பகல் 12-30)

ஜெயினிஸம் பற்றியும் ஆராய்ச்சி நடக்கிறது. ஆனால் 1½ ஆண்டுகள் ஆகியும் அண்ணாவின் படைப்பிலக்கியங்களைப்பற்றி ஆராய்ச்சியே நடைபெறவில்லை. அரசாங்கம் இதைக் கவனித்ததா என்று தெரியவில்லை

சென்னைப் பல்கலைக் கழகம் ஒரு விளம்பரம் செய்திருக்கிறது. அண்ணா அறக்கட்டளையில் அண்ணாவின் படைப்பிலக்கியங்களை ஆய்வு செய்ய பேராசிரியர்கள், துணைப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் தேவை என்று விளம்பரம் செய்திருக்கிறது. பேராசிரியர்களாக இருப்பதற்கும், துணைப் பேராசிரியர்களாக இருப்பதற்கும் என்ன தகுதி என்றால், அவர்கள் வரலாற்றிலே எம்.ஏ. பட்டம் பெற்றவர்களாக அல்லது சமூக அறிவியலில் எம்.ஏ. பட்டம் பெற்றவர்களாக அல்லது அரசியலிலே எம்.ஏ. பட்டம் பெற்றவர்களாக இருக்க வேண்டும் என்றும், மேலும் ஒரு டாக்டர் பட்டமும் பெற்றிருக்க வேண்டும் என்றும் போட்டிருக்கிறார்கள். விரிவுரையாளர் பணிக்கு தமிழிலே எம்.ஏ. பட்டம் பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம் என்றும் வைத்திருக்கிறார்கள்.

ஆனால் அண்ணாவின் படைப்பிலக்கியங்களை ஆராய்ச்சி செய்து அதிலே யார் டாக்டர் பட்டம் வாங்கியிருக்கிறார்கள் என்றால் தமிழிலே எம்.ஏ. பட்டம் வாங்கியிருப்பவர்கள்தான் அண்ணாவின் படைப்பிலக்கியங்களை ஆராய்ச்சி செய்து டாக்டர் பட்டம் பெற்றிருக்கிறார்கள். உதாரணமாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் அண்ணாவின் நாடகங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்து டாக்டர் பட்டம் வாங்கியிருக்கிறார்கள். டாக்டர் இரா. சேது என்பவர் அண்ணாவின் கதை இலக்கியங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்து டாக்டர் பட்டம் வாங்கியிருக்கிறார். டாக்டர் விவேகானந்தம் என்பவர் அண்ணாயிசம் பற்றி ஆராய்ச்சி செய்து, டாக்டர் பட்டம் வாங்கியிருக்கிறார். ஆறுமுகம் என்பவர் அண்ணாவின் மொழி நடை பற்றி ஆராய்ச்சி செய்து டாக்டர் பட்டம் வாங்கியிருக்கின்றார். அரசியலில் எம்.ஏ. பட்டம் பெற்றவர்கள், சமூக அறிவியலில் எம்.ஏ. பட்டம் பெற்றவர்கள், வரலாற்றிலே எம்.ஏ. பட்டம் பெற்றவர்கள் எவரும் அண்ணாவின் படைப்பிலக்கியங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்திருக்கிறார்களா என்றால், இல்லை. அவர்கள் ஆராய்ச்சி செய்து எந்தவொரு நூலும் வரவில்லை. அண்ணாவின்

மீது உண்மையான பற்றுள்ளவர்கள், தமிழிலே எம்.ஏ. பட்டம் பெற்றவர்தான். எனவே, வரலாற்றிலே எம்.ஏ. பட்டம் பெற்றவர்கள்தான் பேராசிரி பதவிக்கும், துணைப் பேராசிரியர் பதவிக்கும் விண்ணப்பிக்க வேண்டும் என் கூறுகின்ற பல்கலைக் கழகத்தின் விதிமுறை கண்டனத்துக்குரிய ஒன் ஆகவே பேராசிரியர்கள் பதவிக்கு தமிழிலே எம்.ஏ. பட்டம் பெற்றவர்களு விண்ணப்பிக்கலாம் என்று பல்கலைக் கழகம் தனது விதிக்குறிப்பிலே திருத் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வீட்டுவசதி வாரியத்தைப்பற்றி ஒன்றைச் சொல் விரும்புகிறேன். தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய எல்லோருக்கும் வீட்டுவச வாய்ப்பு கிடைக்க வேண்டும் என்பதற்காக, ஆளுக்கொரு வீடு கிடைக்க கூடிய திட்டத்தினை அரசாங்கம் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது. ஆனால் கடந்த இரண்டு ஆண்டு காலமாக அரசாங்கம் சிறப்பான முறையிலே செயல் பட்டாலும், அந்த வாரியம் சரியான முறையிலே திட்டங்களைத் தீட்டவில்லை. அதன் நிர்வாகம் சரிவர நடைபெறாத காரணத்தால், 1982-83-ஆம் ஆண்டிலேயே நிறைவேறியிருக்க வேண்டிய திட்டங்கள்கூட 1985-86 ஆம் ஆண்டிலேகூட முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. இதுவரை வீட்டுவசதி வாரியம் தமிழக அரசுக்கு தனது வரவுசெலவுக் கணக்குகளைச் சமர்ப்பித்ததே இல்லை. வீட்டுவசதி வாரியம் என்றைக்கு ஆரம்பிக்கப்பட்டதோ அன்றிலிருந் இன்றுவரை அது தன் வரவுசெலவுக் கணக்கைச் சமர்ப்பித்ததே இல்லை ஆகவே அங்கே நிர்வாகம் ஒழுங்காக நடைபெறுகிறதா இல்லையா என்பதை கண்காணிக்க அரசாங்கம் வீட்டுவசதி வாரியத்தின் வரவு என்ன, செலவு என்ன, லாபம் என்ன என்பதை ஆண்டுதோறும் அரசாங்கத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டும் என்று உத்தரவிட வேண்டும். ஏனென்றால் நான் பொது நிறுவனங்கள் குழுவில் இருந்த காலத்தில் வீட்டுவசதி வாரியம் பற்றி நாங்கள் ஆய்ந்து பார்த்தோம். அப்போது இவையெல்லாம் எங்களுக்குத் தெரிய வந்தது.

வாரியத்திலே தேவை இல்லாத செலவுகள், வீண் செலவுகள், விரயமான செலவுகள் நடந்துகொண்டிருக்கின்றன. அங்கே 24 லட்சம் ரூபாயிலே ஒரு கம்ப்யூட்டர் வாங்கியிருக்கின்றார்கள். அது வாரியத்திற்குத் தேவை இல்லை என்று அங்கே இருப்பவர்களே சொல்கின்றார்கள். அரசின் அனுமதி பெற்றுத் தான் அதை வாங்க வேண்டும். ஆனால் அவர்கள், அரசின் அனுமதி பெறாமலேயே 24 இலட்சம் ரூபாயிலே ஒரு கம்ப்யூட்டரை அவ்வளவு சீக்கிரத்திலே வாங்க வேண்டிய அவசியம் என்ன வந்தது? விசாரணை நடத்த வேண்டும். அந்த கம்ப்யூட்டர் வாரியத்திற்குப் பயன்படாத சூழ்நிலை ஏற்படுமானால், அந்த நஷ்டத்தை யார் ஏற்பது? ஆகவே அரசாங்கம், வீட்டு



வசதி வாரியத்தின் வரவுசெலவுக் கணக்குகளை எல்லாம் தொடர்ந்து ஒவ்வோராண்டும் சமர்ப்பிக்க வேண்டுமென்று உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அமைகிறேன். வணக்கம்.

**திரு. அ. மயில்சாமி :** மதிப்பிற்குரிய மாற்றுத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையிலே என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு முன்னால் நான் ஒரு விளக்கத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நேற்றைக்கு முன்தினம் நான் மறியல் போராட்டத்திலே ஈடுபட்டு கைதான போது 'தினசரி' என்கிற நாளேட்டில், அ.தி.மு.க. எம்.எல்.சி. கைது என்று செய்தி வந்தது. நான் அப்படி இதுவரை எந்தக் கட்சியிலும் சேரவில்லை. நான் எந்தக் கட்சியிலும் சேரப்போவதுமில்லை. நான் சார்ந்திருப்பது ஒரே கட்சி, அது ஆசிரியர்கள் கட்சிதான். ஆகவே இனிமேலாவது அந்தத் தவறை எதிர்காலத்தில் செய்யக்கூடாது என்று அந்த நாளேட்டுக்கு நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-35)

இன்றைக்கு நிதிநிலை அறிக்கையில் பார்க்கும்போது நல்ல திட்டங்களை, குறிப்பாக மாணவர்களுக்கு இலவசச் சீருடையும், புத்தகங்களும் . . . . .

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகிற நேரத்தில் நாளேடு பற்றிச் சொன்னார்கள். எந்த நாளேடு என்று சொன்னால் நன்றாக இருக்கும்.

**திரு. அ. மயில்சாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்டதற்கு '**தினசரி' என்ற பத்திரிகை என்று சொன்னேன்.**

இந்த நிதி நிலை அறிக்கையிலே பல பாராட்டக் கூடிய அம்சங்கள் இருக்கின்றன என்று வரவேற்று, குறிப்பாக ஆசிரியர்கள் பிரச்சினைகளைப் பற்றி, பல்வேறு பிரச்சினைகளைப்பற்றி இங்கே எனக்கு முன்பு எனது அணியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

இன்றைக்கு கல்வித் துறைக்கு 468 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டதாக இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. நேற்றைக்கு நம்முடைய மதிப்பிற்குரிய டாக்டர் நாவலர் அவர்கள் இந்த 468 கோடி ரூபாயில் எதைக் குறைப்பது, எதைச் சேர்ப்பது என்று நீங்களே சொல்லுங்கள் என்றுகூடச் சொன்னார்கள்.

மீது உண்மையான பற்றுள்ளவர்கள், தமிழிலே எம்.ஏ. பட்டம் பெற்றவர் தான். எனவே, வரலாற்றிலே எம்.ஏ. பட்டம் பெற்றவர்கள்தான் பேராசிரி பதவிக்கும், துணைப் பேராசிரியர் பதவிக்கும் விண்ணப்பிக்க வேண்டும் என் கூறுகின்ற பல்கலைக் கழகத்தின் விதிமுறை கண்டனத்துக்குரிய ஒன் ஆகவே பேராசிரியர்கள் பதவிக்கு தமிழிலே எம்.ஏ. பட்டம் பெற்றவர்களு விண்ணப்பிக்கலாம் என்று பல்கலைக் கழகம் தனது விதிக்குறிப்பிலே திருத் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வீட்டுவசதி வாரியத்தைப்பற்றி ஒன்றைச் சொல் விரும்புகிறேன். தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய எல்லோருக்கும் வீட்டுவச வாய்ப்பு கிடைக்க வேண்டும் என்பதற்காக, ஆளுக்கொரு வீடு கிடைக் கூடிய திட்டத்தினை அரசாங்கம் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது. ஆனா கடந்த இரண்டு ஆண்டு காலமாக அரசாங்கம் சிறப்பான முறையிலே செய பட்டாலும், அந்த வாரியம் சரியான முறையிலே திட்டங்களைத் தீட்டவில்லை. அதன் நிர்வாகம் சரிவர நடைபெறாத காரணத்தால், 1982-83-ஆம் ஆண்டிலேயே நிறைவேறியிருக்க வேண்டிய திட்டங்கள்கூட 1985-86 ஆம் ஆண்டிலேகூட முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. இதுவரை வீட்டுவசதி வாரியம் தமிழக அரசுக்கு தனது வரவுசெலவுக் கணக்குகளைச் சமர்ப்பித்தே இல்லை. வீட்டுவசதி வாரியம் என்றைக்கு ஆரம்பிக்கப்பட்டதோ அன்றிலிருந் இன்றுவரை அது தன் வரவுசெலவுக் கணக்கைச் சமர்ப்பித்ததே இல்லை. ஆகவே அங்கே நிர்வாகம் ஒழுங்காக நடைபெறுகிறதா இல்லையா என்பதைக் கண்காணிக்க அரசாங்கம் வீட்டுவசதி வாரியத்தின் வரவு என்ன, செலவு என்ன, லாபம் என்ன என்பதை ஆண்டுதோறும் அரசாங்கத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டும் என்று உத்தரவிட வேண்டும். ஏனென்றால் நான் பொது நிறுவனங்கள் குழுவில் இருந்த காலத்தில் வீட்டுவசதி வாரியம் பற்றி நாங்கள் ஆய்ந்து பார்த்தோம். அப்போது இவையெல்லாம் எங்களுக்குத் தெரிய வந்தது.

வாரியத்திலே தேவை இல்லாத செலவுகள், வீண் செலவுகள், விரயமான செலவுகள் நடந்துகொண்டிருக்கின்றன. அங்கே 24 லட்சம் ரூபாயிலே ஒரு கம்ப்யூட்டர் வாங்கியிருக்கின்றார்கள். அது வாரியத்திற்குத் தேவை இல்லை என்று அங்கே இருப்பவர்களே சொல்கின்றார்கள். அரசின் அனுமதி பெற்றுத் தான் அதை வாங்க வேண்டும். ஆனால் அவர்கள், அரசின் அனுமதி பெறாமலேயே 24 இலட்சம் ரூபாயிலே ஒரு கம்ப்யூட்டரை அவ்வளவு சீக்கிரத்திலே வாங்க வேண்டிய அவசியம் என்ன வந்தது? விசாரணை நடத்த வேண்டும். அந்த கம்ப்யூட்டர் வாரியத்திற்குப் பயன்படாத சூழ்நிலை ஏற்படுமானால், அந்த நஷ்டத்தை யார் ஏற்பது? ஆகவே அரசாங்கம், வீட்டு





வசதி வாரியத்தின் வரவுசெலவுக் கணக்குகளை எல்லாம் தொடர்ந்து ஒவ்வோராண்டும் சமர்ப்பிக்க வேண்டுமென்று உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அமைகிறேன். வணக்கம்.

**திரு. அ. மயில்சாமி :** மதிப்பிற்குரிய மாற்றுத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையிலே என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு முன்னால் நான் ஒரு விளக்கத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நேற்றைக்கு முன்தினம் நான் மறியல் போராட்டத்திலே ஈடுபட்டு கைதான போது 'தினசரி' என்கிற நாளேட்டில், அ.தி.மு.க. எம்.எல்.சி. கைது என்று செய்தி வந்தது. நான் அப்படி இதுவரை எந்தக் கட்சியிலும் சேரவில்லை. நான் எந்தக் கட்சியிலும் சேரப்போவதுமில்லை. நான் சார்ந்திருப்பது ஒரே கட்சி, அது ஆசிரியர்கள் கட்சிதான். ஆகவே இனிமேலாவது அந்தத் தவறை எதிர்காலத்தில் செய்யக்கூடாது என்று அந்த நாளேட்டுக்கு நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-35)

இன்றைக்கு நிதிநிலை அறிக்கையில் பார்க்கும்போது நல்ல திட்டங்களை, குறிப்பாக மாணவர்களுக்கு இலவசச் சீருடையும், புத்தகங்களும் . . . . .

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகிற நேரத்தில் நாளேடு பற்றிச் சொன்னார்கள். எந்த நாளேடு என்று சொன்னால் நன்றாக இருக்கும்.

**திரு. அ. மயில்சாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்டதற்கு **'தினசரி' என்ற பத்திரிகை என்று சொன்னேன்.**

இந்த நிதி நிலை அறிக்கையிலே பல பாராட்டக் கூடிய அம்சங்கள் இருக்கின்றன என்று வரவேற்று, குறிப்பாக ஆசிரியர்கள் பிரச்சினைகளைப் பற்றி, பல்வேறு பிரச்சினைகளைப்பற்றி இங்கே எனக்கு முன்பு எனது அணியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

இன்றைக்கு கல்வித் துறைக்கு 468 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டதாக இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. நேற்றைக்கு நம்முடைய மதிப்பிற்குரிய டாக்டர் நாவலர் அவர்கள் இந்த 468 கோடி ரூபாயில் எதைக் குறைப்பது, எதைச் சேர்ப்பது என்று நீங்களே சொல்லுங்கள் என்றுகூடச் சொன்னார்கள்.

[திரு. அ. மயில்சாமி] [1985 ஏப்ர

அந்த அளவுக்கு எங்களுடைய கோரிக்கைகளினுடைய நியாயங்
ஏற்றுக்கொண்டு சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரையில்
பொருளாதார நிபுணன் அல்ல. என்னைத் தேர்ந்தெடுத்த ஆசிரியர்
ஆசிரியர்களுடைய பிரச்சினையைச் சொல்வதற்காகத்தான், ஆசிரியர்கள்
பாடு அடையச் செய்வதற்காகத்தான் என்னைத் தேர்ந்தெடுத்து
யிருக்கிறார்கள். ஆகவே அந்த ஆசிரியர்களுடைய கோரிக்கைகளை எ
திட்டத்திலே சேர்ப்பது, எதிலே குறைப்பது, கூட்டுவது என்பது நிச்ச
மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்களுக்குத் தெரியும். அவர்கள் நீ
நெடுங்காலமாக கல்வித் துறை அமைச்சராக இருந்தவர்கள். எங்களு
பிரச்சினைகளை எல்லாம் அறிந்து ஓரளவுக்குத் தீர்ப்பார்கள் என்ற ஒரு
எண்ணத்திலேதான் இதைச் சொல்லியிருக்கிறார்கள். நிச்சயமாக அவ
நாளைக்கு இங்கே நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்திற்கு ப
அளிக்கின்ற நேரத்திலே ஏதாவது ஒன்றிரண்டு சலுகைகளை அறிவிப்பார்
என்ற நம்பிக்கையில்தான் இங்கே நான் இருக்கிறேன் என்பதை
தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு ஆசிரியர்களுடைய பிரச்சினைகளை
பற்றிப் பேசினால் சற்று கசப்பாகத்தான் இருக்குமென்று கருதுகிறே
என்னவோ எல்லோரும் அதைச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் மாண்பு
டாக்டர் நாவலர் அவர்கள் நேற்று "நீங்கள் அடிக்கடி அதைச் சொ
தனால் பயன் இருக்கிறது" என்று சொன்னார்கள். ஆக அதைத் தி
சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு ஆசிரியர்கள் பல
பிரச்சினைகளுக்காக போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இ
போராட்டம் ஏதோ திடீரென்று நேற்றைக்கோ அல்லது இரண்டு நாட்களு
முன்போ, திட்டம் போட்டு நடத்திய போராட்டமல்ல. ஏற்கெனவே இ
பிரச்சினைகளைப்பற்றி நம்முடைய கல்வித் துறை அதிகாரிகள் மத்
எடுத்துச் சொல்லியிருக்கிறோம். இந்தக் கல்வித் துறை அதிகாரிகள் இ
பிரச்சினைக்கு இதுவரை என்ன தீர்வு காணலாமென்று இதுவரை
அரசுக்கு ஏதாவது குறிப்பு அனுப்பியிருக்கிறார்களா என்றால், நிச்சய
இருக்காது. நாங்கள் போராட்டம் நடத்தியதற்குப் பின்னாலே
கோரிக்கைகள் எங்கே இருக்கின்றன என்று தேடுவார்களேயொழிய,
கூட்டியே இவர்களுக்கு இந்தந்தப் பிரச்சினைகள் இருக்கின்றன, இவைக
தீர்க்க வேண்டும் என்று நிச்சயமாக அரசுக்குச் சொல்கிறார்களா என்
அந்தமாதிரி ஒரு நடைமுறை இருப்பதாகத் தெரியவில்லை. அதன
அதிகமான பிரச்சினைகள் இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்றன என்று
சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு மூன்றாவது நா
போராட்டம் நடந்துகொண்டிருக்கிறது. இட்டத்தட்ட இன்றைக்கு



1985 ஏப்ரல் 10] திரு. அ. மயில்சாமி]

ஆசிரியர்களுக்கு மேல் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்தக் கோரிக்கைகளை வைத்துப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறவர்களை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தக்கூடாதா? நாங்கள் என்ன தீண்டத்தகாதவர்களா? நாங்கள் நடத்துகின்ற போராட்டத்தை எங்களுடைய இயக்கத்தை, அரசால் அங்கீகரிக்கப்பட்ட இயக்கத்தை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தக்கூடாதா? அதிகாரிகள் எங்களோடு பேசுவதற்கு நாங்கள் தகுதி இல்லாதவர்களா என்று நான் வேதனையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எந்தப் பிரச்சினைகளையும்பற்றிப் பேசினால் நிச்சயமாக பாதிப் பிரச்சினைகள் அதிலே தீர்ந்துவிடும் என்ற நம்பிக்கையுடையவன் நான். இன்றைக்கு மூன்றாவது நாளாக போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. கன்னியாகுமரியிலிருந்தும் எல்லா மாவட்டங்களிலிருந்தும் வந்து போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். . அவர்கள் ஊருக்குப் போய் என்ன சொல்வார்கள்? நாங்கள் போராட்டம் நடத்தினோம். காலையிலே கைது செய்தார்கள். மாலையிலே விட்டுவிட்டார்கள். ஒன்றுமே செய்யவில்லை என்று சொன்னால் அரசுக்கு அது ஒரு கெட்ட பெயரை வாங்கித் தராதா? இதற்கு யார் காரணம் என்று தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டும். இந்தப் பிரச்சினைகளை எல்லாம் அதிகாரிகளிடம் ஆண்டுக்காண்டு அடிக்கடி நாங்கள் சொல்லிக் கொண்டிருக்கிறோம். இன்றைக்கு ஏன் ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் இந்தப் போராட்டத்திற்குத் தள்ளப்பட்டோம் என்றால், இன்றைக்கோ, நாளைக்கோ, இன்னும் 10 நாட்களிலே வீட்டுக்குச் செல்லக்கூடிய ஒரு பரிதாபகரமான நிலை இருக்கின்ற காரணத்தினால்தான், இந்தப் போராட்டத்திற்கு நாங்கள் தள்ளப்பட்டோமேயொழிய வேறு எந்தப் புதிய கோரிக்கைகளுக்காகவோ. சலுகைகளுக்காகவோ நாங்கள் போராட்டம் நடத்தவில்லை. நாங்கள் சொல்லியது எல்லாம் பழைய கோரிக்கைகள்தானேயொழிய புதிய கோரிக்கைகள் அல்ல என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். 10 (ஏ) (1) ஆசிரியர்கள் 4 ¼ ஆண்டுகளாகப் பணியாற்றுகிறார்கள். இவர்களிடம் படித்த மாணவர்கள் எல்லாம் இன்றைக்குத் தேர்வுகள் எழுதி, தேர்ச்சி பெற்று டாக்டர்களாகவோ, பொறியியல் வல்லுனர்களாகவோ இருக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆக 10 (ஏ) (1) ஆசிரியர்களிடம் படித்த மாணவர்கள் தேர்வு எழுதவில்லையா? அவர்கள் தேர்வு எழுதுவது சரியில்லை என்று யாராவது சொல்லியிருக்கிறார்களா? அப்படிப்பட்ட அனுபவம் பெற்ற ஆசிரியர்களை தேர்வாணைக் குழு தேர்ந்தெடுப்பதில்லை. இது என்ன நியாயம்? ஆங்கிலேயன் காலத்திலிருந்த தேர்வாணைக் குழுவினுடைய விதிமுறைகள் அப்படியே இருக்கின்றன. அதை நாம் மாற்றக்கூடாதா? கல்வித் துறையிலே எத்தனையோ மாற்றங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தத் தேர்

அந்த அளவுக்கு எங்களுடைய கோரிக்கைகளினுடைய நியா
ஏற்றுக்கொண்டு சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரையில்
பொருளாதார நிபுணன் அல்ல. என்னைத் தேர்ந்தெடுத்த ஆசிரி
ஆசிரியர்களுடைய பிரச்சினையைச் சொல்வதற்காகத்தான், ஆசிரியர்க
பாடு அடையச் செய்வதற்காகத்தான் என்னைத் தேர்ந்தெடுத்து
யிருக்கிறார்கள். ஆகவே அந்த ஆசிரியர்களுடைய கோரிக்கைகளை
திட்டத்திலே சேர்ப்பது, எதிலே குறைப்பது, கூட்டுவது என்பது நிச்
மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்களுக்குத் தெரியும். அவர்கள்
நெடுங்காலமாக கல்வித் துறை அமைச்சராக இருந்தவர்கள். எங்க
பிரச்சினைகளை எல்லாம் அறிந்து ஓரளவுக்குத் தீர்ப்பார்கள் என்ற ஒரு
எண்ணத்திலேதான் இதைச் சொல்லியிருக்கிறார்கள். நிச்சயமாக அ
நாளைக்கு இங்கே நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்திற்கு
அளிக்கின்ற நேரத்திலே ஏதாவது ஒன்றிரண்டு சலுகைகளை அறிவிப்
என்ற நம்பிக்கையில்தான் இங்கே நான் இருக்கிறேன் என்
தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு ஆசிரியர்களுடைய பிரச்சினை
பற்றிப் பேசினால் சற்று கசப்பாகத்தான் இருக்குமென்று கருதி
என்னவோ எல்லோரும் அதைச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் மா
டாக்டர் நாவலர் அவர்கள் நேற்று "நீங்கள் அடிக்கடி அதைச் செ
தனால் பயன் இருக்கிறது" என்று சொன்னார்கள். ஆக அதை
சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு ஆசிரியர்கள் ப
பிரச்சினைகளுக்காக போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.
போராட்டம் ஏதோ திடீரென்று நேற்றைக்கோ அல்லது இரண்டு நாட்க
முன்போ, திட்டம் போட்டு நடத்திய போராட்டமல்ல. ஏற்கெனவே
பிரச்சினைகளைப்பற்றி நம்முடைய கல்வித் துறை அதிகாரிகள் ம
எடுத்துச் சொல்லியிருக்கிறோம். இந்தக் கல்வித் துறை அதிகாரிகள்
பிரச்சினைக்கு இதுவரை என்ன தீர்வு காணலாமென்று இதுவ
அரசுக்கு ஏதாவது குறிப்பு அனுப்பியிருக்கிறார்களா என்றால், நிச்
இருக்காது. நாங்கள் போராட்டம் நடத்தியதற்குப் பின்னாலே
கோரிக்கைகள் எங்கே இருக்கின்றன என்று தேடுவார்களேயொழிய,
கூட்டியே இவர்களுக்கு இந்தந்தப் பிரச்சினைகள் இருக்கின்றன, இவை
தீர்க்க வேண்டும் என்று நிச்சயமாக அரசுக்குச் சொல்கிறார்களா எ
அந்தமாதிரி ஒரு நடைமுறை இருப்பதாகத் தெரியவில்லை. அ
அதிகமான பிரச்சினைகள் இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்றன என்
சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு மூன்றாவது
போராட்டம் நடந்துகொண்டிருக்கிறது. கிட்டத்தட்ட இன்றைக்



ஆசிரியர்களுக்கு மேல் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்தக் கோரிக்கைகளை வைத்துப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறவர்களை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தக்கூடாதா? நாங்கள் என்ன தீண்டத்தகாதவர்களா? நாங்கள் நடத்துகின்ற போராட்டத்தை எங்களுடைய இயக்கத்தை, அரசால் அங்கீகரிக்கப்பட்ட இயக்கத்தை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தக்கூடாதா? அதிகாரிகள் எங்களோடு பேசுவதற்கு நாங்கள் தகுதி இல்லாதவர்களா என்று நான் வேதனையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எந்தப் பிரச்சினைகளையும்பற்றிப் பேசினால் நிச்சயமாக பாதிப் பிரச்சினைகள் அதிலே தீர்ந்துவிடும் என்ற நம்பிக்கையுடையவன் நான். இன்றைக்கு மூன்றாவது நாளாக போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. கன்னியாகுமரியிலிருந்தும் எல்லா மாவட்டங்களிலிருந்தும் வந்து போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். . அவர்கள் ஊருக்குப் போய் என்ன சொல்வார்கள்? நாங்கள் போராட்டம் நடத்தினோம். காலையிலே கைது செய்தார்கள். மாலையிலே விட்டுவிட்டார்கள். ஒன்றுமே செய்யவில்லை என்று சொன்னால் அரசுக்கு அது ஒரு கெட்ட பெயரை வாங்கித் தராதா? இதற்கு யார் காரணம் என்று தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டும். இந்தப் பிரச்சினைகளை எல்லாம் அதிகாரிகளிடம் ஆண்டுக்காண்டு அடிக்கடி நாங்கள் சொல்லிக் கொண்டிருக்கிறோம். இன்றைக்கு ஏன் ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் இந்தப் போராட்டத்திற்குத் தள்ளப்பட்டோம் என்றால், இன்றைக்கோ, நாளைக்கோ, இன்னும் 10 நாட்களிலே வீட்டுக்குச் செல்லக்கூடிய ஒரு பரிதாபகரமான நிலை இருக்கின்ற காரணத்தினால்தான், இந்தப் போராட்டத்திற்கு நாங்கள் தள்ளப்பட்டோமேயொழிய வேறு எந்தப் புதிய கோரிக்கைகளுக்காகவோ, சலுகைகளுக்காகவோ நாங்கள் போராட்டம் நடத்தவில்லை. நாங்கள் சொல்வது எல்லாம் பழைய கோரிக்கைகள்தானேயொழிய புதிய கோரிக்கைகள் அல்ல என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். 10 (ஏ) (1) ஆசிரியர்கள் 4 ஆண்டுகளாகப் பணியாற்றுகிறார்கள். இவர்களிடம் படித்த மாணவர்கள் எல்லாம் இன்றைக்குத் தேர்வுகள் எழுதி, தேர்ச்சி பெற்று டாக்டர்களாகவோ, பொறியியல் வல்லுனர்களாகவோ இருக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆக 10 (ஏ) (1) ஆசிரியர்களிடம் படித்த மாணவர்கள் தேர்வு எழுதவில்லையா? அவர்கள் தேர்வு எழுதுவது சரியில்லை என்று யாராவது சொல்லியிருக்கிறார்களா? அப்படிப்பட்ட அனுபவம் பெற்ற ஆசிரியர்களை தேர்வாணைக் குழு தேர்ந்தெடுக்கவில்லை. இது என்ன நியாயம்? ஆங்கிலேயன் காலத்திலிருந்த தேர்வாணைக் குழுவினுடைய விதிமுறைகள் அப்படியே இருக்கின்றன. அதை நாம் மாற்றக்கூடாதா? கல்வித் துறையிலே எத்தனையோ மாற்றத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தத் தேர்

வாணைக் குழுவின் விதிமுறைகளில் மாற்றம் செய்யக்கூடாதா? இங்கே இருக்
கக்கூடிய அத்தனை அமைச்சர் பெருமக்களும் இந்தப் பிரச்சினையினுடைய
நியாயத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

(பிற்பகல் 12-40)

தற்போது பணியாற்றுபவர்களை வேலை நீக்கம் செய்யக்கூடாது என்பதை
எல்லோரும் ஒப்புக்கொள்கிறார்கள். ஏற்கெனவே இதற்கான வகையில்
முன்னோடியாக அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. அப்படி இருக்
கும்போது, இந்த ஆசிரியப் பெருமக்களுக்கு அந்தச் சலுகையைக் கொடுப்ப
தில் என்ன தவறு ஏற்பட்டுவிடும்? அந்த ஆசிரியப் பெருமக்களெல்லாம் ஏறத்
தாழ 35 வயதைத் தாண்டியவர்கள். இனிமேல் அவர்களாகவே வேறு எந்த
வேலைக்கும் செல்ல முடியாது. இந்த வேலை போனால் நடுத் தெருவில்தான்
நிற்க வேண்டிய பரிதாபமான நிலையில் இருக்கிறார்கள். எனவேதான் இந்தப்
பிரச்சினையில் அரசாங்கத்தின் கவனத்தைக் கவருவதற்காக நாங்கள்
போராட்டத்தை நடத்துகிறோமே தவிர, அரசுக்கு விரோதமாக இல்லை
என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே அருள்
கூர்ந்து நம்முடைய அதிகாரிப் பெருமக்களுக்குச் சொல்லி அவர்கள் பேச்சு
வார்த்தைக்கு எங்களை அழைத்துப் பேசினால், அதன் மூலமே ஓரளவு
பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும். இந்தப் பிரச்சினை 4 மாதங்
களாக இருந்து வருகிறது. என்றைக்குத் தேர்வாணைக் குழுவின் பட்டியலை
வெளியிட்டார்களோ அன்றைக்கே இந்த ஆசிரியர்கள் பாதிக்கப்படுவார்கள்
என்பது அதிகாரிகளுக்குத் தெரியும். ஆனாலும் இதுவரையிலும் அவர்
களை அழைத்துப் பேசியிருக்கிறார்களா என்றால், நிச்சயமாக இல்லை
என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கல்வித் துறையில் பல்வேறு பிரச்சினைகள் இருந்தாலும், ஒன்றை இங்கே
தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன். முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள்
இருக்கிறார்கள். அவர்களெல்லாம் இப்போது 10 (ஏ) (1) ஆகப் பணியாற்றிக்
கொண்டிருக்கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரையில், 28—4—1981-க்கு
முன்னால் நியமிக்கப்பட்டவர்கள், நிரந்தரமாக்கப்படுகிறார்கள். அவர்கள்
தேர்வாணைக் குழுவுக்குப் போக வேண்டியதில்லை. ஆனால்
28—4—1981-க்குப் பின்னால் நியமிக்கப்பட்டவர்கள் தேர்வாணைக் குழு
வுக்குப் போக வேண்டும் என்றால் என்ன நியதி இது? 28—4—1981-க்கு
முன்னால் நியமிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு என்னென்ன கல்வித் தகுதி இருக்
கிறதோ அதுவேதான் நேற்றைக்கு நியமிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கும் இருக்





கிறது. எனவே பள்ளி கடைசி நாளன்று யார் யார் பணியிலிருக்கிறார்களோ அவர்களெல்லாம் தேர்வாணைக் குழுவிற்குப் போக வேண்டிய அவசியமில்லை. அவர்களையெல்லாம் நிரந்தரப்படுத்துகிறோம் என்று கல்வித் துறை ஒரு ஆணை போடக் கூடாதா? அதற்கு யார் குறுக்கே நிற்க முடியும் என்று சிந்திக்க வேண்டும். அதிகாரிப் பெருமக்கள் உள்ளத்தில் கஷ்டப்படுகிறவர்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற நல்லுணர்வு இருக்கிறதா என்பதைத்தான் என்னுடைய கேள்வியாக இங்கே கேட்க விரும்புகிறேன்.

இன்னும் இப்படி எத்தனையோ பிரச்சினைகளைச் சொல்லிக்கொண்டே செல்லலாம். இன்னும் சொல்லப் போனால், பல அதிகாரிகளுக்கே குறிப்பாக பல டி.இ.ஓ.-க்கள், சீ.ஈ.ஓ.-க்கள் போன்றவர்களுக்கே இன்னும் ஊதியம் நிர்ணயம் செய்யப்படவில்லை. கல்வித் துறையில் இப்படி இருக்கிறது. மற்ற துறைகளில் நிலைமை எப்படியோ எனக்குத் தெரியாது. கல்வித் துறையில் பல அதிகாரிகளுக்கு ஊதியமே நிர்ணயம் செய்யப்படாத நிலைமைதான் இருக்கிறது. அப்படியானால் அவர்கள் எந்த ஊதியத்தை பெற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்றால், அவர்கள் முன்பு தலைமையாசிரியர்களாகப் பணியாற்றிய போது பெற்ற ஊதியத்தைத்தான் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். எனக்குத் தெரிந்தவரையில், ஓய்வுபெற்ற பல கல்வித் துறை அதிகாரிகள் ஓய்வூதியத் தொகையேகூட பெற முடியாத நிலைமை இருக்கிறது. காரணம் அவர்களின் ஊதியம் நிர்ணயிக்கப்பட்டால்தான், ஓய்வூதியத் தொகையை அவர்களாலே பெற முடியும் என்ற நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட நிலையில் இருக்கிற அதிகாரிகளுக்கு தங்களுக்குக் கீழே பணியாற்றும் ஆசிரியர்களுடைய ஊதியத்தை நிர்ணயிப்பதற்கு எவ்வாறு மனது வரும்? "எனக்கே இன்னும் ஊதியம் நிர்ணயிக்கப்படவில்லை. உனக்கென்ன அவசரம்?" என்றுதானே சொல்லுவார்கள். எதற்காக இதைச் சொல்லுகிறேன் என்றால், ஆற்றல் பெற்றவர்கள் அறிவு மிக்கவர்கள் கல்வித் துறையில் பல அதிகாரிகளாக இருக்கிறார்கள். அவர்களெல்லாம் ஏன் இந்தப் பிரச்சினையைத் தீர்க்கக்கூடாது? இதையெல்லாம் அவர்கள் கவனித்து தீர்வு காணாத காரணத்தால்தான், அவைகளைப்பற்றி இங்கே அவையின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டிய நிலையில் இருக்கிறோம் என்பதை மிகுந்த வேதனையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இப்படி பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. இங்கே கல்விக்காக ஒதுக்கப்பட்ட 468 கோடி ரூபாயில் 850 புதிய பணியிடங்கள் கல்வித் துறையிலே கொடுக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் பேசும்போது, இதற்கு மேல் இன்னும் அதிகமாகச் செய்ய முடியாது என்று

[திரு. அ. மயில்சாமி] [1985 ஏப்ரல் 10

குறிப்பிட்டார்கள். அவர்களுடைய கவனத்திற்கு நான் ஒன்றைக் கொண்டு வர விரும்புகிறேன். இப்போது 10 ஆம் வகுப்பு மாணவர்களுக்குத் தேர்வுகள் முடிந்து விட்டன. 12 ஆம் வகுப்பு மாணவர்கள் தேர்வு எழுதிக் கொண்டிருக்கிறார்கள். தேர்வு எழுதிய பல பள்ளிகளில் அந்தப் பாடத் திட்டங்களுக்கான ஆசிரியர்கள் இல்லை. நீலகிரி மாவட்டத்தில் மொழிப் பயிற்சி அளிக்கும் ஆசிரியர்கள், தமிழாசிரியர்கள் கூட பல பள்ளிகளில் இல்லாத நிலைமை இருக்கிறது. மொழி சொல்லித் தரும் ஆசிரியர்கள் நியமிக்கப்படக் கூடாதா? ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 10, 15 ஆசிரியர்களை நியமிக்கக் கூடாதா? இப்படியெல்லாம் கணக்குப் போட்டுப் பார்த்தால் இந்த ஆண்டு கொடுக்கப்பட்ட பணி இடங்கள் மிக மிகக் குறைவு என்பதை வருத்தத்தோடு இங்கே எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

10 (எ) (1) ஆசிரியர் பிரச்சினை நிதிப் பிரச்சினையை உருவாக்கக்கூடிய பிரச்சினை அல்ல. காரணம் அவர்கள் ஏற்கெனவே பணியாற்றிக் கொண்டிருக்கிற ஆசிரியர்கள். அவர்கள் ஏற்கெனவே ஊதியம் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள், ஆண்டுதோறும் இன்கிரிமெண்ட் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். இதனால் எந்த வகையிலும் நிதிநிலையில் பாதிப்பு ஏற்படாது என்பதை நான் அழுத்தந்திருத்தமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், நான் ஒரு கருத்தைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். இந்த 10 (எ) (1) ஆசிரியர்களைப் பணி நீக்கம் செய்யாமல் தொடர்ந்து நீடிக்கச் செய்து, இப்போது தேர்வாணைக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைப் புதிதாகப் பணியிடங்கள் ஏற்படும் போது நிச்சயமாக நியமித்துக் கொள்ளலாம். அப்படிச் செய்தால், 10 (எ) (1) ஆசிரியர் பிரச்சினையே வராது. அந்த வகையில் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை இனி வரும் புதிய இடங்களுக்கு நியமித்தால், இந்தப் பிரச்சினையே எழாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-45)

அதே மாதிரி நிதிநிலை கட்டுப்பாட்டில் இல்லாத இன்னொரு பிரச்சினை. தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர் ஏற்கெனவே ஐந்தாண்டுகள், பத்தாண்டுகள் பணியாற்றி 600 ரூபாய், 700 ரூபாய் அடிப்படைச் சம்பளம் பெற்றிருக்கிறார். தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டதன் பரிசாக என்ன ஆகிறதென்றால், அவர் 450 ரூபாய் அடிப்படைச் சம்பளத்திற்கு வருகிறார். இதுதான் கல்வித் துறையிலே இருக்கக்கூடிய நிலைமை. தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டதற்குப் பரிசு 450 ரூபாய்



1985 ஏப்ரல் 12] [திரு. அ. மயில்சாமி]

அடிப்படைச் சம்பளம் என்று குறைந்ததுதான். அவர் தேர்ந்தெடுக்கப்படா
மல் இருந்திருந்தால், 700 ரூபாய் அடிப்படைச் சம்பளம் பெற்றுக் கொண்டிருப்
பார். இது என்ன நியதி? இதை மாற்ற முடியாதா? மற்ற துறைகளிலே
மாற்றியிருக்கிறார்கள். அதற்கான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன.
ஜூனியர் அசிஸ்டெண்டாக இருப்பவர் கடைசியில் தான் வாங்கிய சம்பளத்
தையே (லாஸ்ட் பே டிரான்) வாங்கலாம் என்று அரசாணை இருக்கிறது.
இதை ஏன் ஆசிரியர்களுக்கு நீட்டிக்கக் கூடாது? ஆசிரியர்களுக்கு இது
பொருந்தாதா? ஆகவே தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்
களுக்கு ஊதிய நிர்ணயம் செய்யும்போது, அருள்கூர்ந்து அவர்கள் கடைசியில்
வாங்கிய சம்பளத்தில் நிர்ணயிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.
இதிலே நிதிநிலைப் பிரச்சினை நிச்சயமாக வருவதில்லை. மதிப்பிற்குரிய
டாக்டர் நாவலர் அவர்கள் நேற்று குறிப்பிட்ட மாதிரி, நிதிநிலைக் கட்டுப்
பாட்டில் இது வருவதற்கில்லை. ஆகவே இந்தப் பிரச்சினையை நிச்சயமாக
தீர்க்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதைப் போன்று பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. மாண்புமிகு
உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் நேற்று பேசும்போது, 'பாலிசி'-யில் ஏதாவது
குறை இருந்தால் சொல்லுங்கள் என்று சொன்னார்கள். 1970-ல் இரண்டா
வது ஊதியக் குழு வந்ததற்குப் பிறகு, நகராட்சிப் பள்ளிகள், தனியார் பள்ளி
கள், அரசுப் பள்ளிகள் ஆகியவற்றில் பணியாற்றும் எல்லோருக்கும் ஒன்றாகச்
சேர்ந்து ஊதிய உணர்வு, ஊதிய நிர்ணயம் மற்றச் சலுகைகள் இருந்தன.
கிட்டத்தட்ட 15 ஆண்டுக் காலமாக அப்படித்தான் இருக்கிறது. ஆனால் சென்ற
ஆண்டு இந்த பாலிசியில் ஒரு மாற்றம் வந்தது. அதாவது அரசுப் பள்ளி
ஆசிரியர்களுக்கு ஒரு சலுகையைச் செய்தால், அந்தச் சலுகையை தனியார்
பள்ளி ஆசிரியர்களுக்கு நீட்டிப்பதில்லை, நகராட்சிப் பள்ளிகளுக்கு நீட்டிப்ப
தில்லை, மாநகராட்சிப் பள்ளிகளுக்கு நீட்டிப்பதில்லை என்று வந்தது. பாலிசி
யிலே இப்படி குறைபாடு என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஓய்வு
கால சிறப்பு நிதித் திட்டம் ஐயாயிரம் ரூபாய் கொடுப்பதை அனைவருக்கும்
நீட்டிக்கவில்லை. சென்ற ஆண்டிலிருந்து கேட்டுக் கொண்டிருக்கிறோம்.
இந்த நிதிநிலை அறிக்கையில் சேர்க்கப்பட்டிருக்கலாம். நகராட்சி, மாநக
ராட்சி மற்றும் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு இந்தச் சலுகை கிடைக்க
வில்லை. 1984 ஆம் ஆண்டில் ஒருவர் ஓய்வு பெற்றிருந்தால், இந்தச்
சலுகையைப் பெற முடியாத பரிதாபகரமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.
அந்த அடிப்படையிலே அவர்களுக்கும் இந்தச் சலுகையை நீட்டிக்க வேண்டும்
என்பதைத்தான் என்னுடைய வேண்டுகோளாக இங்கே வைக்க விரும்பு

கிறேன். இதிலே ஒரு வேடிக்கை. சென்னை மாநகராட்சியிலே பணியாற்றினால், அவர்களுக்கு இந்தச் சலுகை உண்டு. ஆனால் மதுரை மாநகராட்சியில் பணியாற்றினால், இந்தச் சலுகை இல்லை. இது என்ன விதி? யார் இதைத் தடை செய்கிறார்கள் என்பது எனக்குப் புரியவில்லை என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

Parity disparity

பாலிசியிலே இன்னுமொரு குறையைச் சொல்லுகிறேன். என்று சொல்லுகிறார்கள். ஆனால் அதிகம். ரிட்டயர்மென்ட் பெனிபிட் என்று இருக்கிறது. எல்லோருக்கும் ஒரே மாதிரிதான். எல்லோருக்கும் ஒரே பாடத் திட்டம், ஒரே ஊதியம், ஒரே வேலைப் பளு. ஆனால் ஒரு சிலருக்கு மட்டும் சில சலுகைகள் கிடைக்கும்போது அந்தச் சலுகைகள் மற்றவர்களுக்கு இல்லை. குறிப்பாக தனியார் பள்ளி, நகராட்சிப் பள்ளி, மாநகராட்சிப் பள்ளி ஆகியவற்றில் பணி புரிபவர்களுக்கு இல்லை என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆசிரியர்களைப் பொறுத்த வரையில், பாலிசி மாற்றம் இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதே மாதிரி விடுப்புக் காலச் சலுகை (எல். டி. சி.) எல்லோருக்கும் ஒன்றாக இருந்தது. இதிலே எந்தவிதமான மாற்றமும் இல்லை. நீண்ட நாளைக்குப் பிறகு, 15 ஆண்டுகளுக்குப் பிறகு அதனைச் செய்திருக்கிறோம் என்று டாக்டர் நாவலர் அவர்கள் சொன்னார்கள். உண்மையிலேயே அதை நான் வரவேற்கிறேன். 1970-ல் இருந்து வேறுபாடு இல்லாமல் சலுகை பெற்று வந்தார்கள். இப்போது என் திடீரென்று மாற்றம் வந்தது? 1983, 1984 ஆம் ஆண்டில்தான் மாற்றம் வந்தது. எல்.டி.சி. நகராட்சிப் பள்ளி, தனியார் பள்ளி ஆகியவற்றில் பணிபுரியும் ஆசிரியர்களுக்குக் கிடையாது. ஆனால் அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கோரிக்கையைத்தான் நாங்கள் வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னுமொன்று, ரிட்டயர்மென்ட் பெனிபிட்—அதுவும் அதே மாதிரிதான். இந்தச் சலுகையும் ஒரு சிலருக்குக் கொடுக்கப்பட்டு இன்னுமொரு சிலருக்குக் கொடுக்கப்படாமல் இருக்கிறது.

அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கு பிராவிடன்ட் பண்ட் இருக்கிறது. பிராவிடன்ட் பண்ட் திரும்ப வரும்போது, பத்து சதவீதத்திற்கு மேல் வட்டி கொடுக்கிறார்கள். தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு 4 சதவீதம் அல்லது 5 சதவீதம்தான் வட்டி கொடுக்கிறார்கள். ஏன் ஒரே மாதிரி செய்யக்



கூடாது? எல்லோரும் ஒரே பணி ஆற்றுகிறோம், ஒரே ஊதியம் ஒரே பாடத் திட்டம் இருக்கிறது. இதிலே ஏன் இவ்வளவு மாற்றங்கள் என்பது தெரியவில்லை. 15 ஆண்டுகளாக ஒன்றாக இருந்தவர்களைப் பிரித்து வைத்து, சலுகையில் வேறுபாடு வைத்தது சரியா, முறையா என்று கேட்க விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-50)

அதே மாதிரி நிதிநிலை அறிக்கையிலே கட்டுப்படாத இன்னொரு பிரச்சினை இருக்கிறது. திடீரென்று சென்ற ஆண்டிலிருந்து பள்ளி வேலை நேரத்தை அதிகப்படுத்தியிருக்கின்றார்கள். ஒரு நாளைக்கு 5½ மணி நேரம் என்று ஆக்கியிருக்கின்றார்கள். அதற்குக் காரணமும் சொல்லவில்லை. பாடத் திட்டத்தை அதிகப்படுத்தி 'நீங்கள் அதை நடத்தி முடியுங்கள்' என்று சொன்னாலும் ஒத்துக்கொள்கிறோம். பாடத்திட்டமும் மாற்றப்படவில்லை. ஆனால் வேலை நேரத்தினை மட்டும் அதிகப்படுத்தியிருக்கிறார்கள். வேலை நேரத்தை குறையுங்கள் என்பதுதான் எங்கள் கோரிக்கை. நாங்கள் ஏதோ வேலை செய்வதற்காக பயந்து கொண்டிருக்கிறோம், கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதால் அப்படி கோரிக்கை வைக்கவில்லை. இன்றைக்கு இருக்கின்ற தத்துவப்படி, அந்த மாணவர்கள் அத்தனை மணி நேரம் பள்ளியிலே இருந்தால்தான் அவனுக்கு அந்தத் திறமை உண்டாகும். அதிக நேரம் உட்கார்ந்து இருந்தால், அவர்களுக்கு ஆசிரியர்கள் சொல்லிக் கொடுக்கின்ற பாடங்கள் புரியாது. அந்த அடிப்படையிலேதான் பழைய நிலைமை இருக்க வேண்டும் என்று சொல்கின்றோம். இன்றைக்கு எந்தக் காரணத்தினாலே வேலை நேரத்தை அதிகப்படுத்தியிருக்கின்றார்கள் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நிதிநிலைக்கு உட்படாத ஆசிரியர்கள் பிரச்சினைகளை அருள்கூர்ந்து நம்முடைய மதிப்பிற்குரிய மாண்புமிகு நாவலர் அவர்கள் தீர்த்துக் கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நாங்கள் போராட்டத்திலே ஈடுபட்டிருக்கிறோம். போராட்டத்தை, நாங்கள் ஏற்கெனவே சொன்னமாதிரி, நாங்கள் விரும்பி ஏற்றுக்கொள்ளவில்லை. அந்தப் போராட்டத்திற்குத் தள்ளப்பட்டிருக்கிறோம். வேறு வழியில்லை என்ற அடிப்படையிலே அப்படி போராட்டம் செய்கிறோம். இவ்வளவு கஷ்டப்பட்டு அந்தப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறோம். அந்தப் போராட்டத்தை நிறுத்தி வைக்கவேண்டும் என்பதுதான் எங்களுடைய எண்ணம். அதை நிறுத்திவைக்க ஒரு காரணமாக தாங்கள் ஒரு நல்ல முடிவைச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு மத்திய அரசு விலைவாசி ஏறாமல் இருக்கிறது என்று
சொல்லிக்கொண்டிருந்தாலும்கூட மத்திய அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்
படி தருவதற்காக ரூபாய் 360 கோடி ஒதுக்கியிருக்கிறது. நம்முடைய மாநிலத்
திலே அப்படி அகவிலைப் படி கொடுப்பதற்கு நிச்சயமாக நிதி ஒதுக்கவில்லை
என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். ஏற்கெனவே
1978-லேயிருந்து இன்றுவரைக்கும் நம்முடைய தமிழக அரசு 31 தவணைகள்
டீ.ஏ. கொடுத்திருக்கிறது. இதை நான் மறுக்கவில்லை. அதற்காக
நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அதேநேரத்திலே மத்திய
அரசு கொடுக்கின்ற நேரத்தில், அந்த அகவிலைப் படியை நமக்குத் தாமல்,
3, 4 மாதங்கள் தள்ளிக் கொடுக்கின்றார்கள். இதனால் அரசு ஊழியர்கள்
அல்லது ஆசிரியர்கள் மற்றவர்களுக்கெல்லாம் கிட்டத்தட்ட ஒரு மாதத்திற்கு
700 ரூபாயிலிருந்து ரூ. 300 ஆயிரம் வரை இழப்பு ஏற்படுத்தியிருக்கின்றார்கள்.
அதே நேரத்திலே இன்றைக்கு இடைக்கால நிவாரணம் என்று ரூபாய் 200,
ரூபாய் 100 தந்திருக்கின்றார்கள். அதற்காக நன்றியைத் தெரிவித்துக்
கொள்கிறேன். ஆனால் அதே நேரத்தில் நான் இன்னொன்றையும் தெரிவித்துக்
கொள்கிறேன். அந்த ரூபாய் 300, ரூபாய் 200 தந்துவிட்டு அதிலே பாதி
யைப் பிடிப்போம் என்று சொல்லியிருக்கின்றார்கள். ஏற்கெனவே ரூபாய்
700-லிருந்து ரூபாய் 300 ஆயிரம் வரைக்கும் அவர்கள் பெறவேண்டியதைப் பெற
முடியாமல் இருக்கின்ற நிலைமையிலே இன்றைக்குக் கொடுத்ததிலும்கூட பாதி
யைத் திரும்பக் கொடுக்க வேண்டும் என்ற நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்
கிறது. அந்த நிலைமையை மாற்ற வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே
கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அதே மாதிரி தேர்தல் அறிக்கையிலே ஓய்வு
பெறும்போது 10 ஆயிரம் ரூபாயிலிருந்து ரூபாய் 20 ஆயிரம் கொடுப்போம்
என்ற அறிவிப்பு வந்தது. இன்றைக்கு அதற்கான அரசாணைகூட வந்து
விட்டது. அதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ரூபாய் 10 ஆயிரம்
கொடுக்கும்போது, அது ஆசிரியர்களிடமானாலும் சரி அல்லது அரசு ஊழியர்
களிடமானாலும் சரி ஒரு ரூபாய்தான் பிடித்தம் செய்தார்கள். இப்போது 20
ஆயிரம் கொடுக்கிறேன் என்று சொல்லும்போது நியாயமாக 2 ரூபாய்தான்
பிடித்தம் செய்யவேண்டும். ஆனால் இன்றைக்கு ரூபாய் 3 என்று பிடிக்கின்
றார்கள். ஆக ஒரு ரூபாய் பிடிக்கும்போது ரூபாய் 10 ஆயிரம் கொடுத்தார்கள்.
ஆனால் இன்றைக்கு 3 ரூபாய் பிடிக்கும்போது நிச்சயமாக ரூபாய் 30 ஆயிரம்
கொடுக்க வேண்டும். அதுதான் கணக்கு. எங்களுக்குத் தெரிந்த கணக்கு
அப்படி.





**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை நிகழ்ச்சிகளை ஒரு மணிக்குள்ளாக முடிக்க வேண்டும். உறுப்பினர் அவர்கள் அதற்குள் முடிக்கு மாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. அ. மயில்சாமி:** நிச்சயமாக அதை மாற்றித் தர வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இதிலே பொதுவாக இன்னொரு பிரச்சினை. நம்முடைய கல்வித் துறையிலே எந்த விதிகளைப் போட்டாலும், அது எல்லோருக்கும் பொருந்தும் என்று ஒரு வரி இருக்க வேண்டும். 45 வயதைக் கடந்தால் துறைத் தேர்வு எழுதவேண்டிய தேவை யில்லை, பதவி உயர்வு பெறலாம் என்று அரசாணை இருக்கிறது. ஆசிரியர்கள், தலைமை ஆசிரியர் ஆகும்போது 45 வயதைக் கடந்தால் அவர்கள் துறைத் தேர்வு எழுதத் தேவையில்லை, பதவி உயர்வு பெறலாம் என்று அரசாணை இருக்கிறது. இது உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு. மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு வரும்போது அந்த ஆணை பொருந்துவது இல்லை. இதற்கு என்ன காரணம்? ஏன் மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் ஆவதற்கு பொருந்தாது? இதற்கு என்ன காரணம்? அவர்களுக்கும் இந்த ஆணை பொருந்தும் என்று ஒரு வரி சேர்க்கக்கூடாதா? இந்த வரியைச் சேர்த்தால் யாராவது வேண்டாம் என்று சொல்லிவிடுவார்களா என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாக நாம் இன்றைக்கு உள்ள நிலைமையில் பல மாற்றங்களைச் செய்யவேண்டும் என்று சொல்லிக் கொள் கிறேன். காரணம் மேலவை உறுப்பினர்களாக இருக்கின்ற நாம் ஏதாவது ஒரு பிரச்சினைக்கு ஒரு அதிகாரியிடம் சென்று எழுதிக் கொடுத்தால், ஆண்டுக் கணக்காக ஆனாலும் அதுபற்றி பதில் வராது. அது எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் சரி. இது வழக்கமாக ஆகிவிட்டது. அப்படி வைத்துக்கொண் டிருக்கின்றார்கள். நாம் எதற்காக அவர்களிடம் போகிறோம்? பிரச்சினையைச் சொல்வதற்கு, அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு. இதுவரைக்கும் கடிதம் எழுதி அனுப்பி அதற்குப் பதில் வந்திருக்கின்றதா? ஏன் இந்த நிலை? நிர்வா கத்தில் ஒரு சீர்திருத்தத்தைச் செய்யக்கூடாதா என்பதுதான் என் கேள்வி. இதைச் செய்தால், பல பிரச்சினைகள் தீரும். நாங்கள் ஒவ்வொரு முறையும் சென்னைக்கு வருவதைவிட அங்கேயிருந்து நாங்கள் கடிதம் போட்டால், ஏதாவது பதில் வர வேண்டும். அதைப் பரிசீலிக்கிறோம் அல்லது செய்ய இருக்கிறோம் என்று சொல்வதற்குக்கூட சங்கடப்படுகின்றார்கள். ஆகவே நிர்வாகச் சீர்திருத்தத்தைக் கொண்டுவர வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

...கார்ப்ப...

[திரு. அ. மயில்சாமி] [1985 ஏப்ரல் 10

(பிற்பகல் 12-55)

அடுத்து, கல்வித் துறையிலே இன்னொரு பிரச்சினை. ஆசிரியர்கள் பிரச்சினை. பல பள்ளிகள், நகராட்சிப் பள்ளிகள் அல்லது ஈர்க்கப்பட்ட உயர் தொடக்கப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக மாற்றப்பட்டு விடுகின்றன. அங்கே ஆசிரியர்கள் 20, 25 ஆண்டுகளாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை எல்லாம் உயர்நிலைப் பள்ளியில் நிரந்தரப்படுத்துவதில்லை. ஓய்வு பெறும்போதுகூட, ஒன்றும் செய்ய முடியாத நிலையில் அவர்கள் இருக்கிறார்கள். எனக்குத் தெரிந்த ஒருவர், இராசிபுரத்தில் உள்ளவர். எம். ஏ. படித்துவிட்டு, கல்லூரிக்குச் சென்றார். அங்கே பதவி உயர்வு கிடைக்குமென்று சென்றார். 10 ஆண்டுகள் ஆகிவிட்டன. இங்கே என்ன ஊதியம் வாங்கினாரோ, அதே ஊதியத்தை அங்கே வாங்குகிறார். அங்கே இப்போது டியூட்டர் என்ற பதவியில்லை. இருந்தாலும் அந்த ஊதியம் வாங்குகிறார். காரணம் 'அப்சார்ப்ஷன்' செய்யப்படவில்லை என்பதால், அந்த ஊதியத்தைப் பெற்றுக் கொண்டிருக்கிறார். இதையெல்லாம் கல்வித் துறையிலே மாற்ற வேண்டும். 'அப்சார்ப்ஷன் ஆர்டர்' போடுவதில் ஒரு பைசாகூட செலவு செய்ய வேண்டியதில்லை. இப்படிப்பட்ட நிலைமைகளை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு 20 ஆண்டுகள் முடிந்தால்தான், பென்ஷன் தருவதாக அரசு சொல்கிறது. சில பேர் 5 ஆண்டுகள், 10 ஆண்டுகள் பணியாற்றிய பிறகு, வேறு வேலைகளுக்குப் போகலாம். ஒருவர் சென்னையிலே பணியாற்றலாம்; மனைவி கன்னியாகுமரியில் பணியாற்றலாம். அவர்கள் ஒரே இடத்திற்கு மாறுதல் பெற முடியாத நிலைமைகள் இருக்கலாம். 20 ஆண்டுகள் பணியாற்றினால்தான், பென்ஷன் தர முடியுமென்று சொல்லுகிறார்கள். அப்படி இல்லாமல், 5 ஆண்டுகள் அல்லது 10 ஆண்டுகள் பணியாற்றினால் பென்ஷன் தருவதாகச் சொன்னால், புதிதாகத் தொழில் செய்ய விரும்புகிறவர்கள் எல்லாம் ஓய்வு பெறுவார்கள். எனவே இந்தத் திட்டத்தை நிச்சயமாக அரசு பரிசீலனை செய்து, யார் யார் ஓய்வு பெற விரும்புகிறார்களோ அவர்களுக்கு நன்மை செய்யும் திட்டமாக இதனை மாற்றி அமைக்க வேண்டும். 20 ஆண்டு முடிந்தால் என்ன ஓய்வூதியம் தருகிறோமோ அதே மாதிரி 10 ஆண்டு முடித்தவர்களுக்கும் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் மீண்டும் ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன். நாங்கள் இன்றைக்கு எங்கள் கடமைகளை எல்லாம் முடித்து விட்டுத்தான் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறோம். 10 ஆம் வகுப்பு மாணவர்கள் இறுதித் தேர்வு எழுதி விட்டார்கள். 12 ஆம் வகுப்பு மாணவர்கள் எழுதிக் கொண்டிருக்கிறார்கள்.



எங்கள் கடமைகளைச் செய்துவிட்டுத்தான் போராட்டம் செய்கிறோம். எங்களுடைய கடமைகளைச் சரிவரச் செய்யாமல் இல்லை. எனவே அருள் கூர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்று, ஒன்றிரண்டுக்காவது மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் கருணை வைத்து நல்ல பதிலைக் கூறி, இந்தப் பிரச்சினைக்கு முடிவு கட்ட வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து, அமைகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மேலவையின் நிகழ்ச்சிகள் இப்போது ஒத்திவைக்கப்பட்டு, மீண்டும் பிற்பகல் 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 12-58)

(மேலவைத் துணைத் தலைவர் திரு. ஜி. சுவாமிநாதன் தலைமை).

(மீண்டும் அவை பிற்பகல் 4 மணிக்குக் கூடியது).

### 3. 1985-86 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

**திரு. பி. முனுசாமி :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1985-86 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாகப் பேச வாய்ப்பளித்தமைக்கு என்னுடைய நன்றியை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான நல்ல பல அம்சங்கள் இருப்பது குறித்து உள்ளபடியே நான் மகிழ்ச்சியடைகிறேன். அதற்காக இந்த அரசை நான் பாராட்டுகிறேன். குறிப்பாக பிரதமரின் புதிய 20 அம்சத் திட்டத்தை முழுமையாக நடாத்துகின்ற மாநிலமாக தமிழகம் விளங்குவது குறித்து நான் தமிழக அரசை மனதாரப் பாராட்டுகிறேன். வட மாநிலங்களில் இந்தப் புதிய 20 அம்சத் திட்டத்தை எப்படி செயல்படுத்துகிறார்கள் என்பதைக் குறித்து நேரில் சென்று பார்த்து வந்தவன் என்ற முறையிலே இதை நான் சொல்கிறேன். அங்கே வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்கின்ற கிராமப்புற மக்களைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. தமிழகத்தில் ஏறக்குறைய 80 சதவிகிதத்திலிருந்து 90 சதவிகிதம் வரை இந்தத் திட்டம் மிக நல்ல முறையில் செயல்படுத்தப்படுகிறபோது, அங்கெல்லாம் 50 சதவிகிதம்கூட செயல்படுத்தப்படவில்லை என்று குறை சொன்னார்கள். அந்த வகையில் புதிய 20 அம்சத் திட்டத்தைப் பொறுத்தவரையில், மற்ற எல்லா மாநிலங்களை விஞ்சி தமிழகம் மிகச் சிறப்பாகச் செயல்படுத்துவது குறித்து உள்ளபடியே பெரிதும் மகிழ்கிறேன்.

[திரு. பி. முனுசாமி] [1985 ஏப்ரல் 10

அடுத்து, இத்திட்டத்தின்கீழ் கிராமப்புறத்தைச் சேர்ந்த படித்து வேலையில்லாமல் இருக்கிற இளைஞர்கள், பட்டதாரிகள் இவர்கள் எல்லாம் சுயமாக தொழில் செய்யும் அளவுக்கு உதவி வழங்கி, அந்த வகையில் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. 17 ஆயிரம் இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டமும் மத்திய அரசால் குறியீடாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. பிட்டர், வெல்டிங், தச்சு போன்ற தொழில்களைச் சொல்லிக் கொடுத்து அதன் மூலம் வேலைவாய்ப்பு பெற வாய்ப்பளித்திருக்கிறார்கள். அதற்காக ஏறக்குறைய 30 கோடி ரூபாய்க்கு வழிவகை செய்திருக்கிறார்கள். இருந்தும், தமிழக அரசு 17 ஆயிரம் பேருக்கு என்று இருந்ததை மாற்றி 20 ஆயிரம் பேர்கள் வேலைவாய்ப்பு பெறும் அளவுக்கு திட்டத்தை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். அதற்கு 30 கோடி ரூபாய் என்று இருந்ததை 31 கோடி ரூபாயாக உயர்த்தி இத்திட்டத்தை நல்ல முறையில் செயல்படுத்தியிருக்கிறார்கள். பிரதமரின் 20 அம்சத் திட்டத்தைப் பொறுத்தவரையில், இந்தியாவிலேயுள்ள மற்ற எல்லா மாநிலங்களையும் விட தமிழகத்தில் மிக நல்ல முறையில், சிறப்பாகச் செயல்படுத்தியுள்ளதற்காக மீண்டும் என்னுடைய பாராட்டுதலையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, குழந்தைகளுக்கு சத்துணவு அளிக்கும் திட்டத்தைப் பொறுத்த வரையில், ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இத்திட்டம் தமிழகத்திலுள்ள ஏழையெளிய, வறுமைக்கோட்டுக்குக் கீழே வாழ்கின்ற மக்கள் அனைவரும் பயன்பெறுகிற மிக நல்ல திட்டம். இன்றைக்கு தமிழகத்தைப் பின்பற்றி இந்தத் திட்டத்தை மற்ற மாநிலங்களும் அமுல்படுத்துகின்ற அளவுக்கு எல்லோருடைய பாராட்டுதலையும் பெற்றிருக்கிறது. இத்திட்டம் ஏறக்குறைய 65,344 சத்துணவு மையங்களின் மூலம் செயல்படுத்தப்படுகிறது. 2 வயது முதல் 4 வயது வரையுள்ள 24 லட்சத்து 34 ஆயிரம் குழந்தைகளும், 5 வயது முதல் 9 வயது வரையுள்ள 38 லட்சத்து 65 ஆயிரம் குழந்தைகளும், 10 வயது முதல் 15 வயது வரையுள்ள 16 லட்சத்து 72 ஆயிரம் குழந்தைகளும், ஆக ஏறக்குறைய 79 லட்சத்து 71 ஆயிரம் குழந்தைகள் பயன்பெறுகின்ற மிக அருமையான திட்டம் இத்திட்டமாகும்.

(பிற்பகல் 4-05)

ஆகையால் இந்தத் திட்டம் சாதாரண ஏழைக் குழந்தைகளுக்குப் பயன்படுகிற வகையில் செயல்பட்டு வருகின்றது. ஒருசில குறைகள் ஆங்காங்கு இருக்கலாம். இருந்தாலும் இந்தத் திட்டம் வரவேற்கக்கூடிய ஒன்றாகும். அது மட்டுமல்ல, முதியோர்களும், முன்னாள் ராணுவ வீரர்களும் இந்தத் திட்டத்தால் பயன் பெறுகிறார்கள். ஆகவே மற்ற மாநிலங்களுக்கு இந்தத் திட்டத்தின் மூலம் தமிழகம் முன்னோடியாக விளங்குகிறது, ஆனால் இந்தத் திட்டத்தின் மூலம் 607 டன் அரிசியும், 84 டன் பருப்பும் செலவிடப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்குமேல் காய்கறி, விறகு மற்றும் இதர சாமான்கள் இத்தனையும் செலவாகிறது. இந்தத் திட்டத்தின் மூலமாக ஏழைக் குழந்தைகள் பயன்பெற்று, அவர்கள் திடகாத்திரமாக இருக்க வேண்டுமென்ற எண்ணத்தோடுதான் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். இந்தத் திட்டத்திற்கு ஏறத்தாழ 150 கோடி ரூபாய்க்கு மேல் செலவாகிறது. இருந்தாலும் நமக்கு ஆண்டுக்காண்டு அரிசிப் பற்றாக்குறை ஏற்படுகிற காலங்களில் இதுபோன்ற அத்தியாவசியமான பொருட்கள் மிகவும் தேவைப்படுகின்றன. நான் இந்தத் திட்டத்தை முழுமையாக வரவேற்றாலும், சில மாற்றங்களுடன் இந்தத் திட்டம் செயல்பட வேண்டுமென்று விரும்புகிறேன்.



1985 ஏப்ரல் 10] [திரு. பி. முனுசாமி]

இப்போது இந்தச் சத்துணவுத் திட்டம் சாதம் மற்றும் சாம்பார், கீரை ஆகியவற்றுடன் செயல்படுகிறது. சாம்பாரும், கீரையும், சாதமும் மட்டுமே சத்துணவாகிவிடாது. மேலை நாடுகளில் ரொட்டி, பால், முட்டை ஆகியவற்றைத்தான் சத்துணவாகக் கருதுகிறார்கள். ஆகவே நாம் இன்றைய தினம் அளிக்கும் சத்துணவால் 607 டன் அரிசியும், 84 டன் பருப்பும் செலவாவதைத் தடுத்து, ரொட்டி, பால் ஆகியவற்றையாவது—அதாவது முட்டை இல்லாமல், குழந்தைகளுக்குக் கொடுத்தால், இந்த அரிசியும், பருப்பும் மீதமாகும் என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதன்மூலம் காய்கறி, விறகு, எண்ணெய் செலவுகளும், ஆயா நியமிக்கும் செலவும் மீதமாகும். இதைக் கண்காணிக்கும் சூப்பர்வைசரும் தேவையில்லை. அத்துடன் இன்னும் எவ்வளவோ பொருளாதாரப் பிரச்சினைகள் எழவேண்டிய அவசியமிருக்காது. ஆகவே இந்தத் திட்டத்தைக் கொஞ்சம் பரிசீலனை செய்ய வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக அரசு இந்த ஆண்டு 1 முதல் 8 ஆம் வகுப்புவரை படிக்கும் ஏழைக் குழந்தைகளுக்கு இலவச சீருடை வழங்க நடவடிக்கை எடுத்திருக்கிறது என்றும், இதன்மூலம் 13.5 கோடி இலவச சீருடை வழங்கப்படும் என்றும் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, 11.5 கோடிக்கு இலவசப் பாடப் புத்தகம் வழங்கவும் இருக்கிறார்கள். இது ஒரு சிறப்பான அம்சமாக இருக்குமென கருதுகிறேன். இந்தத் திட்டத்தைப் பாராட்டுகிறேன்.

[திரு. அ. மயில்சாமி] [1985 ஏப்ரல் 10

(பிற்பகல் 12-55)

அடுத்து, கல்வித் துறையிலே இன்னொரு பிரச்சினை. ஈர்க்கப்பட்ட. ஆசிரியர்கள் பிரச்சினை. பல பள்ளிகள், நகராட்சிப் பள்ளிகள் அல்லது உயர் தொடக்கப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக மாற்றப்பட்டு விடுகின் றன. அங்கே ஆசிரியர்கள் 20, 25 ஆண்டுகளாகப் பணியாற்றிக் கொண்டிருக் கிறார்கள். அவர்களை எல்லாம் உயர்நிலைப் பள்ளியில் நிரந்தரப்படுத்துவ தில்லை. ஓய்வு பெறும்போதுகூட, ஒன்றும் செய்ய முடியாத நிலையில் அவர் கள் இருக்கிறார்கள். எனக்குத் தெரிந்த ஒருவர், இராசிபுரத்தில் உள்ளவர். எம். ஏ. படித்துவிட்டு, கல்லூரிக்குச் சென்றார். அங்கே பதவி உயர்வு கிடைக்குமென்று சென்றார். 10 ஆண்டுகள் ஆகிவிட்டன. இங்கே என்ன ஊதியம் வாங்கினாரோ, அதே ஊதியத்தை அங்கே வாங்குகிறார். அங்கே இப்போது டியூட்டர் என்ற பதவியில்லை. இருந்தாலும் அந்த ஊதியம் வாங்குகிறார். காரணம் 'அப்சார்ப்ஷன்' செய்யப்படவில்லை என்பதால், அந்த ஊதியத்தைப் பெற்றுக் கொண்டிருக்கிறார். இதையெல்லாம் கல்வித் துறையிலே மாற்ற வேண்டும். 'அப்சார்ப்ஷன் ஆர்டர்' போடுவதில் ஒரு பைசாகூட செலவு செய்ய வேண்டியதில்லை. இப்படிப்பட்ட நிலைமைகளை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு 20 ஆண்டுகள் முடிந்தால்தான், பென்ஷன் தருவதாக அரசு சொல்கிறது. சில பேர் 5 ஆண்டுகள், 10 ஆண்டுகள் பணியாற்றிய பிறகு, வேறு வேலைகளுக்குப் போகலாம். ஒருவர் சென்னையிலே பணியாற்றலாம்; மனைவி கன்னியாகுமரியில் பணியாற்றலாம். அவர்கள் ஒரே இடத்திற்கு மாறுதல் பெற முடியாத நிலைமைகள் இருக்கலாம். 20 ஆண்டுகள் பணி யாற்றினால்தான், பென்ஷன் தர முடியுமென்று சொல்லுகிறார்கள். அப்படி இல்லாமல், 5 ஆண்டுகள் அல்லது 10 ஆண்டுகள் பணியாற்றினால் பென்ஷன் தருவதாகச் சொன்னால், புதிதாகத் தொழில் செய்ய விரும்புகிறவர்கள் எல்லாம் ஓய்வு பெறுவார்கள். எனவே இந்தத் திட்டத்தை நிச்சயமாக அரசு பரிசீலனை செய்து, யார் யார் ஓய்வு பெற விரும்புகிறார்களோ அவர்களுக்கு நன்மை செய்யும் திட்டமாக இதனை மாற்றி அமைக்க வேண்டும். 20 ஆண்டு முடிந்தால் என்ன ஓய்வூதியம் தருகிறோமோ அதே மாதிரி 10 ஆண்டு முடிந் தவர்களுக்கும் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் மீண்டும் ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன். நாங்கள் இன்றைக்கு எங்கள் கடமைகளை எல்லாம் முடித்து விட்டுத்தான் போராட்டத்தில் ஈடு பட்டிருக்கிறோம். 10 ஆம் வகுப்பு மாணவர்கள் இறுதித் தேர்வு எழுதி விட்டார்கள். 12 ஆம் வகுப்பு மாணவர்கள் எழுதிக் கொண்டிருக்கிறார்கள்.



1985 ஏப்ரல் 10] திரு. அ. மயில்சாமி]

எங்கள் கடமைகளைச் செய்துவிட்டுத்தான் போராட்டம் செய்கிறோம். எங்களுடைய கடமைகளைச் சரிவரச் செய்யாமல் இல்லை. எனவே அருள் கூர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்று, ஒன்றிரண்டுக்காவது மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் கருணை வைத்து நல்ல பதிலைக் கூறி, இந்தப் பிரச்சினைக்கு முடிவு கட்ட வேண்டு மென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து, அமைகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மேலவையின் நிகழ்ச்சிகள் இப்போது ஒத்திவைக்கப்பட்டு, மீண்டும் பிற்பகல் 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 12-58)

(மேலவைத் துணைத் தலைவர் திரு. ஜி. சுவாமிநாதன் தலைமை).

(மீண்டும் அவை பிற்பகல் 4 மணிக்குக் கூடியது).

### 3. 1985-86 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

**திரு. பி. முனுசாமி :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1985-86 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாகப் பேச வாய்ப்பளித்தமைக்கு என்னுடைய நன்றியை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில் தாழ்த் தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான நல்ல பல அம்சங்கள் இருப்பது குறித்து உள்ளபடியே நான் மகிழ்ச்சியடைகிறேன். அதற்காக இந்த அரசை நான் பாராட்டுகிறேன். குறிப்பாக பிரதமரின் புதிய 20 அம்சத் திட்டத்தை முழுமையாக நடாத்துகின்ற மாநிலமாக தமிழகம் விளங்குவது குறித்து நான் தமிழக அரசை மனதாரப் பாராட்டுகிறேன். வட மாநிலங்களில் இந்தப் புதிய 20 அம்சத் திட்டத்தை எப்படி செயல்படுத்துகிறார்கள் என்பதைக் குறித்து நேரில் சென்று பார்த்து வந்தவன் என்ற முறையிலே இதை நான் சொல்கிறேன். அங்கே வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்கின்ற கிராமப் புற மக்களைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. தமிழகத்தில் ஏறக்குறைய 80 சதவிகிதத்திலிருந்து 90 சதவிகிதம் வரை இந்தத் திட்டம் மிக நல்ல முறையில் செயல்படுத்தப்படுகிறபோது, அங்கெல்லாம் 50 சதவிகிதம்கூட செயல்படுத்தப்படவில்லை என்று குறை சொன்னார்கள். அந்த வகையில் புதிய 20 அம்சத் திட்டத்தைப் பொறுத்தவரையில், மற்ற எல்லா மாநிலங்களை யும்விட தமிழகம் மிகச் சிறப்பாகச் செயல்படுத்துவது குறித்து உள்ளபடியே பெரிதும் மகிழ்கிறேன்.

[திரு. பி. முனுசாமி] [1985 ஏப்ரல் 10

இங்கே செய்தி-அறநிலையத் துறை அமைச்சராக இருக்கும் மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் செய்தி-சுற்றுலாத் துறையை சிறப்பாக நடத்தி வருகி
றார்கள். அந்தத் துறையினர், மாவட்டந்தோறும் கலை அரங்குகளைக் கட்ட
நடவடிக்கை எடுக்கவிருப்பதாக, பட்ஜெட்டில் கூறியிருக்கிறார்கள். என்னைக்
கேட்டால், இன்றையதினம் இருக்கும் நாகரிகமான சமுதாயத்தில், மாவட்டத்
தோறும் என்பதை விட, தாலுக்கா தோறும் அந்தக் கலையாங்குகளைக் கட்டி
னால், மக்கள் வரவேற்பார்கள். அதன்மூலம் நமக்கு அதிக வருமானம்
கிடைக்க வழியேற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 4-10)

ஆகையால் மாவட்டத்திற்கு ஒரு கலையாங்கம் என்று இருப்பதை ஒன்றியத்
திற்கு ஒரு கலையரங்கம் என்று வைத்தால், நலமாக இருக்கும் என்று தெரி
வித்துக் கொள்கிறேன். மதிப்பிற்குரிய சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்
இதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, அரசவைக் கவிஞராக இருந்த, மறைந்த, கவியாச
கண்ணதாசன் அவர்களுக்கு காரைக்குடியில் ஒரு மணி மண்டபமும், விடுதலை
வீரர் திருப்பூர் குமரன் அவர்கள் நினைவாக திருப்பூரில் நினைவாலயம்
ஒன்றும் கட்ட ஏறக்குறைய ரூபாய் 45 லட்சம் செலவழிக்கப் போவதாக அறி
வித்திருக்கிறார்கள். இவை மிகவும் வரவேற்க வேண்டிய திட்டங்களாகும்.

சிதம்பரம், பிச்சாவரம் சுற்றுலா மையத்திற்கு நான் சில மாதங்களுக்கு
முன் சென்றிருந்தேன். அந்த இடம் மனித நடமாட்டமே இல்லாத இடமாக
இருக்கிறது. பல கால்வாய்கள் பின்னிக் கிடக்கின்ற ஒரு தீவாக அது இருக்
கின்றது. அந்தக் கால்வாய்களைப் படகில் சுற்றிச்சுற்றி வருகிறபோது,
நமக்கு எந்தப் பக்கம் போகிறோம் என்றே தெரியவில்லை. எது எந்தக்
கால்வாய் என்று அடையாளம்கூட தெரியவில்லை. ஏனென்றால் அங்கே வளர்ந்
திருக்கின்ற மரங்கள் அப்படி வளர்ந்திருக்கின்றன. மனித நடமாட்டமே
இல்லை. பறவைகள் நடமாட்டம்கூட கிடையாது. அந்த அளவுக்கு அந்தத்
தீவு இருந்து கொண்டிருக்கிறது. ஆகையால் அதைத் தேசிய சுற்றுலா மைய
மாக ஆக்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.
நூற்றுக்கணக்கான கால்வாய்கள் அதைச் சுற்றிச் சுற்றி வருகின்றன. நான்கூட
சென்ற ஒரு கால்வாயிலேயே வழி தெரியாமல் மறுபடியும் சென்றேன். எனவே
அங்கேயுள்ள ஒவ்வொரு கால்வாய்க்கும் நம் தலைவர்கள் பெயர்களை வைத்
தால், நாம் எந்தப் பக்கம் போகிறோம் என்று அடையாளம் தெரிந்துகொள்ள



1985 ஏப்ரல் 10] [திரு. பி. முனுசாமி]

முடியும். எனவே தலைவர்கள் பெயர்களை வைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அங்கே செல்லும் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொஞ்சம் கவனம் செலுத்தி ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மின்சாரத்தைப் பொறுத்தவரை, இன்றைக்கு நம்முடைய லட்சோபலட்சம் விவசாயக் குடும்பங்களின் வாழ்க்கை மின்சாரத்தோடு பின்னிப் பிணைந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆண்டு தோறும் மின்சாரத்திற்காக நாம் நிறைய செலவழிக்கின்றோம். ஆனால் ஆண்டுதோறும் மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டுக்கொண்டு வருகின்றது. தமிழ்நாட்டில் அனல் மின்சார நிலையங்களையும், புனல் மின்சார நிலையங்களையும் பயன்படுத்திப் பார்த்து விட்டோம். மின்சாரப் பற்றாக்குறையைப் போக்க இனி புதிதாக அணுசக்தி மின்சார நிலையங்களை ஏற்படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்று மின்சார வாரியத்தில் ஏறக்குறைய 84,000 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். ஆண்டுதோறும் மின்சார வாரியத்திற்கு நாம் மானியமாக நூறு கோடி, 150 கோடி ரூபாய் கொடுத்துக்கொண்டு வருகிறோம். இன்றைக்கு மின்சாரத் தட்டுப்பாடு வராமல் இருப்பதற்காக எங்கெங்கு எந்த எந்த மின்சார நிலையங்களில் கோளாறுகள் ஏற்படுகின்றனவோ அங்கெல்லாம் அதிகக் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த ஆண்டு பட்ஜெட்டில் பேசுகிறபோதுகூட சொன்னேன். மின்சாரத் தேவை நமக்கு அதிகமாக இருப்பதால், மின்சாரத்தை உபயோகிக்கின்ற பெரிய பெரிய தொழில் அதிபர்கள், தொழிற்சாலைகளை நடத்துகின்ற தொழில் அதிபர்கள் அவர்களாகவே மின்சாரத்தை உற்பத்தி செய்துகொள்ள வேண்டும், அதற்கு மற்ற மாநிலங்களில் தருவதுபோல மானியத் தொகை தர வேண்டும். அப்படிச் செய்தோமேயானால், நிச்சயமாக பெரிய பெரிய தொழிற்சாலைகளுக்கு அவர்களே மின்சாரத்தை உற்பத்தி செய்து கொள்வார்கள். அவர்களுக்குப் போக மீதமுள்ள மின்சாரத்தை அந்தப் பகுதியிலுள்ள மக்களுக்கு அவர்களே விநியோகம் செய்வார்கள். மற்ற மாநிலங்களில் இதை அமல் படுத்துகிறார்கள். எனவே இதிலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. பி. முனுசாமி] [1985 ஏப்ரல் 10

இங்கே செய்தி-அறநிலையத் துறை அமைச்சராக இருக்கும் மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் செய்தி-சுற்றுலாத் துறையை சிறப்பாக நடத்தி வருகி
றார்கள். அந்தத் துறையினர், மாவட்டந்தோறும் கலை அரங்குகளைக் கட்ட
நடவடிக்கை எடுக்கவிருப்பதாக, பட்ஜெட்டில் கூறியிருக்கிறார்கள். என்னைக்
கேட்டால், இன்றையதினம் இருக்கும் நாகரிகமான சமுதாயத்தில், மாவட்டந்
தோறும் என்பதை விட, தாலுக்கா தோறும் அந்தக் கலையரங்குகளைக் கட்டி
னால், மக்கள் வரவேற்பார்கள். அதன்மூலம் நமக்கு அதிக வருமானம்
கிடைக்க வழியேற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 4-10)

ஆகையால் மாவட்டத்திற்கு ஒரு கலையரங்கம் என்று இருப்பதை ஒன்றியத்
திற்கு ஒரு கலையரங்கம் என்று வைத்தால், நலமாக இருக்கும் என்று தெரி
வித்துக் கொள்கிறேன். மதிப்பிற்குரிய சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்
இதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, அரசவைக் கவிஞராக இருந்த, மறைந்த, கவியரசு
கண்ணதாசன் அவர்களுக்கு காரைக்குடியில் ஒரு மணி மண்டபமும், விடுதலை
வீரர் திருப்பூர் குமரன் அவர்கள் நினைவாக திருப்பூரில் நினைவாலயம்
ஒன்றும் கட்ட ஏறக்குறைய ரூபாய் 45 லட்சம் செலவழிக்கப் போவதாக அறி
வித்திருக்கிறார்கள். இவை மிகவும் வரவேற்க வேண்டிய திட்டங்களாகும்.

சிதம்பரம், பிச்சாவரம் சுற்றுலா மையத்திற்கு நான் சில மாதங்களுக்கு
முன் சென்றிருந்தேன். அந்த இடம் மனித நடமாட்டமே இல்லாத இடமாக
இருக்கிறது. பல கால்வாய்கள் பின்னிக் கிடக்கின்ற ஒரு தீவாக அது இருக்
கின்றது. அந்தக் கால்வாய்களைப் படகில் சுற்றிச்சுற்றி வருகிறபோது,
நமக்கு எந்தப் பக்கம் போகிறோம் என்றே தெரியவில்லை. எது எந்தக்
கால்வாய் என்று அடையாளம்கூட தெரியவில்லை. ஏனென்றால் அங்கே வளர்ந்
திருக்கின்ற மரங்கள் அப்படி வளர்ந்திருக்கின்றன. மனித நடமாட்டமே
இல்லை. பறவைகள் நடமாட்டம்கூட கிடையாது. அந்த அளவுக்கு அந்தத்
தீவு இருந்து கொண்டிருக்கிறது. ஆகையால் அதைத் தேசிய சுற்றுலா மைய
மாக ஆக்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.
நூற்றுக்கணக்கான கால்வாய்கள் அதைச் சுற்றிச் சுற்றி வருகின்றன. நான்கூட
சென்ற ஒரு கால்வாயிலேயே வழி தெரியாமல் மறுபடியும் சென்றேன். எனவே
அங்கேயுள்ள ஒவ்வொரு கால்வாய்க்கும் நம் தலைவர்கள் பெயர்களை வைத்
தால், நாம் எந்தப் பக்கம் போகிறோம் என்று அடையாளம் தெரிந்துகொள்ள



1985 ஏப்ரல் 10] [திரு. பி. முனுசாமி]

முடியும். எனவே தலைவர்கள் பெயர்களை வைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அங்கே செல்லும் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொஞ்சம் கவனம் செலுத்தி ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மின்சாரத்தைப் பொறுத்தவரை, இன்றைக்கு நம்முடைய லட்சோபலட்சம் விவசாயக் குடும்பங்களின் வாழ்க்கை மின்சாரத்தோடு பின்னிப் பிணைந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆண்டு தோறும் மின்சாரத்திற்காக நாம் நிறைய செலவழிக்கின்றோம். ஆனால் ஆண்டுதோறும் மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டுக்கொண்டு வருகின்றது. தமிழ்நாட்டில் அனல் மின்சார நிலையங்களையும், புனல் மின்சார நிலையங்களையும் பயன்படுத்திப் பார்த்து விட்டோம். மின்சாரப் பற்றாக்குறையைப் போக்க இனி புதிதாக அணுசக்தி மின்சார நிலையங்களை ஏற்படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்று மின்சார வாரியத்தில் ஏறக்குறைய 84,000 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். ஆண்டுதோறும் மின்சார வாரியத்திற்கு நாம் மானியமாக நூறு கோடி, 150 கோடி ரூபாய் கொடுத்துக்கொண்டு வருகிறோம். இன்றைக்கு மின்சாரத் தட்டுப்பாடு வராமல் இருப்பதற்காக எங்கெங்கு எந்த எந்த மின்சார நிலையங்களில் கோளாறுகள் ஏற்படுகின்றனவோ அங்கெல்லாம் அதிகக் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த ஆண்டு பட்ஜெட்டில் பேசுகிறபோதுகூட சொன்னேன். மின்சாரத் தேவை நமக்கு அதிகமாக இருப்பதால், மின்சாரத்தை உபயோகிக்கின்ற பெரிய பெரிய தொழில் அதிபர்கள், தொழிற்சாலைகளை நடத்துகின்ற தொழில் அதிபர்கள் அவர்களாகவே மின்சாரத்தை உற்பத்தி செய்துகொள்ள வேண்டும், அதற்கு மற்ற மாநிலங்களில் தருவதுபோல மானியத் தொகை தர வேண்டும். அப்படிச் செய்தோமேயானால், நிச்சயமாக பெரிய பெரிய தொழிற்சாலைகளுக்கு அவர்களே மின்சாரத்தை உற்பத்தி செய்து கொள்வார்கள். அவர்களுக்குப் போக மீதமுள்ள மின்சாரத்தை அந்தப் பகுதியிலுள்ள மக்களுக்கு அவர்களே விநியோகம் செய்வார்கள். மற்ற மாநிலங்களில் இதை அமல் படுத்துகிறார்கள். எனவே இதிலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. பி. முனுசாமி] [1985 ஏப்ரல் 10

(பிற்பகல் 4-20)

மாநிலமும் மாநில சுயாட்சி கேட்கும். அதைப் போலவேதான் பீகாரும், உத்திரப் பிரதேசமும், வங்காளமும் கேட்கும். இப்போது மத்திய அரசின் கட்டுப்பாட்டுக்குள் இந்த மாநிலங்கள் எல்லாம் இருக்கும்போதே, நமக்கு எதிராகப் பல மாநிலங்கள் செயல்படுவதைப் பார்க்கிறோம். பக்கத்திலே இருக்கிற கருநாடக மாநிலம் நமக்குத் தண்ணீர் தருவதற்கு மறுக்கிறது. இதனால் நதிநீர்ப் பிரச்சினை இன்னும் தீராமலேயே இருக்கிறது. ஆக மாநிலங்கள் எல்லாம் இப்போது மத்திய அரசின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் போதே, இத்தகைய நிலைமை என்றால், பிறகு என்னவாகும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். எல்லாப் பொருள்களின் விலையையும் மத்திய அரசு தற்போது தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொண்டிருக் கிறது. மாநில சுயாட்சி என்று வருகிறபோது, அந்தந்த மாநிலம் தன் இஷ்டம்போல் பொருள்களின் விலையை உயர்த்தி விற்கக்கூடும். தற்போது இரும்பு ஒரு டன் 5 ஆயிரம் ரூபாய்க்கு விற்கப்படுகிறது என்றால், மாநில சுயாட்சி காரணமாக ஒரு டன் இரும்பு 20,000 ரூபாய் என்று விற்றால், நம்மால் அதைத் தடுக்க முடியாது. அதைப்போலவே நிலக்கரி தற்போது டன் ஒன்றுக்கு 500 ரூபாய்க்கு விற்கிறது என்றால், அவர்கள் அதை 1,000 ரூபாய் என்று விலை ஏற்றி விற்பார்கள். நாம் ஒன்றும் செய்ய முடியாது. அவர்கள் கேட்கிற விலையைக் கொடுத்துத்தான் எந்தப் பொருளையும் வாங்க வேண்டி வரும். தற்போது மின்சாரம் ஒரு யூனிட் 50 பைசாவுக்கு விற்பதற்குக் காரணம் நிலக்கரியின் விலையை நமது மத்திய அரசு ஒரு கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டிருக்கிறது. எனவே இரும்பு, அரிசி, கோதுமை, நிலக்கரி போன்ற எல்லாவற்றின் விலையும் உயர்ந்து விடும். எனவே மாநில சுயாட்சி கோரும்போது, இந்தப் பிரச்சினைகளைப் பற்றி யெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அண்மையில் இருக்கிற கருநாடக முதல்வர் அவர்கள் ஸ்ரீலங்கா தமிழர்கள்பற்றிப் பேசும்போது—அவர் ஒரு மாநாட்டில் பேசியிருக்கிறார்— தமிழர்களை கருநாடக மாநிலத்திற்குள் வர விடக்கூடாது என்று சொல்லி யிருக்கிறார். மத்திய அரசின் கட்டுப்பாட்டுக்குள் இவர்களெல்லாம் இருக்கும்போதே, இந்த நிலைமை என்றால், மாநில சுயாட்சி வரும்போது, இந்த நிலைமைகள் எப்படி இருக்கும் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.



1985 ஏப்ரல் 10]

**திரு. சி. இராமலிங்கம்:** கருநாடகத்திற்குள் தமிழர்கள் வரக்கூடாது என்று சொல்லவில்லை. கேரளத்தோடு அவர்களுக்கு காசர்கோடு பிரச்சினையும், மராட்டியத்தோடு எல்லைப் பிரச்சினையும் இருக்கிற காரணத்தால் அடுத்த மொழிக்காரர்கள் அங்கே வரக்கூடாது என்று சொல்லி யிருக்கிறார்களே தவிர, நம்மைப்பற்றிச் சொல்லவில்லை. நமக்கு அவர் களோடு எல்லைப் பிரச்சினையில்லை. அவர்கள் அப்படிப் பேசவுமில்லை. பத்திரிகைகளில்தான் அப்படிப் போட்டுவிட்டார்கள்.

**திரு. பி. முனுசாமி:** ஒரு மாநிலத்தின் முதலமைச்சர் அப்படிப் பேசியிருப்பதால், நான் அதை இங்கே குறிப்பிடக்கடமைப்பட்டிருக்கிறேன். எனவே இந்த நிலைமையில் மாநில சுயாட்சி என்பது மிகவும் ஜாக்கிரதை யாகப் பரிசீலிக்கப்பட வேண்டிய பிரச்சினை என்பதை மட்டும் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, மொழிப் பிரச்சினை குறித்து ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். மத்திய அரசு பிரதமர் இராஜீவ் காந்தி தலைமையில் புதிய கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. அந்த அடிப்படையில் தமிழகத்தில் 500 மத்திய அரசுப் பள்ளிகள் துவங்கப்பட இருக்கின்றன என்பதைப் பார்க்கிறோம். அந்த 500 மத்திய கல்விச் சாலைகளையும் நமது அரசு வரவேற்று நல்ல முறையில் நடத்த வேண்டும். காரணம் அதன் மூலமாகப் பல வேலைவாய்ப்பு கிடைக்க வழி பிறக்கும். எந்த விதமான சிக்கலும் அதன் மூலம் ஏற்படாது. மத்திய அரசு கல்விச் சாலைகளைப் பொறுத்த வரையில், அங்கெல்லாம் பல மொழிகளில் பாடம் சொல்லிக் கொடுக்கும் நிலை இருக்கிறது. குறிப்பாக அங்கே இந்தியைச் சொல்லிக் கொடுக்கலாம். இந்தி வருகிறபோது, அதையும் நாம் வரவேற்க வேண்டும். பள்ளிக்கூடங்களில் இந்தியைப் படிப்பதில் தவறு இல்லை என்று சொல்லிக் கொள்கிறேன். அது மட்டுமல்ல. இன்றைக்கு குறிப்பாக எல்.கே.ஜி., யு.கே.ஜி. போன்ற தனியாரால் நடத்தப்படும் பள்ளிகளில் இந்தி மொழியைச் சொல்லிக் கொடுக்கிறார்கள். இதை நம்மால் தடுக்க முடியவில்லை.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் பேசத் தொடங்கி 25 நிமிடங்கள் ஆகின்றன. உடனடியாக முடித்துக் கொண்டால் நல்லது.

[திரு. பி. முனுசாமி] [1985 ஏப்ரல் 10

(பிற்பகல் 4-15)

கேரள மாநிலத்தில் இதைப்போன்ற மின்சார வாரியத்தில் பணியாற்று
கின்ற தொழிலாளர்களுக்கு 5 ஆண்டுகள் விடுப்பு கொடுத்து அரேபியா
போன்ற நாடுகளுக்கு அனுப்பி வைக்கிறார்கள். அரபு நாடு போன்ற நாடு
களுக்கு அவர்களை அனுப்பி வைக்கிறார்கள். அவர்களுக்கு அங்கே ஐந்து
ஆண்டுகளுக்குக் கொடுக்கப்படுகின்ற சம்பளம் அரசாங்கத்திற்கு மீதப்படு
கிறது. அந்த ஸ்கில்டு தொழிலாளர்களை எல்லாம் வெளிநாட்டுக்கு அனுப்பி
வைத்தால் அவர்களுக்கு நல்ல வருமானம் கிடைக்கும். இங்கே இருக்கிற
ஒரு இன்ஜினியர் அரபு நாடுகளுக்குச் சென்றால் அங்கே 10 ஆயிரம்,
15 ஆயிரம் சம்பளம் வாங்குவார். ஐந்து ஆண்டுகள் விடுப்பு கொடுத்து
இங்கே இருக்கிற தொழிலாளர்களை குறிப்பாக மின்சாரத் தொழிலில்
இருக்கிற தொழிலாளர்களை அந்த நாடுகளுக்கு அனுப்பி வைத்தால்,
அதன் மூலமாக அவர்களுக்கு வருகின்ற நல்ல வருமானம் அவர்களு
டைய குடும்பங்கள் நல்ல விதமாக இருக்கப் பயன்படும். அவர்கள்
திரும்பி வருகிறபோது, 2 லட்சம், 3 லட்சம் ரூபாய் எடுத்து வருகின்ற
நிலைமை ஏற்படும். இதைக் கேரள அரசு செய்கிறது. 5 ஆண்டுகளுக்கு
விடுப்புக் கொடுத்து மேல் நாடுகளுக்கு அனுப்பி வைத்தால், 5 ஆண்டுகளுக்கு
உண்டான சம்பளச் செலவு அரசுக்குக் குறையும். இதை கேரள அரசு
செய்கிறது. ஆகையால் அதை நீங்கள் பின்பற்றிச் செய்ய வேண்டுமென
இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள்
இன்னும் எவ்வளவு நாழி பேசுவார்கள் ?

**திரு. பி. முனுசாமி :** அதுமட்டுமல்ல, இன்றைக்கு இருக்கின்ற ஆதிதிராவிடர்
நல இலாக்கா மூலமாக, ஆதிதிராவிடர்களுக்குச் செலவழிக்க சிறப்பு அம்சத்
திட்டமாக 125 கோடிக்கு நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். 13 கோடி ரூபாய்
மத்திய அரசு ஒதுக்குவார்கள் என்று எதிர்பார்க்கிறோம். அந்தத்
திட்டங்கள் எல்லாம் மக்களுக்குப் போய்ச் சேருகின்ற அளவுக்கு நாம்
கவனம் செலுத்த வேண்டும். இதற்கு அரசுதான் பரிகாரம் தேட வேண்டும்.
ஆதிதிராவிடர்களுக்காகப் போடப்படுகின்ற திட்டங்கள் உள்ளபடியே அவர்
களுக்குப் போய்ச் சேருவதில்லை. அரசு இதில் கவனம் செலுத்த
வேண்டும்.



1985 ஏப்ரல் 10] [திரு. பி. முனுசாமி]

2 நாட்களுக்கு முன்பு மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தாபதி அவர்கள் இங்கே மாநில சுய ஆட்சியைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அதற்கு அவர்கள் அதிக நேரம் எடுத்துக் கொண்டு அக்கறையோடு இங்கே பேசினார்கள். மாநில சுய ஆட்சி என்று பார்க்கிறபோது, உள்ளபடியே எங்களுக்கும் அதிலே பங்கு உண்டு. நிச்சயமாக அதிகாரங்கள் வருமென்று எதிர் பார்க்கிறோம். இருந்தாலும் கூட, நாங்கள் ஏதோ, அது வருவதைத் தடை செய்வது போலவும், காங்கிரஸ்காரர்கள் முட்டுக்கட்டையாக இருப்பது போலவும் பேசினார்கள் . . . .

**திரு. ஆர். டி. சித்தாபதி :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் காங்கிரஸ் முட்டுக்கட்டையாக இருப்பதாகச் சொல்லவில்லை. அவர்களின் ஒத்துழைப்புத் தேவை என்றுதான் கேட்டுக்கொண்டேன்.

**திரு. பி. முனுசாமி :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அவ்வாறு அவர்கள் சொல்லியதற்கு நன்றி.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இன்னும் 8 உறுப்பினர்கள் பேசவேண்டி இருக்கிறது. இன்றைக்குத்தான் கடைசி நாள். நாளைய தினம் பேச இயலாது. உறுப்பினர்களுடைய ஒத்துழைப்பு எனக்குத் தேவை.

**திரு. பி. முனுசாமி :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழகத்திலே இருக்கின்ற முக்கியமான சில தொழிற்சாலைகளுக்கு வேண்டிய கனிமப் பொருட்கள், முக்கியமாக இரும்பு மற்ற தாதுப் பொருட்கள் வடபுல மாநிலத்திலிருந்து இங்கே வருகின்றன. இங்கே இருக்கின்ற சிம்ப்சன் போன்ற கம்பெனிகள் எல்லாம் இன்றைக்கு மோட்டார் வாகனத் தொழிற்சாலைக்கு வேண்டிய உதிரிப் பாகங்களைத் தயார் செய்கின்றன. அவர்களுக்குத் தேவையான பொருள் இரும்பு. நமக்கு வடபுல மாநிலத்திலிருந்துதான் இரும்பு வந்தாக வேண்டும். அதுமட்டுமல்ல, மின்சாரம் தயாரிப்பதற்கு நிலக்கரி தேவைப்படுகிறது. இன்னும் கோதுமை, சர்க்கரை போன்ற பொருட்கள் எல்லாம் வடபுல மாநிலத்திலிருந்து தான் நமக்கு வரவேண்டியிருக்கிறது. இரும்பு, நிலக்கரி, கோதுமை, சர்க்கரை இதுபோன்ற பொருட்களை எல்லாம் மத்திய அரசாங்கத்தினுடைய கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார்கள். இரும்பு 1 டன் 5 ஆயிரம் ரூபாய் என்று சொன்னால், அப்போது இந்த மாநில சுய ஆட்சி நடக்கிறபோது, அந்த விலை எல்லா மாநிலங்களுக்கும்தான் பொருந்தும். தமிழகம் மாநில சுயாட்சி கேட்கிறபோது, நமக்கு அண்டையில் உள்ள ஆந்திர

**திரு. பி. முனுசாமி:** இந்தி மொழியைப் பொறுத்த வரையில், இங்கே சர்ச்சை இருக்கிறது. உண்மைதான். மறைந்த பிரதமர் பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் கொடுத்த உறுதிமொழியைக் குறிப்பாகக் காங்கிரஸ் கட்சி என்றைக்கும் மீறாது என்ற உத்திரவாதத்தை என்னாலே கொடுக்க முடியும். இந்தி மொழி பேசாத மக்கள் விரும்புகிற வரை, இந்தியை நாங்கள் நுழைக்க மாட்டோம் என்று அவர் சொல்லியிருக்கிறார். அதாவது மக்கள் ஏற்றுக் கொள்கிற வரை நாங்கள் இந்தியை நுழைக்க மாட்டோம் என்றுதான் அதற்கு அர்த்தம். ஆகவே இந்தப் பிரச்சினையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தாபதி அவர்கள் குறிப்பிட்டதைப் போல், குறுக்கே நிற்கப் போவதில்லை. இருந்தாலும் எங்களைப் பொறுத்த வரையில், காங்கிரஸ் கட்சியைப் பொறுத்த வரையில், மும்மொழித் திட்டம்தான். இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில், உங்களோடு ஒத்துழைக்க வேண்டும் என்ற முறையில் இரு மொழித் திட்டத்தை ஆதரிக்கிறோம். ஆனால் காங்கிரஸ் கட்சியைப் பொறுத்த வரையில் மும்மொழித் திட்டம்தான்.

(பிற்பகல் 4-25)

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் செண்ட்ரல் ஸ்கூல் பற்றி எடுத்துச் சொல்லும்போது, அங்கு இந்தியும் போதிக்கப்படுகிறது என்று சொன்னார்கள். செண்ட்ரல் ஸ்கூல்களில் ஆங்கிலம், இந்தி தவிர பிராந்திய மொழிக்கு இடம் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்களா? பிராந்திய மொழி அப் பள்ளிகளில் இடம் பெற வேண்டும் என்று இங்கேயுள்ள காங்கிரஸ் கட்சி விரும்புகிறதா இல்லையா என்று கேட்க விரும்புகிறேன்.

**திரு. பி. முனுசாமி :** அதைப் பற்றி முழு விவரம் தெரியாது. இந்தி இருக்கும் என்றுதான் சொன்னார்கள். அவர்கள் நடத்தும் பள்ளிகளில் நிச்சயமாக இந்தி இருக்கும். ஆகவே இந்திபற்றி சர்ச்சை எழுப்பாமல் இருக்க வேண்டும். நேருஜி அவர்கள் கொடுத்த உறுதிமொழி நிச்சயமாகக் காப்பாற்றப்படும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப் படுகிறேன் என்பதைச் சொல்லிக்கொண்டு எனக்கு இந்த வாய்ப்பை நல்கிய துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, அமைகிறேன்.

***திரு. இ. மதுசூதனன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் நிதிநிலை அறிக்கை மீது பேசுகின்ற வாய்ப்பு நல்கியமைக் காக நான் சார்ந்துள்ள அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.





தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் ஆட்சிப் பீடத்திற்கு வந்த பிறகு, அண்ணாவின் இலட்சியங்களையும், அண்ணாவின் எண்ணங்களையும், அண்ணாவின் கொள்கைகளையும் வழி நடத்துகிற வகையில், 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண வேண்டும்' என்ற வகையில் பல்வேறு புரட்சிகரமான திட்டங்களை இந்த நிதிநிலை அறிக்கையில் கொண்டு வந்திருக்கிறார்கள்.

ஏற்கெனவே கடந்த நிதிநிலை அறிக்கையின்போது, புரட்சித் தலைவர் அவர்கள், ஏழையெளிய பாட்டாளி மக்களின் பிள்ளைகள் ஒரு வேளையாவது உணவு உட்கொள்ள வேண்டுமென்ற நோக்கத்தோடு, அந்தப் பிள்ளைகள் வலிவுள்ள பிள்ளைகளாக உருவாக வேண்டும் என்பதற்காக தொலை நோக்கோடு சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இன்றைய தினம் அந்த ஏழையெளிய பாட்டாளி மக்களின் பிள்ளைகளுக்கு இலவசப் புத்தகங்கள் வழங்குகிற திட்டத்தையும், இலவச சீருடை வழங்கும் திட்டத்தையும் இந்த நிதிநிலை அறிக்கையிலே புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள்.

இந்த நாட்டில் விலைவாசி ஏறாமல் ஓரளவு சமநிலையில் இருக்க வேண்டும் என்பதற்காக பொதுப் பங்கீட்டு முறை ஒழுங்கான முறையில், செம்மையான முறையில் நாட்டு மக்களுக்குக் கிடைக்கிற வகையில் இருக்க வேண்டும் என்பதற்காக 1,000 குடும்பங்களுக்கு ஒரு கடை என்ற விதத்தில் புரட்சித் தலைவர் அவர்கள் 2,700-க்கு மேற்பட்ட கடைகளைத் திறந்து வைத்து, அதன் வாயிலாக வேலையில்லாத் திண்டாட்டத்தை ஓரளவுக்குக் குறைத் திருக்கிறார் புரட்சித் தலைவர் அவர்கள்.

இன்றைய தினம் காந்தியாருடைய கனவுகளை நினைவாக்குகிற வகையில் கிராம ராஜ்யத்தை புரட்சித் தலைவரின் அரசு உருவாக்கிக் கொண்டிருக்கிறது என்பதை நான் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். அது மட்டுமல்லாமல், படித்துவிட்டு வேலையில்லாத் திண்டாட்டத்தால் அல்லல்பட்டுக் கொண்டிருக் கிறவர்களுக்கு சுய வேலை வாய்ப்பை ஏற்படுத்தி, அதன் வாயிலாகப் பலன் பெற வேண்டும் என்று பல்வேறு புரட்சிகரமான திட்டங்களை இன்றைய தினம் இந்த நிதிநிலை அறிக்கையில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள்.

[திரு. இ. மதுசூதனன்] [1985 ஏப்ரல் 10

அது மட்டுமல்ல, பல்வேறு திட்டங்களை இந்த நிதிநிலை அறிக்கையில் புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். குறிப்பாக தமிழகத்தின் கடலோரப் பகுதியில் வசிக்கின்ற ஏழையெளிய பாட்டாளி மீனவர்களுக்கு புரட்சித் தலைவர் அரசு பல்வேறு புரட்சிகரமான திட்டங் களைக் கொண்டு வந்து பல்வேறு நன்மைகளைச் செய்திருக்கிறது. ஆனால் இன்றையதினம் டீசல் விலை ஏறியதன் காரணமாக கடலுக்குச் சென்று மீனைப் பிடித்துக்கொண்டு கடலோரத்திற்குத் திரும்ப வருகிற மீனவர்களுக்கு, அவர்கள் படகுக்கு டீசலுக்குச் செலவழித்த தொகையைவிட குறைவாகத்தான் மீனின் விலை கிடைக்கிறது. அதனால் ஏழையெளிய மீனவர்கள் விசைப் படகுகளை ஓட்ட முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வரவுக்கு மேல் செலவாகிறது. ஆகவே மீனவர்கள், டீசலின் விலை உயர்வின் காரணமாக தவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மிகப் பணிவோடு

(பிற்பகல் 4-30)

சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த அரசு, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு, மத்திய அரசோடு பேச்சுவார்த்தை நடத்தி இன்றையதினம் மீனவர்களுக்கு, விசைப்படகுகள் வைத்திருப்பவர்களுக்கு நஷ்டஈடு தருவதுபோல, ஏழையெளிய மீனவர்களுக்கும் நஷ்டஈடு தர வேண்டிய வழிவகைகளைச் செய்துதர வேண்டும் என்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, இன்றையதினம் சிலர், ஏற்றுமதியாளர்கள் என்ற பெயரில் ஏழையெளிய மீனவ மக்கள் கடலிலேயிருந்து பிடித்து வந்து கொடுக்கின்றவைகளை இடைத்தரகர்களாக விலைக்கு வாங்கி வியாபாரம் செய்கின்றார்கள். அவர்கள் இப்போது அரசு போட்டிருக்கின்ற வரியை எதிர்க்கின்றார்கள். அரசு போட்டிருக்கின்ற வரியின் காரணமாக அந்த ஏழையெளிய மக்களிடம் ஒன்றைச் சொல்கின்றார்கள். அரசு போட்டிருக்கின்ற அந்த வரியைக் கட்ட நாங்கள் உங்களிடமிருந்து மீன்களைக் குறைந்தபட்ச விலைக்குதான் வாங்க இயலும் என்று சொல்லியிருக்கின்றார்கள். அவர்கள் அந்த ஏழையெளிய மீனவர்களிடத்தில் இப்படி ஒரு பீதியைக் கிளப்பி விட்டிருக்கின்றார்கள். அது மட்டுமல்ல, இன்னொரு புறத்திலே அரசையும் அச்சுறுத்துகின்றார்கள். அவர்கள் 16ஆம் தேதி முதல் கொள்முதல் செய்ய மாட்டோம் என்று சொல்கின்றார்கள். அவர்கள் கொள்ளை லாபம் அடிக்கின்றார்கள். கொள்ளை லாபம் அடித்துக்கொண்டு பல இலட்சக்கணக் கான ரூபாய்களை சம்பாதித்துக்கொண்டிருக்கின்றார்கள். அன்று



1985 ஏப்ரல் 10] [திரு. இ. மதுசூதனன்]

சாதாரணமானவர்களாக இருந்தவர்கள் இன்றையதினம் மிட்டா மிராசுகளாக இருக்கின்றார்கள். அந்த இடைத்தரகர்களை ஒழித்துவிட்டு அரசே கொள் முதல் செய்ய வேண்டும் என்று நம் அரசை நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இன்றையதினம் புரட்சித் தலைவர் அவர்களின் அரசு, சென்னை மாநகரத்தினுடைய அபிவிருத்திக்காக பல்வேறு நன்மைகளைச் செய்ய பல் வேறு திட்டங்களை வகுத்துக்கொண்டிருக்கின்றது. குறிப்பாக இராயபுரம் பகுதியில் ஏற்கெனவே ஒரு ரெயில்வே கிராசிங் இருக்கிறது. பல ஆண்டு களாக அந்த ரெயில்வே கிராசிங் இருக்கின்றது. அங்கே ஒரு நாளில் 24 மணி நேரத்தில் 20 மணி நேரம் அந்த கேட்டு எப்போதும் மூடி வைக்கப் பட்டிருக்கின்றது. அங்கேயுள்ள மருத்துவ மனைக்கு சிகிச்சைக்கு வருகின்றவர்கள், அந்த ரெயில்வே கேட்டுக்கு அருகாமையிலே காத்திருந்து அங்கேயே உயிரை இழக்கவேண்டிய நிலைமை இருக்கின்றது. இந்தப் புறத்தில் ஆர்.எஸ்.ஆர்.எம். ஆஸ்பிட்டல் இருக்கின்றது. அந்தப்புறத்தில் ஸ்டான்லி மருத்துவ மனை இருக்கின்றது. இடையில் ரெயில்வே கிராசிங் இருக்கின்றது. அங்கே 24 மணி நேரத்தில் 20 மணி நேரம் அளவுக்கு அந்த கேட் மூடியிருப்பதால், அங்கு மார்வலியுடன் வருகின்ற நோயாளி, ரெயில்வே கேட்டுக்கு அருகாமையிலே உயிரை இழக்கின்ற நிலைமை இருக்கின்றது. பிரசவம் பார்க்க வருகின்றவர்களுக்கு சாலையிலே பிரசவம் ஆகிவிடுகின்றது. அந்த வகையில் பல்வேறுவிதமான இன்னல்களுக்கு அவர்கள் ஆளாகிக் கொண்டிருக்கின்றார்கள். ஆகவே புரட்சித் தலைவர் அரசு, தமிழக அரசு, அந்த ரெயில்வே கிராசிங்குக்கு மேல் உடனடியாக மேம்பாலம் கட்ட வழிவகை செய்துதர வேண்டும் என்று மிகவும் பணிவன்போடு பொதுமக்கள் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று, அண்ணா நகர் வைஷ்ணவா கல்லூரிக்கு எதிரில், ஈ.வி.ஆர். நெடுஞ்சாலை நடுவாங்கரைப் பகுதிக்கு இடையில் தொங்கு பாலம் இருக் கின்றது. 1957 ஆம் ஆண்டில் அந்தப் பாலம் கட்டப்பட்டது. மழை வந்தால் அந்தப் பாலத்திற்கு மேலே 5 அடி, 6 அடி வரையிலும் தண்ணீர் போகும். அப்படி தண்ணீர் செல்கின்ற நேரத்தில், நடுவாங்கரை பகுதி மக்கள் வைஷ்ணவா கல்லூரிப் பகுதிக்கு வர இயலாது தவிப்பார்கள். அந்த நேரத்தில் போக்குவரத்து துண்டிக்கப்படும். அந்த நேரத்தில் அங்கே மின்சார வசதி இல்லை. எந்தவிதமான வசதியும் இல்லாமல் அங்கே மக்கள் அவதிப்படுகின்றார்கள். ஆதலால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அருள் கூர்ந்து அந்தப் பாலத்திற்கு மேல் ஒரு மேம்பாலம் அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சென்னை மாநகரத்தின் 33-வது வட்டத்தைச் சேர்ந்த திருமங்கலம் அண்ணா நகர் தொகுதியைச் சேர்ந்தது. அந்தப் பகுதியில் சுடுகாடே இல்லை. பிணத்தைத் தூக்கிக் கொண்டு வர வேண்டுமென்றால், ஏறத்தாழ 5 மைல்கள் தொலைவு தூக்கி வரும் சூழ்நிலை ஏற்படுகிறது. பிணத்தைத் தூக்கிக் கொண்டு வருகிறவன் எங்கே பிணமாகி விடுவானோ என்ற அச்சம் இருக்கிறது. எனவே அந்தப் பகுதிக்கு ஒரு சுடுகாட்டை உருவாக்கித் தர வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 4-40)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** விரைவில் சென்னை மாநகராட்சிக்குத் தேர்தல் நடைபெற இருக்கிறது என்று சொல்கிறார்கள். உறுப்பினர் இங்கே பேசுகின்ற பெரும்பாலான கருத்துக்கள் அங்கே சொல்லப் பட வேண்டிய கருத்துக்கள்.

**திரு. இ. மதுசூதனன் :** இப்படி பல்வேறு நன்மைகளை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு செய்து தந்திருக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் செய்திருக்கிற நன்மைகள் அனைத்தையும் தொலைநோக்கோடு செய்திருக்கிறார்கள். அதை நாம் இந்த நிதி நிலை அறிக்கை வாயிலாக தெளிவாகக் காண முடிகிறது. குறுகிய எண்ணத்தின் சொந்தக்காரர்களுக்கு ஒன்று சொல்கிறேன். இங்கே தேய்ந்து போன ரெக்கார்டு என்றும் உடைந்த ரெக்கார்டு என்றும் விமர்சனம் செய்த நண்பர்களுக்குச் சொல்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் "மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணக்கும்" என்று சொல்லியிருக்கிறார்கள். பேரறிஞர் அண்ணாவின் அந்தத் தத்துவங்களை அப்படியே நடைமுறைப் படுத்தி நல்ல பல திட்டங்களை தொலை நோக்கோடு செயல்படுத்தி வருவது மாண்புமிகு புரட்சித் தலைவருடைய அரசு என்று அந்த நண்பர்களுக்கு நினைவூட்டி என்னுடைய பேச்சை இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

Thirumathi **TARA CHERIAN** : Hon. Deputy Chairman, I thank you very much for the opportunity you have given me to speak on the Budget. After the joint session of the Tamil Nadu Legislature addressed by the Governor, the Budget has been presented by the Hon. the Finance Minister. From what I could see, it is a fairly balanced Budget and I am sure the Government will continue to work for the upliftment of the poor and for the redressal of the grievances of the down-trodden and for eradication of poverty and unemployment among the educated as well as the uneducated.



We could see that the Government have been committed to provide a clean and effective administration and the Legislators and the public have been asked to extend their active support to achieve the objectives.

Going through the small book entitled Introduction to the Budget, given by the Commissioner and Secretary, I was able to understand a little more about the Budget. If the Budget proposals are properly carried out, I think there would be an era of prosperity and much economic growth, unless there is any unprecedented flood or other natural calamities to worry us. The State has achieved a substantial increase in agricultural production and industrial activity. I find that the ordinary poor man is given 20 kg. of rice through the Civil Supplies Depots.

Planning and development are most important. I find the Plan performance is Rs. 3,600 crores and the State Government have submitted the State's 7th Five Year Plan for a total outlay of Rs. 7,000 crores. Of course, there is the influx of repatriates and refugees from Sri Lanka touching the figure of one lakh and, to that extent, our expenditure will go up. I am glad to find that there is the much-needed rapport between the Government of India and the State Government at the present time. I am here for over five years and I have often heard the members on the Treasury Benches say that the Central Government was niggardly and was meting out step-motherly treatment and so on and so forth. Now the co-ordination and understanding between the State Government and the Centre is better. My Party has also come with a better strength and I hope there will be continuous better understanding.

So far as the language policy is concerned, Pandit Nehru was in favour of the continuance of English and I am sure his assurance would be kept up. Nowadays even in our Legislature, I have to ask out Secretary to see that the papers are presented both in English and Tamil, since sometimes it is not strictly observed.

The Government have stated that a sum of Rs. 95 lakhs has been provided for solar thermal energy activities with a view to propagating the use of solar thermal energy. We have got to lay great emphasis on the Tamil Nadu Energy Development Agency to make use of new energy resources and also strengthen the old stretegies I hope the Government will not disappoint the people because energy

[திரு. இ. மதுசூதனன்] [1985 ஏப்ரல் 10

சென்னை மாநகரத்தில், ஏற்கெனவே சைதைப் பகுதியில் இருந்த ஒரு பகுதியானது அரும்பாக்கம், ராசுகான் நகர் என்ற பகுதிகள். அந்தப் பகுதிகள் ஏற்கெனவே முன்னாள் முதல் அமைச்சர் கலைஞர் அவர்கள் சார்ந்த தொகுதியாக, சைதைத் தொகுதியாக, 111-வது வட்டத்தைச் சார்ந்த பகுதியாக இருந்தது. அந்தப் பகுதி கலைஞர் அவர்களுடைய காலத்திலேயிருந்து இதுவரையிலும் எந்தவிதமான முன்னேற்றமும் அடையவில்லை. அங்கு சாக்கடை வசதியில்லை, குடிநீர் வசதியில்லை. அது இன்றையதினம் அண்ணாநகர் பகுதியைச் சார்ந்திருக்கின்றது. புரட்சித் தலைவர் அவர்கள் அரசு அதற்கான திட்டங்களை வகுத்திருக்கிறது. சாக்கடை வசதிக்கு வரைப்படங்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. அந்த வேலைகளை துரிதப்படுத்தி உடனடியாக அந்தப் பகுதி மக்கள் சாக்கடை வசதியும், குடிநீர் வசதியும் பெறுவதற்கான காரியங்களை நிறைவேற்றுவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதே போன்று புரசைத் தொகுதியில் திட்டித் தோட்டம் என்று ஒரு பகுதி

(பிற்பகல் 4-35)

இருக்கிறது. அந்தப் பகுதி தனியாருக்குச் சொந்தமான பகுதி, புரசைத் தொகுதி சட்ட மன்ற உறுப்பினராக பேராசிரியர் அவர்கள் பல ஆண்டு காலம் இருந்தார்கள். அவர் சட்ட மன்ற உறுப்பினராக இருந்த காலத்திலும் சரி, அமைச்சராக இருந்த காலத்திலும் சரி அந்தப் பகுதிக்கு எந்த வசதியும் செய்து தரவில்லை. ஆனால் புரட்சித் தலைவர் அவர்கள் தமிழக முதல்வராக வந்த பிறகு, அந்தப் பகுதிக்குச் சாக்கடை வசதியும், குடி தண்ணீர் வசதியும், மின்சார வசதியும் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் சாலை வசதி மட்டும் செய்து தரப்படவில்லை. ஏனோ தெரியவில்லை. ஆதலால் அருள்கூர்ந்து அரசு இந்தப் பகுதி மக்களுக்குச் சாலை வசதி ஏற்பாடுகளைச் செய்து தர வேண்டுமென்று நான் மிகப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக சென்னை மாநகரத்திலே தென் சென்னைப் பகுதியில் பல கல்லூரிகள் இருக்கின்றன. பல பாலிடெக்னிக்குகள் இருக்கின்றன. ஆனால் வட சென்னைப் பகுதியானது பிற்பட்ட நிலைக்கு ஆளாகியிருக்கிறது. வட சென்னைப் பகுதியில் அதிகாரிகள் இல்லை; வட சென்னைப் பகுதியில் அலுவலகங்கள் இல்லை; வட சென்னைப் பகுதியில் அமைச்சர்கள் இல்லை. யாருமே இல்லாத காரணத்தால், வட சென்னைப் பகுதியானது பிற்பட்ட நிலையில் கிடக்கிறது. ஆதலால் வட சென்னைப் பகுதியில் நடப்பு



1985 ஏப்ரல் 10] [திரு. இ. மதுசூதனன்]

ஆண்டிலாவது அரசாங்கப் பாலிடெக்னிக் ஒன்றைத் திறப்பதற்கு தமிழக அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பகுதியில் கல்லூரிகளும் குறைவாக உள்ளன. வட சென்னைப் பகுதியில் ஒரு அரசாங்கக் கல்லூரியை நிறுவ வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** வட சென்னைப் பகுதியில் அமைச்சர்களே இல்லை என்று சொல்லுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களே வட சென்னைப் பகுதியிலிருந்துதான் வருகிறார்கள்.

**திரு. இ. மதுசூதனன் :** வட சென்னைப் பகுதியில் அரசாங்கக் கல்லூரி ஒன்றை நிறுவ வேண்டுமென்றும், அதை நடப்பு ஆண்டிலேயே செய்ய வேண்டுமென்றும் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். மேலும் வட சென்னைப் பகுதியில் தனியார் பள்ளிகள் நடைபெறுகின்றன. அந்த உயர்நிலைப் பள்ளிகளிலே இடம் பெற முடியாமல் ஏழை எளிய மக்கள் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கே இடம் கிடைப்பது கடினமாக இருக்கிறது. ஆனால் சாதியின் பெயரால், மதத்தின் பெயரால், இனத்தின் பெயரால், கலாச்சாரத்தின் பெயரால் அங்கே கையூட்டு கொடுத்து இடங்கள் பெறப்படுகின்றன. இந்த நிலையை மாற்றிட, நடப்பு ஆண்டிலாவது அரசாங்க உயர்நிலைப் பள்ளிகளை வட சென்னைப் பகுதியில் ராதா கிருஷ்ணன் நகர், துறைமுகம், இராயபுரம், பெரம்பூர் ஆகிய பகுதிகளில் கட்ட வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான திருமண மண்டபங்கள் இருக்கின்றன. தனியாரால் நடத்தப்படும் திருமண மண்டபங் களைவிட இந்தத் திருமண மண்டபங்களில் வாடகை அதிகமாக இருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் திருமண மண்டபத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில், மாநகராட்சியில் திருமண மண்டபங்கள் திறக்கப்படுவது லாபத்திற்காக அல்ல, ஆதாயத்திற்காக அல்ல, ஏழை எளிய மக்களுக்குப் பயன் தரும் மண்டபங்களாக அவை இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். இன்றைய தினம் மாநகராட்சியால் நடத்தப்படுகிற அந்தத் திருமண மண்டபங்களில் வாடகை அதிகமாக இருக்கிறது. தனியார் வசூலிக்கும் வாடகையைப்போல் இரட்டிப்பாக இருக்கிறது. இந்த மண்டபங்களை ஏழை எளியவர்கள் பயன்படுத்த முடியவில்லை. அவற்றின் வாடகையைக் குறைக்க அரசு வழி வகைகளைச் செய்து தர வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

(Thirumathi Tara Cherian) [1985 ஏப்ரல் 10

is essential for industrial development. At the same time, there are loopholes also. There are malpractices in the distribution and there should be more supervision.

The Hon. the Finance Minister has touched almost all the points necessary to make out State self-sufficient as far as possible. The Finance Department has also worked hard and we must thank them for the useful note they have given. But what I want to emphasise, in common parlance, is "getting things done" as early as possible and as quickly as possible, without procedural delays. Whatever attitude one may adopt, there is no doubt that in India, as in other countries, the State will be required to play a more active and com

(பிற்பகல் 4-45)

prehensive part in economic development. Therefore, a comparison of the administrative methods of Government with those of the business organisations will not be just a mere academic exercise. On the other hand, it becomes a matter of considerable practical importance. By way of further explaining this, I would say that sometimes the Government are not responsive to the aspirations of the people living in the country which it governs. The reason for this is that we are still having the old ways of government which we were having when our country had to be loyal to a power outside our country. This attitude has to be changed. I would like to further explain in what respect a Government like ours differs from a business organisation in the matter of administrative methods. I hope the Hon. the Finance Minister will not mind my saying that Government works rather slowly and that Government is rather timid also. At times, Government is less positive and less constructive in its approach. This type of attitude is often pointed out by people using so many words like red-tapism, bureaucracy, etc. In spite of the vast changes it has gone through, the Government machinery still remains at the same level in which it existed some 80 or 90 years ago. In the matter of administration, we are still following several traditional procedures which have to be changed. The Government spend a lot of time on the Executive part of its work at the Secretariat. More time is spent on writing orders than on getting them executed. Sir, there are many senior officials in the Secretariat. How many of them have gone to districts to see whether what they have written in the files has been carried out? There are certain other areas also where the whole attitude of the Government is not responsive to public opinion. It is



1985 ஏப்ரல் 11] (Thirumathi Tara Cherian)

often said that, as compared to a business concern, a Government has to be more watchful about its financial affairs. Of course, finance is important for a Government but it is not the only important thing. The performance of a Government is judged on its sense of justice and on the extent to which it is able to hold the scales even between individual interests and the interest of the community as a whole. Our Government are more and more exposed to the criticism that they are at times unjust and are not so very efficient. Sir, the business houses plan not just for one or two years. They take a long range view of things and evolve their plans keeping in view the ultimate goals which they have to reach. I feel that the Government also should have such a long-range view if it is to play an important role in economic matters. It is very necessary that there should be a drastic change in the composition of the Government machinery. The Tamil Nadu Government machinery has always been held in very high esteem. But the time has now come for a complete re-organisation of the civil service. If the State is to play an active part in the economic development of the country, its Civil Service should consist of two classes. One class should have the present Civil servants who are engaged in the general administration; the other class, should be a specialised service to deal with the development part of the Government's work. I hope that our Tamil Nadu Government will take the lead in this matter. I think the Prime Minister also is very keen about it and is thinking of reorganising the administrative structure in a revolutionary way. I think that Tamil Nadu can set up a very nice example in doing that.

Sir, at present, plans and schemes are prepared and thrust on the people in the villages without taking into consideration the conditions obtaining in the villages. There is no point in converting all the dry latrines into flush-out latrines in a place where one cannot get a cup of water to drink. Therefore, I hope that the people in the villages and the Village Panchayats will be consulted in future before drawing up plans.

Sir, year after year more and more funds are provided in our Budget for the purpose of implementing welfare schemes. We know that a bid section of our people need relief and subsidies from the State funds. Of course, there is joy in distributing to the poor what we have. But, this should not result in spending our entire meagre resources on these welfare schemes without making provision for productive sectors and priority sectors for which the administration has

(Thirumathi Tara Cherian) [1985 ஏப்ரல் 11

a great basic commitment. We have to balance the short-term benefits from popular schemes with the benefits that accrue from long-range schemes that ensure a bright future for the State. The Government have a responsibility to build up a long-term economic perspective for the future generation. Even the welfare schemes will be a success only if we have an efficient administration that properly monitors the schemes. The welfare schemes have come to stay because poverty among our people is becoming chronic. Therefore, it is important to build up a new administrative structure, quite different from the old hierarchy which had its base in the Revenue officialdom. The benefit of our schemes should go to those who really deserve it. They should not fall by the way-side. Our administration should become more open and direct and come out of the hide-outs of files. The local community should be involved and kept in the know of things in relation to the welfare measures of the Government. I do not know how many people in villages know about them. Their main grievance is that they have no water, not even drinking water. I had been to some districts to know about the condition of the people. There are a lot of things to be done to them. Most of the places have been neglected. In one place, one person pleaded:

(பிற்பகல் 4-50)

"நாங்கள் எங்கே போவது; ஒரு சொட்டு தண்ணீர் இல்லை, ரோடு இல்லை." நானே பார்த்தேன். ஜீப்பில் போனேன், நடந்து போனேன்.

It is pathetic to see their condition. These things should be remedied. There is poverty and there is a yawning gap between the towns and the villages and it has been there for a long time. I do not think it will be possible to remove the gap in my generation. We talk so much about the provisions made in the Budget. Should not the people know where the money is spent? If it is stated that 10 school buildings are going to be constructed, I have a right and the public have a right to know where the money is spent and if it is not spent where the bottle-neck lies and why it has not been finished. Is there no time-limit for execution? Last year the Hon. Minister said that action would be taken against the posters which were objectionable. But still I see such posters and I can tell the Hon. the Leader of the House that such posters are found near the schools and other holy places.



1985 ஏப்ரல் 10] [Thirumathi Tara Cherian]

Coming to local community's participation and involvement, as far as possible, welfare measures should be administered through local self-Government institutions. The local Self-Government institutions should be non-party ones. I do not know how it will be possible. The Government have taken over the responsibility for payment of salary to teachers of Panchayat Schools. If the teacher comes late to school, he cannot be questioned. If a charge is framed, it will take a long time by which time he will retire or some other changes might come about. The Government must give more powers to the local bodies. The State Governments may seek more powers from the Centre. At the same time, the people in the local bodies should be given actual power to administer.

Administrative reforms are perhaps 'not due' but overdue. Delays and corruption can be reduced only if we change our administrative set-up. There is need for regular assessment, evaluation and reporting of the schemes implemented. Such reports should be made available to the public. Mere auditing and financial returns and numerical statistics do not give the real situation. The Government have to get the sanction of the Legislature before spending. The expenditure incurred by the Government is scrutinised by the Auditor-General and the various Committees. The reports are later on placed on the table of the House. This takes a lot of time. This does not have any meaning for the people. The people should be made known of the execution of schemes then and there so that there may be involvement and supervision by the people themselves.

Coming to my pet subject, I hope the Members elected from the Teachers' Constituencies will listen to me. I would like to emphasise that the education of the physically handicappd has become more and more specialised. Special competency may be required to deal with the education of the physically handicapped. Three years ago, by one stroke of the pen, the subject 'Physically Handicapped' was transferred to the Social Welfare Department. A vital subject like the education and training of the handicapped can be successfully implemented by persons with the required expertise and optitude and not by generalists. Education of the handicapped should normally be one of the wings of the Education Department. As such it should be under a special *cell with sufficient freedom*.. There should be no delay in filling up the posts of teachers. Sir, every child has got a right to get education. We talk so much about human rights and about the United Nations; but we forget that a child has a right

(பிற்பகல் 4-55)

to get educated. A handicapped child has the same amount of right as a normal child has. In this connection, I would like to state one thing. At a time when some of the present Members of the Legislature and even some Ministers were not born, I started a Federation and worked for the welfare of the dumb people. Therefore, I know what is happening in the matter of special schools which are run for the handicapped people. Many Government Orders issued with regard to the ordinary schools do not state whether those orders are applicable to the special schools. This causes a lot of difficulty because it takes several months to get clarifications from the Government. When the special schools were under the Education Department, the maintenance grants were received by those institutions soon after the Audit Report was ready. But now, the grant is not being received even after four or five years' delay. Especially, the schools functioning in the districts experience this difficulty in an acute manner. Recently, I visited a school for the blind at Tirupathur. There were hundreds of children there; but there was no teacher. If one of those children had been mine, I would have put up a fight and would have even done something more than that. Even the G.O. No. 292, issued as early as the beginning of 1982, regarding the regularisation of the services of menials has not been carried out in that school. Some new posts of teachers are sanctioned every now and then by the Government. But, when distributing those posts among various schools, the special schools are not taken into account. As a result, there is no proper teacher pupil ratio in the special schools. The teachers working in the special schools feel very strongly that they are not treated on a par with the teachers of the other schools and that they are not able to enjoy all the benefits which the other teachers enjoy. Therefore, they want to leave these schools run by the Social Welfare Department and go back to the Education Department. A Government Order issued on the 13th August 1984 states that the inspection of these special schools should be done by the Education Department. When the inspection is done by Education Department, why should the actual running of these schools be with the Social Welfare Department? Secondly, for presenting students for the Public Examination, these special schools have to approach the Education Department. When that is the case, what is the point in having these schools under the Social Welfare Department? When children are transferred from these special schools to the ordinary schools, the ordinary schools do not admit those children on the



strength of the Transfer Certificates issued by the special schools. Because of all these things, the handicapped children and their parents are put to a lot of difficulties. Here, I would like to say one thing. I do not know whether it is correct and I would stand corrected if it is wrong. The Midday Meals Scheme has not been extended to these handicapped children. For maintaining the quality of education also, the education of handicapped children should remain with the Education Department. I hope the hon. Member Thiru Thomas is listening to me and I trust that he would be able to do something about it. The Tamil Nadu Association of Teachers of the Deaf have represented to the Government the feelings of the teachers working in the special schools and have requested the Government to bring about . . . .

Mr. DEPUTY CHAIRMAN: I think the hon. Member is referring to some notes. If she makes those note-papers visible to me, I may know how many more pages she has to cover.

Thirumathi TARA CHERIAN: I am referring to the notes only to save time. I have prepared them in English only because I am better in Tamil only when I am angry.

The policy of the Central Government also is to integrate the capable handicapped children with the other school children. This is the policy followed the world over, both in developed and under-developed countries. Recently, the Central Government gave financial aid to the Tamil Nadu Government for the education of the handicapped children. This amount has not been utilised and has been surrendered. This was stated in a meeting at Delhi in which representatives of all States participated. The Central aid has been surrendered only because of administrative failure on the part of our Government.

Sir, I hope I will be pardoned if I mention another point. The Hon. the Chief Minister recently fell seriously ill. His recovery was almost a resurrection and he was given a new lease of life. At that time, a lot of importance was given to the treatment for kidney ailments and the Hon. the Minister for Health came out with a statement that everything possible would be done by the Government to save even poor people from kidney ailments. The other day one man walked into my house and pleaded on behalf of his sister who is mentally retarded. He said that his sister went freely into other

[Thirumathi Tara Cherian] [1985 ஏப்ரல் 10

(பிற்பகல் 5.00)

houses where there were men and she could not be controlled by him. He wanted me to help him in getting her admitted into some Care Home. There are a number of such mentally retared people. Out of about 42 lakh physically handicapped, 1½ lakh people are mentally retarded. Many of them are also living in villages. Since the ratio will be 2 : 1, the number of such people in villages and other rural areas will be about 60,000. When my husband was in Bombay, he wanted to help the poor people to get medical treatment for such ailments because a person in whom he was interested had such an ailment. We must make earnest efforts to help them. There are hundreds of things to be done and we should consider what can be done by us. Fortunately, many of us have not got that type of illness. The Social Welfare Department cannot deal with the education of the physically handicapped and it should be with the Education Department. The mentally retarded children should not be neglected by us.

So far as the Pensioners are concerned, the Central Government has formed a new Ministry to deal with the problems and grievances of the pensioners. I do not know anything more about it. There are thousands of people who will be relieved of their sufferings if they were given some pension.

Now, this is the most important thing to be considered. The Tamil Nadu Government have given a new thrust and direction to the Electronics industry in the State with plans for investment of Rs. 300 crores to achieve an annual production capacity of Rs. 1,000 crores by the end of the Seventh Five-Year Plan. I would like to say in this connection that the mentally retarded people are able to perform very good work in the field of Electronics. In KELTRON in Kerala, many women are employed. All said and done, women have not yet got equal rights with men. When the Government have got a blue print for such large investment in Electronics Industry, women should be given a chance for employment. Women will be found to be more suitable in Electronics field. I hope it will be possible to give them such employment when the Electronics industry is expanded. Thank you for the opportunity.



1985 ஏப்ரல் 10]

*** திரு. எல். ஜெயச்சந்திரன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, 1985-86 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையைக் குறித்து ஆசிரியர்-பட்டதாரிகள் முற்போக்கு அணியின் சார்பாகப் பேச வாய்ப்பு கிடைத்தமைக்காக முதற்கண் நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

நிதிநிலை அறிக்கையில் ஏழையெளிய மக்களுடைய முன்னேற்றத்திற் காகவும் மேம்பாட்டுக்காகவும் பல வழிகள் வகுத்துள்ளதற்காக நான் என்னுடைய பாராட்டுதல்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையை நல்ல முறையில் மிகக் கவனமாக அனைத்துப் பிரச்சினைகளையும் கவனித்து தயாரித்திருக்கிறார்கள். அதற்காக நான் மாண்புமிகு நிதியமைச்சர் அவர் களுக்கும் பாராட்டு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, இந்த நிதிநிலை அறிக்கையில் அகதிகள் மறுவாழ்வுக்காக பல் வேறு திட்டங்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். 10—3—1985 வரை உள்ளபடி ரூபாய் 66 இலட்சம் அகதிகளுக்காக நிதி அளித்துள்ளார்கள். அவர்களுக்காக பல்வேறு நல்ல திட்டங்களையும் இதில் சேர்த்திருக்கிறார்கள். குறிப்பாக அகதிகளின் மறுவாழ்வுத் திட்டத்தைச் செயல்படுத்த தனிச் செயலர் ஒருவரை, ஐ.ஏ.எஸ். அதிகாரியை நியமித்திருப்பதற்காக அரசை நான் பாராட்டுகிறேன். ஸ்ரீலங்காவிலிருந்து வந்துள்ள தமிழர்களைச் சரியாக கவனித்து அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காக பல்வேறு அதிகாரிகளையும் நியமித்திருப்பதற்காக தமிழக அரசுக்கு முதற்கண் என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஸ்ரீலங்கா தமிழ்ப் பெருமக்களின் பிரச்சினைகளைக் குறித்து நம் அனை வருடைய உள்ளங்களெல்லாம் உருகும்படியாக டாக்டர் சனார்த்தனம் அவர் கள் இங்கே அவையில் பேசினார்கள். அவர் சொன்ன கருத்துக்களின் அடிப் படையில் மாநில அரசும் மத்திய அரசும் இணைந்து ஸ்ரீலங்கா தமிழர்களின் மறுவாழ்வை உறுதி செய்வதோடு அவர்களின் பிரச்சினையை விரைவில் தீர்த்து வைக்க வேண்டுமென்று மீண்டுமொருமுறை தமிழக அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

ஸ்ரீலங்காவிலிருந்து வந்திருக்கும் அகதிகள் தங்களுடைய குடும்பத்தாரை யும் தங்களின் பொருள்களையும் உடமைகளையும் அங்கே அப்படியே விட்டு விட்டு இழந்து தமிழகத்திற்கு வந்திருப்பதைப் பற்றி நாம் பல்வேறு பத்திரிகை களிலும் வாரப் பத்திரிகைகளிலும் பார்த்து மிகுந்த வேதனையடைகிறோம்.

(பிற்பகல் 4-55)

to get educated. A handicapped child has the same amount of right as a normal child has. In this connection, I would like to state one thing. At a time when some of the present Members of the Legislature and even some Ministers were not born, I started a Federation and worked for the welfare of the dumb people. Therefore, I know what is happening in the matter of special schools which are run for the handicapped people. Many Government Orders issued with regard to the ordinary schools do not state whether those orders are applicable to the special schools. This causes a lot of difficulty because it takes several months to get clarifications from the Government. When the special schools were under the Education Department, the maintenance grants were received by those institutions soon after the Audit Report was ready. But now, the grant is not being received even after four or five years' delay. Especially, the schools functioning in the districts experience this difficulty in an acute manner. Recently, I visited a school for the blind at Tirupathur. There were hundreds of children there; but there was no teacher. If one of those children had been mine, I would have put up a fight and would have even done something more than that. Even the G.O. No. 292, issued as early as the beginning of 1982, regarding the regularisation of the services of menials has not been carried out in that school. Some new posts of teachers are sanctioned every now and then by the Government. But, when distributing those posts among various schools, the special schools are not taken into account. As a result, there is no proper teacher pupil ratio in the special schools. The teachers working in the special schools feel very strongly that they are not treated on a par with the teachers of the other schools and that they are not able to enjoy all the benefits which the other teachers enjoy. Therefore, they want to leave these schools run by the Social Welfare Department and go back to the Education Department. A Government Order issued on the 13th August 1984 states that the inspection of these special schools should be done by the Education Department. When the inspection is done by Education Department, why should the actual running of these schools be with the Social Welfare Department? Secondly, for presenting students for the Public Examination, these special schools have to approach the Education Department. When that is the case, what is the point in having these schools under the Social Welfare Department? When children are transferred from these special schools to the ordinary schools, the ordinary schools do not admit those children on the



strength of the Transfer Certificates issued by the special schools. Because of all these things, the handicapped children and their parents are put to a lot of difficulties. Here, I would like to say one thing. I do not know whether it is correct and I would stand corrected if it is wrong. The Midday Meals Scheme has not been extended to these handicapped children. For maintaining the quality of education also, the education of handicapped children should remain with the Education Department. I hope the hon. Member Thiru Thomas is listening to me and I trust that he would be able to do something about it. The Tamil Nadu Association of Teachers of the Deaf have represented to the Government the feelings of the teachers working in the special schools and have requested the Government to bring about . . . .

Mr. DEPUTY CHAIRMAN: I think the hon. Member is referring to some notes. If she makes those note-papers visible to me, I may know how many more pages she has to cover.

Thirumathi TARA CHERIAN: I am referring to the notes only to save time. I have prepared them in English only because I am better in Tamil only when I am angry.

The policy of the Central Government also is to integrate the capable handicapped children with the other school children. This is the policy followed the world over, both in developed and under-developed countries. Recently, the Central Government gave financial aid to the Tamil Nadu Government for the education of the handicapped children. This amount has not been utilised and has been surrendered. This was stated in a meeting at Delhi in which representatives of all States participated. The Central aid has been surrendered only because of administrative failure on the part of our Government.

Sir, I hope I will be pardoned if I mention another point. The Hon. the Chief Minister recently fell seriously ill. His recovery was almost a resurrection and he was given a new lease of life. At that time, a lot of importance was given to the treatment for kidney ailments and the Hon. the Minister for Health came out with a statement that everything possible would be done by the Government to save even poor people from kidney ailments. The other day one man walked into my house and pleaded on behalf of his sister who is mentally retarded. He said that his sister went freely into other

[திரு. எல். ஜெயச்சந்திரன்] [1985 ஏப்ரல் 10

(பிற்பகல் 5-05)

அவர்களுக்கு, நமது தமிழக அரசு ஏற்பாடு செய்துள்ள பல நல்ல திட்டங்கள் சரியாகப் போய்ச் சேருவதில்லை. இடையிலே உள்ள தரகர்களும், ஒப்பந்தக்காரர்களும் செய்யும் தவறை தமிழக அரசு உன்னிப்பாகக் கவனித்து அவர்களைத் தண்டிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒப்பந்தக்காரர்களும், தரகர்களும் மற்ற நேரங்களில் தவறுகளைச் செய்தாலும், ஓரளவிற்குப் பொறுத்துக்கொள்ளலாம். ஆனால் குடும்பங்களையும், பொருள்களையும் இழந்துவிட்டு அவர்கள் அவதிப்படும் நேரத்தில் அவர்களுக்குச் சாப்பாடு சரியாகப் போடாமல் செய்யும் அநியாயத்தையும், அக்கிரமத்தையும் தமிழக அரசு மிக உன்னிப்பாக கவனித்து தக்க நடவடிக்கை எடுத்து அறிவுரை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய அரசின் 20 அம்சத் திட்டத்தை தமிழக அரசு வெற்றிகரமாக நடத்தி பல்வேறுபட்ட மக்களுக்கு நல்வாழ்வு அளிக்க அரும்பாடுபட்டு வருவது கண்டு மகிழ்ச்சியடைகிறோம். அதற்காக நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். மாநிலத்தின் வளர்ச்சிக்கு மிக முக்கியமானது வேளாண்மை. இந்த ஆண்டு வேளாண்மை உற்பத்தியில் நல்ல முன்னேற்றம் அடைந்திருப்பது அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். நெல், கரும்பு, மற்ற உணவு தானியங்கள் ஆகியவற்றுக்கு நல்ல கொள்முதல் விலையை நிர்ணயம் செய்ய வேண்டும். நெல் விலையை நிர்ணயம் செய்ய மூவர் கொண்ட குழுவை நியமித்துச் செய்தால், நிச்சயமாக நமக்குப் பலன் தரும். அந்த மூவர் கொண்ட குழுவில் விவசாயிகளின் பிரதிநிதிகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து அவர்களும் அந்தக் குழுவில் இருக்க அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மின்வெட்டு காரணமாக விவசாயிகளுக்கு ஒரு நாளைக்கு ஆறு மணி நேரம்தான் மின் சப்ளை கிடைக்கிறது. குறைந்தது 12 மணி நேரமாவது மின் சப்ளை அளித்தால்தான், விவசாயிகள் நெல், கரும்பு போன்ற உணவு தானியங்களைப் பயிரிட வசதியாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி மின்சாரம் வழங்கும்போது, அதையும் இரவு நேரங்களில் கொடுத்தால், உதவிகரமாக இருக்கும். விவசாயத்தில் மிக முக்கியமாக இருக்கும் தென்னாற்காடு, வட ஆற்காடு மாவட்டங்களில் ஒரு விவசாயக் கல்லூரியை ஏற்படுத்த வேண்டும் என்று நீண்ட நாட்களாக அனைவரும் கோரி வருகிறோம். இந்த மன்றத்திலும் பேசி வருகிறோம். சென்னை தலை



1985 ஏப்ரல் 10] [திரு. எல். ஜெயச்சந்திரன்]

நகருக்கு அருகாமையில் தென்னாற்காடு மாவட்டம், வட ஆற்காடு மாவட்டம் அல்லது செங்கற்பட்டு மாவட்டம் ஆகிய இடங்களில் விவசாயக் கல்லூரியை அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவு குறுகிய காலக் கடனைச் செலுத்தாத ஏழையெளிய விவசாயிகள் மீது ஜப்தி நடவடிக்கை எடுக்கிறார்கள். கடனை வசூலிக்க வேண்டாமென்று நான் கூறவில்லை. ஜப்தி நடவடிக்கை எடுக்காமல் ஏழை விவசாயிகள் தவணை முறையில் பணம் செலுத்த அரசு வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாவட்டம் லத்வாடியில் கால்நடைக் கல்லூரியை அரசு ஏற்படுத்தியிருப்பதற்காக மகிழ்ச்சியடைகிறேன். அதேபோல எந்தெந்த மாவட்டங்களில் தேவைப்படுகிறதோ அங்கெல்லாம் கால்நடைக் கல்லூரியைத் துவங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பால் உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்துடன் செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டங்களில் உள்ள 125 துணை நிலையங்களில் உறைவிந்து தொழில்நுட்ப முறை மூலம் செயற்கை முறைக் கருத்தரிப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக 15 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதற்காக தமிழக அரசுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இதுபோன்று எந்தெந்த மாவட்டங்களில் தேவைப்படுகிறதோ அங்கெல்லாம் விரைவாக ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மாநிலத்தின் வளர்ச்சிக்கு மிக முக்கியமாக இருப்பது தொழில் வளர்ச்சி. தொழிலில் தமிழகம் மற்ற மாநிலங்களைப் பார்க்கும்போது பின் தங்கியிருக்கிறது. குறிப்பாக கனரகத் தொழிற்சாலைகளை மத்திய அரசின் உதவியுடன் நம்முடைய மாநிலத்தில் பல மாவட்டங்களில் ஏற்படுத்தினால், வேலையில்லாத் திண்டாட்டம் குறையவும், உற்பத்திப் பெருக்கம் ஏற்படவும் வழிவகை ஏற்படும். கடலூரில் 'சிப்காட்' மூலமாக ஒரு தொழிற்பேட்டை வரவிருக்கிறது. இதற்காக ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தை வாங்க இருக்கிறார்கள். சிப்காட் மூலமாக இரசாயனத் தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்கு வழிவகை செய்திருக்கிறார்கள். இது குறித்து நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள கடலூர் புதுவை மாநிலத்திற்கு அருகாமையில் இருக்கிறது. இப்போது எந்தத் தொழிலை ஆரம்பிப்பதாக இருந்தாலும், புதுவையில் பல சலுகைகள் கிடைக்கின்றன

[திரு. எல். ஜெயச்சந்திரன்] [1985 ஏப்ரல் 10

என்பதால், அங்கே போய் ஆரம்பித்து விடுகிறார்கள். இயந்திரங்கள் வாங்கு வதிலும், விற்பனை வரியிலும் சலுகைகளை புதுவையில் அளிப்பதால், புதுவை மாநிலத்திற்குச் செல்லுகிறார்கள். இதனால் தென்னாற்காடு மாவட்டம் மிகவும் பின்தங்கியிருக்கிறது. ஆகவே புதுவையில் உள்ள அளவிற்குச் சலுகையை முழு அளவு கொடுக்காவிட்டாலும், ஓரளவிற்குச் சமமாக சலுகை யைக் கொடுத்து உதவ வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள் கிறேன்.

(பிற்பகல் 5-10)

அடுத்ததாக, நம்முடைய தமிழக அரசு தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலம் நல்ல முறையிலே பல கடன் வசதிகளைச் செய்து வருகின்றது. அதற்காக நான் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள் கிறேன். அவர்கள் தொழில் தொடங்குவதற்கு, வேலையில்லாத பட்ட தாரிகளுக்கு முன் உரிமை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நான் பட்டதாரி பிரதிநிதி என்பதால், நான் சொல்லிக்கொள்கிறேன். நிறைய பட்டதாரிகளுக்கு டிக் நிறுவனம் மூலம் கடன் உதவி செய்கின்றார்கள். அப்படி கொடுக்கும்போது பலவிதமான கன்டிஷன்களைப் போட்டு, பலவிதமான ரூல்ஸ் எல்லாம் சொல்கின்றார்கள். அதுபோன்று நிலைமைகள் இருப்பதால், அவர்கள் தொழில் தொடங்கி செய்ய முடிவதில்லை. அவர்கள் கடன்கள் வாங்க முடியவில்லை. பட்டதாரிகள் இதைப்பற்றி என்னிடம் சொல்லியிருக் கின்றார்கள். அவர்களுக்கு, குறிப்பாக பட்டதாரிகளுக்கு வேலையும் கிடைக்கவில்லை. அவர்கள் வேலை கிடைக்காமல் தொழில் தொடங்கலாம் என்று வருகின்றார்கள். அவர்களுக்கு முன்உரிமை அளிக்க வேண்டும். அவர் களுக்குப் பல சலுகைகளை அளிக்க வேண்டும். தொழில் தொடங்க தமிழக அரசு வேண்டிய வசதிகளைச் செய்துதர வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன். அவர்களுக்கு இந்த உதவியைச் செய்தால், நிச்சயமாக வேலை யில்லாத் திண்டாட்டம் ஓரளவுக்குக் குறையும். அரசால் அனைவருக்கும் வேலை கொடுத்துவிட முடியாது. அதிலே பல கஷ்டங்கள் இருக்கின்றன. இதுபோன்று தொழில்கள் அவர்கள் தொடங்குவதனால், ஓரளவுக்கு வேலை யில்லாத் திண்டாட்டத்தைக் குறைப்பதற்கு அது ஏதுவாக இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1985 ஏப்ரல் 10] [திரு. எல். ஜெயச்சந்திரன்]

இந்த மாநிலத்தில் 10 கூட்டுறவு சர்க்கரை ஆலைகள்தான் இருக்கின்றன.
தென்னாற்காடு, வட ஆற்காடு ஆகிய மாவட்டங்கள் கரும்புச் சாகுபடியில்
சிறப்பாக இருக்கின்றன. இந்த இரண்டு மாவட்டங்களிலும் நிறைய கரும்பு
உற்பத்தி இருக்கின்றது. இந்த இரண்டு மாவட்டங்களிலும், வட ஆற்காடு,
தென் ஆற்காடு மாவட்டங்களிலும் வெகு விரைவில் சர்க்கரை ஆலைகளை
ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, முக்கியமாக, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. ரா. லெட்சுமி
காந்தன், திரு. அ. மயில்சாமி, திரு. பா. ரா. தாமஸ் இரண்டு நாட்களாக
விவாதித்துக் கொண்டிருந்த, கல்வி பிரச்சினைபற்றி வருகிறேன். கல்வியைப்
பொறுத்தவரையில், நம் அரசு பல மேம்பட்ட செயல்களைச் செய்திருக்கிறது.
1985-ல் 468 கோடி அளவுக்கு இந்த நிதிநிலையில் நிதி ஒதுக்கியிருக்கிறது
என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நேற்றுக்கூட
அவர்கள் பேசும்போது, எதைக் குறைக்கலாம், எதைச் சேர்க்கலாம் என்று
சொல்லுங்கள் என்று மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்
கள். நான் முக்கியமாகக் கூறிக்கொள்வது இதுதான். மாண்புமிகு மேலவை
உறுப்பினர்கள் திரு. மயில்சாமி, திரு. சங்கரலிங்கம் அவர்கள் பேசியபோது
சொன்னார்கள். "இந்த 468 கோடி ரூபாயில் நாங்கள் நிறைய கொடுங்கள்
என்று கேட்கவில்லை. ஆசிரியர் பணியில் 7, 8 ஆண்டுக்காலம் இருந்தவர்கள்
புதிதாக பணியில் யாராவது வந்து சேர்ந்தால், வெளியே போகின்ற நிலைமை
இருக்கின்றது. இவ்வளவு காலமாக பணியில் இருக்கும் ஆசிரியர்களை ஏன்
பணி வரன்முறை செய்யக்கூடாது என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்
டிருக்கிறேன். பட்டதாரிகள், பட்டதாரி ஆசிரியர்கள், முதுகலைப் பட்ட
தாரி ஆசிரியர்கள், உடற்கல்வி இயக்குநர்கள் இவர்களது பணியை வரன்
முறை செய்யவேண்டும். கடந்த 8 ஆம் தேதியிலிருந்து போராட்டம் செய்து
வருகிறார்கள். நம் சட்டமன்ற மேலவை உறுப்பினர் திரு. மயில்சாமி அவர்
களும், திரு. தாமஸ் அவர்களும் இரண்டு நாட்கள் கைது செய்யப்பட்டார்கள்.
அந்தப் போராட்டத்திற்கு முக்கிய காரணம் அவர்கள் கோரிய அந்த 12 அம்ச
கோரிக்கை மிகமிக முக்கியமானதும் நியாயமானதும் ஆகும். மாண்புமிகு
உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் கூறியதுபோல் ஏதாவது தவறு
இருந்தால், மாண்புமிகு நிதி அமைச்சர் அதற்கு என்ன சொன்னாலும் கேட்
கிறோம். அதைக் கேட்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். அந்தக்
கோரிக்கைகளில் 7, 8 ஆண்டுக் காலம் பணியில் இருந்த ஆசிரியர்களுக்குப் பணி
நிரந்தரம் செய்ய வழி வகுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மற்ற
ஆசிரியர்கள் வருவார்களானால், அவர்களை வெளியிலே அனுப்புகின்ற நிலை

இருக்கிறது. அதற்கு என்று தனியாக நிதிநிலையில் சேர்க்க வேண்டும் என்பதல்ல. இந்த நிதிநிலையிலே என்ன இருக்கிறதோ அதைத்தான் அவர்களுக்குக் கொடுக்கப் போகிறோம். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் உண்மையிலே நிரம்ப தாராள பணம் படைத்தவர்கள். அவர்கள் நிச்சயமாக நன்றாக கவனித்து நல்ல வாழ்வினை அவர்களுக்கு அளிக்கின்ற வகையில் பதில் உரையில் கூறுவார்கள் என்ற நம்பிக்கை இருக்கின்றது. அவர்கள் அவ்வாறு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்ததாக, கல்வித் துறையில் 850 ஆசிரியர்களை நியமிக்கப் போவதாகச் சொல்லியிருக்கின்றார்கள். நமக்குத் தேவை 40 ஆயிரம் ஆசிரியர்கள். அத்தனை இடங்கள் தேவையாக இருக்கின்றன. ஆனால் கொடுத்திருப்பதோ 850 ஆசிரியர் இடங்கள். மேலும் பல்லாயிரக்கணக்கான ஆசிரியர்களை நியமனம் செய்ய அவர்கள் வழிவகை செய்ய வேண்டும் என்று நான் கூறிக் கொள்கிறேன். ஏனென்று சொன்னால் கல்வித் தரத்தை உயர்த்தினால்தான் நம் நாட்டிலே பொறிஞர்களை, வல்லுநர்களை உருவாக்க முடியும். கல்வித் தரம் குறைந்தால், நாட்டினுடைய வளமும் நாட்டினுடைய செல்வமும் குறைந்து போகும் என்பதில் ஐயமில்லை. அந்தக் கல்வித் துறையினால் அரசுக்கு வருமானம் இல்லை என்றாலும், நிச்சயமாக கல்வித் துறைக்குச் செலவு செய்வதனால், மேலும் பல ஆசிரியர்களைச் சேர்ப்பதால், நிச்சயமாக நன்மைகள் வருங்காலத்திலே உண்டாகும் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 5.15)

நான்காம் ஊதியக் குழுவின் அறிக்கை 13—4—1985-க்குள் தர இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்கள். அது குறித்து மகிழ்ச்சியடைகிறோம். ஆசிரியர்களுக்கு அளித்து வந்த ஊக்க ஊதியத்தை அனைத்து ஆசிரியர்களுக்கும் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பிட்ட ஆசிரியர்களுக்குத்தான் ஊக்க ஊதியம் இப்போது தருகிறார்கள். இதை அனைத்துப் பிரிவு ஆசிரியர்களுக்கும் தர வேண்டும்; எந்தவிதப் பாகுபாடு பார்க்காமல் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மிக முக்கியமான பிரச்சினை தனியார் பள்ளி, கல்லூரி, நகராட்சி, மாநகராட்சி ஆசிரியர்களைப் பற்றியதாகும். அனைத்து ஆசிரியர்களுக்கும், அது தனியார் பள்ளி, கல்லூரியாக இருந்தாலும், நகராட்சி, மாநகராட்சிப் பள்ளி ஆசிரியர்களாக இருந்தாலும், நமது தமிழக அரசுதான் சம்பளம்



கொடுக்கிறது. எனவே அரசு ஆசிரியர்களுக்கு என்னென்ன சலுகைகளைக் கொடுக்கிறார்களோ அந்தச் சலுகைகளை அவர்களுக்கும் தர வேண்டும். அவர்களுக்கு லீவ் டிராவல் கன்செஷன், குடும்ப நலத் திட்டம் ஆகிய சலுகைகளை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கட்டிட வசதிக்காக 1 கோடி ரூபாய்தான் கொடுத்திருக்கிறார்கள். இப்போது இருக்கும் தேவையைப் பார்க்கும்போது, ஒரு கோடி ரூபாய் என்பது ரொம்ப சொற்பமான தொகையாக இருக்கிறது. அதையும் அதிகரித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆசிரியர்களுக்குள்ள தொழில் வரியை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நகராட்சி, பஞ்சாயத்துத் தேர்தல்கள் வரும் செப்டம்பர் மாதத்திற்குள் நடத்த இருப்பது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். இப்போது நகராட்சிகளின் செயல் முறை மிகவும் வேதனைக்குரியதாக இருக்கிறது. தென் ஆற்காடு மாவட்டத்தில் கடலூரில் எந்த ஒரு வசதியுமில்லை. கடந்த மாதம் நடந்த மாவட்ட ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு, அங்கே எந்தெந்தப் பணிகளைச் செய்ய வேண்டுமென்று ஆலோசனைகள் கூறினேன். அவர்கள் கூறும் காரணம் விசித்திரமாக இருக்கிறது. மின்சார வெட்டினால் தண்ணீர் கொடுப்பதற்குக் கஷ்டமாக இருக்கிறதென்று சொன்னார்கள். குடிநீரானது மிக மிக முக்கியமான, அத்தியாவசியமான ஒன்று. அந்த அடிப்படையில் அதைத் தட்டுப்பாடில்லாமல் கொடுக்க வேண்டுமென்று சொன்னேன். சாலைகள், மற்ற பிரச்சினைகள் எதைக் கேட்டாலும் நிதி இல்லை, நிதி இல்லை என்று சொல்கிறார்கள். எனவே மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் நகராட்சிகளுக்கும், பஞ்சாயத்துக்களுக்கும் நல்ல முறையில் நிதி வசதிகளைச் செய்து கொடுத்து, நல்ல பல திட்டங்களைச் செய்ய காரணமாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு கிராமப்புற மேம்பாட்டிற்காக நல்ல பல திட்டங்களைச் செயல்படுத்த இருப்பதற்காக மகிழ்ச்சியடைகிறேன். கிராமங்களிலே சுகாதார வசதிகளைச் செய்துதர வேண்டும். இப்போது கிராமங்களில் பல பேருந்துகள் சென்று கொண்டிருக்கின்றன. மேலும் பல பேருந்துகளைச் செலுத்தி, கிராம மக்களுக்கு வசதிகளைச் செய்து தரவேண்டும். கிராமப்புறங்களிலே படித்து பட்டம் பெற்ற இளைஞர்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள். அந்த வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு சிறு தொழில்கள் அங்கே செய்ய அரசு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எல். ஜெயச்சந்திரன்] [1985 ஏப்ரல் 10

அடுத்து, நமது தமிழக மின்சார வாரியமானது மிகவும் நஷ்டத்தில் செல்வதாக அறிக்கைகள் மூலமாகவும், செய்தித் தாள்கள் மூலமாகவும் தெரிந்து கொண்டோம். அந்த நஷ்டமானது எதனால் ஏற்படுகிறதென்பது புரியவில்லை. மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இங்கே அதிக மின் கட்டணத்தை வாங்கியும், ஏன் லாபம் வரவில்லை என்பது புரியவில்லை. தமிழக அரசு, நெய்வேலிக்கு 88 கோடி ரூபாய் பாக்கி தர வேண்டியிருக்கிறது. இப்போது நெய்வேலியில் நாம் மட்டும் மின்சாரத்தை எடுத்துக் கொள்கிறோம். ஆந்திரா, புதுவை, கர்நாடக மாநிலங்களுக்கு நெய்வேலியிலிருந்து மின்சாரம் அளிக்க ஒரு கிரிட் சர்வீஸ் ஏற்படுத்த இருக்கிறார்கள் என்று கேள்விப்படுகிறேன். அப்படி அவர்களுக்கு மின்சாரம் கொடுத்தால், நமக்கு அதனால் மின்சாரம் தருவது தடைப்படுமா என்பது தெரியவில்லை. அப்படி தடைப்படாமல் தமிழக மக்களுக்கு, நம்முடைய பெருந் தொழில்களுக்கு, சிறு தொழில்களுக்கு நெய்வேலி மின்சாரம் எப்போதும் கிடைக்க வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காவல் துறை, சட்டம் ஒழுங்கு குற்றத் தடுப்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும். இதற்காக பல கோடி ரூபாய்களை நிதி நிலை அறிக்கையில் ஒதுக்கியிருக்கிறார்கள். இப்போது நமது மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு மிக மிகக் கெட்டிருக்கிறது. தக்க நடவடிக்கை எடுக்கத் தவறுகிறார்கள்.

(பிற்பகல் 5-20)

அதற்கு முக்கிய காரணம் அதிகாரிகளும் காவலர்களும் சரியாகச் செயல்படவில்லை. மேலும் இத்துறையில் அவர்கள் போதுமான கவனம் செலுத்துவதாகவும் தெரியவில்லை. அண்மையில் செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள ஆவடியில் நடைபெற்ற சம்பவம் நம் அனைவருடைய நெஞ்சையும் தொட்டது. அங்குள்ள தியேட்டர் தொழிலாளர்களுடன் காவலர்களுக்கு ஏற்பட்ட தகராறையொட்டி ஸ்பெஷல் போலீசார் சட்டத்தை தங்கள் கையில் எடுத்து தியேட்டரையும் மற்றும் கடைகளையும் சூறையாடி ஏகப்பட்ட பொருள் சேதங்களையும் ஏற்படுத்தினார்கள். சட்டம் ஒழுங்கைக் காப்பாற்ற வேண்டிய காவலர்களே அதைக் கெடுத்தால் யாரிடம் அதைப் போய்ச் சொல்வது ? அவர்களை யார் கேட்பது? தமிழக அரசு ஆர்.டி.ஓ.-வைக் கொண்டு விசாரணை செய்ய ஆவன செய்திருக்கிறது. விசாரணையின் பின்பு சம்பந்தப்பட்டவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.





1985 ஏப்ரல் 10] [திரு. எல். ஜெயச்சந்திரன்]

அடுத்து, விஜிலன்ஸ் அன்ட் ஆண்ட்டி கரப்ஷன் என்று இருக்கிறது. அது
காவல் துறையில்தான் இருக்கிறது. நான் இதுகுறித்து தமிழக அரசை ஒன்று
கேட்டுக்கொள்கிறேன். தயவுசெய்து அந்தத் துறையை காவல் துறையிட
மிருந்து எடுத்து தனியாக ஆக்க வேண்டும். அதற்காக என்று மாநில அளவில்
ஒரு குழு அமைக்க வேண்டும். அதுபோல் நாம் வைத்தால் பல தவறுகள்
நடைபெறாமல் தவிர்க்க முடியும்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர் விரைவாக
முடிக்க வேண்டும்.

**திரு. எல். ஜெயச்சந்திரன் :** நாடு போற்றும் சத்துணவுத் திட்டம் மிக
அருமையான திட்டம். மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏழையெளிய மாணவ
மாணவிகளுக்காக 8 ஆம் வகுப்பு வரை படிக்கின்றவர்களுக்கு, தகுதியுள்ளவர்
களுக்கு, இலவசமாகப் பாடப் புத்தகமும், சீருடையும் வழங்குவதாக அறிவித்
திருக்கிறார்கள். அதற்காக என்னுடைய நன்றியையும் பாராட்டுதலையும்
தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து. இந்த ஆண்டு இன்டர்நேஷனல் யூத் இயர். அதாவது இளைஞர்
களுடைய வருஷம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இளைஞர்கள் வருஷத்தை
யொட்டி அவர்களுடைய வாழ்வு வளம் பெறத்தக்க அளவுக்கு பல விதங்களிலும்
அரசு உதவி செய்ய வேண்டும். 378 ஊராட்சி ஒன்றியங்களிலும் இளைஞர்
விளையாட்டு மையங்கள் செயல்பட இருப்பது குறித்து என்னுடைய
மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அது நன்றாகச் செயல்பட்டாக
வேண்டும். ஒவ்வொரு ஒன்றியத்திலுள்ள விளையாட்டு மையங்களிலும்
பயிற்சியாளர் அவசியம் நியமிக்கப்பட வேண்டும். இன்றைக்கு தமிழக அரசு
தமிழ்நாடு ஸ்போர்ட்ஸ் டெவலெப்மென்ட் கார்ப்பரேஷன் என்ற ஓர் அமைப்பை
ஏற்படுத்தியிருப்பது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். கடந்த இரண்டு
ஆண்டுக்கு முன்பு இதற்கான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருந்தும், இரண்டு,
மூன்று மாதங்களுக்கு முன்பிலிருந்துதான் இந்த அமைப்பு செயல்பட
ஆரம்பித்திருக்கிறது. இப்படிப்பட்ட நல்ல திட்டங்களை அறிவித்த பிறகு,
நடைமுறைப்படுத்துவதில் காலதாமதம் ஏற்படுவது தவிர்க்கப்பட வேண்டும்.
இதனால் தேவையில்லாமல் பொருள் செலவு ஏற்படுவதுடன், தாமதப்
படுத்துவதானது முன்னேற்றத்தை தடுக்கும் ஒன்றாகவும் இருக்கிறது.
இப்போது இரண்டு, மூன்று மாதங்களுக்கு முன்பிலிருந்து இந்த அமைப்பு
செயல்பட ஆரம்பித்திருப்பினும், குறிப்பாக விளையாட்டுத் துறையை நல்வித்

துறையிலிருந்து தனியாக எடுத்து தனி அமைப்பாக ஏற்படுத்த வேண்டும் விளையாட்டுத் துறை என்று சொல்லும்போது, அகில இந்திய ரீதியில் பார்க்கும்போது, நமது மாநிலம் மூன்றாவது இடத்தில் இருக்கிறது. முதலிடத்திலும் இரண்டாம் இடத்திலும் பஞ்சாபும் கேரளாவும் இருக்கின்றன. மத்திய அரசில் விளையாட்டுத் துறைக்கென்று ஓர் அமைச்சர் இருக்கிறார். கேபினட் அமைச்சர் இருக்கிறார், கேரளாவில் விளையாட்டுத் துறைக்கென்று தனியாக ஓர் அமைச்சர் இருக்கிறார். அதுபோல் நமது மாநிலத்திலும் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் துறை அமைச்சர் என்று தனியாக ஓர் அமைச்சரை அவசியம் நியமிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அரசுப் பணியாளர்கள் பணியிலிருக்கும்போது இறந்துவிட்டால், குடும்ப நலத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் 10 ஆயிரம் ரூபாயை 20 ஆயிரம் ரூபாயாக உயர்த்தியிருப்பதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அரசு ஊழியர்களுடைய நியாயமான கோரிக்கைகளைக் கனிவுடன் பரிசீலித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள அனைத்து ஆசிரியர்களுக்கும், அரசு ஊழியர்களுக்கும் சென்னை நகரில் வழங்கப்படுவது போல் நகர ஈட்டுப்படி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அனைத்துப் பிரிவினருக்கும் இது வழங்கப்பட வேண்டும். இப்போது இது சென்னையை ஒட்டியுள்ள சில பகுதிகளுக்கு மட்டும் வழங்கப்படுகிறது. இதை செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பிரிவினருக்கும் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வேலையில்லா பட்டதாரிகளுக்கு உதவித் தொகை வழங்கு வதைப் பொறுத்தவரை, ஐந்து வருடம் என்று இருக்கின்ற வரம்பை மூன்று ஆண்டுகளாகக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதை நீண்ட நாட்களாகக் கேட்டு வருகிறேன்.

அடுத்து, நெடுஞ்சாலைகள் நமது மாநிலத்திலுள்ள மிக முக்கியமான ஒன்று. அது இன்றையதினம் மிக மோசமான நிலையில் இருக்கிறது. குறிப்பாக சென்னையிலிருந்து மதுரைக்குச் செல்கின்ற நெடுஞ்சாலை மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. அதுபோல் தேவையான இடங்களில் எல்லாம் ரெயில்வே மேம்பாலங்கள் அவசியம் அமைக்கப்பட வேண்டும். முன்பு ஒரு கோஸ்டல் ரோடு வருவதாகச் சொல்லப்பட்டது. அதை விரைவாகச் செயல்படுத்த ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



(பிற்பகல் 5-25)

அடுத்ததாக, நான் சார்ந்துள்ள ஊர்க்காவல் படையைப்பற்றி ஆளுநர் உரையில்கூட குறிப்பிட்டிருந்தேன். ஊர்க்காவல் படையினர் கலந்து கொள்ளும் பேரேடு ஒன்றுக்கு ரூ. 15 தரப்படுகிறது. இதை மத்திய அரசும் மாநில அரசும் பாதி பாதி தரவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே மாநில அரசு அதை உடனடியாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் நேற்று ஒரு நல்ல கருத்தைச் சொன்னார்கள். அதற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். அரசு வாரியங்களில் சேர்மன்களாகவும், டைரக்டர்களாகவும் திறமையானவர்கள், நல்ல நிர்வாகம் செய்யக்கூடியவர்கள் அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களானாலும் அவர்களை நியமிக்க வேண்டுமென்று தெரிவித்தார்கள். அந்தக் கருத்தை நான் ஆதரிப்பதோடு, அவ்வாறு திறமையானவர்களை வாரியங்களில் சேர்மன் களாகவும், டைரக்டர்களாகவும் போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நிர்வாகம் மேலும் நன்றாக இருக்கும்.

அடுத்தபடியாக, இந்த நிதிநிலை அறிக்கையில் வாகனங்களுக்கு பஸ்களின் இருக்கை எண்ணிக்கையில் புதியதாக வரி போட்டிருக்கிறார்கள். இதைப்பற்றி நான் முன்பே கூறியிருப்பதைக் கவனத்தில் கொண்டிருந்தால், இப்போது வருவதாகச் சொல்லியிருக்கும் ரூ. 10 கோடிக்குப் பதிலாக, 15 முதல் 20 கோடி ரூபாய் வரை வருமானம் வந்திருக்கும். பெரிய பயணிகள் பஸ்களுக்குப் பதிலாக, ஸ்டாண்டர்டு 20 மேடார்டு போன்ற சிறிய வேன்களில் இப்போது இருக்கும் ஆறு சீட்டுகளுக்கு மூன்று மாதங்களுக்கு ரூ. 150 போடப் பட்டிருப்பதை மாற்றி ரூ. 1,000 என்று போட்டிருக்கலாம். ஏனென்றால், ஆறு சீட் வண்டியில் 12 முதல் 16 பேர்கள் வரை பயணிகள் ஏற்றப்பட்டு, வெளி மாநிலங்களுக்கு அந்த வண்டிகள் செல்கின்றன. ஆந்திரா, கர்நாடகம் போன்ற மாநிலங்களுக்கு அந்த வண்டிகள் செல்லும்போது, அங்குள்ள அதிகாரிகள் வண்டி ஒன்றுக்கு ரூ. 3,000, ரூ 4,000 என்று அபராதம் போட்டுவிடுகிறார்கள். அங்கே போய் அபராதம் கட்டுவதைவிட, நாமே மூன்று மாதத்திற்கு ஒன்றுக்கு ரூ. 1,000 வரை வரியாகக் கட்டிவிட்டால், இந்தப் பிரச்சினை வராது என்று அந்த வண்டிகளின் சொந்தக்காரர்கள் நினைக்கிறார்கள். இதனால் மூன்று மாதத்திற்கு ஒரு முறை ஒரு வண்டிக்கு ரூ. 850 வரை வரியாகக் கிடைக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஏறத்தாழ தமிழகத்தில் ஏழாயிரம் முதல் எட்டாயிரம் வண்டிகள் இவ்வாறு இயங்கிக் கொண்டிருக்

கேட்டேன். மனுப் போடுவதற்கு வயது 58 இருக்க வேண்டும் என்றார். நான், அதைத் தளர்த்துங்கள் என்று சொன்னேன். அதற்காக நான் ஒரு மனுவையும் கொடுத்திருக்கிறேன்.

1967-ல் அமரர் அண்ணா இந்த அரசின் ஆட்சிப்பொறுப்பை ஏற்றார். அதுமுதல் தமிழகத்தின் பிற்பட்டோர் நலனுக்காக மிகவும் கஷ்டப்பட்டு பல நன்மைகளைச் செய்யத் தொடங்கினார்கள். அதற்குப் பிறகு வந்த டாக்டர் கலைஞர் அவர்களும் தொடர்ந்து பிற்பட்டோர் நலனிலே அக்கறை செலுத்தினார்கள். பிறகு ஆட்சிப் பொறுப்பை ஏற்ற டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களும் பிற்பட்டோர் நலனுக்காக பல நல்ல காரியங்களைச் செய்து கொண்டு வருகிறார்கள். பிற்பட்டோர் நலனுக்காக ஒரு குழுவையும் அமைத்து அந்தக் குழு மூலமாக பல காரியங்களைச் செய்துவருகிறார்கள். ஆனால் அந்தக் குழு அதிகாரிகளை மட்டும் உள்ளடக்கிய குழுவாக இருக்கிறது. என்னுடைய வேண்டுகோள் எல்லாம் பிற்பட்டோர் நலனுக்கான குழுவில் சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கின்ற எங்களைப் போன்றவர்களையும் பிரதிநிதிகளாகச் சேர்க்க வேண்டும். அப்போதுதான் பொருளாதாரத்தில் மேம்பாடு அடைய முடியாத சமுதாயத்தினராக நாங்களும் நல்ல கருத்துக்களை அந்தக் குழுவில் எடுத்து வைக்க முடியும் என்று தெரிவித்துக்

(மாற்றுத் தலைவர் திருமதி வி. ஜெயலட்சுமி தலைமை)

(பிற்பகல் 5-35)

கொள்கிறேன். கடந்த கால அரசு ஒரு குழுவை அமைத்து, அந்தக் குழுவிலே ஓர் அங்கத்தினரையும் நியமித்து அதிலே உள்ள கருத்துக்களைக் கொடுத்ததன் விளைவாகத்தான் பிற்பட்டோர் நலத் துறை எவ்வளவு தொல்லைகளுக் குட்பட்டிருக்கிறது, ஏன் மேம்பாடு அடையாமல் இருக்கிறது என்பதை அறிய முடிகிறது. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். அந்தப் பிற்பட்ட நலக் குழு அளித்த கருத்துக்களை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களைக் கலந்து பேசி செயல்படுத்த வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்திலே உள்ள ஆலயங்களிலே—அது பழனி திருக்கோயிலாக இருந்தாலும் சரி. மேல்மலையனூர் அங்காள பரமேஸ்வரி ஆலயமாக இருந்தாலும் சரி, திருச்செந்தூர் கோவிலாக இருந்தாலும் சரி—அங்கே மொட்டை அடித்துப் பணி புரிகிற தொழிலாளர்கள் மிகவும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஒரு காலத்தில் மொட்டை எடுக்க வரும் பக்தர்களின் முடி அதை எடுப்பவர்களுக்கே சொந்தமாக இருந்து



வந்தது. ஆனால் இப்போது கான்ட்ராக்ட் மூலம் எடுத்துவிடுகிறார்கள். மொட்டை போட வரும் பக்தர்கள் அளிக்கும் பணத்தில் ஒரு ரூபாய் கோயில் நிர்வாகத்திற்கும், ஒரு ரூபாய் மொட்டை அடிக்கும் தொழிலாளிக்கும் கொடுக்கப்பட்டு வருகிறது. நான் பழனிக்குச் சென்றபோது—அங்கு 590 தொழிலாளர்கள் மொட்டை அடிக்கிறார்கள்—திராவிட முன்னேற்றக் கழகத் தைச் சேர்ந்தவர்களும், கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களும், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களும், ஒருமித்த கருத்தோடு என்னைக் கண்டு மனுவைத் கொடுத்தார்கள். ஒரு மொட்டை அடித்தால், அதன் மூலமாக வருவாய் ஒரு ரூபாய் என்னால், மாலை 7 மணி வரை அங்கே இருக்க வேண்டும். 409-வது தொழிலாளியாக மாலை 7 மணிக்கு வருகிறவனுக்கும் வருமானம் இரண்டு ரூபாய் கிடைக்கிறது. "மொட்டை அடிக்கும் காலத்தை நிர்ணயுங்கள். தினமும் நாங்கள் 8 மணிக்கு வருகிறோம். ஆறு மணி வரை வேலை செய்கிறோம். ஆறு மணிக்கு மேல் பக்தர்கள் வருகிறார்கள் என்று சொன்னால், அதற்கு மேல் நாங்கள் வேலை செய்கிறோம். அதற்குத் தகுந்தாற்போல் கூலியைக் கொடுங்கள். இப்படி விகிதாச்சார அடிப்படையில் கொடுப்பதைவிட எங்களுக்கு நிரந்தரமான வருவாயாக தினசரி ரூ. 15 கிடைத்தால், எங்களுக்கு அது குடும்பத்தை நடத்துவதற்கு ஒரு பாங்காக இருக்கும்" என்று அவர்கள் தெரிவித்தார்கள். அதுபற்றி மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களிடம் நான் ஏற்கெனவே ஒரு மனுவைக் கொடுத்திருக்கிறேன். அதனையும் பரிசீலித்து அவர்களுக்கு வாழ்வு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1984 ஆம் ஆண்டு சுதந்திர தின விழாவில் கொடி ஏற்றி வைத்து, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் கைவினைஞர்களுக்கு ஆயுள் காப்பீட்டு உறுதித் திட்டத்தைத் தெரிவித்தார்கள். தினசரி மருத்துவ சமுதாயத்தில் உள்ளவர்கள் வாழ வழியில்லாமல், குடிப் பழக்கத்தால் கெட்டுப் போய் விடுகிறார்கள். அவர்கள் வளர முடியாமல், இன்று பல இடங்களிலே பேசிப் பேசி வருந்துகிற நேரத்தில், இந்தத் திட்டத்தை அவர்கள் மனதார ஏற்றுக்கொள்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில், எனக்கு வந்த தகவல் எல்லாம், சலவைத் தொழிலாளர்கள், கைவினைஞர்கள், கை வண்டி இழுப்பவர்கள், முடி திருத்துபவர்கள் 70 ஆயிரம் பேர் ஆயுள் காப்பீட்டு உறுதித் திட்டத்தில் சேர்ந்திருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அந்த நல்ல திட்டம் கடந்த 31—3—1985 அன்று முடிவடைந்தது என்று தெரிவிக்கப் பட்டிருக்கிறது. அதனை மே திங்கள் வரையிலே நீட்டிக்க வேண்டுமென்று

[திரு. மு. மாசிலாமணி] [1985 ஏப்ரல் 10

ஏற்படுகிறது. இப்படி அரசு ஏழை எளிய மக்களுக்காகச் செயல்படுத்த விரும்புகிற திட்டங்கள்கூட முறையாகச் செயல்படாததன் காரணமாக அதன் பயன் மக்களுக்குப் போய்ச் சேருவதில்லை. காரணம் அதற்கான சரியான பிரச்சாரம் இல்லை. தெளிவான விளக்கங்கள் ஏழை மக்களுக்கு இல்லை. ஆகவே நம்போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், பேரவை உறுப்பினர்கள் அவரவர்கள் இருக்கிற பகுதிகளில் கூட்டங்களானாலும் சரி, மாநாடு களானாலும் சரி, ஆண்டுக் கூட்டங்களானாலும் சரி இவைகளையெல்லாம் தெளிவாக எடுத்துச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த முயற்சியில் நான் வெற்றி பெற்றிருக்கிறேன். பலருக்கு நான் போதகராக இருந்து சொல்லி பல சமுதாய மக்களை நான் நல்வழிப்படுத்தி இருக்கிறேன் என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1972 ஆம் ஆண்டு இந்த அவையில் மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள், கல்வியமைச்சராக இருந்தார்கள். அப்போது நான் ஒரு வேண்டுகோள் விடுத்தேன்.

(பிற்பகல் 5-45)

பள்ளியிலே படித்து வெளியே வருகிறபோது, எஸ்.எஸ்.எல்.சி. மார்க்— ஆங்கிலம் 35, தமிழ் 35, மற்ற தலைப்புகளில் 30 என்று வைத்து எஸ்.எஸ்.எல்.சி. முத்திரை கொடுத்து வெளியே அனுப்புகிறார்கள். ஆனால் அந்த மாணவர் சர்வீஸ் கமிஷன் தேர்வு எழுதலாம் என்றால், ஆங்கிலத்தில் 40, தமிழில் 40, மற்ற தலைப்புகளில் 30 மதிப்பெண் இருந்தால்தான், தேர்வு எழுத நுழைய முடியும் என்று சொல்கிறார்கள். எஸ்.எஸ்.எல்.சி. தகுதியைப் பெறுகிறான் என்றாலும், அங்கே மார்க்கைப் பார்த்து தள்ளிவிடுகிறார்கள். இது சம்பந்தமாக அப்போதிருந்த கலைஞர் அவர்களும், நாவலர் அவர்களும் யோசித்து பின்னாலே 1974 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31 ஆம் நாள் ஒரு ஆணையைப் பிறப்பித்தார்கள். எஸ்.எஸ்.எல்.சி. என்ற தகுதி இருந்தாலே, சர்வீஸ் கமிஷன் தேர்வு எழுதலாம் என்று உத்தரவு வந்திருக்கிறது. ஆகவே இந்த அரசை பணிவோடு ஒன்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். முடி திருத்தும் தொழிலாளியின் மகன், சலவைத் தொழிலாளியின் மகன், மீனவனின் மகன் ஆகியவர்கள் எல்லாம் உழைக்கத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். சம்பாத்தியத்தைப் பெற வேண்டுமென்ற நிலையில் இருக்கிறார்களே தவிர, அரசு ஆணையின்படி அரசு சட்டதிட்டங்களைத் தெரிந்துகொள்ள [illegible] யில்லாமல் இருக்கிறார்கள். ஆகவே அவர்களுடைய மார்க்கைப் [illegible] விதிவிலக்கு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். [illegible]



1985 ஏப்ரல் 10] [திரு. மு. மாசிலாமணி]

பேசும்போது, "முடி
பேரறிஞர் அண்ணா அவர்கள் சூலை மாநாட்டில் பேசும்போது, "முடி
திருத்துபவர்கள், சலவைத் தொழிலாளர்களின் முதுகிலேதான் நாம் நடந்து
கொண்டிருக்கிறோம். அந்தச் சமுதாயத்தில்தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்
இறோம். எனவே அவர்களை மறந்துவிடக் கூடாது" என்று சொன்னார்கள்.
பேரறிஞர் அண்ணா அவர்கள் காட்டிய வழியில், தந்தை பெரியார் அவர்கள்
சொன்னதை, டாக்டர் அம்பேத்கார் சொன்னதை இன்றையதினம் புரட்சித்
தலைவர் அவர்கள் தன்னுடைய மனதிலே நிறுத்தி, இந்தச் சமுதாயத்தினர்
மனு கொடுக்காமலே பல திட்டங்களை இங்கே கொண்டு வந்து நிறைவேற்றி
யிருக்கிறார்கள். இது நாடு அறிந்த உண்மை. எனவே பணிவன்போடு கேட்டுக்
கொள்கிறேன். இந்த அவையிலே மாண்புமிகு உறுப்பினராக இருந்தார்
திரு. ஐயாசாமி அவர்கள். அவர் ஆறு ஆண்டுக் காலம் உறுப்பினராக இருந்தார்.
அவருடைய குடும்பம் இன்றையதினம் பரிதாப நிலையில் இருக்கிறது.
அவருடைய துணைவியார் ஒரு கவள சோற்றுக்கு அவதிப்படுகிறார்.
அவருக்குப் பிள்ளை இல்லை, பெண் இல்லை. சென்ற ஆண்டு கூட கேட்டுக்
கொண்டேன். அவருடைய மனைவிக்கு மாதந்தோறும் நிதி வரும்படியாகச்
செய்ய வேண்டும் என்று இந்த அவையின் மூலமாக மாண்புமிகு நிதியமைச்சர்
அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே தியாகி விசுவநாதன் அவர்களுக்கு நான் கேட்டபோது,
முந்திய கலைஞர் அரசு 75 ரூபாயை அளித்தார்கள். ஆனால் அதற்கடுத்தாற்
போல் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு வந்தவுடனே, புரட்சித்
தலைவரிடம் கேட்காமல், அந்தக் குடும்பத்தார் மனு கொடுக்காமலே, புரட்சித்
தலைவர் அவர்கள் கோப்புகளைப் பார்த்தபோது, இந்த 75 ரூபாய் போதுமா
என்று கேட்டு விசுவநாதனின் ஐந்து பிள்ளைகளுக்கு தலா 150 ரூபாய் வீதம்
அளித்திருக்கிறார்கள். அதை கடந்த நிதிநிலை அறிக்கை விவாதத்தின்போது
கூட நினைவுபடுத்தினேன். விலைவாசி ஏறியுள்ள இந்தக் காலத்தில்
தலா 300 ரூபாய் அளவிற்கு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆகவே இன்றையதினம் 29 இலட்சம் மக்கள் தொகை கொண்ட மருத்துவச்
சமுதாயத்தின் சார்பாக இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்கிறேன். இந்த
நிதிநிலை அறிக்கையிலே 'ஒன்றும் இல்லை', 'ஒன்றும் இல்லை' என்று
சொன்னார்கள். அதற்கு என்ன பொருள் என்றால் 'ஒன்றும் இல்லை, ஒன்றும்
இல்லை' என்று சொன்னால் இரண்டு இருக்கிறது, இரண்டு இருக்கிறது என்று
பொருள். ஆகவே நாட்டில் உள்ள நல்லவர்கள் போற்றுகிறார்கள். இந்த அவை
யிலானாலும் சரி, வேறு அவையிலானாலும் சரி, நிதிநிலை அறிக்கையை.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், புரட்சித் தலைவர் கொண்டு வந்த நல்ல திட்டங்களை எதிர்த்தாலும், 'போற்றுபவர் போற்றட்டும், புழுதி வாரி தூற்றுபவர் தூற்றட்டும், ஏற்றதொரு கருத்தை எனது உள்ளம் ஏற்கும் என்றால் எவர் வரினும் நில்லேன் அஞ்சேன்' என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் சொன்னதை வலியுறுத்திக் கூறுகிறேன். நாட்டை நல்ல முறையில் நடத்திச் செல்வதைப் பார்க்கும்போது நமக்கு மகிழ்ச்சி யளிக்கிறது; பிற்பட்ட மக்கள் ஆனந்தக் கண்ணீர் வடிக்கிறார்கள் என்பதை நினைவுபடுத்தி இந்த அளவிற்கு பேச வாய்ப்பு நல்கியதற்கு மேலவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து என்னுடைய உரைக்கு முற்றுப்புள்ளி வைக்கிறேன். வணக்கம்.

* திரு. சி. இராமலிங்கம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 1985-86 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையைப் படித்துப் பார்த்ததில், நன்றி சொல்லுகிற வகையிலேதான் என்னுடைய பேச்சு இருக்கும். காரணம்

(பிற்பகல் 5-50)

நெசவாளர்களுக்கு வீடு கட்டுகின்ற திட்டத்திலே ஒரு ஐந்து ஆயிரம் வீடுகள் கட்டுவது குறித்து அரசு இந்த நிதிநிலை அறிக்கையிலே அறிவித்திருக் கின்றது. அதுபோல, நூல்விலை ஏறும், நூல் விலை இறங்கும். நூல் கிடைக்காது போய்விடும். இந்த நேரத்திலே நூலை வாங்கி சேமித்து வைத்து, கிடங்கு வைத்து, நெசவாளர்களுக்கு வழங்குவதற்கு புரட்சித் தலைவர் அரசு ரூ. 50 லட்சம் வரை ஒதுக்கியிருக்கின்றது. மத்திய அரசு ரூ. 200 கோடி ஒதுக்கி நூல் வாங்கி வைத்து நெசவாளிகளுக்கு வழங்குகின்றார்கள். கேரளத்திலே இரண்டு வைத்திருக்கின்றார்கள். உத்தரப் பிரதேசத்திலே இரண்டு வைத்திருக்கின்றார்கள். அதோடு இதையும் இணைத்து, மதுரையிலே ஒன்று, சேலத்திலே ஒன்று, சென்னையிலே ஒன்று வைக்கவேண்டும் என்று இங்கே மாண்புமிகு கைத்தறி அமைச்சர் திரு. சங்க்மா அவர்கள் இங்கு வந்திருந்தபோது கேட்டோம். அவர்கள் "தமிழ்நாட்டிலேதானா அதிக தறிகள் இருக்கின்றன? உத்தரப் பிரதேசத்தில் இல்லையா, கேரளாவிலே இல்லையா? வேண்டுமானால் கேளுங்கள்" என்று சொல்லியிருக்கின்றார்கள். அதேமாதிரி நமது மாண்புமிகு கைத்தறி அமைச்சர் அவர்களும் கேட்டிருக் கின்றார்கள். மாநில அரசு ரூ. 50 கோடி ஒதுக்கி, நெசவாளர்களுக்கு ஒரு வங்கியை வைத்திருக்கிறது. அதற்கு என் நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்





அதுபோலவே, பீடி சுற்றுகின்ற தொழிலாளர்கள், கைத்தறி நெசவாளர்கள் இவர்களுக்கெல்லாம் டி.பி. நோய் வருகிறது. அவர்கள் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரையில் வேலை செய்கிறார்கள். அவர்கள் கைகால்களை அசைத்து வேலைசெய்வதால், அவர்கள் எலும்பெல்லாம் ஆடிவிடுகின்றது. அதனால் டி.பி. நோய் வந்துவிடுகின்றது. என்னதான் சாப்பாடு சாப்பிட்டாலும் நோய் போவதில்லை. இடையிலே அவன் கொஞ்சம் பீடி பிடிப்பான். அவன் டி.பி.-யினால் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கின்றான். அதுபோலவே பீடி சுற்றும் தொழிலாளர்கள் காலையிலிருந்து மாலை வரைக்கும் பீடி சுற்றும் வேலை செய்வதால், அவர்களுக்கும் அந்த நோய் வருகிறது. ஆகவேதான் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள், 1977-லே ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடனே அதைப்பற்றி இங்கே எடுத்துச் சொன்னார்கள். நானும் எடுத்துச் சொன்னேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் "அப்படி டி.பி. நோய் வருவது உண்மைதான். ஆகவே நடமாடும் மருத்துவமனை அமைத்துத்தர வேண்டும்" என்று சொன்னார்கள். இந்த பட்ஜெட்டிலே ஐந்து இயங்கும் கைத்தறி தொழிலாளர்களுக்கு நடமாடும் மருத்துவ வண்டிகளை அமைப்பதற்கு வழிவகுத்திருக்கின்றார்கள். அதற்கு என் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள், "ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்பேன்" என்று சொன்னார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசு அண்ணா அவர்கள் அன்று கண்ட கனவை நினைவாக்கும் வகையில் இந்த நிதிநிலை அறிக்கையிலே அதைச் சேர்த்து வைத்திருக்கின்றார்கள். நமது அருமை நண்பர்கள் பட்டதாரி ஆசிரியர்கள்பற்றிப் பேசினார்கள். பட்டதாரிகள் வேலை இல்லாமல் அலைகின்றார்கள் என்று சொன்னால், அவர்கள் தொழில் தொடங்க, அவர்களுக்கு ரூ. 25 ஆயிரம் கடன் கொடுக்க வேண்டும் என்று கேட்டார்கள். அவர்கள் எல்லாம் பட்டணத்திலே பிறந்தவர்கள். ஆனால் அங்கே கிராமத்திலே 5-வது, 7-வது, 8-வது படித்தவன் வேலையில்லாமல், களை பறிக்கக் கூப்பிட மாட்டானா, சுவர் வைக்க கூப்பிட மாட்டானா என்று இடுப்பிலே ஒரு முழத்துண்டு கட்டிக் கொண்டு அலைகின்றானே, கோவணத்தைக் கட்டிக்கொண்டு அலைகின்றானே அவனுக்கு என்ன வழி என்று கேளுங்கள் என்று பலமுறை சொல்லி கேட்டிருப்பேன். அவர்களுக்கு ஏதோ வோட்டு வாங்குகின்ற போராட்டம், வோட்டு வாங்குகின்ற அந்தப் போராட்டத்தில் . . .

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** வோட்டு வாங்கத்தான் இதையெல்லாம் செய்கின்றோம்.

**திரு. சி. இராமலிங்கம் :** இன்றைக்கு மூன்று நாட்கள் போராட்டம், ஜெயிலுக்கு போகிறோம் என்று சொன்னால் என்ன அர்த்தம்? வோட்டு வாங்கத்தான் அந்தப் போராட்டம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அந்தப் பிரச்சினை வந்துவிட்டதா? அதிலேபோய் கை வைக்க வேண்டாம். உறுப்பினர் அவர்கள் பேசலாம்.

**திரு. சி. இராமலிங்கம்:** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கதர் கிராமத் தொழிலுக்கு ஒதுக்கியிருக்கின்றார்கள்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** போராட்டம் செய்வது வோட்டு வாங்குவதற்குத்தான் என்று உறுப்பினர் அவர்கள் சொல்கின்றார்கள். அதை ஆசிரியர்கள் பக்கத்திலே இருக்கின்ற நாங்கள் ஏற்றுக்கொள்வதற்கில்லை. அதை நான் மறுக்கிறேன். அப்படிப்பட்ட பேச்சுக்கள் பேசுவது என்றால், எங்களுக்கும் வேறு வழியில்லை. அவர்கள் பேசியதுகூட வோட்டு வாங்கத்தான் என்று சொல்லவேண்டிய அவசியம் எங்களுக்கும் வந்துவிடும்.

**திரு. சி. இராமலிங்கம் :** அதைத்தான் நான் ஏற்றுக்கொள்கின்றேனே, வோட்டு வாங்கத்தான் செய்கிறோம் என்று.

இன்றைக்கு கதர் கிராமத் தொழிலுக்கு 107 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆதிதிராவிடர்கள் நலனுக்கு ரூ. 125 கோடி ஒதுக்கியிருக்கின்றார்கள். கயிறு உற்பத்திக்கு கிட்டத்தட்ட 18 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கின்றார்கள். இப்படி ஒதுக்கிய இந்த நிதி யாருக்குப் போய்ச் சேருகின்றது என்று பார்க்கின்றபோது, நான் சொன்னேன் அல்லவா, அந்த 4 முழத் துண்டு கட்டிக்கொண்டு அலைகின்றானே அவனுக்கு, கிராமத் தொழிலாளர்களுக்கு பயன்படுவதற்குப் போகிறது. சீப்பு செய்ய, கயிறு திரிக்க, இப்படிப்பட்ட பல கிராமத் தொழில்கள் செய்ய போய்ச் சேர்கிறது. ஆதிதிராவிடர்கள் நலனுக்கு ரூ. 125 கோடி. இதற்கு முன்னாலே எந்த அரசு செய்திருக்கின்றது? இதைப் பாராட்ட வேண்டாமா? ஏழையெளிய மக்கள்தான் வேலையில்லாமல் இருக்கின்றார்களே தவிர, படித்த பட்டதாரி மக்கள் எங்கே அலைகின்றார்கள்?



(பிற்பகல் 5-55.)

பி.ஏ. படிக்கிறான் என்றால், வசதி இருந்தால்தான் படிக்க முடியும். ஐந்தாம் வகுப்புவரை படிக்கிறான் என்றால் கொஞ்சம் வசதி. வேலை இல்லாதவர்களைக் கணக்கு எடுத்துப் பார்த்தால், 4, 5 ஏக்கர் வைத்திருக்கிறவர்கள், வியாபாரம் செய்கிறவர்கள் ஆகியவர்கள் வீட்டுப் பிள்ளைகள்தான் படித்துவிட்டு, வேலையில்லாமல் இருக்கிறார்கள். ஏழைப் பிள்ளைகள் படிக்கக்கூட வசதியில்லாமல் இருக்கிறார்களே, யார் அவர்களைப் பற்றிச் சிந்திக்கிறார்கள்? புரட்சித் தலைவர் அவர்கள்தான் அதற்காக இவ்வளவு திட்டங்களையும் நிறைவேற்றி இருக்கிறார்கள். இதை திராவிட முன்னேற்றக் கழகம் வரவேற்கிறது. அதாவது தனிப்பட்ட முறையில் வரவேற்கிறார்கள். காரணம் அண்ணா வழியில் வந்தவர்கள். வேண்டுமானால் மாண்புமிகு திரு. சாதிக் பாட்சா அவர்கள் பேசலாம். திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் . . . . திரு. மீனாட்சி சுந்தரம் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்குப் புதிது. அவர்கள் எது வேண்டுமானாலும் பேசலாம்

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** நேரம் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறுக்கிடக்கூடிய வகையிலேயே பேசுகிறார்கள். இங்கே கல்யாணசுந்தரம் என்று யாருமில்லை. இருக்கிற மீனாட்சிசுந்தரம் புதிது என்று சொல்லுகிறார்கள். வேண்டுமானால் மற்றவர்களைக் கேட்கலாம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** நீங்கள் மீனாட்சிசுந்தரம் இல்லை என்று சொல்லிவிடுவீர்களோ என்று பார்த்தேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: நான் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவனா அல்லது ஆசிரியர் பிரதிநிதியா என்று தெரியவில்லை என்று தலைவரவர்களே சொன்னார்கள் . . . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அந்த அளவுக்கு மாண்புமிகு உறுப்பினரவர்கள் இரண்டுமாய் இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள் ஏன் ஆசிரியர்களிடம் போகிறார்?

**திரு. சி. இராமலிங்கம்:** தலைவரவர்களே, அவர்களிடம் போனால்தான் நாடு சீர்படும். பிள்ளைகளைக் காப்பாற்ற வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. மாசிலாமணி அவர்கள் கூறினார்கள். பள்ளிக்கூடம் எப்படி நடக்கிறதென்று கிராமங்களிலேயிருந்து வந்துள்ள எங்களுக்குத் தெரியும்.

நிலைமை இல்லை. அவர்கள் உடனடியாக அனுமதி வழங்குகிறார்கள். தமிழ கத்தைப் பொறுத்தவரையிலும் கூட, இந்த 7, 8 துறைகளும் சென்னையிலே எங்காவது ஓரிடத்தில் இருந்துகொண்டு தொழில் தொடங்க முன் வந்து மனு செய்பவர்களுக்கு ஒரு காலத்தை நிர்ணயம் செய்து, சம்பந்தப்பட்ட எல்லாத் துறைகளும் பார்த்து ஒரு மாதத்திற்குள் அனுமதி அளிக்கின்ற நிலை வர வேண்டும். ஒரு காலத்தில் குதிரை வண்டி, மாட்டு வண்டி இன்னும் நடந்து போய் இன்ஸ்பெக்ஷன் பண்ண வேண்டிய நிலை இருந்தது. இன்று நிலைமை அப்படி இல்லை. ஆர்.ஐ., சுகாதார அதிகாரி இவர்கள் எல்லாம் உட்கார்ந்த இடத்திலிருந்தே டெலிபோன் மூலமோ அல்லது விரைவாக சம்பந்தப்பட்ட இடத்திற்குச் சென்று பார்த்தோ உடனடியாக அனுமதி வழங்கும் அளவுக்கு முன்னேறி விட்டோம். ஆனாலும் இன்றையதினம் தொழில் ஆரம்பிக்க முனைபவர்கள் பெரிதும் சிரமப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. அதிகாரி களிடத்தில் நடந்து போய் போய் சலிப்பு ஏற்படுவதாகச் சொல்கிறார்கள். இதுகுறித்து நான் சென்ற முறையும் பேசியிருக்கிறேன். இன்னும் நிலைமை சீர்திருந்தவில்லை. சென்ற முறை ஓர் அமைச்சர் கூட இதற்கு உத்தரவாதம் கொடுத்தார். ஆனாலும் நிலைமை இன்னும் மாறவில்லை. நான் மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். தயவு செய்து இனிமேலாவது லைசன்ஸ் கேட்பவர்களுக்கெல்லாம் ஒரு மாதத்திற்குள் அதை வழங்குகின்ற நிலை வர வேண்டும். அதற்குரிய ஏற்பாட்டைச் செய்து தொழில் தொடங்க முன்வருபவர்களுக்கு ஊக்கம் அளிக்க வேண்டும்.

அடுத்து, தமிழ் நாடு பூராவும் தியேட்டர்கள் இருக்கின்றன. தியேட்டர் கட்ட வேண்டுமென்றால், 1 லட்சம் ரூபாயிலிருந்து 1 கோடி ரூபாய் வரை செல வாகிறது. தியேட்டர் நடத்துகின்ற எனது சில உறவினர்கள் சேலம் மற்றும் கோயம்புத்தூரில் இருக்கிறார்கள். அது எதையோ தொழிற்சாலை என்று சொல்கிறார்கள், தயவுசெய்து தியேட்டரையும் தொழிற்சாலை என்கிற அமைப் புக்குள் கொண்டு வாருங்கள் என்று அவர்கள் எல்லாம் சொல்கிறார்கள். அப்படிக் கொண்டு வந்தால், தியேட்டர் கட்டுபவர்கள் வங்கியிலிருந்து கடன் பெற வசதி ஏற்படும். இப்போது எவ்வளவுதான் கடன் வாங்கி தியேட்டர் கட்டினாலும், எல்லாம் 'பிளாக் மணி' என்று சொல்லும் நிலை இருக்கிறது. மேலும் தியேட்டர்களை தொழிற்சாலையாகப் பாவிப்பதால் அங்கு பணி யாற்றும் தொழிலாளர்களுக்கும் நன்மை ஏற்படும். காரணம் அது தொழிற் சாலை ஆக்ட் என்பதன் கீழ் வந்துவிடும். இப்படிப்பட்ட எண்ணத்தை அவர்கள் சொன்னபோது, நானே இதுகுறித்துப் பேசலாமா என்று சந்தேகப்





பட்டேன். கேட்டதற்கு 'பேசலாம்' என்று சொன்னார்கள். அதனால்தான் இதுகுறித்துப் பேசுகிறேன். தியேட்டர் கட்ட 1 கோடி ரூபாய் யாரிடமாவது கடன் வேண்டுமென்று கேட்டால், கொடுக்க மாட்டேன் என்கிறார்கள்.

அடுத்து, பக்கிங்காம் கால்வாய் இருக்கிறது. நான் சமீபத்தில் காக்கிநாடா போனேன். அங்குள்ள பக்கிங்காம் கால்வாயை சீர் செய்து மீன்பிடி கால் வாயாக மாற்றி படகுத் துறை அமைத்து படகு விடுகிறார்கள். வெள்ளைக் காரன் இயற்கையாக பெரும் முயற்சியால் வெட்டி இந்தக் கால்வாயை நம்மிடம் தந்துவிட்டுப் போனான். இப்போது தூர்ந்து போயிருக்கிறது. தமிழ் நாட்டில் பழவேற்காடு இதன் எல்லை. முன்பு கடலூர், பரங்கிப்பேட்டை வரை இந்தக் கால்வாய் இருந்தது. இன்றைக்கு தூர்ந்துபோய் கடலூர் வரை இருக்கிறது. இந்த பக்கிங்காம் கால்வாயைச் சீர் செய்துவிட்டால், மீன் வளர்க்கலாம், படகுகள் விடலாம். படகு மூலம் போவதற்கு கட்டணமும் குறைவாக இருக்கும். இன்றைக்கு முட்டுக்காட்டில் படகு விடுவதற்கான ஏற்பாட்டினை சிலர் செய்கிறார்கள். அதுபோல் இங்கேயும் நாம் வழிவகை செய்து 500 படகுகள் விடலாம். ஒரு படகுக்கு 6 பேர் வீதம் நியமிப்பதன் மூலம் ஏராளமான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும். உள் நாட்டுப் படகுப் போக்குவரத்துக்கும் மிகவும் வசதியாக இருக்கும்

அடுத்து, இன்றைக்கு கைத்தறிக்கு இன்ன ரகங்களை ஒதுக்குவது என்கிற முறையில் மத்திய அரசு சட்டம் கொண்டு வந்திருக்கிறது. 28—3—1985 அன்று சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. நானும் ஏற்கெனவே இது குறித்துப் பேசியிருக்கிறேன். ஜனாதிபதி கையெழுத்து போட்ட பிறகுதான் அது அமுலுக்கு வரும். திராவிட முன்னேற்றக் கழகத்தினர் மற்றும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் எல்லோரும் இன்றைக்கு கட்டு கிறார்களே பாலியஸ்டர் வேட்டிகள், அவையெல்லாம் இன்றைக்கு கைத் தறிக்கு என்று ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இனிமேல் மில்களில், விசைத்தறி களில் அவர்கள் இவற்றை நெய்ய முடியாது. அமரர்கள் பேரறிஞர் அண்ணா அவர்களும், பெரியார் அவர்களும், மாண்புமிகு இராஜாஜி அவர்களும் தலைவர் அவர்களே தாங்களும் விரும்பிய இந்த எண்ணம் இன்றைக்கு நிறைவேறியிருக் கிறது. ஆனால் அங்குள்ளவர்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதாகச் சொல்கி றார்கள். இன்றைக்கு இந்தச் சட்டம் வந்திருப்பதற்காக நெசவாளர்களின் சார்பாக எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். பம்பாயிலிருந்து வெளிவருகிற 'ஸ்டேட்ஸ்மென்' என்ற பத்திரிகையில் என்னுடைய கோரிக்கை யைப்பற்றி 6 முறை எழுதியிருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்கும் என்னு

[திரு. சி. இராமலிங்கம்] [1985 ஏப்ரல்' 10

மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் போன முறைவரை
ஆசிரியர் பிரதிநிதியாக இருந்தார்கள். இப்போது திராவிட முன்னேற்றக்
கழகத்தில் இருக்கிறார்கள் . . . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** திரும்பத் திரும்ப ஏன் அதற்கே வருகி
றீர்கள் ?

**திரு. சி. இராமலிங்கம்:** புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் உழைக்
கின்ற பாட்டாளி மக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள். வங்கிக்
கடன் என்னும்போது, படித்தவர்களுக்கு 25 ஆயிரம் ; படிக்காதவனுக்கு 1,500
ரூபாய் என்று தருகிறார்கள். அந்த 1,500 ரூபாயிலும் 500, 600 ரூபாய் போய்
விடுகிறது. மீதியை வைத்துக்கொண்டு அவன் என்ன செய்ய முடியும் ?
எனவே யார் உழைக்க வருகிறார்களோ, அதற்கேற்ற மூலதனத்தை அவர்
களுக்கு வாங்கித் தர வேண்டும். காங்கிரஸ் எம்.எல்.ஏ., எம்.பி. கையெழுத்துப்
போட்டுக் கொடுத்தால்தான், கடன் கொடுக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள்.
அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் சொன்னால்,
அந்த பாங்கில் கொடுப்பதில்லை. காங்கிரஸ் நண்பர்கள் இதைத் தங்கள்
கையில் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இதை மாற்றினால்தான் நல்லது.
அண்ணா தி.மு.க. எம்.எல்.ஏ. இருக்கிற ஊரில் கஷ்டம் இல்லையா? அங்கேயும்
பல துன்பங்கள் இருக்கின்றன.

**திருமதி வி. ஜெயலட்சுமி:** ஐ.ஆர்.டி.பி. லோன்ஸ் முழுவதும் அண்ணா
தி.மு.க. காரர்களுக்கு என்று சொல்லுகிறார்களே, அது நிஜமா ? அப்படி
அது நிஜமென்றால் இதுவும் உண்மையாக இருக்கலாம்.

**திரு. சி. இராமலிங்கம்:** இதிலே கையெழுத்துப் போட்டுக் கொடுக்கி
றார்கள், ஐ.ஆர்.டி.பி. என்பது மத்திய அரசு, மாநில அரசு கொடுக்கிறது.
அதிலே சாமான்கள்தான் வாங்கிக் கொடுக்கிறார்கள். பணம் கொடுப்பதில்லை.
அதை சர்வே பண்ணும்போது மெஜாரிட்டியாக தி.மு.க.. காங்கிரஸ்காரர்கள்
தான் வாங்கி இருக்கிறார்கள். எங்கள் ஆட்கள் புதுக் கோரை. புது ஆட்கள்.
பரம்பரையாக ஆண்டவர்களுக்கு யாரைப் பிடிக்கலாம், என்ன செய்ய
வேண்டும், என்ன கொடுத்து என்ன வாங்கலாம் என்று தெரிந்து வாங்கிக்
கொண்டிருக்கிறார்கள்.



1985 ஏப்ரல் 10]

**திருமதி வி. ஜெயலட்சுமி:** நீண்டகாலமாக ஆண்டவர்கள், அவர்களுக்குத் தெரியும் என்று சொன்னார்கள். நாங்கள் ஆக்கப் பணியில் ஈடுபட்டு, அனுபவிக்க வேண்டிய காலத்திலே வெளியேறி இருக்கிறோம். என்ன, எங்கே அனுபவித்துவிட்டோம் என்பதைச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சி. இராமலிங்கம்:** அம்மையார் அவர்கள் எங்கோ போகிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினரவர்கள் போன இடத்திற்குத்தான் போகிறார்கள். (சிரிப்பு)

**திரு. சி. இராமலிங்கம்:** இன்றைக்குக் கிண்டியில் உள்ள தொழிற்பேட்டை ஆரம்ப காலத்தில் யாருக்கு உரிமையாக இருந்தது? இப்போது எங்கே இருக்கிறது ? அப்போது ஆண்டு கொண்டிருந்த வெள்ளைக்காரர்களை வெளியேற்றி, அவர்கள் சென்றபோது இருப்பிலிருந்த 1500 கோடி ரூபாயை ரிசர்வ் வங்கியிலிருந்து வாங்கி, தொழில் மயமாக்கினார்கள் . . . இதற்குள் எல்லாம் போக வேண்டாம். என்னுடைய கருத்துக்கு வருகிறேன். இன்றைக்குத் தொழில் துறை என்று பார்க்கிறபோது, புதிதாக ஒருவர் தொழில் ஆரம்பிப்பதற்கு ரொம்பவும் சிரமப்படுகிறார்கள். நெசவாளர்கள் சிலர் 1,000, 2,000, 10,000, ஒரு லட்சம், இரண்டு லட்சம் சம்பாதித்து வைத்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் லைசன்ஸ் வாங்குவதில் தொல்லைகள் இருக்கின்றன.

(பிற்பகல் 6-00.)

நான் போன வருஷம் கூட இதுபற்றிப் பேசினேன். ஒருவர் தொழில் தொடங்குவதற்காக மனு போட்டால், மாவட்டத் தொழில் மையத்திற்குப் போக வேண்டியிருக்கிறது. அப்படியே நகராட்சி, பஞ்சாயத்துக்குப் போய் ஓ.கே. ஆக வேண்டியிருக்கிறது. பிறகு நகர அமைப்பு ஓ.கே. பண்ண வேண்டும். சுகாதாரத் துறை ஓ.கே. பண்ண வேண்டும். சுற்றுப்புறச் சூழல் வாரியம் ஓ.கே. பண்ணனும், பிறகு மின்சார வாரியம் மின்சாரம் வழங்க வேண்டும். இப்படி 7, 8 துறைகளுக்கு போக வேண்டிய நிலை இருக்கிறது. ஒருவர் ஒரு லட்சம் ரூபாய் போட்டு ஒரு தொழிலை ஆரம்பிக்கிறார் என்றால், அவருக்கு அனுமதி வரவே 2, 3 வருடம் ஆகிறது என்றால், எப்படி தொழில்கள் வளர முடியும்? போன தடவை நான் பேசும்போது குறிப்பிட்ட அந்தத் தொழிலுக்கு இன்னும் லைசன்ஸ் கொடுக்கப்படவில்லை. ஆனால் இன்றைக்கு கர்நாடகா, மகாராஷ்டிரா, குஜராத் போன்ற மாநிலங்களில் இம்மாதிரி

[திரு. சி. இராமலிங்கம்] [1985 ஏப்ரல் 10

டைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுபோல் ஆஜ் என்ற இந்தி பத்திரிகையில், 16 நகரங்களில் நடத்தப்படுகின்ற இந்தி பதிப்பில், என்னுடைய நியாயமான கோரிக்கையை ஆதரித்து எழுதியிருக்கிறார்கள்.

(பிற்பகல் 6.05)

அதேபோல், 'ஆஜ்கல்' என்ற உருது பத்திரிகையில் 8 எடிஷன்கள் இந்தக் கருத்தை ஆதரித்து செய்திகள் போட்டார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** உருது மொழியில் இருந்ததை உறுப்பினர் அவர்கள் எப்படி படித்தார்கள்?

**திரு. சி. இராமலிங்கம்:** எனக்கு இந்தி கொஞ்சம் தெரியும். அவர்களும் ஆங்கில மொழியாக்கம் அனுப்புவார்கள். டைம்ஸ் ஆப் இந்தியா, எக்னாமிக் டைம்ஸ் போன்ற டெல்லிப் பத்திரிகைகள் ஆதரித்து எழுதின. இங்கேயுள்ள பத்திரிகைகள் தொட்டும் தொடாமலும் எழுதினார்கள். 30 ஆண்டுக்கால திராவிட இயக்க வரலாற்றை எடுத்துப் பார்த்தால், தெரியும். நமது பெருந் தலைவர்கள், ராஜாஜி, அண்ணா, ம.பொ.சி., பெரியார் எல்லாம் விட்டுவிடாமல் ஆதரித்துத்தான் வந்தனர். அவர்கள் எல்லாம் நம்மை ஆதரித்தார்கள். அதன் பிறகு, கமலாபதி திரிபாதி போன்றவர்கள், தற்போதைய துணை ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமன் போன்றவர்கள் திருமதி இந்திரா காந்தி அம்மையாரிடம் இதை எடுத்துச் சொல்லி, அதன் பிறகுதான் இந்தச் சட்டம் வந்தது. இது என்னைப் போன்றவர்களுக்குக் கிடைத்த வெற்றியல்ல. அது அத்தனையும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களைத்தான் சாரும்.

எங்களுக்காக, ஏழையெளிய மக்களுக்காக, உழைத்து உழைத்து ஓடாகிப் போன மக்களுக்காக, உழைத்து உடலெல்லாம் துர்நாற்றம் அடிக்கும் மக்களுக்காக உள்ள இந்த அரசு, கிராமப்புற மக்களுக்காக அமைந்துள்ள இந்த அரசு, இந்த மாபெரும் வெற்றியைத் தேடித் தந்துள்ளது. அதன் காரணமாக, இந்த அரசை நான் மேலும் மேலும் பாராட்டி, இந்த நிதிநிலை அறிக்கை ஏழைகளுக்காக இருக்க வேண்டுமென்று சொல்லி, (அதற்காக -படித்துப் பட்டம் பெற்றவர்களுக்கு இருக்கக் கூடாது என்பதல்ல, அவர்களும் மனிதர்கள்தான், அவர்களுக்காகவும் இருக்க வேண்டியதுதான். ஒருவன் கல்வி கற்றதனாலேயே உயர்ந்துவிடுவதில்லை, கல்வி கல்லாமல் போய்விடுவதாலேயே ஒருவன் தாழ்ந்து விடுவதில்லை.)



1985 ஏப்ரல் 10]

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** முடித்துக் கொண்டிருந்தார்கள். அதற்குப் பின்னாலே போகிறார்களே?

**திரு. சி. இராமலிங்கம்:** முடித்துக் கொள்கிறேன். அப்படிப்பட்ட இந்த அரசும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் பல்லாண்டு வாழ வேண்டுமென்று சொல்லி, அப்படி பல்லாண்டு வாழ்வதன் மூலம் ஏழை எளிய சமுதாயத்திற்குத் தூண்டுகோலாக இருக்கும் என்று சொல்லி, எனக்குப் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி கூறி அமைகிறேன்.

* **திரு. பி. டி. ஆர். பழனிவேல்ராஜன்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 1985-86 ஆம் ஆண்டிற்கு, நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் வைத்துள்ள நிதிநிலை அறிக்கை மீது சில கருத்துக்களைச் சொல்வதற்கு விழைகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கை வெளியிட்ட நேரத்தில், பல்வேறு தலைவர்கள் பல்வேறு கருத்துக்களைச் சொன்னார்கள். ஆனால் என்னைப் பொறுத்த வரையில், நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கு நான் வாழ்த்துத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், தமிழ் நாட்டு மக்களுக்கு இந்த நிதிநிலை அறிக்கை நேரடியாக வரியைச் சுமத்தவில்லை. இருப்பினும், ஒரு மாத காலமாக, மத்திய நிதிநிலை அறிக்கை வெளிவந்ததற்குப் பின்னால், தமிழக மக்கள் விலைவாசி உயர்வால் தள்ளாடிக் கொண்டிருப்பதை நாம் பார்க்கிறோம். ரயில் கட்டணமாக இருந்தாலும் சரி, பெட்ரோல், டீசல் விலை உயர்வால் பஸ் கட்டணம் உயர்ந்து, அதன் காரணமாக பஸ் டிக்கட் விலை உயர்த்தப்பட்டதாக இருந்தாலும் சரி, தமிழகத்தைப் பொறுத்தவரையில், பால் விலை உயர்வின் காரணமாகவும், மக்கள் தள்ளாடிக் கொண்டிருக்கிற நேரத்தில், நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் நேரடியாக மக்களுக்கு வரி போடாமல் இருப்பதற்காக, அவர்களை நான் வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த அறிக்கையில் கூட சில அரசியல் தத்துவங்களை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஏறத்தாழ 18 ஆண்டுகளுக்கு முன்பு, நாங்கள் புதிய சட்டமன்ற உறுப்பினர்களாக அவர்களுக்குப் பின்னால் உட்கார்ந்திருந்த நேரத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் இந்தத் தத்துவத்தைத்தான் சொன்னார்கள். 18 ஆண்டுக்காலமாக இந்த நிதிநிலை அறிக்கையால், திராவிட இயக்கத்தின் சார்பில் எடுத்து ஆளப்பட்டாலும், இன்றைக்கு 18 ஆண்டுக் காலத்திற்குப் பின்னாலும் எந்தப் பலனும் கிடைக்கவில்லையென்று இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. பி. டி. ஆர். பழனிவேல் ராஜன்] [1985 ஏப்ரல் 10

மாநில சுயாட்சியைப்பற்றி திராவிட இயக்கத்தைச் சார்ந்தவர்களுக்கு நன்றாகத் தெரியும். குறிப்பாக என்னுடைய அருமை நண்பர் திரு. ஆர். பு. சித்தாபதி அவர்கள் இரண்டு நாட்களுக்கு முன்பு பேராசிரியரைப் போல பெரிய தத்துவ ஆராய்ச்சி செய்து, நமக்கெல்லாம் பல அரிய கருத்துக்களைச் சொன்னார்கள்.

(பிற்பகல் 6-10)

ஆனால் மாநில சுயாட்சியைப் பொறுத்தவரையில், மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று சொல்கின்ற நேரத்தில், யார் ஆட்சி நடத்தினாலும் அந்த அதிகாரம் கொடுக்கப்பட வேண்டும் என்று எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், பத்தாண்டுகளுக்கு முன்னாலே மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில், தமிழக அரசின் சார்பில் மாநில சுய ஆட்சி வழங்கக் கோரி, ஒரு அதிகார பூர்வமான தீர்மானம் தமிழக சட்டமன்றத்திலே வைக்கப்பட்ட காலத்திலே, அன்று எதிர்க் கட்சியாக இருந்த இன்றைய ஆளும் கட்சி நண்பர்கள் அந்தத் தீர்மானத்தின் மீது பேசுகின்ற நேரத்தில், மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்பதை நாங்களும் ஏற்றுக்கொண்டாலும், மாநில சுய ஆட்சியை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கும், கலைஞர் அவர்களுக்கும் கொடுக்கக் கூடாது என்று பேசினார்கள். ஆனால் அன்றைய நிலை இன்று அவர்களுக்கு இருக்காது என்று கருதுகிறேன். அது எந்தக் கட்சி ஆட்சி நடத்தினாலும், அவர்கள் ஆட்சிக் காலத்திலே இருக்கின்ற நிதி ஆதாரத்தை வைத்துக் கொண்டே, வரலாற்றிலே இடம் பெறுகின்ற அளவுக்கு சில சாதனைகளைச் செய்ய வேண்டும் என்று நினைப்பது இயற்கை. நேற்றைய தினம் நம்முடைய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்கூட எங்களைக் கடுமையாகச் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எதிர்காலம் இல்லை, இனிமேல் ஆட்சிக்கு வர முடியாது, இருந்த உறுப்பினர்களையே உங்களால் காப்பாற்றிக்கொள்ள முடியவில்லை என்று சொன்னார்கள். அது உண்மையாகக்கூட இருக்கலாம். அப்படி இருந்தால்கூட நாங்கள் எல்லாம் பெருமையாக பல ஆண்டுகளுக்குச் சொல்வோம். நாங்கள் ஆட்சி செய்த 9 ஆண்டுக் காலத்தில் தமிழகத்தின் பொற்காலம் என்ற வகையிலே மறக்க முடியாத, மறைக்க முடியாத சாதனைகளை, வரலாற்றில் இடம் பெறக் கூடிய சாதனைகளை, அந்தக் காலத்தில் நடந்தவைகளை நினைவு கூர்வோம். உதாரணமாக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே ஏழை எளிய மக்களுக்கு பல நிறுவனங்களை அரசாங்க நிதியிலிருந்து ஏற்படுத்தி இருக்



1985 ஏப்ரல் 10] [திரு. பி. டி. ஆர். பழனிவேல் ராஜன்]

கின்றோம். குடிசை மாற்று வாரியமாக இருந்தாலும் சரி, குடிநீர் வழங்கல் வாரியமாக இருந்தாலும் சரி, தாழ்த்தப்பட்ட மக்களுக்கான வீடு கட்டும் சங்கமாக இருந்தாலும் சரி . . . .

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, ஒரு கருத்தை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். மாநில சுய ஆட்சியைப் பொறுத்தவரை, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது மாநில சுய ஆட்சி குறித்து தீர்மானம் வந்தபோது, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு மாநில சுய ஆட்சி தரக்கூடாது என்று சொன்னதாகச் சொன்னார்கள். அதன் பிறகு 1977-லே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு, முதன் முதலாக பேரவையிலே பேசுகிறபோது, கலைஞர் அவர்கள் சொன்னார்கள். "மாநில சுய ஆட்சி கூடாது என்று அப்போது நீங்கள் சொன்னீர்கள். ஆனால் நீங்கள் இப்போது ஆட்சிக்கு வந்து விட்டீர்கள். நீங்கள் ஆட்சிக்கு வந்தாலும்கூட, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று சொன்னீர்கள்." ஆனால் அதே கலைஞர் அவர்கள் பின்னாலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அரசு கலைக்கப்பட்டபோது—அது அரசியல் சட்டம் 165-வது பிரிவின்படி மாநில அரசு கலைக்கப்பட்டபோது—அதற்குச் சார்பாக வாக்களித்தார் என்பதைப் பார்க்கும்போது, மாநில சுய ஆட்சியின் கருப்பொருளுக்கே விரோதமாக இருந்தார் என்பதையும் நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஞாபகப் படுத்த விரும்புகிறேன்.

**திரு. பி. டி. ஆர். பழனிவேல் ராஜன் :** மத்திய அரசு, மாநில அரசுகளைக் கலைக்கக்கூடாது என்றும், அந்த ஷரத்து அரசியல் சட்டத்திலேயிருந்து எடுக்கப்பட வேண்டும் என்றும், எங்கள் கட்சி சார்பிலே மாநிலங்கள் அவையிலே உறுப்பினர் திரு. முரசொலி மாறன் தீர்மானம் கொண்டு வந்தார்கள் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

ஆகவே ஒன்பது ஆண்டு காலத்திலே ஏழை மக்களுக்கு, சாதாரண மக்களுக்குப் பயன்தரத்தக்க அரசாங்க நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டன.

அதுமட்டுமல்லாமல், தமிழர்களின் பழங்காலத்துப் பெருமைகளை நினைவுபடுத்தும் வழியில் வள்ளுவர் கோட்டமும், பழங்காலத்திலே வாணிகத்திற்காக கடல் கடந்து சென்றார்கள் என்பதைக் காட்டுவதற்காக பூம்புகாரும், பாஞ்சாலங்குறிச்சியிலே கட்டபொம்மன் கோட்டையையும், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே ஏற்படுத்தப்பட்டதை நினைவுபடுத்த

விரும்புகிறேன். அந்தச் சாதனைகள் எங்களுக்கு மட்டும் சொந்தம் இல்லை. எதிர்த் தரப்பில் இருப்பவர்களுக்கும் சொந்தம். காரணம் ஐந்தாண்டு காலம் ஒன்றாக ஆட்சியை நடத்தியவர்கள் என்பதை இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சியின் சார்பில்கூட எங்கள் கட்சியின் கொள்கைப் பரப்புச் செயலாளராக இருந்த திருமதி ஜெயலலிதா அவர்கள் அரசியல் சட்டம் 356 ஆவது பிரிவை நீக்க வேண்டும் என்று மாநிலங்களவையில் தெரிவித்தார்கள் என்பதை உங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 6-15)

**திரு. பி. டி. ஆர். பழனிவேல் ராஜன் :** நான் அதைக் கண்டு மகிழ்ச்சியடைகின்றேன். இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்து ஒரு தீர்மானமாகக் கொண்டு வந்தவர் எங்கள் கட்சியைச் சார்ந்தவர் என்று சொன்னேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்ட பிரச்சினை, 356-வது பிரிவிற்கு தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். அதே 356-வது பிரிவின் அடிப்படையிலேதான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசும், 6 மாநிலங்களின் சட்ட சபைகளும் கலைக்கப்பட்டன. அப்படிக் கலைக்கப்பட்டபோது, திராவிட முன்னேற்றக் கழகம் அதற்குச் சார்பாக பாராளுமன்றத்திலே வாக்களித்தது. எந்தப் பிரிவை விலக்க வேண்டுமென்று நீங்கள் சொன்னீர்களோ, அந்தப் பிரிவினுடைய அடிப்படையிலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி கலைக்கப்பட்டபோது, நீங்கள் அதற்கு சார்பாக வாக்களித்தீர்கள். கலைஞர் அவர்கள் சட்டசபையில் பேசுகின்றபோது, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தாலும் கூட, நாங்கள் மாநில சுய ஆட்சிக்காகப் போராடுவோம் என்று சொல்வதற்கு எதிர்மாறாக தாங்கள் நடந்தீர்களே, அது எப்படி என்பதுதான் என்னுடைய கேள்வி.

**திரு. பி. டி. ஆர். பழனிவேல் ராஜன் :** சட்டத்திலே இடம் இருக்கிற வரை அதை எங்களுக்குச் சாதகமாக நாங்கள் பயன்படுத்துவோம். அப்படிப்பட்ட சட்டம் இருக்கக் கூடாது என்று சொல்கின்ற உரிமையும் எங்களுக்கு உண்டு.



ஆகவே, எங்கள் ஆட்சிக் காலத்திலே ஏற்பட்ட சாதனைகளைப் போலவே,
உங்கள் ஆட்சிக் காலத்திலே அப்படிப்பட்ட சாதனைகள் ஏற்பட வேண்டு
மென்று நான் சொல்ல விரும்புகின்றேன். காரணம், நீங்கள் பங்காளிக்
கட்சி ; வேறு யாருமல்ல. ஆனால் கடந்த 7 ஆண்டுகளாக, ஏதாவது பெரிய
சாதனை உண்டா என்று கேட்டால், ஒருவேளை முதலமைச்சரின் சத்துணவு
திட்டத்தைப் பற்றி நீங்கள் குறிப்பிடுவீர்கள். அது பாராட்டப்பட வேண்டிய
திட்டம்தான். நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் கூட உலகத்திலே பல
இடங்களிலே இந்தத் திட்டத்திற்கு வரவேற்பு கிடைத்ததாகச் சொல்லுகின்
றார்கள். அதுவும் உண்மைதான். காரணம், நவீன அரசாங்கங்களிலே,
உலகத்திலே எங்கேயும் அரசாங்கம் அன்னதானம் வழங்குகின்ற ஒரு திட்டம்
இருந்ததில்லை. புதுமையாக நீங்கள் கொண்டு வந்திருக்கிறீர்கள். உங்களைப்
பாராட்ட வேண்டியதுதான். ஆனால் எதிர்காலத்திலே இது சாதனை என்ற
மாதிரி, வேதனை தரக்கூடிய அளவுக்கு மாறக் கூடாதென்ற ஐயப்பாட்டை
நான் எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்குக் காரணம்,
இந்தத் திட்டத்திற்கான செலவு ஏராளமாக ஏற்படுவதை யாரும் மறுக்க
முடியாது. தமிழகத்தைப் பொறுத்தவரையில், எந்த ஆக்கபூர்வமான
வேலையும் நடப்பதில்லை. காரணம் கேட்டால், சத்துணவுக்குப் பணம்
போய்ச் சேரவேண்டிய சூழ்நிலை இருக்கிறது.

உதாரணத்திற்கு ஒன்று சொல்ல வேண்டுமென்றால், மதுரை மாவட்டத்
திலே சென்ற ஆண்டு நெடுஞ்சாலைப் பராமரிப்புத் துறைக்கு ஒரு குறிப்பிட்ட
தொகை வேண்டுமென்று கேட்டார்கள். அவர்கள் கேட்ட தொகையிலே
மூன்றில் ஒரு பங்குதான் கொடுக்கப்பட்டது ; மிச்சம் கொடுக்க முடியாது ;
சத்துணவுத் திட்டத்திற்கு பணம் ஒதுக்க வேண்டுமென்று சொல்லிவிட்டார்
கள். கொடுக்கப்பட்ட தொகை எல்லாம் மதுரை மாவட்டத்திலே ஒரு
தொகுதிக்குத்தான் செலவு செய்யப்பட்டது. ஆக மதுரை மாவட்டத்திலே
சாலைப் பராமரிப்பு பல ஆண்டுகளாகக் கிடையாது. இந்த நிலை சத்துணவுத்
திட்டத்தின் காரணமாக நம்முடைய அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருக்கிறது.
இந்த சத்துணவுத் திட்டத்திற்குண்டான செலவு, திட்டச் செலவிலே அனு
மதிக்கப்பட்டதா, இல்லையா என்று எனக்குத் தெரியாது. இந்த அறிக்கை
யிலேயும் தெரியவில்லை. அப்படி அனுமதிக்கப்படவில்லை என்றால், இந்த
முழுச் செலவும் நம்மையே சாரும். இவ்வளவு செலவழிக்கின்ற நேரத்திலே,
இந்தத் திட்டத்தை விரிவாக்குவதற்கு பல புதிய திட்டங்களையும் இப்போது
நீங்கள் சொல்லியிருக்கின்றீர்கள். குறிப்பாக, சீருடை வழங்குவதும், ஏழை
குழந்தைகளுக்குப் புத்தகங்கள் வழங்குவதும், இப்படிப்பட்ட திட்டங்களை
எல்லாம் செய்து, இந்தத் திட்டத்திற்கு உண்டான செலவை, பணத்தை நம்

முடைய மாநில அரசே கொடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால், ஒரு காலத்திலே, ஒருவேளை நம்முடைய அரசாங்க ஊழியர்களுக்கே மாதச் சம்பளம் கொடுக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிடுமே என்ற அச்சத்தை இந்த நேரத்திலே நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்தத் திட்டத்தைப்பற்றிக் கூட மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தன்னுடைய அறிக்கையிலே சொல்லியிருக்கின்றார்கள். இந்தத் திட்டம் ஏற்படுத்தப்பட்ட பிறகு, பள்ளிகளிலே குழந்தைகள் அதிகமாக வருகிறார்கள். 30 அல்லது 40 விழுக்காடு என்று இருந்தது, ஏறத்தாழ 80 விழுக்காடாக குழந்தைகள் இப்போது பள்ளிக்கு வருகிறார்கள் என்று சொன்னார்கள். அது உண்மையாகக் கூட இருக்கலாம். ஆனால் குழந்தைகள் வருவது எதற்காக என்று யாரும் ஆராய்ந்து பார்க்கவில்லை. படிப்பதற்கா அல்லது உணவு அருந்துவதற்கா என்று தெரியவில்லை. பள்ளியிலே கல்வி சொல்லிக் கொடுக்க வேண்டிய ஆசிரியர்கள் அரிசி, பருப்பு கணக்கு வைக்க வேண்டிய சூழ்நிலையில் இருந்தால், கல்வி முன்னேறாது என்ற கருத்தைச் சொல்லி, அது இன்று நமக்குத் தெரியாவிட்டாலும், 10 ஆண்டுகள் கழித்து இந்த நிலை தெளிவாகத் தெரியுமென்ற கருத்தை இந்த நேரத்தில் நான் எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே அகதிகளுக்குச் சலுகைகளைப்பற்றி நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்று தமிழகத்திலே ஸ்ரீலங்கா பிரச்சினை கொழுந்துவிட்டு எரிகிற பிரச்சினை. அதிலேகூட நேற்றைய தினம் ஸ்ரீலங்கா பிரச்சினையைப் பொறுத்தவரையில், திராவிட முன்னேற்றக் கழகம்தான் ஸ்ரீலங்கா தமிழர்களைக் காப்பாற்ற முடியும்; தமிழைக் காப்பாற்ற முடியும் என்ற ஒரு தவறான கண்ணோட்டத்திலே இருப்பதாக மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அதை நான் வன்மையாக மறுக்கிறேன். அப்படிப்பட்ட நிலை திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஒன்றும் ஏற்பட்டதில்லை. எந்தக் காலத்திலும் அப்படிச் சொன்னது கிடையாது.

(பிற்பகல் 6-20)

இன்னும் சொல்லப் போனால் எல்லா அரசியல் கட்சிகளிலுமே மிதவாதிகளும் இருப்பார்கள், தீவிரவாதிகளும் இருப்பார்கள். ஸ்ரீலங்கா பிரச்சினையைப் பொறுத்தவரையில், ஆளும் கட்சியில் இருக்கிற தீவிரவாதிகளைப் போல் எங்கள் கட்சியில்கூட இல்லையே என்ற கவலைகூட எனக்கு உண்டு. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் ஸ்ரீலங்கா பிரச்சினையைப் பற்றிப் பேசும்போது உணர்ச்சிப் பெருக்கால் அவர் கண்ணீர் விட்டு அழுததை நேரிலேயே நாம் பார்த்தோம். நம்முடைய மாண்புமிகு அமைச்சர், டாக்டர்





காளிமுத்து அவர்கள்கூட தன்னுடைய தலைவரின் அனுமதி கிடைத்தால், இந்த அமைச்சர் பதவியையேகூட தூக்கி எறிந்துவிட்டு விடுதலைப் புலியாக மாறத் தயார் என்று குறிப்பிட்டார்கள். அதைப் போலவே நாடாளுமன்றத் தில் இங்குள்ள ஆளும் கட்சியின் சார்பில் அங்கே தலைவராக இருக்கிற முன்னாள் அமைச்சர் திரு. குழந்தைவேலு அவர்கள் நேற்றைய தினம் நாடாளுமன்றத்தில் பேசும்போது, 20 ஆண்டுக் காலமாக இருக்கிற இந்தப் பிரச்சினையை உடனடியாகத் தீர்க்க வேண்டும் என்று மத்திய அரசிடம் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டிருக்கிறார். நம்முடைய அவையில் இருக்கும் மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தாபதி அவர்கள்கூட ஆளுநர் உரை மீது பேசும்போது, ஸ்ரீலங்காவுக்கு கட்டாயமாக இராணுவத்தை இந்திய அரசு அனுப்ப வேண்டும் என்ற கருத்தைக்கூட தெரிவித்தார்கள். அதைப் போலவே காங்கிரஸ் கட்சியின் சார்பில் மாநிலங்கள் அவையில் பேசிய திரு. தங்கபாலு அவர்களும், நாடாளுமன்றங்கள் அவையில் பேசிய திரு. சிதம்பரம் அவர்களும் இதே கருத்தை வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, எங்களைப் பொறுத்தவரை, நாங்கள்தான் முக்கியமானவர்கள், மற்றவர்களெல்லாம் எங்களுக்குச் சளைத்தவர்கள் என்று எந்தக் காலத்திலும் சொன்னதுமில்லை, அப்படிப்பட்ட கருத்தும் எங்களுக்குக் கிடையாது. எங்களைப் பொறுத்த வரையில், அரசாங்கம் எந்த நடவடிக்கை எடுத்தாலும், அதற்கு உடன்பாடாக உதவியாக இருப்போம். ஆனால் எங்களுக்கு என்று ஒரு பாதையை வகுத்துக்கொள்வோம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மற்றவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து ஒரு பாதையில் போவோம் என்று சொல்லுமளவுக்கு கருத்து ஒற்றுமை ஏற்பட்டால், நாங்களும் அதற்கு உடன்பாடாக இருப்போம் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஸ்ரீலங்காவில் இன்றைக்குள்ள பிரச்சினை என்ன, சில ஆண்டுகளுக்கு முன்னாலே அங்கே இருந்த பிரச்சினை என்ன என்றெல்லாம் பார்த்தால், ஒன்று நன்கு புரியும். முன்பு கச்சத் தீவு பற்றிக் கூட குறிப்பிட்டார்கள். கச்சத் தீவு ஸ்ரீலங்காவிற்குக் கொடுக்கப்பட்டபோதுகூட இனக் கலவரம் அங்கே நடக்கவில்லை. அப்போது வடபகுதியில் வாழ்கிற தமிழர்களுக்குத் தான் அந்தக் கச்சத் தீவு பயன்படும் என்ற எண்ணம் அந்தக் காலத்தில் இருந்தது. ஆனால் இன்றைக்கு ஸ்ரீலங்காவில் நடப்பது இனப் படுகொலை. ஒரு இனத்திற்கும் இன்னொரு இனத்திற்கும் இடையே நடக்கிற ஒன்றல்ல. ஒரு அரசாங்கத்திற்கும் ஒரு சிறுபான்மை இனத்திற்குமிடையே நடக்கிற படுகொலை. ஸ்ரீலங்கா அரசாங்கம் இராணுவ உடையில் கொள்ளைக் கூட்டமாக மாறி ஒரு இனத்தையே அழித்து வருகிறது. இது ஏதோ நான்

[திரு. பி. டி. ஆர். பழனிவேல் ராஜன்] [1985 ஏப்ரல் 10

சொல்லுகிற கருத்து அல்ல. உலகத்தில் இருக்கிற பல்வேறு நாட்டு நிபுணர்கள் அம்னெஸ்டி இன்டர்நேஷனல் போன்ற சங்கத்தைச் சார்ந்த பெரியவர்கள் அங்கே இனப் படுகொலை நடப்பதைத் தெளிவாக உலகத்திற்கு எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால், உலகத்தில் எங்கே, எந்த நிகழ்ச்சி நடந்தாலும், அதுபற்றிய உண்மையான தகவல் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால், "பிரிட்டிஷ் பிராட்காஸ்டிங் கார்ப்பரேஷன் செய்தியைக் கேளுங்கள், சரியான விவரம் தெரியும்" என்று சொல்லுவார்கள். ஏனென்றால் அந்த பி.பி.சி. அரசாங்கத்திற்குக் கட்டுப்படாத ஒரு நிறுவனம். அந்த நிறுவனத்தைச் சார்ந்த நிருபர்கள்கூட அங்கே நடப்பதை இனப் படுகொலை என்று சொல்லி, அதன் காரணமாக ஸ்ரீலங்கா அரசு அவர்களையெல்லாம் அந்த நாட்டை விட்டே வெளியேற்றி விட்டது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் இன்றைய தினம் தமிழகத்தால் என்ன செய்ய முடியும் என்று சிந்திக்க வேண்டும். இதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்பு சர்வகட்சிக் கூட்டத்தைக் கூட்டியிருக்கிறார்கள். இந்தச் சர்வகட்சிக் கூட்டத்தின் மூலமாக ஏதாவது பலன் கிடைக்குமா என்று சிந்தித்துப் பார்த்தால், எங்களைப் பொறுத்தவரை, பலன் எதும் கிடைக்காது என்றுதான் நம்புகிறோம், காரணம் 2 ஆண்டுகளுக்கு முன்னால் இப்படிப்பட்ட ஒரு சர்வகட்சிக் கூட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கூட்டப்பட்டு, அதில் பல்வேறு கருத்துக்கள் சொல்லப்பட்டு, நாட்டு மக்கள் சார்பில் அந்தக் கருத்துக்கள் மத்திய அரசிடம் எடுத்துச் சொல்லப்பட்டன. அனைத்துக் கட்சிகளின் சார்பிலும் அந்தக் கருத்துக்கள் வலியுறுத்தப்பட்டன. ஆனால் அந்தக் கருத்துக்களில் ஒன்றையாவது மத்திய அரசு இதுவரை ஏற்றுக் கொண்டதா என்றால் இல்லை. அதில் எதையாவது செயல்படுத்தினார்களா என்றால் இல்லை.

உதாரணமாக, ஸ்ரீலங்காவிலிருந்து வெளியேற்றப்படுகிற தமிழர்களை அந்தமான், நிகோபார் தீவுகளில் குடியேற்றம் செய்ய வேண்டுமென்ற கருத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் எடுத்துச் சொல்லப்பட்டது. இது வரை அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அதைப் போலவே ஸ்ரீலங்காவிற்கு இந்தியத் தூதுவராகச் செல்லுகிறவர் ஒரு தமிழராக இருக்க வேண்டும் என்ற கருத்தும் சொல்லப்பட்டது. இதுவரையில் அதுகூட ஏற்கப்படவில்லை. இன்னும் சொல்லப் போனால், சில மாதங்களுக்கு முன்னால்தான் தூதுவரையே மாற்றினார்கள். முதலமைச்சர் அவர்கள் ஸ்ரீலங்காவிற்கு தமிழர் ஒருவரை தூதுவராக அனுப்ப வேண்டும் என்று சொன்னபோது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஒருவரை அனுப்ப



1985 ஏப்ரல் 10] [திரு. பி. டி. ஆர். பழனிவேல் ராஜன்]

வேண்டும் என்று நிச்சயமாகச் சொல்லவில்லை. இந்திய வெளிவிவகாரத் துறையில் ஏராளமான தமிழர்கள் வேலை பார்க்கிறார்கள். நம்முடைய கருத்துக்கு மரியாதை கொடுக்க வேண்டும் என்று மத்திய அரசு எண்ணியிருந்தால் அவர்களில் ஒரு தமிழரைத் தூதுவராக ஸ்ரீலங்காவிற்கு அனுப்பி இருக்கலாம். ஆனால் இதுவரையில் செய்யவில்லை.

(பிற்பகல் 6-25)

அதைப் போலவே இரண்டாண்டுகளுக்கு முன்பு தமிழ் மக்கள் சார்பிலே, தமிழக அரசாங்கத்தின் சார்பிலே இங்கேயுள்ள அரசியல் கட்சிகள் சார்பிலே ஒரு தூதுக்குழு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்களைப் பார்த்து பல கருத்துக்களை வலியுறுத்தி குறைந்த பட்சம் சிலவற்றையாவது நிறைவேற்றித் தர வேண்டும் என்று சொல்லியிருக்கிறது. ஆனால் இதுவரை எந்தத் திட்டமும் நிறைவேற்றப் படவில்லை. நம்முடைய கோரிக்கை ஒன்று கூட மத்திய அரசால் ஏற்றுக் கொள்ளப்படாத சூழ்நிலையில் மீண்டும் ஒரு சர்வகட்சி கூட்டத்தை நடத்தி தூதுக்குழு அனுப்புவதினால் பலன் கிடைக்குமா என்றால், எங்களைப் போன்றவர்கள் பலன் கிடைக்காது என்று கருதுகிறோம். ஆகவே டில்லிக்கு காவடி தூக்குவதை நிறுத்திக்கொள்ளலாம் என்ற கருத்தை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்கு மாறாக எப்படி பத்தாண்டுகளுக்கு முன்னால் அரசாங்கத்தின் சார்பிலே மாநில சுயாட்சியை வலியுறுத்தி தீர்மானத்தை நிறைவேற்றி எல்லா கட்சிகளும் ஆதரவு கொடுத்தோமோ அதைப்போலவே ஸ்ரீலங்கா பிரச்சினை பற்றி மேலவை, சட்டமன்ற பேரவை ஆகிய இரண்டு அவைகளிலும் தீர்மானங்களை நிறைவேற்றலாம். எப்படிப்பட்ட தீர்மானம் என்றால், கண்டனத் தீர்மானமாக நிறைவேற்றலாம். அதற்கு முன்மாதிரி இல்லையென்று சொல்ல முடியாது. காரணம் தென் ஆப்பிரிக்கா நாட்டில் இனக் கலவரம் நடந்த காலத்தில் பண்டிதர் நேரு பிரதமராக இருந்த போது நாடாளுமன்றத்தில் கண்டனத் தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். அல்லது இராணுவத்தை அனுப்பலாம் என்ற தீர்மானத்தை நிறைவேற்றலாம் என்று எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இது ஒன்றும் புதிதல்ல. ஏனென்றால் எந்த நாட்டை எடுத்துக்கொண்டாலும் அந்த நாட்டுக்கு ஆபத்து ஏற்படும்போது, நியாயங்களை, சர்வதேச சட்டங்களை சிந்தித்துப் பார்ப்பது கிடையாது. நம்முடைய நாட்டை முன்மாதிரியாக எடுத்துக் கொண்டாலும், விடுதலைக்குப் பிறகு நம்முடைய நாட்டில் இராணுவ நடவடிக்கை இருந்து வந்திருக்கிறது. வெள்ளையர் நமக்கு விடுதலை கொடுத்த காலத்தில் மன்னர்

[திரு. பி. டி. ஆர். பழனிவேல் ராஜன்] [1985 ஏப்ரல் 10

களுக்கு என்று தனியாக சட்டத்தை ஏற்படுத்தி அவர்கள் இந்தியாவோடு இணைந்து கொள்ளலாம் அல்லது பாகிஸ்தானோடு இணைந்து கொள்ளலாம் அல்லது தனியாக இருக்கலாம் என்ற திட்டத்தை ஏற்படுத்தி இந்தியாவிலிருந்த சாம்ராஜ்ய மன்னர்களுக்கு வழிவகை செய்துவிட்டுப் போனார்கள். காஷ்மீரத்தைப் பொறுத்தவரையில் இந்தியாவுடன் சேர வேண்டும் என்று சொன்னதும் அதை மக்கள் எதிர்த்தார்கள். மன்னர் சொன்னாலே போதும் என்று துருப்புக்களை அனுப்பினோம். காஷ்மீர் வேறு நாட்டிற்குச் சென்றால் நம்முடைய நாட்டுக்கு ஆபத்து ஏற்படும் என்ற சூழ்நிலையில் நம்முடைய இராணுவத்தை அனுப்பினோம். ஐதராபாத்தைப் பொறுத்த வரையில் ஐதராபாத் நிசாம் பாகிஸ்தானோடு சேர வேண்டும் என்ற எண்ணத்தைச் சொல்லிய நேரத்தில், மக்கள் அந்த எண்ணத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொல்லி போலீஸ் நடவடிக்கை எடுத்து அந்த நாட்டை நாம் கைப்பற்றினோம். அதைப் போலவே விடுதலைக்குப் பிறகு போர்ச்சுகீஸ் வசம் இருந்த கோவா, டையூ, டாமன் ஆகியவற்றைப் பொறுத்தவரையில் காலஞ் சென்ற பிரதமர் நேரு அவர்கள் போர்ச்சுகீஸ் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி அந்த இடங்களைக் கைப்பற்றவில்லை. அதற்கு மாறாக அந்தக் காலத்திலே இரும்பு மனிதராகக் கருதப்பட்ட உள்துறை அமைச்சர் சர்தார் வல்லபாய் பட்டேல் அவர்கள் கப்பல் படை, காலாட்படையை அனுப்பி . . .

**திரு. நெல்லை பாலாஜி :** தலைவர் அவர்களே, கோவா பிரச்சினையில் இராணுவ நடவடிக்கை எடுக்கப்பட்டபோது சர்தார் பட்டேல் அவர்கள் இல்லவே இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கு நினைவுபடுத்துகிறேன்.

**திரு. பி. டி. ஆர். பழனிவேல் ராஜன் :** என்னை விட திரு. பாலாஜி அவர்களுக்கு வரலாறு தெரியும் என்றால் திருத்திக் கொள்கிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, காஷ்மீர் பிரச்சினையில் காஷ்மீர் மன்னர் சொன்னதால் படை அனுப்பப்படவில்லை. திரு. ஷேக் அப்துல்லா மக்கள் சார்பாகச் சொன்னதால்தான் படை அனுப்பப்பட்டது என்பதை உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பி. டி. ஆர். பழனிவேல் ராஜன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் அடிக்கடி குறுக்கிடு செய்கிறார்கள். நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நான் சொன்ன கருத்தை அவர் புரிந்து கொள்ளவில்லை. ஒரு மன்னரைப் பொறுத்தவரையில் மன்னர் ஏற்றுக்கொண்டார். மற்றொரு ராஜ்யத்தைப் பொறுத்தவரையில் மன்னர் ஏற்றுக்கொள்ளவில்லை. இருந்தா



1985 ஏப்ரல் 10] [திரு. பி. டி. ஆர். பழனிவேல் ராஜன்]

லும் போலீஸ் நடவடிக்கை எடுத்தார்கள் என்பதை எடுத்துச் சொன்னேன். ஆகவே கோவா, டாமன், டையூ ஆகிய இடங்களுக்கு நம்முடைய படைகளை அனுப்பி உடனடியாக நம்முடைய நாட்டு எல்லையில் சேர்த்துக் கொண்டோம்.

அதைப்போலவே பங்களா தேஷில் பாகிஸ்தான் அதிபர் அயூப்கானுக்கும், வங்கச் சிங்கம் ஷேக் முஜிபுர் ரக்மானுக்கும் இடையே மாநில சுயாட்சி போர் மூண்ட காலத்திலே நம்முடைய எல்லைக்குள் நடக்கும் பிரச்சினை என்று படையெடுத்து ஷேக் முஜிபுர் ரக்மானிடம் ஒப்படைத்து விட்டோம். அதை வெற்றிகரமாக நடத்தியதற்காக பிரதமர் இந்திரா காந்தி அவர்களுக்கு பாரத ரத்னா விருது கொடுக்கப்பட்டதை நினைவுபடுத்த விரும்புகிறேன். ஆகவே படையை அனுப்பக்கூடாது என்ற தத்துவத்திற்கு நாம் ஆளாகத் தேவை இல்லை. நம்முடைய இனம் அங்கே அழிக்கப்படுகிறது. மத்திய அரசு அக்கறையாக இந்தப் பிரச்சினையைக் கவனிக்கிறதா என்று பார்த்தால் நிச்சயமாக காலஞ்சென்ற பிரதமர் திருமதி இந்திரா காந்தி காலத்திலே இருந்த உணர்வு கூட இந்த அரசிடம் இல்லை என்பது பொதுவாக இப்போது ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

(பிற்பகல் 6-30)

அதற்கு ஆதாரமூட்டும் வகையில் பல நிகழ்ச்சிகளை நான் சொல்ல முடியும். உதாரணமாக மாநிலங்கள் அவையில் தமிழ் மக்கள் கோழிக் குஞ்சுகள் போல கொல்லப்படுகின்றார்கள் என்று திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. வை. கோபால்சாமி அவர்கள் கருத்து சொன்ன நேரத்தில், வெளி விவகார துறை ராசாங்க அமைச்சர் மாண்புமிகு திரு. குர்ஷித் ஆலம் கான் அவர்கள் ஒரு பெரிய சந்தேகத்தை எழுப்பினார்கள். இந்த மக்களைப்பற்றி சந்தேகம் அவருக்கு ஏற்படவில்லை. கோழிக் குஞ்சு சைவமா அசைவமா என்ற கருத்தை எழுப்பினார்கள். இதை வைத்து நாம் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம். நாம் நினைக்கின்ற அளவுக்கு மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே அந்த அடிப்படையில் அவர்களை எதிர்பார்க்காமல் நம்முடைய கடமையாகக் கருதி நாம் இங்கே தீர்மானங்களை நிறைவேற்ற வேண்டும். அகதிகள் பிரச்சினையைக்கூட நேற்றைய தினம் மாண்புமிகு உறுப்பினர் அருமை நண்பர் திரு. சுப்பு அவர்கள் அவருடைய கன்னிப் பேச்சில் சொன்னார்கள். இதுவரை, தமிழக அரசு கடந்த 8 ஆண்டு காலமாக ரூ. 40 கோடி அளவுக்கு செலவு செய்து வந்திருப்பதாக நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் பாகிஸ்தானிலேயிருந்து வந்த அகதிகளுக்கு, பங்களா தேசத்திலிருந்து வந்த அகதிகளுக்கு எத்தனை ஆயிரம்

கோடி ரூபாய் மத்திய அரசு செலவு செய்திருக்கின்றது என்ற கணக்கைப் பார்த்து தமிழ்நாட்டிற்கு வருகின்ற, தமிழ் இனத்தைச் சேர்ந்த அகதிகளுக்கு நாம் கணிசமான தொகை ஒதுக்க வேண்டும் என்று வலியுறுத்திச் சொல்லி அந்த தீர்மானத்தை நிறைவேற்றலாம் என்ற கருத்தை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். நான் இதைச் சொல்வதற்குக் காரணம், இந்த பிரச்சினை பல உறுப்பினர்கள் பல மட்டங்களிலே பேசியதுபோல, நீடித்துக்கொண்டே போகுமானால், நம் நாடு பெரிய அளவிலே பாதிக்கப்படும். இன்று ஆயிரக் கணக்கிலே அகதிகள் வருகிறார்கள். இன்னும் சில நாட்கள் நீடித்தால், பல்லாயிரக்கணக்கானவர்கள் வருவார்கள். பின்னர் லட்சக் கணக்கில் வரக் கூடிய சூழ்நிலை ஏற்படும். ஏற்கெனவே தமிழகத்திலே வறுமை அதிகம். நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்கூட அவருடைய அறிக்கை யிலேகூட ஒரு அநீதியைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். இங்கே தமிழகத்திலே வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்பவர்கள் அதிகம் என்றாலும், நமக்கு ஒரு தவறான கணக்கின் அடிப்படையிலே நிதி கிடைக்கவில்லை. நமக்குக் கிடைக்க வேண்டிய நிதி கிடைக்கவில்லை என்ற உதாரணத்தைச் சொல்லியிருக்கின் றார்கள். அதற்குக் காரணம், குடும்பக் கட்டுப்பாட்டை முறையாகச் செயல் படுத்தி அதிலே நாம் வெற்றி கண்டதன் காரணமாக மக்கள் தொகை குறைந் தது. மக்கள் தொகை குறைந்ததன் காரணமாக நம்முடைய தனி நபர் வருமானம் (பெர் கேபிடா இன்கம்) அதிகம் என்ற ஒரு மாயையை நம்முடைய மத்திய அரசாங்கம் எடுத்துக்கொண்டு நமக்குத் தரவேண்டிய நிதியைத் தர வில்லை என்பதை இந்த நிதிநிலை அறிக்கையிலே எடுத்துச் சொல்லியிருக் கின்றார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில் இலட்சக்கணக்கான அகதிகளை இங்கே தமிழகத்திலே கொண்டு வந்து வைத்துவிட்டு அவர்களுக்கு நிதி உதவி செய்யாமல் இருந்தால், ஏற்கெனவே பொருளாதார ரீதியாக மிகவும் பின் தங்கியிருக்கின்ற தமிழகம், நம் மாநிலம் மிகவும் சீரழிந்து போய்விடும் என்பதை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்று சர்வ கட்சிக் கூட்டத்தை நடத்தவேண்டும், அங்கே டெல்லிக்குச் செல்ல வேண்டும் என்ற கருத்து இருந்தால், அதிலே திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எந்த ஆட்சேபணையும் கிடையாது. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் கூட்டத்திலே கலந்து கொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டை நேற்று சாட்டினார்கள். அதற்குப் பதில் சொல்கின்ற வகையில், யார் கலந்து கொள்கின்றார்கள் என்பது முக்கிய மல்ல, அங்கே பேசப்பட்ட கருத்துக்கள்தான் முக்கியம் என்ற கருத்தைச் சொன்னேன். கழகத் தலைவர் கலைஞர் அவர்களுக்குப் பதிலாக எங்கள் கட்சிப் பொருளாளர், எங்கள் கட்சி மேலவைத் துணைத் தலைவரான திரு.



சாதிக் பாட்சா அவர்கள் கலந்து கொண்டார்கள். ஆனால் அப்படிப்பட்ட கூட்டங்களிலே கலைஞர் அவர்கள் கலந்துகொள்ள வேண்டுமென்ற கருத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சொல்லப்பட்டதாகவும், அதை எங்கள் பொருளாளர் மூலமாகவும் சொல்லப்பட்டதாகவும் பத்திரிகையிலே பார்த்தேன். அதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் இது உண்மையான அழைப்பாக இருக்கும் என்பதில் எங்களுக்கு சந்தேகம் ஏற் பட்டுக் கொண்டிருக்கின்ற வகையில் சில மூத்த அமைச்சர்கள் பல இடங்களிலே தவறாகப் பேசி வருவதை இந்த நேரத்திலே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். உதாரணமாக 4, 5 நாட்களுக்கு முன்னால் மதுரை மாவட்டத்திலே திண்டுக் கல்லிலே ஒரு பொதுக்கூட்டத்திலே பேசிய மூத்த அமைச்சர் மாண்புமிகு பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். பத்திரிகை யிலே நான் பார்த்தேன். அதிலே கலைஞருக்கு அழைப்பு விடுத்ததை அவரே கூறிவிட்டு, இன்னும் பல கருத்துக்களைச் சொல்லியிருக்கின்றார்கள். கலைஞர் அவர்களுக்கு வேறு பிரச்சினை கிடைக்காத காரணத்தினால் இன்று ஸ்ரீலங்கா பிரச்சினையை கையிலே வைத்து விளையாடிக் கொண்டிருக்கின் றார்கள் என்று கூறியிருக்கின்றார்கள்.

(பிற்பகல் 6-35)

தனி இடம் கிடைத்தால் மட்டும் போதாது. தனி இடம் கருணாநிதி கேட் கிறாரே, அப்படி என்றால் தோட்டத் தொழிலாளர்கள் பிரச்சினை என்ன வாவது என்று ஏதோ இவர் ஸ்ரீலங்காவின் சார்பிலே பேசுவதுபோல் அந்தக் கூட்டத்திலே பேசியிருக்கிறார். தோட்டத் தொழிலாளர்கள் பிரச்சினை வேறு. ஈழப் பிரச்சினை வேறு. தோட்டத் தொழிலாளர்கள் ஸ்ரீலங்காவில் இல்லையென்றால் அந்த ஸ்ரீலங்காவின் பொருளாதாரம் 24 மணி நேரத்தில் விழுந்து விடும். எனவே அவர்களை ஸ்ரீலங்கா அரசு இந்தியாவுக்குத் திருப்பி அனுப்ப முடியாது. அதையும் பேசிவிட்டு, எந்தச் சூழ்நிலையாக இருந்தாலும் ஸ்ரீலங்கா பிரச்சினையை கருணாநிதி கையிலே கொடுக்க முடியாதென்று சொல்லி, அதற்கு ஒரு உதாரணம் சொல்லியிருக்கிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதுபோல குஷ்டரோகி கையிலே வெண்ணெயைக் கொடுக்கலாமா என்று கேட்டிருக்கிறார்கள். நான் உங்கள் மூலமாக ஆளுங் கட்சியைக் கேட்கிறேன். உண்மையாக கலைஞர் அவர்கள் கலந்து கொள்ள வேண்டுமென்ற எண்ணமிருந்தால் மூத்த அமைச்சர்கள் இப்படிப் பேசுவார்களா? ஏதோ ஒப்புக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தை யும், டாக்டர் கலைஞர் அவர்களையும் அழைத்துவிட்டு, இப்படிப் பொதுக் கூட்டங்களிலே பேசலாமா என்ற கருத்தை உங்கள் முன்னாலே வைக்கிறேன்.

[திரு. பி. டி. ஆர். பழனிவேல் ராஜன்] [1985 எப்ரல் 10

பொதுவாக திராவிட இயக்கம் பிரிந்து ஆளும் கட்சி, எதிர்க் கட்சியான பிறகு அரசியல் மாபுகள் காற்றிலே பறக்க விடப்பட்டுள்ளன என்று தமிழ் மக்கள் நினைக்கிறார்கள். நான் அதிலே ஒரு கட்சியைச் சேர்ந்தவனாக இருந்தாலும், திராவிட இயக்கத்தின் சார்பிலே பேசுவதற்கு எனக்கு உரிமை உண்டு என்பது தங்களுக்கு நன்றாகத் தெரியும். காரணம், இந்த இயக்கத்தை ஆரம்பித்த பல குடும்பங்களிலே என்னுடைய குடும்பமும் ஒன்று. இந்தப் பங்காளிச் சண்டை ஏற்பட்ட பிறகு அரசியல் நாகரிகம் நாசமாக்கப்பட்டது. நிரந்தர எதிரிகள் கூட ஒரு வரம்புக்குள் நின்று சண்டை போடுவார்கள். ஆனால் பங்காளிச் சண்டை ஏற்பட்ட பிறகு அரசியல் மரபுகள் நாசமாக்கப் பட்டு, அரசியல் நாகரிகம் இல்லாத சூழ்நிலையில் தமிழகம் இருப்பதை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மேடைப் பேச்சு ஆபாசமாக இரண்டு பக்கமும் இருப்பதை யாரும் மறுக்க முடியாது. இன்னும் சொல்லப் போனால் நாகரிகமான அரசியல் வளர்வதற்கு நம்முடைய உணர்வுகள் சரி யாக இல்லை என்பதை நான் இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். ஒரு சின்ன உதாரணம் சொல்ல விரும்புகிறேன். தமிழகத் தின் மாண்புமிகு முதல்வரவர்கள் உடல் நலிவுற்று மருத்துவ மனையிலே அனுமதிக்கப்பட்டு, வெளிநாடு சென்று, திரும்பி விட்டார்கள். அப்படித் திரும்பி வந்த நேரத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் என்ற முறையிலும், முன்னாள் முதல்வர் என்ற முறையிலும் எங்களுடைய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்கள். தாங்கள் நல்ல உடல் நலத்தோடு திரும்பிவந்ததற்காக என்னுடைய நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். தங்கள் வசதிக்கேற்ப தங்களை நேரில் பார்த்து உடல் நலம் விசாரிக்க விரும்புகிறேன் என்று கடிதம் எழுதினார்கள். ஆனால் இதுவரை அதற்கு பதில் இல்லை. அரசாங்கத்திடமிருந்தும் பதில் இல்லை. ஏனென்றால், இது முதலமைச்சர் அவர்களுக்கு எழுதப்பட்ட கடிதம். முதலமைச்சர் அவர்களே பதில் எழுதலாம் அல்லது அரசாங்கம் பதில் எழுத லாம். ஆனால் பதில் இல்லை. அதற்கு மாறாக மற்றொரு முன்னாள் முதல்வர் அவர்கள் முதல்வரைப் பார்க்க வேண்டுமென்று சொன்ன நேரத்தில், முதலமைச்சர் அவர்களே நேரிலே சென்று அவரைப் பார்த்திருக்கிறார்கள். அதிலே எந்தக் குறையும் நான் சொல்லவில்லை. நம்முடைய கட்சிகளுக்கு இடையிலே நல்ல மரபுகள், உணர்வுகள் இல்லை என்று தமிழ் மக்கள் பரவ லாகப் பேசுகிறார்கள். இந்த இயக்கத்தில் அக்கறை கொண்ட மூத்த தலைவர்கள், கி.ஆ.பெ. போன்றவர்கள் இந்தக் கருத்தைச் சொல்லி என் னிடம் வருத்தப்படுகிறார்கள். ஆகவே நல்ல அரசியல் உணர்வு ஏற்படுத்து வதற்கும், நல்ல மரபுகளை வளர்ப்பதற்கும் எதிர்க் கட்சியைவிட ஆளுங்



1985 எப்ரல் 10] [பி. டி. ஆர். பழனிவேல்ராஜன்]

கட்சிக்குத்தான் அதிக பொறுப்பு இருக்கிறதென்ற சூழ்நிலையில் இந்த ஸ்ரீலங்கா பிரச்சினையை வைத்து நல்ல மரபை வளர்க்கவும், நாம் எல்லோரும் ஒன்றாகக் குரல் கொடுப்பதற்கும் ஆளுங்கட்சி வகை செய்யவேண்டு மென்று இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப் பாக ஸ்ரீலங்கா பிரச்சினையைப் பொறுத்தவரையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே, டாக்டர் கலைஞர் அவர்கள் சார்பிலே அரசாங்கம் எடுக்கும் எந்தத் திட்டத்திற்கும் நாங்கள் ஆதரவு கொடுக்கத் தயார். இந்த ஸ்ரீலங்கா தமிழர்களைக் காப்பாற்ற எந்தத் தியாகத்தை இந்தக் கட்சியின் சார்பிலே அரசாங்கம் எதிர்பார்த்தாலும், அதற்குத் தயாராக இருக்கிறோ மென்று கூறி, என் உரையை முடிக்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, மீண்டும் நாளை, வியாழக்கிழமை, காலை 10 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 6-39)

கன்னிமாரா பொது நூலகம் / 143948 / சென்னை-600 008.
D
V211,32'N85
N85.214.1-3;1

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras 3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhantha Works Publishing Society (Tirunelveli), Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFASSIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban and Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Thanjavur District).
3 P. V. Nathan and Company, Kumbakonam (Thanjavur District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jagannathan Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mari Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar and Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 46-D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer and Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-18.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A. Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi-1.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Pathaghaleyam, Pondicherry.
6 Prabu Book Service, Gur gaon, Haryana.
7 K. P. Bagchi and Company, 286, B. B. [illegible] [illegible] Street, Calcutta-17.

TAMIL NADU LEGISLATIVE COUNCIL SECRETARIAT—PUBLISHED UNDER RULES 196 AND 199 OF THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL RULES AND PRINTED BY THE [illegible] LEGISLATIVE [illegible] DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS [illegible]

## இணைப்பு

**(228 ஆம் பக்கத்தில் உடுக்குறியிட்ட வினா எண் 18-க்கான விடையைக் காண்க.)**

திரைப்பட தணிக்கையை மத்திய அரசு தன் அதிகாரத்தின்கீழ் வைத்
திருக்கிறது. 1952 ஆம் ஆண்டு திரைப்படங்கள் சட்டத்தின்கீழ் ஏற்படுத்தப்
பட்ட மத்திய திரைப்படத் தணிக்கைக் குழு, திரைப்படங்களில் ஆபாசம்,
பாலுணர்வு மற்றும் வன்முறை ஆகியவற்றைத் தடுப்பதற்கு வகை செய்கிறது.
இம்மத்திய சட்டப் பிரிவு 7-ன்படி தணிக்கைச் சான்றிதழ் மறுக்கப்பட்ட
திரைப்படங்களை காட்டினாலோ தணிக்கை ஆனபிறகு அவற்றில் திருத்தமோ
மாற்றமோ செய்தாலோ, வயது வந்தவர்களுக்கு மட்டும் திரையிட்டுக் காட்ட
வேண்டிய திரைப்படங்களை வயது குறைந்தோருக்குத் திரையிட்டுக் காட்டி
னாலோ மூன்று மாத சிறை தண்டனையோ அல்லது ரூபாய் 1,000 அபராதமோ
அல்லது அவை இரண்டும் சேர்ந்தோ தண்டனையாக விதிக்கப்படும். இக்
குற்றம் தொடர்ந்து செய்யப்படுமாயின் ஒவ்வொரு நாளுக்கும் ரூபாய் 1,000
வீதம் அபராதமாகக் கட்ட வேண்டும்; மேலும், இத்தகைய திரைப்படங்களை
திரையிட்டால் அவற்றைப் பறிமுதல் செய்யவும் பிரிவு 7எ வகை செய்கிறது.
பொது மக்கள் பார்க்க உகந்ததல்லாத தணிக்கை செய்யப்பட்ட காட்சிகளை
காட்டுவதன் மூலம் தணிக்கை விதிகளை மீறினால், தியேட்டர் உரிமையாளர்
கள் மட்டுமின்றி திரைப்பட தயாரிப்பாளர் மற்றும் விநியோகஸ்தர்களும் மத்திய
திரைப்பட சட்டம் 1952 பிரிவு 7 (1) (எ)-ன்கீழ் தண்டனைக்குரியவராவர்.
மேற்கூறிய சூழ்நிலையில் திரைப்படங்களில் ஆபாசக் காட்சிகள், வன்முறை
சம்பவங்கள் மற்றும் பால் உணர்வைத் தூண்டும் காட்சிகள் வருவதைத் தடுப்
பதற்கு மாநில அரசு சட்டம் இயற்றுவது என்கிற பிரச்சினை எழாது.